தீரன் திப்பு சுல்தான்

காவியம்

காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

அரச இலக்கிய விருது

2011

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

தீரன் திப்பு சுல்தான் காவியம் என்ற நூலுக்கு

2010 ஆம் ஆண்டுக்கான

காவியம் துறையில்

அரச இலக்கிய விருது

வழங்கப்பட்டதென

உறுதிப்படுத்துகின்றோம்.

தீரன் திப்பு சுல்தான் காவியம்

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

அன்னை வெளியீட்டகம்

மருதமுனை

நூலின் பெயர்	:	தீரன் திப்பு சுல்தான் காவியம்
ஆசிரியர்	:	டாக்டர் அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
பதிப்புரிமை உரிமை	:	ஹம்ஸியா பரீதா ஷரிபுத்தீன்
வெளியீடு	:	அன்னை வெளியீட்டகம் மருதமுனை
முதற் பதிப்பு	:	12.11.2010
அட்டைப்பட ஓவியம்	:	மணியம் செல்வன் (ம.செ)
அட்டை அமைப்பு	:	ஷப்ராஸ் முஹம்மத் ஷரிபுத்தீன்
பக்கங்கள்	:	372
விலை	:	ரூபாய் 500/-

Title of the book	:	**Theeran Tipu Sultan Kaviyam**
Author	:	Dr. Ahamed Jinnah Sherifudeen.
copy right		© Ms. Hamziya Farida Sherifudeen
Published by	:	Annai Veliyeetakam Maruthamunai.
First published in	:	12.11.2010.
Printers	:	Kleen Printers Regd. No. 242048 No 16, School Avenue Off Station Road, Dehiwela Tell : 011-2730378
Cover Art	:	Maniam selvam (Ma.Se.)
Cover design	:	Shafraz Mohamed Sherifudeen
Pages	:	372
		I.S.B.N :978-955-96932-4-6 barcord : 9 789559 693246
Price	:	Rs. 500 / -

"செம்மறிபோல் நூறாண்டு சீவித்த லில்லொருநாள்
வெம்புலிபோல் வாழ்ந்தழிதல் மாண்பு"
- திப்புசுல்தான்-

சமர்ப்பணம்

தொழிலதிபர் சமூகத்தின் மீது பற்றுத்
தோய்ந்ததன்பால் தொண்டுசெய்யும் தொண்டர் மேலாம்
விழுமியங்கள் கொண்டுதமிழ்ப் பணியி னூடே
வரலாறு படைக்கின்ற சாத னைப்பேர்
அழியாத வரலாறாய் அண்ணல் பேரில்
ஆனதிருக் காவியப்பேர் விழாவொன் றாக்கி
எழுத்துலகில் நன்னாமம் பதித்த அல்ஹாஜ்
ஏவீ.எம். ஜாபர்தீன் தமக்கா மிந்நூல்

தந்தையார் புலவர்மணி
ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள் அளித்த
ஆசிப்பா

பாரம் பரியம் பழுதாகா தென்மக்கள்
பேரர் முதலோர் தமிழ்க்கவிதை - சீராக
ஆக்குந் திறம்பெற் றமைகின்றா ரத்திறமை
பூக்க விறையே துணை.

செந்தமிழிற் சீர்கவிதை செப்பமுடன் செய்துநலம்
சொந்தமெனப் பல்பரிசைத் தொட்டுவரும் - என்தனயன்
வைத்யக் கலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
சித்தம் மலர்க சிறந்து.

வெண்பா வகவல் விருத்தம் பலவகையும்
பண்பாகப் பாடும் திறம்படைத்து - நன்றாக
நாட்டிற் பெயரும் புகழுஞ் சிறந்தமைக
ஏட்டிற் குலப்பேர் வரைந்து.

ஞானத் தந்தை
எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் அளித்த
பொதுப் பாயிரம்
(இரண்டாவது காவியமான புனிதபூமியிலே காவியத்திற்காக அளித்தது)
பாவல்லான் இவன்

நான்பார்த்த கவிஞரிலே நல்லதொரு கவிஞன்
நான்தேர்ந்த நண்பரிலே நல்லதொரு பண்பன்
தேன்வார்த்த சொற்களினால் தெவிட்டாத கருத்தைத்
தென்றலென வீசியுளம் சிலிர்த்திவிடுஞ் சித்தன்
கூன்நிமிர்ந்த தண்மதியம் பொழிநிலாவைப் போல
குளிர்பாயுங் கற்பனையால் உலகாளும் புலவோன்
மான்தோற்ற கண்ணுடையாள் என்தங்கை பரீதா
மனம்நிறைந்த மன்னவன்நற் குடும்பத்தின் தலைவன்

துன்பமுற்றோர்க் குதவுகின்ற மருத்துவனாம் தொழிலில்
துலங்குதமிழ் கற்றறிந்த புலவர்மணி ஷரிபுத்
தீனென்னும் புகழ்பூத்த ஆசிரியன் மைந்தன்
தீனிஸ்லாம் காப்பதற்கு எதிரிகளை வென்று
எண்திசையுங் கொடியுயர்த்தி ஆண்டபேர் அரசன்
ஏற்றமிகு சலாஹுத்தீன் காலத்தே வாழ்ந்த
மின்னழகி மஹ்ஜப்பீன் காதல்மிளிர் கதையை
மிகத்தெளிந்த ஓவியமாய்க் காவியத்தில் தந்தோன்

மூலத்தில் கதைதந்த மூதறிஞர் 'ஹஸனா'ல்
"முதற்கதையிக் காவியமோ என்றுவியப் பெய்தி
நாலைந்து பக்கத்தில் நாவாரப் போற்றி
நல்லதொரு முகவுரையும் நல்கினா ரென்றால்
காலத்தை வென்றவொரு காவியத்தைத் தந்த
கவி'ஜின்னாஹ்' வின்பெருமை கழறிடற்கும் எளிதோ!
நூலாகத் தொடர்ந்துவரும் மாபுனித பூமி'
எனும்நூலும் புகழ்பெறுமே ஐயமிதி லுண்டோ!

ஒருநாளில் ஏழுபத்துக் கவியெழுத வல்லான்
ஒருநூறு எழுதுவதும் இவனுக்கு இலகாம்!
வருநாளில் 'ஜின்னாஹ்'வின் பெயர்கவிதை வானில்
வரகவியென் றேயொளிரும் அட்டியதற் கில்லை
அருட்கவியாய்ப் பரிணமிக்கும் கவிகா.மு. ஷரீபும்
அன்பொழுக ஈங்கிவனை மணிக்கவிஞ னென்றார்
ஒருகாலும் மறையாதே உள்ளத்தே உறையும்
ஒண்கவிதை இவன்கவிதை திண்ணமிது என்பேன்

சிலம்பொலி செல்லப்பன் செந்தமிழில் மேதை
செப்பியஆ லோசனையைச் சென்னிமிசை கொண்டு
நலமுடனே 'மஹ்ஜப்பீன்' காவியத்தின் பின்னே
நற்கவிதை யால்புனித பூமிதனைப் படைத்தான்
இலக்கியமெ னும்விரிந்த பாக்கடலி னுள்ளே
இரட்டைக்கா வியமாக இவையிரண்டு மிலங்க
பலவறிஞர் பாராட்டைப் பக்குவமாய்ப் பெறுவான்
பாவல்லான் இவனென்றே பாருலகம் ஏற்கும்.

நவீன கவிதை வடிவில் காவியங்கள் பல படைத்தளித்தவரும் தமிழ்சினிமா உலகில் தனக்கெனத் தனித்தொரு சிம்மாசனத்தை நிரந்தரப்படுத்திப் புகழ்கொண்டவருமான மாண்புறு "கவிப்பெருஞ்சோதி " வாலி அவர்கள் அளித்த வாழ்த்துரை

காலம் கடந்து நிற்கும் காவியம்

என் "உள்ளம் கவர்ந்த கள்வர்" திரு. உமர் அவர்கள்.
மிகச்சிறந்த பண்பாளர்.
தமிழ் பாலும், தமிழ்த் திரையிசை பாலும்
மிகுந்த பற்றுடையவர்.
திரைப்படத் தயாரிப்பாளரும் கூட.
திரையுலகம் பற்றி திரு. உமரவர்கள் எழுதியுள்ள நூல்கள்
ஆவணங்கள்போல் வருங்கால அய்வாளர்களுக்கு
உதவவல்லவே!
திரு. உமர்மூலம்தான் இந்த நூலாசிரியர்
எனக்கு அறிமுகமானார்.
நூலாசிரியர் திரு. ஜின்னா'ஹ் ஷரிபுத்தீன் அவர்கள்,
மிகச் சிறந்த கவிஞர் பெருந்தகை என்பது.
இந்தநூலின்கண் துலாம்பரமாகத் துலங்குகின்றது.
மரபுவழி விருத்தங்களும், இறைச்சிப் பொருளும்,
ஏரார்ந்த எதுகை மோனைகளும், உவமான
உவமேயங்களும்
புத்தகம் பூராவும் பார்க்கக் காண்கின்றோம்.
ஆற்றொழுக்கான நடை, வாசகனை ஈர்த்து:
எடுத்த புத்தகத்தை கீழே வைக்கவிடாது :
அவனைத் தன்வசப் படுத்திக் கொள்வதுதான்
ஒரு படைப்புக்குப் பெருமை சேர்க்கும்.
அத்தகு தகவு இந்தப் படைப்புக்கு
நூறுவிழுக்காடு இருக்கின்றது.
காப்பும், அவையடக்கமும் அற்புதமான வெண்பாக்கள்.

"தீரன் திப்புசுல்தான் காவியம்"
கவிஞர் பெருமான் திரு.ஜின்னா'ஹ் ஷரிபுத்தீனின்
திருப்பெயரை காலம் உள்ளளவும் ஓதிநிற்கும்.

"மனிதருள் ஏற்றத் தாழ்வு
மலிந்திருந் திழிந்த காலம்
மனிதருள் பேதம் இல்லை
மதத்தினால் உயர்வும் இல்லை
மனிதரை ஒன்று சேர்த்தல்
மன்னனின் கடனாம் என்ற
மனிதத்தை மதித்த வேந்தர்
மனுக்குலத் தேந்தல் திப்பு"

இவ் அறுசீர் விருத்தம் ஒன்று போதும்
இன்றைய மாந்தரிடை சமயப்பொறையை,
இமயப் பொறையாய் வளர்க்க.

திப்பு சுல்தான் வரலாற்றை
இளையதலைமுறை அறிந்துகொள்ள:
மனிதர்களை மதங்கள் பழிதீர்க்காமல்,
மனங்கள்வழி பார்த்து நேசிக்க-
இத்தியாதி, இத்தியாதி நன்மைகள் இந்த நூலால்
நாட்டுக்குக் கிடைக்கும்.

இந்தக் காவியத்தைப் பள்ளிப் பாடநூலாக வைத்தால்
தமிழின் தகவும், தமிழ்மண்ணை ஆண்டவர் தகவும்
ஒருசேரத் தெரியவரும்.
மாணவருலகு நல்ல மாண்புகளை எய்தும்.

விருத்தங்களால் ஆன கம்பராமாயணம்
எங்ஙனம் இன்றளவும் நிலைத்து நிற்கிறதோ
அதுபோல் இந்த நூலும் நிற்கும்.
இதனைக் காலம் தின்னாது.
கறையான் அரிக்காது.

இக்காப்பியத்தின் சிறப்புகளை :
வரிக்குவரி நான் சுட்டிக்காட்டி விவரிப்பின்
விரியும் என அஞ்சி
நான்பெற்ற இன்பம், நீங்களும் வாசித்துப்
பெறுங்கள் என்று சொல்லி,
கவிஞர் பெருந்தகை திரு.ஜின்னா'ஹ் ஷரிபுத்தீன் அவர்கட்கு
என் வாழ்த்தையும் வணக்கத்தையும்
தெரிவித்துக் கொள்கின்றேன்.

- வாலி
2.11.09

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர்

பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் அளித்த தகவுரை

கவிஞர் டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் - அவரின் ஆக்கப்புலக் காட்சி

வளம்மிக்க மரபுவழித் தளத்தில் நின்று ஒருபுறம் செவ்வியல் தழுவிய எழுத்தாளராகவும் மறுபுறம் நவீனத்துவமும் மனோரதியப் பாங்குடைய படைப்பாளியாகவும் விளங்குபவர் கவிஞர் டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள் தந்தையாம் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் ஹாஜியாரின் வழிநின்று செவ்வியல் மரபுகளை ஆழ்ந்தும் சுவைத்தும், புனைந்தும் மீளவலியுறுத்தியும் வருபவர். செவ்வியல் மரபு என்று கூறும்பொழுது இலக்கணச் செம்மை, யாப்பொடு நிற்றல், உருவத்தினதும் உள்ளடக்கத்தினதும் சமச்சீர்மை, பொருட்புனைவின் ஆழம், கலையாக்கத்தின் கவின் வளம் முதலாம் கலைப்பரிமாணங்கள் பொதியப்பெற்று நிற்றலைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. "யாப்பொடு நிற்றல்" என்ற செவ்வியல் செயற்பாட்டில் யாப்புத்தளத்தில் நின்று "செய்யுள்" இயற்றல் என்ற ஓரடுக்குப் பரிமாணத்தில் மட்டும் கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் கட்டுப்பட்டவரல்லர். "செய்யுள்" தளத்தில் நின்று "கவிதை" புனைபவராகவே அவர் விளங்குகின்றார்.

அதாவது செய்யுளின் இலக்கணப்பொறி முறைக்குள் மட்டும் அவர் உள்ளடங்கி நிற்கவில்லை. வளமான உள்ளடக்கப் பொலிவு, கவின்மிகு எடுத்தியம்பல், பொருளொடு ஒன்றித்து நிற்கும் கற்பனைகள் கலைச்சுவைக் கையளிப்பு என்ற பரிமாணங்கள் அவரது ஆக்கங்களிலே எழுச்சிகொள்கின்றன. அவரது ஆக்கங்களை விளங்கிக்கொள்வதற்கு செய்யுள் என்ற எண்ணக்கருவுக்கும் "கவிதை" என்ற எண்ணக்கருவுக்குமிடையேயுள்ள பரிகோட்டினைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டியுள்ளது. இந்த அடிப்படையில் பதினாயிரம் கவிதையாக்கங்களை எட்டிப்பிடித்துள்ள பெரும் ஆக்கமலர்ச்சி கொண்டவராக அவர் விளங்குகின்றார்.

காப்பியம் புனைதல் என்பது ஆக்கச் செயல்முறையின் கடினமான பணியாகும். நீண்ட கதைப்புலம் பற்றிய தெளிவு, கதைவளர்ச்சிக் கூறுகளை ஒன்றிணைத்தல், முரண்விசை எடுப்புக்களை தெளிவுற இழைத்தல், கவிதை வழியான எடுத்துரைப்பு நுட்பங்களை ஒழுங்கமைத்தல், கட்டுமானச் செம்மையாக்கல். பாத்திர இயல்புகளை கதைவழியாக நேர் மற்றும் எதிர்நிலைப்படுத்தல், கதை நிகழ்புலத்தின் சமநிலைப்பாங்கு முதலாம் பல்வேறு பண்புகளை மணிக்கோவையாக்கிக் காவியம் புனைதல் அத்துணை எளிதான கலைச்செயற்பாடு அன்று. கலையாக்கமும் சமூகம்பற்றிய அறிகையாக்கமும் காவியத்திலே சங்கமிக்கவேண்டியுள்ளன. இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும் பொழுது சமகாலத்தின் காவிய வல்லுனராகவே கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள் விளங்குகின்றார். அவரது கவிதைகளினதும், காவியங்களினதும் உள்ளார்ந்த விசையாக மானிட நேயம் மேலோங்கி நிற்கின்றது.

சிறுமை கண்டு பொங்குதலும் அதன் அடிப்படையாக இழையோடி நிற்கும். சகோதரத்துவப் புலக்காட்சியும் ஆக்கங்களின் உட்பொருளின் இணை கூறுகளாகவுள்ளன. அவர் ஆழ்ந்து நிற்கும் புனித இஸ்லாத்தின் வழியெழும் அன்பும், இரக்கமும் சகமனிதருக்கு நிகழும் அல்லல் கண்டு ஆதரவுக் கரங்கள் தருதலும் சிறுகதைகளிலும், கவிதைகளிலும் மேலோங்கி நிற்கும் அறப்பண்புகளாகின்றன. மரபு வழுவாத் தமிழ் மரபின் மொழிப்புனைவோடு அப்பண்புகள் இயல்பாக ஒன்றித்துவிடுகின்றன.

சமூக நீதியானது பாத்திரங்களின் நிழல்களாக இவரது ஆக்கங்களிலே தொடர்கின்றன. பாத்திரங்கள் வழியாக நீதியின் எடுத்துரைப்பு முன்னெடுக்கப்படுதல் இலக்கிய முனைப்பின் தொடுவானத்தை எட்டி நிற்கின்றது. அந்த முனைப்பின் வழியாகத் தனக்கென உரிய தனித்துவமான எழுநடையை (style) உருவாக்கிக் கொள்கின்றார். ஆக்கத் திறன்களோடும் எடுத்தியம்பலோடும் அந்த எழுநடை சங்கமித்துக் கொள்கின்றது.

கவிதை வருணனைகளிலே மரபுவழிவாய்ந்த யாப்புக் கட்டமைப்பு மட்டுமன்றி தமிழ் தழுவிய மனோரதியமான சிந்தனைகளின் செல்வாக்குகளும் இழையிட்டு நிற்கின்றன. தமிழ் இலக்கண மற்றும் இலக்கியப் பரப்புகளில் அவர் கொண்டிருக்கும் அறிகையின் பிணைப்புக்களே அவை துல்லியப்படுத்துகின்றன.

இயற்கையின் நேர்ப்பரிமாணங்களை இன்புற்று நோக்குதல், சமூகத்தின் நேர்ப்பரிமாணங்கள்மீது ஈடுபாடு காட்டல், முதலிய மனோரதியப் பாங்கான பரிமாணங்கள் அவரது கவிதையாக்கங்களிலே இழையிட்டு நிற்கின்றன. ஆனால் அவ்வாறு நேர்பரிமாணங்களை நோக்கி இன்புற்று நிற்கும் நிலையில் எதிர்ப்பரிமாணங்களின்

இழைகளை அவர் ஒதுக்கித் தள்ளிவிடவில்லை.
ஆக்கங்கள் பெருக்கெடுத்துச் செல்லும் வேளை அவற்றின் தரக் காப்பீட்டை அவர் கைவிடவில்லை. ஆக்கவுலகில் இதனையொரு முக்கியமான பரிமாணமாகச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அதிகம் எழுத முனையும் எழுத்தாளர்கள் தரக்காப்பீட்டிலும் அதிக கவனம் செலுத்தவேண்டிய தேவை வலியுறுத்தப்படுதல் உண்டு. ஆனால் அதற்கு விதிவிலக்காக அதிக கவிதைகளைப் புனைந்து கொண்டிருக்கும் ஜின்னாஹ் அவர்கள் அவற்றின் தரத்திலும் ஊடுகவனம் செலுத்துதல் அவற்றைப் படிக்கும் பொழுது மேலெழும் அனுபவமாகவுள்ளது.

பதினாயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளைப் புனையும் அவரது உந்தலும், சிறுவர் இலக்கியம், புனைகதை இலக்கியம், கட்டுரை இலக்கியம் முதலிய துறைகளிலே தடம் பதிக்கும் அவரது புலமைச் செயற்பாடுகளும் நீண்ட ஆய்வுகளுக்குரியவை.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கியச் செயலாளர், பொதுச் செயலாளர், துணைத் தலைவர் முதலாம் பெரும் பொறுப்புக்களை ஏற்றுத் தமிழியல் சார்ந்த வினைப்பாடுகளை முன்னெடுத்தமை நூலாசிரியர் ஆக்கப் பரிமாணங்களின் பிறிதொரு பரிமாணமாகின்றது. அவரின் கலைவளமும் தமிழியல் வினைப்பாட்டு வளங்களும் மேலோங்கிச் சறப்புற எமது வாழ்த்துக்கள்.

நூலைப் பரிசீலித்துச் சிறப்புப் பாயிரமும் பாடியளித்த நபிக்குறள் கோக்கும் நாடறிந்த பெருங்கவிஞர் அல்-அஸீமத் அவர்கள் வழங்கிய சிறப்புப் பாயிரம்

மாவலி நாட்டின் மகாகவி

தூயயிறை நினைந்து தொடங்கும் இச்சிறு
பாயிரம் நூலின் பதச்சோ றெனலாம்
சமைத்த வுடனே கலத்தை என்னிடம்
சமர்ப்பணம் செய்தார் ஷரிபுத்தீன் ஜின்னாஹ்
ஆய்வின் காவியத் தக்கலம் முழுவதும்
தாயின் பாலெனத் தருக்கிநான் உண்டேன்
அட்சய பாத்திரம் அக்கலம் என்பதால்
அற்புத மாயது ஆங்குமீள் நிறைந்தது
கோடி கோடியாய்க் குவலயத் தமிழர்
நாடியுட் கொளினும் நலியாக் கலமிது
பன்முகங் கொண்ட பாரத நாடு
மண்ணை மாந்தரை மதங்களைக் காக்கும்
வீரர் பலரை விளைத்துத் தந்தது.
தீரர் திப்பு திறந்ததோர் நூலாய்
மண்ணுக் காகவும் மக்கட் காகவும்
அண்ணலாய் வேந்தராய் ஆட்சி புரிந்தனர்
வரலா றவரை வாழ்த்திய போதும்
திறனாய் வாளரோ தெளிவிலா துளரே
கண்டுங் காணாக் கற்பினைப் போற்றும்
தொண்டராய் வாழச் சூழுரைத் துளரோ?
புதைந்து போயவப் பொன்வர லாற்றைச்
சிதையா நிலையிற் சேரத் திரட்டிக்
காவிய உருவிற் கற்றோர் உளமிடும்
பாவலர் ஜின்னா'ஹ் பாமலை இமயமே!

பொறியின் விரைவிற் போவதால் வாழ்க்கை
துறையினி இலையே தொடர்நிலைக் கவிக்கெனச்
சாற்றும் சிறுகவிச் சார்பினர் நாப்பண்
ஆற்றல் மிக்கவோர் ஆண்மையர் ஜின்னாஹ்.
காவிய நிலையிற் கணிக்கப் படினோ
மாவலி நாட்டின் மாகவி இவரே.

இந்தியத் தினர்க்கும் இஸ்லாத் தினுக்கும்
நந்தீ விலங்கை நாடுளர் தமக்கும்
பேரும் புகழும் பேறும் ஈந்திடும்
தீரர் திப்புவின் சிறப்பினிக் காவியம்.
மணியுரை நடையின் "மஹ்ஜபீன் காவியம்",
"புனித பூமியில்", போல்வன தொடர்ந்து
பாகுடைக் கலைஞரின் "பண்டார வன்னியன்"
ஆகிய நூல்களை அருந்தமிழ்க் கவிதையிற்
காவிய மாக்கிக் கவிகலை வளர்தவர்
ஏழாம் காவியம் இஃதோர் ஆய்வின்
ஆழியாய்த் தமிழில் அமைதல் காண்கிறேன்
காமுறும் ஏழாம் காவிய மாகத்
திப்புவின் வாழ்வைத் தேரினில் வைக்கிறார்.
எப்புறம் கணிப்பினும் ஏழொரு மேலெண்.
ஏழேழ் நாடுகள் இனித்த முதன்மொழி
வாழுகை கொள்ளும் வணமினும் பலப்பல
வளர்தெம் மொழியிம் மானிலம்
வளைத்திடச் செய்கென வாழ்த்தி அமைகிறேன்.

பிரார்த்தனை

குற்றங் களைந்து குறைநீக்கிப் பாயிரமும்
பொற்புறவே செய்தளித்த பாவேந்தி - நற்றமிழின்
வித்தகனாம் அல்-அஸீமத் வையகத்தும் ஆகிறத்தும்
சித்தம் சிறக்கவிறை காப்பு. - ஜின்னாஹ் -

இக்காவியம் உருவாகக் கரந்தந்துதவிய
என் நன்றிக்குரியோர்

முற்றும் உடனிருந்துதவிய மனைவி
ஹம்ஸியா பரீதா ஷரிபுத்தீன்,

தூண்டிய தோடு ஆங்கில நூல்களும் தந்த
ஜனாப். ஈரோடு கு.ஜமால் முஹம்மத்

நூல்கள் தந்த
ஜனாப். கம்பம் முகம்மதலி
நாவலாசிரியர் தோப்பில் முகம்மது மீரான்

வாழ்த்துரை வழங்கிய
"கவிப்பெருஞ்சோதி" கவிஞர். வாலி

தகவுரை தந்த
கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர்
பேராசிரியர் சபா ஜெயராசா

ஆய்வுப் பயணங்கள் மேற்கொள்ள உடன்
வந்தவர்களும்
நூலுருவாக்கத்தில் உதவி செய்தவர்களும்

பேராசிரியர் முனைவர் மு.இ. அகமது மரைக்காயர்
பேராசிரியர் முனைவர் நசீமா பானு அகமது மரைக்காயர்
கவிஞர் அல்-அசூமத்
கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீன்
பொறியியலாளர் கவிஞர் நியாஸ்.ஏ.ஸமத்
கவிஞர் டாக்டர் தாஸிம் அகமது
ஜாபர் சாதிக் பாக்கவி
செல்வி. ஜரீனா அகமது மரைக்காயர்

கணினிக் கட்டுரைகள் தேடியளித்த
செல்வி ஸ்ரீ பெருமாள்
(கவிஞர் லுணுகலை ஸ்ரீ)

முற்றிலும் பொருளுதவி செய்துதவும்

எமது மக்கள், மருமக்கள்

தரிக் தாஹா காசிம்,
அர்ஷத் முஜீப் ஷரிபுத்தீன்,
றோஷன் ஹாமித் ஷரிபுத்தீன்,
ஷப்ராஸ் முஹம்மத் ஷரிபுத்தீன்,
குர்ஷித் ஷாமிலா தரிக் காஸிம்
பாத்திமா ஷரீபா ஷரிபுத்தீன்,
ஷானாஸ் அலம் ஷரிபுத்தீன்,
பாத்திமா ஷிர்ஷிமா ஷரிபுத்தீன்,

Reference :

Tippu Sultan : *By Dr. Sheikali*

Tiger Sultan : *By Rahman Azar*

Tippu Sultan the Tiger of Mysore :

By Dr. Samuel Strandberg [Sweden]

The T.V.Serial **"The Sword Of Tipu Sultan"**

தீரன் திப்பு சுல்தான் காவியம்

அத்தியாயங்கள்

1. காப்பு, அவையடக்கம், இறையருள் வேட்டல்,
2. ஆக்கியோன் பற்றி, நூன் முகம்
3. நாட்டுப் படலம்
4. இந்தியா,மைசூரின் புவியில் அமைப்பு,
5. ஆட்சி அமைப்பு
6. திப்புவின் தந்தை ஹைதர் அலி
7. புலியொன்று பிறந்தது
8. வெற்றிமேல் வெற்றி
9. விளையும் பயிர்
10. நாட்டில் ஏற்பட்ட மாறுதல்கள்
11. இளமைக் கல்வி
12. யுத்த முனையும் திப்புப் புலியும்
13. பதினைந்து வயதில் போர்முனை காணல்
14. சமாதானத் தூது
15. சுயநலத்தால் தோற்றுப்போன தூதும் -திப்புவின் வெற்றியும்
16. தொடர்ந்து வந்த தொல்லைகளும் திப்புவின் தீரமும்
17. முக்கூட்டு ஒப்பந்தம்
18. ராணா ஒப்பந்தம்
19. திப்புவின் திருமணம்
20. இரண்டாவது மைசூர்ப் போர்
21. ஹைதரின் இறுதிக் காலம்
22. புலியின் வருகை
23. செங்கோலும் மணிமுடியும்
24. மங்களூர் ஒப்பந்தம்
25. திப்புவின் ஆட்சித் திறன்
26. கல்விக்கு உரமளித்த காவலர்
27. இயற்கையில் ஈர்ப்பு
28. நிருவாகத் திறன்
29. நாட்டின் பாதுகாப்பும் படைபலமும்

30. திப்புவின் படைப் பலம்
31. ஏவுகணை நுட்பத்தின் முன்னோடி திப்புசுல்தான்
32. கடற்படை
33. மக்களின் காவலன்
34. மாதருக்கு வாழ்வளித்த மன்னர் திப்பு
35. திப்புவின் சிந்தனைகளும் செயற்பாடுகளும்
36. திப்புவின் கொள்கைகள்
37. கின்னனூர் ஆட்சியில் குறுக்கீடு
38. காலத்தைப் பேசும் கட்டுமானப் பணி
39. பிற நாட்டுத் தொடர்புகள்
40. திரைமறைவில் துரோகத் தீ
41. அரசகட்டிலும் அறப்போர்களும்
42. ஆனந்த்பூர் கோட்டையும் - அடலர்தம் வெற்றியும்
43. கேணல் மத்யூவின் தோல்வியும் பழி தீர்த்த கொலையும்
44. வெற்றி வாகையுஞ் சோக மேகமும்
45. மீண்டுமொரு திருமணம்
46. மதங்களின் காவலர்
47. திப்பு சுல்தானின் சிருங்கேரி மடத் தொடர்புகள்
48. சிவன் கோயிலும் சுல்தானின் ஜீவகாருண்யமும்
49. வணக்கத்தல மான்யங்களும் நன்கொடைகளும்
50. இந்துக்களும் ஆட்சிப் பொறுப்புக்களும்
51. காஸீகான் என்னும் அரசவிசுவாசி
52. கொன்றிட முயன்றார் கொடியவர்
53. அமைச்சர்கள் சந்தித்தனர்
54. வெள்ளையரின் சூழ்ச்சி
55. பாலம்பூர்வரை வந்தார் பறங்கியர்
56. வெள்ளையரின் அட்டகாசமும் திப்புவின் போர்க் கொடியும்
57. பெரும்படையும் வீர முழக்கமும்
58. கிழத்தியின் களிப்பு
59. தாயமுதும் தீரர் திப்புவும்
60. சிறுவனின் தீரமும் திப்பு செய்த சங்கையும்
61. திப்புவின் மனிதாபிமானம்
62. பெருமை சேர்க்கும் பிரயத்தனங்கள்

63. சாவனூர் பட்ட அடி
64. மராட்டியரின் கொள்ளையும் திப்புவின் சவாலும்
65. செங்குருதிச் சாக்காட்டில் மராட்டியர்கள்
66. குலப்பெருமையும் குறுகிய மனமும்
67. புதிய கவர்னர் கான்வாலிஸ்
68. பறங்கியர்க்குக் கற்பித்த பாடம்
69. காஸிகானுடன் ஒரு கலந்துரையாடல்
70. கோபக் கனலிடை கான்வாலிஸ்
71. "நிசாம்" "வோலிஸ்" சந்திப்பு
72. மராட்டியர் சம்மதம்
73. திப்புவின் சீற்றம்
74. எரிநெருப்பில் கனிந்தமழை
75. போருக்குத் தயாராகும் பறங்கியர்கள்
76. நடந்தது என்ன?
77. ஒப்பந்தமும் பிள்ளைப் பிணையும்
78. மைசூர் மக்களின் மனக்குமுறல்
79. நம்பிக்கைத் துரோகமும் நாடுகடத்தலும்
80. மூன்றாவது மைசூர்ப் போர்
81. கிருஷ்ணாராவின் துரோகமும் - கைகடந்த கோட்டையும்
82. நான்காவது ஆங்கில மைசூர்ப் போர்
83. காதல் மனைவியுடன் கடைசிச் சந்திப்பு
84. இறுதி யுத்தம் எகிறிற்று
85. துரோகிக்குக் கிடைத்த தண்டனை
86. சீரங்கப் பட்டினத்தின் தெருக்கள்
87. திப்புவின் இறுதிநாள்
88. போருக்குப் பின்
89. போருக்குப் பின்மைசூரின் ஆட்சி மாற்றம்
90 வேலூர் கலவரமும் திப்பு சுல்தான் குடும்பமும்
91. பிரார்த்தனை

வெளியீட்டுரை

இதுவரை கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களின் பல்துறை சார்ந்த பத்தொன்பது நூல்களை அன்னை வெளியீட்டகம் சார்பாக நாம் வெளியீடு செய்துள்ளோம். தொடர்ந்தும் அவரது ஏழாவது காவியமான **தீரன் திப்பு சுல்தான்** எனும் இக்காவியத்தையும் பதிவு செய்வதில் நாம் பெருமை கொள்கிறோம்.

இது இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத ஒரு வீரத் தியாகியின் வரலாறாகும். தமது மண்ணைச் சொந்தம் கொண்டாட வந்த அந்நியரை நாட்டை விட்டுத் துரத்தும் குறிக்கோளோடு போராடி, தமது மண்ணுக்காக களத்தில் உயிர்நீத்த வீரபுருஷன் திப்பு சுல்தான்.

வரலாற்று நாயகர்களான சுல்தான் சலாஹுத்தீன், பண்டார வன்னியன் போன்றோருடன், இறைத்தூதர் நபிகள் நாயகத்தின் பேரிலும் நூஹ் நபி பேரிலும் இறைநேசர் உவைஸுல் கர்னி அவர்களின் பேரிலும் இவர் இயற்றிய காவியங்கள் முன்னர் எமது வெளியீட்டகத்தால் பதிப்பிக்கப்பட்டு வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

அதுபோல் இக்காவியமும் வரவேற்பு பெரும் என்று நாம் பெரிதும் நம்புகின்றோம். வாசகர்களின் ஆதரவு எமது வெளியீட்டு முயற்சிகளுக்கு பக்கபலமாக அமையுமென ஆசிக்கின்றோம்.

- ஹம்ஸியா பரீதா ஷரிபுத்தீன்
அன்னை வெளியீட்டகம்
மருதமுனை

தீரன் திப்பு சுல்தான் காவியம்

காப்பு

அந்நியரைத் தம்மண் அடிதழுவ மாட்டாதே
செந்நீர்மண் சிந்தித் தனையீந்த - இந்தியனாம்
திப்புசுல்தான் வாழ்வுதனைச் செப்பவந்தேன் வல்லவனே
ஒப்பில்லா உன்னருளே காப்பு. 01

அவையடக்கம்

வான்பரிதி செய்யும் வினைகண்டு மின்மினியும்
ஏன்முயன்ற தாமோ ஒளியுமிழ - கானிருளை
ஓட்டத் துணிந்ததற் கொப்பாம்நான் காவியங்கள்
தீட்டத் துணிந்த செயல். 02

இறையருள் வேட்டல்

உருவிய வாளி னோடுடே உலகஞ்சச் சமர்க்க ளத்தில்
பெருவீரங் காட்டி வெள்ளைப் பறங்கியர் தமையெ திர்த்த
திருமகன் இந்தி யாவின் தென்புலச் சிங்கம் திப்புப்
பெருமையைச் செப்பல் வேண்டிப் பண்ணவன் றனைப்ப ணிந்தேன்
03

திப்புவின் வாழ்வு தன்னைத் திரித்துப்பொய் சாற்றி வைத்தார்
கப்பிய களங்கந் தன்னைக் களைந்திட வேண்டி நானும்
ஒப்பினேன் ஜமால் முஹம்மத் ஈரோடு இளையான் கூற்றைத்
தப்பின்றிப் பாட வல்லோன் துணைவேண்டிப் பணிகின் றேனே
04

மருவிய இடர்க ளெல்லாம் மண்ணுறச் செய்து நாட்டில்
தருமங்கள் காத்து மக்கள் சகலமும் பெற்று வாழ
உரியன அனைத்தும் செய்த ஒப்பிலான் கோவோர்க் குள்ளென்
பெருமையும் கொண்டான் தம்மின் புகழ்கூற இறைப ணிந்தேன்
05

இனமத பேத மற்றே எல்லோரும் ஒன்றா மென்னும்
மனத்தினன் கொள்கை தன்னில் மாசுகற் பித்தோர் தம்மின்
இனவெறித் தடம எித்தே இயல்புவென் றறிதல் வேண்டி
முனைந்தனன் நானிந் நூலை முதலவன் றனைப்ப ணிந்தே
06

தோல்வியை ஒப்பா வெள்ளைத் தோலினர் வெள்கிப் பொய்யை
வால்செவி கண்ணும் மூக்கும் வலிந்துமே பொருத்தி உண்மை
சால்வது இதுதாம் என்னச் செப்பினர் பிறருங் கூடி
போலியாய்ச் சரிதம் சொன்னார் பழிநீக்க இறைப ணிந்தேன்.
07

இனமத பேத முற்றோர் இழிவுறு நிலைக்குள் இன்று
மனுக்குலம் குருதி சிந்தும் மனப்பொறிக் கடிமை யானார்
இனப்பகை மறத்தல் செய்ய இயம்பினேன் இந்நூல் திப்பு
இனத்திடை அறம்வ ளர்த்த இயல்பேற்ற இறைப ணிந்தேன்
08

உழுபவர் தமக்காம் சொந்தம் உழுநிலம் எனமுஹம்மத்
தொழுவதற் கேற்றோன் தூதர் சொல்லிய போதம் தன்னை
வழுவிலா தியற்றி மண்ணின் வழிமுறைச் சீர்மை காட்டி
ஒழுகிட வைத்த திப்பின் ஓர்மையைச் சொலப்ப ணிந்தேன்
09

மார்பினை மறைத்தல் கூடா மரபென்று மலபார் பெண்டிர்
சீர்மைக்குத் தடைவி தித்த சிறுமையைத் தடுத்தே திப்பு
வேரொடும் ஒழிந்து போக வேண்டுமென் றாணை யிட்டு
நாரியர் மானங் காத்த நலங்கூற இறைப ணிந்தேன்.
10

தன்மானம் காத்த லோடு தன்னுடை நாட்டின் மேலாம்
மண்மானம் காக்க முஸ்லிம் மதத்தவன் என்றும் நோக்காத்
திண்மையோ டெதிர்த்தான் நிஜாமைத் தோற்றோடச் செய்தான் மார்பில்
புண்ணுண்ட வீரன் திப்பு புகழ்சொல இறைப ணிந்தேன்
11

குருதியிற் றோய்ந்த தோளும் கொடும்பகை கொண்ட மாற்றான்
குருதியிற் றோய்ந்த வாளும் கொண்டநற் புகழும் வீரப்
பெருமையால் வரலாற் றின்கண் பொறித்திட்ட பேறு கொண்டோன்
அரும்பெரும் தியாகந் தன்னை அறைந்திட இறைப ணிந்தேன்
12

ஆக்கியோன் பற்றி

வெண்பாவில் புலியென் றான்றோர் விளம்பிய புலவர் மார்க்கப்
பண்பாளர் ஷரிபுத் தீன்தம் பாகமாய்க் கொண்டு வாழ்ந்த
மண்புகழ் ஆயிஷா உம்மா மகவெனப் பிறந்த ஜின்னாஹ்
விண்புகழ் திப்பு சுல்தான் வாழ்வினைப் பாடி னேனே
13

உடன்பிறப் பானோர் பத்தோ டேழுபெண் ஒன்ப தாகும்
உடனெட்டாம் ஆண்கள் ஈன்றோர் ஒன்றேதாய் தாதை யாகும்
திடனொடு வாழ்ந்தார் தாதை தொண்ணூறும் இரண்டும் ஆண்டு
உடனன்னை வாழ்ந்தார் எண்பத் தைந்தாண்டுக் காலம் சீரே.
14

ஆயிஷாவென் நாமங் கொண்டே அமைந்தது மனையும் ஒன்றச்
சேய்களாய் ஆண்கள் நால்வர் தனித்தொன்றே பெண்ணாம் பேரர்
வாய்த்தனர் பலராய் இன்னும் வழிவழி இறைவன் நல்க
வாய்த்திட வேண்டும் மக்கள் வளருயர் சந்த திக்கே
15

உரைநடை கண்ட தன்னாள் உயர்காவி யங்கள் மாறாய்
உரைநடை காவியத்தின் உருக்கொண்ட முதன்மைச் சீர்மை
மருவிய தாகும் என்றன் "மஹ்ஜபீன்" காவி யத்தால்
உருவாகும் இதனி னோடும் ஓரேழென் றாகு மாமே
16

முதன்முதல் "மஹ்ஜ பீன்"பின் முறைதொடப் "புனித பூமி"
கதைகளாம் அவற்றின் மூலர் "ஹஸன்"என்பார் "நபிகள் நூஹ்"இன்
அதியுயர் வாழ்வும் சூஃபி "உவைசுல்கர் ணீதம் வாழ்வும்
கதைகளாய் நானே ஆக்கிக் காவியம் இரண்டுஞ் செய்தேன் 17

தமிழக முதல்வர் செய்த செந்தமிழ்ப் புதினம் தன்னை
அமைப்பினில் சிறிது மாற்றி ஆக்கினேன் "பண்டார வன்னி"
இமைப்பிலான் வெள்ளைப் பேரை எதிர்த்தவன் காதை அஃதும்
அமைந்தது மறுமைக் கான ஆவணம் அடுத்தாம் சொல்வேன்

18

இறுதிநந் நபியின் வாழ்வை எழுபது நாட்க ளுக்குள்
உறுத்திடும் உடல்உ பாதை உணர்ந்திலேன் வடித்தெ டுத்தேன்
பெறுமதில் மூவை நூறு பாக்களாம் மனத்த டத்தில்
நிறைந்தது சொர்ணக் காவில் நிலைத்தது மறுமைக் கென்றே

19

கவிதைகள் கொண்ட நான்கு கோப்புநூல் கூட வின்னும்
கவிதைகள் பன்னூ றாகப் படைத்துளேன் சிறுக தைகள்
நவவழிப் படைப்பாய் இரண்டு நூல்களும் புதின மொன்றும்
உவந்திடும் சிறுவர் நூல்கள் என்புறம் நான்க தாகும்

20

மகாகவி இக்பால் கோத்த முத்துக்கள் "ஜவாபே ஷிக்வா"
வகைசெய்தேன் தமிழில் கற்க மொழிமாற்றக் கவிதை யாக
செகம்படைத் தாளு கின்ற தனியன்பால் கேட்கும் கேள்வி
உகந்ததாய் அவன்சொல் வாம்போல் பதிகளும் ஞான நூலே

21

அரசுசால் அமைச்சர் டாக்டர் ஏ.சீ.எஸ். ஹமீத்செய் ஞான
விருந்து"**அன்பின் கருணையின் பேரூற்று**" என்னும் நூலை
மருந்ததாம் மனுக்கு லத்தின் மாசுகொன் றிடவென் றெண்ணி
பொருந்தும்பாற் றமிழில் செய்தேன் பெரும்பணி புகழி றைக்கே

22

நூன் முகம்

முன்னர்ஆறு காவியங்கள் செய்தேன் என்று
மொழிந்துள்ளேன் காரணங்கள் வேறு வேறாம்
கன்னல்மொழி தமிழுக்காம் என்னா லான
கடுகளவு பங்காகும் அழிவை நோக்கி
முன்னர்போ லல்லாது படைப்பாக் கங்கள்
முடங்கலுற்ற காரணத்தால் கடமை ஓர்ந்தேன்
என்னன்னை மொழிக்கன்னை தனக்குச் செய்யும்
ஏவற்பணி போலாகும் இதுவா மன்றோ

23

பண்டார வன்னியன்னென் நாட்டு மன்னன்
பேரறிஞர் கலைஞரவன் புகழைப் பாட
"பண்டாரக வன்னியன்"என் நாமங் கொண்டு
புதினமொன்றை ஆக்கிவைத்தார் புகழ்ச்சி நாமம்
கொண்டிட்டான் "பாயும்புலி" எனவாம் நானும்
கோத்தெடுத்த இந்நூலும் பதிலுக் காம்போல்
தென்நாட்டின் திப்புசுல்தான் தனது வாழ்வைத்
தேர்ந்தெடுத்துப் பாடுகின்றேன் ஈழத் தோனே

24

மொழியாலே ஒன்றுபட்டோர் தமிழர் நாங்கள்
மாறுபட்ட போழ்தினிலும் வாழ்பு லத்தால்
அழியாது தாய்மொழியைக் காப்ப தெங்கள்
அனைவரதும் பொறுப்பாகும் பழைமை பேசும்
இழிநிலையில் இல்லாதே புதிய ஆக்கம்
ஏற்புடைத்தாயச் செய்தளித்தல் வேண்டும் அன்றேல்
பழிசொல்லும் சந்ததியும் புதுமை என்றே
பற்பலவும் நுழைந்துதமிழ்ச் சீமை கொல்லும்

25

பற்பலவாய்ப் பிறநாட்டுச் சித்தாந் தங்கள்
புகுந்தெங்கள் தாய்மொழியின் தனித்து வத்தை
முற்றுமழித் தொழிக்கின்ற கொடுமை தன்னை
மனத்துணர்ந்தேன் மனஞ்சோர்ந்தேன் இன்று எம்முள்
கற்றறிந்த அறிஞரெனப் பேர்கொண் டோரும்
கீழ்மைக்குத் துணைநின்றார் எதிர்கா லத்தோர்
பற்றற்றுப் போவாரே தமிழின் மீது
பார்த்திருத்தல் பாவமென்றென் பங்கைச் செய்தேன்

26

காலத்தால் அழியாதே காவி யங்கள்
கம்பனின்றும் வாழுகின்றான் சீறா சொன்ன
சீலன்உமர்ப் புலவனின்னும் சீவிக் கின்றான்
செந்தமிழ்தேன் தந்ததனால் இன்னும் பல்லோர்
சாலவுவப் பானபல நூல்கள் செய்து
தமிழோடு சேர்ந்தொன்றி வாழு கின்றார்
காலூன்றி வாழுமவை காலா காலம்
கற்றவர்க்கு முதுசொமென நானும் செய்தேன்

27

மறைந்தாலும் மறையாத புகழைக் கொண்ட
மாமனிதர் திப்புசுல்தான் மேமா தத்தில்
இறைவனடி சேர்ந்தாரதன் நான்காம் நாளில்
எனதுதந்தை புலவர்மணி ஷரிபுத் தீனும்
பிறந்ததந்த நாளில்தான் நூற்றுப் பத்துப்
பெருவருட இடைவெளிக்குப் பின்ன தாகும்
ஒருவகையில் பொருந்துமது நினைவில் கொள்ள
ஒன்றியந்த நாள்வரும்போழ் தென்ற னுக்கே

28

நாட்டுப் படலம்

இந்தியா

கூர்முனை தெற்க தாகத் தோற்றத்தில் முக்கோ ணத்தாய்
நீரினால் முப்பு றத்தும் நிலமொரு புறமுங் கொண்ட
பாரதம் பரந்த கன்ற பெருநிலப் பரப்பே திப்பு
காரணர் பிறந்த நாடாம் கீழ்த்திசைத் தேச மாகும்

29

அரேபியக் கடலாம் மேற்கே இந்துமா ஆழி தெற்கே
மறுபுறம் கிழக்கில் வங்க விரிகுடாப் பரப்பும் ஒன்றும்
பெரும்புலம் பீட பூமி பெருமலைத் தொடர்கள் நீரின்
அரண்கொண்ட தாகும் திப்பும் அவதரித் தாண்ட நாடாம்

30

வான்தொடு மலைகள் நாட்டின் வளஞ்சிறந் தோங்க வென்னும்
பான்மையில் புனல்பெ ருக்கிப் பெருநதி யோட்டும் ஆங்கே
கான்தொடர் இயற்கை தந்த கொடையெனப் பரந்து காணும்
தேன்சிந்து கனியி னோடே தெவிட்டாத நறையுங் கொண்டே

31

நதிதரு புனலும் வான்பெய் நீரும்மண் செழிக்கச் செய்யக்
கொதிதிரைக் கடல்கள் தம்மின் குறைதீர்க்கும் திரவி யங்கள்
வதிபுல மாந்த ருக்காய் வாரியே வழங்கும் வாறாம்
முதலவன் கருணை கொண்ட மாபெரும் நாடீ தாமே

32

பல்மொழி பேசும் நாடு பல்லின மக்கள் சேர்ந்தே
இல்லொரு பகைமை எம்முள் என்னுமால் வேறு வேறாம்
பல்வகைக் கலாசா ரத்தின் பற்றுதல் கொண்டும் வாழும்
தொல்புகழ் நாக ரீகச் சீர்மையுங் கொண்ட நாடே

33

உலகத்தின் அதிச யத்தின் ஒன்றெனுந் "தாஜ்ம ஹா"லும்
உலகத்தின் உச்சி யாகும் "எவறெஸ்ட்"டும் உடைத்த நாடு
கலைகளின் முதன்மை பாரோர் கட்புலன் செவியும் மாந்தப்
பலகலை வடிவ மோங்கும் பாரதப் புனித நாடு

34

மனுப்பலம் முதன்மை நாட்டின் முன்னேற்றம் காண மக்கள்
சனத்தொகை குன்றின் நாடு செழிப்புறா செய்வா ரற்றே
மனுக்குலம் இந்தியாவின் மாபெரும் பலமாம் தம்மின்
அனைத்துடைத் தேவைமுற்றும் அவர்களின் கரத்தால் சாலும்

35

கைத்தொழில் வளமும் சேர்ந்து கடல்படு வாணி பம்மும்
பொய்த்திலை என்றும் மண்ணில் பெறுவளம் அதற்கும் மேலாம்
செய்திறன் கொண்டோ ரென்றும் தாய்மண்ணின் வறுமை கொல்வார்
கைத்தலம் கொண்ட மூலம் காணுமே கையேந் தாதே

36

ஐவகை நிலமாம் நெய்தல் அதனொடு குறிஞ்சி முல்லை
செய்பயிர் விளைக்கும் மருதம் செந்தழற் பாலை மண்ணும்
வெய்யோனின் சீற்றம் காணா வெண்பனிக் குளிர்ரோ ருட்ணம்
கைபடுத் துலகை ஈர்க்கும் தனித்துவம் கொண்ட நாடே

37

மைசூரின் புவியில் அமைப்பு

மலைத்தொடர் கிழக்கும் மேற்கும் மைசூரின் அரண்க ளாகும்
மலபாரே மேற்கின் எல்லை மிகப்பெரு மலைத்தொ டர்கள்
நிலைத்தமண் கிழக்கிற் கூட நீண்டதாம் பருவ தங்கள்
நிலப்புலம் இதுவே பத்தோ டேழாம்நூற் றாண்டுக் காலம்

38

இயற்கையின் எல்லை யாக இருந்தன மலைத்தொ டர்கள்
இயைபுறு மழைக்கும் அஃதே ஏற்றதாய் அமைந்து போக
வயப்பட லான தாங்கே வாகுறக் குளிர்மை சீத
மயப்படும் இயற்கை கொஞ்சும் மைசூரின் நிலப்ப ரப்பே

39

திப்புவின் காலம் மைசூர் தலைநகர் அவரே பின்னாள்
ஒப்பினார் வடக்கை நோக்கி ஒருபத்துக் கற்கள் தள்ளிச்
செப்பமாய் அமைந்தி ருந்த தீவினைத் தலையாய்க் கொள்ள
அப்புலம் காவே ரிக்கும் அருகமைந் திருப்ப தாகும்

40

தீவினோர் புறத்தில் முன்னோர் தோற்றிய கோட்டை யொன்று
யாவுமே பொருத்த முற்றும் உறுதியோ டமைந்தி ருக்கக்
கோவுடன் பட்டா ரஃதைக் கொண்டனர் தலைந கர்க்கே
பூவியற் பாது காப்பும் பொருந்திய தால தாகும்

41

சீரங்கப் பட்டண மென்னும் திருநாமம் கொண்ட தம்மண்
ஓரங்கள் வயல்க ளாலும் ஒன்றிய கான்க ளாலும்
சாருமே மலைக ளும்பூ தாழ்வுற்ற பள்ளத் தாக்கும்
காரணம் இவைக ளும்தான் கொண்டவம் முடிவுக் கன்னாள்

42

ஆட்சி அமைப்பு

பெருநிலப் பரப்புக் கொண்ட "மராட்டியாம்" வடக்கில் "பூனா"
திருநக ரதற்கு முற்றுந் திறன்படு படைப லத்தோடு
இருந்தது வடக்கே மற்றோர் இருக்கையாய் "ஹைத்தி ராபாத்"
அரசராய் "நிஜாம்"தான் ஆட்சி இயற்றினார் முஸ்லிம் பேரார் 43

மேற்கெல்லை மலபார் ஆட்சி முற்றுமொன் றாக வன்றி
தோற்முற் றிருந்த தன்னாள் சிதறியே பலபேர் ஆண்டார்
சாற்றுவர் திருவாங் கூரே சக்திமிக் கதுவாம் மன்னர்
ஏற்றமுற் றிருந்தார் மற்றோர் திறைவரி செலுத்தி னாரே 44

படைபலம் இருந்த தாலே பாளையத் தார்கள் அஞ்சி
கொடுத்தனர் ஆட்சி தம்மைக் கைகடத் திலாதி ருக்க
அடுத்தவர் சிதறி வாழ்ந்தால் அதுவேதாம் வாய்ப்பென் றெண்ணும்
கொடியவர் ஆங்கி லேயர் கழுகுக்கண் காலம் நோக்கும் 45

குறிவைத்துப் பாயும் கொம்பு கொண்டகான் வராகன் கூட்டம்
உறும்வகை நோக்கிக் காத்தே உன்னித்து இருப்பான் போன்றே
பொறுத்திருந் ததுவாம் வெள்ளைக் கும்பனி அற்றை நாளில்
அறிந்திலர் இந்தி யர்கள் அடாதுவந் துறுகால் மட்டும் 46

ஒற்றுமை யற்றே மற்றும் ஒருவரை அழிக்கும் பான்மைப்
பற்றிழி குணத்தி னோர்கள் பாழ்படக் கடல்கள் தாண்டிக்
கொற்றமுற் றாள வந்த கொள்ளையர் வெள்ளைப் பேர்கள்
முற்றிலும் பரந்து தம்மின் மேலாண்மை வலுக்கச் செய்தார் 47

சென்னையை முதன்மை யாக்கிச் செயற்பட்டார் பறங்கி யர்கள்
சென்னையில் "சென்ஜோன்ஸ்" கோட்டை சக்திமிக் கதுவாய் அன்னார்
முன்னிலை நோக்க மான வியாபார முயற்சி கட்கே
உன்னதப் பொருத்தம் அஃதென் றுணர்ந்ததால் கொள்ளைக் காரர் 48

கடலண்டு பிரதே சங்கள் குறுநில மன்னர் பேரால்
தொடர்ந்தன ஆட்சி மாற்றார் தயவொடு கால்கள் பற்றி
அடிமைகள் போலு மன்னார் ஆகினர் வெள்ளை யர்தம்
கொடுமைக்கும் அஞ்சி னாரோ கொள்கையற் றிழிவு பெற்றார் 49

பதினெட்டாம் நூற்றாண் டஃதின் பிற்காலில் பிரஞ்சுக் காரர்
ததிகெட்டு நாட்டை விட்டுத் துரத்திட ஓட்டங் காண
அதுமுதல் வெற்றி கொண்ட ஆங்கிலப் பெருச்சா ளிப்பேர்
அதிபதி யானார் ஆங்கும் ஆட்சியிற் பலமுங் கொண்டார் 50

பிறிதொரு தளமு மாகப் பம்பாயிற் பறங்கிக் காரர்
உறுதிகொண் டிருந்தார் எல்லா உத்தியும் ஆங்கி ருந்தே
முறைகொண்ட தாகும் திப்பு மன்னனை வீழ்த்து தற்காம்
குறியவர்க் கதுவே தம்மைக் கதிகலங் கிடச்செய் பேரால் 51

உடைமைக ளனைத்தும் சேர்த்தே ஒன்றிடக் காத்து வைக்க
உடையநற் பாது காப்பும் உள்ளதாய்க் கல்கத் தாவை
உடன்பட்டார் வெள்ளை யர்கள் ஒன்றிய ஆட்சி ஏற்று
நடைமுறைப் பட்டார் "கவர்னர்" நிலைத்துமே என்ற தாலே 52

பொருளீட்டும் நோக்க மன்றிப் பிறிதொரு கார ணத்தை
வருகையின் போது முன்னாள் வெள்ளையர் கொண்டா ரல்லர்
பெருகிய வருவாய் கண்டு பேதலித் தவர்கள் தம்மை
நிரந்தர மாக்கும் எண்ணம் நிலைபெற மாற்ற முற்றார் 53

தற்காப்பு வேண்டும் என்ற தக்கதோர் கார ணத்தால்
உற்பத்தி யான தொன்றே ஒன்றிய படைக்கூ றாகும்
பற்பல பிரிவாய் ஆட்சிப் பொறுப்பினில் சுதேசி யோர்கள்
கொற்முற் றிருந்த போதும் கைப்பல மற்றே வாழ்ந்தார் 54

வந்தேறு குடிக ளாக வாழ்ந்தவர் பிற்கா லத்தில்
சொந்தமே கொள்ள எண்ணம் தோன்றிட இந்தி யர்தாம்
பந்தமுற் றார்கள் வீழ்ச்சிப் பாதைக்கும் கால்கோ ளானார்
சொந்தத்துள் பகைமை கொண்ட தாழ்வினை கருவா கிற்றே 55

ஒவ்வொரு பிரிவுக் குள்ளும் ஒட்டுண்ணி போல்நு ழைந்து
செவ்வையாய் அதிகா ரத்தின் துணைபெறச் சூழ்ச்சி செய்தே
பவ்விய மாக வெற்றிப் பதாகையும் உயர்த்தி னார்கள்
அவ்வினை அறிந்த திப்போ அரியெனச் சினத்திட் டாரே

56

பதினாறாம் சதவாண் டின்கால் பாரதப் பெரும்பு லத்தின்
அதிபெரும் பகுதி டெல்லி ஆட்சிக்குள் அடங்கிற் றன்னாள்
அதிகாரம் மொகலா யர்கை ஆயினும் வெள்ளை யர்க்கே
அதிகாரம் சோரம் போன அவலமும் நடந்த கேடாம்

57

மொகலாயர் முஸ்லிம் தங்கள் மதத்தினால் சிறுபான் மையோர்
அகலக்கால் விரித்துத் தம்மின் ஆட்சியில் பலங்கொண் டார்கள்
தகைத்திரு திப்பு சுல்தான் தந்தையும் முஸ்லி மேதான்
வகைத்திலை அவர்தம் சார்பு வெள்ளையர் தமக்கா மன்றே

58

அடிபணிந் திடாத போதும் அந்நியர் அச்சங் கொள்ளும்
படிஹைதர் அலியும் அன்னார் புத்திரர் திப்பு வும்பேர்
இடைஞ்சலாய் ஆனார் வெள்ளை ஆட்சிக்கு விரோதம் செய்தார்
படைகொண்டும் ஆங்கி லேயர் பயந்தனர் அவர்க ளுக்காம்

59

தொடர்பற்றுப் போனார் தம்மின் நாட்டொடு வெள்ளை மாந்தர்
தடையான தொலைதூ ரத்தில் தங்கிவாழ்ந் திருந்த தாலே
நெடுநாட்கள் பிடித்த தெந்தத் தகவலும் வந்து சேர
கடல்வழித் தொடர்பு ஒன்றே காலத்தின் நியதி யாகும்

60

மேலிடக் கட்ட ளைகள் வந்துசேர்ந் திடவும் தங்கள்
பாலிருந் தெந்தச் செய்தி போயடைந் திடவும் நாட்கள்
வேலியாய் அமைந்த தாலே விருப்பம்போல் "கவர்ணர்" தம்மின்
வேலையில் சுயமாய் நின்றார் வேண்டிய தியற்ற லானார்.

61

தன்னிட்டப் படியே ஆட்சி செய்திடக் கிடைத்த தாலே
அன்னியர் ஆட்சி கீழ்மை அராஜக வழியில் செல்லும்
மன்னர்கள் இந்தி யர்கள் மண்டியிட் டவர்கள் பின்னால்
சென்றதும் வேளுன் றற்கு வித்திட்ட தாகிப் போகும் 62

திப்புவின் தந்தை ஹைதர் அலி

திப்புவுக்கு அரசுரிமை சேர்வ தற்குத்
தந்தைவழி காரணமாம் அவர்தம் தந்தை
ஒப்பாரும் மிக்காரும் அற்ற வீரர்
உயர்பதவி படைப்புலத்தில் கொண்டி ருந்தார்
செப்பரிய வெற்றிபல கொண்டு மைசூர்ச்
சேனைக்குப் புகழ்சேர்த்து நாடுங் காத்த
ஒப்பரிய செயல்பின்னர் நாட்டை ஆளும்
உயர்வினையுந் தந்ததவர் ஹைதர் மன்னர்

63

ஆயிரத்தோ டெழுநூற்று இருபத் தொன்றில்
அவதரித்தார் ஹைதர்அலி மைசூர் மண்ணில்
காயபலம் மிக்கவராய்த் திகழ்ந்தார் சற்றுங்
கற்றறியா தவரெனினும் மைசூர் மன்னர்
நேயமுற்றார் அவர்திறனில் தம்ப டைக்கு
நலஞ்சேர்க்கத் துணைத்தலைவர் பதவி தந்தார்
ஆயபலன் கிட்டியது நினைந்த வாறே
ஆளுமைக்கே உவமையென அலியி ருந்தார்

64

"பங்களூர்"க்கு வடக்கிருந்த "தேவ ஹல்லி"ப்
பிரதேசச் சிற்றரசை வெற்றி கொள்ளும்
பங்கினிலே அவர்தம்மின் ஆற்றல் கண்டு
பதவியிலே உயர்ச்சிபெற்றார் தலைமை ஏற்றார்
சிங்கமெனப் போரினிலே திகழ்ந்த தோடே
சிறந்தநிரு வாகியெனும் பெயருங் கொண்டு
சங்கைமிகு தலைவரென மக்கள் ஏற்கும்
சிலாக்கியமும் கொண்டிருந்தார் ஹைதர் அன்றே

65

துணைவியையும் வழமைக்கென் றுகந்த வாறாய்த்
"தேவஹல்லி" யுத்தத்தின் போது ஹைதர்
இணைந்தழைத்துச் சென்றிருந்தார் அப்போழ் தேதான்
இவ்வுலகின் தரிசனத்தைத் திப்பு பெற்றார்

அணையாத புகழினுக்கே ஆகும் பிள்ளை
அவதரித்த போதன்னை தாதை நெஞ்சம்
இணைந்தார்கள் மகிழ்ந்தார்கள் எதிர்கா லத்தின்
ஏற்றமிகு விடிவெள்ளி தோன்றிற் றென்றே
66

கற்றறிந்த பண்டிதராம் பூரணய்யா
ஹைதருக்கு நண்பரென வானார் ஆட்சி
பெற்றதுமவ் வறிஞருக்கு முதன்மைத் தானம்
புந்தியுரை மந்திரிமார் தமக்குட் தந்தார்
சொற்றிறனும் தொலைநோக்கும் தெளிந்த ஞானச்
சுரங்கமெனும் வாகவரும் அமைந்த தாலே
உற்றபல இடர்களைய உறுது ணையாய்
உடனிருந்தார் ஹைதர்தம் உளந்தேர்ந் தாரே
67

புலியொன்று பிறந்தது

ஹைதர்அலி முதல்மனைவி ஷாபாஸ் பேகம்
செல்வமெனப் பெண்ணொன்றைப் பெற்ற பின்னர்
செய்கையற்றுப் போனதுடற் பாக மொன்று
தன்னிச்சைக் கியையவுடல் மறுத்த தென்ப
துய்யமனங் கொண்டவராம் அன்னை தம்மின்
துயர்தாங்கி வாழ்ந்தாலும் கணவர் வாழ்வு
பொய்யாகிப் போமென்று வருத்தங் கொண்டார்
பதிக்குமொரு துணைவேண்டிப் பாடுற் றாரே
68

ஆட்சிசெய்ய ஆண்மகவு வேண்டு மென்னும்
அவசியத்தை அவருணர்ந்தார் தம்ம னத்தை
ஆட்சிசெய்யும் கோவிடமும் எடுத்துச் சொல்ல
ஆதரவாய்ப் பதிலற்றே அதிர்ந்து போனார்
தீட்சணியம் மிக்கவவர் நோக்கி னுக்குச்
சம்மதியாக் கணவரிடம் எதிர்கா லத்தில்
நாட்டிற்குத் தலைமைதாங்க ஆண்வேண் டாமோ
நிர்க்கதியாய்ப் போகாதோ நினைவீ ரென்றார் 69

உன்னுடனே நான்வாழ்ந்த காலம் இன்றே
ஓய்ந்ததுவோ எனக்கேனோர் புதிய வாழ்வாம்
சொன்னதனை மறந்துவிடு எதிர்கா லத்தைத்
தீர்மானம் செய்வதிறை எனம றுக்க
மன்னவனின் கடனொன்றும் உண்டாம் தம்பின்
முறையான ஆட்சிக்கு வாரி சொன்றைத்
தன்னளவில் தயார்செய்தல் மறுக்க லாமோ
தனக்கென்றோர் மகவிருந்தால் சாலும் என்றார்
70

பன்முகமாய் அவசியத்தைப் புரியச் செய்யப்
பாடுபட்டார் பலநாட்பின் பதியும் ஒப்பத்
தன்னெடுநாள் தோழி "பஃருன் நிசா"வைத் தேர்ந்தே
தலைவனுக்குத் தரவவர்தம் விருப்பம் கேட்டார்
மன்னவரின் மனையாதல் புறமி ருக்க
மனமொன்றி வாழ்ந்திருந்த தோழி வாழ்வில்
தன்னையொரு பங்காக்குந் திராணி யற்றே
தோழிமனத் தாசைக்குத் தடைசொன் னாரே
71

"உயிராக உன்னைநான் நேசிக் கின்றேன்
உறுதுணையாய் இருப்பதென்றன் பணிய தாகும்
செயவிளையேன் துரோகமொன்றும் நிர்ப்பந் தம்நீர்
செய்யாதீர் தேர்ந்துவேறோர் பெண்ணைக் - கொள்வீர்
தயைகூர்ந்து மறுப்பதற்காய் இதுநாள் மட்டும்
தோழமையாய் இருந்ததெண்ணி மன்னிப் பேற்பீர்"
நயமாக எடுத்துரைத்தார் பஃருன் நீசா
நாயகியோ மனங்கனிய வேண்டி னாரே
72

நம்பிக்கை யுள்ளவளாய் நானுன் னைத்தான்
நாடுகின்றேன் நாயகரை நன்றாய்க் காக்கும்
செம்மைக்கும் உனையன்றி உகந்த பெண்ணாய்
தேரேன்நான் மற்றொருபெண் ஓர்ந்தே உன்றன்

சம்மதத்தைத் தாவென்னைத் தவிர்த்தல் செய்யாய்
தாய்த்தானம் பெற்றேயோர் மகவை ஈன்றே
இம்மண்ணைக் காத்தலுக்காய் இணங்கும் என்ன
ஏற்பதன்றித் தோழிவழி யற்றுப் போனார்
73

மன்னவரும் மணப்பெண்ணும் விருப்பை ஏற்க
மணவினையும் நடைபெற்ற திறைநாட் டம்போல்
இன்புற்றார் மனத்தளவில் "ஷாபாஸ் பேகம்"
எதிர்காலம் ஒளிமயமாம் எனம கிழ்ந்தார்
என்னமனு வேட்கையான போதும் காக்கும்
இறைநாட்டம் உடன்பலனைத் தள்ளி வைக்கத்
தன்வழியில் கருத்தரிக்கப் "பஃருன் நீசா"
தாமதத்தைக் கொண்டிருந்தார் வருடம் ஐந்தாம்
74

ஆண்டைந்து கடந்துசெல அச்சம் கொண்டார்
ஆகாதோ மகவொன்றை கொள்ள "ஷாபாஸ்"
பூண்டிருந்த நம்பிக்கை பொய்யாய்ப் போகும்
பாடாகும் எனவெண்ணி வருந்துங் காலை
ஆண்டவனின் நல்லடியார் "திப்பு"ம் ஆங்கு
அடக்கமுற்ற தலத்துக்குச் சென்று அன்னார்
வேண்டுதலை இறைவன்பால் ஒப்பு விக்க
விளைகவெனப் பிறர்சொல்ல விருப்பங் கொண்டார்
75

படைத்தவனே அனைத்துக்கும் போது மாவான்
பண்ணவனின் நல்லடியார் பொருட்டி னாலே
கிடைக்கட்டும் இறையருளால் மகவு என்னுங்
கருத்துன்ன கணவருடன் "ஸியாரத்" செய்ய
படைத்தவனும் விரும்பினனோ "பஃருன் நீசா"
புண்ணியனின் புண்ணியத்தால் கருவொன றேற்றார்
அடைந்தஇன்பம் கொஞ்சமல்ல "அல்லாஹ்" வேநாம்
அடிபணிந்தோம் எனக்கனிந்து வழுத்தி னாரே 76

படைப்பவனின் பேரருளால் பண்பில் மிக்க
பஃருநிசா பிள்ளையொன்றைப் பெற்றெ டுத்தார்
அடைந்தபெரு மகிழ்வுக்கோர் அணையே இல்லை
ஆண்குழந்தை ஆட்சிக்கு அணிசெய் வாறாம்
கொடையிறைவன் தந்தவருள் என்றே நன்றி
கூறுவபோல் இறைநேசர் "திப்பு மஸ்த்தான்"
அடிநாமம் தனைப்பெயராய்த் "திப்பு" என்றே
அம்மகர்க்கப் பெயர்சூட்டி அழைத்திட் டாரே
77

பத்தீர்நாள் பதினோராம் திங்கள் ஆண்டு
பற்றியதோ ராயிரத்து எழுநூற் றைம்ப(து)
ஒத்ததிங்கள் துல்ஹஜ்ஜீ பத்தாம் நாளில்
ஓராயி ரத்தறுப தோடு மூன்றில்
இத்தரையின் புகழ்கொள்ள நாட்டை ஆள
இறைகொடுத்த கொடையாகப் பிறந்தார் திப்பு
"பத்தேஹ்அலி திப்பு"பங்க ளூரில் "கோலார்"
பிரிவினிலே "தெவனஹல்லி" பிறந்த ஊராம்
78

கட்டியணைத் தார்மகனைக் கையி லேந்திக்
குதூகலித்தார் மனைவிமுகம் நோக்கிச் சொல்வார்
திட்டமிவன் வெள்ளையரைத் துவம்சம் செய்தே
திசைகெட்டு ஓடிடவுஞ் செய்வா னென்றார்
மட்டில்லாப் பெருமகிழ்வு தாய்க்கும் தானோர்
மகனீன்ற பெருமையினால் பதியை உற்றுப்
பட்டகட னிறுத்தேன்நான் அரசிக் கென்றன்
பதியாக உமைத்தந்த பேற்றுக் கென்றார்
79

நோயுற்றுப் போனதனக் கீடாய் மற்றோர்
நங்கையினைக் கணவனுக்கு மனையாய்த் தந்து
தாயுறவு கொண்டேயோர் மகவைத் தாங்கத்
தோழியினைத் தேர்ந்தளித்தார் "ஷாபாஸ் பேகம்"

சேயினைத்தாய் கண்டதுமே நினைவிற் கொண்டார்
செய்தவினை முதல்மனைவி எண்ணம் போன்றே
தாயாகி மகனீன்ற பேற்றோ டொன்றித்
தலைவனையும் மகிழ்வித்த கார ணத்தால்
80

தலைவிக்கு மகவொன்று பிறந்த தெண்ணித்
தோழியரும் மகிழ்ந்தார்கள் தொட்டி லிட்டு
விலையில்லாப் பெருந்திருவைத் தாமே பெற்ற
வாகினிலே குதுகலித்தார் ஆடி னார்கள்
குலஞ்செழிக்க வந்தசெம்பொற் சிலையா மன்ன
சிறுமகவை முத்துசொர்ண அணிகள் பூட்டி
அலங்காரம் செய்தார்கள் ஒன்றி நின்று
ஆராரோ ஆராரோ பாடி னரே
81

ஆராரோ ஆராரோ ஆரீ ராரோ
ஆராரோ ஆராரோ ஆரீ ராரோ
ஆராரோ ஆராரோ ஆரீ ராரோ
ஆராரோ ஆராரோ ஆரீ ராரோ
சீராளா திப்புமகன் தெய்வப் பேறே
செம்மலரே கண்ணுறங்கு தந்தை தம்மின்
பேர்வழங்க வந்தவனே கண்ணு றங்கு
பஃறுநிசா பெற்றபொன்னே கண்ணு றங்கு
82

வீரத்தின் வார்ப்பேமெஞ் ஞான ஊற்றின்
விழியேயிம் மண்ணுய்ய வந்த கோவே
தீரத்தின் புதுப்பொலிவே சிம்மம் ஈன்ற
சிம்மவிளங் கன்றேநீ கண்ணு றங்கு
பூரணனின் பொக்கிஷமே கண்ணு றங்கு
பெற்றமனம் அமைதிபெற நீயு றங்கு
ஆராரோ ஆராரோ கண்ணு றங்கு
அழகுமணி ஆரமேநீ கண்ணு றங்கு 83

தாய்ப்பேறு தந்தவனே ஆரீ ராரோ
தாய்மண்ணின் புகழ்க்கொடியே ஆரீ ராரோ
வாய்முறுவல் பூப்பவனே மணியே முத்தே
வண்ணமலர் பூங்கொத்தே விழிகள் ஆறு
காய்கின்ற வெண்மதியே கண்ணே ராரே
கனிந்தபுது மாதுளையே கொம்புத் தேனே
வேய்குழலின் நாதவொலி சிந்துஞ் செல்வா
வெற்றித்திருக் குலக்கொழுந்தே விழியு றங்கு
84

தோழியர்கள் தாலாட்டுப் பாட்டி சைத்துத்
துயிலவைக்க முயன்றார்கள் தொடர்ந்தார் நீண்ட
வேளையழிந் தேகியதே யன்றித் திப்பு
விழிமூட மறுத்தேதன் கைகால் வீச
நீளவீழி பூத்தன்னை புகல்வார் தந்தை
நெஞ்சத்தில் கொண்டவினை வெள்ளைப் பேரை
ஆழிகடந் தோடவைத்தல் அதனைச் செய்ய
அவனின்றே துணிந்தான்நீர் அகல்வீ ரென்றே
85

வெற்றிமேல் வெற்றி

"நனன்ஜராஜ்" "தேவ்ராஜ்"என் றிருவர் மைசூர்
நாட்டின்பெரு செல்வாக்குப் பெற்றி ருந்தார்
முனைந்தார்கள் மந்திரிமார் சகோத ரர்கள்
மைசூரின் மகாராஜா தனையன் னாரின்
பணிமுடக்கி ஆட்சிவளம் தனைத்தம் மாக்கப்
பெற்றார்கள் வெற்றியதில் நனன்ஜ ராஜே
தனைமுதன்மை ஆக்கிமைசூர் ஆட்சி தன்னைத்
தொடர்ந்தனனே ஆட்சிதிசை மாறிற் றன்றோ
86

அடிக்கடிபோர்க் களங்கண்டார் அண்ணன் தம்பி
ஆட்சிவலுப் பெற்றிட்ட நாளி ருந்தே
ஒடுக்கவென முனைந்தார்கள் "ஹைத்தி ராபாத்"
ஓரத்து ஆட்சியினை நிசாமை வீழ்த்தக்

கிடைத்ததொரு சந்தர்ப்பம் வெள்ளை யோரைக்
களமுனையிற் சந்திக்க ஹைதர் அந்தப்
படையணிக்குத் தளபதியாய் இருந்தார் வெள்ளைப்
பறங்கியரின் போர்முறைகள் தெளிந்திட் டாரே
87

காலத்தைச் சிறிதேனும் விரயம் செய்யாக்
காரணத்தால் படைப்பலமும் பெருகிற் றன்னாள்
ஆலைகளும் பெருகினவே ஆயு தங்கள்
அதிநவீன வடிவத்தில் பிரெஞ்சுக் காரர்
சாலவவர்க் குதவினரே ஹைதர் அன்னார்
தொழில்நுட்ப அனுபவத்தைப் பயனாய்க் கொண்டார்
வேலைதந்தார் அன்னவர்க்குப் போர்நுட் பங்கள்
விளக்கப்படை வீரருக்கு வெற்றி நோக்காம்
88

வெற்றித்திரு வென்றிருந்த வாகால் மைசூர்
விரும்பியது திண்டுக்கல் பிரதே சத்தை
முற்றுமவர் பரிபால னத்துள் ளாக்க
முழுப்பொறுப்பும் ஹைதர்பெற்றுச் சீர்மை செய்தார்
அற்றையநாள் வரிவசூல்கள் செய்தோர் கொண்ட
அசமந்தப் போக்கினின்று விடுகை பெற்று
அற்றறுந்து கைலஞ்சம் போகச் செல்வம்
அதிகரிக்கப் பாடுபட்டார் வெற்றி கண்டார்
89

வழமைக்கு மாறாக முப்பங் கேற்றம்
வரித்திட்ட வரியோடு மைசூ ருக்கும்
கொழுத்ததொகை கிடைத்திடவும் ஹைதர் செய்தார்
கோன்முறையும் உன்னதத்தின் நடையுங் காணும்
பழுத்தபெரு ஞானத்தார் போலும் மண்ணைப்
பாலித்தார் படிப்பறிவே இல்லாப் போழ்தும்
முழுப்புலனும் நிருவாகப் பொறுப்பி னுக்கும்
மண்காக்கும் கடமைக்கும் செறிந்த தன்றோ 90

நடைமுறையில் ஆட்சிநிரு வாகந் தன்னை
நனவாக்கிக் கொண்டிருந்த அண்ணன் தம்பிக்(கு)
இடையிலொரு யுத்தகார ணத்தி னாலே
இயல்புநிலை இல்லாதோர் இணக்க பேதம்
உடன்படவே சிக்கலுரு வாகிற் றன்னாள்
உரியபல மற்றிருந்தார் மன்னர் தாமும்
கடனாகப் படையினர்க்கும் இருந்த தாட்சி
காலியுறத் திறைசேரி காய்ந்த தாமே
91

ஈதறிந்த ஹைதர்அலி சகோத ரர்க்குள்
இணக்கமொன்றை ஏற்படுத்தி மன்ன ருக்கும்
தோதான வாகினிலே அபயங் காட்டிச்
சொந்தமாகக் கொண்டிருந்த சொத்தி னாலே
யாதுமொரு நிலுவையுமற் றனைவ ருக்கும்
ஏற்றகடன் தரப்படையோர் திருப்தி கொண்டார்
போதுமான தொகைப்பணத்தை யுத்த வெற்றிப்
பொருளினின்று ஹைதரஅலி சேர்த்தி ருந்தார்
92

மராட்டியர்கள் மைசூர்மேல் படைந டத்த
முன்னின்று தளபதியாய் ஹைதர் வெல்ல
வராததோல்வி மைசூரைக் காத்த தென்ற
வண்மைக்குப் பரிசாகப் "பங்க ளூரை"த்
தரவிழைந்தார் மன்னர்"ஹை தர்"கைக் கொன்டார்
சகோதரர்கள் இருவருமே இல்லை ஆங்கு
மரணித்தா ரொருவர்மற் றவரும் சேவை
முற்றுவைத்து ஒதுங்கிவெளி அகன்றிட் டாரே
93

கலையார்வங் கொண்டவராம் மைசூர் மன்னர்
கணிகையரின் ஆட்டத்தில் மயங்கித் தானும்
புலனழிந்து நடனமாடும் போழ்து ஓர்நாள்
பரிதாப மாகவுயிர் பிரிய மாண்டார்

நிலையான ஆட்சியற்ற நிலைமை தோன்ற
நிருவாகம் அரசிகையின் பலமா கிற்று
வலுகூட்டித் தன்பலத்தை யுறுதி செய்ய
வரித்தாரோர் வஞ்சகனை பிராம ணப்பேர்
94

பொறுப்பாக இருந்தாட்சி நடத்தி யோர்கள்
பேரற்றுப் போனதனால் ஹைதர் ஆட்சிப்
பொறுப்பேற்க வேண்டியொரு பொறுப்புஞ் சேரப்
பொறுப்பேற்றார் பொறுப்புடனே அரசு யியற்றப்
பொறுப்பேற்ற நாட்களிலே பொறுப்பற் றேயோர்
பேரவர்க்கு நம்பிக்கை யாயி ருந்தே
பொறுப்போடு நடந்திருந்தும் பதவி ஆசை
பெருநெருப்பாய்ப் பற்றச்சதி செய்திட் டாரே
95

கந்தாராவ் என்றவந்தப் பிராம ணன்மேல்
ஹைதர்அலி நம்பிக்கை கொண்டி ருந்தார்
முந்திநிரு வாகிகளாய் இருந்த வர்கள்
மறையஅலி பொறுப்பேற்கப் பொறுக்க மாட்டாச்
சிந்தையினால் சதியொன்றை அரசி யோடு
சேர்ந்தியற்றி வெற்றிகண்டார் சிலகா லந்தான்
புந்தியிலாச் செய்கையினால் ஹைதர் மீண்ட
போழ்துபெரும் தண்டனைக்குள் சிக்கி மாண்டார்
96

சதியின்பின் ஏற்பட்ட சிக்கல் காலாய்ச்
சீராங்கப் பட்டினத்தி லிருந்து சில்நாள்
ஒதுங்கியொளிந் திருக்கின்ற நிலைமை தோன்ற
ஊர்கண்ணில் படாதிருந்தார் "பங்க ளூரில்
விதிவசமே குடும்பத்தைத் தனிக்க விட்டு
வதிந்ததுவும் அப்போழ்தே உறவுக் காரர்
உதவியுடன் புதியபடை யொன்று கூட்டி
உட்புகுந்தார் மைசூருள் வெற்றி கண்டார் 97

விளையும் பயிர்

இந்நாளில் நடந்தவொரு நிகழ்வைக் கூறின்
இளமையிலே திப்புசெய்த மயிர்கூச் செய்தும்
விந்தைமிகு சாகசத்தை விளக்க லாகும்
வீரத்தின் விளைநிலமாய் அவரைச் சாற்றும்
தந்தையினைப் பிரிந்திருந்த சிறுவர் ஈர்பேர்
திப்புவுடன் தம்பிகரீம் என்பார் ஆய்ந்து
கந்தாராவ் வந்திருந்தான் சதிசெய் தோனாம்
கைதுசெய்து மறைத்துவைத்தான் காண்பா ரற்றே
98

உயரமிகு கோட்டையொன்றுள் பாது காப்பாய்
உயரியநல் உபசரணை யோடு வைத்தான்
பயக்கும்நற் பலனிவரைப் பாது காத்துப்
பாலித்தால் எனநினைந்தான் பலனில் தோற்றான்
செயற்கரிய செயலொன்று செய்தார் திப்பு
தம்பியுடன் தப்பிவிட்டார் வயதோ பத்து
செயலறிந்தான் கந்தாராவ் காவல் செய்தோர்
தலையுருளச் செய்தனனனே சதிகா ரப்பேய்
99

கருவினிலே திருவுடையோர் கல்லாப் போழ்தும்
கருத்துணர்ந்து செயற்பட்டு வெற்றி காண்பார்
கருவிலுரு வானதிரு கற்றால் விஞ்சும்
கல்வியிலே காணுபலன் இதுவ தாகும்
உருவானார் திப்புபெரு வீரங் கொண்ட
உதிரத்தில் ஹைதருக்குப் பிள்ளை யானார்
பருவத்தில் சிறுத்தாலும் அன்று செய்த
பொறிஐந்துங் கலங்குசெயல் பிறப்பா லன்றோ
100

அடைத்துவைத்துக் காவலரண் செய்தி ருந்தும்
அச்சமுற வில்லைதிப்பு ஒருவா றாகப்
படைப்பணியாள் ஒருவன்தம் பரிவி னாலே
புறத்திருந்தோர் கயிறுதனைப் பற்றிக் கொண்டார்
அடித்தளத்தை நோக்கித்தம் தம்பி தோளை
அணைத்திருக்கத் துவாரமொன்றால் கீழி றங்கி
மடிந்தொளிந்து தப்பித்தோர் மறைவி டத்தை
மன்னன்மகன் தேடியதோர் வரலா றாமே 101

உயர்ந்தபெருங் கோட்டையினோர் அறையி னுள்ளே
ஒளித்தவரை வைத்திருந்தார் காற்றுள் ளேக
இருந்தபெருஞ் சாளரமே நுழைவா யில்லை
இறுகமூடித் தாளிட்டுக் காவல் செய்தார்
அருந்துதற்கு நீர்வேண்டிக் காவ லாளை
அழைத்தாரோர் வீரன்உள் அண்டை வந்து
தருபுனலைக் கையேந்தி அவனை நோக்கித்
தனக்குதவி செய்கவெனச் சார்ந்து கேட்டார் 102

மறுத்திட்டான் வீரன்முதல் பின்னும் வேண்ட
மனமிரங்கி னான்சிறியோர் வதனங் கண்டே
உறுத்தியது நெஞ்சம்நான் உண்ணும் ஊணின்
உபயமவர் தாதையென உணர்ந்த தாலே
பொறுத்திடுக எனச்சொல்லி வெளியிற் சென்று
பற்றிவெளி யேறுதற்காய்க் கயிறொன் றோடும்
மறுத்தவனே மனமுவந்து கைய ளித்தான்
மார்க்கமுரைத் தகன்றானே தப்பு தற்கே 103

கடுங்காற்றும் அடைமழையும் கூடி யார்க்கும்
கோபுரத்துள் நடப்பதனை அறிய மாட்டாப்
படிவீசிப் பொழிந்ததனால் சிறுவர் செய்கை
படைத்தவனுக் குகந்ததுவாய் இருத்த லொக்கும்

விடிவதற்குள் தப்பித்துச் செல்லல் என்னும்
விரதமவர் நெஞ்சத்துள் பதிந்த தாலே
அடைமழையைப் பெருங்காற்றை அணுவத் தேனும்
இலட்சியஞ்செய் தாரில்லை அகந்து ணிந்தார் 104

படைவீரன் கைதந்த கயிற்றை ஆங்குப்
புறத்திருந்த சாளரத்தின் இருப்புக் கோலில்
முடிந்துவிட்டு முடுக்கிடையில் முதற்பு குந்து
மன்னன்மகன் தம்பிதனைத் தோளில் தாங்கி
அடுத்தெவர்க்குந் தெரியாத காருள் மெல்ல
அரவமின்றித் தொங்கிக்கீழ் இறங்கிக் கானில்
பிடிக்கவொரு பிராணிதனை அண்டு கின்ற
புலிபோலும் பதுங்கிவெளிப் புறத்த கன்றார் 105

தப்பித்த சேதிதனைக் கேள்வி யுற்றுச்
சினங்கொண்டான் கந்தாராவ் சிம்ம மாகித்
தப்பிடச்செய் தவன்யாரென் றறிந்த வன்றன்
தலைசீவ ஆணையிட்டான் செயலா கிற்றே
நப்பாசை கொண்டிருந்தான் சிறுவர் தம்மை
நினைந்தபடி பயன்கொண்டு ஹைதர் மூச்சைத்
துப்புரவு செய்திடலாம் உடல்விட் டென்று
துணிவோடு தோல்வியுற்றான் துரோகத் தன்னான் 106

துரும்புபுக முடியாத துவாரத் துள்ளும்
துருவுகவென் றாணையிட்டான் தேடி னார்கள்
அரும்புகளோ கண்காணா வாறு தம்மின்
அலங்காரம் நீக்கிப்பொய் உருவங் கொண்டார்
பொருந்தாத தோற்றமஃ தென்றிட் டாலும்
பொருந்தியது பகைவர்கண் படாதி ருக்க
பொருந்தினனே இறையவனும் பகைவர் நோக்குள்
பதிந்திடவொட் டாதிருக்கப் பாது காப்பை 107

நகரத்தின் மூலைமுடுக் கத்த னையும்
நாடியவர் தேடியுமே பலன்கிட் டாது
முகங்கருகிப் போனார்கள் கோபத் தாலே
மறைவிடத்தைக் கண்டுகொள்ளத் திராணி யற்றோர்
பகைவர்கண் படாதிருக்கக் குடும்ப மொன்று
பாசத்தோ டுதவியது பதுங்கிக் கொள்ள
வகைத்தவிடந் தனையறிந்து கொள்ள மாட்டார்
விபரங்கள் கிணற்றிலிட்ட கல்லைப் போலாம்
108

உண்ணவுண வளித்தார்கள் மீட்டுத் தந்தை
உடன்சேர்த்துக் கொள்ளுகின்ற நாள்வ ரைக்கும்
பெண்பிள்ளை யொருத்தியவர் பால்து ணிந்தே
பற்பலவாய்த் தின்பண்டம் தந்தா ரென்பார்
பின்னொருகால் அவளேதான் திப்பைத் தன்கை
பற்றிடவைத் தவளாகும் என்றோர் காதை
சொன்னதுவும் உண்டாமே குழந்தைக் காலச்
செய்தியது திப்புவாழ்வில் நடந்த தென்பார்
109

நடந்தகதை யிதுவாகும் தப்பிக் கொண்ட
நள்ளிரவில் காஸிகான் அவரைக் கொண்டு
படகுத்துறை யொன்றினிலே ஒளித்து வைத்துப்
பத்திரமாய் இருக்கவுமே பணித்துத் தம்மின்
உடற்றோழன் "லால்மியானை"க் காக்கு மாறே
ஒருதகவல் மகளிடத்தில் வைத்துச் சென்றார்
அடுதவர்க்குப் பணிபலவும் இருந்த தன்றி
அரசபடை அவர்தலைக்கும் அலைந்த தன்றே
110

தந்தைவர மகள்செய்தி சொல்லச் சேதி
தலைமேலே தற்கொலையே தொங்கி னாற்போல்
சிந்தையுற்றார் லால்மியானப் பயங்க ரத்தைத்
தானுணர்ந்த காரணத்தால் தலைமேற் கொள்ள

முந்தாதே அமைதிகொண்டார் குடும்பத் தோடு
முடிந்துவிடும் வாழ்வென்றும் மொழிந்தார் கேட்டுப்
புந்திமிக்க மகள்சிறுமி தானே யந்த
பணிதன்னை ஏற்றிடவும் பலங்கொண் டாளே
111

பிள்ளைகளைக் காப்பாற்ற முயன்றால் நேரும்
பின்விளைவை மனைவியிடம் எடுத்துக் கூறி
உள்ளவழி ஒன்றுமில்லை இறைவன் பக்கல்
உறுவினையே உறுமென்று உளம்நொந் தோராய்
உள்ளத்தைக் கல்லாக்கி உறங்கப் போனார்
உரையாடல் கேட்டமகள் றுகையா பானு
கள்ளமில்லாப் பிஞ்சுளத்தாள் கவலை தோய்ந்தாள்
காப்பாற்றும் வழிதன்னை ஆய லானாள்
112

நெடுநேரம் தூங்காது விழித்தி ருந்து
நடுநிசியில் எழுந்துபிற ருணரா வாறு
உடன்கொண்டாள் உணவுசில கனிக ளோடே
ஊர்தூங்கும் வேளையது கழுகு கோட்டான்
கொடுங்குரலில் குரலெழுப்பக் கைகால் ஆடக்
கடுங்குளிரில் உடல்விறைக்கக் குறித்த திக்கில்
நடந்தனளே நெஞ்சுரமுங் கொண்ட தாலே
நாடியவத் தலஞ்சேர்ந்தாள் நயனம் பூத்தாள்
113

தன்மடியில் தம்பியினைத் தூங்க விட்டுத்
தனித்துவிழித் திருந்ததிப்பு தன்னைக் கண்ட
சின்னவளின் மனங்களிக்கக் கொண்டு சென்ற
தின்பண்டம் தனைத்தந்து தானும் உண்டாள்
முன்னிரவில் துயிலழிந்து பசியுந் தாங்கி
முயற்சியிலே வெற்றிகண்டாள் பூரிப் புற்றாள்
அன்னைகுலப் பண்புதனைக் காத்தாள் அஃதோர்
அழியாத கல்லெழுத்துப் பதிவா கிற்றே 114

தன்னருகில் துயின்றமகள் தனைக்கா ணாத
தாயதிர்ந்து துடித்தெழுந்துத் தேடிப் பார்த்துங்
கண்காணா நிலைகண்டு பதறி யோடிக்
கணவரிடம் முறையிட்டாள் அவருஞ் சோர்ந்தே
உண்டான தென்னவென உணர்ந்த தாலே
ஊர்க்கோடி தனிலிருந்த நீர்த்து றைக்குக்
கண்ணொடிக்கும் பொழுதுள்ளே சென்ற டைந்தார்
கண்மணியை இழந்துபெற்றார் போல்வா -
ரானார் 115

துச்சமெனத் தன்னுயிரை மதித்துத் திப்பு
தனைக்காக்க மகள்கொண்ட நெஞ்சு ரத்தை
துச்சமென மதிக்கவொண்ணாத் தந்தை நெஞ்சுள்
சிலாகித்த போழ்தும்பின் தொடர வுள்ள
சொச்சத்தை நினைந்ததுமே மனம்ப தைக்கச்
செய்வதன்றி யொன்றில்லை எனவு மாக
அச்சத்தைப் புறமொதுக்கித் துணிவுங் கொண்டார்
அடைகாக்கும் பேடையெனத் தானு மானார்
116

பொலபொலென வான்வெளுக்கச் சேவல் கூவப்
படர்ந்துவரும் ஒளிவெள்ளம் பரவ வெய்யோன்
அலங்காரம் பூமிகொள அவத ரித்தான்
அது"கோலி"த் திருவிழாவும் அமைந்த காலம்
பலவண்ணத் தூள்தூவி வண்ண நீரைப்
பிறர்மீது இறைத்துத்தம் மீதும் வாங்கிக்
கலகலத்து நகைத்துமகிழ்ந் திடவென் றேங்கிக்
கண்துஞ்சா திருந்தவர்கள் களத்துள் ளானார்
117

வீதியெலாம் ஆண்பெண்கள் இளமைப் பேர்கள்
வண்ணவண்ணப் பொடிகளோடு திரண்டி ருந்தார்
தீதறியாச் சிறுவர்களும் சிறுமி யோரும்
சேர்ந்தொன்றி வலம்வந்தார் தெருக்கள் மொய்த்தார்

ஈதேதான் தருணமென இடையிற் புக்கி
இனங்காணா வாறுதம்மில் வண்ணம் தாங்கி
தோதான இடம்நோக்கி நகர்ந்தார் ஆங்குந்
தேடியலை காவலரைக் கண்ணுற் றாரே
118

பார்வையிலே பட்டபடை வீரர் தம்மின்
பார்வையிலே படாதிருக்க அருகி ருந்த
சீருடைகொள் அங்காடிக் கடையிற் கண்ட
சிறுத்தைமுக முகமூடி தம்மை வாங்கி
யாருமறி யாதபடி வேடம் பூண்டார்
இல்லத்தை யடையுவரை எதுவும் பேசார்
ஊரேபே ரமர்களத்தில் உறைந்த தாலே
உத்திவெற்றி பெறலெளிதாய்ப் போன தன்றே
119

இல்லத்தா ளிடத்திலன்று நடந்த தெல்லாம்
எடுத்துரைத்தார் லால்மியானும் தமது பெண்ணாள்
வல்லபத்தை எண்ணியன்னை பூரிப் பெய்தி
வாஞ்சையொடு நெஞ்சணைத்தே உச்சி மோந்தாள்
சொல்லவொண்ணா மகிழ்விமயந் தொட்ட வாறாம்
சொரிந்தனவாம் விழிகள்தம் மடையொ டித்தே
நல்லசெயல் உயிர்ப்பணயம் ருகையா செய்கை
நீண்டகால வரலாற்றின் பதிவு மாகும்
120

தொடர்ந்தாங்கு தரித்திருத்தல் ஆபத் தென்று
தெரிந்துகொண்ட லால்மியான்புன் அடலர் தம்மின்
பிடியிருந்து தப்பித்து நாட்டின் எல்லைப்
புறந்தாண்டிக் கொண்டுசெலத் திட்டந் தீட்டிக்
கடந்தாரே காவிரியைச் சிறுவ ரோடு
கல்யாண ஊர்வலத்தின் குழாமில் கூடி
படைகண்ணில் மண்தூவிப் போவ தற்கு
பாடுற்ற செய்கைகள் புகலற் கொண்ணா 121

நாட்டில் ஏற்பட்ட மாறுதல்கள்

புதிதாக ஆட்சிகொண்டோர் மீதே ஆட்சிப்
பொறுப்பிருந்த பலபேர்க்கு வெறுப்புத் தோன்ற
எதிரானார் ஒன்றுகூடி முடிவொன் றுக்காம்
உடன்பட்டார் முடிவுஹைதர் பதவி யேற்க
உதவுவதே என்பதுவாம் "பூர்ண அய்யா"
உறுதுணையாய் இருந்தவருள் முதன்மை யானார்
பதவிவழி பின்னரவர் ஹைத ருக்குப்
பொறுப்பானார் முதலமைச்சைத் தாங்கு தற்கே
122

வீரமொடு மதிநுட்பம் நிருவ கிக்கும்
விவேகமுடன் ஆட்சிசெய வேண்டும் ஆண்மை
சேரவொன்றித் தனித்துவமாய்க் காணும் ஹைதர்
தானன்று வேண்டுபவ ரான தாலே
சீரியநல் லறிவுகொண்ட ஆன்றோர் கூடித்
தக்கதொரு முடிவாகத் தம்முள் ஒன்றித்
தீர்வாய்ந்து செய்தமுடி வாகும் ஹைதர்
தொடரவவர் பதவிதனைத் தருவ தற்காம்
123

உறுதிகொண்ட படையொன்று புறத்தும் உள்ளும்
உருவான தொன்றிஹைதர் ஆட்சி மீட்க
அறுதியுற்ற தெதிரிகளின் பலமும் நாட்டின்
அரசியொடு காந்தாராவ் முதல மைச்சன்
முறையற்றுச் சூழ்ச்சிசெய்தோன் மண்டி யிட்டார்
மன்னரென ஹைதர்முடி தாங்கிக் கொண்டார்
இறைமுடிவும் அதுவாக அமைந்த தாலே
இணைந்தார்கள் பிரிந்திருந்தோர் குடும்பப் பேர்கள்
124

தந்தையில்லம் சென்றுமீள வழியு மற்றுச்
சோகத்தில் தவித்திட்ட தாயும் தம்மின்
தந்தையொடு தாயுறவுந் தனித்துப் போகத்
துயருற்ற 'திப்பு"கரீம்' மக்கட் பேரும்

வந்திணைந்தார் ஹைதரொடு வெற்றி யின்பின்
வெவ்வேறு திக்கிருந்தாம் விதியின் பாதை
சொந்தங்கள் பிரிந்தொன்றித் துன்பம் மாயச்
செய்ததிறை நாட்டுமக்கள் துணைநின் றாரே
125

தனைவிடுத்து நடந்ததெலாங் கேட்ட றிந்து
திப்புவையும் தம்பியையும் காத்த பேரை
மனம்நெகிழ வாழ்த்துரைத்தார் ஹைதர் நன்றி
மாறாத மனங்கொண்டார் "றுகையா பேகம்"
துணிவினையும் செய்கையையும் தெரிந்த போது
தாய்தந்தை இருவருமே அதிர்ந்தார் திப்பு
மனத்துறைந்தாள் அறிவாரோ அவளாம் என்ற
மர்மத்தை முதலவனே சாட்சி யானான்
126

நன்றியொடு இளையவளை நெஞ்ச ணைத்து
நலஞ்செய்தாய் மகளேயென் மக்கள் தம்மைக்
கொன்றிருப்பர் கொடியோர்கள் தாய்போல் காத்தாய்
காலத்தால் செய்தபெரும் உதவி யாகும்
என்றுமுனை மறவேன்நான் என்றாள் அன்னை
இருவிழிகள் பொழிந்தனவே மனம்நெ கிழ்ந்தே
ஒன்றிணைந்த தாமன்றே கண்கள் நான்கு
உடனிருந்தோர் பார்வைதமைக் கொன்ற பாங்கே
127

வாய்ப்பிருக்கும் போதெல்லாம் எங்க ளில்லம்
வரவேண்டும் நீங்களெல்லாம் என்றார் மன்னர்
வாய்ப்புவரும் வரைகாக்க வேண்டாம் வாய்ப்பை
வரவழைத்து வரவேண்டும் என்றார் ராணி
காய்கனிந்து போனதுபோல் மகிழ்ந்தார் மக்கள்
கூடிவிளை யாடிடலாம் என்ப தாலே
ஓய்வுகொண்ட துரையாடல் அத்தோ டன்னார்
உடனகன்றார் உறவுக்கும் வித்தொன் றிட்டே
128

ஆட்சிதனைக் கைப்பற்றுந் தீய எண்ணம்
அணுவளவும் ஹைதருக்கோ இருந்த தில்லை
தோட்பலத்தால் எதிரிகளை மாய்த்த தோடே
தாய்மண்ணின் கோன்மைக்குத் துரோகஞ் செய்ய
நாட்டமுற்றுப் பாதிவெற்றி கொண்ட பேரை
நசுக்கியொழித் திட்டவரே யவரு மாவார்
சாட்டியதால் பெருமக்கள் ஏற்றார் நாட்டைத்
தாங்குதிறன் தன்வசத்தில் இருத்தல் ஓர்ந்தே
129

மைசூரைக் கையேற்ற பின்னும் சூழ்ச்சி
மையமெனத் தானிருந்த அரசி தன்னைக்
கைசோர விடவில்லை ஹைதர் வேண்டும்
கொடுப்பனவு முற்றிலுமே கரங்கள் சேரும்
ஒய்யார வாழ்வியற்றி வாழ்ந்த பேர்க்கும்
உகந்தவைகள் முற்றிலுமே கிடைக்கும் வாகாம்
துய்யமனங் கொண்டஹைதர் செய்கை யார்க்கும்
தீங்கிழைக்கக் கூடாவென் றியம்பல் போலாம்
130

எக்குறையும் இல்லாதே முன்போல் வாழ்வு
ஏற்றிருந்த போழ்தினிலும் அரசி நெஞ்சுள்
வக்கிரமோ தணியவில்லை நீறு பூத்த
வெந்தணல்போல் பகைமையொளிந் திருந்த -
தன்றோ

தக்கவொரு சந்தர்ப்பம் கைகூ டுங்கால்
தலைபுரட்டி ஆட்சிதனைத் தன்கை பற்ற
பக்கபலம் தேடிடவே செய்தார் அந்தோ
பரிதாபம் கைகூட வில்லை யஃதே
131

இளமைக் கல்வி

இளவயதில் இருந்தேதன் மகனைக் கல்வி
ஏற்றிடச்செய் தார்"ஹைதர்" ஆரம் பத்தில்
முளைவிடட்டும் மார்க்கஞானம் என்ப தாலே
மார்க்கஅறி வூட்டவைத்தார் இலக்கி யத்தை
மொழியறிவு வேரூன்றக் கற்கச் செய்தார்
மிகவிரைவில் வாசிக்க எழுதக் கற்றார்
அழியாத செல்வமஃ தொன்றே யென்றும்
அறிந்ததனால் "ஹைதர்"ஒன்றுங் கல்லா தாரே
132

இளமையிலே திறமைகொண்டே இருந்தார் திப்பும்
எழுத்தணிக்க லைதன்னில் குதிரை யேற்றம்
களத்தினிலே எதிரிகளைத் துவம்சம் செய்யக்
கடும்யுத்தப் பயிற்சிகளும் கற்ற றிந்தார்
உளப்பலமும் உடற்பலமும் ஒருங்கே சேர
உயிர்க்கஞ்சா வீரரெனும் உரமுங் கொண்டே
முளையரும்பித் தளைத்ததொரு பெருவி ருட்சம்
மைசூரின் புலியெனப்பின் நாமங் கொள்ளும்
133

மார்க்கஞானம் பெறுவதற்காய்த் திறன்மி குந்த
மார்க்கஞானச் சான்றோர்கள் நியமம் பெற்றார்
ஓரறிஞர் முஸ்லிம்மற் றொருவர் ஹிந்து
ஒன்றியிரு மதத்தினரும் மைசூர் மண்ணில்
சீராக வாழ்ந்ததனால் ஆட்சி யேற்போன்
சமமாக இரண்டினையும் மதிக்க வென்னுங்
காரணத்தால் அரும்பிருந்தே கற்கச் செய்த
ஹைதர்அலி மனப்பரப்புக் கூறல் சாலா
134

திருமறையின் மொழிஅறபு பார சீகம்
தென்னாட்டின் கன்னடமும் உறுதுங் கற்றுக்
கரைகண்டார் மொழிகளிலே திப்புச் செல்வன்
களிகொண்டார் தந்தைதம் மகனின் ஞானத்

திறன்கண்டே பூரித்தார் எதிர்கா லத்தில்
தனக்கடுத்து வீரமொடு புத்தி கூர்ந்து
பிறறெவரின் உதவிகொள்ளா வாறு நாட்டைப்
பாலிக்கும் திறனேற்பார் என்ப தாலே
135

புத்தகங்கள் படிப்பதுவே பொழுது போக்குப்
பலனற்று நேரத்தைக் கழிப்ப தில்லை
வித்தாகி ஞானத்தின் வேரு மாகி
விரிந்தகன்ற விருட்சமென வாகுங் "குர்ஆன்"
உத்தமநந் நபிகள்தம் போத மோடே
உயரியசித் தாந்தங்கள் மார்க்க நூல்கள்
அத்தனையும் தம்அறிவுப் பசியைப் போக்க
ஆய்ந்தறிந்தே கற்றுணர்ந்தார் இளமைப் போழ்தே
136

யுத்தகளப் பயிற்சிக்காய்க் "காஸிக் கான்"ஐ
ஏற்படுத்திப் பயிற்றுவித்தார் ஹைதர் திப்பவ்
வித்தையிலே காட்டியமெய்த் திறமை கண்டு
வித்தகரே அதிசயித்தார் வேறு பட்ட
சத்திரியக் குலக்கொழுந்தே இவராம் என்றே
திறன்கண்டு விதந்துரைப்பார் சொல்லில் மாளா
சுத்தவீரர் குணங்கொண்ட அவர்தம் செய்கை
செப்பச்சில் உதாரணங்கள் தேர லாமே
137

விளையாட்டில் வெற்றிகொண்டால் ஆர வாரம்
வீறாப்பு எறும்பளவும் ஏற்ப தில்லை
விளைவுபிறர்க் காமென்றால் மகிழ்வார் தம்மை
வென்றவரை வாழ்த்திமகிழ் வடையச் செய்வார்
அழியாதோர் பறவையெனும் அவர்கை யாலே
அன்புடையார் உயிரினத்தில் சுடும்ப யிற்சி
முழுமையுற்ற போழ்தினிலும் குறிவைத் தொன்றை
மரணிக்கச் செய்தவர லாறற் றாரே 138

எண்ணம்போல் மகன்கல்வி கேள்வி தம்மில்
இணையில்லாப் பெருஞானம் கொண்ட தாலே
மண்ணாளும் பொறுப்புக்கோர் மகனை வேண்டி
மன்றாடி இறைவனிடம் பணிந்து நின்ற
மன்றாட்டம் பலித்ததுவாய் மகிழ்வு கொண்டார்
மண்ணாளும் பூபதியாம் ஹைதர் வீரம்
ஒன்றான பெரும்பேறும் மகன்பால் ஒன்ற
ஒப்பில்லான் தனையுளத்தால் வழுத்தி னாரே
139

பிற்காலம் திப்புபற்றிச் கூறுஞ் சேதி
பற்பலநூல் கற்றபெரும் பண்டி தர்தம்
உற்றபெருங் களஞ்சியமாயப் பாது காத்த
ஒன்றாகும் நூல்நிலையம் தன்னில் கொண்ட
பற்பலவாம் நூல்களிலீர் ஆயி ரங்கள்
பலமொழிகள் கொண்டிருந்த தென்றே அஃதில்
முற்றுமவை அறிவுசார்ந்த கருவூ லங்கள்
மனுக்குலத்தின் வேண்டுதற்கும் உரித்தாம் என்றே
140

தன்னளவில் அவரொருநற் கவிஞ ரென்றும்
சரிதமுரை செய்யுமவர் போர்மு றைச்சீர்
இன்னதெனப் புகல்"**பதஉல் முஜாஹிதீன்**"ஐ
இயற்றியதோ டவர்வெள்ளிக் கிழமை தோறும்
சொன்னவுரை பள்ளியிலே தொகுத்தெ டுத்த
தொகுப்பாக **"முவாயிஸ்-உல் முஜாஹிதீன்"**ஐ
பின்னவரின் நலன்கருதிக் கோத்தா ரென்றும்
பாதுகாத்த ஆவணங்கள் புகலு மாமே
141

யுத்த முனையும் திப்புப் புலியும் பதினைந்து வயதில் போர்முனை காணல்

கல்விகேள்வி யோடுயுத்தப் பயிற்சி யுங்கொள்
காலத்தில் தன்னையொரு தன்னே ரற்ற
வல்லவராய் மாற்றிடத்தன் பங்கை முற்றும்
வழங்கியிருந் தார்திப்புத் தந்தை தம்மின்
வல்லபத்திற் கிணையான வீர ராக
வலுப்பெற்றார் கூர்மதியுள் இளைஞ ராக
சொல்செயலில் முதிர்ச்சியுமுற் றிருந்தார் தார்கொள்
தீரரெனப் பின்னாளில் பேசற் காமோ
142

போருக்குப் பஞ்சமில்லாக் கால மஃது
பொறாமைகொண்டார் அருகிருந்த சமஸ்த்தா -
னத்தார்
காரணமொன் றில்லாது கிடைத்த போழ்து
கரமுயர்த்தி னார்களவர் யுத்தஞ் செய்ய
போரிட்டு மைசூரைத் தம்பி டிக்குள்
பெற்றிடவென் றவாவுற்றார் பேடிப் பேர்கள்
கோரினரே வெள்ளையரின் உதவி தன்னை
"ஹைத்ராபாத் நிசாம்"மராட்டிக் கோழை யோரும்
143

தனைப்போலுந் தன்மகனுந் துணிவு மிக்க
தீரனென வளர்த்தெடுக்கத் தந்தை ஹைதர்
தனதருகே இருத்தித்தன் திறமை கட்குத்
தெய்வத்தின் அருளோடு யுத்த ஞானம்
முன்னிற்கும் படியாகும் என்றே யுத்த
முறைகளையுங் கற்பித்தார் மகனுங் கேட்டார்
பின்நிற்க வேண்டாவே யுத்தம் செய்யப்
பிறவிவீரன் தனக்கதுதான் பொருந்தும் என்றார்
144

எப்போது போர்தொடுக்க வேண்டும் யார்மேல
எதையெண்ணிப் போர்தொடுக்க வேண்டும் யுத்தம்
எப்போது தவிர்த்திடவும் வேண்டும் போரை
ஏன்தவிர்க்க வேண்டும்நல் வினையை நோக்கி
எப்படித்தம் பாலமைதி வேண்டு வோரை
இனங்கண்டு செயற்படவும் வேண்டும் என்றும்
எப்படியெப் போததனை இயற்றல் என்ப
எலாமுமவர் கற்பித்தார் இளைஞ ருக்கே
145

யுத்தத்தின் போதுகடைப் பிடிக்க வேண்டும்
யுத்ததந்தி ரங்களினைக் கற்பித் தாற்போல்
யுத்தத்தில் கடைப்பிடிக்கும் தர்மம் நீதி
ஓதிவைத்தார் தந்தைதன் மகனுக் கன்றே
எத்தனைதான் தம்பக்கம் வெற்றி சாய்ந்தே
ஏற்குநிலை வந்தாலும் எவர்தம் மீதும்
புத்திக்குப் பொருந்தாத செயற்பாட் டின்பால்
போகாதே யென்றுரைத்துப் பதியச் செய்தார்
146

வயோதிபர்க்குத் துன்பமிழைத் திடுதல் வேண்டா
வனிதையர்க்கும் அதுவிதியே சிறுப ராய
வயதினர்க்கும் கொடுமைசெய்தல் கூடா மக்கள்
வயிற்றழலைப் போக்குகின்ற விளைப யிர்கள்
உயிரினங்கள் தமையழித்தல் ஒவ்வாச் செய்கை
யுத்தத்தில் பங்குபெறார் தம்மைக் கொல்லல்
செயத்தகாத செயல்கல்விக் கூடந் தன்னை
தெய்வவழி பாட்டில்லம் தகர்த்த லென்றார்
147

போர்நெறியில் ஹைதருக்கு நிகரா யன்றோர்
பேரெனினும் இருந்ததில்லை சமயம் நோக்கித்
தேர்வாரோர் முடிவுதனை வெற்றிக் கஃது
துணைதந்து வாகைகொள வைத்த தன்னாள்

போருக்கே அஞ்சாதார் போர்செய் யுத்திப்
படிமுறைகள் முற்றுமறிந் திருந்தார் செல்வன்
தேர்வதது கடமையென எண்ணிப் போர்க்குத்
தன்னுடனும் அழைத்தேகிப் பயிலச் செய்தார்
148

ஆட்சிதனை ஏற்றமற்ற ஆண்டே ஹைதர்
அமர்க்களமே நிலைக்களமாய்க் கொண்டார் யுத்தக்
காட்சிகளே திப்புவின்கண் கண்ட தன்னாள்
கூடவவர் தந்தையொடு சென்ற தாலே
வீழ்ச்சியுற்ற தன்னியர்தாம் வரித்த போர்கள்
வாகைகொண்டார் ஹைதரலி அனைத்தி லும்தான்
கோட்டைவலுப் பெற்றதெல்லை விரிவ டைந்தே
கரைப்புலமும் மைசூரின் கையா கிற்றே
149

மராட்டியரே முதன்மையுற்றார் வலிந்து வந்தே
மண்கவ்வி னார்போரில் மலபார் ஓரக்
கரைசார்ந்த அரசுகளும் தூண்டிப் பார்த்துக்
கைதுடைத்துப் போயொளிந்தார் கரையோ ரங்கள்
உரித்தாகிக் "கொச்சி"னோடு "பங்க ளூரும்"
உடன்சேர்ந்த துறைமுகத்து நகர்க ளாக
விருத்தியுற்ற தாட்சிநிலை வலிமை யோடே
வரலாற்றில் சொர்ணவரித் தடங்க ளாமே
150

பதினைந்தே வயதான திப்பு போரில்
பங்குகொளும் வாய்ப்பதனைப் பெற்றுத் தானோர்
அதிசிறந்த யுத்தவீர ராகக் காட்ட
அவர்பொறுப்பில் சிறுபடையொன் றியங்க லாகும்
பதவிக்குப் பொருந்துவதாய் வீர தீரப்
பண்புகளில் மிகைத்தேநற் பெயருங் கொண்டார்
புதிதான மனப்பலமும் சேர்ந்த தொன்றிப்
போர்தந்த பாடமதாம் இளமைப் போழ்தே 151

காஸிகான் திப்புவையோர் நாள ழைத்துக்
கொணர்ந்தவர்தந் தந்தைமுன் நிறுத்திச் சொல்வார்
"மாசறவே யுத்தமுறை அனைத்துஞ் சொல்லி
மாவீர னிவனென்று மாற்றா ரொப்பிப்
பேசுப்படி செய்துள்ளேன் வேண்டு மாயின்
போர்ப்பணிக்கு வெள்ளையரைப் புறங்கா ணற்கு
கூசாமல் களங்காணக் கூட்டிச் செல்க
கொற்றவரே நின்புதல்வன் இதோ"வென் றாரே
152

சிங்கத்தின் முன்னேயொரு புலிதன் மேனி
சிலிர்த்தபடி நின்றதுவோ எனும்பாங் காக
அங்கமெலாம் வீறுகொண்டே அடலர் மார்பை
அரிந்திடுநெஞ் சுரத்தோடும் அவர்முன் நிற்கப்
புங்கமுனைக் கூர்ப்பார்வை கோத்துத் தம்மின்
குருதியின்வாய்ப் பெற்றமகன் தன்னை ஹைதர்
அங்கமங்க மாகவெடை கொண்டார் காஸி
அறைந்ததெலாம் மெய்யோவென் றறியும் வாகே
153

எட்டியொவ்வோர் அடியெடுத்து வைத்தார் முன்னே
ஏறுநடை யென்பதிது வாமோ வென்ன
கிட்டவர மகனுமோரீர் கால்முன் வைத்தார்
களிறையண்டும் ஆண்வீரக் குட்டி போன்றே
கட்டியணைத் திருகரமும் ஒன்றாய்க் கோத்துக்
காயபலம் கணித்திட்டார் ஹைதர் பின்னாள்
பட்டத்துக் குகந்தவனோ பகைமை தூர்க்கும்
பலங்கொண்ட புலியோவென் கணிப்புக் கொண்டே
154

பகைவெல்லத் தந்தையோடு போருக் கேகும்
பலம்கொண்டான் தன்புதல்வன் திப்பும் என்றே
மிகமகிழ்ந்தார் வீரத்தாய் பஃருன் நீசா
மனத்தாலே தெய்வத்தை வழுத்த லானார்

இகபரத்தின் முதலவனே என்றன் பிள்ளை
எதிரிகளைத் தாமடக்கி வாகை கொள்ள
வகைசெய்வாய் தந்தைக்குத் துணையாய் நின்று
வாழ்நிலத்தின் புகழ்பெருக்க அருள்செய் யென்றே
155

பயங்கரப்போர் ஒன்றினிலே பங்கு கொள்ளப்
புதல்வரையும் உடனழைத்துச் சென்றார் ஹைதர்
பயன்கொள்ள லாம்வேண்டின் எனநி னைந்து
பிற்படுத்தி ஒருபடையை மைந்தர் தம்மின்
வயந்தரிக்க வைத்தவர்க்குத் துணைய தாக
விட்டகன்றார் திப்புவுக்குப் படைப்ப யிற்சி
பயிற்றுவித்த ஆசானைக் "காஸி கானை"ப்
பரிப்படையீ ராயிரம்பேர் கொண்ட தஃதாம்
156

மணியொன்றுக் கொன்றுசெய்தி வருமென் றோதி
முன்சென்றார் சமர்க்களத்தை நோக்கித் தந்தை
மணியொன்றா யிரண்டுமூன்றாய் ஆன போழ்தும்
மன்னர்சே தியனுப்பா நிலையில் ஆங்கே
விண்ணுயரப் பேரொலிகள் செவியுட் புக்க
வெருண்டதுள்ளம் திப்புவுக்கும் ஐயங் கொண்டார்
திண்ணமேதோ தவறொன்று நடந்தி ருத்தல்
சாலுமென மனங்கொண்டார் துரித மானார்
157

ஆயிரத்தோ டைந்நூறு வீர ரோடும்
அமர்க்களத்தை நோக்கித்தம் ஆசான் "கானை"ப்
போயுதவி செய்கவெனப் பணிந்து கூறப்
பறந்ததவர் படைவளியைப் புறத்தில் தள்ளி
ஓயவில்லை ஏற்பட்ட மனவு ளைச்சல்
உடல்தினவால் துடிக்கதிப்பு ஆணை யிட்டார்
வாயுவுடன் கலந்தார்கள் எஞ்சி யுள்ளோர்
வனப்புலத்தை வழியாகக் கொண்டிட் டாரே 158

ஒன்றையொன்று முந்தவழி பரிகள் ஓட
உண்டான குளம்போசை கான கத்தே
குன்றனைய கரிகளொடு மான்கள் பன்றி
குலைநடுக்கம் கொண்டனவோ பிறவும் தங்கள்
நின்றவிடம் தவிர்த்தோட்டம் கொள்ள வானை
நிறைத்ததுவாம் பேரோசை முன்னால் திப்பு
கொன்றாரே வினாடிகளை நொடிக்குள் நூறு
காதத்தை கடந்தவினை போலு மாக
159

காட்டுவழி களம்நோக்கி வந்த வீரர்
கண்ணுற்றார் கானகத்தைக் கடந்த பின்னர்
கூட்டாக அமைந்திருந்த கூடா ரத்தின்
கொள்ளையினைப் பெண்களுக்காய் அமைத்த - வைதாம்
வேட்டுவனின் வலைப்பட்ட பறவைக் கூட்ட
வரலாறாய்ப் போயிருக்கும் வேறோ ராயின்
காட்டினரே கருணையவர் மீது திப்பு
கறைபடியும் நிலையவர்க்குத் தோன்றா வாறே
160

காவலுக்கு நின்றெதிர்த்த பேரைக் கொன்று
கைப்பிடிக்குள் ளானார்கள் பெண்கள் தப்பிச்
சாவுக்கு விடைகொடுத்தோர் வீரன் ஓடிச்
சேதிதனைத் தம்மவர்க்குச் சொல்லி வைத்தான்
மேவியவோர் இருள்முட்டத் துட்பட் டாற்போல்
மாற்றார்கள் நிலைப்பட்டார் வழியே இன்றித்
தாவினவே வெண்கொடிகள் வானை நோக்கித்
திகைப்புற்றார் ஹைதர்நிலை யறியா தாரே
161

சமாதானக் குறியாக வெண்ப தாகை
தோன்றியது மறுபுறத்தே என்றே எண்ணி
அமைதியுறப் பணித்தார்தம் படைவீ ரர்க்கும்
அமர்க்களத்தை ஆட்சிசெய்த ஹைதர் மன்னர்

தமக்குரியார் மாதர்கள் திப்பு வின்பால்
தஞ்சமுற்ற சேதிகொண்ட பகைப்பு லத்தோர்
இமைப்புக்குள் முடிவுகொண்டார் யுத்தம் தன்னை
இறுதிக்குக் கொண்டுவர நடந்த தஃதே
162

கொதிகடலின் கோரத்தில் நடந்த யுத்தக்
கெடுபிடியில் இருந்ததனால் சொன்ன வாறு
கதியென்ன களத்திலெனும் சேதி தன்னைக்
கூறமாட்டா நிலைமன்னர் கொண்டி ருக்க
மதியூகம் கொண்டுதிப்பு நிலையு ணர்ந்து
மறக்களத்தை நோக்கியதால் ஏற்ற வேளை
விதிமாறிப் போனதன்று மாற்றார் தோல்வி
வசமாக்கிச் சமாதானம் வேண்டு தற்கே
163

யுத்தமொரு புறத்தினிலே ஓய்ந்து போக
ஒன்றியதே சமாதானம் இருந்த போதும்
யுத்தத்தில் கைதான மாதர் பாலோர்
ஒழுங்குமீறல் தொடரவழி ஒப்பிற் றன்றே
சத்தியத்தின் உருவான இளைஞர் திப்பு
தன்னளவில் ஏற்றவொரு பொறுப்பி னாலே
வித்தாகா துற்றதது பின்னோர் போழ்து
வரலாறாய் மாறியது நோக்க லாமே
164

சொந்தம்தம் பால்வெற்றி என்னு கின்ற
செருக்கினிலே நிலைமறந்து மாதர் கொண்ட
அந்தப்பு ரத்தினிடை புகுந்தோர் வீரன்
அரசர்தம் மனைவியினைக் கரத்திற் பற்றிச்
சொந்தமுறத் துணிந்தனனே கண்ட திப்பு
தடுத்திடப்புன் நகைகாட்டி ஆணை மீறி
வந்துறையும் எதிர்வினையை மனங்கொள் ளானாய்
வன்முறைக்குத் துணிந்தனனே தொடர லானான
165

புந்தியிலான் காமுகனாய் மாறிப் பண்பைப்
புறந்தள்ளித் தாய்மைக்குக் களங்கம் சேர்க்க
முந்தியதால் பொறுக்கவொண்ணா நிலைமை தோன்றும்
மனச்சாட்சி வெற்றிபெறும் அவனை நோக்கி
சிந்தியதோர் சிறுபருக்கை கைத்துப் பாக்கி
துப்பியதால் வீரன்தலை சிதறு தூளாம்
சொந்தமதற் கானதிப்பு மாதர் நோக்கிச்
செய்கைக்கு வருந்துவதாய்ச் செப்பி னாரே
166

நடந்தவைகள் அனைத்தையுமே கண்ணால் கண்ட
நாடாள்வோன் மனைசிலைபோல் மலைத்து நிற்க
கடந்துசில அடிகள்முன் வந்து நின்று
கவல்கொண்ட வதனத்தில் கனிவு காட்டி
நடந்துவிட்ட தவறுக்காய் எம்மோர் சார்பாய்
நான்நின்பால் மன்னிப்புக் கோரு கின்றேன்
துடைத்தெறிக அச்சத்தை இனிமேல் எந்தத்
தீங்குமுங்கள் பக்கல்வரா எனப்பு கன்றார்
167

மானத்தைக் காத்தவிளஞ் சிங்கந் தன்னை
மாற்றானின் மனையரசி கண்க லங்க
தேனிகர்த்த வார்த்தைகளால் நன்றி யென்றாள்
செல்வனேநீ நல்லாருள் நல்லாய் என்றாள்
ஏனிந்தப் புகழ்ச்சிநீவீர் எந்தா யொத்தீர்
எனதுகடன் செய்தேன்நான் பெண்மை காத்தேன்
ஈனருக்குக் கற்பித்த பாட மஃது
என்றுரைக்க இருவிழிநீர் பொழியக் கண்டார்
168

தாயென்ற வார்த்தைதனைத் திப்பு சொல்லத்
தன்வயிற்றுப் பிள்ளையிவ னென்பா லுள்ளந்
தோயுவதைத் தாயவளும் உணர்ந்தாள் கண்ணால்
தனதாக்கிக் கொண்டவரை நாழி நின்றாள்

வாயுதிர்ந்த வாழ்த்துகளோ டருகிற் சென்றே
வாஞ்சையொடு கைபற்றி மகனே உன்னைக்
காயமொடு உயிருள்ள வரைநான் நெஞ்சுள்
கொண்டிருப்பேன் நீயென்றன் பிள்ளை யென்றாள்
169

அடிமனத்துள் வேரூன்றிப் பதிந்த தந்த
அன்னைமொழி பாசத்தைக் குழைத்தெ டுத்து
மடிமீது வைத்தூட்டு வாமென் றாக
மனத்துன்னி மகிழ்ந்தாரே திப்புச் செல்வர்
கடந்தாலுங் காலமந்த நிகழ்வு நெஞ்சுள்
கனியுஞ்சில போழ்துகளில் கண்ணுள் ளாடும்
இடமறியார் யார்புறத்தி லிருந்திட் டாலும்
இளநகையொன் றுதிர்ப்பாரே இன்பத் தாலே
170

நிறைவுற்ற யுத்தத்தால் அமைதி தோன்ற
நாரியரும் திப்புவினால் நலம்பெற் றேக
மறுதரப்பில் மன்னவரும் அருகல் வந்து
மிகப்பணிந்து கூறிடுவார் "உங்கள் தந்தை
திறல்கண்டென் அச்சத்தால் பணிந்த தென்றன்
சிரசவர்க்கே ஆனாலோ உங்கள் தம்மின்
அறங்கண்டு பணிகிறதாம் என்றன் சென்னி
ஐய!நின் செய்கைக்கென் நன்றி" என்றார்
171

மற்றொருகால் இதுபோன்றோர் நிகழ்வை நெஞ்சில்
மீட்டிடுங்கால் திப்புசுல்தான் மதிநுட் பத்தை
உற்றுணர்தல் சாலுமது யுத்தத் தின்போழ்(து)
உண்டான தாகுமதாம் உடைமை யானார்
கொற்றவன்பால் பெண்டிர்கள் கொள்ளை யாக
கவலுற்றார் யாதுநிலை பெறுமென் றாக
சற்றுமவர்க் கின்னல்கள் தோன்றா வாறும்
சமாதானம் நிலைபெறவும் திப்பு செய்தார்
172

கைகடக்கும் நிலையிருந்த சமாதா னத்தைக்
கொணரவெனப் பிடிபட்ட மாதர் நோக்கிக்
கைகடந்து நீவீர்நும் கணவர் தம்பால்
கைதிநிலை தவிர்த்தடைய வேண்டு மாயின்
கைகொடுக்க வேண்டும்எம் முயற்சிக் கஃது
கருத்தொன்றல் அமைதிக்காம் வழியைக் காணல்
கைதருவீர் அவரண்டை தூது விட்டுக்
கருத்தொன்றச் செய்கவென்றார் அவர்மேற் -
ஷ கொண்டார் 173

ஆங்கிலேயர் திட்டமொன்றை வகுத்தார் அந்நாள்
ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத் தேழில்
வேங்கையினை அடக்குதற்காம் மராட்டி யர்கள்
வழிநிசாமும் துணைநின்றார் முக்கூட் டாக
பங்கறியார் ஹைதரவர் புகும்வ ரைக்கும்
புதுமையது வென்றாலும் நிலைமை ஓர்ந்து
தாங்கியது சிந்னையோர் தெளிவு யுத்தம்
தவிர்த்தாளல் மனுஅழிவைத் தவிர்க்கு மென்றே
174

தனித்தனியாய் வந்திருந்தால் நிலைமை வேறு
திட்டமிட்டுத் தந்திரமாய் நுழைந்த தாலே
தனித்தனியாய்ப் பிரித்திவரைக் கையாள் தற்குத்
திட்டமொன்றை வகுத்திட்டார் ஹைதர் முன்னர்
தனித்தழைத்தார் மராட்டியரை நீங்கள் என்மேல்
தொடுத்தயுத்தம் தவறில்லை ஆங்கி லேயர்
தனித்துவர மாட்டாராய் உம்மீர் பேரின்
துணைகொண்டார் உங்களுக்கும் இதுசெய் வாரே
175

இன்றுங்கள் பேரிலெம்மை அழிக்க வென்றே
இணங்கியவர் இதுபோன்றே மற்றோர் போழ்தில்
இன்னொருவர் துணைகொண்டு உமைய ழிக்க
இசையாரோ இதையெண்ணிப் பாரீர் நாங்கள்

முன்வருவோம் சமாதான உடன்ப டிக்கை
முறையாகச் செய்திடுவோம் எனவு ரைக்க
அன்னியரைப் புறந்தள்ள மராட்டி யர்கள்
"ஆம்"என்றார் அவ்வாறே நடந்திற் றன்றே
176

சமாதானத் தூது

நடந்ததனைக் கேள்வியுற்ற ஹைத்தி ராபாத்
நிசாம்திப்பு தனையழைத்தார் பேரம் பேச
உடன்தந்தை போகவெனப் பணித்தார் சென்றோர்
உடன்பாட்டுக் கவரைவரச் செய்க என்றார்
நடந்தமுதற் போரில்வாள் ஏந்தி வீர
நாயகராய் நாடுவந்த திப்பு வெள்ளைக்
கொடியேந்திச் சமாதானத் தூது சென்றார்
காலத்தின் மாற்றமிது கூறுங் காலே
177

அழைப்பையேற்று திப்புவைத்தன் தூத ராக
அனுப்பிவைத்தார் ஹைதரலி தனித்தல் லாது
விழிப்புடனே மூவிரண்டு ஆயிரம் பேர்
வழித்துணைக்காய் அவர்கூடப் பரிப்ப டைப்பேர்
அழித்தவர்தான் உடன்பிறப்பைப் பதவிக் காக
அறிந்திருந்தார் நிசாம்செய்த அராஜ கத்தை
பழிச்சுமைக்கும் அஞ்சாதார் என்ப தாலே
பாதுகாப்புத் தூதருக்குப் பெறவேண் டிற்றே.
178

பதினேழே வயதுவந்த இளைஞ ருக்குப்
புத்திக்கூர் மதியூகம் நிதான மெல்லாம்
கதியென்று கிடந்ததவர் வீரத் துள்ளே
காவலிறை கொடுத்தபெரும் அருள்க ளாகும்
அதிகாலைப் பொழுதொருநாள் "சுபஹ்"இன் பின்னே
அரசழைப்பை ஏற்று"ஹைதர்" மன்னர் முன்னே
எதுதானோ காரணமென் றறிய வேண்டி
இன்முகத்தி னார்திப்பு 'சலாம்'உ ரைத்தார் 179

சலாத்திற்குப் பதிலுரைத்து வாழ்த்துங் கூறிச்
சரிசமமாய் தன்னருகே அமரச் செய்து
சிலையன்ன பார்வையினைத் தம்மின் செல்வன்
திறந்தவிழி யூடாகச் செறியச் செய்தார்
புலிவீரந் தனிலென்ற போழ்தும் மைந்தர்
புந்தியதன் ஆழத்தை புரிதல் வேண்டி
நிலைத்ததுவோ சிலபொழுது தந்தை நோக்கு
நுண்ணறிவுக் கூர்மையினை நோக்கு தற்கே
180

வரவழைத்த காரணத்தை வினவ மாட்டா
வாறிருந்தார் விவரத்தை அறியும் வாஞ்சைச்
சிரத்துணர்வை அரித்திட்ட காலுந் தந்தை
செப்புவரை பொறுத்திருத்தல் வேண்டு மென்றே
கருத்துன்னிச் செவிமடுக்க வார்த்தை கோத்துக்
காரணத்தை எடுத்தோதக் கடமை தம்மின்
பொறுப்புணர்ந்தார் களப்போரில் காட்டும் வீரம்
பொடியளவே கொள்ளுமிந்தப் பணியில் என்றே
181

சமாதானப் பேச்சுவார்த்தை யொன்றை நாடித்
தூதொன்று நிஜாம்புறத்து வந்த தின்று
நமைநாடி வந்ததொன்றை நிராக ரித்தல்
நன்றன்று நல்மகனே நீயே சென்றோர்
அமைதிக்காய் உகந்தவழி கண்டு வாராய்
'அல்லாஹ்'வின் திருப்பொருத்தம் அமைவ தாக
சுமைபெரிதே வயதிற்குத் திறமை மிக்காய்
சென்றேவா வென்றேவா என்றிட் டாரே
182

கட்டளையைக் காதேற்றுப் பேச்சு வார்த்தை
கைகூடு வாறேநல் லுபதே சங்கள்
திட்டங்கள் பற்பலவும் தேர்ந்த றிந்தே
தந்தையிடம் விடைபெற்று திப்பு சுல்தான்

விட்டகன்றார் ஹைத்ராபாத் நோக்கித் தம்மின்
வருகையினைத் தூதனுப்பித் தொடர்ந்தார் தூதாய்
மொட்டொன்று வருவதனை நிஜாம றிந்தே
மகிழ்வுற்றார் தம்கரந்தான் ஓங்கு மென்றே
183

வருபவனோ சிறுபொடியன் விபர மற்ற
வயதினனென் வயதினிலும் அனுப வத்தும்
ஒருதுளிக்கும் சமமாக மாட்டான் என்றே
உடனிருந்த அமைச்சனுக்கு நிசாமு ரைக்க
பெருவீரர் ஞானத்தில் கல்லா மேதை
பெற்றெடுத்த பிள்ளைதிப்பு தந்தை போல
இருந்திடலாம் எனவவரும் பதிலு ரைக்க
ஏளனப்புன் னகையொன்று நிசாம்பால் மின்னும்
184

தந்தையிட்ட கட்டளையைத் தலைமேல் கொண்டு
தனதுமுதல் தூதுதனைச் செயலில் காட்ட
சந்திப்புக் கேற்றபடி வழமைக் கொப்ப
சேர்த்தளித்த பரிசுப்பொருள் தமையுங் கூட்டி
மந்திரத்தார் சிலரொன்ற மன்னர் செல்வர்
மாடவழி கடந்துநிசாம் எல்லை தாண்டி
வந்தமைந்தார் மாளிகைக்கு முன்ப தாக
வரவறிந்த மன்னர்கால் வழியை நாடும்
185

மேல்மாடம் தனிலிருந்து நிலத்தை நோக்க
மிகப்பெரிய சேனையொன்று அணிவ குத்த
கோலத்தைக் கண்டநிசாம் அதிச யித்தார்
கரிஆறும் குதிரைபத்தும் மணியும் பொன்னும்
சாலத்தன் னோடுகொண்டு சென்ற திப்புத்
தூதரையும் கண்ணுற்றார் பேச்சு வார்த்தைக்
காலத்தைக் குறித்தனுப்பி வைத்தார் சொன்ன
காலத்தில் நினைந்தபடி நடந்த தன்றே 186

நேர்நேராய்த் திப்புவினை நிசாம்கண் ணுற்ற
நிமிடத்தே அவர்தம்மின் இளமைத் தோற்றம்
காரழிக்கும் பகலவன்போல் மனத்தை ஈர்க்கக்
கண்ணியமாய் வரவேற்றாங் கமரச் செய்து
நேரிடையாய்ச் சமாதானப் பேச்சு வார்த்தை
நிறைவேற்றத் தொடங்கினரே திப்பு தம்மின்
கூர்மதியின் விலாசத்தைக் கண்டார் முற்றும்
கரங்கோக்க முடிவவரும் கொண்டிட் டாரே
187

நிதானமுடன் தான்வந்த கார ணத்தை
நிசாமுக்குப் புரியவைத்தார் அவரும் மிக்க
நிதானமுடன் செவிமடுத்தார் சமாதா னத்தைத்
தோள்தாங்கி வந்தேனெனக் கூறி நீங்கள்
உதவுவது நன்றல்ல ஆங்கி லேயர்
உங்களுக்கும் எதிரிகளே நமது நாட்டுள்
விதிமாற்ற வந்துள்ள புற்று நோய்தான்
விலக்குவது நம்பொறுப்பே என்றுஞ் சொல்வார்
188

இன்றெம்மை அழிப்பதற்கு உங்கள் பாலே
உதவிதனை நாடுகின்றார் ஆங்கி லேயர்
பின்னுங்கள் தனையழிக்க மற்றோர் பேரை
பங்காளி யாக்கிடுவர் நினைவில் கொள்வீர்
கன்னமிட வந்தவர்கள் கூட்டுச் சேர்ந்தால்
காரியத்தில் வெற்றிகொண்ட கையி னோடு
பின்னமுறு வார்கள்தம் கைகி டைத்த
பகுதியிற்பங் கிடவேண்டும் என்ப தாலே
189

நாடுகொள்ள வந்தவர்நம் மக்கள் தம்மின்
நலன்நோக்கார் அடிமைகளாய் வரிப்பர் அஃதால்
கேடொன்றே விளையுமன்றி நன்மை தேறா
கொற்றவரின் கடன்குடியைக் காப்ப தாகும்

தேடிடுங்கால் வெள்ளையரின் உறவை நாங்கள்
தம்மைத்தாம் அழிப்பதற்குச் சமம தாகும்
வேண்டாமவ் வினைநீங்கள் எம்மி னோடு
வரிக்கும்பகை இருபேர்க்கும் அழிவைச் சேர்க்கும்
190

கூறியதைச் செவிகொண்ட நிசாமும் தம்மின்
கொள்கையிலே மாற்றமுறார் தாமும் அஃதை
அறிந்திருந்த போதினிலும் ஆள்ப ரப்பை
அதிகரிக்கும் ஆசைவிஞ்சக் கூட்டுச் சேர்ந்தார்
குறியிருந்த தவர்தமக்கு ஹைதர் தம்மைக்
கவிழ்ப்பதற்கும் தமையழிக்கக் கூடு மென்றே
நிறைவான படையிருந்தும் கொண்டி ருந்த
நெஞ்சுரத்தை கண்டஞ்சித் தவிர்த்தி ருந்தார்
191

சுயநலத்தால் தோற்றுப்போன தூதும் திப்புவின் வெற்றியும்

மராட்டியரும் ஹைத்திராபாத் நிசாமும் தம்மை
முற்றாகக் கைவிட்டார் எனவ றிந்தும்
பெரும்படையோ டண்மிவரும் பறங்கிப் பேரைப்
பார்த்திடுவோம் கையொன்றென் றுறுதி பூண்டார்
அருகிருந்தோர் அகன்றதனால் ஆங்கி லேயர்
ஆருமற்றுத் தனித்தார்கள் என்றே எண்ணிப்
போருக்கு முகங்கொடுக்கத் துணிந்தார் ஹைதர்
போர்க்களத்தில் குருதிமழை பொழிந்த தம்மா
192

வழமையான போர்க்கருவி வில்வா ளம்பு
வினாடிக்குள் உயிர்குடிக்கும் கைத்துப் பாக்கி
குழுக்குழுவாய்க் கொன்றொழிக்கும் பீரங் கிப்பேய்
கொள்ளையரின் புறத்தினிலே வலிமை கூட

கிளைத்திருந்த தவர்களிடம் எண்ணிக் கைக்குள்
கொணரமுடி யாதளவில் ஹைதர் சற்றும்
விளைவிதுவா யிருக்குமென நினைந்தா ரில்லை
வருவதனை எதிர்கொள்ளும் வீறு கொண்டார்
193

பொருதினவே படையிரண்டும் கடலி ரண்டு
பேரொலியை வானதிரப் பரப்பி விண்டே
ஒரேவெறியில் ஒன்றுக்குள் ளொன்று வீறாய்
ஊடுருவிப் புணர்ந்ததுபோல் செந்நீர் ஆறாய்ப்
பெருகியது சமர்க்களத்தைச் சகதி யாக்கும்
பாங்கினிலே கைதலைகால் முண்டம் வேறாய்ப்
பிரிந்துதனித் தனியாகப் பிணங்க ளென்று
பிரித்தொன்றைப் பார்க்கவிய லாத பாங்கே
194

ஓங்கியவாள் உக்கிரமாய் ஒன்றோ டொன்றில்
ஒன்றுவதால் தோன்றுகின்ற ஒளியால் கண்கள்
தாங்காது மூடுகையில் அடுத்துத் தாக்கத்
தந்தம்புலம் தெரியாது தவித்தார் வீரர்
வேங்கையெனப் புரவியிலே ஹைதர் ஆணை
விடுத்தவராய் வாள்சுழற்றி சிரங்க ளைந்தார்
ஆங்கெவருந் தப்பவில்லை அவர்கண் பட்டோர்
அடிதுவண்டார் வெள்ளையர்கள் அரியுண் டாமே
195

இருபுறத்தும் துப்பாக்கி உமிழுந் தோட்டா
இருபுறத்தும் உயிர்குடிக்கும் கைத்துப் பாக்கி
அருகிருக்கும் எதிர்த்தரப்பு வீரன் ஆவி
அமைதிகொள நிரந்தரமாய் விடைய ளிக்கும்
பெருகிவரும் படையையொன்றித் துவம்சம் செய்யப்
பீரங்கிக் குண்டுகளும் பங்கைச் செய்யும்
மருவிவரும் ஆபத்தை அறிந்த ஹைதர்
மாற்றுவழி யொன்றுக்கு மனந்து ணிந்தார் 196

மகன்திப்பு தனையழைத்துப் படையொன் றோடு
மற்றுமொரு புறமாகத் தாக்கு தற்கு
வகைசெய்தார் காஸீகான் துணையாய் நின்றார்
வெற்றிக்கும் வாகாக வழியுஞ் சொன்னார்
பகைவர்களை இயன்றமட்டில் போக்குக் காட்டிப்
பின்னவரைத் தாக்குகின்ற தந்தி ரத்தை
வகைப்படுத்தக் கூறிவாழ்த்தி யனுப்பி வைத்தார்
வெற்றிகொளப் பறந்ததது காற்றி னோடே
197

செங்குருதித் தாகத்தால் வாள்கள் ஏங்கச்
சமராடும் வெறியேடு வீரர் ஏங்கப்
பொங்கியெழுந் தார்ப்பரிக்கும் பேர லைபோல்
பாய்ந்ததுவோர் பரிப்படையும் பகைவர் நோக்கும்
புங்கத்தின் வேகமன்ன வேக மாமோ
படைநடத்தும் திப்புவின்வெண் குதிரைக் கீடோ
தங்கவில்லை எங்குமொரு தரிப்பில் தானும்
சேர்புலத்தைச் சென்றடைந்தார் சிலநொ டிக்குள்
198

வந்தபணி வெற்றியுடன் முடிந்த பின்னர்
விரைந்தாரே "திருவண்ணா மலை"க்குத் திப்பு
வந்தசேதி மீண்டிடவும் செய்த தாங்கே
வெள்ளையரை ஹைதரலி எதிர்த்து நின்றார்
தந்தைவயம் வெற்றிதலை சரியா தென்றுந்
தாக்குதலைத் தாங்கவொண்ணா நிலைமை -
யென்றும்
அந்தரத்தில் பறக்கவைத்த தவரைத் தாதை
ஆவலது தேவையஃதே அறிந்த வாறே
199

"சென்னை"தன் கைப்படுமென் றெண்ணங் கொண்டு
சென்றவர்தம் தந்தைநிலை அறிந்து மீள
முன்னெதிர்த்தார் வெள்ளையர்கள் முனையி ரண்டில்
முற்றுமவர் தமையழித்து வெற்றி கொண்டு

தன்னைவிரைந் திடவைத்தார் தந்தை பாலே
தோல்விக்கு விடைகொடுக்க வாகை கொள்ள
எண்ணியபோல் நடந்ததது வெற்றி மீண்டு
இணைந்ததவர் திருக்கரத்தில் இறுதித் தீர்வாய்
200

உக்கிரம மாகப்போர் நடந்த வேளை
ஊகித்தும் அறியவொண்ணா வாறே மின்னல்
ஒக்கவந்த படைபோரின் நிலையை மாற்றி
உடன்ஹைதர் பக்கமதன் சார்பு காட்ட
திக்கெட்டும் வெற்றியின்பே ரொலியால் விஞ்சும்
திப்புவதன் காரணராம் எதிர்த்த பேர்கள்
சுக்குநூறாய்ப் போனார்கள் திடீர்த் தாக்கத்தால்
தந்தையுள்ளம் களிப்பினுச்சி கண்ட தன்றோ
201

தோல்விகண்டோர் புறமுதுகிட் டோட மற்றோர்
செத்தவுடற் கூறுகளாய் களத்தில் தேங்க
கோல்கொண்ட மாமன்னர் ஹைதர் மைந்தர்
கைகொண்ட வாகையொடு தாதை முன்னே
தூலவுடற் பொறைமின்னத் தோற்றங் காட்டிச்
சலாமுரைத்து வழிமொழிக்காய்க் காத்து நின்றார்
நாலுபடைத் தளகர்தோர் உடன்நின் றார்கண்
நிறைந்தவெழிற் காட்சியது மன்னர் பாலே
202

வெற்றித்திரு வாகத்தன் முன்னே நின்ற
வாரிசுவை நெஞ்சணைத்து ஹைதர் சொல்வார்
சற்றுமெதிர் பாராத வேளை போரைத்
திசைதிருப்பி வெற்றிகொண்டாய் தீரச் செல்வா
முற்றும்நீ பொருந்துவையே மகுடந் தாங்க
மாற்றாரை வெற்றிகொண்டு வாகை சூட
பெற்றதிந்த மண்ணுன்னால் பெருமை வீரம்
பதம்பணிந்த துன்னிடத்தில் இறையா லென்றே
203

தொடர்ந்து வந்த தொல்லைகளும் திப்புவின் தீரமும்

தொடர்ந்து வந்தன தொல்லைகள் பற்பல
அடலர் அவரவர்க் கானவா றியற்றினர்
திடமும் வீரமும் திறமையும் யுக்தியும்
கொடைய தானதே தாதை தனயர்க்கே
204

தந்தை பிள்ளையாம் இருவரும் சேர்ந்தனர்
வந்த இடர்களை வென்றனர் ஒன்றியே
வந்து சேர்ந்தது "வாணியம் பாடி"யும்
செந்தமம் ஆனது "திருப்பத்தூர்க்" கோட்டைகள்
205

ஆண்டொன் றென்றுமே ஆகிடாப் போழ்தினில்
தோன்று பொறாமையால் தொற்றிய பகைமையின்
சான்று நிசாமெனும் செருக்கினர் வெள்ளையர்
ஊன்று நஞ்சினை உண்டது கீழ்மையே
206

நிசாமின் தொல்லைகள் தொடர்ந்தன மீண்டுமே
திசையும் மாறினார் தம்மனக் கொள்கையில்
விசால மற்றநெஞ் சுற்றவ ராதலால்
இசைவு கொண்டனர் வெள்ளைய ரோடுமே
207

போரே வாழ்வெனப் போனதன் தந்தையைப்
போரி லிருந்துசற் றோய்வுகொண் டோய்ந்திடுங்
கார ணத்தவ ராகினார் திப்புதன்
பேரி லப்பொறுப் பேற்றினா ராமரோ
208

வீர வேங்கையென் றானதன் பிள்ளையின்
ஒரு மைதனை உளத்தினி லூன்றியே
நேரி டைப்படை நடத்தி வென்றிடச்
சேரு மனுமதி தந்தன ராமரோ
209

நிசாமி னெதிர்ப்பினை நசுக்கி அகந்தைகொள்
நிசாமி னென்பெலாம் நடுங்கிட ஆசைகள்
வசலை யாக்கிய வீர சாகசம்
திசையெண் மீதிலும் சேர்ந்ததென் றாமரோ
210

"வொட்ஸன்" "காவின்" "ஸ்மித்"எனும் வெள்ளையர்
கட்ட ளைத்தள கர்த்தரின் படைகளை
ஒட்ட ஒழித்தவ ரோடிட வைத்துமே
கொட்ட மொடுக்கிய காரண ராமரோ
211

தொடர ஆண்டுகள் நான்கென வானபோர்
தொடரமை சூர்முதற் போரெனச் சாற்றுவார்
அடங்க மாட்டிலார் அடங்கிட வைத்தசீர்
அடங்க லாக்கிய அற்புத மாகுமே
212

பெற்ற பிள்ளையின் புஜபலம் போர்களின்
வெற்றி கொண்டுமே விளங்கிட ஹைதரும்
உற்ற மகிழ்வினுக் கொப்பென ஒன்றுமே
உற்ற தில்லையே உரைத்திடி லாமரோ
213

முக்கூட்டு ஒப்பந்தம்

குடகுமலைப் புறமிருந்தே காவே ரித்தாய்
கடல்நோக்கிப் பவனிவந்தாள் இருபு றத்தும்
அடர்ந்தமரக் காடுகளும் மலையுங் குன்றும்
அழகுசெய்த ததனழகை அலங்க ரிக்கக்
கடந்துவரும் புறமனைத்தும் களனி யோங்கக்
குடிப்புலத்து மாந்தர்களும் கவலற் றேற்றக்
கொடையருள்வாள் புனலாலே மண்செ ழிக்கும்
கருணைமிகு மனங்கொண்டாள் அன்னை - போன்றாள் 214

வானோங்கு பருவதங்கள் இயற்கை தந்த
வரமாகத் தொடர்ந்திருக்கச் சிறுகுன் றங்கள்
காணுமவை யிடையிடையே கரிக்கூட் டம்போல்
கண்களுக்கு விருந்தாகும் மரங்க ளாலே
கானகங்கள் பரந்துவிரிந் தெழில்கொ ழிக்கும்
கவலையின்றி யுயிரினங்கள் கூடி வாழும்
வாணாளொன் றாகாதே மன்னு யிர்க்கு
வற்றாத பேரழகை மாந்து தற்கே 215

யானைபுலி கரடிபன்றி ஓநாய் மான்கள்
இடம்பெயர்ந்து பாய்ந்தலையும் மந்திக் கூட்டம்
கானமுயல் காட்டெருமை விலங்கி னோடு
கண்கவரும் மயில்கூவும் குயில்போல் பன்னூ
றானவனப் பறவைகளும் மகிழ்ந்து வாழும்
அளிமாந்தத் தேன்சுரக்கும் பூக்கள் பூக்கும்
கானமிசைக் கின்றவண்டு குருவிக் கூட்டம்
காணுகின்ற காடுகளோ பலவென் றாகும் 216

நீர்தேங்கி உயிரினங்கள் பருகி வாழ
நிலங்கொண்ட குளங்களிலே முதலைக் கூட்டம்
சேருமவை ஒன்றின்மே லொன்று தொற்றிச்
சேர்ந்துவிளை யாடும்பின் புரண்டே வீழும்
ஊர்வனவவ் வோடுமலை யரவம் பாம்பும்
உடும்பாமென் னுயிரினங்கள் கான கத்தே
பேரறியா வாறெனவும் வாழும் கூறப்
புகிலொன்றோ விரண்டாமோ பலநூ றாமே 217

"கடம்பா"ரென் னினத்தவர்கள் குடகில் வாழ்ந்தார்
காடுவளர் ஏறுகள்போல் வீரம் மிக்கார்
அடிபணியார் அன்னியர்க்கும் அடங்காப் பற்றார்
ஆட்சியிலே பெரும்பாலுந் தனித்தே நின்றார்
இடையிலொரு காலத்தில் ஹைதர் ஆட்சி
ஏற்றிருந்த போழ்தவர்கள் அன்னி யர்க்குக்
கொடுக்கும்படி யானார்கள் கப்பம் மைசூர்
கோன்மீதும் பகைகொண்டார் சருவி னாரே 218

பலதடவை எல்லைகளில் மோதல் செய்த
போததனைப் பொருட்படுத்தா தொதுக்கி னாலும்
நிலாதுபல தொல்லைகளைத் தந்தார் இன்னும்
நாம்வாழா திருத்தலிழி வாகு மென்றே
நலமாயோர் நாள்வரட்டும் பொருந்தும் வாறாய்
நல்லதொரு பாடமவர்க் கியற்றித் தம்மின்
பலமறியச் செய்யவெனக் காத்தி ருந்தார்
பற்றியதே வாரிசுப்போர் ஹைதர் வென்றார் 219

குடும்பத்துள் பகைதோன்ற ஒருவன் ஹைதர்
புறஞ்சாய்ந்தான் உதவிக்கரம் வேண்டு வோனாய்க்
கிடைத்ததொரு தருணமெனக் கொண்டு மன்னர்
கைகொடுத்தார் படைதிரட்டித் திப்பு சென்றார்

இடையொடிந்தான் ஆட்சிசெய்த மன்னன் பால
இராஜப்பா மைசூருக் கேற்ற பேரை
உடனாட்சிப் பொறுப்பேற்கத் தந்து திப்பு
ஊரடைந்தார் வாகைகொண்ட புலியைப் போன்றே
220

பொருந்திவந்த சந்தர்ப்பந் தனைத்த னக்குப்
பயன்கொண்ட தோடுமன்னர் ஏற்ற வாறு
அரசியலில் மாற்றமுமே செய்தார் தம்மின்
ஆட்சிக்குப் பலமுமதால் ஏற்ற தாகும்
சருவிவந்த இடருமதால் தணிந்த தேற்ற
சாட்டையடி கொடுத்ததனால் வாரி சுப்போர்
நெருங்காதும் பாதுகாப்பு செய்தார் அஃதால்
நலம்பெற்றார் நாட்டுமக்கள் அமைதி தோன்றும்
221

முடியிழந்த ராஜப்பா பழியைத் தீர்க்க
முயன்றான்தன் முயற்சிகளுக் கேற்ற பேரை
அடைந்தான்முன் மைசூரின் அரசி காலில்
அடைக்கலமும் வேண்டிநின்றான் அவளும் - ஏற்றாள்
முடிந்ததில்லை முன்னொருகால் ஆட்சி பற்றும்
முயற்சிஹைதர் மன்னித்து மைசூர் வாழக்
கொடுத்ததையும் மறந்திட்டாள் மீண்டும் மீண்டும்
கூட்டிணைந்தாள் வெள்ளையருங் கைகோத் தாரே
222

முக்கூட்டு நடவடிக்கை தோன்றிற் றன்று
மூக்குடைந்த ராஜப்பா மைசூர் ராணி
தக்கவைத்துக் கொண்டுதம தாட்சி மூலம்
சூறையிடக் காத்திருக்கும் வெள்ளைப் பேய்கள்
வக்கிரமுங் கொண்டார்தம் உள்ளத் தேயெவ்
வாகினிலும் ஹைதரினை ஒழித்துத் தம்மின்
பக்கலிலே மைசூரின் ஆட்சி சாயப்
பாடுபட்டார் பகலிரவாய் பயனற் றோரே 223

ராணா ஒப்பந்தம்

ஆயிரத்தோர் ஏழுநூற்றின் எழுபத் தாறின்
இறுதிவரை தஞ்சாவூர் ஆட்சி ஹைதர்
நேயத்துக் குரியதுவாய் இருந்த தஃதை
நொடியவைத்தார் வெள்ளையர்தம் சூழ்ச்சி யாலே
வாய்க்குமொரு வேளையெனக் காத்தி ருந்து
வெள்ளையரைத் தொடர்புகொண்டாள் மைசூர் - ராணி
காய்த்ததொரு கனியவர்கள் தமக்குள் ளாகக்
கூட்டுமுறை ஒப்பந்தம் பிறருஞ் சேர்ந்தார்
224

தஞ்சாவூர் மண்ணிலது வேரூன் றிற்று
தீய"ராணா ஒப்பந்தம்" கொள்கை முற்றும்
வஞ்சகமாய் ஹைதரினை ஒழித்துத் தங்கள்
வசமாக்கி மைசூரின் உயிர்ப்பி ழந்தே
பஞ்சையாகிப் போயிருந்த ஆட்சி தன்னைப்
புதுப்பித்தே ராணிவழி யொருவ ருக்காம்
ஒஞ்சரிப்ப தாகுமது போல மக்கள்
உள்ளுணர்வை ஹைதர்பால் வெறுத்த லொன்றாம்
225

வெள்ளையரே முதன்மையுற்றார் திட்டத் தில்தாம்
வெற்றிபெற வேண்டுமெனப் பார தத்தில்
வெள்ளையின ஆட்சிநிலை பெறுவ தற்கும்
விரிந்தகன்று பரவுதற்கும் இடையூ றாக
உள்ளபெருந் தடைஹைதர் என்ப தாலே
உதவிக்கே பிறர்தம்மைக் கூட்டுச் சேர்த்தார்
எள்ளளவும் பிறர்நன்மை கருத்தி லற்ற
இடும்பர்கள் ஈதறியார் ஏமாந் தார்கள்
226

மைசூரின் நாளாந்த நகர்வொவ் வொன்றும்
மாற்றாரின் கருத்திற்குத் தெரியச் செய்தார்
கைசோர விட்டவர்கள் ஆட்சி தம்மைக்
கயமைக்குக் கைகோத்தோர் ஓய்வி லாரே
தையலெனி லும்சூழ்ச்சி தலைமுற் றாகச்
சேர்த்திருந்த முன்மைசூர் அரசி "ராணா"
கையொப்ப மானமுதற் கொண்டு துஞ்சாள்
கருமத்தில் கண்ணானாள் சோர்வி ழந்தாள்

227

ஆயிரந்தான் கூடியவர் கூழ்ச்சி செய்தும்
அவரைவெல்லப் பேரிறைவன் சூழ்ச்சி செய்தான்
தூயவனின் சூழ்ச்சிவென்ற போழ்து ஹைதர்
திப்புசுல்தான் இருவருமே அண்டை யெல்லாம்
ஓயாது படையெடுத்து வெற்றி கொண்டே
ஒருங்கிணைத்தார் மைசூரின் கொடியின் கீழே
வாயடைத்துப் போனார்கள் மராட்டி யர்கள்
வெள்ளையர்கள் நிஜாம்போன்றோர் வெற்றி - கண்டே

228

பெரும்பங்கு கொண்டிருந்தார் திப்பும் எல்லாப்
போர்களிலும் பங்குகொண்டார் தந்தை யோடும்
ஒருவரெனத் தான்மட்டும் படைந டத்தி
உலகத்தின் பார்வைக்குள் ஊன்றிப் போனார்
பரவியது புகழ்சொந்த மண்ணைத் தாண்டிப்
பறங்கியரால் மேல்நாடும் புரிந்த தஃதை
வரமழிந்த நிலைகொண்டோர் துடித்துப் போனார்
வெற்றியின்மேல் வெற்றிகரம் பெற்ற தாலே

229

கூறிடுவர் சேதியொன்று அற்றை நாளில்
கேட்கநகை கொள்ளவரும் சேதி யஃதாம்
வேறுவழி யில்லையெனில் அடங்க மாட்டா
வயதிலிளம் குழைந்தைகளை வெள்ளைத் தாய்மார்

கூறுவராம் "திப்புப்பேய் வருகு துன்னைக்
கடித்தெடுத்துத் துண்டுதுண்டாய்க் கூறு போட்டு
மறுகணமே தின்றுவிடும் சத்த மின்றி
வாய்பொத்தி தூங்கிவிடு" என்ப தாக

230

திப்புவின்பால் வெள்ளையர்கள் கொண்டி ருந்த
தன்னச்சம் காரணமாய் அவரை மீறி
ஒப்புவிக்கும் வார்த்தைகளாம் அவைக ளென்றால்
உண்மையது வேறில்லை போர்க்க ளத்தில்
தப்பியோடிப் போனவர்கள் தம்மை யன்றித்
தலைதப்பி யில்லையொரு பேரும் என்ற
மெய்ப்பிலது தோன்றியதாம் பெண்கள் கூட
மனத்திலச்சம் கொண்டிருந்தார் அறிந்த தாலே

231

நினைந்தாலும் பிறரஞ்சும் வீர ராக
நெஞ்சத்தில் நிலைபெற்றார் மாற்றார் பேரில்
பனையுறுதி கொண்டவுடற் பலத்தால் திப்பு
பகைவரினைப் பந்தாடும் புதுமை கண்டே
சினங்கொண்ட சிங்கமவர் களத்தில் வாழ்வில்
சமாதான நோக்குடைய தரும சீலர்
தனைத்தனித்தே தந்தைவழி சென்றார் கொள்கை
தாய்மண்ணைக் காப்பதென்னும் துணிவி னோடே

232

பரந்துவிரிந் தொருபெரிய நிலப்ப ரப்பைப்
பெற்றதந்த நாளினிலே மைசூர் ஆட்சி
ஒருக்காலும் இருந்ததில்லை அவ்வா றென்றே
உலகவர லாறுரைக்கும் உண்மை அஃதாம்
சரித்திரத்தில் நாயகராய்ப் பரத நாட்டின்
சுதந்திரத்தின் முதற்குரலாய்ப் பெரும்பே ருக்கே
உரித்தானார் தந்தைமகன் இருபே ரும்தான்
ஓங்குபுகழ் இறைவனுக்கே நெஞ்சில் வாழ்வோர்

233

திப்புவின் திருமணம்

மணம்மு டித்திடு வயதுமே யானதும்
மணம்மு டித்திட மன்னவர் வேண்டிட
மணம்மு டித்திடும் மனையுமே தேர்ந்ததால்
மணம்மு டித்திட மகனுமொப் பினாரரோ
234

பதியின் விருப்பமுற் றாமெனத் தன்மகன்
பதிலு ரைத்ததைப் பஃறுன்றி சாமனப்
பதிவி லேற்றிறை பணிந்து உயரதி
பதியை யுளத்தினால் புகழந்தன ராமரோ
235

ஹைதர் திப்புவின் கைகொளத் தேர்ந்தபெண்
"ஹைரெ"ன் றானதும் கருத்தி லுறைந்தபெண்
ஹைதர் மகனுரை செய்ததும் அதுவுமே
"ஹைரெ"ன் றோதினார் கோனிரு பேரரோ
(ஹைர்: நலம்)
236

பிஞ்சு வயதினில் படகுத்து றையினில்
அஞ்சி டாதிருள் வேளையில் தன்பசி
துஞ்ச லகற்றியே தீர்த்தபெண் 'றுக்கயா'
வஞ்சி கரங்கொள விரும்பினா ராமரோ
237

மதகுரு மகளொரு மனையென வானனள்
மதிகொளு மகளொரு மனையென வாகினாள்
மதமதற் கொப்புதல் தந்ததால் ஈர்மனை
மதித்து வாழ்ந்தும கிழ்ந்தன னாமரோ 238

வேறு

திருமணப் பந்த மொப்பித் தனயனும் பதிலு ரைக்க
ஒருமனங் கொண்டார் தாயும் தந்தையும் உளம்ம கிழ்ந்தார்
பெருவிழாக் காண மக்கள் பகலிர வாக நாட்டின்
ஒருதெரு வற்று முற்றும் அலங்காரம் செய்திட் டாரே
239

இருமதஞ் சார்ந்தோர் ஒன்றாம் எனவொன்றி வாழும் நாட்டில்
இருமதத் தாரும் தம்மின் எதிர்கால மன்னர் கொள்ளும்
திருமண நாளை எண்ணிச் சிறந்தனர் மனத்தால் தத்தம்
விருப்பினுக் கியைந்த வாறு விழாகொளத் திடமுங் கொண்டார்
240

கன்னியர் மலர்தொ டுப்பார் காளையர் கழிகள் கொண்டே
முன்னமே பரண்கள் கட்டி மலர்த்தொடை வருங்கால் மட்டும்
புன்னகைப் பரிசில் ஈந்து பாவையர் தம்மைச் சீண்டி
கன்னங்கள் சிவக்கச் செய்வார் காண்பவர் கண்கா ணாதே
241

மலர்கொண்டு மாட மெல்லாம் மகளிர்தம் மலர்க்க ரத்தால்
அலங்காரப் பந்த லாக்க அளிகள்மொய்த் தவர்கண் கைகள்
சிலவைவைக் குள்ளாம் என்றே தொற்றிடுஞ் சிலிர்த்தே அன்னார்
நிலைகுலைந் தறி யோடல் நாட்டியம் போலு மாமே
242

அலறிடுங் குரல்கேட் டாங்கே ஆனது என்ன வென்னும்
நிலையறிந் திடத்தாய் மார்கள் நாடியே பாதம் வீசக்
கலகல வெனச்சி ரிப்பர் கன்னியர் கரமொ லித்தே
கிலிகொள வைத்த கோபங் கொண்டிடத் தாய்மார் மீள்வார்
243

வான்தொடு கம்பந் தோறும் வீசிடுங் காற்றுக் காடத்
தோன்றிடும் பதாகை கொள்ளை தெருத்தெரு வெங்குங் காணும்
பூண்டபொன் வளைக ளோடே பார்க்கக்கண் பறிக்கச் செய்த
தூண்களொவ் வொன்றுஞ் சாலைச் சேவகம் செய்வார் போலாம்
244

மாவிலைத் தோர ணங்கள் மலர்ச்சர வரிகள் வீட்டை
மேவின கண்க ளிக்க மணமுமிழ்ந் திதயம் ஈர்க்கும்
பூவிதழ் நயன மாதர் புத்துடை அணிந்து சொர்க்கத்
தேவியர் போலு முற்றார் தெருநோக்கில் வாயில் தோறும்
245

பகலிர வென்றில் லாது பகலவன் காய்ந்தான் போன்றே
அகல்களுந் தீநாக் கோலும் ஆனதம் பணிமேற் கொள்ள
அகன்றோடுங் கங்குல் காற்றின் அசைவினால் சுடர்கள் ஆடும்
மிகையலங் காரத் தாலே மிளிர்ந்தது "சீரங் கம்"மே
246

ஆளணி ஊர்வ லங்கள் அழகியர் குரவை பாட்டு
கேளிக்கை குதூக லங்கள் காளையர் சாக சங்கள்
வாளொடு வாள்மோ துண்டு விளையாட்டு வீரப் போர்கள்
தோளொடு தோள்பொ ருத்திச் செய்சமர்க் களங்கள் காணும்
247

செடிகொடி மரங்கள் பூத்துச் சொரிந்தன இயற்கை கூடக்
கடிகமழ் மணத்தில் தன்னேர் கடமையை யுரைத்தாற் போன்றே
துடியிடை அரம்பை யர்கள் சேர்ந்தொன்றி நாடு புக்கி
மடையொடித் தழகு காட்டும் மாயையைத் தோற்றும் பாங்கே
248

தாய்மாருந் தந்தை மாரும் தம்மகர்த் திரும ணத்தின்
வாய்ப்படு வாகா யுன்னி வரித்துநல் லனைத்துஞ் செய்வார்
தூயநல் மனத்தி ளைஞர் தம்முடன் பிறப்பா யெண்ணி
ஆயன வியற்றி னார்கள் அன்னைமண் ஆள்ப திக்கே
249

வேய்குழல் தோற்கும் வாகாய் வனிதையர் வாழ்த்துப் பாடத்
தாயனைப் பெண்டிர் தந்தைத் தரத்தினோர் புகழ்ந்தே யேற்றச்
சேய்பெற்ற செல்வன் கொள்ளுந் திருமணத் திருநா ளென்றே
வாய்ச்சொற்கள் குளற மூத்தோர் வாழ்த்துரை வழங்கி னாரே
250

புள்ளினம் புறாக்கள் பச்சைப் பசுங்கிளி பட்டு டுத்திக்
கொள்ளையாம் ஒன்றோ டொன்று கூடியே மகிழ்வ தென்னே
கிள்ளையோ அனைத்தும் பேசும் கனிமொழி நறையோ பாகோ
வெள்ளையாம் அவற்றி னுள்ளம் வேடிக்கை மழலைக் கூட்டம்
251

நெய்யுண்ட கூந்தல் வாகாய் நீவியே மலர்கள் சூடி
மையிட்டார் நயன மீன்கள் விளங்கிடப் புருவம் தீட்டிக்
கையகம் செம்மை கொள்ளக் கீறினர் மருதா ணிப்பூ
தையலர் இளையோர் தம்மின் திருமணத் திருநாட் போன்றே
252

வீதிகள் தோறும் உண்ண விடுதிகள் தாக சாந்திக்
கேதுவாய் நன்னீர்ப் பந்தல் நல்ஆவின் அமுது சீத
வேதுவெவ் வேறாய்ப் பான வகைகளும் வழங்கி னார்கள்
யாதொரு இல்லத் துள்ளும் இலையடுப் பெரித லன்னாள். 253

ஈர்மதப் பேர்க ளும்மாங் கிணைந்தொன்றி வாழ்ந்தார் பேதம்
சேர்ந்திலை மனத்துள் ளன்னார் சகோதரர் இந்து முஸ்லிம்
ஓரன்னை வயிற்று தித்த உடன்பிறப் பனையார் கொள்கைச்
சீரியர் திப்பு சுல்தான் செங்கோலி னாட்சிப் போழ்தே
254

ஊணினில் வேறு வேறு உவப்பதால் அவர வர்க்கு
வேணுமென் றான தொன்றை விரும்பியுண் டகடு கொள்ள
ஆணொடு பெண்க ளொன்றா தமைவுறு தலங்கள் மீதே
ஊண்வகை பெருக்கி வைத்தார் ஊருண்டு மகிழ்ந்த தம்மா
255

இந்துக்கள் உண்ண வென்றே இலைகளைப் பரத்திச் சாதம்
சிந்திடா வாறு நாப்பண் தேவைக்கு ஏற்ற வாறு
தந்தனர் நெய்யும் வார்த்தார் சற்றுமே புலாலு மற்று
வெந்தநற் கீரை யுங்காய் கிழங்கும்பல் வகைக ளாமே
256

பசியினைத் தூண்ட நாவில் புளிப்புறைப் பொன்றி நீரைக்
கசியவைத் திடநல் லூறு காயுடன் புறத்தே உப்பும்
புசித்திடத் தயிரும் ஒன்றிப் பருகிட ரசமும் மோரும்
கசிவின்றி மொறுமொ றுப்பாய்க் காய்ந்தஅப் பளமும் வைத்தார்
257

பசும்மிள காயி னுள்ளே பாய்ச்சிய உள்ளீட் டோடு
பசுத்தயிர் தன்னுள் ஆழ்த்திப் பகல்மூன்று ஊற வைத்துப்
பிசுபிசுப் பகலு மட்டும் பகலவன் சுடரில் காய்த்துப்
புசிக்கவும் தந்தார் நன்கு பொரித்தபின் சோற்றோ டேற்றே
258

வடையொடும் இட்லி தோசை வாணலி பொரித்த பூரி
கடலையில் செய்த கூட்டுக் காய்கறி கொண்ட சாம்பார்
தொடுவதற் காகச் சட்னித் துவையலுந் தனித்து வைத்தார்
தடையிலை எவர்க்கு மெஃதும் தெரிந்துண்ணத் தந்தி ருந்தார்
259

உண்டபின் பாய சத்தை உட்கொளத் தந்தார் அஃதில்
துண்டுதுண் டாக வெட்டிக் குறுக்கிய பருப்பும் காய்ந்தே
அண்டிய பழவற் றல்கள் அளவொடுஞ் சேரக் கூட்டிப்
பண்டங்கள் வேறுந் தந்தார் பலநாட்கள் பசிதோன் றாதே 260

பல்வகை இறைச்சி மீன்கள் புசிப்பதற் கேற்ற வாறு
பல்வித மாகப் பாகம் பண்ணினர் எவரும் எஃதும்
இல்லையென் றுரைசெய் யாதே எலாமுண் டெனப்பு சிக்க
வல்லபேர் ஊணா ளர்கள் வாகுறப் பரத்தி வைத்தார்
261

மணப்பொருள் மிளகாய்த் தூளில் மட்டொடு கலந்து நீரைக்
கணக்கொடு ஊற்றிச் செய்த கூட்டினில் அவித்த கோழி
கணக்கிலைத் தொகையில் தோய்ந்து காய்ச்சிய நெய்யில் காயும்
இணக்கமா யதனுக் கேற்ப இணைக்கறி பலவுஞ் செய்தார்
262

ஒட்டையின் இறைச்சி ஆட்டி னுடனாவின் தசைப்பற் றோடு
மட்டிலை அளவு வேறு வேறென ஆணத் துள்ளே
கொட்டியே அவித்தெ டுத்தார் "குறுமா"நெய் பொரித்த ஊன்கள்
இட்டமாய் உண்ண வென்றே ஏற்றநற் பதத்தி லாகும்
263

மைசூரின் பருப்பு மைசூர் மக்கள்நா ஏற்கும் வாறு
செய்தனர் உடன்சேர்த் துண்ணச் சுவைபடக் கிழங்கு முட்டை
நெய்தனில் பொரிந்த தாங்கே நிறையவே விதைகள் ஒன்றும்
கைப்பதம் இதுதா னென்னும் கூற்றினை நாசி பேசும்
264

வெண்மலர் மொட்டுப் போலாம் வடித்தநல் லரிசிச் சோறு
மண்வளப் பெருமை கூறு மாறெனத் துலங்கும் அஃதுள்
எண்ணெய்யில் பொரித்தெ டுத்த இலவமும் ஏலம் பட்டை
பண்ணுறச் சேர்த்தார் கூடப் பருப்புவெண் காயம் வேறாம்
265

துண்டங்க ளாகக் கோழித் தசையரிந் தவற்றைக் கூட்டி
அண்டாவி லிட்ட வித்து அதனொடு குழம்புக் கான
பண்டங்க ளனைத்துஞ் சேர்த்துப் பன்நீருங் கலந்தார் பின்னே
ஒன்றெனச் சாதத் தோடே உழக்கியே உண்ண வைத்தார்
266

உண்டபின் குடிக்கப் பாதாம் உள்ளிட்ட ஆவின் பாலை
சுண்டவே காய்ச்சி நன்கு சர்க்கரை ஏலம் இஞ்சி
வண்ணத்தூள் கூட்டி யஃதை வடித்தெடுத் தூற்றி வைத்தார்
உண்டவர் போதை யுண்டார் போலுமே கிறங்கி னாரே 267

உண்டிடா ரெவரும் இல்லை உப்பிய தகடு என்மால்
உண்டனர் அனைத்துப் பேரும் உடல்நிறை உயர்ந்த தென்றார்
உண்டநல் உணவு உள்ளே ஒன்றிய தாமோ தேகம்
உண்டவவ் வுணவின் கந்தம் ஒன்றிட நகர்ந்தார் ஊர்ந்தார்
268

"சீரங்கப் பட்டி ன"த்தின் தெருவெலாம் திருவி ழாவின்
காரணம் போல வாகிக் களிப்புறு நிலையில் மன்னர்
சீருறு மாளி கையின் தோற்றமோ சொர்க்கம் போலாம்
தாரணி மார்பன் செல்வன் திருமணத் திருநா ளன்றே
269

மலர்மணம் வேறும் அம்பர் மணப்புகை வேறு பெண்டிர்
விலையுயர் அத்தர் பூச வருஞ்சுகச் சுகந்தம் வேறு
பலவவை ஒன்றி ஒன்றைப் பலபட வாக்கும் தென்றல்
நிலமிசை எங்கு மள்ளி நிறைத்தது தோள்சு மந்தே
270

மணவறை யுள்ளே மாதர் மிகையொலி சதங்கை யொக்கக்
கிணிகிணி யென்றொ லிக்கும் காதுகள் தேனை யுண்ணும்
அணங்கையர் அட்ட காச ஆனந்தக் களிப்பு விஞ்சும்
மணமகள் அலங்கா ரத்தின் மீதுறு போழ்தா மஃது
271

சீனத்துப் பட்டாற் செய்த சேலையில் வைரக் கற்கள்
வானொளிர்த் தார கைகள் வந்தொன்றி மிளிர்தல் போலாம்
சாணுடம் பேனும் மாற்றார் தெரிகையிற் படாத வாறே
பூணினர் மணப்பெண் சொர்க்கப் பதியிருந் துதித்தாள் போன்றே
272

மரகதம் பதித்த மாலை முத்துக்கள் கோத்த கோவைச்
சரங்கழுத் தலங்க ரிக்கத் தோடுகள் பசுங்கல் தாங்கிச்
சிரமசை வுறுங்கால் ஆடும் தீபங்க ளொளியில் மின்னும்
கரங்கொண்ட சொர்ணக் காப்பும் கனன்றிடுங் கற்க ளாலே
273

பொன்னினில் வார்த்த கைப்பூண் பதித்தநல் மணிகள் கூடி
மின்னின மோதி ரங்கள் மிகையுற அழகு சேர்க்கும்
அன்னமென் றசையக் கால்கள் அணிந்தபொற் கொலுசால் பாதம்
இன்னுந்தம் அழகில் விஞ்சி எழில்தரும் மணப்பெண் ணுக்கே 274

அஞ்சன மிட்டார் கண்கள் அழகுறப் புருவந் தீட்டி
அஞ்சுகச் சொண்டா மன்ன அழகிய நாசி மீது
செஞ்சுடர் தெறிக்கும் பாங்கிற் சேர்த்தனர் மூக்குத் தீயும்
வஞ்சமில் லிறைய ளித்த வாகினை வாகு செய்தார்
275

கோவையாய் மாலை ஏழு கோத்துமே கலையி டையை
மேவியே ஒளிரும் அஃதின் மணிகளின் புதுக்கோ லத்தால்
காவிடைப் புட்பத் துள்ளே கோவென ரோஜா போன்றாம்
கோவைவாய் மாதர் நாப்பண் நிலவினள் மணப்பெண் ணாளே
276

கேசத்தில் தொடங்கிக் காலின் குதிவரை அலங்கா ரத்தால்
காசகல் கிழத்தி தன்னைக் குலத்திளம் கன்னி யர்கள்
பாசமே முழுமை கொள்ளும் பாங்கினர் புதுமை செய்தார்
பேசுதற் கரிதே யந்தப் பொற்சிலை தோற்றப் பாங்கே
277

நாளைநீ யவர்க ரத்துள் நெளியுவாய் இன்று மட்டும்
தோழியர் எங்க ளோடு தரித்திரு விடநாம் மாட்டோம்
வேளையீ தன்றி வேறு வாராவோர் பொழுது என்றே
தோளினைப் பற்றி யோர்பெண் சிறுக்கியும் சொல்வா ளின்னும்
278

"புன்னகை செய்யு மிந்தப் பூவிதழ் என்ன வாகும்
கன்னமென் கனிகள் அந்தோ! கொள்வதென் பாடோ உன்றன்
மென்னிடை ஒடியப் போமோ மலர்க்கரம்....." எனத்தொ டங்க
தன்விழி சுழற்றிப் பெண்ணாள் "சீபோடி" எனக்கு னிந்தாள்
279

"வெள்குவாய் இன்று மட்டும் விண்ணேறும் நாளை" என்றே
கள்ளக்கண் பார்வை கூட்டிக் கொஞ்சுவா ளொருத்தி கேட்டு
உள்ளமே குலுங்க ஆசை உன்னிடப் பொறுக்க மாட்டாள்
"தள்ளடி" என்றாள் பொய்யாய்ச் சீற்றமுற் றாளே போன்றாம்
280

ஒன்றொன்றாய் ஒவ்வொ ருத்தி உரைப்பனள் கேலிப் பேச்சுச்
சென்றநாள் நினைவ னைத்துஞ் சேர்ந்துமீழ் பிறவி கொள்ளும்
கன்னியர் ஒன்றின் கொள்ளும் குதூகலம் மணநா ளன்று
முன்னிலும் விஞ்சி நிற்க மகிழ்ச்சியின் உச்சஞ் சென்றார் 281

மணமகன் மணக்கோ லத்தில் மணவரங் கலங்க ரிக்க
அணிகலன் வீர மார்பில் ஆண்மையின் கோன்மை காட்ட
இணையுறத் தனிமை கொல்லும் இன்பத்தில் வதனம் அப்போழ்(து)
திணைகரம் விடுத்த செம்மைத் தாமரை தோற்கும் பாங்கே
282

தந்தையோர் புறத்தும் வீரத் தோள்த்துணைப் பேர்பு றத்தும்
புந்திசால் மதிசொல் பேர்கள் மதப்பெரி யோர்கள் மற்றும்
தந்தைதாய்ப் புறத்தோர் பெண்ணின் தரத்திருந் தனைத்துப் பேரும்
சந்தித்தாங் கிருந்தா ரந்தச் சபையினுக் கானோர் முற்றும்
283

சட்டத்திற் கமைய மார்க்கச் சீர்மைக்கு உட்பட் டாக
பெட்புற அனைத்தும் செய்தார் பெண்ணுக்காம் "மஹர்"உம் தந்தார்
கட்டாயம் "வொலி"சொல் லல்பெண் கொடுப்பவர் தரத்தில் தந்தை
கட்டாயர் செய்தார் சாட்சிக் கையொப்ப மீர்பே ரிட்டார்
284

("மஹர்": மணமகன் மணப்பெண்ணுக்களிக்கும் கட்டாயத் தொகை)
("வொலி" : மணப்பெண்ணின் தந்தை மணமகனுக்குத் தனது மகளைக்கையளித்தலுக்கான வாக்குமூலம்)

சடங்குகள் அனைத்தும் முற்றித் தெருவழி ஊர்கோ லத்தின்
தொடக்கமாய்க் கரியின் மீது திப்புவெண் குடையின் கீழே
மிடுக்கொடும் அமர்ந்தி ருக்க மன்னவர் ஹைதர் செல்வன்
அடுத்தணி சேர்ந்து வந்தார் ஆண்மையின் பிறப்பாம் போன்றே
285

வீதிகள் தோறும் மக்கள் வாழ்த்தொலி வான்மு கட்டை
மோதிய தாமோ வென்ன விண்டெழுந் திடத்தம் மாடம்
மாதிளம் பேர்கள் கூடி மறைத்துமே வதனங் காட்ட
மாதுளங் கனிகள் காய்த்த மாடங்க ளொக்கக் காணும்
286

கூடினர் ஆண்கள் வீதி கொண்டிட மாட்டா வாறே
ஆடவர் பிரிவி லெல்லா அணியிலுஞ் சேர்ந்தி ருந்தார்
தேடிடற் கரிதே தம்மைத் தவறவிட் டகன்ற பேரை
ஈடிலை இதற்கோர் வேறு எஃகிய சும்மைக் கூட்டம் 287

போக்கிடம் நோக்கார் நோக்கிப் போமிடம் போவோ மென்றே
தேக்கிய உணர்வி னோடு தெரிகிலார் செல்லுந் திக்கை
வாக்கிலை திரும்பு தற்கும் விடும்மூச்சைப் பெறுதற் கும்போல்
தேக்கிய இடத்தில் தேங்கித் தகைந்தனர் துணிந்தே வந்தோர்
288

கைதனை யுயர்த்தி வீதி கண்கைது செய்த பேர்க்குப்
பொய்யிலா முறுவ லோடு பதிலுக்கு அசைத்துக் காட்டி
வையத்தின் பேறா யுற்ற வள்ளலர் மக்கள் செல்வர்
பையமுன் நகர்ந்தார் மக்கட் பெருங்கடற் பிளவி னூடே
289

மாடத்தி லிருந்து மாதர் மலரள்ளி வீச வாசற்
கூடத்தி லிருந்து மூத்தோர் குலுக்கினர் பன்னீர் ஆங்கு
வாடிடாப் பூவின் வாடை வீசிய பன்னீர்க் கந்தம்
கூடின விரண்டு மொன்றிக் கடைவீதி மணக்கச் செய்யும்
290

கொம்பன்மீ தம்பா ரிப்பல் லாக்கினில் ஆரோ கஞ்செய்
நம்பியைக் காண வெங்கும் நங்கைய்யர் நிறைந்தார் மாடிக்
கும்பலோ பிஞ்சி ளம்பேர் கட்டவிழ்ந் திடாத மொட்டுத்
தும்பிகள் பார்வைப் பூவைத் தூவினர் திப்பு மீதே
291

மணமகள் இல்ல டைந்தார் மணமகன் மலர்கள் தூவி
அணிவகுத் திடையாற் செல்ல அரும்புகள் குழந்தைப் பூக்கள்
பணித்தன தலையைச் சற்றுப் போகவென் றிடம ளித்தே
கனிந்தன இதழ்கள் திப்பு கண்களித் திட்ட பாங்கே
292

இளமையில் உயிரைக் காத்த ஏந்திளை 'றுகையா பேகம்'
வளர்ந்தெழிற் குமரி யாகி வண்ணச்சித் திரம்போல் மஞ்சம்
மிளிர்ந்தனள் கண்டார் திப்பு வான்மதி படாம்போர் வைக்குள்
உள்ளுறைந் திருத்தல் போலாம் ஒளிர்முகம் உடல்சி லிர்த்தார்
293

குனிந்ததன் தலையைத் தூக்குங் கருத்துள்ளத் திருந்தும் நோக்காள்
பனித்தன வியர்வை முத்து பரல்களும் பாவை நெற்றி
தனித்ததன் நிலைமை எண்ணித் தவித்ததோ உடல மன்றி
இனித்ததோ வேளை யந்த இளையவன் சுவாசம் பட்டே 294

வரவறிந் தாளே வாசல் விரிந்திடும் ஒலியி னாலே
ஒருவரே உள்நு ழைந்த உணர்வவள் நெஞ்சுள் பூத்தும்
அரவமற் றருகில் வந்த தறிந்திலாள் தன்னுள் பொங்கி
விரவிடும் புதிய தீயின் வீரியந் தோய்ந்தாள் சாய்ந்தாள்
295

வெள்கினள் என்றே எண்ணம் விளைந்தது மனத்துள் உண்மை
வெள்கிய தாலும் வந்தோன் வரித்தலும் சமமாய் வேண்ட
கள்மலர் வண்டுக் கென்று கரமொடித் திடும்போல் காணும்
உள்ளுறை எண்ணம் வேறும் உண்டதோ தேர்வார் யாரோ
296

மூடிய விழிகள் தோன்றா வாகினில் அங்கை பொத்த
நாடிய கரங்கள் மெல்ல நாங்கைகைப் பின்னல நீக்குந்
தோடுடைச் செவிகள் மட்டும் தொடர்ந்திடும் நயனம் மெல்லக்
கூடுடைத் திதழ்கள் பூக்குங் கருவிழி துடிக்கக் கண்டார்
297

அச்சத்தின் பாங்கோ அன்றி ஆண்மைக்கை பற்ற லாலே
இச்சித்த உணர்வோ வேறு என்னதான் புதுமை யஃதோ
பச்சிளம் பிள்ளை பாராப் புதிதொன்றை பார்த்த வாறே
உச்சிதொட் டுடலம் முற்றும் ஒன்றிட வியர்த்த தென்னே!
298

பருவம்வந் துற்றகாலப் போழ்திருந் தின்று மட்டும்
ஒருபிற ஆட வர்தம் ஒருவிரற் பரிச மேனும்
அறிந்திலாப் பெண்ணாள் ஆங்கோர் அங்கையின் அள்ளல் கொள்ளப்
புரிந்திட மாட்டாத் தேகப் பதட்டத்துள் புதையுண் டாளே
299

நீண்டநாள் காணா துற்ற நிலவினைக் கண்ட அல்லி
பூண்டதாம் மகிழ்வு போலப் புளகமும் பற்றி யென்ன
வேண்டாத அச்சம் தோன்றி வஞ்சியைக் கொன்ற தப்போழ்(து)
ஆண்மையின் வேகம் அன்னாள் அச்சத்தைத் தன்னுள் வாங்கும்
300

பிஞ்சிளம் பருவந் தன்னில் படகடித் துறையி ராப்போழ்(து)
அஞ்சிடா துற்றுத் தம்மின் அகட்டழல் கொன்ற பெண்ணாள்
தஞ்சமென் றானா ளின்று திப்புதன் சொந்த மேற்றார்
செஞ்சோற்றுக் கடன் கழித்த சீலமென் றாதல் போன்றே 301

அருகினில் அமர்ந்தார் பூமி ஆய்ந்திடும் வதனந் தன்னை
ஒருகரத் தேந்தி தன்பால் உயர்த்தினார் வெள்கி மீண்டும்
நெருங்கின இமைகள் மூட இடங்கொடார் மணப்பெண் நோக்கி
முறுவலித் திருகை பற்றி மறுகணம் வார்த்தை கோத்தார்
302

"என்னருந் தேவி " என்றார் "ம்"என்றாள் இளமான் மெல்ல
கன்னங்கள் சிவக்க நாணம் கொலுமுற்றுங் கொண்டாள் போன்றே
"பின்னமென் பேச என்மேல் பற்றிலை யாமோ" என்றார்
தன்னிலை மறந்தாள் எட்டிச் சொன்னவாய் மூடி னாளே
303

"ஏனிது வாறாம் வார்த்தை யார்பற்றொன் றிலையா மென்றார்
நானுங்கள் சொந்தம் என்மேல் ஏன்பழி வேண்டும்" என்றாள்
தேனினில் குழைத்த செற்கள் தெறித்தவக் கணமே வாய்ப்பாய்
ஆனது ஏக்கங் கொண்ட இளவலுக் கிரண்டற் றாரே
304

இரண்டாவது மைசூர்ப் போர்

கங்குல்வர வெண்ணினனோ அச்சங் கொண்டு
கதிரொடுக்கி வெறியடங்கி மெல்ல மெல்லச்
செங்கதிரோன் மேற்குவானில் ஒளிந்து கொள்ளத்
தயார்நிலையில் தனைநகர்த்தித் தீத்துண் டம்போல்
மங்கியழிந் திடுமுன்னே சுடருந் தீநா
மாறனைய வாகுசெய்தான் அவ்வா றோர்நாள்
"சங்காமக்" கணவாயில் கண்ட காட்சி
சரித்திரத்தை மாற்றமுதற் தொடக்க மாகும்
305

பகலெல்லாங் காய்ந்தகதிர்ச் சூடு மண்ணில்
படிந்தநிலை மாறாது தகித்த வேளை
திகைத்திடுமால் வான்வெடித்துச் சிதறும் பாங்கில்
திசையெட்டும் செவியொடுக்கும் ஒலியைக் கேட்டார்
புகைமூட்டம் கணவாயின் புறத்தி லெல்லாம்
பரவியவா றெங்கணுமே இருளாய்க் காட்ட
வகைந்ததென்ன காரணமோ வீறு கொண்டு
வந்தபெருஞ் சேனையின்பால் விளைந்த தென்பார் 306

குறும்பறையின் அறைத்தலொலி செவியுட் புக்கிக்
கூறியது சமர்க்களத்தை ஆட்சி செய்ய
வரும்படையின் சங்கதியை வெற்றி முன்னே
வரித்ததுபோல் வாழ்த்தொலியும் விண்ணை மேவும்
அறிந்திலையார் புறத்திருந்தே அடலர் நோக்கி
அடிநகரும் படையதுவா மென்றே பார்வை
திறந்தாலும் தெளிவில்லா நிலைமை ஓங்கும்
செம்புழுதி மண்டலத்தால் கண்கள் மாங்கும்
307

பலநூறு குதிரைகளின் குளம்பின் ஓசை
பேரிடிபோல் ஒன்றியந்தப் புறத்தை ஆள
கொலைவெறியோ டாங்கவற்றின் மீது வீரர்
கடுகினரே கணவாயின் தலத்தி னூடே
அலைகடலோ அணையொடித்துப் பெருகும் ஆற்றின்
அடக்கவொண்ணாப் பெரும்புனலோ அதற்கும் மேலோ
இலையொன்றாம் உவமிக்க என்னே! யந்த
ஏற்றமிகு மனுத்திரள்வின் வாக தாமோ
308

வீரமிகு பரிகள்கண் நோக்கு தற்கு
வச்சிரத்தால் வார்த்தெடுத்த வண்மை காட்டும்
போருக்கு அஞ்சாத வீரர் தங்கும்
பெருமையினால் குதிபதியா துன்னும்: தாங்கும்
வீரர்தம் புயபலத்தைப் பிறர்க்கு ஓதும்
வாகிலவை காலுயர்தி விண்ணில் தாவும்
தோர்வாரவ் வீரர்கள் அவற்றை ஆளும்
தந்திரத்தைச் சேணத்தை இறுக்கி னாரே
309

பரிகளிலே வரும்வீரர் இடையில் வாளும்
பொருதுகையில் வாள்தடுக்க கேட யம்மும்
ஒருகையில் நீண்டகர ஈட்டி யும்தம்
உயிர்காக்கும் கவசமும்மார் பணிந்தி ருந்தார்

கரிவாயில் பட்டகரும் பாகு மன்னார்
கைப்பட்ட எதிரிகளும் உயிர்பி ளைக்கார்
பெருவீரர் பயிற்சிமிக்கார் பொருதும் போரில்
பங்கிவர்க்கு முதன்மைநெஞ் சுரங்கொண் டோரே
310

இடையிடையே கரிகள்தனித் தனியாய்க் குன்றம்
அசைந்தணியில் நகர்ந்தனவாம் போலு மாக
படைவீரர் தமைமுதுகில் தாங்கி ஓங்கும்
பிளிறலொடு வீறுநடை பயிலும் கூட
வெடியுண்டை கோத்தெடுத்த மாலை மார்பில்
வலமிடமாய் தொங்கத்தம் நெஞ்சு யர்த்தி
நடைவீரர் துப்பாக்கி தோளில் தாங்க
நீண்டகன்ற வரிசைகளில் பின்தொ டர்ந்தார்
311

நீண்டகுழாய் கொண்டபெரும் பீரேங் கித்தேர்
நுழைந்ததனுள் பின்பீறும் கற்பே ருண்டை
வேண்டுமிடம் குறிவைத்துத் தாக்க வல்ல
வன்மைமிகு ஏவுகணை வெடிம ருந்தும்
ஊன்வேண்டின் உண்பதற்கு ஆடும் மாடும்
ஒட்டகையும் சமைத்துண்ணப் பேரண் டாக்கள்
வேண்டுவன அத்தனையும் குறைவில் லாதே
வரித்திருந்தார் திங்கள்பல தேறும் வாறே
312

உண்பதற்காம் உணவுபொதி பொதிக ளாக
உடன்சுமந்து வந்தனவாம் ஏற்று வண்டி
ஒன்றிரண்டோ இல்லைப்பன் நூறு நூறாம்
இணைந்தனவவ் வாறாக ஆயு தங்கள்
கண்ணெட்டாத் தொலைதூரம் தொடர்ந்த தஃது
கண்படுகால் கலங்குவரே பகைமைக் கூட்டம்
பின்தொடர்வார் ஏவல்செய் பணியா ளர்கள்
பிணிக்குதவும் மருத்துவரும் பிறபே ரும்மே 313

வெண்ணரபிக் குதிரையின்மேல் படையின் முன்னே
வந்ததொரு சிம்மமற்றன் நெஞ்சு யர்த்திக்
கண்ணிரண்டும் கூரம்பின் வாகி னோடு
கட்டுடலோ இருப்பையெள்ளி நகைக்கும் பாங்காம்
திண்மைமிகு கரத்தில்சேண் அரையில் போர்வாள்
தோளிரண்டின் இடையில்பின் புறத்தே தேகம்
புண்ணடையா வாறகற்றும் வட்டக் காப்பு
போரணியோ வீரத்தின் பேரு ரைக்கும்
314

வயதறுப தானதென்ற போதும் தோற்றம்
வாலிபத்தைத் தாண்டாத வன்மை காட்டும்
புயபலத்தின் கோன்மையினைச் சரிதம் கூறும்
பொன்றாத புகழவர்தம் பொற்பைப் பேசும்
அயராத முயற்சியினை மண்ணைக் காக்க
அடலருமே விதந்துரைப்பர் ஆட்சி நேர்மை
நியாயத்தின் பாற்படுமாம் வெள்ளைப் பேரை
நிர்மூல மாக்கலொன்றே நோக்காய்க் கொண்டார்
315

அருகினிலே மக்களிரு பேரும் வந்தார்
அரியணையின் வாரிசெனுந் திப்பு வோடு
கரீம்இளையான் தந்தைக்குக் காவ லொக்கும்
காரணராய்த் தோன்றினரே அவரி னோடு
பெருவீரர் காதிர்கான் பூரணய்யா
படைநடத்துந் தளகர்த்தர் பலரும் வந்தார்
மருவலரின் உயிர்குடிக்கத் துடிக்கும் வேகம்
முற்றுமவர் முகங்களிலே துலங்க லாச்சே
316

ஆயிரத்து எழுநூற்று அறுபத் தொன்ப
தாண்டுமுதற் போரினிலே ஹைதர் மன்னர்
நேயவுடன் பாடுசெய்தார் வெள்ளை யோரை
நெருங்கவைத்த போதினிலும் நயவஞ் சர்கள்

வாயளவில் பேசியதோ டன்றி முற்றும்
வழிகடந்தார் வெறிகொண்டார் மன்னர் பின்னே
வாய்த்தபழி தானிரண்டாம் மைசூர் யுத்தம்
வரலாற்றில் தந்தைமகன் பேர்ப திக்கும்
317

ஆயிரத்து எழுநூற்று எழுபத் தெட்டில்
"ஆரணி"சேர் "காஞ்சிபுரம்" "பரங்கிப் பேட்டை"
வாய்த்ததுடன் "திருவண்ணா மலை"யுங் கூடி
வெற்றிகொண்ட ஹைதரிடம் வெள்ளை யர்கள்
நோயுற்றுப் போனார்கள் மனத்தின் போரால்
நேர்ந்தவெற்றி திப்புவுக்கும் உரித்த தாகும்
ஓயாது யுத்தகளங் கண்டார் தந்தை
உடன்பட்ட மகனும்பின் னவர்போ லானார்
318

பத்தாயி ரம்வீரர் தம்மோ டொன்றப்
படைநடத்தி இரண்டாண்டின் பின்னர் சுல்தான்
வித்திட்டார் வெற்றிக்குக் "காஞ்சி" நோக்கி
வந்த"கேர்ணல் பெய்லி"தனைத் தடுத்த தாலே
அத்துடனே "பொழிலூரில்" அவனோ டொன்ற
அதிகாரி யானபல பேர்க ளையும்
மொத்தமாகக் கைதுசெய்து சீரங் கத்தின்
மனுச்சிறைக்குப் பரிசளித்தார் தாதை யேற்றார்
319

சிறியதொரு படையோடு வருவ தாகத்
தெளிவற்றே இருந்தார்கள் வெள்ளை யர்கள்
அறியார்கள் தந்தைபால் வீரர் பத்தின்
ஆயிரம்பேர் பின்வந்து சேர்வார் என்றே
சிறுதொகையென் றெண்ணியதைத் துவம்சம் செய்யும்
துணிவுடனே காத்திருந்தான் "கேர்ணல் பெய்லி"
பொறுமையற்ற திப்புபடை வருங்கால் மட்டும்
பொறுத்திருக்க மாட்டாராய்ப் போர்தொ டுத்தார் 320

"காஞ்சிபுரத்" தருகிருந்த 'பேரம் பாக்கம்'
களமாகிப் போனதன்றாம் இருப டைக்கும்
வாஞ்சைகொண்டு வேட்டைப்பொருள் மீது பாயும்
வேங்கையென வெள்ளையர்மேல் பாய்ந்தார் திப்பு
பூஞ்சையிலே ஒட்டுண்ட பூச்சி கள்போல்
பரிதவித்தார் வெள்ளைப்படை வீரர் மந்தி
பூச்சரத்தைப் பிய்த்தெறிதல் போல மைசூர்ப்
போர்வீரர் பறங்கியரைப் பழிதீர்த் தாரே
321

சிறுபொடியன் என்றேதான் எண்ணி னோம்நாம்
சிறிதேதான் படைகூட வெனவி ருந்தோம்
சிறுவனல்ல திப்புபெரும் புயலா மெம்மைப்
பஞ்சுபஞ்சாய்ப் பிய்த்தெறிந்து வெற்றி வாகை
பெறுநிலைக்கு வந்துவிட்டார் தோல்வி எங்கள்
பக்கந்தான் என்றாலும் எஞ்சி யுள்ளோர்
சிறுதொகையே நாமேனுந் தப்பு தற்குத்
தக்கவழி செய்கவெனச் சேதி சொல்லும்
322

"பெய்லி"யிடம் பெற்றசேதி "முன்ரோ" விற்குப்
பேரதிர்ச்சி தந்தாலும் தாம தித்தால்
கைவசத்தில் உள்ளவரும் கைக டப்பர்
கண்டறியாத் தோல்வியினைக் காண நேரும்
செய்யவுண்டு சிறுபடையொன் றனுப்ப லொன்றே
செயல்பட்டான் "முன்ரோ"வாம் தளகர்த் தாவென்
செய்தாலும் பயனற்றுப் போகு மென்றே
தேராதான் அனுப்பிவைத்தான் சென்ற டைந்தார்
323

இருந்தவரோ ரொண்டவந்தோ ரனைத்துப் பேரும்
இரையானார் வாளீட்டி வில்லம் பிற்கும்
பெருந்தொகையாய்க் கொன்றொழிக்கும் பீரங் கிக்கும்
பலவகையாம் 'துவக்கு' 'கைத் துப்பாக் கி'க்கும்

தெரிந்தில்லான் "பெய்லி"யாங்கு நடப்ப தெஃதும்
செங்குருதிக் காட்டாற்றில் தமது வீரர்
சரிந்தழியும் வாகினையும் தலைகா லற்றே
சிதறுண்டு போவதையும் தியங்கிப் போவான்
324

யுத்தத்தின் வழிமுறையை மாற்றி மாற்றி
உகந்ததெதாம் அவ்வப்போ தெனவ றிந்தே
யுக்தியுடன் படைநடத்தி எதிரிப் பேரை
எதிர்கொள்ள மாட்டாதே பதறச் செய்த
வித்துவத்தைப் பார்த்தவெள்ளைப் பறங்கி யர்கள்
வீரமொடு விவேகமும்தன் வயமாய்க் கொண்ட
இத்தகைப்பேர் கண்டதில்லை எனவி தந்தார்
இயலாமைக் குட்பட்டார் இழிவுற் றாரே
325

ஆட்டுமந்தைக் குட்பட்ட சிறுத்தை போலும்
அலறவவர் துடிதுடிக்க வாள்சு ழற்றிக்
காட்டியதென் சாகசமோ திப்பு சுல்த்தான்
கண்ணிமைப்புள் பன்னூறு பேர ழித்தார்
வேட்டுவர்கைப் பட்டசிறு முயல்கள் போல
வெள்ளையர்கள் துடிதுடித்தார் மைசூர் வீரர்
மேட்டிமைப்போர் ஆளுமையை வார்த்தை கூட்டி
மொழிவதற்கு மொழியுண்டோ மொழியொன் -
றில்லை 326

போர்தொடங்கி நாளிரண்டு கடந்த போது
பேரழிவில் புதைந்திருந்தார் வெள்ளை யர்கள்
வேரறுந்த நிலையவர்க்கு "முன்ரோ" தம்பால்
வரவளைத்தான் மற்றுமொரு படையை ஆங்கே
காரழிந்த நிலைகொண்டார் விளக்கம் போல
கண்ணுற்ற படையதனால் வெள்ளை யர்கள்
தாரணிந்த மார்பனுக்குத் தந்தை பேரால்
சேர்ந்தபலம் அறிந்ததுமே சோர்வுற் றாரே 327

செத்தழிந்தோர் தொகைபோக உயிருக் காகத்
துடிதுடித்தோர் பலநூறாய்த் தவித்தார் வேட்டை
மொத்தத்தில் தம்பக்கம் ஆன போதும்
மனமகிழ்ச்சி யுறவில்லை திப்பு சுல்தான்
கத்துகுரல் வேதனையின் பாற்பட் டாளக்
கடையொலியில் முனகுகுரல் தாகத் தாலே
சத்தமின்றி அனுகுகுரல் நெஞ்ச முத்தச்
சோகத்தால் மனமுருகித் தவித்திட் டாரே
328

வேதனையின் பாற்பட்ட மகனை நோக்கி
வருத்தத்தின் காரணத்தை வினவத் திப்பு
ஏதுவதற் கின்னதென்று இயம்ப ஹைதர்
எடுத்துரைப்பார் யுத்தத்தில் இதுதா மென்றே
சாதனையொன் றியற்றியுள்ளீர் தருக்கர் கூட்டம்
தந்தவறை யுணரவைத்தீர் நாமா யன்னார்
மீதுகொண்ட யுத்தமல்ல நம்மை நோக்கி
வலிந்தவர்கள் தொடுத்ததென விபரஞ் சொன்னார்
329

யுத்தத்தின் கதியிதுதான் என்றிட் டாலும்
உயிரழிவை எண்ணிடுங்கால் வருத்தம் நெஞ்சைக்
குத்தியது என்றிட்டார் தந்தை சொல்வார்
காரணரே நாமில்லை எனவாம் மீண்டும்
எத்தகைதான் காரணங்கள் என்றிட் டாலும்
இதயமொன்று வுண்டல்லோ நமக்கு மென்றார்
சத்தியத்தைக் காப்பதெனில் செயலி லொன்றுந்
தவறில்லை எனப்புகன்றார் தந்தை சென்றார்
330

மன்னுயிரைப் பறிப்பதுவே வெறியாய்க் கொண்ட
மறக்களத்தில் இதுவன்றி வேறொன் றுண்டோ
துன்புற்றோர் தம்மவரோ டெதிரிப் பேரும்
சேர்ந்திருந்தார் சிகிச்சைக்காய் வேண்டி நின்றார்

அன்னியர்கள் பகைவர்கள் என்றிட் டாலும்
ஆகுநிலை இருபேர்க்கும் ஒன்ற தாலே
தன்னவர்க்கும் அன்னவர்க்கும் மருத்து வத்தை
சமமாகச் செய்கவென ஆணை யிட்டார்
331

மைசூரின் மருத்துவர்கள் காய முற்றோர்
மீதவர்தம் கடமைகளை முறையாய்ச் செய்தார்
மெய்யுதவி செய்வோரும் முழுமை யாக
முன்னின்றார் வேண்டியன முற்றுஞ் செய்தார்
செய்வதெலாம் சீரியதாய்ச் செய்ய வேண்டித்
தேவைகொண்ட அத்தனையும் தரப்ப ணித்து
மெய்வருத்தம் நோக்காதே திப்பும் அந்த
முதலுதவிப் பணிகளிலே முன்னின் றாரே
332

கும்பகோணத் தருகில்"அன்னக் குடி"யில் வெள்ளைக்
"கேணல்-பிரய்த் வைட்"டைவென்று கைது செய்தார்
தம்மோடு பிடியுண்ட நூறு வெள்ளைச்
சிப்பாய்கள் இந்தியர்கள் ஆயி ரத்தோர்
சும்மையுறும் ஆயுதங்கள் தளவா டங்கள்
சேர்த்தெடுத்து சீரங்கம் கொண்டு வந்தார்
அம்மட்டோ டல்லாது வெள்ளை யர்கை
ஆன"சித்தூர்" திப்புகரம் ஆகிற் றன்றே
333

பிடியுண்டோர் "ஹைதர்"முன் கொணர்ந்த போது
பேசிடுவான் "முன்ரோ"வவர் தம்மை நோக்கி
"அடைந்தாலும் மகன்வாகை என்றிட் டாலும்
அதில்பெரிதே எம்மையவர் கதிக லக்க
விடுத்தயுத்த வழிமுறைகள் விந்தை" என்றே
வாயார விபரித்தான் வைரி யாயும்
பிடிக்கரத்துள் நின்றிட்ட போதும் மெய்யைப்
புகன்றிடும்வா றானநிலை பெற்றிட் டானே 334

முடிவுற்ற தாமிரண்டாம் மைசூர் யுத்தம்
மங்களூர் உடன்படிக்கை யோடு அஃதே
அடிபற்றி வெள்ளையர்கள் இந்தி யாவின்
அரசர்தம் நிபந்தனைக்கு வந்த தொன்றாம்
கொடியுயர்த்தித் தன்மானம் காத்த பேற்றைக்
கொண்டதது மாத்திரமே திப்பு சுல்தான்
விடிவெள்ளி போல்துலங்கி வாழ்ந்த கால
வரலாறு அதுவாகும் வீரம் பேசும்
335

ஹைதரின் இறுதிக் காலம்

ஆர்க்காட்டின் வடக்கே ஈரெண் ஆகுகற் றொலைவில் தன்பாற்
சேர்'**நர சிம்ம ராயன் பேட்டை**'யின் பாச றைக்குள்
பாராண்ட வீரர் ஹைதர் படுக்கையிற் புரண்டார் மற்றோர்
ஊர்ந்தனர் உயிரற் றோராய் உளங்களுஞ் செத்த பாங்கே
336

இராஜர்க்கு இராஜ ராக இராஜங்கம் செய்த சிங்கம்
இராஜப்பி ளவ்வை கண்டு இணங்கொணா வலியி னாலே
நிராயுத பாணி மாற்றான் நைதலின் கொடுமை கண்டுந்
திராணியற் றெதிர்க்க மாட்டாத் தன்மையில் ஹைதர் சோர்ந்தார்
337

ஓய்விலாப் போர்க களாலே உடல்வலுக் குன்றாப் போழ்தும்
நோய்தரு வேத னைக்குள் நொடிந்ததன் நிலைமை 'வல்லோன்
காய்வன னாகில் வென்று கடைத்தேற மாட்டா' வென்மெய்
தோய்ந்திட இறைபா லச்சம் செறிந்திட ஹைதர் ஓர்ந்தார்
338

தனக்கிஃது இறுதி என்னுந் திடமுளஞ் செறியத் தம்மின்
தனயனைக் காணு மாசை துளிர்விடும் சணத்துள் ளோங்கும்
நினைவறும் பின்னுந் தோன்றும் நயனங்கள் மகனைத் தேடும்
கணம்நெடும் பொழுதாய்க் கொல்லும் கையறு நிலைபோ லுண்டோ
339

தனக்குமுன் நிற்பான் செல்வன் தாமென ஒருகா லெண்ண
மனக்கவ லழிந்தார் போல மன்னவர் வதனம் மாறும்
முனங்கிடும் அதரம் திப்பு வாவென அழைப்பார் போன்றே
கனத்தன உள்ளங் கண்டோர் கண்களுங் கலங்கிற் றாமே
340

மெய்வலி தாங்க மாட்டா வேகமுட் பொதிந்தே கொல்லச்
செய்திற னற்ற மேனி துவண்டிடும் கண்கள் பெய்யும்
பொய்யுடல் இதுவாம் நெஞ்சப் பலமதற் கில்லை யென்னும்
மெய்தனை உணர்த்தும் பாங்காய் மாவீரர் துன்பந் தோய்ந்தார்
341

வந்தனோ மகனென் றேங்கும் வாகினில் விழிகள் பேச
மந்திரி 'பூர்ண ஐயா' மன்னரின் அருகி லேகி
வந்திடல் கூடுஞ் செய்தி விரைந்ததாம் எனவாய் சப்பப்
புந்தியிற் றுலங்கி னாற்போல் பிரிந்தன நயனப் பூக்கள்
342

அருகினி லமர்ந்த தம்மின் அமைச்சரின் கைகள் வாங்கிக்
கருவிழி சுழற்றி நோக்கிக் கனிந்தமென் முறுவல் காட்டி
உருகியே வீழ்ந்த முத்துத் துளிகளுங் கன்னம் வீழக்
குரலறு நிலையில் பேசுங் குறியினால் அதரம் விம்மும்
343

புரிந்ததென் கூற வேண்டும் பொருளெனப் புகலாப் போழ்தும்
'அருந்தவப் புதல்வன் உன்பால் அடைக்கலம் இனியா' மென்ப
வருந்திடல் வேண்டாம் உங்கள் விருப்பமென் பொறுப்பா மென்றார்
புரிந்ததோ இலையோ கண்கள் பூரித்த நிலைமை கண்டார்.
344

தினமட லொவ்வொன் றாகத் தன்வழி யுதிரும் மன்னர்
மனமுட லிரண்டும் சோர்ந்து முற்றுமே செயலு மற்ற
வினைபடத் துயின்றார் சுற்றி வளைத்தொரு சிலரும் நின்றார்
தனைவிடுத் துடலம் நீங்கிச் சென்றதே ஆவி மீண்டே
345

பற்றிய கரத்தில் நாடி புலப்படா திருக்கக் கண்கள்
முற்றிலுஞ் செயலி ழந்து மடலகல் நிலையில் ஊன்றச்
சொற்பல மற்றார் தம்மின் திறன்பொய்த்த மருத்து வர்கண்
உற்றதும் உரைக்க மற்றோர் உணர்ந்தனர் உண்மை ஓர்ந்தே 346

பதினேழு நூறின் ஆண்டு பத்தெட்டோ டிரண்டுங் கூடி
உதிர்ந்தகால் "டிசெம்பர்" திங்கள் ஒன்றிய நாளில் ஹைதர்
விதிமுடிந் திறைபா லேகி விண்படு சொர்க்கங் காண
புதியதோர் பகலோன் தோன்றப் பாதைவிட் டகன்றாற் போன்றே
347

உடன்மக னில்லாப் போழ்தில் உற்றவந் நிலையை மற்றோர்
உடனறி வாரே யாயின் உறுநிலை தெளிந்த பேர்கள்
கடனென நினைந்தார் யாருங் காதுகொள் வாகு நீக்கக்
குடமொழித் திட்ட தீபங் காணுமாம் மறைத்திட் டாரே
348

யாருமே அறியா வாறே இருள்மையுள் சேதி தோய்த்த
காரணம் பொல்லார் கூடிக் கலவரம் செய்தல் கூடும்
நீர்மடை யொடித்துப் பாய்ந்த நிலவர மாகும் தீதே
சேருமென் றாங்கி ருந்தோர் தம்வழி மனம்பு தைத்தார்
349

தூதுவர் பலபேர் தத்தந் தனிவழி பறந்தார் செய்தி
ஓதிடத் திப்பு கொண்ட தலமொன்றே குறிய தாகும்
யாதெனுந் தீங்கு தோன்றி இடைவழித் தஞ்ச மானால்
ஏதொன்று கிடைக்கும் என்ற எண்ணத்திற் பலபே ரானார்
350

புலியின் வருகை

கருக்கிய உருக்கைக் காதுட் கொட்டிய கொடுமைக் கொப்ப
உருக்கிய தாகும் செய்தி ஒன்றிய நொடியில் தேகம்
சுருக்கியோர் சாணாய்க் குன்றிச் செயலழிந் துறைதல் போல்வாம்
ஒருக்கணம் உயிரே யற்ற உணர்வினைத் திப்பு கொண்டார்
351

பிரிந்ததாம் உயிரென் றோலை புகன்றிடு சேதி நெஞ்சிற்
பொருந்திடா வாறே அஃதோர் பொய்யென மறுத்தொ லிக்க
வருந்தலும் மாற்றும் வேறாய் வந்துளப் பதியில் சிக்கிப்
புரிந்திட மாட்டா துற்றார் பலமுறை உறுதி செய்தார் 352

தாமதம் தவிர்த்தல் வேண்டித் தாவின படைகள் தங்கால்
பூமியிற் பதியா வேகம் பெற்றன புரவிப் பேய்கள்
சாமங்கள் பலக டந்தே தொடந்துதம் வழியைப் பற்றி
ஈமக்க டன்கள் செய்ய எதிர்கொண்டார் பக்க லன்றே
353

வாகைகொண் டன்னை மண்ணை வந்தடை போதி லெல்லாம்
தாய்க்கரம் அணைத்த லொப்பத் தாதையே நெஞ்ச ணைத்து
தோய்களி கண்ணிற் பொங்கச் செய்திடு வரவேற் பொன்றின்
வாகிலா நிலைமை நெஞ்சை வாட்டிடத் திப்பு நின்றார்
354

அமைச்சராம் 'பூர்ண ஐயா' அழைத்தவர் தம்மை யுள்ளே
இமைப்பொழி நிலையி லுற்ற ஏந்தலி னருகிற் சேர்க்கத்
தமையொரு கணத்துள் இல்லாத் தன்மையிற் சமைந்தார் திப்பு
தமைத்தனித் திறைபா லுற்ற தாதையை யெண்ணிச் சோர்ந்தார்
355

தனியொரு வீர ராகச் சிறுபடைத் தலைவ ராக
இணையிலாப் பெருஞ்சே னைக்கோர் ஈடிலா முதல்வ ராக
எனப்பல தகைமை கொண்டு ஈற்றினில் மைசூர் மண்ணின்
சனத்தினை ஆளும் பேற்றைத் தரவேற்றுக் கொண்ட தீரர்.
356

மலையொன்று புரண்டு மண்மேல் மல்லாந்து கிடத்தல் போலும்
சிலையெனப் பஞ்ச ணைமேல் சரிந்தவர் கிடந்த காட்சி
அலைகடற் சேனை கண்டும் அஞ்சிடாத் திப்பு நெஞ்சை
நிலைகுலைந் திடச்செய் கோலம் நிமலனின் விதியென் றாகும்
357

தாமொன்று நினைக்கத் தெய்வந் தானொன்று நினைத்த வாறாய்ப்
பூமியாள் பொறுப்பைத் தந்தை பால்பயில் வேண்டு காலம்
தீமைசூ ழுலகிற் றன்னைத் தனித்திடச் செய்த கன்ற
பான்மையை எண்ணி நெஞ்சுட் புழுங்கினார் மன்னர் மைந்தர்
358

மந்திரச் சுற்றத் தாருள் முதல்வராம் "பூர்ண ஐயா"
வந்தவ ரருகில் நின்றார் வாய்புதைந் தெதுவுச் சொல்லார்
செந்தழல் விழிகள் உள்ளச் சோகத்தின் இமயங் காட்டத்
தந்தைபால் செறிந்த பாங்கைத் திருப்பினார் அமைச்சர் நோக்கார்
359

இளவலின் அருகிற் றம்மின் இமைநிலங் குவித்து நின்ற
நிழலெனத் தந்தைக் கென்றும் நுண்மதி யுரைத்த பேரை
விழிகொள வாங்கி மெல்ல வார்த்தைகள் கோத்தார் மைந்தர்
வழியெனச் சீரங் கத்தை வித்துடல் சேர்க்க வேன்றே
360

எவர்தனும் அறியா வாறாய் இடம்பெயர்ந் துடலஞ் சேர்க்க
எவைதகும் வழிக ளென்றே யோர்ந்ததன் திட்டந் தன்னைச்
செவிநுகர் வாறாய் அண்மிச் சொன்னதும் ஏற்றே ஆணை
நவின்றிட அனைத்தும் நன்றே நடைபெற லாகிற் றன்றே
361

படையின ரறியா வாறு பாசறை யுள்ளே மன்னர்
உடலினைப் பல்லக் குள்ளே உறங்கிடு வாறாய்ச் சாய்த்தும்
அடிதொடர் படைக்குத் தந்து அதனுடன் தாமும் சேர்ந்தார்
விடிதலைக் காணு முன்னே வீரர்தம் இறக்கை சோர்ந்தார்
362

தலைநகர் தன்னில் தம்பி சேர்ந்தொன்றித் தளகர்த் தர்கள்
பலமதப் பெரியார் சுற்றம் மந்திரச் சான்றோர் மக்கள்
நிலைபெற அவரை நோக்கி அடைந்தது "பல்லக்" கின்னும்
கலைந்திலை மௌனம் யாரும் கடந்ததென் னறிகி லாரே
363

அதிகார பூர்வ மாக ஆட்சிகை மாறு மட்டும்
எதுவிதத் தாலும் மன்னர் இழப்பினை அறிய மாட்டா
மதியூகம் மிக்க பேர்கள் மறைத்திடச் செய்தார் திப்பு
அதிகாரம் கொண்ட பின்னே அறிந்தனர் அதிச யந்தான்
364

மன்னவர் இறந்த சேதி மக்களும் அறியச் செய்த
பின்னரோ நடந்த வற்றைப் பேசுதல் சொல்லில் மாளா
தன்னையே தானி ழந்த தவிப்பினில் தனித்த தொவ்வோர்
மன்னுமே சீரங் கத்தை மறந்ததாம் என்னு மாறே
365

பிறந்தமண் தானே ஆண்ட பெரும்புலம் சீரங் கத்தில்
இறந்திலாப் புகழ்நா மத்தை ஏற்றவவ் வுடலம் தன்னை
உறைந்திடச் செய்தார் மக்கள் ஓலமிட் டழுதார் தம்மை
அறிந்திலார் அயலர் நோக்கார் அடியறு மரம்போல் சாய்ந்தார் 366

சுதந்திரக் காவ லர்தம் துய்யதாம் ஆவி விண்பால்
சுதந்திரம் பெற்றே செல்லத் தவித்தனர் சுதேச மன்னர்
மிதந்தனர் சோகத் துள்ளே வீரர்கள் வீரங் காத்த
பதிதமைப் பிரிந்த தாலே பொறுத்திலார் புலம்ப லானார்
367

சான்றோரும் அழுதார் மார்க்கத் தலைவரும் அழுதார் ஞான
ஆன்றோரும் அழுதார் செப்பின் அனைவரும் அழுதார் அந்நாள்
ஈன்றதாம் சிசுவும் நீங்கா தழுததும் அவர்க்கென் றாமோ
தோன்றிலை கண்ணீர் சிந்தார் சீரங்கப் பட்டி னத்தே
368

ஆவிவிண் ணேக எச்சம் ஆகுடல் மண்ப திக்குப்
போவது பொதுவாம் யார்க்கும் பிறிதென வென்றொன் றில்லை
மாவீரர் தமக்கும் பூவாள் மன்னர்க்கும் ஆது லர்க்கும்
ஈதெனுஞ் சமத்து வத்தை ஏற்றிடு பொழுது காணும்
369

மந்திரச் சபையோர் மார்க்க முதன்முறைச் சான்றோர் மற்றும்
சொந்தமாம் குடும்பத் தார்கள் சேர்ந்துமே உறவுக் கானோர்
வந்தெஃகிக் கூட மக்கள் வரையற அலையாய் மோதித்
தந்தனர் இறுதிச் சோகச் சோபனம் விழிநீர் கோத்தே
370

திருமறைத் தேன்வான் மேவிச் சிதறிடும் செவிவாய் கவ்வும்
பெருநிலப் பதியின் ஆவி பண்ணவன் பால்நற் பேறு
மருவிடக் கைகள் ஏந்தும் மனமொன்றிப் பணியும் வேண்டும்
'உருவிலாய் உயர்நற் சொர்க்கம் ஒன்றிடச் செய்வாய்' என்றே
371

"கும்பாஸ்"என் அழகுக் கோயில் கண்கவர் பாங்கி லுற்ற
செம்மையில் காணும் ஆங்குத் தாமுடல் பதியாங் கொள்ளும்
இம்மையில் செய்ந லங்கள் எலாமுமென் றாகிச் சொர்க்கம்
தம்வழி காணு மட்டுந் தரித்திடும் வாகி லாமே
372

அறிந்தனர் வெள்ளை யர்கள் அகாலத்தில் ஹைதர் வாழ்வு
முறிந்தது வென்னுஞ் சேதி மகிழ்ச்சியோ ஆழிக் கொப்பாம்
கிறிஸ்மஸ்"ஸ/க் கால மஃது களியாட்டம் கிறிஸ்த்த வர்க்காம்
முறைமையோ டிதுவுங் கூடி விஞ்சிய திரட்டிப் பாமே 373

விடமுட லேறு வாகு விரிந்திடும் வெள்ளை யாட்சி
தடையிலா தெங்கும் ஓங்கச் செய்திட லாகும் ஹைதர்
குடைசரிந் திட்ட தாலே குறுக்கெவர் தாமு மில்லை
முடிந்தது திப்பின் வீரம் தந்தையோ டெனநி னைந்தார்
374

செங்கோலும் மணிமுடியும்

கோனிலா மண்ணில் நீதிக் கோல்வளைந் தழியும் மன்னர்
வானேகி வெறுமை யுற்ற வாகினில் மைசூர் பாங்குந்
தானான நிலைமை கண்டார் தருமத்தைக் காக்கும் பேரார்
ஆனது செய்தார் மைந்தர் ஆட்சியை ஏற்றிட் டாரே
375

அகாலத்தில் தந்தை தம்மின் ஆவியைத் தெய்வங் கொள்ள
மிகவிளம் வயதில் நாட்டின் மணிமுடி பூண வேண்டுந்
தகைவரத் தம்பா லுற்ற சுமையினை யுணர்ந்தார் திப்பும்
அகந்துணிந் தோர்மை கோத்தார் ஆதியின் பொருட்டவ் வாறே
376

மணிமுடித் தரிப்பை ஓங்கு மாறெனச் செய்ய நாட்டின்
சனப்பெருக் கோடு கூடிச் சேர்ந்தனர் கற்ற பேர்கள்
மனமொப்ப வில்லை திப்பு முடிசூட்ட விழாவை அன்னார்
நினைந்தவா ரியற்றத் தந்தை மரணத்தை மனத்தி லேற்றே
377

"வழக்கென் றொன்றுண்டா மஃதை வழிகொளல் வேண்டும் தந்தை
இழப்பினைக் கருத்தில் கொண்டு ஏற்றிட மறுத்தல் வேண்டா"
அழுத்தமா யுரைத்தார் ஆன்றோர் அமைச்சர்கள் மறுக்க மாட்டா
அழுத்தத்தால் சரியென் றொப்ப ஆயத்தம் பலமாயிற்றே
378

நாற்படை யணிவ குப்பு நீழ்நெடு தோர ணங்கள்
வேற்றுமண் அரசர் தூதர் வருகையும் பரிசிற் சும்மை
பாற்படு வாறு மக்கட் பெருந்திரள் வாழ்த்தும் ஈதாம்
போற்பல வழக்க மாகிப் பொருத்தினர் மகுடம் அன்றே
379

கோவிலில் மணியொ லிக்கக் குர்ஆனின் வாச கங்கள்
மேவிய தாகுங் காற்றில் முழங்கின வெடிகள் விண்ணைத்
தாவின வாழ்த்துப் பூக்கள் செவிப்புலன் களிப்பால் வீங்கத்
தூவிய மலர்ம ணத்தால் செறிந்தது மன்றில் அன்றே
380

பூவிழி மடவா ரோடும் புகழ்ந்தேற்றப் புலவோர் கூட்டம்
நாபொழி தேன்பா சிந்த நாரியர்க் குழாமும் சும்மை
வேய்குழல் யாழ்பே ரோசை வழங்கிடு முரச மார்த்தும்
தூமொழி மறையே யந்தச் சடங்கினில் மேலோங் கிற்றே
381

சடங்கினில் மன்னர்க் கான சீருடை முத்தாற் கோத்த
வடம்பல கழுத்தைச் சுற்றி வாரணம் பொருத மார்பில்
இடம்பெறு மணிகள் தாங்கும் எழிலுறு சரங்கள் திப்பின்
உடையலங் காரம் காண்போர் உளத்தினை ஈர்க்குஞ் சீரே.
382

சிம்மாச னத்தின் மீதோர் சிம்மம்வீற் றிருக்கும் பாங்காய்த்
தம்முடல் நிமிர்த்தித் திப்புச் செங்கோலைக் கொளவி ருக்க
அம்ம!யீ தொன்ன விந்த ஆண்மையின் தோற்ற மென்றே
வம்மியோர் வியந்தார் கண்டு வாய்பொத்தி இமைப்பொ ழிந்தார்
383

மதவழி பாட்டின் பின்னே மணிமுடி தனையெ டுத்துப்
புதியவர் நாட்டின் வேந்தர் பொறுப்பினை பெறவென் றாக
மதப்பெரி யார்முன் சென்றார் மன்றிலை அமைதி யாளும்
பதித்திடச் சிரசில் ஆங்கு பேரொலி வாழ்த்தால் விஞ்சும்
384

சிரசினில் பாகை யொக்குந் திருமுடி மகுடம் நாப்பண்
விரிசுடர் மாணிக் கம்வெண் வைரக்கல் முத்துக் கோவை
பரவலாய் அலங்க ரிக்கப் பட்டினால் ஒளிரும் பொன்னின்
ஒருதனி நூலு மற்ற உருவினில் ஆன தஃதே
385

பகைவரின் உடல்கூ றுண்டு போமென எண்ணு முன்னே
வகுந்திடு தொழில்மேற் கொண்ட வாளிடைக் கச்சை மீதும்
அகன்றிட மாட்டா தொன்றி ஆண்மையின் மாட்சி காட்டும்
வகையினில் நெஞ்சு யர்த்தி வேங்கைபோல் கண்ணுற் றாரே 386

உச்சிதொட் டுள்ளங் கால்மட் டோடிடு வீரம் கண்ணில்
அச்சிட்டு வைத்தாற் போன்றே அமைவுற அவையின் கண்ணே
வச்சிரங் கொண்ட தோள்கள் விம்மிட நின்றார் மாற்றார்
அச்சமுற் றடிபற் றேவல் ஆற்றுவர் கண்ணுற் றாலே
387

நாற்படை முதல்வர் வீரர் நாடாளு நெறிபு கல்வோர்
போற்றுதற் குரிய சான்றோர் பண்டிதர் மதத்த லைவர்
போற்பலர் சூழ்ந்த மன்றிற் புலமதில் முதன்மை யாகச்
சாற்றிட லானார் திப்பு தனதாட்சிக் குறிக்கோ ளோர்ந்தே.
388

சாற்றிய தனைத்தும் பின்னாள் செயலுருப் பெற்ற தஃதைச்
சாற்றுதல் சிறப்பாம் ஒன்றித் தனித்தனி விளம்பல் வேண்டேன்
மாற்றமே காவி யத்தின் முறைமைக்குக் கற்போர் நன்மை
போற்றிடச் செய்தேன் வேண்டும் போதினில் எதிர்கொள் வீரே **389**

மங்களூர் ஒப்பந்தம்

நம்பினார் வெள்ளை யர்கள் நாட்டுடை நிருவா கத்தில்
தம்புல னனைத்தும் திப்பு செலுத்துவார் அதிகா ரத்தை
வம்மிடு வெதிர்ப்பு ஒன்றா வழியினில் ஹைதர் பின்னே
தம்வழி ஆட்சி கொண்ட தொடக்கநாட் பொழுதி லன்றோ
390

வெள்ளையர் தம்மை யோட்டும் வேள்வியில் உள்ளம் முற்றும்
கொள்ளிட மாக நிற்கக் கொடும்பகை ஒடுக்க வேண்டித்
தெள்ளிய சிந்தை யோடு திட்டங்கள் வகுத்தார் திப்பு
வெள்ளையர் அறியார் தம்முள் விரவிய இடரால் நைந்தார்
391

'அனந்த்பூரி லிருந்து திப்பு அகலக்கால் விரித்தார் போரை
நினைந்தவா றியற்ற வென்றே நண்ணினார் மாங்க ளூரை
அனந்தமாம் இழப்பு வெள்ளை அடலலர் தமக்கு யானை
நினைந்தவா றழித்த சேனை நிலமெனப் போனா ரன்றோ 392

"கடப்பா"வை அடைய முன்னர் காப்பரண் செய்ய வென்னும்
கடப்பாடும் நிறைவே றாது கைகொண்ட கோட்டை விட்டு
கடந்தோடு நிலைக்குள் ளானார் கைப்பட்டான் வெள்ளை யர்க்குக்
கடப்பட்டுத் துரோகஞ் செய்த கயவனாம் 'சையத் முகம்மத்'

393

பிடிபட்ட துரோகி மைசூர் போர்வீரர் பன்னூ ரொன்றி
மடிந்திடக் கார ணன்னாம் மாற்றார்க்கு அவ்வப் போது
கொடுத்தவன் துப்பு திப்பு கைப்பட முன்னே நின்றான்
அடுத்தவர் துடித்தார் கொல்ல ஆணையால் பிழைத்திட் டானே

394

பற்பல இடர்கள் சென்னைப் பதியாண்ட வெள்ளை யர்க்காம்
பற்றுதல் வேண்டும் அந்தப் போழ்தினில் சமாதா னத்தை
முற்றுமந் நிலைக்குள் ளன்னார் மாறினர் கார ணங்கள்
சொற்களுள் ளடங்கா வாறே துயருற்றார் கலங்கி னாரே

395

பொருளா தார வீழ்ச்சி பெரிதெனும் பாற்பட் டன்னார்
வருவாயுங் குன்றி நாட்டில் வறுமையும் விஞ்ச மக்கள்
வரிதரும் வசதி யற்றார் வளங்களும் குன்றிப் போகப்
புரியாத சூன்யத் துள்ளே பாடுற்றார் வெள்ளைப் பேர்கள்

396

பலகால நிலுவை அன்று படையினர் தமக்காம் ஆட்சி
அலுவலர் தமக்கும் காவல் அதிகாரப் பொறுப்பி னோர்க்கும்
வலுவுற்ற முரண்பா டோடே வெள்ளைப்பேர் விசுவா சத்தில்
நிலையிலார் என்னுங் கெட்ட நிலைமையுந் தோன்றிற் றன்றோ

397

மாங்களூர் முற்று கைதம் படைகளின் பின்வாங் கல்கள்
தங்கள்பால் மராட்டி யர்தம் தவறான நடைமு றைகள்
இங்கிலாந் துயர்மட் டத்தில் ஏற்பட்ட திருப்தி யின்மை
பங்கமுற் றிருக்கச் செய்த பிறபல கார ணங்கள்

398

திப்புவுக் கெதிரா யுள்ள சிறுசிறு ஆட்சி யாளர்
ஒப்புவர் ஒன்று கூட உறுதியஃ தென்னு கின்ற
நப்பாசை கொண்டார் ஒவ்வோர் நிருபத்தை யனுப்பி வைத்தார்
உட்பகை ஓர்ந்து தம்பால் ஒன்றுவர் என்ப தாலே 399

அனைவரும் ஒன்று கூடி ஆக்கிர மிப்பொன் றேற்றால்
மின்னிடைப் போழ்துள் திப்பு மண்கவ்வ லியற்ற லாகும்
என்னதா னியலு மும்பால் இயற்றுக மீதி யெல்லாம்
சென்னையின் ஆட்சி யாளர் தம்பொறுப் பாகு மென்றார்

400

உங்களைப் பாது காக்க உறும்பணி எம்ம தாகும்
எங்களின் பிடியில் முற்றும் எனுநிலை வந்த பின்னே
உங்களின் நிலையில் முன்போல் உறையலாம் மேலும் நீங்கள்
எங்களின் பால்நி றைந்த ஏற்றமுங் காண்பீர் என்றார்

401

இருகரம் நீட்டி னார்கள் இணைத்திட திப்பு சார்பில்
பெரும்பணி யாற்று வோரை பெருபணம் பதவி லாபம்
தருவதாய் ஆசை காட்டித் துரோகநஞ் சூட்டி யந்தக்
கருமத்தில் முயன்றுந் தோல்வி கண்டதே முடிவா கிற்றே

402

முத்தொடு வைரம் தங்கம் மட்டிலா நிலப்ப ரப்பும்
ஒத்தனர் தருதற் கன்னார் ஒன்றிவந் துற்றால் நாங்கள்
சத்தியம் காப்போ மென்றும் தாள்பணிந் திரத்த லைக்கச்
சத்தியம் வரைந்தார் செல்வோர் தாங்கிய நிரூபந் தன்னில்

403

திப்புவின் பொறியில் மாட்டித் திகைத்திட்ட போழ்தில் செய்தி
ஒப்பினார் வெள்ளை யர்கள் உயரிடத் திருந்தாம் அஃது
செப்பிடில் நறையுண் டாற்போல் தோன்றிய சமாதா னத்தின்
ஒப்புதல் பிரஞ்சு வெள்ளை ஊரவர் தமக்குள் ளென்றே

404

தேனுண்ட களிப்புக் கான தோதந்தச் சமாதா னத்தால்
ஊனமுற் றழியும் திப்பு உடன்கொண்ட நட்பாம் பிரெஞ்சார்
தானுண்டு நீர்வே றென்று தனிதலும் தம்மி னோடே
பூணநட் பென்றும் தோன்றும் படிநிலை அமையு மென்றாம்

405

எண்ணிய வாறே மாற்றம் இயல்புற வெகுண்டார் திப்பின்
நண்பரி லொருவர் பிரெஞ்சார் நடத்தையில் பழிசு மத்த
நண்ணுவ தனைத்தும் நன்றே நம்படை தனித்த தொன்றாம்
நண்ணிடும் எதிர்ப்பை நாமே நேர்கொள்ளல் வேண்டும் என்றார்

406

திப்புவை ஒழிக்க வேண்டித் தம்மொடு சேர்ந்து கொள்ள
ஒப்புதல் வேண்டிச் செய்த ஓரழைப் பேனும் மற்றோர்
ஒப்புதற்க் குட்ப டாது ஒதுக்கிய நிலைமை கண்டு
செப்புதற் கரிய வாறு தனித்தனர் பறங்கிப் பேர்கள்.

407

சரணடைந் திடுத லன்றி செயற்பட யாது மற்றோர்
கரம்படு வெண்ப தாகை கொண்டிடு கோலங் கொண்டார்
வரவினை ஏற்றார் திப்பு வந்ததென் வினாத்தொ டுக்க
விரும்பிடு சமாதா னத்தின் வாகினால் எனப்பு கன்றார்

408

மங்களூர் கோட்டை நீண்ட முற்றுகைக் குட்பட் டாலும்
தங்களின் பலத்தைக் காட்டத் தவறிடா "கமாண்டர் காம்பெல்'
சிங்கந்தன் கூண்டுள் பட்டுஞ் சினத்திடு பாங்கில் நின்றார்
பங்கமுற் றடிமை யாகும் பிழைபட வேண்டா வாறே

409

வாரங்கள் கடந்தே மாத வரவுபல் லொன்றத் தம்மின்
போரணி பெருக்கி யுத்தம் புரிவதில் கருத்தாய் நின்றார்
சார்ந்திடும் வெற்றி தம்பாற் றாமென வெண்ணாப் போழ்தும்
வீரத்தில் தாழ்ந்து போகும் விருப்பற்றார் வெள்ளை வீரர்

410

கோட்டைக்குச் செல்லும் பாதை காத்திடில் உணவில் லாத
பாட்டினால் சரண டைவார் போர்முற்றும் என்ற றிந்தும்
நாட்டமுற் றாரோ இல்லை நல்லெண்ணங் கொண்டார் திப்பு
மேட்டிமை கண்டார் மாற்றார் வீரத்தை மதித்திட் டாரே

411

தொடர்ந்திடு முற்று கைக்குத் தம்வழி சோர்வு காண
உடன்படு சமாதா னத்தின் உட்படு நிலைமை முற்ற
உடன்பட்டார் 'கம்வெல்' கோட்டை உறைவிடம் தவிர்த்தே வந்தார்
திடனொடு எதிர்த்து நின்றுந் தோல்விவாய்ப் பட்ட தாலே

412

கீரியும் பாம்பும் போல கொள்கையால் மாறு பட்டுப்
போரினைத் தொடர்ந்த போதும் பணிந்திட மனமற் றோராய்
வீரமுந் துணிவுங் காட்டி வெற்றியே இலக்காய்க் கொண்ட
பேரினைத் திப்பு சுல்தான் புகழ்ந்திட அவர்ம கிழ்ந்தார் 413

திப்புவின் ஆட்சித் திறன்

ஆட்சிசெய் காலந் தன்னில் அஞ்சாப்போர் மறவ னாக
மாட்சிமைக் குரிய சீர்கொள் மன்னனாய்ப் பகைவ ருக்குக்
காட்சிகொள் வேங்கை போலும் கடமையில் உறுதி கொண்ட
தோட்பலத் தேந்தல் திப்பு திகழ்ந்ததோர் சரித மாவார்

414

வெள்ளையர் பிடியி ருந்த வரலாற்றை மாற்றித் தம்மண்
எள்ளள வேனும் மாற்றான் இடும்பைக்குள் அகப்ப டாதே
வள்ளிசாய்த் தனித்து நின்றோர் வீரத்தின் இமய மென்று
கொள்ளத்தன் உயிரைத் தந்த கோன்முதல் திப்பு வேந்தன்

415

தன்னையோர் மக்கள் தொண்டன் தானென மனத்தி லேற்றுப்
புன்மைக்குச் சங்கூ தற்கே தோற்றினான் இறைவன் என்றே
தன்னுடைப் படைக்கும் வீரத் "திருப்படை" எனும்நா மத்தைச்
சொன்னவன் மண்ணின் மானம் முதன்மையென் றுழைத்த கோனே

416

பகைவரை வெறுத்தாற் போன்று பகைவரைத் தேர்ந்த கற்றிப்
புகைந்திடிற் துரோகம் ஓர்ந்தே பூண்டோடு பிடுங்கித் தூர்த்தார்
பகைவரோ டுறவு கொண்ட பேரெனில் மன்னிப் பில்லை
வகையதே ஆட்சி யூன்றும் வழியெனத் தேர்ந்த தாலே

417

நிருவாகச் சீர்மை நாட்டில் நிலைகொளப் பலவா றாக
நிருவாகத் துறைக ளேற்று நாட்டவர் நிருவ கிக்கப்
பரவலாய்ப் பொறுப்பை மக்கட் பாலெனைத் தந்து தானே
சிரமதற் காக நின்றும் செயற்பட்டார் திப்பு சுல்த்தான்

418

நாடுகாத் திடும்பொ றுப்பு நிலைப்பதோ இராணு வத்தின்
பாட்டினில் நிதிநிர் வாகம் பற்றிடும் வருவாய் செல்வம்
தேடிடும் வணிகம் சட்டத் துறைகடற் துறைதம் நாட்டிற்
கூடுசெல் வம்சேர் காப்பு கொள்பணத் துறைக ளென்றே

419

கடற்றுறை வேண்டும் என்ற கரிசனை தனையந் நாளில்
கொடுத்திலர் பார தத்தின் கொற்றவர் எவரும் திப்பு
கடல்கடந் தெம்மை ஆளும் கொள்கையோர் தமைத்த டுக்கக்
கடல்வளத் துறையின் தேவைக் காத்திரம் உணர்ந்திட் டாரே
420

ஊராட்சி தனையுங் கூட ஒழுங்குற நிருவ கிக்கத்
தேர்வானார் தலைவர் ஊரில் சேர்வரி செலவு நோக்க
ஓர்அதி காரி யும்தன் உத்தர வனைத்தும் ஏற்றே
காரியம் இயற்ற வென்னும் கருத்தொடும் தேர்வு பெற்றார்
421

மாவட்டந் தோறும் மன்னர் மக்களின் குழுக்கள் தோற்றி
ஆவன செயப்ப ணித்தோர் அதிகாரம் தந்திட் டாலும்
தேவையென் றாகில் தம்மைத் தரிசித்து நீதி கோர
யாவர்க்கும் உரிமை தந்தார் இடைத்தர கற்ற வாறே
422

அதிகார வரம்புக் குள்ளே அரசரோ டாட்சி பற்றிப்
பொதுவாகப் பேசி வாதம் புரிவதற் கிணக்கம் தந்தார்
அதிகாரத் தாலோ அன்றி அவர்வாதத் திறத்தி னாலோ
மதியுரைப் போர்கள் வார்த்தை மறுத்திடார் மன்னர் ஏற்பார்
423

சாலைகள் அமைத்தார் மக்கள் தங்கித்தம் களைப்பு நீக்கச்
சாலைக ளருகில் ஓய்வுச் சாலைகள் நிறுவச் செய்தார்
வேலையற் றெவரும் இல்லா வழிபெறத் தொழில்மு னைவோர்
காலூன்ற வழியும் செய்தார் கடன்தொழில் முனைவர்க் கீந்தே
424

உழுபவன் தனக்கே பூமி உரியதாம் எனவு ரைத்தே
உழவரின் வாழ்வை மாற்றி உயர்த்திடச் சட்டம் ஏற்றி
வழியிலாத் தலித்து மாந்தர் வளம்பெற நிலமும் ஈந்தார்
தொழில்வழிப் படையி னோரும் சொந்தமுற் றார்கள் அன்றே
425

வாக்குரை செய்ய வைத்தார் வருவாய்கொள் துறையி னோர்கள்
"வாக்கினால் செயலால் ஏழை விவசாயி தமக்குக் குற்றம்
சேர்க்கிலோம்" என்பான் போன்று சட்டமும் வகுத்தார் யாரும்
யார்க்குமே கூலி யின்றி எத்தொழில் தவிர்த்தல் நீக்க 426

முதலீடு செய்வார் இலாபம் முறைப்படி கொள்ள நீதி
விதித்ததன் வாறாய் மக்கள் வளம்பெற ஊக்கு வித்தார்
முதலீடு சிறிய தாயின் மிகுதியும் இடுதல் முற்றும்
அதிகமா யிருப்பின் இலாப அளவினில் குறைவு மாகும்
427

மதுவினால் மக்கள் வாழ்வு மாசுறும் மனித தேகம்
விதிவரும் முன்ன தாக விடைபெறும் நிலைமை ஏற்குங்
கதிவரும் வறுமை தோன்றும் கூடிவாழ் இல்ல றத்தில்
சதிபதிப் பிணக்குக் கண்டே சீர்கெடும் எனவு ணர்ந்தார்
428

உற்றபொன் வருவாய் குன்றும் உபாதையை நோக்கி டாதே
முற்றுமே மதுவி லக்கை முறைப்பட அமுல்ப்ப டுத்திப்
பற்றிய தொழிலாய்க் கொண்டோர் புதுத்தொழில் பற்றச் செய்தார்
உற்பத்தி யற்ற தாலே உடன்பலன் கனியா கிற்றே
429

மக்களின் சுகநல் வாழ்வு ஆன்மீக மேன்மை தம்மைத்
தக்கவைத் திளைஞர் பண்பின் திறனழித் திடாது காத்தல்
மிக்கபேர் நன்மை காட்டும் மதுதரு திருவின் மேலாம்
ஒக்காது குடியென் கொள்கைக் குடன்படா தெனவுஞ் சொல்வார்
430

போதையைத் தூண்டும் கஞ்சாப் பயிரினை வெள்ளை யர்கள்
தீதறிந் திருந்த போதும் தூண்டினர் பயிர்செய் தர்க்கே
ஓதினார் திப்பு செய்தால் உண்டுதண் டனையாம் என்றே
சாதித்தும் காட்டி னார்அச் செய்கையை இலாதொ ழித்தே
431

பக்தியில் முக்தி யென்று பக்தர்கள் தேர்க்கால் வீழ்ந்து
அக்கணத் துயிரை மாய்க்கும் அறிவிலாச் செய்கை மாற்றி
வக்கிலா ஏழைப் பெண்டிர் விபச்சார வழியில் உந்தும்
விக்கினம் போக்கக் கோயில் தாசியர் தொழில்த டுத்தார்
432

அரண்மனைச் சுவர்கள் தம்மில் அமைந்ததாம் வாச கங்கள்
திருவுடைத் தாகும் அஃது திப்புவின் மனித நேயம்
உருக்கொண்ட பாங்கி லாகும் ஒப்பினுக் கிலாத தொன்றே
ஒருவருக் கொருவர் நேசம் ஓன்றிட உபதே சிக்கும் 433

"நம்முடை மக்க ளோடு நாம்செய்யும் பிணக்கு நாமே
நம்மொடு பொருதல் போன்றாம் நம்மவர் கவசம் அன்னார்
நம்மெலார் தமக்கும் எல்லாம் நல்குவோர் அவரே யாகும்
நம்வலு வெறுப்பு முற்றும் நம்மிலார் எதிரி பாலே"

434

மதத்திடை ஆட்சி மூழ்க மனமொப்ப வில்லை திப்பு
மதித்தார்தம் மதம்போல் மற்ற மதத்தையும் மேலாம் வேற்று
மதத்தவர் தமக்கும் ஆட்சி முறைமையில் பங்கு தந்தார்
மதத்தினால் இடுக்கண் தோன்று மாறிலா தமையும் வாழ்வே

435

நீதியில் பிறழ்தல் மக்கள் நலத்தினைக் கொல்லும் தீர்த்த
நீதியில் அவர்மேல் நீதி நாடிடில் வழிகள் வேண்டும்
கோதிலா தறத்தைக் காக்கக் கேள்விகொள் விசார ணைகள்
நீதியில் திளைத்தல் வேண்டும் நாடிய நீதி அஃதே

436

முரண்படின் மக்க ளோடு முரண்பாடு நம்மில் நாமே
அரணவர் நமக்குக் காக்கும் ஆயுதம் வேலும் வாளும்
உரிமையில் நுழைதல் அன்னார் உரிமைக்கும் எதிர்ப்போர் செய்தல்
பரிவொடு காத்த லொன்றே பாராள்வோர் கடனென் றோர்ந்தார்

437

வெற்றிகொண் டிடிலோர் நாட்டை வன்மித்துக் கொள்ளை செய்தல்
முற்றுமே இழுக்க தாகும் மன்னர்க்கும் படைக்கும் மீறிச்
சற்றெனும் மக்க ளுக்குத் தீங்குறல் நாடல் கூடா
பற்றுக நீதி யுத்தம் போர்க்களத் தோடாம் என்பார்

438

மாதர்கள் வயோதி பர்கள் வயதிளம் சிறார்கள் தம்மை
தீதுசெய் யாது காத்தல் தருமமாம் பகைப்பு லத்தும்
ஓதினார் வயல்கள் மக்கள் உணவுக்காம் பயிர்கள் மற்றும்
தீதறு கால்ந டைகள் தம்மையும் காப்பீ ரென்றார்

439

கல்விக்கு உரமளித்த காவலர்

கற்றறியா மேதைக்குப் பிள்ளை யாகக்
காசினிக்குக் கொடையாக இறைவன் தந்த
கற்றறிந்த மேதைசுல்தான் கல்விக் கென்று
காட்டியதாம் கரிசனையை உலகம் ஏற்கும்
பொற்புடைத்தாம் மனுக்குலத்தின் மேன்மைக் கென்றே
படிப்பறிவின் உன்னதத்தைப் போற்றி நாட்டோர்
கற்பதற்கும் வழிசமைத்தார் தானுங் கற்றார்
காத்துவைத்த நூல்நிலையம் அதற்கோர் சான்றே

440

நாடெல்லாம் கற்பதற்குக் கல்விக் கூடம்
நிறுவிடச்செய் தார்பொதுவாய் அனைத்துப் பேர்க்கும்
கூடுமுயர் கல்விக்காய்க் கலாசா லையும்
கட்டவைத்தார் முஸ்லிம்கள் மார்க்கக் கல்வி
தேடவென மதரசாக்கள் தோற்றி யாங்கு
தேர்ந்தறிந்த ஞானர்களை வரவ ழைத்துப்
பாடமோத வைத்தார்தம் மக்க ளெல்லாம்
படிப்பறிவு மிக்கவ்ராய் ஆவ தற்கே

441

பாதுகாப்பு நலன்கருதி யுத்தப் பள்ளி
போர்முறைகள் கற்றறிய நிறுவி யாங்கே
ஓதுவிக்கத் தகுந்தவரைத் தேர்ந்தெ டுத்தே
உபாத்தியாயம் செய்யவைத்தார் இந்தி யாவின்
மீதுற்ற முதற்பள்ளி அதுவே யாகும்
மன்னர்திப்பு தானதற்கும் முதன்மை யானார்
ஓதவெனப் **"பதஉல்மு ஜாஹி தீன்"**ஐ
உருவாக்கி யுத்தமுறை கற்கச் செய்தார்

442

கொள்ளையிட்ட வெள்ளையர்க்குக் கிடைத்த செல்வம்
கணக்கிலடங் காதனவாம் திப்பு சுல்தான்
கொள்ளரிய பொக்கிஷங்க ளாகச் சேர்த்த
கல்விக்கரு வூலங்கள் அவற்றில் சேரும்

உள்ளனவென் றிருந்தனவாம் நூல கத்தில்
உலகப்பே ரறிவினுயர் தேடல் காலம்
கொள்ளையிட வொண்ணாத ஞான வூற்றின்
கணக்கற்ற பெருந்திருவென் றோது வாரே
443

திருமறையும் திருமறையின் வழிக ளோதும்
தொகைநூல்கள் சித்தாந்தம் மனிதக் கால
வரலாறு வானவியல் சட்ட நூல்கள்
விஞ்ஞானம் அகராதி மொழிசால் நூல்கள்
மருத்துவநூல் போரறிவு ஆயு தஞ்செய்
முறைகூறு நூல்களொடு கனிப்பொ ருட்கள்
பிரித்தாய்வு செய்யவழி சொல்லும் நூல்கள்
பற்பலவாம் பெருந்தொகையப் படிப்ப கத்தே
444

திருமணத்தின் போது தந்தை மகனி டத்தே
தந்தைவழிப் பரிசென்ன வேண்டு மென்றே
விருப்பத்தை அறியவொரு வினாத்தொ டுக்க
வேண்டுமொரு நூல்நிலையம் என்றிட் டாராம்
அருமையறிந் திருந்தாரே திப்பு கல்வி
அழியாத செல்வமென அனைபே ருக்கும்
திருநபியின் போதமுமஃ தாமே என்றும்
தெரிந்திருந்தார் பிறர்க்கெடுத்தும் ஓதுவாராம்
445

இயற்கையில் ஈர்ப்பு

"இயற்கையிறை எழுதியநல் ஏடாம்" என்றே
இயம்பிடுவார் திப்பு:விழி பசுமை காணின்
வயப்படுவார் அதன்பக்கல் களத்திற் கஞ்சா
வீரதீரப் பராக்கிரமர் என்றிட் டாலும்
இயல்பினிலே பிஞ்சுமனங் கொண்ட வர்தான்
இயற்கைப்பற் றதற்குநல்ல சான்றாம் அன்னார்
செயற்பாட்டில் சிற்சிலவீங் குரைப்பின் கூற்றின்
சத்தியத்தை யுணர்த்திடஃாம் தெரியார் மாட்டு
446

தேவையற்றுப் பிராணிகளின் உயிர்ப றித்தல்
தோற்றுவிக்கும் இயற்கைச்சமச் சீர்மை கொல்லும்
பாவமெனச் சுட்டியவர் புறக்க ணித்தார்
புலிகளின்மேல் அளவில்லாப் பாசங் கெண்டார்
ஏவினரே புறாக்களுக்காய் ஏற்ற வாறே
இருப்பிடங்கள் அமைக்கவெனப் பள்ளி வாயில்
மேவுமெழிற் கோபுரங்கள் தோறும் இன்றும்
வரலாறு புகலும்படி அவையுண் டாமே
447

மரஞ்செடிகள் கொடிவகைகள் மலர்த்தோட் டங்கள்
மிகுபலனை நல்குமென வளர்க்கத் தூண்டி
அரியபல செடிவிதைகள் அயல்நாட் டின்பால்
ஆனமட்டும் பெற்றவற்றை நாட்டில் நட்டும்
உரியபரி பாலனத்தால் பசுமை யோங்க
ஊக்குவித்தார் உரமளித்தார் திப்பு சுல்தான்
கருணையுள்ளங் கொண்டவரே இயற்கை மீது
காமுறுவர் எனிலவரே முதல்வ ராவார்
448

தோட்டங்கள் பலவமைத்து மாளி கைகள்
தேசுடைத்தா யிருக்கவெனப் பராம ரித்தும்
நாட்டமுற்றார் வீதிகளும் அழகு கொள்ள
நெடுஞ்சாலை நடைபாதை யனைத்தும் பச்சை
மேட்டிமையாய் ஒளிரவென மரங்கள் நட்டார்
மாற்றுநிலத் திருந்துமவை வரவ ழைத்தே
காட்டுமவை மன்னவரின் இயற்கைப் பற்றைக்
கண்களுக்கும் விருந்தளித்துக் கவல ழித்தே
449

கண்கவரும் அழகியமீன் வகைகள் மீது
கவர்ச்சிகொண்டார் மாளிகையின் சுற்று வட்டம்
வண்ணவண்ண மீன்பலவுங் கொண்ட தொட்டி
வடிவமைந்து வதிபுலத்தை அழகு செய்யும்

திண்ணியநெஞ் சுடைத்தவர்தா னென்றி ட்டாலும்
தெய்வத்தின் கொடையென்னும் இயற்கை மீது
பண்ணவனின் அருளெண்ணிப் பூரிப் பெய்திப்
புகழுரைப்பார் புகழுரைப்பார் புகழு வாரே

450

நிருவாகத் திறன்

போரினில் புலியென் றாலும் பாராளு திறத்தில் திப்பு
சீர்சொலப் புக்கி னஃதோர் சிறந்தநற் பாட மாகும்
நேர்மையும் மதியூ கத்தின் நுண்மையும் செயலில் காட்டும்
ஓர்மையும் ஓர்ந்தா லின்றும் உலகினுக் கொப்பும் வாறாம்

451

முற்போக்குக் கொள்கை நாட்டை முன்னேற்றப் பாதை தன்னில்
நற்பயன் கொள்ளச் செய்த நலத்தினை கருத்தில் தோய்த்தால்
முற்றிலும் மக்கள் வாழ்வின் மலர்ச்சியே வேரென் றாகும்
கொற்றவன் மாட்சிக் கென்றெக் காரியம் இலைகண் கூடே

452

தன்னுடைத் திட்டத் தோடு தலைமுறை வழியாய் வந்த
மண்ணுடை சீர்மு றைக்கும் முதன்மையாய் வழிச மைத்தே
என்னென்ன முறைகள் எங்கே இருந்திடி லதுவும் பற்றிப்
பின்னவர் தமக்கும் ஏற்ற பயன்பெறு வழியில் ஆண்டார்

453

இறைவனின் திருநா மங்கள் எண்ணிக்கைக் கேற்ப ஆட்சி
நிருவாகந் தன்னைத் தொண்ணூற் றொன்பதாய்ப் பிரிவு செய்தே
பொருந்துவா றமைய மண்ணைப் பிரித்துமே மூன்ற தாக்கிச்
சிறுசிறு தாலுக் காவும் தனியென வகுத்திட் டாரே

454

கடலொடு கடல்சார்ந் தொன்று கூறுவர் **"சுபாயெம்"** என்றே
நடுநிலம் மலையுங் காடும் நவில்பெயர் **"சுபாது ரூன்"**ஆம்
இடைநிலைச் சமத ரைகள் ஏற்றபேர் **"சுபாகப் ரா"**னென்
னுடன்படு வாறு திப்பும் இட்டார்நல் நாமம் ஓர்ந்தே

455

தொடங்கிடும் நிருவா கங்கள் சிற்றூர்கள் தமிலி ருந்தே
அடங்குமாம் குறுவட் டங்கள் அவையொன்றி மாவட் டங்கள்
நெடுநிலம் தாலுக் காவென் றாகுமொன் றனைத்துங் கூடி
அடங்கிற்று அன்னாள் மைசூர் ஆட்சியுள் நிருவா கத்தே

456

நிழல்தரு மரங்கள் சாலை நீர்நிலை சுற்றுக் கோட்டை
வழிகாட்டு கம்பம் ஆட்சி வரிகொளும் இல்லம் மற்றும்
முழுமையாய்ப் பிறவும் ஒன்றும் மாவட்டந் தோறு மாங்கே
தொழிலதி காரங் கொண்ட தலைவரின் பால தாமே

457

மாவட்டத் தலைவ ரோடு மற்றும்பல் லுதவி மேலார்
சேவகம் செய்தார் ஒவ்வோர் துறைசார்ந்த பொறுப்பி னுக்கும்
காவலர் வேறாய் அன்னார் கடமைக்குப் பொறுப்பாய்க் கோட்டைக்
காவலர் தளகர்த் தர்போல் கொண்டபல் பதவி யாங்கே

458

சீரங்கப் பட்டி னத்தில் தலைமைகொள் ளொவ்வோர் பீடம்
காரியப் பொறுப்பை முற்றுங் கொண்டமைந் திருந்த தஃதின்
பேரினில் முதன்மைப் பேராய்ப் பதவியில் **"திவான்"**இ ருந்தார்
நாடாளு நிபுணர் மன்றில் நாயகர் **"மீர்அஸப்"** ஆவார்

459

ஆகிடும் தீர்மா னங்கள் அரசுசார் ஆணை முற்றும்
ஆகிடும் ஒழுங்கு மாறா தமைவுறும் கையெ ழுத்தின்
வாகிலாம் துறைத்த லைவர் திவான்தலை திவான்பின் சுல்தான்
ஆகாது எதுவும் இந்த ஒழுங்குபின் பற்றாப் போழ்தே

460

களத்தினி லதிக காலம் கடத்திய போதும் நாட்டின்
வளத்தினைக் கருத்திற் கொண்டே வாழ்ந்துவந் திருந்த காலை
வெளிக்களச் செயல கத்தை வைத்ததன் மூலம் ஆட்சிக்
களப்பணி தொடர்ந்தார் ஏதுங் குந்தகம் தோன்றா வாறே

461

ஆட்சியின் மொழியாய்ப் 'பார்சி' 'கன்னடம்' இரண்டு மாகும்
வேட்டலில் இரண்டின் கூட 'மராட்டி'யும் 'உர்து'ம் சேரும்
கூட்டியிம் மொழிக ளோடு கூடவும் அறிவார் திப்பு
மேட்டிமை ஞானங் கொண்ட மன்னவர் பார தத்தே

462

அரசாங்க வரிக்க ணக்கும் அவைசார்ந்த பிறவும் ஆட்சிக்
குரியதாம் மொழியி லாகும் உரியவர் தேவை எண்ணி
மராட்டியும் உருதும் மாற்று முறைநகல் படிவ மேற்கும்
கருமங்கள் ஒழுங்காய்ச் செய்யக் கொண்டநல் முறைமை யஃதே
463

இனமத வேறு பாடு இலாதெவர் எதர்க்கென் றாய்ந்தே
கனதியும் பெறுவர் தத்தம் கொண்டிடும் பதவி தன்னில்
வினையொழுங் கற்றால் மாற்று வழிகாண்பர் சார்பு காட்டார்
அணையாதே நீதி குற்றம் ஆற்றுவோர் தண்டிப் பேற்பார்
464

சட்டமும் ஒழுங்கும் நாட்டில் சரிவரத் தர்மம் ஓங்கத்
திட்டங்கள் வேண்டு மென்னும் திண்மையி லூன்றித் திப்பு
சட்டங்கள் வகுத்தார் நாட்டின் சான்றோரின் துணையி னோடே
இட்டம்போல் எவரும் ஏதும் இயற்றிடாப் பொறுப்பு மேற்றர்
465

நாட்டின் பாதுகாப்பும் படைபலமும்

நாட்டுடைப் பாது காப்பு நலம்பெறா திருப்பின் ஓநாய்
வேட்டைக்குள் ளடங்கும் குட்டி வெள்ளாட்டின் நிலைமை யாமென்
பாட்டினை யுணர்ந்த தாலே பலங்கொண்ட படைப்ப லத்தின்
தேட்டத்தில் முதன்மை கொண்டார் திப்புதன் ஆட்சிப் போதே
466

உடற்பலங் கொண்ட ஆண்கள் ஒவ்வொரு பேரும் வேண்டும்
படைத்திறப் பயிற்சி கற்கப் பணித்திருந் தாரே திப்பு
உடைத்தவ ரவரும் தந்தை ஊட்டிய கார ணத்தால்
கொடுத்தவர் **காஸி கான்**தான் குருத்துவம் அவர்பால் சேரும்
467

பயிற்சியோ டன்ன வர்கள் புதுப்புதுப் போர்மு றையும்
பயின்றிடப் பொருந்தும் நூலைப் பதிப்பித்தார் **'ஜெயினுல் ஆப்தீன்'**
வியத்தகு வாறாய்ப் போரின் வகைகளைப் போர்நுட் பத்தை
நயந்திடச் செய்தார் நுண்மாண் நுழைபுலச் சீர்மை கொண்டே
468

பதினெட்டுப் படலங் கொண்ட பொற்புறு போர்நி கண்டோ
அதிகாரப் பதவி வாகில் அவர்தமின் கடமை போரின்
விதவித முறைகள் தாக்கும் வர்ணனை ஆயு தங்கள்
எதுவெலாம் எதற்காம் எங்கே ஏற்றதாம் என்றும் கூறும்
469

படையணிப் பிரிவு வேறு வேறென வாகும் காலாட்
படைபரிப் படையோ டொன்றும் பீரங்கிப் படையும் ஏவற்
படையிவை யொவ்வொன் றிற்கும் பற்பல பிரிவும் உண்டாம்
படைமுதற் தலைமை நாட்டின் பதிக்கெனக் கூறும் நூலே
470

ஆயுதக் கிடங்கின் சாலை அதுசார்ந்த துறையின் பாலாம்
ஆயுதம் வெடிம ருந்தும் அதற்கான பிறவும் உண்ண
ஆயன அனைத்தும் பங்கை அளித்திடும் பொறுப்புச் சேரும்
வாயது அமைந்த தோடே வேண்டுவ தனைத்துங் கொள்ளும்
471

கடற்படைத் துறையுந் திப்புத் தோற்றிய தொன்றாம் முற்றும்
முடிவுறும் முன்னர் வாழ்வு முடிந்ததால் தேங்கிற் றஃது
தொடக்கமே அவரா மென்னும் சரித்திரம் உண்டாம் நோக்கம்
முடக்கிட வாணி பத்தை முற்றிலும் தம்பாற் கொள்ள
472

நாட்டுடை அமைதி பேண நரருயிர் பொருளைக் காக்க
வேண்டுவ தாகும் காவல் விரிவுற வென்ப தாலிப்
பாட்டுடைத் தலைவன் திப்பு பெருங்காப்பு வலயம் செய்தார்
நோட்டங்கள் அறிய வேவுத் துறையொன்றும் இருந்த தாகும்
473

கடமையில் தவறி யோர்கள் காவலர் என்றிட் டாலும்
உடனதற் கேற்ற வாறே ஏற்பரே தண்ட னைகள்
இடமிலை எவர்க்குங் குற்றம் இயற்றிட இயற்றின் நோக்கும்
தண்டனை தாங்க வேண்டும் தவிர்த்திட மார்க்கம் இல்லை
474

உரியதற் குரிய ரான ஒருவரை ஓர்ந்த றிந்தே
உரித்துடைத் தாக்கி னார்கள் உயர்பெரும் பதவி தேர்தல்
உரியதாம் மன்னர் கொண்ட உரிமையில் ஒன்றா மென்றே
வரித்தவம் முறைகள் எவ்வோர் வழுவரா திருக்கும் நோக்காம் 475

திப்புவின் படைப் பலம்

பெரும்படை இருந்த தன்னாள் பாராளுஞ் சக்தி கொண்டே
இருந்தனர் வீரர் மூன்று இலட்சத்துக் கதிக மாகும்
கருமலை போலு மன்ன கரிகளா யிரமும் ஒட்டை
பெருந்தொகை ஆறி ரண்டின் பெருக்கமாம் ஆயி ரங்கள்
476

அரபியப் பரிகள் கால்நூ றாயிரம் கால்ந டையின்
பெருக்கமோ நான்கின் இலட்சம் துப்பாக்கி மூன்று இலட்சம்
உருக்குவாள் இரண்டு இலட்சத் திருபத்தைந் தாயி ரங்கள்
பெருங்குழற் குண்டு பாய்ச்சும் பீரேங்கி பன்நூ றாகும்
477

ஏராளம் வெடிம ருந்து எல்லையில் துவக்குச் சன்னம்
கூர்முனை கொண்ட ஏவு கணைகளும் கொள்ளை யாகும்
வேரொடு பெயர்த்து வீசும் பீரேங்கிக் குண்டு கூடச்
சாருமே அவற்றி னோடே தொகையறி யாத மட்டே
478

புலிகளைக் கூட வன்னாள் போருக்காய்ப் பழக்கும் எண்ணம்
புலிக்கொடி மன்னர் நெஞ்சப் பதிகொண்ட தாகு மென்பர்
இலகுவி லாகா தென்னும் எண்ணமும் முயன்று கண்டார்
நலம்பெற்ற தான தஃது நாட்டுடைப் பொருட்காப் பிற்கே
479

படையணி யனைத்தும் கொண்ட புலிவரி யுடைகள் காப்புத்
தடையெனும் கவசம் வாளைத் தடுத்திடும் கேட யங்கள்
அடலரைக் குறிவைத் தெய்யும் அம்புகள் வில்லோ டீட்டி
கடலனைக் கொள்ளை யாகும் கணக்கறிந் திடாத வாறே
480

பீரங்கி செய்யும் நுட்பம் படைத்தவர் பிரெஞ்சுக் காரர்
சீராகத் தம்மோர் கற்குஞ் செய்முறைப் பயிற்சி கொள்ள
ஆரம்பம் செய்தார் மன்னர் அதற்கென்றோர் தொழில்சார் பீடம்
காரணம் கருதி யன்னார் கூட்டினைத் தம்பா லீர்த்தார்
481

ஏவுகணை நுட்பத்தின் முன்னோடி திப்புசுல்தான்

ஏவுகணைத் தொழில்நுட்பம் இந்தி யாவின்
ஏற்றத்தை உலகளவில் இன்று பேசும்
பூவுலகின் முதல்கணையைத் தோற்று வித்த
புகழ் "திப்பு" மன்னரையே முதலில் சாரும்
ஏவுகணைக் கானவொரு பிரிவுங் கூட
இருந்ததன்னாள் அரசரது படைத்த லத்தில்
சேவைக்கென் றாயிரங்கள் ஆறாம் வீரர்
தளபதிகள் மூவொன்ப தாகு மாமே
482

இரண்டுதசம் இரண்டு "கிலோ கிரா"மாம் ஒன்று
இணைந்தின்னும் ஐந்துதசம் ஐந்தாம் ஒன்று
செருக்களத்தில் எதிரிகளைச் சின்னா பின்னஞ்
செய்ததவை இரண்டுமூன்று கற்கள் தூரம்
பறந்துசென்று தாக்கவல்ல சக்தி மிக்க
போராயு தம்மாகும் அற்றை நாளில்
குறிவைத்தே ஏவுவராம் ஏவும் திக்கில்
கொண்டபடை சிதைந்தழிய வேண்டு மென்றே
483

இரண்டாவ தானமைசூர் யுத்தத் தின்கண்
ஏற்றமுதல் ஏவுகணைத் தாக்கம் பின்னாள்
பெருவளர்ச்சி கொண்டததற் காக வென்றோர்
பட்டறையும் பெருமளவில் திப்பு கொண்டார்
உருவான தாம்இரும்புக் குழாய்க ளுள்ளே
ஓங்குசக்தி கொண்டவெடி மருந்தும் வாள்போல்
ஒருநீண்ட பட்டயமும் ஒன்றிச் சேர
உயரியதாம் தொழில்நுட்பம் உலகோ ருக்கே
484

தோல்வியின்பின் சீரங்கப் பட்டி னத்தில்
சேர்த்தெடுத்தார் பெரியனவாய் ஏழு நூறும்
போல்சிறிய தொளாயிரமும் அனைத்துங் கூட்டிப்
பறங்கியர்கள் தம்மோடு திருடிச் சென்றார்

காலவெளி இரண்டேகால் நூற்றாண் டின்று
கடந்தாலும் அத்தனையும் பாது காப்பாய்
மூலத்தைச் செப்புவதாய் ஐரோப் பாவில்
முடக்கிவைக்கப் பட்டுளது பார்வைக் கென்றே

வேறு 485

ஆலையொன் றிருந்த தாகும் அதற்கெனச் சீரங் கத்தே
மூலமத் தொழில்நுட் பத்தின் முதலவர் திப்பு சுல்தான்
காலத்தால் விரிவ டைந்து கனபரி மாணம் பெற்றின்(று)
ஞாலத்தில் புதுமை செய்யும் நிலைக்குயர் வடைந்த தன்றோ

486

"தரமண்டல் பேட்டை" தாமத் தலத்தினுக் குரிய நாமம்
அருகிலாத் தொலைவில் அஃது அமைந்தது பாது காப்பைக்
கருதியே வெடிம ருந்தும் கொள்கலன் பிறவு மாக
இருந்தனர் வீரர் வேறாய் இயக்குதற் பணிக்கென் றாமே

487

அங்குலத் தெட்டு நீழம் அதன்சுற்று மூன்ற தாகும்
தங்கிடு வெடிம ருந்தோ செறிந்தொரு இறாத்தல் எஃகின்
சங்கமக் குழாய்பின் வாலில் சேர்ந்தது மூங்கில்ச் சட்டம்
அங்கதன் நீட்சி நான்கு அடிகள்வே றமைப்பும் உண்டாம்

488

முதலைவை மூங்கி லாலும் முன்னேற்றத் தொழில்நுட் பத்தால்
விதம்வித மாகச் செய்தார் வலியதாய் இருப்பி னாலே
அதிகூர்மை கொண்ட கத்தி அமைந்தது வால்போல் பின்னே
சிதைத்திடப் பகைவர் சென்னி சேர்த்துடல் கூறு போட.

489

தனித்தனி யாக மற்றுஞ் சேர்தொரு முறையில் ஏவும்
முனைப்பினில் பலவும் கூட மிகநுட்ப மாகச் செய்தார்
கணையெதிர் முனையை நோக்கிக் காற்றினைக் கிளித்துத் தாவும்
வினையதைக் கருத்தில் கொண்டே வடிவமுற் றனவோ வேறோ

490

சக்திக்கும் பரும னுக்குஞ் சேர்ந்தவா றெல்லை தாண்டி
உக்கிர வேகங் கூட்டி ஒன்றரை இருகல் தூரம்
புக்குமாம் புகுந்து வீழும் புலத்தினைத் துவம்சம் செய்யும்
சக்தியும் கொண்ட தாகும் செயற்றிறன் விவரஞ் சொல்வார் 491

சென்றது வீழ்பு லத்தில் சுழன்றிடும் தொடுவாள் சுற்றித்
தன்தொழில் செய்யும் ஆவி துடைத்துடல் சாய்க்கும் ஆங்கோர்
மின்னிடி வீழ்ந்த தொக்கும் வாகினில் கருகும் தீயின்
பின்னமும் சேரும் ஒன்றப் பிரளயம் போலு மாமே

492

கடற்படை

பீரேங்கி அறுப தேற்றும் போர்க்கப்பல் ஒன்று கூடச்
சேருமாம் மூபத் தேற்றும் சமர்ப்பட கையா றாகும்
ஈரிரண் டேற்றும் வாகாய் இருபதும் அவற்றோ டொன்ற
விரீயம் கொண்ட தான வாரிதிப் படைகொண் டாரே

493

கடற்படை யோடு கப்பல் கேடுறின் செப்பன் செய்ய
உடன்படு துறையும் செய்தார் ஒத்ததாய்ப் புதிய வீரப்
படையினர் பயிற்சி கொள்ளப் பள்ளியும் அமைத்தார் திப்பு
கொடுத்ததோ கோடிப் பொன்னாம் காரணம் பாது காப்பே

494

கடலோடி வந்தோர் கொண்ட கடற்படைப் பலத்தைத் தூர்க்கும்
படியொன்று தாமுங் கொள்ளும் பொறுப்பினை யுணர்ந்த தாலே
உடனதன் தேவைக் கேற்ப உரியன செய்தார் அன்னாள்
அடுத்தொரு அரசுங் கொள்ளா ஆரம்ப மாகும் அஃதே

495

மக்களின் காவலன்

நாட்டுவலம் வரும்போது ஒருநாள் கண்டார்
நிறைந்தபெருஞ் சனக்கூட்டம் பிணங்க ளோடு
கூட்டாக வருவதனை அதிர்ச்சி கொண்டே
காரணத்தை அறியதிப்பு முயன்ற போது
கேட்டசேதி உளங்கலங்கச் செய்த தோடே
கொடுஞ்சினமுங் கொளவைத்த தாகும் "சானூர்"
கூட்டிமக்க ளொடுவீடு வாச லெல்லாம்
கடலுக்கே இரையானார் என்ப தாக 496

கடலோரம் அணைகட்ட வேண்டு மென்று
கட்டளையு மிட்டிருந்தார் சொன்ன வாறு
நடைபெறாத நிலையறிந்தே சீற்றங் கொண்டார்
நம்பியவர் துரோகமிழைத் திருந்தார் அன்றே
நடைபெற்ற தாகுமவர் "தர்பார்" நேர்ந்த
நிலையறியக் காரணமாம் "கமாலுத் தீனே"
உடந்தை "மீர் சாதிக்"கும் ஆனார் சொந்த
உறவினர்கள் உடல்கொண்ட வியாதி போன்றோர்
497

கண்டறிந்த உண்மைகளால் கொதிக்க நெஞ்சம்
கூட்டினரே அரசவையை கார ணத்தார்
தண்டனைக்குள் ளாகுவது தர்மம் என்றே
தப்பிளைத்த இருவருமே அழைக்கப் பெற்றார்
விண்டதொரு வினாவவர்கள் செவியைத் தீய்க்க
விடைகாணும் நோக்குடனே ஈனப் பேர்கள்
திண்டாடிப் போனார்கள் திப்பு மன்னர்
சினந்தாங்க மாட்டாராய் தலைகு னிந்தார்
498

'கமாலுத்தீன் நடந்ததென்ன கூறும்' என்றே
கேட்கவவர் கூறிடுவார் 'கடல லையின்
சுமைதாங்கா தணைக்கட்டு குடைசாய்ந் திற்று
காரணம்வே றொன்றில்லை' என்றார் கேட்டே
இமையொடிக்கும் போதுள்ளே இருந்த கோபம்
இமயமென மேலோங்கிக் கண்சி வக்க
'எமையேய்க்கத் துணிந்தீரோ அணைக்கட் டொன்று
எழுந்திலையே பொய்யுரைத்தீர்' எனக்க டுத்தார்
499

உண்மைவெளிப் பட்டதுமே உடல்ந டுங்க
ஓடிமன்ன ரருகினிலே சென்று நின்று
'மன்னிக்க வேண்டுமெனை சுல்தான் நானோ
மாதவறு புரிந்துவிட்டேன் இனிமேல் செய்யேன்

பொன்னுக்காய் ஆசையுற்றேன் பழிசு மந்தேன்
பெருந்துரோகம் உங்களுக்கும் புரிந்து விட்டேன்
என்னளவில் குற்றத்தை ஏற்றேன் மீண்டும்
இறைஞ்சுகின்றேன் எனைப்பொறுக்க வேண்டும் -
என்றார்
500

நம்பிக்கைத் துரோகமிழைத் தீர்கள் என்றன்
நற்பெயரைக் கெடுத்தீர்கள் ஏழை மக்கள்
தம்முயிரைக் கடல்பறிக்கச் செய்தீர் சொன்ன
செயல்தவிர்த்தீர் ஆணைதனை உதாசீ னித்தீர்
உம்வழியில் நீர்புரிந்த கேட்டி னுக்கோ
உரியதுவே தலையரிதல் தாமே நீங்கள்
எம்மவரே இல்லையென வானீர் செய்த
இழிசெயலால் இறைபழியைக் கொண்டீ ரென்றார்
501

'நீதிவிசா ரணையொன்று நடத்த வேண்டும்
நடந்ததென்ன வென்றறிய எனக்"கா ஸீகான்"
ஓதிடுவா ரதைக்கேட்டுத் திப்பு சுல்தான்
உடன்செய்க வெனப்பணித்தார் நடந்த தஃதே
ஏதன்னார் மட்டுமல்லர் மீர்சாதிக்கும்
இடங்கொண்டார் அதிலென்றே பங்கா யேற்ற
தீதுவழித் தேட்டமெல்லாந் திரும்பி யேற்கும்
சந்தர்ப்பம் கிடைத்ததந்தச் செய்கை யாலே
502

மக்களுக்கா யானபணம் மீர்சா திக்பால்
மொத்தம்ஆறு இலட்சம்பொற் காசு கூடப்
பக்கலுற்ற தாம்கமாலுத் தீனின் கையில்
பதினைந்தின் ஆயிரம்பொற் காசு மற்றோர்
பக்கலிலும் இருந்ததொகை மீண்ட தாகும்
பெரும்தொகையாம் மோசடிக்குள் ளான செல்வம்
தக்கபொழு தறிந்ததனால் திறைசே ரிக்குத்
திரும்பியது மீண்டுமந்த தேவை சால 503

மீண்டதொகைப் பணங்கொண்டோர் அணைக்கட் -
டைத்தன்
பார்வையிலே கட்டவழி செய்க வென்று
தோன்றியதோர் ஆணைமன்னர் நாவி ருந்தே
தொடங்கியது பணிமுன்னர் பிழையி ழைத்தோர்
நீண்டகாலச் சேவையினைக் கருத்திற் கொண்டு
நம்பிக்கைப் பத்திரத்தில் சத்தி யத்தைத்
தாண்டோமென் றுரைசெய்தே ஒப்ப மிட்டார்
தண்டனையி லிருந்துமவர் தப்பித் தாரே
504

மக்கள்பால் திப்பரசர் கொண்டி ருந்த
மாசற்ற அன்பிற்குச் சான்றொன் றிஃதாம்
ஒக்கவிது போற்பலவும் இருந்திட் டாலும்
ஒன்றுபதச் சோறாக உரைத்தற் கொண்டேன்
எக்கால மும்தம்மின் இருப்பை மக்கள்
இடங்கொண்டார் மக்களுக்காய் வாழ்ந்தார் திப்பு
முக்காலத் திடையொருவர் இவரைப் போன்று
முதுபுவியில் பிறந்துறைந்த வரலா றுண்டோ
505

மாதருக்கு வாழ்வளித்த மன்னர் திப்பு

மலபாரில் தாழ்ந்தகுல மாதர் தம்மின்
மார்பகங்கள் மூடுவதை உயர்கு லத்தோர்
பலகாலம் தடுத்துவைத்துக் கீழ்மை செய்தார்
பழக்கத்தைக் கேட்டறிந்த திப்பு மன்னர்
நிலைமாற்றி உடல்மறைக்க ஆணை இட்டார்
நடைமுறையில் கண்டபெரும் மாற்றத் தாலே
கொலைவெறியே கொண்டார்கள் குலத்து யர்ந்தோர்
கட்டளைக்குக் கட்டுண்டார் கடைசிப் போழ்தே
506

ஒரேபெண்ணைப் பலஆண்கள் மணந்து கொள்ளும்
ஒவ்வாத வழக்கத்தைச் "குடகு" மக்கள்
சரிகண்டு வாழ்ந்ததனைச் சட்டம் போட்டுத்
தடுத்திட்டார் திப்புமன்னர் பெண்க ளுக்குப்
பொருந்தாத வாழ்க்கைமுறை அதுவென் றோதிப்
பெண்மைக்குப் பெருமைதந்தார் கோவில் சார்ந்த
நரபலியும் தவிர்ந்தவர் சட்டத் தாலே
நாட்டில்மது விலக்குங்கை கூடிற் றன்றே
507

கோவில்களில் தேவதாசி என்னும் பேரில்
காலத்தைக் கடத்திவந்த பெண்க ளுக்குக்
காவலரண் தந்தாரப் பழக்கம் மாதர்
கௌரவத்தைப் பாதிக்கும் செயலாம் தம்மின்
ஏவல்செய் பணியோடு இன்பம் துய்க்க
ஏற்றதுவாய் ஆண்குலத்தோர் ஆக்கிக் கொண்ட
பாவச்செயல் என்றறைந்தார் தடுத்தார் பெண்டிர்
பெருமைதனை மேலோங்கச் செய்திட் டாரே
508

திப்புவின் சிந்தனைகளும் செயற்பாடுகளும்

அரியணை ஏறி ஆட்சி அமைத்தவர் பதினா றாண்டிற்
பெரும்பொழு துதிர்ந்த தாம்தன் பகைவரை மழுங்கச் செய்ய
மரணம்வந் துற்றென் மேனி மண்ணினுக் குணவாய் மாறும்
வரைவெள்ளைப் பறங்கி யோரை விடேனென வுறுதி கொண்டார்
509

களத்திடைக் குருதி நீரில் குளித்திட்ட போதும் தம்மின்
உளத்தினிற் சுமந்த தெல்லாம் ஓங்குதன் மக்கள் வாழ்வே
தொழிற்றிறன் தன்னில் வீரத் தோட்பலந் தன்னில் மக்கள்
முழுத்திறன் காட்டி வெல்ல வெண்டுமென் றுறுதி கொண்டார்
510

சமுதாய முன்னேற் றத்தைச் சீரிய திருத்தங் கொண்டே
இமயத்துச் சிகரம் போன்றும் ஏற்றமுற் றுயர்த்த வேண்டி
இமைப்பிலார் சிந்தித் தார்தான் இவ்வுல குதிக்கச் செய்த
அமைப்பதன் கார ணம்வே றிலையென எண்ணி னாரே
511

சுயமரி யாதை யற்றோர் சுதந்திரப் பாது காப்பின்
வயப்படார் என்னு கின்ற விழிப்புணர் வேற்று மக்கள்
நயத்தகு வாகாய் நெஞ்சில் நாட்டுப்பற் றேற்று வாழும்
சுயச்சார்பு நிலைமை தோன்றச் செய்வதில் ஆர்வங் கொண்டார்
512

உழுபவர் தமக்குப் பூமி உரித்தெனும் கொள்கை தன்னை
அழுத்தமாய் முன்வைத் தஃதை அமுலிலும் காட்ட நாட்டில்
விளைப்பிலா திருந்த மண்ணை விவசாயி தமக்க ளித்தார்
பிழைப்பிலார் இலாதொ ழிக்கப் பயன்பெற லாகு மென்றே
513

வரிவசூல் செய்வ தற்கோர் வரன்முறை வகுத்து நேர்மை
வரித்திடைத் தரகர் தம்மை விட்டகன் றிடவுஞ் செய்து
கருத்துடன் உழவ ருக்காம் கடன்தரப் பணித்தார் இன்னும்
சரித்திரம் படைத்தார் திப்பு செயற்றிறங் காட்டி னாரே
514

களனிகள் விளைய நீரின் கொள்கையொன் றுதய மாக்கிக்
குளம்அணை வாய்க்கால் செய்து கனிமரம் விளைப யிர்கள்
அளவற விவசா யத்தின் அவசியம் உணர்ந்து தந்தார்
தொழிலுயர் வடையத் தானும் திட்டமிட் டியற்றி னாரே
515

வளருறும் நாட்டின் மொத்த வளர்ச்சியில் வணிகப் பங்கோ
அளவிடற் கரிதாம் அஃதின் ஆதாரச் சுருதி என்றே
முழுமையாய் வணிகந் தன்னை மன்னர்கை ஏற்றார் யாரும்
வெள்ளையர் பொருளைத் தாமே விலைகொளத் தடைசெய் தாரே
516

வெள்ளையர் ஆதிக் கத்தில் விளைபொருள் விற்க வாங்க
உள்ளதை மாற்றித் தம்கை உரித்தென ஆட்சி கொள்ளக்
கொள்ளையில் இருந்து நாடு கைகடத் திட்ட தன்னார்
உள்ளிடப் பொருட்கள் கூட உறைந்தன களஞ்சி யத்தே 517

வாசனைத் திரவி யத்துள் வழாங்கேலம் மிளகு மற்றும்
பூசுசந் தனம்மும் யானைத் தந்தங்கள் அனைத்துங் கூட்டித்
தேசியக் களஞ்சி யத்துள் சேர்த்தெடுத் தரேபி யர்க்கும்
நேசமுற் றிருந்த சீனா நாட்டிலும் விற்க லானார்
518

பட்டுநூற் செய்கை தன்னைப் பெருக்கிடப் பலவா றாகத்
திட்டங்கள் தீட்டி வேண்டும் தொழில்நுட்பத் தெளிவு கொள்ள
பட்டுநூ லியலில் வல்லோர் பிறநாட்டுப் பதிகொண் டோரை
இட்டமுற் றழைத்தார் நாட்டின் ஏற்றத்தை மனத்திற் கொண்டே
519

தரமான இரும்பைக் காய்ச்சித் தேவைக்கென் றுகந்த தேற்க
உருக்காலை நாட்டின் பல்வே றிடங்களில் உண்டு பண்ணிப்
பெருக்கினார் ஆயு தங்கள் பண்ணவன் பெயர்பொ றித்தே
செருக்களம் ஆண்ட தாங்கு செய்தவை தாமாம் அன்றே
520

பிரஞ்சுநாட் டவர்க ளோடே பற்றுடைத் திருந்தார் சுல்தான்
பிரஞ்சுசார் தொழில்நுட் பத்தைப் பயன்கொண்டு உதவி பெற்றும்
உருவாக்கம் செய்தார் நாட்டோர் ஓங்குபீ ரங்கி மற்றும்
பெருசிறு வகையிற் கைகொள் துப்பாக்கி வகைகள் தாமும்
521

கடலோடக் கப்பல் கட்டிக் கரைகடந் தயல்நா டேகி
அடிதொடர் வணிகந் தன்னை அந்நியர் கரம்ப றித்து
விடுதலும் வேண்டு மென்ற வேணவாக் கொண்டி ருந்தார்
அடிதொழார் எவர்க்கும் என்றோர் அருந்திருக் கொண்ட தீரர்
522

மனிதருள் ஏற்றத் தாழ்வு மலிந்திருந் திழிந்த காலம்
மனிதருள் பேதம் இல்லை மதத்தினால் உயர்வும் இல்லை
மனிதரை ஒன்று சேர்த்தல் மன்னனின் கடனாம் என்ற
மனிதத்தை மதித்த வேந்தர் மனுக்குலத் தேந்தல் திப்பு
523

திப்புவின் கொள்கைகள்

பதினெட்டாம் நூற்றாண் டின்கண் பகலவன் தோன்றி னாற்போல்
அதியுயர் பிம்ப மாக அமைந்தவர் திப்பு சுல்தான்
சுதந்திரப் பார தத்தைத் தம்முடைச் செந்நீ ராலே
புதித்திட முயன்ற தீரர் பன்முக வேட்கை கொண்டே
524

தன்னுடை மக்கள் யார்க்கும் தலைகுனிந் திடுதல் வேண்டார்
அன்னவர் அறிவு மிக்க ஆளுமை கொண்ட பேராய்
முன்னேற்றம் காண்ப தோடே முழுமையாய்ச் சுதந்தி ரத்தின்
கன்னலைச் சுவைக்க வேண்டும் கொள்கையால் நிலைப்புற் றாரே
525

சுதந்திரம் வதிபு லத்தில் தரித்திடல் போல ஆட்சிச்
சுதந்திரம் சமூக வாழ்வின் சுதந்திரம் பொருளா தாரச்
சுதந்திரம் கலாசா ரத்தின் சுதந்திரம் போன்றாம் வேண்டும்
சுதந்திரம் அனைத்தும் பெற்றே சுகம்பெற அவாவுற் றாரே.
526

பட்டினி முற்றாய் நாட்டில் பலமற்றுப் பஞ்சம் நீங்கி
விட்டகன் றோட வேண்டும் வறுமையும் அறியா மையும்
திட்டமாய் அழிய வேண்டும் தெடர்ந்திடும் மூடக் கொள்கை
கட்டோடு தூர்ந்தே மக்கள் கடைத்தேற வழிகள் கண்டார்
527

பிறந்துயிர் வாழ்வ தாயின் பயன்பெறும் கார ணத்தின்
புறம்பதிந் திருத்தல் வேண்டும் பெயர்நிலை பெறுதல் வேண்டும்
மறைந்ததும் மன்பூ வாழ்வும் முற்றும்மண் விடுகை வேண்டி
சிறந்ததோர் உவமை யாம்மண் திப்புவின் சரிதம் மாதோ
528

"ஓராண்டு ஆட்டைப் போல உயிர்வாழ்தல் தனிலும் மேலாம்
சீராகப் புலியைப் போல்நாள் சீவிதம் செய்த லென்பார்"
யாரெனும் போழ்தும் அஞ்சார் இறைவனை அன்றி திப்பு
வீரியர் எண்ணம் போல வாழ்ந்துமே காட்டிச் சென்றார்
529

பாதுகாப் பெதுவு மில்லைப் பிறந்தபின் மனித வாழ்வில்
ஏதுக்கள் உண்டாம் வெற்றி ஏற்றிடப் பயனுங் கொண்டால்
ஓதுவார் திப்பு சுல்தான் உயர்போதம் அதுவாம் கைமேல்
தீதற வெற்றி சேரும் சரித்திரம் பேசும் என்பார்
530

கனிதரு மரத்தைக் கைவாள் கொண்டரி வார்க்கு நாளை
கனியிலை சுயந லத்தால் கண்டவன் கைவாள் போல்வான்
தனைத்தம தரசி னோடே சேர்ப்பவன் அழிவான் என்பார்
சினைபெறு கதிர்க்கண் தோன்றும் சல்லடைப் புழுப்போ லாமே
531

மக்களின் மகிழ்ச்சிக் கான முன்னேற்ற வளர்ச்சி காணத்
தக்கதாம் வழிகள் கொண்ட சொர்ணப்பூ பரதம் என்பார்
தக்கதாம் பணிகள் தேர்ந்து செய்தவர் மண்வ ளத்தை
மிக்குறச் செய்தார் போகம் மும்முறை விளைந்த தஃதே
532

சொந்தமண் தன்னில் வாழ்வோர் தம்மிடை ஒன்று கூடார்
வந்துவிந் நாட்டை யாள விரும்பியே சுதேசிப் பேராம்
இந்தியர் தமையொ டுக்கி ஏகமும் கைக்கீழ் கொள்ள
தந்திரம் செய்தான் ஓட்டச் சேராரே யெனவு ணர்ந்தார்
533

வெள்ளையன் மேலா திக்கம் விரிவுறு தந்தி ரங்கள்
கொள்ளையாம் படைப்ப லம்சேர் கூடிடும் சுதேசக் கூட்டு
உள்ளத்தின் சுமைக ளாக உறுத்தின நிலைப்பா ரென்றே
விள்ளுமவ் வண்மை தன்னை வேரறுத் திடத்து ணிந்தார்
534

எந்தவோர் மன்னன் கூட எண்ணிலாப் பீடை தன்னை
சொந்தமண் இறைமை காக்கும் துணிவினைப் பெறாத காலை
சந்ததம் நெஞ்சி ருத்தித் துணிவுடன் செயற்பட் டார்தன்
தந்தையின் வழியில் நின்றார் சுயத்தினை நிறுத்தி நின்றார்
535

எறும்புபோல் சுறுசு றுப்பு இலாததொன் றுருவாக் குஞ்சீர்
திறம்படு புதுமைச் செய்கை செய்வதில் ஆர்வம் சற்றும்
உறங்கலும் ஓய்வும் அற்றே உறும்திட்டம் வெலவு ழைத்தார்
மறைந்தும்பின் வாழும் திப்பு முடிகொண்ட காலப் போழ்தே 536

மண்ணுடை மானம் காக்கும் மாபெரும் பணியை யேற்று
தன்னுடை மக்க ளெல்லாம் தம்வழி திரள வைத்தே
அன்னியன் தன்னை யோட்டும் அறப்பணி தொடரச் செய்தார்
புண்ணுண்ட உடலார் மார்பில் பெருவாகை கொண்ட சீலர்

537

நாட்டுடைப் பற்று ஒவ்வோர் நரனிலும் குருதி யோடு
பூண்டிட வேண்டும் கொள்கை பற்றுதல் கடனாம் என்றே
வேண்டுவார் சுல்தான் தாமும் வரித்ததக் கொள்கை யொன்றே
காட்டினார் செயலில் மக்கள் காவலன் பின்தொ டர்ந்தார்.

538

கின்னனூர் ஆட்சியில் குறுக்கீடு

கின்னனூர் மன்னன்தன் மனையாள் செய்த
களங்கமுறு செயல்களினால் மனம்நொந் தோனாய்
தன்னுயிரை இழந்திட்டான் சோகத் தாலே
தனக்குப்பின் வாரிசொன்றைத் தத்தாய்க் -
கொண்டோன்
கன்னமிட்டான் குடும்பவாழ்வில் "நாமய் யா"வும்
காதலனாம் அரசிக்கு மன்னன் பின்னே
தன்னையவள் பாகமெனத் தனித்தான் அன்னாள்
திவான்பதவி தந்தவனைத் துணையாய்க் -
கொண்டாள்

539

தனக்கிடைஞ்சல் தத்தெடுத்த பிள்ளை யென்றே
தாய்ப்பாசம் இல்லாதாள் தத்தைக் கொல்ல
மனந்துணிந்தாள் அதற்கான வழியுஞ் செய்தாள்
முடிந்ததென எண்ணிமனம் மகிழ்ந்து போனாள்
அனர்த்தமதைச் செயப்பணித்த பெண்கள் ஒன்றி
அவளறியா வாறுமொரு யுக்தி செய்து
வினைமுடித்த பாங்குகாட்டித் தப்பச் செய்தார்
வருங்கால முடிக்குரியோன் வேற்றூர் சேர்ந்தான் 540

சிலகாலம் ஒளிந்திருந்து திப்பு சுல்தான்
சன்னிதிக்கு வந்தேதன் நிலைமை கூற
நலஞ்சேர்க்க உறுதிதந்தார் நேர்மை யற்ற
நாட்டத்தை வென்றிருந்தார் என்ப தாலே
உலைவைத்தார் உரிமைக்கு வஞ்ச கத்தால்
ஊராளும் பொறுப்பேற்றார் கின்னூர் ராணி
இலாதொழிக்க அநீதிதனை இசைவு கொண்டார்
எஞ்ஞான்றும் நீதிக்கும் இசைவா மென்றே

541

படைநடத்தி வந்தாரிளம் அரச ரோடே
போருக்குத் தயாரானாள் கின்னூர் ராணி
அடைந்துவிட்டார் வாயில்வரை திப்பும் என்றே
அறிந்ததுமே கோட்டைதனை எரிக்க ஆணை
விடுத்தாளே யானாலும் கோட்டை வாயில்
விரிந்துவழி விட்டதுவாம் எதிர்ப்பு மற்றே
இடைநடுவில் தப்பிக்க வழியுண் டென்றும்
இயம்பினனே நாமையா இயலா துற்றார்

542

பிடியுண்டாள் அவளோடு 'நாமய் யா'வும்
பிடியுண்டான் பலர்முன்னே தலைக விழ்ந்தே
அடியுண்ட நாகத்தின் அச்சாய் நிற்க
ஆட்சிக்கென் றானவனும் அவையி ருந்தான்
படைகொண்டும் போரின்றி வெற்றி தன்கை
பணிந்தநிலை திப்புசுல்தான் வீற்றி ருந்தார்
உடன்கேட்டான் இளவரசன் இவர்கட் கென்ன
உண்டான தீர்ப்பென்றே மன்னர் சொல்வார்

543

பெற்றாலும் பெறாதுவளர்த் திட்டா லும்தாய்
பெற்றவளுக் கொப்பாவாள் இருபே ரும்தாம்
முற்றிலுமே யுரிமையுடைத் தவர்க ளாகும்
மகன்வழியில் என்பதனால் தாய்முன் செய்த

குற்றமெலாம் மன்னிப்புக் குரிய தாகும்
குணம்நாடல் மக்கள்தம் கடனு மாகும்
உற்றதனை மறந்திடுதல் வேண்டும் தாயை
உமதுவழி கொள்ளென்றார் அவனும் ஏற்றான்
544

தாயண்டை சென்றுநின்று தன்னை யேற்கத்
தாள்பணிந்தான் ஏற்பதுபோல் தாயும் ஏற்றாள்
நேயமுற்றோ னவளோடு நிழல்போல் நின்றான்
நியாயமென்ன இவன்வழியில் என்ன திப்பு
வாய்ப்புண்டாம் உன்றனுக்குத் தீர்ப்புக் கூற
வேண்டியதைச் செய்யென்றார் அவனுஞ் - சொல்வான்
போய்விடுவென் கண்முன்னே நில்லாய் என்றான்
பற்றியவன் கைப்பிடித்தார் சிறைசெய் வோரே
545

மறுநாளே முடிசூட்டு விழாவைத் திப்பு
மங்களமாய்ச் செய்துவைத்தார் மைசூர் ஏக
உறுதிகொண்டார் புதியமன்னன் சிலநாள் தங்கி
உபசரணை ஏற்கும்படி நயந்து கேட்கப்
பொறுப்பதிகம் உள்ளதென்று மறுத்திட் டாலும்
பணிந்தவரை வேண்டிநின்றாள் ராஜ மாதா
ஒருநாளென் றாகிடிலும் தரித்துச் செல்ல
உவந்திட்டாள் உள்நோக்கு வேறா மன்றோ
546

திப்புவினைக் கொன்றொழித்து வஞ்சம் தீர்க்கத்
திட்டமவள் நெஞ்சத்துள் தீயாய்ப் பற்ற
ஒப்புதலை வேண்டிநின்றாள் உபசா ரத்தை
உவந்ததனால் உடன்பட்டார் திப்பு சுல்தான்
எப்புறமுந் தடங்கலில்லா வாறே ஓர்நல்
ஏகாந்தப் பெருமுற்றம் தன்னில் சீராய்ச்
செப்பமிட்ட மாளிகையில் விருந்துக் கான
சகலவுயர்த் தேட்டமுமே சமைந்திற் றன்றோ
547

மாளிகையின் இருபுறத்தும் மெழுகு வர்த்தி
மூடியகா ரிருளைத்தம் ஒளியுள் வாங்கப்
பாழடையா வாறுவெளிப் புலங்கள் தீயின்
பந்தங்க ளாளொளிரும் சுற்றி யெங்குந்
தாழிடாத சாளரங்க ளூடே தென்றல்
தாமாக நுழைந்துகுளி ரூட்டச் செய்யும்
தோழமையின் பெருமைதனை மதிக்கும் பங்கின்
தோற்றமஃ தலங்காரம் சிகரம் போன்றாம்
548

தங்குவதற் கானவெல்லாந் தயாராம் என்ற
சேதிதனை மன்னனுக்கு அறிவித் தாள்தாய்
சங்கைமிகத் திப்புவிடம் சென்று மைந்தன்
தாயுரையை எடுத்துரைத்தான் திப்பு தம்மின்
பங்கொன்றாம் காளிகான் தம்மி னோடும்
படைமுதல்வர் சிலரோடும் மாளி கைக்குள்
சிங்கநடை பயின்றிட்டார் கின்னூர் மன்னன்
சிறுபொழுது தரித்துப்பின் தனைப்பி ரித்தான்
549

நாட்டுமன்னன் விடைகொண்டு சென்று நாழி
நாலைந்தோ சற்றுச்சில வதிக மாமோ
கேட்டதாங்கு பேரோசை நெருப்பைக் கக்கி
நிர்மூல மானதந்த மாளி கையாம்
கோட்டைமதில் எதிரொலிக்க மக்க ளெல்லாங்
கூடினரே எவருமரு குற்றா ரில்லை
வேட்டுவைத்துத் தகர்த்துள்ளார் அந்தோ! திப்பு
வரலாறு முடிந்ததெனக் கலங்கி னாரே
550

மற்றுமொரு மாளிகையின் நிலாமுற் றத்தில்
மகிழ்சிபொங்கக் குதுகலித்தார் இருபேர் தம்மின்
வெற்றியந்த மாளிகையின் அழிவால் வந்த
வினைபெண்ணிக் களித்தாளே ராஜ மாதா

மற்றொருவன் நாமய்யா காதற் பாகன்
மனைகெடுத்த குற்றத்தைப் புரிந்தோன் கூண்டில்
பெற்றிருந்த தண்டனையை முடிக்கு முன்னே
பாவமனை கொண்டோளால் வெளியில் வந்தோன்
551

நடந்ததனை எண்ணிமகிழ்ந் திருக்கப் பின்னால்
நடையொலியைச் செவியுணரத் திரும்பி நோக்க
மடிந்தரென நினைந்தவர்கள் கண்முன் தோன்ற
மாயமிதாம் என்றெண்ணி அதிர்ந்தார் ஒன்றித்
துடித்தனகை கால்களெலாம் இருபே ருக்கும்
செய்வதறி யாதுபுலி கண்ட தேபோல்
அடிசோர உடல்தளர்ந்தார் உடலம் வேர்வை
ஆற்றாலே மூழ்கியதாம் அச்சத் தாலே
552

தப்பிக்க விட்டவரைத் தொலைக்கத் திட்டந்
தீட்டியதைத் தாமாக யூகித் தேதாம்
தப்புதற்குத் திட்டமிட்டார் திப்பு சுல்தான்
சூழ்ச்சியினைச் சூழ்ச்சியினால் வென்றார் அன்னாள்
ஒப்புதலைக் கேட்டிடுங்கால் விழியில் முற்றி
ஒன்றியதாம் வஞ்சகத்தை நகையுங் காட்டச்
செப்பினரே நண்பரிடம் சூது கொண்ட
செயலொன்று தொடருமென வழியுங் கண்டார்
553

காலத்தைப் பேசும் கட்டுமானப் பணி

தேசத்தின் அழகில் முற்றும் தன்முனைப் புற்ற திப்பு
தேசுடைத் தாக்கச் செய்த திருப்பணி சொல்லில் மாளா
ஆட்சியில் இருந்த காலை அமைத்தவை சிலமட் டுந்தான்
பேசுமின் றவர்தம் நாமம் பாலனப் பொறுப்பு மற்றே 554

தொழுகைக்கென் றான பள்ளி சுற்றிய கோட்டை நாட்டின்
செழுமையைச் செப்பும் மாடத் தலங்களும் நகர்ப்பு றத்தே
வழிகளும் மக்கள் ஒன்றும் வலயமும் பூங்கா தோறும்
அழகிய வேலைப் பாட்டின் அணியென வடிவங் காட்டும்
555

கட்டிடக் கலையில் மிக்கார் கைவண்ண ஓவி யர்கள்
திட்டமிட் டளித்த வற்றைத் திறம்படச் செயலிற் காட்ட
மட்டிலாச் சோபை கொண்டு மிளிர்ந்தன மாளி கைகள்
பொட்டணிப் பொய்யி டையார் போலவவ் வொன்றுங் காணும்
556

பீச்சிவான் புனல்தெ றிக்கும் புனற்குமிழ் காவின் நாப்பண்
காய்ச்சிய கரும்பொன் கொண்டு கடைந்தெடுத் தமைத்து வைத்தார்
பூச்சுனை கமலப் பொய்கைப் புறத்திலும் பதித்தார் நீரைப்
பாய்ச்சின சாம மெட்டும் பூவெடி வாணம் போன்றே
557

வீதிகள் தோறும் கொண்ட வளைவுகள் சிற்பச் சீரை
ஓதின உருவ மற்ற உறைகலை வடிவத் தாலே
பாதையின் புறத்தும் காணும் பல்வகைக் கோபு ரங்கள்
சோதியின் வடிவாய்த் தோன்றும் செங்கதிர் மாய்ந்த காரில்
558

புள்ளினம் அவற்றுள் வண்ணப் புறாக்களும் தொகையாய் வாழக்
கொள்ளிடம் கூடத் திப்பு கட்டிவைத் தழகு கண்டார்
உள்ளன அவையும் தம்முள் ஒன்றிய கலைப்பெ ருக்கின்
உள்ளமை காட்டு மாப்போல் ஒன்றல்ல ஊர்முற் றாமே
559

கூறுவர் கோயி லண்டை கலையெழில் மிளிரும் பாங்கின்
வாறெனத் திப்பும் ஆங்கோர் வதிவிடம் அமைத்தார் என்று
நீறெனத் தரையோ டொன்றி நீசரின் செய்கை யாலே
கூறுமற் றழிந்த தென்றாம் கடைமகர் கண்ணற் றோரே
560

சிற்பிகள் ஓவி யர்கள் தொழில்நுட்ப வல்லு னர்கள்
கற்பொறி யியலார் நீர்கொள் கலப்பணி வடிகால் ஆள்வோர்
முற்றிலும் மதிக்கப் பட்டார் முன்னேற்றப் பணிக்கென் றான
பொற்பவர் பொறுப்பா மென்னும் பான்மையால் சீரங் கத்தே 561

வெள்ளையர் பதம்ப திக்கும் வரையவை யனைத்தும் கண்ணைக்
கொள்ளையிட் டிருந்த தென்னக் கூறுவர் ஆய்ந்த றிந்தோர்
கொள்ளையர் வெள்ளைத் தோலர் காட்சிக்கா யான எல்லாம்
அள்ளியே சென்றதாயும் அறைந்தனர் அவையாங் குண்டாம்

562

கோட்டை

தீவதன் மேற்கின் எல்லைத் தொலைவினில் ஒருகல் தூரத்
தாவதா யமைந்த தன்னாள் திப்புவின் கருங்கற் **கோட்டை**
ஓதிடில் அதேகல் தூரத் தானது நேரே **"லால்பாக்"**
ஈதிடைப் பட்ட தாகும் **"தவ்லத்பாக்"** இன்னும் உண்டாம்

563

கோட்டைக்கும் "லால்பாக்" கிற்கும் கொடுமுனைப் போரின் முன்னே
நீட்டிய நெடுந்தூ ரத்து நிலப்பரப் பனைத்தும் மக்கள்
வாட்புலம் அமைந்தி ருந்த வரலாறும் உண்டாம் இன்று
காட்டிடக் **"கஞ்சம்"** மட்டும் காட்சிக்கா யான தாகும்

564

திப்புவின் நினைவு கூறத் தோன்றுவ தின்று கோட்டை
ஒப்பிய சிலகூ றொன்றும் உள்நுழை வாயில் தாமே
கப்பிய கலைக்கூ றெல்லாம் கண்காணா தழிவுற் றாலும்
செப்பிடும் பழைமை காணின் கண்கசிந் துருகு மன்றோ

565

வெள்ளையர் விழிக்குத் தப்பி விட்டதென் கார ணத்தோ
உள்ளதா மின்றும் பொல்லார் உறைசிறைச் சாலை அங்கே
வெள்ளையர் **"கேணல் பெய்லி" "பிரத்வைற்" - "பேய்த்ஜெ னாரால்"**
தள்ளியே பூட்டுண் டான சேதியை நினைதற் கென்றோ

566

கட்டிய போல இன்றும் காணலாம் சிறைக்கூ டத்தை
உட்புறம் இருண்ட தாக உருவகம் செய்த லுற்று
வெட்டையாய் முன்பு றத்து வளைவுகள் கொண்டுள் ளேயும்
கட்டியும் வைத்துள் ளார்கள் கைதிகள் அடங்க வென்றே

567

தனித்தனி அறைக ளேதும் தாங்கிலாச் சிறையி னுள்ளே
தனித்தனிப் பாக முண்டு தொடர்ந்தவை பலவாம் யாரும்
முனைந்திடில் தப்ப வொண்ணா முற்றிலும் பாது காப்பாய்
வனைவுறச் செய்துள் ளார்கள் வலியதாய் சீரங் கத்தே

568

பூமியின் பரப்பி ருந்து பலவடி உயரம் ஆங்கே
பூமியை அகழ்ந்த வாறாய்ப் பெருங்குழி வடிவில் செய்து
பூமியின் மேற்ப ரப்புப் பொருந்துமா றாகப் பின்னர்
பூமியைத் தொடுவ தாயும் படிகளை அமைத்துள் ளார்கள்

569

ஒருபுறம் கங்கை ஓடும் உள்ளிருந் தாழ நோக்கின்
பெரும்பள்ளத் தாக்கில் நம்கண் பார்த்திட உள்ள மஞ்சும்
மறுபுறம் மலையின் ஆழ மடியெனத் தாழும் வீதி
ஒருபுறம் மட்டும் தானே உள்வெளி வரப்போ தற்கே

570

மஸ்ஜித் - இ - அலா

சிற்றிளம் பருவத் தோர்நாள் திப்புவைக் கண்டோர் "பக்கீர்"
முற்றிலுஞ் சிறந்த வோர்நல் மன்னனாய் அரசேற் பீர்நீர்
கொற்றவம் பெற்ற பின்னென் கால்பதித் துள்ளிம் மண்ணில்
உற்றிடச் செய்யோர் பள்ளி ஓரிறை பணிதற் கென்றார்

571

பெரியவர் விருப்புக் கேற்பப் பதவிகொண் டாளுங் காலை
உரியவா 'ராயி ரத்தேழ் நூற்றுப் பன்னீ ரேழில்'
உருவான தாகும் **"மஸ்ஜித் இ-அலா"** வானு யர்ந்தே
ஒருவனாம் தனியோன் தன்னை உளத்துறைத் தேற்றற் கென்றே

572

வான்தொடு வாறாய் நீண்டு வரலாறு கூறும் பாங்கில்
தோன்றின "மினாறா"க் கள்ளீர் துணையெனப் புறமி ரண்டும்
ஆன்றறிந் தமைத்தி ருந்தார் அத்துறைச் சான்றோ ரன்னாள்
சான்றுரை செய்யுமின்றும் சரித்திர வரலாற் றிற்கே

573

வர்ணப்பூ வண்ணம் காணும் வகைவகைத் தோற்றத் தோடே
சொர்ணமுஞ் செஞ்சாந் தும்சேர் தூரிகைப் பந்தல் போலாம்
நிருணயம் போலு மாப்போல் நீளகல் சுவர்க ளெல்லாம்
ஒருவித மாகத் தோன்றும் உயர்கலை வடிவம் நோக்கின்

574

நிலைகத வனைத்தும் ஒன்றின் நிழலுரு வாகக் காணும்
கலையழ கேற்றி ருக்கும் கண்ணிமை கூடா நோக்கும்
வலியகான் மரங்கள் கொண்டு வடித்திருந் தார்கள் அன்னாள்
பொலிவினைக் கூற யாரும் புதுமொழி பெறுதல் வேண்டும்

575

பள்ளியின் முகடு திராட்சைப் பழக்குலைக் கொடிக ளொன்ற
உள்ளழ கூட்டும் வண்ண உருவத்தின் எழிலால் கொஞ்சும்
உள்ளதோர் கதவும் இன்றும் உள்நுழைந் திடாது காத்தே
பள்ளியுள் திப்பு வந்து போகவென் றமைந்த தன்றே

576

கூறுவார் தொழுகைக் கான காலம்வந் துறுங்கால் கங்கை
ஆற்றிருந் தாங்கு றையும் ஆழநீர்த் தாங்கி யுள்ளே
தோற்றுமாம் புனல்வந் துற்றோர் தூய்துறக் கழுவிக் கொள்ள
மாற்றொரு சேதி கூட மொழிகுவார் மெய்ய தாமோ!

577

திப்புயிர் வாழ மட்டும் தித்தித்த புனலூற் றொன்று
திப்புவின் மரணத் தின்பின் தன்சுவை யற்ற தாக
ஒப்புதல் மறுத்தல் ஓவ்வோர் உளத்தின்கண் உரிமை யாகும்
செப்புதல் ஒன்றே நாமுந் தெரிந்ததைத் தவிர்த்த லற்றே

578

தொழுகையின் காலப் போழ்து தேர்ந்திடக் கடிகா ரங்கள்
முழுமையாய் உபயோ கத்தில் முறையிலாக் காலம் அந்நாள்
பொழுதினைக் குறியாய்க் கொண்டு பார்த்திட வகைசெய் தார்கள்
வழுவிலா தேற்ற நேரம் வழுத்திட வேண்டு தற்காய். 579

கும்பாஸ்

சதுரமாய் ஆன தாகும் தாய்தந்தைக் காக வென்று
பொதுவினில் செய்த கூடம் பிரிவின்பின் அடக்கம் செய்ய
அதுதமக் காகு மென்றே அறிந்திலார் திப்பு ஈற்றில்
விதித்தபோல் புமமாங் கேதான் வேந்தரும் அடங்கி னாரே

580

கரியதாம் சலவைக் கற்கள் கற்தூண்க ளாக வோங்க
உருவமுற் றிருப்ப தந்த உறைபதி உடலந் தாங்கிக்
கருமரத் துண்டம் வெள்ளைக் கூறென யானைத் தந்தம்
பொருந்திடக் கதவு காணும் பூவன்ன வேலைப் பாட்டில்

581

அழகிய செம்பட் டாலே அடங்கிய அடக்கத் தானம்
முழுமையாய் மூடிக் காணும் மூன்றுமே வேறு வேறாய்
விழிமடற் சிறைக்குள் ளொன்றாய் வாங்கிடத் தேகம் முற்றும்
தொழிலறு நிலைமை கொண்டு சிலையென மாறிற் றன்றோ

582

இறைவனின் பாதை தன்னில் இன்னுயிர் நீத்தார் திப்பு
மறைவழி வாழ்ந்த தீரர் மாசிலா ஆட்சி யாளர்
அறையொன்றுள் அடங்கிப் போன அடக்கத்தைக் காண்பி னுள்ளம்
சிறையிடைப் பட்ட பாங்கில் தவித்திடல் தாங்கொ ணாதே

583

தந்தைதாய் அருகில் மீளாத் துயிலினில் திப்பு சுல்தான்
செந்தழல் வீரச் சிங்கம் துயிலுறுங் காட்சி நெஞ்சை
வெந்திடச் செய்ய வீசும் வெம்மையால் கண்ணி ரண்டும்
உந்துநீர் சொரிய லான உணர்வினை எங்கண் சொல்வேன்

584

புலியென வாழ்ந்த சுல்தான் பதிவுண்ட "கபுருஸ்த் தானை"ப்
புலிவரிக் கொண்ட செம்மைப் போர்வையர் மூடி யுள்ளார்
உலகினில் வாழ்ந்த காலை உவந்ததவ் வரிகள் இன்று
இலாதுமண் மறைந்த போதும் இருப்பதாய்க் காட்டும் வாறே 585

சுற்றியே திப்பு சுல்தான் சொந்தங்க ளான பேரின்
வெற்றுடல் பதிய மிட்டு வைத்துளார் பெயர்க ளோடே
சற்றரு காமை யில்லோர் தொழுகைக்காம் பள்ளி யுண்டு
அற்புதம் முகட னைத்தும் அழகிய வேலைப் பாடே

586

லால் மஹால்

ஸ்ரீரங்க நாதர் கோயிற் றிருத்தலத் தருக மைந்த
ஒருபெரும் மாளி கைதான் உன்னத அழகு காட்டி
இருந்தது **"லால்மஹால்"**என் றேற்றநற் பெயரி னோடே
பெருவிருந் தான தஃது பார்ப்பவர் கட்பு லத்தே

587

கட்டிவைத் திருந்தார் ஹைதர் கலையழ கோடு மென்பார்
வெட்டையாம் நிலமொன் றின்முன் வீரர்தம் அணிவ குப்பின்
முட்டமும் இருப்ப தாங்கே மலர்க்காடு பின்னால் காணும்
திட்டமிட் டமைந்த தென்னுஞ் சான்றுக்கு நிகர்ப்ப தாக

588

தனித்தவர் தங்கு மிந்தக் கோட்டையை வடிவ மைத்தோர்
தனித்தொரு புறத்தை விட்டுத் திரியுறத் திருமா டிக்கும்
தனித்தவப் புறத்தை மாடி தவிர்த்துமே அமைத் திருந்தார்
தனித்தவப் புறமே திப்பு "தர்பார்"உம் ஆகிற் றன்றே

589

"தர்பார்"இன் இடப்ப ரப்பைத் திப்புதன் அமைச்சர் தம்மை
உரையாடக் கொண்டார் ஆங்கே உற்றதாம் சுவர்க ளெல்லாம்
திருமறை வசனங் கொண்டு தெய்வீக மணம்ப ரப்பும்
அருகினில் படைஞர் பள்ளி அமைந்துமே இருந்த தென்பார்

590

ஈரானின் நிலவி ரிப்போ டெழில்காட்டும் நிலத்தில் ஆங்கு
சீராக வெண்பட் டாலே செய்ததாய்த் திரைச்சீ லைகள்
ஓரங்கள் தழுவு மாப்போல் உயர்ந்தசா ளரங்கள் மீது
பூரண மறைப்பாய்த் தொங்கும் பயன்கொள்ளு புலங்கள் முற்றும் 591

ஒளிசிந்தச் சரவி ளக்கில் ஒன்றிய மெழுகுத் தீபம்
பளபளப் பாக மின்னும் பல்வகைத் தோற்றங் காட்டும்
இளக்கிய செப்பால் வன்ன எழில்கொஞ்சு வடிவத் தோடே
விளைத்தன வவைக ளைப்பண் விற்பனர் வேலைப் பாடாம்

592

செம்மலர்ப் படுக்கை யாங்கு சுவரெலாம் ஓவி யர்தம்
செம்மையைச் செப்பும் வாகாய்த் தூரிகைப் பொழிவு காட்டத்
தம்மையே மறப்பர் காண்போர் தேசுகண் டயர்ந்தே போவார்
அம்ம!விஃ தெனனே யார்தம் அற்புத ஆற்ற லென்பார்

593

சைப்பிரஸ் நாட்டின் ஊசிச் சரவிலை மரங்க ளெங்கும்
வைப்பினால் சோலை சொர்க்க வளாகம்போல் காட்சி காட்டும்
கைப்படு வாகாய் ஒட்டுக் கனிமரம் கனிகள் காய்த்துப்
பிய்த்திடு மாந்தென் றுற்றோர் ஓர்ந்திடத் துலங்கு மாமே

594

பற்பல வண்ணம் போலும் பற்பல வடிவம் கொண்டோர்
அற்புதம் அற்பு தந்தான் இறைகொடை எனவாய் மெல்லப்
பொற்புறு மழகு காட்டிப் பூம்பொழில் மனத்தைப் பிய்த்துத்
தற்புறங் கொள்ளும் பாங்கு சொல்லுதற் கரிதா மன்றோ

595

"தாரியா தவ்லத் பாக்"

கோட்டையின் அருகில் ஹைதர் கட்டிடத் தொடக்கித் தந்தை
நாட்டத்தை மகன்மு டித்த நிறைவினை இன்னுஞ் சொல்பூந்
தோட்டமொன் றழகு சேர்க்கும் துணையென வான சீர்மைத்
தேட்டமாம் மரத்தி லான **"தாரியா தவ்லத் பாக்"**கே

596

மரத்தினா லான வந்த மாளிகை தரத்தி லோர்ந்தால்
மரத்தொழில் நுட்பந் தன்னின் முதன்மையை எடுத்துக் கூறும்
சரித்திரம் படைத்த வீரன் சரித்திர அடையா ளத்தின்
உரித்ததாம் பால னத்தின் உதவியற் றழியு தின்றே 597

வண்ணத்தா லோவி யங்கள் வரைந்துளார் யுத்தக் காட்சித்
தொன்மையை எடுத்துக் காட்டும் தந்தையும் மகனும் போரின்
திண்மையிற் றிழைத்தல் பூக்கள் செறிந்ததாய்க் காட்டுங் கோலம்
உண்மையோ விவையு மென்றே உணர்வறச் செய்தல் போலாம்
598

பதினொரு வருடங் கொண்டு பணித்ததாம் மனையை என்பர்
அதிதிகள் சந்திப் பாங்கே அமைவுறும் பிரத்தி யேகப்
பதியது திப்பு சுல்தான் பேரிலோர் நினைவுக் கூடம்
அதனிடை அமைத்தே யுள்ளார் ஆர்வலர் நோக்கற் பாலே
599

பதினெட்டாம் நூற்றாண் டீற்றிற் பற்றிய எழுபத் தெட்டில்
அதனுரு வாக்கல் தொட்டும் அமைந்தது ஹைதர் திப்பு
புதுமையாய் அமைத்தா ரஃதைப் பொற்புறத் தமது நோக்கில்
சிதைவுறு நிலையி லின்று தோன்றுதல் சகிக்கா துள்ளம்
600

லால் பாக் மாளிகை

திப்புவின் மாளி கைக்குள் தனித்துவங் கொண்ட திஃதாம்
ஒப்பிலா வழகி னோடே எடுப்பான தோற்ற மென்பர்
செப்புவர் களிமண் கொண்டே தனித்துவே றொன்று மற்று
திப்புநம் கீழைத் தேயத் திறன்காட்டச் செய்த தாகும்
601

மாடிகள் இரண்டு கொண்ட மாளிகை மேற்ற ளத்தில்
கூடிய பிரிவி னோடு கொண்டது முற்ற மொன்றும்
பேடியர் வெள்ளைப் பேய்கள் பயனுறா தொழிக்க வென்றே
நாடினர் முற்றா யஃதை நாசமுஞ் செய்திட் டாரே
602

பங்களூர் திப்புசுல்தான் கோடை மாளிகை

மரத்தினா லான தோர்நல் மாளிகை **"டெய்ரா தவ்லா"**
தரத்தொரு மித்த சோபை சொல்லிடும் வாயில் ஐந்தாம்
வர்ணத்தால் மிளிரும் எம்மை வரவேற்ற லொக்க திப்பு
சொர்க்கத்தின் நுழைவாய் என்று திருப்பெயர் வைத்தி ருந்தார்
603

இரண்டடுக் காகும் மேலே இருந்துகீழ் நோக்கு வாறு
மரத்தினா லான மாடி முன்தடுப் புடனே தச்சர்
கரத்திறன் உறுத்தல் போலாம் கண்கவர் வேலைப் பாடு
பொருத்தமாய் மாளி கையின் பெட்பினை மிளிரச் செய்யும்
604

இருபுறத் தருகும் மாடி ஏறிடப் படிகள் காணும்
மரத்தினால் தாமு மஃதே மலேசியத் தேக்கி லாகும்
கருத்தினைக் கவரும் கோலம் கடைச்சல்வே லைம ரத்தில்
பெருக்கியே யிருந்தார் சிற்பி பொளிந்தநற் சிலைகள் போலாம்
605

தூண்களும் மரமே ஒவ்வோர் தனிமரந் தனைக்க டைந்து
காண்பதற் கழகாய் தூணின் கழுத்திடை குறுக்கிச் சுற்றிப்
பூண்கள்போல் செதுக்கி ஏற்ற பாங்கினில் வண்ணம் பூசி
நீண்டுயர்ந் திருக்க நட்டு நிலைபெறச் செய்தி ருந்தார்
606

ஒன்றினைப் போலாம் ஒன்றென் னுருவினில் வடிவங் காட்டி
ஒன்றினை ஒன்று தொட்டே உடன்படு வாறு கூட்டி
பொன்றாத அழகு வேலைப் பாட்டுடன் தூண்கள் காணும்
இன்றிது போலா மென்றால் என்னிலை யன்ற தாமோ
607

கல்லினால் சுவர்கள் பூமி கருங்கல்லின் துண்டக் கூட்டு
வல்லமை கொண்ட தாக விளங்கிடச் சேர்த்தி ருந்தார்
பல்வகைச் சித்தி ரங்கள் பூக்களின் அழகு காட்டும்
கல்லிலும் மரமே விஞ்சும் கோடைவா சலத்தின் கண்ணே 608

கிருஷ்ணகிரி கோட்டை

செங்குத்தாய் நிமிர்ந்து நிற்கும் தோரணை கொண்ட தாகும்
முக்கியம் வாய்ந்த தொன்றாய் மதித்தவர் திப்பு அன்னாள்
தக்கதாய் **"பலக்குல் அஸ்ஆம்"** "தொலையுயர் வானம்" என்றே
மக்களும் அறிவர் இந்த மகோன்னதப் படைப்பை அன்றே

609

அடக்கமுற் றுள்ள தீங்கீர் அரசிளங் குமாரர் வீரச்
சடலங்கள் திப்பு மக்கள் 'சையத்க்ஷா பஹாஉத் தீன்'உம்
அடுத்தவர் 'சஹாபுத் தீனு'ம் அமர்க்களச் சிறுத்தை யர்கள்
உடன்சிர சற்ற தேகம் உள்ளதாய்ப் புகலு வாரே

610

பூமிக்கு அடியி லுள்ள பாதாளக் கூடந் தன்னில்
கோமானுக் குரித்தாம் மன்றம் கோல்நீதி ஓச்சுந் "தர்பார்"
பூமிக்கு மேலே நான்கு புனற்பொய்கை உண்ட தாகும்
ஆமிவற் றோடு இன்னும் அழகுறு பலவும் உண்டாம்

611

கோட்டையின் உச்சி மீது கால்பதித் துற்ற சுற்றம்
நோட்டமிட் டிடுங்கால் பார்க்க நேருமாம் நகரை முற்றாய்
காட்சிகொள் ளழகாம் கிருக்ஷ்ண கிரி'யுடன் மலையின் சாரல்
மாட்சிமை பெரிதே கண்ணுள் மலர்ந்திடும் சுகமோர் பேறே

612

வான்தொடு மலைகள் மீது வளர்ந்துள பசுமைக் கானம்
தேன்நுகர் வண்டு மொய்க்கும் தூமலர்ப் பொழில்கள் ஆங்கக்
கானுறை யுயிர்கள் உண்ணுங் கனிமுதற் பலவும் நீரும்
வானவ னருளால் காணும் வளத்தினை நோக்கற் பாலே

613

தாக்கியே அழிக்க வொண்ணாத் திடமிகு கோட்டை தன்னில்
நோக்கிடு மிடங்க ளெல்லாம் நிலைத்தன ஓவி யங்கள்
தூக்கிடு மழகு கையால் செதுக்கிய உருவத் தோற்றம்
சீக்கிலா அளவு ஒவ்வோர் சிற்பத்தின் சீர்மை காட்டும்

614

கரிஎலி மீன்க ளாமை குரங்குபோற் பலவும் தெய்வ
உருவங்கள் உருவைப் போற்றும் உடனொன்றி வாழ்வோர் செய்கை
உருவத்தை வணங்காத் திப்பு உவந்திலை அழித்தொ ழிக்க
தருமமஃ தில்லை மாற்றார் தெய்வத்தைப் பழித்த லென்றே

615

அணைக்கென நாட்டிய அடிக்கல்

விவசாயம் பெருக வேண்டின் வயல்நிலம் புனலை வேண்டும்
அவசியம் உணர்ந்தார் திப்பு அதற்கொரு முடிவுங் கண்டார்
புவிவளம் அறிந்த தாலே பொருந்திடும் வகைகள் ஓர்ந்து
நவதொழில் நுட்பம் சேர நாடினார் அணையொன் றாக்க

616

கட்டிட வேண்டும் நீண்ட காவிரி நதிமேல் முற்றுங்
கெட்டியாய் அணையொன் றென்ற குறிக்கோளும் மனதில் உந்தத்
திட்டமொன் றுருவா கிற்று தண்புனல் தடுத்துக் கால்வாய்
விட்டிட நீரை நெல்கொள் வயல்நிலம் செழிக்க வென்றே

617

தொண்ணூற்றி யோராம் ஆண்டு சேர்பதி னெட்டாம் நூறில்
அணைக்கான அடிக்கல் நட்டு ஆரம்பம் செய்திட் டாலும்
சுணங்கிற்று வேலை யுத்தந் தொடர்ந்ததால் பின்னர் கூட
இணங்கிட வில்லைக் காலம் இயற்றிடாக் கனவா கிற்றே

618

நாட்டிய சாச னக்கல் நிலைபெற்றே யுள்ள தின்றும்
கூட்டியே பதித்துள் ளார்கள் "கிருக்ஷ்ண ராஜ சாகர்"
மேட்டணைச் சுவரின் மீது மன்னரின் எண்ணம் பின்னாள்
நாட்டமுற் றதுவாம் வெள்ளை நாட்டவர் பொருட்டி னாலே

619

பிரயாண வசதிக் காகப் பாதைகள் நாடு முற்றும்
உரியவா றமைத்தார் நாட்டின் உற்பத்திப் பெருக்கம் வேண்டிக்
உருக்காலை கரும்பு ஆலை உடைக்கான நெசவுச் சாலை
பெருக்கினார் கால்ந டைகள் பெருகவும் வழிச மைத்தார்.

620

திப்புவின் சிம்மாசனம்

எண்கோண வடிவத்தில் தங்கத் தாலே
ஆனதுசிம் மாசனமும் அழகைக் கூட்ட
எண்ணரிய மணிகள்கொண் டிருந்த தஃது
இருப்பினெலாப் பகுதியிலும் புலிச்சி லைகள்
உண்மையுரு வாகவதில் வைரம் "ரூபீ"
உடன்பச்சை மரகதங்கள் புலிப்பா தங்கள்
கண்கவரச் செய்திருந்தார் கைதேர்ந் தோர்கள்
கடைசிவரை அதில்திப்பு அமர்ந்தா ரில்லை

621

சிவந்தமணிக் கண்களோடு சினத்தைக் கக்கும்
தோரணையில் புலிகள்எண் புறமும் தோன்ற
பவித்திரமாய் மகுடம்போல் நாப்பண் தோன்றும்
பறவையொன்று புடமிட்ட தனிச்சொர் ணத்தில்
நவின்றிடிலோ முற்றுமது மாணிக் கங்கள்
நிறைந்தவொரு பொற்குவைபோல் அழகு காட்டும்
கவர்ந்துசென்றார் கொள்ளையிட்ட கள்வர் கூட்டம்
கூறவொண்ணாப் பெறுமானங் கொண்ட தாமே

622

அழகான வடிவத்தில் அமைந்த தஃது
அரசர்தம் ஆணைப்படி அனைத்தும் கூடும்
பழைமைக்கும் புதுமைக்கும் பொருந்தும் பாங்கில்
பெரிதான அமைப்பினிலே கலைநுட் பத்தின்
முழுமையுங்கொண் டமைக்கவைத்தார் மன்னர் தம்மின்
மதிநுட்பந் தனையுமது கூறும் பாங்கில்
எழிலுக்கெழில் சேர்க்கின்ற கொலுவி ருக்கை
இன்றில்லைக் காண்பதர்க்கு ஈன ராலே

623

பஞ்சணையி னோடுசுற்றிப் பட்டா லான
படாங்களிலே புலியுருவம் பதிந்த தோடு
குஞ்சங்கள் சுற்றிவரத் தொங்கும் கண்கள்
குளிர்வண்ண நூலிளையின் கற்றை யாலே

எஞ்சியுள்ள இடமெல்லாம் புலியின் தேகத்
திடைப்பட்ட வரிகளச்ச மூட்டும் வாகாம்
அஞ்சாத நெஞ்சுடையார் திப்பு சுல்தான்
அமராத இருக்கையது அவர்பேர் சொல்லும்

624

வெள்ளையரை வெளியேற்றும் நாள்வ ரைக்கும்
வீற்றிருக்க மாட்டேனம் மஞ்சம் என்றே
உள்ளத்தால் உறுதிகொண்டே இருந்தார் திப்பு
ஒன்றவில்லை வாய்ப்பதற்கு மாண்ட அன்றே
கொள்ளையர்கள் துண்டுதுண்டாய் உடைத்தெ டுத்துக்
கொண்டுசென்றார் தமதகத்திக் கின்று மஃது
உள்ளதுபல் கூறுகளாய் ஐரோப் பாவில்
உரிமைகொண்டோர் பற்பலராய் வரலா றாகும்

625

திப்புவின் புலி

வெள்ளையரின் மீதுகொண்ட வெறுப்பைக் காட்டும்
வாகிலொரு பொறிதன்னைத் திப்பு சுல்தான்
கொள்ளைமதி நுட்பமொடு செய்தி ருந்தார்
கொலைவெறிகொள் புலியொன்று குரலெ ழுப்பி
வெள்ளையன்மேல் பாய்வதுபோல் அவனோ அன்னான்
விதிமுடிந்து போகவுள்ள நிலைமை யாலே
முள்ளிலைகப் பட்டவொரு பன்றி போல்கை
மேலுயர்த்தி கத்துவதைக் காட்டும் பாங்கே

626

ஒரேமுறையில் ஈருயிர்கள் ஒலியெ ழுப்பும்
உத்தியது வெறிகொண்ட புலியின் பொல்லா
உறுமலொடு மூச்சடங்கும் வெள்ளை யன்தம்
உதவியற்ற நிர்க்கதியின் இயலா ஓலம்
பொருந்துவபோல் இசைக்கருவி தன்னில் தோன்றப்
படைத்திருந்தார் புலியுடலில் பொருத்தி வைத்தார்
விருந்தாகும் இன்றுமது காண்போ ருக்கே
வரலாறு பேசுமொரு சின்ன மாக 627

வெறுப்பையுமிழ் கின்றபடி அமைந்திட் டாலும்
வெள்ளையரும் வியக்கின்ற வடிவ மைப்பை
முறையான பொறிநுட்பந் தன்னைத் தாங்கி
மன்னர்திப்பின் எண்ணத்தின் பிம்ப மாக
உருவாக்கி இருந்தார்கள் பிரெஞ்சுக் காரர்
உயிர்கொண்ட ஈருடல்கள் ஒன்றி லொன்று
இருப்பதுபோல் ஆனதது எதிர்கா லத்தும்
எடுத்துரைக்கும் திப்புவின்மெய் ஞானந் தன்னை
628

திப்புவின் உடைவாள்

நீளத்தில் நாற்பத்தீர் அங்கு லங்கள்
நீண்டதொடு கைப்பிடியில் சொர்ணஞ் சுற்றி
ஆழப்ப தித்திருந்த தாகும் கற்கள்
அழகியதாம் மரகதங்கள் பச்சை வண்ணம்
சூழவதில் வைரமொடு சிவப்பு "ரூபி"
சேர்த்துமெரு கூட்டினவாம் "இறைவன் ஆட்சி"
நீளலகில் பதித்தவிரு சொற்கள் வாளில்
நிமலனருள் வேண்டியதாய் நிகரில் அஃதே
629

அடலார்தம் சிரசரிந்து வாகை கொண்டு
ஆட்சிதனை நிலைநிறுத்தத் துணை யளித்தே
உடலோடு பிணைந்திருந்த உடைவாள் ஈற்றில்
உயிர்போகுந் தறுவாயில் பற்ற வந்த
கொடியவெள்ளை யரக்கனையும் இருகூ றாகக்
கூறிட்டே இன்றுமவர் வீரம் செப்பும்
உடலழிந்து போனாலும் திப்பு மன்னர்
ஊனமில்லா வாழ்வுதனை உரைக்கும் சான்றே
630

புலியுருவ இலச்சினை

புலியுருவ இலச்சினையை அனைத்தின் மீதும்
பதியவைத்தார் திப்புசுல்தான் வாளின் பட்டம்
தொலைவிருந்து சுடுந்துவக்கு பீரேங் கிக்கள்
சிப்பாய்கள் அணிகின்ற அங்கி மற்றும்
விலைகொள்ள இயலாச்"சிம் மாச ன"த்தும்
வரிக்குந்தன் போரங்கி முகமூ டிக்கள்
தலைக்கணியும் சிரக்கவசம் பதாகை யெல்லாம்
சேர்ந்திருந்த தாகுமது மன்னர் ஆணை
631

புலிகளினை வளர்த்துவந்தார் திப்பு சுல்தான்
புஜபலத்தின் அடயாளம் பிள்ளை கள்போல்
வலம்வருவா ரவையோடு "கஜானா" வுக்கும்
வைத்ததவர் காவலுக்காய் அவற்றை யென்பார்
உலகைவிட்டு மறைந்தவுடன் பறங்கிக் கூட்டம்
உட்புகுந்தார் கொள்ளையிடக் காவல் செய்யும்
புலிகளினைக் கொன்றொழித்த பின்னே யாங்கு
பாதுகாத்து வைத்ததிரு பறிபோ யிற்றே
632

பிற நாட்டுத் தொடர்புகள்

பாரதத்தின் ஆட்சியாளர் தம்மைக் கூட்டிப்
பொதுவான அமைப்பொன்றைத் தோற்று விக்க
ஆரம்ப முதற்கொண்டே முயன்றார் திப்பு
ஆங்கிலேயர் தமையோட்ட மராட்டி யர்கள்
ஓரமுற்றார் அவரோடே நிசாமும் ஒன்ற
ஒன்றுபட முடியாத நிலைமை தோன்றும்
வேறுவழி யிலாதேபிற நாட்டி னோரின்
வழியுதவி கொள்ளவவர் விருப்புக் கொண்டார்
633

சொந்தமண்ணில் ஆள்பவர்கள் வெள்ளைப் பேரைத்
துரத்துதற்குத் துணைநில்லா நிலையில் வேற்றார்
பந்தத்தை நாடலன்றி வேறில் லாது
போனதன்று திப்புவிற்கு முயல லானார்
இந்தியாவில் அன்றிருந்த பிரஞ்சுக் காரர்
எல்லைஆப்கான் தூரத்துத் துருக்கி நாட்டார்
வந்துதவ வேண்டுமென விரும்பித் தூது
விட்டனரே திப்புவதன் விபரஞ் சொல்வாம்
634

காரணங்கள் மூன்றுண்டாம் உதவி வேண்டக்
கொள்ளையராம் வெள்ளையரைத் துரத்த லொன்று
சீரான வியாபாரத் தொடர்பு கொண்டு
தாய்நாட்டின் பொருட்பெருக்கை கூட்ட லொன்றாம்
காரணத்தில் மற்றொன்றாய் இஸ்லாம் போற்றும்
கூட்டமைப்பைத் தோற்றுவித்த லாகும் திப்பு
வேரறுந்தார் மூன்றினிலும் என்ற போழ்தும்
வரலாற்றின் பெருமைகொண்டார் தீரத் தாலே
635

பிரான்ஸுடன் தொடர்பு

உள்ளபடி சிறிதளவில் உதவி செய்தார்
உண்டான போரிரண்டில் பிரஞ்சுக் காரர்
வெள்ளையரை நாட்டிருந்து விரட்ட வேண்டின்
வகைசெய்யும் அவர்பலமும் என்ப தாலே
தள்ளவில்லை திப்புத்தம் தோழ மையைத்
தொடர்ந்திருக்கப் பலவகையில் உதவி கூட்டிக்
கொள்வதிலுங் கருத்தானார் இருந்துங் கூடக்
காட்டவில்லை உறவவர்கள் நம்பும் வாறே
636

தம்படையில் கௌரவத்துப் பங்கு தாரர்
தாமாக அன்னவரைத் திப்பு சுல்தான்
செம்மையுறப் பதவிகளும் தந்து வந்து
சேர்த்திருந்தார் நாடிரண்டுக் கிடையி லான

நம்பிக்கை வளம்பெறவே தூது வர்கள்
நலஞ்சேர்த்தார் இருபுறத்தும் இருந்து மன்னார்
தம்மளவில் வெள்ளையரைத் தோழ மைக்குத்
தேர்ந்தனரே திப்பறியா வாகி னோடே
637

மராட்டியரோ டானயுத்தம் வெடித்த போது
மன்னர்திப்பு வேண்டுதலுக் கமையப் பிரஞ்சார்
ஒருபுறமுஞ் சாராது தமைத்த னித்தார்
ஓராயி ரத்தெழுபத் தெண்பத் தாறில்
விரும்பவில்லை ஈராண்டு கழித்து நட்பை
விரும்பிசுல்தான் வேண்டினும் அவர்தம் பேரில்
விரும்பினரே உதவிசெயப் பின்னோர் போழ்து
விரும்பிடலாம் தமக்குதவ என்ப தாலே
638

ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற் றீரில்
ஆனமைசூர்ப் போரினிலே உதவா துற்றார்
நேயவுடன் படிக்கைக்கும் ஏற்ற வாறு
நடவாது மேலாண்மை கொண்ட தாலே
தேய்ந்ததவ ருறவுவெள்ளைப் பேர்க ளோடே
துயர்கொண்டார் பிரெஞ்சாரும் பின்னாள் திப்பு
நேயக்கை நீட்டிடவே பற்றி னார்கள்
நம்பிக்கைக் கானவுடன் படிக்கை கண்டே
639

ஆறுநூறு ஐரோப்பர் கூடப் பிரஞ்சார்
ஆயிரத்தோ டெண்ணூறு வாகக் கூடும்
வாறுதிப்பு தம்படையில் வளம ளிக்க
விரும்பியதும் உடனேற்றார் வெள்ளை யோரைக்
கூறிடவே சினங்கொண்டு வெகுண்ட போது
கூட்டுதவி எதிர்பார்த்தார் திப்பு வின்பால்
நீறுபூத்த நெருப்பெரிந்து போன தொப்ப
நாடுபுக்கி னோரிடையில் போர்பற் றிற்றே 640

பிரெஞ்சாரின் கவர்னராணை பாண்டிச் சேரிப்
புலத்திருந்து பிறந்ததது திப்பு வோடே
ஒருமித்து வெள்ளையரை எதிர்த்து வென்றும்
உடனவர்கள் இழந்தவற்றை மீட்டெ டுக்கக்
கருத்துடன்பா டடைகவென ஆனால் திப்பு
கருத்திலதை ஏற்கவில்லை வெள்ளைக் காரர்
பொருத்தமவர்க் கன்றிருந்த துடன்பாட் டாலே
பிறழ்தல்செய் தால்தர்மம் பிழைக்கு மென்றே

641

யுத்தத்தி லுடன்படாத போதும் 'பாரிஸ்'
உடன்பட்டால் நிபந்தனைக்காம் உடன்பா டொன்று
வித்தாகும் வழியுண்டாம் என்றார் திப்பு
வழிகண்ட அனுபவத்தால் ஏற்ற வாறு
பத்தாயி ரம்படைஞர் ஆயு தங்கள்
பிரஞ்சுவழி வரவேண்டும் தமதாம் ஆணை
ஒத்தவர்கள் பற்றிடவும் வேண்டும் என்றார்
உடன்பாடு தோன்றவென்னும் நோக்கி னோடே

642

யுத்தவழி முறைவேறாம் ஐரோப் பாவில்
இந்தியாவின் முறைகளுடன் ஒப்பு நோக்கில்
ஒத்துவரா தவர்முறைகள் இங்காம் என்றே
ஓர்ந்ததனால் பிரஞ்சுடையார் தளகர்த் தர்தம்
வித்தகத்தில் பொருந்திடினும் அவர்கள் தம்மை
வழிபற்றிச் செல்லுவதில் உடன்பா டற்றே
எத்திவைத்தார் நிபந்தனையைத் தம்பால் முற்றும்
ஏவுமதி காரங்கள் வேண்டு மென்றே

643

வெற்றிபெறின் யுத்தத்தில் ஆங்கி லேயர்
வசமுள்ள பகுதிகளை மீட்டெ டுத்துச்
சுற்றியுள்ள கரையோர மனைத்தும் பிரஞ்சுச்
சகாவினர்க்கும் மத்தியுள்ள பிரதே சங்கள்

முற்றுந்தம் வசமென்றும் முன்மொ ழிந்தார்
மனமொப்ப வில்லையவர் நிபந்த னைக்கே
அற்றிருந்தார் திருப்தியவர் மராட்டி யர்கள்
ஆங்கிலேய ரோடுகொண்ட யுத்தத் தாலே

644

இந்தியாவில் உடன்பாடு காணாப் போழ்தில்
இராணுவநல் லுடன்பாடு கொள்ளும் நோக்கில்
சந்தித்தே உரையாடக் குழுவொன் றன்னார்
தூதோடு பிரஞ்சுநாடு சென்ற தாங்கே
சொந்தத்துள் பகைதோன்றி ஆட்சிப் போரில்
சிக்கியிருந் தார்கள்தன் பொருட்டால் "லூயி"
வந்தவரை உச்சத்தில் மதித்தா லுந்தன்
வகையற்ற நிலையுணர்த்தி யனுப்பி வைத்தார்

645

பிரான்சுடனாம் நட்பிருந்த போதும் அன்று
பாண்டிச்சே ரிப்புலத்தில் வாழ்ந்தி ருந்த
புரட்சியாளர் தமைபிரான்சு விரட்டுங் காலை
பாதுகாப்புத் தந்துதவி செய்தார் திப்பு
அரசருக்கு எதிரான புரட்சி யஃது
அதற்குடமை யானவர்கள் "ஜாகோ பீன்கள்"
புரட்சிவென்ற பின்னாலும் அன்னார் தம்மைப்
புறந்தள்ள வில்லையவர் பலம்போ லானார்

646

வெற்றியினைக் கொண்டாடும் நோக்காய் ஆட்சி
வரலாற்றின் மாற்றத்தை எடுத்துக் காட்ட
கொற்றவரின் முடியாட்சிச் சின்ன மெல்லாம்
கொழுந்துவிட்டே எரிகின்ற தீயி லிட்டுக்
கருக்கினரே "ஜாகோபீன் புரட்சி" யாளர்
கலந்துகொண்டார் திப்புமந்தக் கொண்டாட் டத்தில்
பொருந்தியவர் கொடுத்தார்கள் "குடிமான் திப்பு"
பட்டமொன்றும் பிரியமுடன் எற்றார் மன்னர் 647

ஈரானுடனான தொடர்பு

ஆயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற் றேழில்
ஆனதொரு தொடர்பு"ஈரான்" நாட்டி னோடே
போயிருந்தார் அந்நாட்டு ஷாவின் மைந்தர்
பொருந்தாத மனங்கொண்டார் தந்தை மீதே
தாயன்ன பற்றுடனே திப்பு சுல்தான்
தம்பதிக்கு வந்தவரை கௌர வித்து
ஓய்வுகொள்ளத் தனியில்லம் ஒதுக்கித் தந்தார்
உள்ளவரை தினமவரைக் கண்டும் வந்தார்

648

விடைகொண்டு தாயகத்தை நாடும் நாளில்
வாழ்த்திவிடை யளித்ததொடு தழுவிச் சொல்வார்
"திடமாக நானுங்கள் தேசந் தன்னைத்
தரிசிப்பேன் வருநாளில் "ஸம்சன் ஷா"வின்
உடன்பாட்டில் நாடிரண்டுக் கிடையி லோர்நல்
உறுதிமிகு ஒப்பந்தம் செய்வோம்" என்றார்
உடனதற்கு மன்னர்மகன் ஒப்பித் தம்மால்
உதவிடவும் முடியுமென வாக்கு ரைத்தார்.

649

பலமான படைபலங்கள் இல்லா ரென்று
புரிந்துமவர் செலவிளைந்த கார ணம்முன்
நிலவழியில் ஐரோப்பா நாடு சென்று
நடந்தவொரு வாணிபத்தின் தொன்மை மீண்டும்
நிலைநிறுத்த ஈரானின் நிலப்ப ரப்பு
நன்குபயன் பெறுமென்ற கார ணத்தால்
நலமாகும் நாட்டிடையில் வியாபா ரத்தை
நிறுத்திடவும் காரணமாம் வேறொன் றில்லை

650

நாடிரண்டுக் கிடையினிலும் நிலையாய் மையம்
நிலைகொண்டால் வெற்றியுண்டு வாணி பத்தில்
தேடிடலாம் பெருலாபம் இருநாட் டாரும்
சம்மதித்தால் எனக்கூறி ஓலை யொன்றின்

கூடவொரு தூதுவரை "நூறுல் லாஹ்"வைக்
கைப்படுத்தி அனுப்பிவைத்தார் திப்பு சுல்தான்
நாடியது வேறொன்றும் உண்டாம் ஆட்சி
நலம்சேர்க்கும் கூட்டொன்றை அமைப்ப தஃதே

651

பிரித்தாளும் கொள்கைகொண்ட ஆங்கி லேயர்
பங்கமுறச் செய்தார்கள் திட்டந் தன்னை
உருவாக்கி விட்டனரே ஈரான் நாட்டில்
உள்ளவிரு இனத்திடையே கலவ ரத்தை
மருவாரின் செய்கையினால் **'சீயா' 'சுன்னி'**
மதக்கொள்கை பிரிவினையால் குழப்பம் தோன்றக்
கருவினிலே கருகியது திப்பின் திட்டம்
கைகடத்துப் போனதொரு கவல்நி கழ்வே

652

உலகளவில் அரசவழித் தொடர்பு கொள்ள
அவாவுற்றார் சுல்தான்அந் நாட்டங் கூடப்
பலங்கொண்ட பிரித்தான்ய மேலா திக்கம்
பலங்காண விடவில்லை அத்தோ டன்னாள்
வலுவான புரட்சியொன்று பிரான்சு நாட்டில்
வலுப்பெறவு மானதொரு வலுவி ழப்பே
சொலமாட்டாக் காரணங்கள் பிறவு முண்டாம்
திப்புசுல்தான் சென்றவழித் தடைக ளாக

653

முன்னேற்றத் தடைகளொடு "ஆப்கா னிஸ்த்தான்"
முதலான "துருக்கி" "பிரான்ஸ்" நாட்டி னோர்கள்
முன்வைத்த உதவிகளும் இலாது போக
முடக்கமுற்ற தாகிற்றே முயற்சி யாவும்
கண்விழித்துக் காத்திருந்த பறங்கி யர்கள்
காலத்தின் பயன்கொண்டார் அந்தப் போழ்தில்
முன்னேற்றம் கண்டார்கள் இந்தி யாவுள்
மூடாத வழிநுழையும் மந்தைக் கொப்ப

654

திரைமறைவில் துரோகத் தீ

ஆட்சியை யேற்ற காலம் அரியணை யாசை கொண்டோர்
வீழ்ச்சியுற் றான செய்தி வேறுண்டு ஹைதர் கண்ணின்
காட்சியா யோர்கால் நின்ற சிறுவனாம் ஆயாஸ் என்போன்
ஆட்சிக்கே ஆசை கொண்டான் அறிவிலி நன்றி கொன்றோன்
655

மலபார்மண் புறத்தே யோர்கால் மன்னர்தன் விருப்பின் பேரில்
சிலநாட்கள் தரித்தி ருந்தார் தெருவழி செல்லும் போது
குலத்தினில் நாய ரான குமாரனைக் கண்டார் அன்னான்
நலத்தினை எண்ணித் தன்பால் தத்தெடுத் தழைத்துச் சென்றார்
656

சன்மார்க்கம் தன்னில் சேர்த்துச் சிறப்புற "ஆயாஸ்" என்றே
நன்னாமஞ் சூட்டி அன்பால் நனையுறச் சீர்மை காட்டித்
தன்வழிப் பிள்ளை போல திப்புவின் தம்பி போல
முன்னிலைப் படுத்திக் கல்வி முறைப்பட அனைத்தும் தந்தார்
657

பின்னவன் றனக்குக் கோட்டைப் பதியெனப் பதவி தந்தார்
அன்னவன் அனைத்துங் கொண்டும் அடாதது செய்தான் அந்நாள்
வன்மனங் கொண்டே நாட்டை வழிகெடுத் தலைந்தோ ரோடு
தன்னையும் சேர்த்துச் சூழ்ச்சி தனக்குமோர் காவ லானான்
658

"சித்தல்துர்க்" கோட்டைக் கன்னான் தலைமையை முதன்மை யாக்கிச்
சத்தியங் காப்பா னென்னும் தலைமகன் கனவு பொய்க்கப்
பித்தனாய்ப் பதவி மீது பற்றுற்றே எதிரிப் பேரின்
உத்தம நண்ப னானான் ஊர்ப்பழி சுமந்திட் டானே
659

உள்ளிருந் துயிர்ப றிக்கும் ஊனநோய் போலு மன்னான்
உள்ளிருந் துலைவைத் தாட்சி ஒன்றிடத் தன்பா லென்றே
கள்ளமாய்ச் சூழ்ச்சி செய்தான் கூடவே சிலபேர் தம்மை
விள்ளிட வைத்தான் தன்கை வலுவுறல் கருத்தாய்க் கொண்டே 660

பதவியில் உயர்ச்சி மன்னர் பேரினில் பெறுவா னாக
விதியுற்ற போதும் பல்லோர் விருப்புறார் வஞ்சம் ஓர்ந்தோர்
மதிமிகு திப்பு கூட மனத்தள வொப்ப வில்லை
பொதுவினில் அனைத்துப் பேரும் பேசிடத் தயங்கி னாரே
661

வெள்ளைய ரோடு யுத்தம் வந்துற்ற போதே யோர்கால்
எள்ளள வேனும் அன்னான் ஏற்றன னில்லைப் பங்காம்
உள்ளகம் கொண்ட தன்னாள் ஒண்டவந் துற்ற பேரின்
உள்ளத்தி லுறைந்து தன்பால் உதவிகள் பெறுவ தாமே
662

மற்றுமோர் சூழ்ச்சி கூட மலர்ந்ததாம் "பக்கீர் கூட்டம்"
முற்றுமே தமைத்து றந்து மார்க்கத்தை வளர்ப்போர் போலும்
அற்புதச் செய்கை காட்டி அறியாத பொதுச னத்தைச்
சொற்றிறன் கொண்டும் தம்பால் சேர்த்திட முயன்ற பேர்கள்
663

ஹைதரின் இரண்டாம் பிள்ளை கரீமைத்தம் வசமா யீர்த்துக்
கைதர முயன்றார் ஆட்சி கைப்பட வெனவாம் ஆயின்
கைதர வில்லைக் காலம் கடத்திட கைபொ சுங்கி
நைந்தனர் திப்பின் ஆட்சித் தலைமையை ஏற்ற தாலே
664

வரிவசூல் செய்யும் பேராய் வரித்தனன் பதவி மைசூர்
அரசினில் "ஆஞ்சி ஷாம அய்யங்கார்" என்னும் பேரான்
குரூரமாய் மக்கள் சொத்தைக் கொள்ளையிட் டானாம் அந்நாள்
வரியெனும் பேரில் தானே வருபலன் கொண்டிட் டானே
665

முறையிட்டார் மக்கள் மன்னர் முகதாவில் சினமேற் கொண்டு
முறைப்படி தண்ட னைக்கு முகந்தர வைக்க நேர
மறைமுக மாக மன்னர் மன்றிலில் அவன்சார்ந் தோர்கள்
குறைதனைப் பொறுக்க வேண்டிக் கருணைக்கை நீட்டி னாரே
666

மந்திரச் சுற்றத் தாரின் மதியுரை மதித்து மன்னர்
சொந்தமாய்க் கொண்டி ருந்த தகுதியில் தாழ்த்தி வேறாய்த்
தந்தாரோர் பதவி அன்னான் தகைமைக்குக் கீழாம் தம்பால்
வந்ததைப் பெற்றான் உள்ளே வாழ்தலின் தேவை யோர்ந்தான்

667

பழிவாங்கும் எண்ணந் தானே புதுப்பணி ஏற்கக் காலாம்
அழித்திட எண்ணாங் கொண்ட ஆங்கிலப் பறங்கி யர்க்கு
வழிவந்த தவனால் முற்றும் வாய்த்தபே ரவனு மானான்
பழியஞ்சான் அவனி னோடு பங்குற்றார் சிலபே ராண்டே

668

ராணியின் சூழ்ச்சிக் கும்பல் சேர்த்தது ஷாமய் யாவைத்
தூணென வவனு மானான் திப்புவைக் கொன்றொ ழிக்கும்
வேணவாக் கொண்டா ரன்னார் வகைபடத் திட்டந் தீட்டிப்
பேணினார் ரகசி யத்தைப் பிறரறி யாத வாறே

669

அரசகட்டிலும் அறப்போர்களும்

மன்ன ரென்றுமே பதவி கொண்டபின்
மறக்க ளம்பல கண்டதை
முன்ன ருரைத்தவா றோது தல்மிக
மேன்மை யாகுமே ஒன்றென
மன்னு டைப்புயல் போலு மாமவர்
மறவ ரஞ்சிடு மறவராய்க்
தன்னை முதன்மையாய்க் கொண்டு செய்தபோர்
செகம றிந்தவை கூறுவாம்

670

பேடனூர்ப் போர்

மன்னர் ஹைதர்தம் மறைவை யொட்டிய
மகிழ்ச்சி யடங்குமுன் வெள்ளையர்
உன்னி னர்பல ஊர்கள் தம்வசம்
உடைமை யாகிட 'மங்களூர்'
தன்னை யும் 'பேட னூ'ரை யும்மவர்
சேர்த்துப் பறித்திடத் தளபதி
ஜென்ரல் மத்யூவின் தோளில் வைத்தனர்
சேனை பெரிதென ஓதுவார்

671

மேற்குக் கடற்கரை வந்த டைந்தனன்
முடங்கிப் போனது 'ராஜமான்'
மாற்றி **'ஹொனோவர்'**பால் வளைத்த னன்னது
முன்னர் போலுமே கோட்டைகள்
ஏற்ற னன்தொடர் இலக்கதாய்ப் **'பேட**
னூர்"கொள் கோட்டையின் முற்றுகை
சாற்றி டில்லிவன் சாக சம்பெரி!
தான தில்லையே எதிர்ப்பிலான்

672

கோட்டை முதல்வனாய் 'ஆயாஸ்' என்றிடும்
கயவன் இருந்தனன் தலைவனாய்
கோட்டை யவன்வசம் கைய ளித்தவர்
ஹைதர் மன்னராம் வளர்த்தவர்
காட்டி னானவன் கீழ்மைப் புத்தியை
காவல் செய்தவன் கள்வனின்
கூட்டுச் சேர்ந்தபோல் கேடு செய்தனன்
கூற நாவுமே கூசுமே

673

பழிக்கு ளாகினான் பேடி வெள்ளையர்
புறத்தி லனைத்தையும் தந்துமே
இழிக்கு ணன்பெரும் ஈன னென்றுமே
இழித்து ரைத்திடில் ஏதமோ

வளர்த்த நன்றியும் வழங்கு பொறுப்பையும்
விட்ட கன்றவன் கோட்டையின்
கொழுத்த தனத்தினைக் கொள்ளை யிட்டுமே
கொண்டு பறந்தனன் திருடனே 674

கேர்ணல் 'மக்லொயிட்' வந்து சேர்ந்தனன்
கூட்டுப் படையுடன் 'பொன்னாணி'
ஊரி ருந்துமே உதவிக் கரந்தர
ஒன்று கூடினர் வெள்ளையர்
சேர்ந்த திந்தமெய்த் தகவல் திப்புவின்
செவிக ளுண்டிடக் கேட்டதும்
ஆர்த்தெ ழுந்துபோர் ஆக்ஞை யிடவுடன்
அணிக ளாகினர் படையினர் 675

தமிழ கத்தினைக் காக்கப் பெரும்படை
சென்ற தாம்'**மீர் முயீனுதீன்**'
அமைந்த தலைமையில் இருப தாயிரம்
ஆன வீரர்கள் அடங்குவார்
சமமாம் பரிப்படை துவக்குப் படையதும்
சேர்ந்த நடைப்படை இரட்டையாம்
தமைத்த னித்துமே 'பேட னூர்'தனைச்
சென்ற திப்புவாங் கடையுவார் 676

நடந்த வோர்கதை நினைவில் கொண்டிடில்
நாசகன் ஆயாஸ் கீழ்மையை
படித்த லாகுமே பாவி யானவன்
புறத்தில் விளைந்தபேர் கேட்டினை
அடுத்த வன்தனை ஆத ரித்துமே
அடாது தம்மவர்க் கிழைத்ததால்
கிடைத்த தொன்றிலை கொண்ட பொருளிலும்
களங்க நாமமே பெரியதாம் 677

கோட்டை யவன்வசம் கொண்ட தால்பிறர்
கேள்வி யற்றுமே போனதால்
வேட்டை யாடினான் வரிப்ப ணத்தினில்
வேண்டு வாறது விபரமாய்
நாட்டு மன்னரின் நோக்கு ளானது
நிலைமை யறிந்ததும் மன்னவர்
கேட்டே எழுதினார் கடிதில் விபரமென்
கூறு வென்றுமே அதிர்ந்தனன் 678

வேறு

வெள்ளையன் மத்யூ வோடு விருந்துண்டு மகிழ்ந்த காலை
உள்நுழைந் தானோர் தூதன் உடன்கொண்ட ஓலை யோடே
கள்ளுண்ட போதை யந்தக் கடைமகன் ஆயா சுக்கும்
வெள்ளையன் மகிழ வென்று வரித்தனன் நடன மாங்கே 679

பல்வகை வாத்தி யங்கள் பேசின சுருதி கூட்டி
மெல்லிடைப் பெண்ணொ ருத்தி முன்னிலை சுழல லானாள்
வில்லென வளைந்தாள் கண்டு வாங்கிடா விழிக ளோடே
கல்லெனச் சமைந்தான் மத்யூ கண்கவர் எழிலி னாலே 680

மலையிருந் தருவி சுற்றி வளைந்தோடு மாறே அன்னாள்
தலையிருந் தழகுக் கேசம் தாள்வரை நீண்டே ஆட
மலரணி கருமைக் கேற்ற முறைகொண்டு தொடரு மன்னாள்
கலையினை மறந்தான் மத்யூ கருத்ததோ வேறாம் தீயோன் 681

போர்வாளீர் முகையொ டித்துப் பொருத்திய பாங்காம் நெற்றி
கார்குழ லொன்றக் காணும் கருமேகத் துள்நு ழைந்த
சீரினில் வதனம் செம்மைச் சுடரொளி நெஞ்சை ஈர்க்கும்
கூரிய புருவம் வான்வில் கீழ்இமை மலர்க்க ரங்கள் 682

காதொடு நீண்ட கண்ணின் கருமணி கறுக்காய் தோற்கும்
ஓதிடில் நோக்கும் நோக்கே உயிர்கொளுஞ் சரத்துக் கொப்பாம்
ஏதுவாய்ப் பாடும் பாட்டின் இசையொடு பொருளுக் கேற்ப
மாதின்கண் மணிகள் பூவை முத்திடச் சுற்றும் வண்டாம்

683

பங்கயப் பூவி தழ்கள் போலுமாம் செவிகள் காதில்
தொங்கிடுந் தோடில் வைரந் துலங்கிட வதனம் பூக்கும்
நங்கைமென் நாசி கூம்பு நிலைமலர் நனையின் பாங்கு
சங்கினை யொத்த கன்னஞ் சிவந்தன நவர சத்தே

684

தோடையின் இதழி ரண்டைத் தொடுத்ததில் செஞ்சாந் தூற்றிக்
கூடியே பாகுஞ் சேர்த்துச் கோத்தவாய்ச் சிமிழில் வாகாய்
மூடிய இதழ்கள் மெல்ல மலர்ந்திடும் அவற்றி னுள்ளே
சூடிடா மல்லி கைப்பூ மொட்டுகள் பல்லாய் மின்னும்

685

மடல்சில கழைந்த வாழை மரத்துண்ட மாங்க முத்து
கடைந்தெடுத் தொன்றுங் கைகள் கரிமுகக் கொம்பின் சீர்மை
விடைபெறத் துடிக்கும் பாங்கில் விம்மிடும் மார்ப கங்கள்
நெடுமரம் பனையின் முற்றா நுங்கிரண் டொக்கும் நோக்கே

686

பொத்திடப் போதா கைக்குள் பொதிந்திடில் பிறகண் நோக்கா
நர்த்தகி இடையோ ஆட நெளிந்திடும் நாகந் தோற்கும்
முத்தொன்று பதித்த பாங்கில் முகிழ்ந்திடும் நாபி :பிட்டம்
ஒத்ததாம் சுரையின் கூட்டின் ஓர்முகப் பாகம் போன்றே

687

ஆடலுக் குகந்த வாறாய் அமைந்தசெம் பாதம் கூடி
வாடாத மலர்க ளொக்கும் வனிதையின் கால்வி ரல்கள்
நீண்டதாங் கால்கள் ஆடும் நிலத்திருந் திடைவ ரைக்கும்
பூண்டனள் எழிலை யெல்லாம் பறித்துடல் பொதித்த பாங்காம்.

688

போதையுட் புரண்டான் மத்யூ பொருத்தினான் ஆயாஸ் அஃதைத்
தீதெனப் பற்றும் மார்க்கஞ் சொல்லியுந் தவறி ழைத்தான்
ஓதுவார் ஓத லுக்கே உடன்பட்டான் வெள்ளை யர்தான்
காதினி னருகி ருந்தார் கூறவும் வேண்டு மாமோ

689

சுழன்றுமே யாடு மந்தச் சுந்தரப் பெண்ணி னாட்டம்
விழிதனில் துலங்க வில்லை வஞ்சியின் பிஞ்சு மேனி
களிதரக் கள்ளி னோடு கவல்மறந் திருந்தார் போழ்தே
வெளியவன் தூதன் வந்தான் வெறிகொள வைத்திட் டானே

690

“கங்காதர்” திப்பு சுல்த்தான் குருதியோ டிணைந்த தூதன்
பொங்கினான் சினத்தால் ஆங்குப் பார்த்தவந் நிகழ்வி னாலே
சிங்கமென் றானான் வெள்ளைத் தளகர்த்தன் ஆயா ஸோடும்
அங்குறைந் திருத்தல் கண்ட அதிர்ச்சியால் கொதித்திட் டானே

691

அனுமதி யின்றி யுள்ளே அந்நியன் வரவால் ஆயாஸ்
சினம்மிகக் கொண்டான் வந்த சேதியை வினவா தோனாய்
தனைமதித் தில்லா னந்தத் தூதுவன் பிறர்முன் னென்றே
கனத்ததே யுள்ளம் கண்கள் கனலெனத் தகிகு மாறே

692

யாருனை ஈங்க னுப்பி வைத்ததே னுள்நு ழைந்தாய்
காரணம் சொல்வா யுன்னைக் கொன்றிட முன்னென் றோதக்
கூரிய கணையாய்ப் பார்வை கருக்கிடக் ‘கங்கா தர்’நான்
சீரியர் சுல்தான் தூதன் சிறியனே என்றான் மேலும்

693

ஆறிடா வெங்கோ பத்தால் ஆளுண்ண ஆயாஸ் நோக்கிக்
கூறினான் மொழிகள் தம்மின் கோபத்தைப் பிழிந்தெ டுத்தே
சீறிய நச்சுப் பாம்பு திகைத்தது ‘கங்கா தர்’பின்
கூறிய தீநாச் சொல்லால் தொடர்ந்திட வெறிகொண் டானே

694

"துரோகியே பிறந்த மண்ணைத் தாரைவார்த் திட்ட பாவி
அறிந்துமோ செய்தா யிந்த அடாததை திப்பு சுல்தான்
குறியிவர் தம்மை நாட்டின் கடல்தாண்டி யோட வைத்தல்
மறந்ததேன் மண்ணின் மானம் மாற்றானுக் கடிமை யானாய்"
695

"கொள்ளையர் நாட்டைத் துண்டாய்க் கூறிட வந்த இந்த
வெள்ளையர் தமக்கே னுன்னை விற்றனை சொந்த மானம்
எள்ளள வேனு மற்றாய் எச்சிலைப் புசித்தற் காமோ
கள்ளரைக் கரம்பி டித்தாய் கயமையின் வழிப்பட் டோனே"
696

"பிறப்பினால் ஈனன் என்னும் பண்பினைச் செய்கை யாலே
உறுத்தினாய் வெள்ளை யர்தம் ஒருங்கிணைப் பாள னாகி
அறுத்தனை யுறவை மன்னர் அன்பினைக் கொன்றாய் பாவி
பொறுத்திரு தண்ட னைக்குப் பொருந்துநாள் அருகில்" என்றான்
697

"மூடுநீ வாயை மாறின் முடிவுடன் கிடைக்கு" மென்றே
நாடினா னருகில் ஆயாஸ் நெஞ்சுரங் கொண்ட தூதன்
ஆடிடான் அசையான் நின்றான் அறிந்திடாப் போழ்தில் பாய்ந்தே
கூறிட முயன்றான் கைவாள் கைகொள முன்சாய்ந் தானே
698

கழுத்தினை நோக்கிக் கைகள் கோத்தனன் கொல்ல ஆயாஸ்
முழுப்பலங் கூட்டி முன்னால் மறித்தனன் கீழே தள்ள
விழுந்தனன் எழுந்தி ருக்க விண்டினன் முன்னர் 'மத்யூ'
அழுத்தினன் வில்லை கையில் வாங்குதுப் பாக்கி பேசும்
699

உருண்டைக ளிரண்டு நெஞ்சின் ஊடுமே செல்லக் கீழே
புரண்டனன் தூதன் மார்பைப் பொத்திய கைக ளோடே
சரித்திரம் முடியு முன்னே சாற்றினான் 'ஆயாஸ்' நோக்கி
கருத்தினில் கொள்க நீவீர் கொலைப்பழி சுமந்தீ ரென்றே
700

நடந்தவை யனைத்துங் கண்ட நர்த்தகி பீதி யுற்றே
நடுங்கினள் அச்சம் மீற நனைந்தனள் வியர்வை பொங்கும்
அடுத்தவர் அறியா வாறே ஆங்கிருந் தகன்றாள் முன்னே
கிடைத்ததோர் தகவல் 'மத்யூ' கூறிய கருத்தி னாலே 701

சீரங்கம் மீது போரைத் தொடுத்திட வேண்டு மென்ற
நாராசம் செவியுள் தாங்க நிலைகுலைந் தாளே மின்னுள்
சேரவைத் திடுதல் வேண்டித் திப்புவின் முகவல் நோக்குங்
காரணம் முந்தக் கால்கள் கடிதினில் அகலச் சென்றாள்
702

வீடடைந் தாளப் பெண்ணாள் வழமைக்கு மாற்ற மாக
வீடடைந் திடவுந் தந்தை வினவினார் ஏனென் றாக
கேடினை யுரைத்தா ளாங்குக் கண்டவை புகன்றாள் பின்தான்
நாடிய பணியை ஓத நடுங்கினார் தாதை யோர்ந்தே
703

சீரங்கப் பட்டி னத்தைச் சிதைத்ததன் பின்னர் சுல்தான்
காரியம் முடித்த லொன்றே கருத்ததாம் மத்யூ வுக்குப்
பாரிய விளைவு தோன்றப் போவதால் தடுத்து யுத்தக்
காரிருந் ததனைக் காக்கக் கருத்துளேன் எனப்பு கன்றாள்
704

இப்போதே ஈங்கி ருந்தே இரவுதோன் றிடுமுன் மன்னர்
திப்புவைக் கண்டு சேதி சொல்லிடத் துணிந்தே னென்ன
ஒப்பினா ரல்லர் தந்தை உன்றனை நினைநீ யென்றார்
தப்பொரு பெண்த னித்துச் செல்லுதல் எனப்பு கன்றார்
705

ஆபத்தி லிருந்து மண்ணை அந்நியர் கரத்தி ருந்து
காப்பதில் உயிர்போ னாலுங் கவலையில் லெனக்கு இன்றே
சேர்ப்பது கடனச் சேதி தாமதம் தவிர்த்தல் வேண்டும்
பார்த்திரேல் வேண்டா நீங்கள் பங்களூர் செல்க வென்றாள்
706

நல்லதை நாடி நீயும் நோர்த்திடும் பணியு னக்கு
தொல்லைகள் தருந்து ணிந்து சென்றிட்ட போதுஞ் செல்வி
பொல்லாத அரக்கன் ஆயாஸ் பழிதீர்க்க அஞ்ச மாட்டான்
சொல்வதைக் கேளென் தாயே தனித்துநீ செல்லல் வேண்டா
707

என்னதான் எடுத்து ரைத்தும் ஏந்திழை கேட்டா ளில்லை
தன்னுடைக் கடனாம் நாட்டைத் தொல்லையில் காத்த லென்றாள்
மன்னவ ரறிந்தால் மாற்று மார்க்கமுங் கொள்வார் அன்றேல்
தன்னலங் கொண்டால் நாடு சென்றிடும் பிறர்கை யென்றாள்
708

பிடிவாத மாக அன்னாள் புகன்றதைத் தந்தை யோர்ந்து
விடைதர லன்றி வேறு வழியிலை யெனவு ணர்ந்தார்
உடன்செலப் பணித்தார் ஊர்கண் ஒன்றிடா வாறே என்று
தடையொன்று நீங்கிப் போன திருப்தியோ டவள கன்றாள்

709

பரியொன்று வேண்டி யாங்குப் பரிதங்கு நிலையஞ் சென்று
உரியவ ரிடத்தில் பொன்னை உடன்தந்து பெற்றா ளஃதும்
உரியதாம் "கங்கா தர்"க்காய் உயிர்விட்ட தூதன் சொந்தம்
தெருவழி யறிந்த தொன்றாம் சீரங்கங் கொண்ட திக்கே

710

கொலையுண்ட தூதன் கொண்ட குதிரையாம் என்ற தாலே
இலகுவென் றாகிற் றன்னாள் இலக்கினை அடைதற் கன்று
சிலமணி நேரத் துள்ளே சென்றடைந் தாள்வாய் காப்போன்
செலவிடா திடையிற் புக்கித் தடுத்தனன் வினாத்தொ டுத்தான்

711

யாரினைப் பார்க்க இந்த அவசரம் யார்நீ யென்றான்
காரிய மொன்றிற் காகக் கோனினைப் பார்க்க என்றாள்
பேரினைச் சொல்நீ என்னப் புகன்றனள் மும்தாஜ் என்றே
காரணம் உரைநீ யென்னக் கூறொணாச் சேதி யென்றாள்

712

என்னவச் சேதி யென்றே இயம்பிட மாட்டா யாயின்
மன்னவர் தம்மைக் காண மார்க்கமொன் றில்லை என்றான்
முன்னமஃ துனக்கு ரைத்தல் முற்றிலுங் கேடு செல்ல
என்னைநீ விடுவென் றுள்ளே எகிறினாள் தடுத்திட் டானே

713

சொன்னதைக் கேள்நீ அன்றேல் துண்டிரண் டாகுந் தேகம்
வன்முறைக் கென்னைத் தூண்டி விபரீதம் நடக்கச் செய்யாய்
பின்வந்த வழியை நாடிப் போவென்றே கூறித் தள்ள
சொன்னவா றியற்ற லன்றித் தோகையோ மார்க்கம் காணாள்

714

தவித்தது உள்ளம் காலத் தாமதம் அச்ச மூட்ட
நவின்றிட வொண்ணாச் சேதி நஞ்சென மனத்தைக் கொல்ல
குவித்தனள் சிந்தை ஒற்றைக் குறுவழி தேட லுன்னி
எவைத்தனும் தோன்றாச் சோகம் உள்ளிடக் கால்பின் மீழும் 715

நடந்தவை யனைத்தும் தூர நின்றவா ரரச ரோடு
கடைவிழி நோக்கக் கண்ட கொற்றவன் மனையாள் கோவைத்
தடுத்தவள் தன்னைத் தம்பால் தருவிக்க வெண்டி நின்றாள்
அடுத்ததோர் ஆணை யாக அகன்றிட மீண்டிட் டாளே

716

காரண மறியாள் ஏதுங் கேட்டுத்தன் வறுமை தீர்க்கக்
கோரின ளென்றே ராணி கருத்தினில் கொண்ட ழைத்தாள்
வாராத தொன்று வந்து வலிந்துதன் மடியில் வீழ்ந்த
சீரினை எண்ணி மும்தாஜ் திகைத்தனள் நெருங்கி னாளே

717

அருகினில் வந்து கையை அசைத்தவா றுடலைத் தாழ்த்திச்
சிரமது குனிந்து மெல்லச் சோபன வார்த்தை கூறி
வருவினை தன்னை மாற்றார் விளங்கிடா வாறொ துக்கி
விரைவினிற் புகன்றாள் மன்னர் வியப்பினி லாழ்ந்திட் டாரே

718

இனியிலை யென்னும் பாங்கில் இருவிழி மடலும் பூக்க
முனைத்தகூர் வேலா மன்ன மணிகளும் நோக்கும் கண்டாள்
தனையொரு புழுவா யெண்ணித் துவண்டனள் மன்னர் பார்வை
வினைப்பொரு ளறியாள் அஞ்சி வார்த்தைபின் குளறிற் றன்றே

719

சிறுபொழு தமைதி யாகித் தெறித்தன வார்த்தை நீயும்
அறிந்ததெவ் வாறாம் இஃதை இயம்புவாய் என்னச் சொல்வாள்
அறிந்ததொன் றில்லை கண்ணால் அளந்தவை செவிகள் உண்டு
பிறந்தவை சத்தி யத்தின் பாற்படு மொழிக ளென்றே

720

தூதனின் கொலையும் 'மத்யூ' திட்டமும் ஆயாஸ் செய்யும்
தீதையும் எடுத்து ரைக்கத் தன்னுயிர் தனையும் போற்றாள்
ஓதிய தனைத்தும் கேட்டே உள்ளத்தில் நன்றி மேவ
மாதினை நோக்கி மன்னர் மொழியின்றித் தவித்திட் டாரே

721

தலைநகர் மீது யுத்தந் தொடுத்திடும் ஆயாஸ் திட்டம்
புலிதனைச் சீண்டி விட்ட போக்கென வாகும் திப்பு
வலுவினில் வந்த தொன்றை விடாதவர் வந்த தென்று
சொலவலை விரித்தார் யுத்தஞ் செயலுருக் கொண்ட தன்றே 722

சீரங்கப் பட்ட ணத்தைச் சேருமுன் அடலர் தம்மை
வேரறுத் தோடச் செய்ய வேண்டுமென் றரசர் தம்மின்
வீரமா சேனை தன்னை விரைவுறப் பணித்தார் ஆணை
காரிய மான தோரீர் குறுநொடிப் போழ்தி னுள்ளே

723

தூள்துக ளான தேயத் தருக்கரின் படைகள் தம்மின்
வாழ்வினை வருந்தித் தேடி விட்டன ஆவி யாம்செய்
ஊழ்வினைப் பயனா மன்ன ஒருசிறு எச்ச மற்றே
பாழ்படு யுத்தம் தன்னால் பழிகொண்ட செயலா யிற்றே

724

ஆனந்த்பூர் கோட்டையும் அடலர்தம் வெற்றியும்

தூரத்தி லிருந்து பெண்ணைச் செலவிட்ட வாயில் காப்போன்
காரணம் அறியும் நோக்கில் கண்செவி இரண்டுங் கூட்டி
நாரியின் நடத்தை தன்னை நோக்கினான் சைகை கொண்டு
ஓரள வுணர்ந்தான் முற்றும் உசார்நிலை கொண்டிட் டானே

725

மன்னரின் மாளி கைக்குள் மன்னருக் கெதிராய் ஆயாஸ்
தன்னுடைப் பேராய் துப்புத் துலக்கிட வைத்த பொல்லான்
மின்னலாய்ப் பறந்தான் சேதி மொழிந்திட நடந்த தெல்லாம்
கண்படு தூரத் துள்ளே கண்டவை யூகம் செய்தோன்

726

திட்டங்க ளெதுவுந் திப்பு தேர்ந்திட லாகா தென்றே
திட்டங்கள் தீட்டி னார்கள் தெரிந்ததென் றறிந்த போது
மட்டிலாச் சினமுங் கொண்டான் மத்யூவும் ஆயா ஸீம்தம்
திட்டத்தை மாற்றி னார்கள் திப்புவின் திறன றிந்தோர்

727

தாமதங் கொள்ளார் திப்பு சிறுபொழு தேனும் வீணே
போமெனில் பொறுக்கார் நம்பால் படைவரும் வருமுன் நாமே
சேமமாம் "ஆனந்த் பூரை"த் தம்வசங் கொள்ளல் என்றான்
தீமையின் உருவாம் "மத்யூ " செயற்பட ஆணை யிட்டான்

728

அடிமைபோ லருகி ருந்த ஆயாசை நோக்கிச் சொல்வான்
உடனந்தக் கோட்டை தன்னில் ஒன்றிய தலைவ னுக்கோர்
மடல்வரைந் தனுப்பு நம்கை மாற்றிடப் பணிப்பா யென்றே
கடனது பணித லென்ப கொண்டனன் ஆயாஸ் செய்தான்

729

பறந்ததே ஓலை கோட்டைப் பதிகரஞ் சேரச் சேதி
அறிந்ததும் **"நாரா யண்ராவ்"** அதிபதி யுரைப்பான் இஃது
பிறந்தது மன்னர் தம்மின் புறத்திருந் தன்றே நானேன்
துறந்தாட்சி கொண்டே நும்பால் தந்திட வேண்டும் என்றான்

730

மறுத்தனன் கைய ளிக்க மாட்டாத செய்தி மத்யூ
புறத்தினுக் கண்மக் கண்கள் பெருந்தணல் போன்றாம் மாறி
வெறுத்துரை செய்தான் ஆயாஸ் வக்கிலாய் எனந கைத்தான்
பொறுப்பற்ற செல்வாக் கற்ற பிண்டம்நீ எனப்ப ழித்தான்

731

என்னநான் செய்வேன் ஆணை எற்றிடான் திப்பு பேரில்
கண்ணியம் செய்வோன் தம்மின் கடமையில் கருத்து மிக்கோன்
தன்னையே திப்பு வுக்காய்த் தந்திடத் துணிந்தோன் துரோகம்
எண்ணிடான் என்றான் ஆயாஸ் இரத்தலில் கேடாம் கீழோன்

732

இடையினில் தடுக்கா விட்டால் எம்முயிர் எமக்கே யில்லை
அடைந்திட வேண்டும் நாங்கள் ஆனந்த்பூர் கோட்டை தன்னை
உடன்படை நடத்த வேண்டும் ஒன்றிடு முன்னர் திப்பு
கடந்திடுங் காலந் தன்னை கருத்தினில் கொள்வீ ரென்றான்.

733

கோட்டையைத் தாக்க வெள்ளைக் கேடர்கள் வருத லென்னும்
நோட்டத்தை ஒற்றர் கூற நேரெதிர் கொள்வ தன்றித்
தேட்டமொன் றில்லை யென்று துணிந்தனர் படையி லுள்ளோர்
ஆட்பலம் குன்றி னாலும் அதுவொன்றே முடிவில் எஞ்சும்

734

ஆனந்பூர் கோட்டை தம்மின் அதிபதி **"நாரா யண்ராவ்"**
தானேமுன் நின்றான் கோட்டைத் தளத்தினில் பகையை வெல்லச்
சாணிடை யின்றி வீரர் தமைக்குவித் திருந்தா னன்னான்
தூணென நின்ற வீரத் தளபதி **"நூர்மு ஹம்மத்"** 735

வேறு

பறங்கியர்கள் பன்நூறு பேர்கள் கூலிப்
படையினர்கள் பெருமளவு கூடி எல்லாப்
புறமிருந்தும் தாக்குதலை நடத்தி னார்கள்
பெருமளவு சேதமிரு புறத்தா ருக்கும்
வறந்ததுவாம் கோட்டைவலு மாற்றார் தம்மின்
வீறுகொண்ட தாக்குதலால் சுருண்டு போனார்
அறிந்தனராம் அவர்தமக்குள் துரோகப் பேர்கள்
அன்னியருக் குதவியதை அறுதிப் போழ்தே
736

நிலம்நோக்கி எறிகின்ற வேல்கள் வெள்ளை
நீசர்களின் நெஞ்சத்தைக் கூறு போட்டே
நிலஞ்சாய்க்கும் தொடர்ந்துவரும் தீயுண் டைகள்
நிலஞ்சரிந்த உடலெரித்துத் தகனஞ் செய்யும்
தலைவேறாய் உடல்வேறாய்க் கைகால் வேறாய்த்
தனித்தனியே சிதைந்தவுடற் கூறே எல்லாப்
புலத்தினிலும் வியாபித்தே துடிது டிக்கும்
பெருஞ்சேதம் வந்தவர்க்கும் இருந்தோர் போன்றே
737

கீழிருந்தும் ஒருவீரன் துவக்கி லுண்டை
கோத்தளிக்க மற்றொருவன் விசையைச் சுண்டக்
கீழிருந்து போர்தொடுப்போர் மீதே அஃது
குறிவைத்துத் தாக்குமுயிர் கருகிப் போகும்
வாளினொடு வாள்பொருதும் வெட்டுண் டோரில்
வழிந்தோடுஞ் செம்புனலால் நிலஞ்சி வக்கும்
தோளின்பல மறியுமந்தச் சமர்க்க ளத்தில்
சென்றவிட மத்தனையும் பிணங்க ளாமே
738

சூழ்ச்சியொன்று நடந்ததந்தப் போழ்தோர் வீரன்
தலைதெறிக்க ஓடிவந்தான் தலைவன் நோக்கி
"கோட்டையினுள் ளிருந்தொருவன் கயிற்றின் மூலம்
கீழிறங்கிப் போயுள்ளான் அந்நி யர்க்குக்

கூட்டாக வழிதிறக்க" வென்றான் கேட்டுக்
கடிதினிலே யவ்விடத்துத் தலைவ னண்ட
நாட்டத்தை நிறைவேற்றச் சிலபே ரொன்றி
நாயகன்மேல் பாய்ந்தனரே துரோகக் கூட்டம்
739

உண்மையென்று நம்பியதால் நேர்ந்த கேட்டை
உடனறிந்த தலைவன்றன் பலத்தைக் கூட்டி
மண்கவ்வச் செய்தானவ் வஞ்சர் தம்மின்
மூட்டொடித்தான் பெருவீரன் என்றா லுந்தான்
புண்ணுண்டான் புயத்திலது பெரிதென் றாலும்
பலர்தடுத்தும் போர்முனையைத் தவிர்த்தா னில்லை
மண்ணிலவன் உடல்சாய்ந்து வீழு மட்டும்
மறவன்போர் செய்தனனே மூர்க்கத் தோடே
740

உடன்கொண்ட சேதியினால் தலைவன் போக
உந்தவவன் தனைத்தடுத்து தானே சென்றான்
அடாததுவந் துறாதிருக்க வேண்டு மென்றே
அவசரித்தான் தான்முந்த நூர்மு ஹம்மத்
கொடியவரின் சூழ்ச்சிக்கும் ஆனந் பூரின்
காவலன்றன் னுயிர்நீக்குங் காட்சி கண்டே
விடேனிவரைப் பழிவாங்கா தென்றவ் வீரன்
வாக்குரைத்தான் பலரழித்து வெறிகொண் டானே
741

தலைவன்றன் விழிமூடக் கண்ட காட்சி
தாங்காத நூர்முஹம்மத் சபத மேற்ற
தலத்திருந்தே சிங்கமெனச் சீற்றங் கொண்டான்
சிரசரியும் தொழில்கொண்டான் பலபேர் மாண்டார்
உலையிடையில் வீழ்ந்தபுழுப் போல மாற்றார்
உடல்துடிக்கச் செத்துமடிந் தார்கள் கண்டோர்
நிலைவிடுத்து மறைந்தார்கள் அவன்கை வாளில்
நிலைத்திருக்கும் சாவோலை கண்ணுற் றாரோ
742

பழிதீர்க்கும் படலத்தைத் தொடர்ந்திட் டாலும்
பின்னிருந்தோர் பேடிவெள்ளைப் பறங்கி தாக்கக்
களைத்திருந்த உடலம்தன் பலமி ழந்து
கண்ணிமைக்கும் போழ்துள்ளே நிலத்தில் வீழும்
இழந்தாலும் உயிரையவன் தலைவன் பேரில்
ஏற்றிட்ட சபதத்தை நிறைவு செய்தான்
அழியாத புகழுடம்பு கொண்டான் திப்பின்
ஆட்சிக்குப் பலம்தந்த அஞ்சா நெஞ்சன்

743

முஸ்லிம்மாய் இருந்தொருவன் துரோகஞ் செய்ய
மாற்றுமதத் தானெனினும் தலைவன் தம்மின்
விசுவாசந் தனைச்சாவில் நிலைநி றுத்தி
வெற்றிகொண்டான் போரினிலே தோற்றிட் டாலும்
தசையோடும் என்பொன்றி னாற்போல் திப்பு
செய்திட்ட நல்லாட்சி தன்னில் மக்கள்
இசைந்தொன்றி வாழ்ந்தார்கள் என்ப தற்கும்
இதைவிஞ்சச் சான்றுபிற வேண்டு மாமோ!

744

நீண்டநெடும் ஏணிகளைச் சுவரில் சாத்தி
நெட்டுயர்ந்த கோட்டையின்மேல் குதித்திட் டார்கள்
தூண்டில்போல் கொக்கைகளை கயிற்றில் கட்டித்
தொங்கிடவென் றெறிந்தார்கள் கொளுவிக் கொள்ள
வானரம்போல் ஒருவர்பின் ஒருவ ராக
வடம்பற்றி ஏறினரே வந்த கூட்டம்
வீணாக வில்லையவர் முயற்சி அன்னார்
வந்ததெந்தக் காரணமோ வசமா கிற்றே

745

கோட்டைதனைக் கைப்பற்றிக் கொண்டார் கோட்டைக்
கதவுகளில் காவலிருந் திட்ட பேர்கள்
பூட்டுடைத்துப் புகவுதவி செய்தார் முன்னர்
பொருள்கொண்டு வாக்களித்த பங்கை ஏற்றே

கூட்டுடைத்த காடெருமைக் கூட்டம் போலுள்
கூக்குரலிட் டோடினரே வெற்றி கொண்டோர்
மாட்டாரே எதிர்க்கஎஞ்சி நின்ற வீரர்
மனமொப்பிச் சரணடைந்தார் வழிவே றற்றே

746

வெற்றிகொண்ட பூரிப்பில் திளைத்திட் டாலும்
வருவினையை எண்ணியதால் அச்சம் நெஞ்சுள்
தொற்றியதே மத்யூதன் அடுத்த திட்டந்
தனைவகுக்க தளகர்த்தர் தம்மைக் கூட்டி
முற்றிலும்நாம் வெற்றிகொள்வ தாகும் திப்பு
மண்டியிட்டா லன்றியிலை மற்றோர் போரை
வெற்றிகொள வேண்டுமென்றான் மூர்க்கன் நோக்கி
வருமிடரை முன்கூட்டி நினைந்த தாலே

747

வெற்றியினைக் கொண்டாடப் படையோ ருக்கு
வழங்கினனே யாங்குள்ள வீடு வாசல்
முற்றையுமே கொள்ளையிட ஆணை அன்னார்
மனங்கொண்ட வாறதனைச் செய்தார் கோட்டைப்
பொற்குவியல் தனையள்ளிக் கொண்டான் தன்னின்
பங்கினுக்காய்ப் பேராசை கொண்ட பொல்லான்
சற்றேனுஞ் சளைத்தார்க ளில்லை கொள்ளை
தலைவிஞ்சிப் போனதுவாம் தருக்க ராலே

748

வீடுவீடாய்ச் சென்றவர்கள் கொள்ளை யிட்டார்
விட்டார்க ளில்லையொரு வீட்டைத் தானும்
வேட்டைக்காய் ஏவிவிட்ட ஞமலிக் கூட்டம்
வெறிகொண்டு தாக்குவபோல் விழைந்த தஃதே
கோட்டைக்குள் நடந்தபெருங் கொடூரந் தன்னைக்
கூறிடநா கூசிடுமே பெண்கள் கூட
வேட்டைப்பொரு ளாகினரே வரம்பு மீறல்
வரைகடந்து போனதுவாம் விடுப்பா ரற்றே

749

வேறு

வெற்றியைப் பெரிதாய்க் கொண்டு வெள்ளையர் அடாது செய்யச்
சற்றெனுங் கவலை கொள்ளான் செய்திட ஆணை யிட்டோன்
மற்றவ ரோடு சேர்ந்து முதன்மையுற் றானே பெண்கள்
கற்பினைச் சூறை யாடும் கயமையில் முன்நின் றானே
750

கண்ணினில் பட்டா ளோர்பெண் குழந்தைக்கோ மாதம் மூன்றே
பெண்ணவள் கணவன் திப்பு படையினில் தளகர்த் தாவாம்
வண்ணவம் மயிலை மத்யூ விரும்பினான் அடைய ஆணை
மின்னலாய்த் தெறிக்கப் பற்றி மறுகணம் இல்லுள் சேர்த்தார்
751

கூட்டினுள் ஓநா யோடு குறுமுயல் தனித்த வாறாம்
பூட்டிய கதவின் மற்றப் புறத்தினில் காவ லாளர்
ஊட்டிய மதுவால் தன்னை உணர்ந்திடாப் போதை முற்றுங்
காட்டின விழிகள் மத்யூ கருத்தழிந் தாங்குற் றானே
752

அள்ளியே வந்த பூவை அவன்விருந் தாகத் தந்தே
உள்ளெது நடந்திட் டாலும் ஒருவரும் அறியா வாறே
உள்ளிடு நிலைமை செய்தார் ஒன்றிய ஏவ லாளர்
கிள்ளையைக் கவ்வ நோக்கும் கடுவனாய் மத்யூ நின்றான்
753

அருகினில் சென்றான் தொட்டே அணைத்திட அவள்வி டுத்து
ஒருபுறம் ஓடப் பின்னால் அவன்தொடர்ந் தருகி லண்மிக்
கரமிடைப் பொத்த வெண்ணக் கைதடுத் தவளும் மீறி
மறுகினாள் மீண்டு மன்னான் முன்னிலும் வேகங் கொண்டான்
754

மதுவெறி யோடு கூடி மாதுற்ற வெறியும் ஒன்ற
மிதிதளர்ந் தாடி னாலும் மகனெனும் ஆண்மை விஞ்சப்
புதுவுடற் பலமுங் கூட்டிப் பாய்ந்தனன் பாவம் பெண்ணாள்
கதியவன் கரத்து ளென்மால் கையிடைப் பிடிபட் டாளே
755

தாய்பற்றி வந்த பிள்ளை தனித்தொரு மூலை தன்னில்
வாய்விட்டுக் கதறும் தன்னை வாட்டிடும் பசியால் கேட்ட
நாய்ப்பி றப் பான பொல்லான் நறுக்கென அதைமி தித்தே
வாய்குள றாது செய்தான் வீறலும் அடங்கிற் றன்றோ 756

கண்முன்னே கண்ட காட்சி கருத்தினைச் சிதைக்க அன்னை
தன்னுணர் விழக்கச் செய்யும் சோர்ந்துடல் தரையில் சாயும்
எண்ணத்திற் கேற்ற வாறு இசைந்தது வேளை என்றே
தன்னுளத் துறுதி கொண்டே துணிந்தனன் அருகி லுற்றான்
757

எச்சிலை நாடி வந்த ஈனன்தன் கண்ணில் பட்ட
எச்சிலை விட்டா னில்லை இன்னொரு வீரன் பேரின்
சொச்சத்தைப் புசித்தான் அன்னாள் பிள்ளையைக் கொன்றான் பின்னாள்
நிச்சயக் கொடுஞ்சா விற்கு நடந்தவை கருவா கிற்றே
758

தண்டலை பூத்தி ருந்த தாமரை தன்னைக் கொய்து
மண்ணிடை வீசி காலால் மிதித்துமே சிதைத்த லெப்ப
பெண்மையின் தூய்மை போக்கி புசித்தன னுடலைப் பாவி
உண்டனன் விடத்தைப் பின்னாள் உயிர்கொள வைத்த தஃதே
759

கேணல் மத்யூவின் தோல்வியும் பழி தீர்த்த கொலையும்

தாக்கிட நினைந்த பேரைத் தகர்த்திடப் படைந டத்திப்
போர்க்கொடி யேந்தி வந்த புலியிலக் கடையு முன்னர்
தாங்கிய வெற்றி தன்னைத் தொடர்ந்திட மாட்டா னாகத்
தாக்கிடைப் பட்டான் மத்யூ சிற்சில நாட்க ளுள்ளாம்
760

கோட்டையைச் சுற்றி யெங்கும் கொண்டபீ ரங்கி யோடே
ஆட்பலம் பெருக்கி நின்றார் யுத்தமுந் தொடங்கிற் றன்றே
கூட்டொடு வெள்ளை யர்தம் குரல்வளை நெருக்கும் தம்மின்
நாட்டத்தை முடிக்கத் திப்பு நடத்திய சமரொன் றாகும்
761

குறுகிய நாட்க ளுக்குள் கோட்டைதம் வசமென் றாக
மறுவழி யற்று மத்யூ மண்டியிட் டனனே சாவின்
அருகினில் நின்றான் கூட அவன்படை வீரர் சேர்ந்தார்
பெருமெதிர்ப் பற்று வெற்றி பலித்தது புகழி றைக்கே
762

வெற்றிக்குத் துணையாய் நின்ற வீரர்கள் தமக்கு மன்னர்
பற்பல பரிசும் ஏற்ற பட்டமும் பொருந்தத் தந்தார்
பெற்றநற் பேரும் கொண்ட பரிசில்கள் தாமும் தந்த
வெற்றிக்கும் ஊக்கங் கொள்ள வேண்டலுக் காகும் நோக்கே
763

தளபதி **"இம்ரா னுல்லாஹ்"** தலைதாழ்த்திப் பெற்றிட் டாலும்
உளத்தள வமைதி யற்றே உரித்தினைக் கொண்டான் : திப்பு
விழித்தலி லுணர்ந்தார் எஃது விளைந்ததென் றறிகி லாதார்
அழைத்ததை அறியு முன்னர் ஆனதோர் கொலைநி கழ்வே
764

வெள்ளையர் போரில் வென்ற போழ்தினி லுற்ற தீது
கொள்ளையாம் அவற்றுள் மத்யூ கொண்டசீர் கேட்டி லுற்ற
சள்ளையில் யாண்டு சிக்கித் தவித்துடல் சிதைந்த தோடே
பிள்ளையும் இழந்த பெண்ணாள் பற்றிமுன் செப்ப லுண்டாம்
765

நற்பையு மிழந்து தன்னோர் குழந்தையும் பறிகொ டுத்த
கற்புடைப் பெண்ணாள் தம்மின் கணவனே இம்ரா னுல்லாஹ்
முற்றிய வெற்றி யின்பின் மகவொடு மனையாள் காண
உற்றனன் ஊர்ப்ப திக்காம் ஒன்றிய சேதி கொண்டான்
766

உரைத்தனள் மனையாள் நேர்ந்த ஊறினை மகனைக் கொன்ற
தருக்கனைச் சொன்னாள் அன்றே செத்திட நினைந்தேன் என்றாள்
வரும்வரை காத்தி ருந்தேன் வேறெவர் அறியா துற்ற
கருத்தினா லென்றாள் சொன்ன கணத்தினோ டுயிர்நீத் தாளே
767

மகவினை இழந்த தோடே மனைவியும் மாண்டு போன
திகைப்பினில் உறைந்து பேசுந் திராணியை இழந்தே யோர்கால்
வகையறி யாதே நின்றான் வெந்துளம் பொசுங்கக் கண்கள்
உகுத்தன கண்ணீர் ஆறாய் உளமதோ செந்நீர் கொட்டும்
768

உலகமே சூன்ய மாகி ஒன்றுமே இலாத வெற்று
நிலையினை யுணர்ந்தான் நேர்ந்த நிகழ்வுகள் நிழலாய்த் தோன்றும்
சிலபொழு தாமே முற்றும் தன்னிலை மீண்டான் வீரன்
கலைந்ததே அனைத்தும் நெஞ்சுள் கனத்தது வஞ்சம் ஒன்றே 769

மத்யூவைப் பழிதீர்த் தென்றன் மகவுக்கும் மனையா ளுக்கும்
ஒத்ததாய்க் கொள்வேன் வேறும் ஒன்றிலை வாழ்வில் என்றே
சத்தியஞ் செய்தான் அந்தச் சணத்திருந் தொத்த வேளை
ஒத்திடும் நாளுக் காக உறக்கம்ஊண் கருக்க லானான்
770

மீண்டனன் மீண்டும் மன்னன் முன்றலில் கடமை கொண்டால்
மீண்டிடிடும் வேளை ஓர்கால் மத்யூவை முகதா கொள்ள
மீண்டிடா தவன்றன் ஆவி மேலுல கேற்ற வாகாய்
மீண்டிடில் கொள்ள வென்னும் மனப்பதி வேற்ற தாலே
771

உயிருக்கே அஞ்சிக் கைகள் உயர்த்தியே சரண டைந்த
கயவனாம் மத்யூ மன்னர் கொலுவறை கொணரப் பட்டான்
தயவின்றித் தண்ட னைக்குத் தக்கவ னான போதும்
தயவுடன் பேணப் பட்டான் தலைவனாம் பறங்கி யர்க்கே
772

தண்டனைக் குரிய குற்றம் தொகையவன் பேரில் மன்னர்
கொண்டேகச் சொன்னார் ஆயுட் கைதியாய்த் தலைந கர்க்கே
சென்றனன் காவல் வீரர் சுற்றியே சூழ்ந்தி ருந்தார்
நன்றிதே தருணம் என்றே நண்ணினான் இம்ரா னுல்லாஹ்
773

தடுத்தனன் நண்பன் வேண்டா தலைமகன் வெகுளல் கூடும்
விடுத்திடு நின்ம னத்தின் வேகத்தை நமது மன்னர்
கொடுத்தவித் தண்ட னைக்குக் குறைவுண்டோ கால மெல்லாம்
விடுத்திட மாட்டா வாறே வாழ்வினை முடிப்பா னென்றான்
774

மூன்றுதான் மாத மென்றன் மகனுக்கு மனைவி கூட
மூன்றாறு வயது கொண்ட மலரென்றன் உயிர்போ லானாள்
வேண்டாத வாறு வாழ்வை முடித்தனர் மத்யூ வாலே
வேண்டுமவ் வாறே அன்னான் மரணத்தா லழித லென்றான்
775

அகாலத்தி லிழப்பைத் தாங்கா தவன்மன வேத னைக்குத்
தகுமொரு சமாதா னத்தைச் சொல்லிட மாட்டா னாக
மிகுதுயர் கொண்டான் நண்பன் மறுத்துரை வழங்க வொண்ணான்
வகைத்ததம் மரண மென்றால் மத்யூவைக் காப்பா ராரோ 776

தடுத்ததன் நண்பன் தன்னைத் தனித்திட வைத்துத் தானே
தொடுத்தனன் அடிகள் வேகந் தாங்கின பதங்கள் கையில்
எடுத்தகை வாளோ டேகும் எதிரியைத் தொடர்ந்தான் கண்டான்
துடித்தது கரமும் மத்யூ சிரந்தனைக் களைத லுக்கே

777

கூடவே சிறிது தூரங் கடந்தனன் காவல் வீரர்
நாடியே வருதல் கண்டார் நினைந்தன ரில்லை தப்பே
கேடிலை வருவ தெங்கள் கோன்படைத் தலைவ னென்றே
நாடினர் நாட்டம் பொய்க்க நடந்தது வேறா கிற்றே

778

கண்ணிமைப் போழ்தி னுள்ளே கேணல்"மத் யூ"வின் தேகம்
புண்ணுண்ட தாகும் வாளின் பாய்சலால் துடிது டித்தான்
கண்முன்னே தாயின் கையில் கவர்ந்தபால் சிசுவை வீசிக்
கொன்றவன் செய்கைக் காகக் கொண்டதன் பழியை ஏற்றான்

779

கைகொண்ட வாளால் தன்மேல் கொண்டிட்ட சபதந் தன்னை
மெய்ப்பித்தான் இம்ரா னுல்லர் மகன்மனை இருவர் பேரில்
மெய்க்காப்பு வீரர் காக்க முனைந்திடப் பொழுதில் லாதே
கையறு நிலைக்குள் ளானார் கருமமும் முடிந்த போழ்தே

780

கொலையாளி தன்னை வீரர் கைதுசெய் தரசர் முன்னே
நிலைகொளச் செய்தார் நீதி நிலைபெற வேண்டு மென்றே
பகாலம் நாட்டுக் காகப் படையணி முதன்மை யேற்றுக்
களம்பல கண்ட வீரன் கைதியாய் அவையில் நின்றான்

781

யாரென்ற போதும் நீதி இசைந்திடா பக்கம் சார்ந்தே
காரணம் அறிந்தே குற்றம் கொண்டதற் கிணங்கத் தீர்ப்புச்
சேர்ந்திட வேண்டு மென்ற சத்தியம் தவறா மன்னர்
வேர்கொண்ட காரணத்தை வினவினார் பதிலுங் கொண்டார்

782

மன்னரின் தீர்ப்பைச் சற்றும் மதித்திலை அன்னான் ஆவி
தன்பொறுப் பேற்றி ருந்த தருமத்தைக் கொன்று செய்த
புன்மையை மறுத்தார் மன்னர் பெருஞ்சினங் கொண்டார் நோக்கி
வன்மையாய் வார்த்தை கோத்து வீசினார் தலைகு னிந்தான் 783

முன்னிலை நில்லாய் என்றன் முகத்தினை நோக்காய் உன்றன்
வன்மனம் விளங்கச் செய்தாய் வரலாற்றில் களங்கந் தோய்த்தாய்
உன்வரை அறிகி லாய்நீ உவந்தனை செங்கோ லேற்க
என்னதான் நீயென் றாலும் இலையொரு தயவு மென்றார்

784

குற்றத்தைச் சாட்சி யோடு கூறிமெய்ப் பித்த லொன்றே
குற்றத்தால் பாதிப் புற்றோர் கடனதன் பின்னர் ஆட்சி
குற்றத்திற் கேற்ற வாறு கொடுத்திடும் தண்ட ணைகள்
குற்றத்தைக் தடுக்கக் குற்றம் கொள்வதுங் குற்றம் செய்தாய்

785

மண்ணறை போகு மட்டும் மத்யூதன் தவறை எண்ணிக்
கண்ணீர்விட் டழவென் றன்னான் குற்றத்தை ஆய்ந்த றிந்தே
தண்டனை தந்தோம் செத்துச் செத்தவன் மடிய வென்றாம்
விண்டதுன் சபதம் ஆட்சி வகுத்ததை மீறி யென்றார்

786

ஆட்சியைப் பிழைக்க யார்க்கும் ஆளுமை யில்லை நீயோ
ஆட்சியைப் பிழைத்தாய் என்ன அதிகாரங் கொண்டாய் எந்த
மீட்சியும் இல்லை குற்றம் மிகைத்தது தண்ட னைக்குள்
ஆட்பட்ட ஒருவ ராவி அணைத்தது மீற லென்றார்

787

முன்னொரு போழ்தில் இம்ரான் மொழிந்ததாய் அமைச்சர் சொல்வார்
"என்வழி பத்து மக்கள் எதிர்வரு காலங் கொண்டால்
அன்னவர் தமையும் மன்னர் அடிபணிக் களிப்பேன்" என்றாம்
சொன்னதோ அவன்பால் ஏதும் தயைகொள லாகு மென்றே

788

மந்திரி சொன்ன வார்த்தை மனத்தினை உறுத்தி னாலும்
புந்தியில் அவன்மீ துற்ற பாசமுந் துலங்கி னாலும்
முந்திய பணிகள் கண்முன் முகைவிரித் திட்ட போதும்
தந்திலார் சிறிதும் உள்ளத் தாட்சண்யம் அவன்றன் மீதே

789

வெற்றி வாகையுஞ் சோக மேகமும்

பெருவாகை கொண்டிடினும் பாழ்செ ருக்குப்
பற்றாத மன்னருக்குப் பெருத்த சோகம்
உரித்தாகிப் போகுமொரு சேதி தன்னை
உடன்கொணர்ந்தார் பூர்ணையா அந்நாள் போழ்தே
ஒருக்காலும் வருகைதரார் அகாலந் தன்னில்
ஒன்றியதாம் வேதனைதன் முகத்தில் தோன்ற
வதிபுலத்துச் சேதியதாம் வாழ்வில் திப்பு
வாழ்வுவரை மறக்காத நிகழ்வாம் அஃதே
790

மன்னவருக் கருகாமை வந்து நின்று
வாழ்த்துரைத்தார் பூர்ணையா சிறிய போழ்தின்
பின்னவரின் மொழியினிலே வேத னையைப்
பிழிந்தெடுத்துக் குழைத்ததுபோல் பேச லானார்
"என்னருமை மைந்த!திப்பு நெஞ்சத் தைநீர்
இரும்பாக்கிக் கொள்கவினி என்நா வால்நான்
உன்னிடத்தில் சொல்மொழியால் உருகிப் போவீர்
உரைக்கமனம் தவித்தாலும் இயலா துற்றேன்"
791

பீடிகையோ பலமாக இருத்தல் கண்டு
பண்பட்ட உளமெனிலும் பட்டென் றேயோர்
கோடுதுயர் வடிவினிலே நெஞ்சில் மின்னக்
கவனமெலா மொன்றாக்கிச் செவிம டுக்க
வாடாத மலரொன்று விதிவ சத்தால்
வாடியதை யெடுத்துரைத்தார் பூர ணையா
கோடான கோடியிடி தலையில் வீழ்ந்த
கொடுமைதனைத் திப்படைந்தார் சிலையாய்ப் போனார்
792

"பிரசவத்தின் போதுன்றன் மனையாள் தெய்வப்
பதியடைந்தாள்" என்றமொழி நாரா சம்போல்
சொருகியது செவிப்பறையில் சொல்ல வொண்ணாத்
துயர்பலத்தைக் கருக்கியபோல் தளர்ச்சி கண்டார்
அருகிருந்த இருக்கையொன்றில் தனையி ருத்தி
அடக்கமுயன் றார்கவலை யதனில் தோற்றார்
பெருக்கெடுக்கும் கண்ணீரைப் புதைத்தார் கண்ணுள்
பிறர்காணா வகையினிலே விம்மி னாரே 793

காரிருளால் உடல்மறைத்தே இரவு தூங்கக்
கண்மணிகள் இமைப்போர்வை வேண்டா வென்றோ
உருகுகின்ற மெழுகுவர்த்திச் சுடரை நீள
உணர்ச்சியற்ற சிலைவிழிபோல் உற்று நோக்கும்
ஒருவருமே அருகிலிலாத் தனிமை கொண்டே
உடனிருந்த ஒவ்வொருநாள் போதி னையும்
உருவகித்தார் மனத்திரையில் றுகையா பேகம்
உணர்வோடும் நரம்புகளில் உறைந்திட் டாரே
794

இளவயதில் தம்பியொடு பகைவர்க் கஞ்சி
எவருமறி யாதவோரு இடத்தில் தங்கக்
களவாகப் பெற்றோரும் அறியா வாறு
காரிருளில் காட்டுவழி கடந்து வந்தே
பழவகையும் உண்ணரொட்டித் துண்டும் சேர்த்துப்
பரிமாறிப் பசிதீர்த்த பாங்கு நெஞ்சில்
நிழலாட றுகையாவின் நெஞ்சு ரத்தை
நினைந்ததுள்ளம் கண்மணிகள் நீரு ளாடும்
795

பெரும்போரில் வெற்றிகண்டு வாகை சூடிப்
பரிமீது பவனிவரும் போதா மோர்கால்
தெருவோரச் சாளரத்தி னூடே தம்மின்
தோழியரோ டொன்றிணைந்து நகைப்பூப் பூத்தே
அரும்பியிதழ் சிலவிரிந்து தன்னை யொத்த
அழகுமலர் தனையாருங் காணா வாறே
எறிந்ததனை எண்ணியதும் விழியுள் கோத்த
இருதுளிகள் கன்னத்தைத் தொட்டே வீழும்
796

திருமணநாள் பாங்கியர்கள் சூழச் செம்பொற்
சிலையாக நாப்பண்தன் தலையைத் தாழ்த்திப்
பெருகிவரும் நாணத்தைப் புதைக்க வுற்ற
பாடதனை மீண்டொருகால் மீட்டுப் பார்த்தார்
மருவவிடை பற்றியதும் மெய்யோ டொன்றி
மார்போடு மார்பாகச் சரிந்த பாங்கும்
நெருடியது நெஞ்சத்தை நினைந்த போது
நயனங்கள் மடையொடித்துப் பொழிய லாகும்
797

முன்னரிரு குழந்தைகளைப் பெற்றெ டுத்து
மகிழ்ச்சியிலே வாழ்ந்திருந்த நல்ல நாட்கள்
கண்முன்னே காட்சிகளாய்த் தோன்று மாப்போல்
கற்பனையில் நிழலாட றுகையா பேகம்
பெண்மைக்கோர் இலக்கணமாய்த் தூய தாயாய்ப்
பரிணமித்தார் என்பதற்குச் சாட்சி கூறும்
விண்ணவனே தந்தகொடை வாங்கிக் கொண்டான்
விதிவகுப்போன் விதித்ததென விம்மி னாரே

798

தனித்திருந்தே திருமறையை ஓதி னாரத்
தயாபரனைக் கையேந்திப் பிராத்தித் தார்"நீ
தனித்தவன்யார் தயவினையும் வேண்டா துற்றோன்
தனித்துன்பால் வந்துற்றார் றுகைய்யா பேகம்
தனியுற்றேன் நானுன்னைப் பணிந்து வேண்டித்
தலைபணிந்தேன் வல்லவனே சொர்க்க வாழ்வைக்
கனிந்திடுவாய் காருண்யா கருணை யாளா
காப்பவனே" என்றுருகி வேண்டி னாரே.

799

மீண்டுமொரு திருமணம்

நீண்டநாள் தனித்தி ருத்தல் நன்றன்றே என்று மூத்தோர்
வேண்டுமோர் திரும ணத்தை வரித்திடல் என்றார் திப்பு
வேண்டாமே என்று ரைத்தும் விடுவதா யில்லை யன்னார்
ஆண்டவன் விதித்த தென்ன அறிகிலா ரெவரும் அன்றே

800

தந்தையின் தாயு ரைத்தார் தாயிலாக் குழந்தை யர்க்குச்
சொந்தமொன் றமைய வேண்டும் தாயென சிறுவ ரன்னார்
சிந்தையி லுற்ற சோகம் தணிந்திட வேண்டு மாயின்
தந்தைநீ அன்ன வர்க்குத் தேர்ந்தொரு தாய்கொள் ளென்றார்

801

இளமையில் மனையி ழந்த இருள்மையுள் இருக்குங் காலை
பழைமையின் நினைவு நெஞ்சைப் பிழிந்தெடுத் துருகச் செய்யும்
இழந்ததைப் பெறமாட் டாத இழப்பது என்ப தாலே
பிழையிலை பிறிதொன் றேற்றல் பிறப்பது நலமா மென்றார்

802

மூப்பெனை அணுகிற் றுன்றன் மாதாவும் பிணிக்குள் ளானார்
காப்பதுன் கடனா மன்றோ கவலுறா திருக்க நாங்கள்
காப்பவன் கருணை யாளன் காரணம் புரிந்தோன் செய்கை
வேர்ப்படின் நாம தற்கு வழிப்படல் முறையா மென்றார்

803

காரணம் பலவெ டுத்துக் கூறினும் பற்ற மாட்டாக்
காரணத் தாலே மீண்டுங் கூறுவார் "என்னுள் முற்றும்
வேரூன்றிப் போனாள் 'றுகையா பேகம்'நான் என்தான் செய்வேன்
தீராத சோக மென்னைத் தொற்றிற்றே" என்றார் திப்பு

804

தனித்துநீ இருந்தா லின்னுந் தொடர்ந்திடுஞ் சோகம் மாற்றாய்
உனக்கென மற்றோ ருள்ளம் ஒன்றிடில் கவலை மாயும்
தனக்குளோர் சோகந் தன்னைத் தாங்கிடில் செங்கோல் சாயும்
மனக்கவல் சிந்த னைக்கு மாபெரும் பகையா மென்றார்

805

சிந்தனைத் தெளிவி லாது செய்வதாம் அனைத்தும் தீதை
வந்திடச் செய்யும் ஆற்றும் வினையெலாம் பிழைபால் ஒன்றும்
புந்திகூர்ந் திதற்கா யேனும் பணியென்றன் வார்த்தை பற்று
மந்திரம் செபிப்ப லொப்ப வார்த்தைக்கல் வீசி னாரே

806

ஓயாதே ஒவ்வொன் றாக ஓதியும் கேளார் செங்கோல்
சாயுமென் னுரையொன் றேதன் செவியினுட் புக்கித் தீய்க்கச்
சாய்ந்தது மனத்துள் ளுன்றித் தர்க்கித்த பிடிவா தம்தாய்
சார்ந்திடப் பதிலு மொன்று தெளிந்தது தாய்ம கிழ்ந்தார்

807

எண்ணுவ போல நீங்கள் இயற்றுக இறைவன் நாட்டம்
திண்ணமாய் அதுவென் றாகில் தொடரட்டும் முயற்சி உங்கள்
எண்ணமும் அதுதாம் நானென் எதிர்ப்பினை இயம்பிட் டாலும்
பண்ணவன் தீர்ப்பை மீறும் படியென்று மொன்றுண் டாமோ 808

விரும்பிய வாறு பெற்ற வார்த்தையால் தந்தை யின்தாய்
பொருந்தினார் மகிழ்வின் உச்சப் படிதனில் பொருத்த மாகப்
பொருந்திய தோர்வ ரத்தைப் பேரரின் கைகள் பற்றப்
பொருந்தினார் தாயும் தாயைப் பெற்றனர் திப்பின் செல்வர்
809

எண்ணிய போலோர் பெண்ணாள் இசைந்தனள் இளமை கொஞ்சும்
பெண்ணவள் திப்பு வுக்குப் பொருந்துவா றமைந்த பாகம்
பெண்மையின் பாங்கும் பண்பின் பிறப்புமென் றாய்க்க லந்த
தன்மையில் "சயீதா பேகம்" திப்புவின் கரங்கை கொண்டாள்
810

இளமையில் நெஞ்சு றைந்த ஏந்திளை றுகையா பேகம்
முழுமையாய் நிலைத்தி ருக்க மற்றொன்றை நாடாப் போழ்து
இளமையும் அறிவுங் கொண்டோர் இனியவள் வாழ்வை ஈந்தாள்
தொழுதிடற் குரியோன் செய்யை தனிமையைத் தவிர்ப்ப தற்கே
811

முதல்மனை பெற்றசெல்வப் புத்திரர் இருவ ருக்கும்
பதிலவர் தாய்க்குத் தாயாய் பிறப்பெடுத் திருப்ப தொப்ப
வதிபுலத் தமைந்தார் சயீதா பேகமும் மற்றுள் ளோர்க்கும்
புதியவ ளல்லாள் போன்றே பற்றொடு பொருந்தி னாளே
812

தாயன்பு மக்கள் கொள்ளத் தக்கதாய் மனையா ளொன்ற
நேயமும் பெருகிற் றில்லம் நிறைந்தது முன்போ லன்பால்
நாயகர் கிழத்தி யன்பால் நனைந்திட நெகிழ்ந்தா ருள்ளம்
சேயிழைப் பண்பு வென்ற சிலாக்கியம் அதுவா மன்றோ
813

திப்புவின் வாழ்வில் மற்றோர் திருப்பமாம் சயீதா பேகம்
ஒப்புர ஒழுகி நாதர் உடன்பாதி போலு மானார்
செப்பிடில் அரச ராட்சி தவிர்ந்தஇல் சுமைக ளெல்லாம்
ஒப்பினா ரவரே மக்கள் உடன்படு மனைத்தும் ஏற்றார்
814

மதங்களின் காவலர்

திப்புசுல்தான் மதவெறியர் கொடுமைக் காரர்
செய்ததெல்லாம் கொடுமைகளே மதச்சார் புற்றுத்
தப்பிதங்கள் செய்தார்தம் இனத்தைச் சாரார்
தமைவலிந்து மதமாற்றம் செய்ய வைத்தார்
கப்பியநெஞ் சழலாலே நாட்டி லுற்ற
கோயில்கள் தமையழித்தே உடைமை யெல்லாம்
திப்புகொள்ளை யிட்டாரென் றுண்மை கொன்று
சொல்லிவைத்தார் வெள்ளையர்கள் நம்பும் வாறே
815

முற்றிலும்பொய் யானவெல்லாம் மனங்க றுத்தோர்
மொழிந்தவையே எனப்பின்னோர் ஆய்வு செய்து
பொற்புறுநல் லுண்மைகளை வெளிக்கொ ணர்ந்தார்
பேதமறப் பிறரறியக் கூறு கின்றார்
அற்புதமாய் மக்களினை மனத்தால் வென்றே
அரசோச்சி அந்நியரைக் கிறங்க டித்த
கொற்றவரை பழியிருந்து காக்க வென்றோர்
பண்புடைய ஆய்வறிஞர் புறப்பட் டாரே
816

மதப்பற்று மிக்கவரே திப்பு இஸ்லாம்
மதவழியில் வாழ்ந்தவர்தான் பிசகில் லாதே
மதங்களிடை நல்லிணக்கம் வேண்டும் என்னும்
முறைமையிலே காலூன்றி வலிமை பெற்ற
மதக்கொள்கை கொண்டிருந்தார் அனைத்துத் தெய்வ
வழிபாட்டுத் தலங்களையும் மதித்தார் எல்லா
மதத்தலங்கள் தமக்குமவர் வாரி வாரி
மானியங்கள் தந்தாரெனுஞ் சான்றுண் டாமே
817

தொழுவதற்குப் பள்ளிகளும் மார்க்கப் பாடந்
தேர்ந்தறியப் பயில்கூடம் அமைத்த தொப்ப
வழுவாது கோயில்களும் மடங்கள் தாமும்
வழிபடவும் பயனுறவும் தோற்று வித்தார்

ஒழுகுவது எம்மதந்தான் என்றிட் டாலும்
ஒருதடையும் இருந்ததில்லை திப்பு ஆட்சி
முழுஉரிமை தந்திருந்த தாகும் யார்க்கும்
முரணில்லை மதவுரிமை பொதுவொன் றாமே
818

வழிபாட்டுத் தலங்களிலே தொழுகை பூசை
வழக்கம்போல் நடைபெறுதல் தவிர்த்த லாகா
ஒழுக்கத்தை நிலைநிறுத்த மார்க்கப் பக்தி
ஒன்றிடவும் வேண்டும்தம் மக்கள் வாழ்வில்
துளிப்பருக்கை அளவெனிலும் மதக்கு ரோதஞ்
சேர்ந்தவராய் இருத்தலினைக் காண மாட்டார்
ஒழுக்கத்தின் சீலரவர் ஒருமைப் பாட்டை
உறுத்தியவோர் பண்பாளர் ஆய்ந்தோர் கூற்றே
819

பலாத்கார மதமாற்றம் செய்தல் பாவம்
பழிகொள்ளல் வேண்டாவென் னிறைவன் ஆணை
பலமாகக் கைக்கொண்ட பண்பு மிக்கார்
பிறருரிமை மதித்தவரே திப்பு சுல்தான்
நிலம்படைத்தோன் சொல்லைவர்க்கெம் மார்க்க மாமோ
நோர்க்கட்டும் நின்மார்க்கம் நினக்குப் போல
நலமாகும் அவர்மார்க்கம் அவர்க்காம் என்ற
நீதிபற்றி இறுதிவரை நிலைத்தி ருந்தார்
820

சீரங்கப் பட்டினத்தின் நிலவ மைப்பில்
தொன்மைமிகு வழிபாட்டுத் தலம தாகச்
சீரங்க நாதரருக்கா யான கோயில்
சீர்பெற்றுத் திகழ்கிறது அதனோர் பாலாய்
ஓரத்தில் சிறுதொலைவில் திப்பு சுல்தான்
உறைபதியும் ஒன்றியிருந்த ததுவே நாளும்
குரல்கேட்பார் கோயில்மணி இன்னி சைக்க
கடந்ததொரு நாள்பொழுது கவலுற் றாரே 821

தக்காரை வரவழைத்தார் கோயிற் பூசைத்
தாமதத்தின் காரணத்தைத் தேர்ந்த றிந்தார்
ஒக்காத செயலிஃதென் றுறுத்திச் சொல்லி
உண்டான குறைகளைந்து ஆணை போன்று
இக்கால்தொட் டோர்பொழுதும் பூசை நேரம்
இடம்மாறக் கூடாதென் றுறுதி பெற்று
மக்களுளங் கவர்ந்தவராம் திப்பு சுல்தான்
மதவெறியர் என்றுரைப்போர் மதிகெட் டோரே
822

சர்வமத நல்லிணக்கக் கொள்கை யோடு
சரிசமமாம் நீதியின்முன் அனைபே ரும்என்
தர்மத்தை நிலைநிறுத்தத் திப்பு செய்த
தீர்ப்பொன்றைப் பேசிடுதல் சிறப்பு டைத்தாம்
வர்மத்தின் காரணமாய் வந்த தஃது
வினைக்கெவரோ காரணராம் அவர்க்கு மாறாய்த்
தர்மத்தின் காவலென விளைந்த தீர்ப்புத்
தொடரஇன்றும் பொருந்துவது சீர்மை யாலே
823

"பீருலதா" என்னுமொரு முஸ்லிம் தன்னைப்
பின்பற்றுஞ் சீடர்கள் வீதி யொன்றில்
ஆரோக ணித்திந்துத் தெய்வம் தேரில்
அலங்கார ஊர்வலத்தில் வருதல் கண்டு
சீர்கெட்டு நையாண்டி செய்தார் மக்கள்
சேர்ந்தொன்றி நையப்புடைத் தனுப்பி னார்கள்
நேரிட்ட பெருந்தவறைக் கேட்டு சுல்தான்
நொந்துள்ளம் வருந்திநீதிக் கழைப்பும் செய்தார்
824

சீடர்கள் தாக்குண்ட செய்தி கேட்டு
சீற்றமுற்றார் பீருலதா "முஸ்லிம் ஆட்சி
பீடுற்றுப் போனதுவோ தம்மி னத்தோர்
பாதுகாப்புக் கிடமற்ற பவந்தா னென்னே!

நாடுகடந் தேகிடுவேன் நானென் றச்சம்
நிலைபெறவென் றோதினரே கேட்டு சுல்தான்
சோடைபெறா நீதிபக்கஞ் சாரா நீங்கள்
செல்வதென முடிவுகொண்டால் செய்க வென்றார் 825

பள்ளிவாசல் தலங்களுக்கு மட்டு மன்றிப்
பங்குசரி யாய்க்கோயில் தலங்க ளுக்கும்
அள்ளியள்ளிக் கொடுத்தாரே திப்பு சுல்தான்
அளவிடற்கும் இயலாதே அந்நாட் போழ்து
உள்நாட்டுச் சிவத்தலமாம் "நஞ்சுண் டேஸ்வர்"
உறைபதியென் றோதுகின்ற திருத்த லத்தின்
உள்ளுறையப் பச்சைவண்ண லிங்க மொன்றை
உவந்தளித்தார் இன்றுமஃது உள்ள தாங்கே 826

"பாதுஷ்ஷா லிங்கம்"எனப் பேர தற்குப்
பேர்சொல்வார் "மரகதத்து லிங்கம்" என்றும்
பாதுகாத்து வைத்துள்ளார் மேல்கோட் டையில்
பரிசளித்த முரசத்தைக் கோயில் தன்னில்
ஓதிடுங்கால் இன்னுமின்னும் உண்டாம் இங்கு
ஓதியதே போதுமவர் மதக்கொள் கைக்கும்
நீதிவழு வாதநெறி நடைமு றைக்கும்
நற்சான்றாய்ப் பதச்சோறாக் கூறல் கொண்டேன் 827

மதப்பற்று மிக்கவராய் வாழ்ந்தார் திப்பு
முற்றுமிறை வழிநடந்தார் இஸ்லாம் மார்க்க
விதிமுறையில் நம்பிக்கை கொண்ட தாலே
வாழ்க்கையையும் தானமைத்து மற்று மெல்லா
மதத்தினையும் மதித்தவர்தம் மதங்கள் வாழ
மட்டில்லா உதவிகளுஞ் செய்த நல்லார்
மதவெறியர் என்றுரைப்ப தாகில் அஃது
மதவெறியர் புகலுகின்ற வசைச்சொல் தாமே 828

ஐவேளைத் தொழுகையிலும் அவரே முன்னர்
ஆதியிறை பள்ளியினை அலங்க ரிப்பார்
வையத்து நாயகனை வழுத்தா தெஃதும்
வழிதொடர வில்லையவர் வாழ்வில் முற்றும்
செய்வதெல்லாம் இறைபணியே என்ப தாலே
தமதாட்சி "இறையாட்சி" என்பார் திப்பு
துய்யமனங் கொண்டஆட்சிச் செம்மல் வீரத்
தியாகியின ஒற்றுமைக்குத் தொண்டு செய்தோன் 829

திப்பு சுல்தானின் சிருங்கேரி மடத் தொடர்புகள்

ஆதிசங்க ரர்தொட்டுத் தொடக்கி வைத்த
தான **"சிருங் கேரிமடம்"** மராட்டி யர்தம்
தீதுநெறிப் படைத்தலைவன் "பரசு ராமன்"
செய்வினையால் கொள்ளையிடப் பட்ட போழ்து
சேதமுற்ற திருத்தலத்தைச் சீர்மை செய்யத்
தொகைப்பணமும் பொருட்தொகையும் ஈடு செய்தார்
மீதியெனக் குறையிருப்பின் அதுவுந் தீர்க்க
முன்னின்றார் மதப்பொதுமை கொண்ட திப்பு 830

பூணணிகள் ஆறுபத்தின் இலட்சம் தேறும்
பரியோடு பல்லக்கு யானை வேறாம்
காணுமிடம் பிராமணரைக் கொன்றுந் தீர்த்தான்
கோயிற்சிலை தனையும்மண் புரட்டி னான்எண்
சாணுடலைக் காக்கமடத் தலைவர் ஓடித்
தப்பித்துத் திப்புமன்னர் உதவி நாட
வேணுமெனும் அத்தனையும் தருவ தாக
வாக்களித்தார் திப்பனைத்தும் வழங்கி னாரே 831

பதிலுக்காய் மடத்தலைவர் பரிசாய்ச் சால்வை
பிரசாதம் போன்றவற்றை அனுப்பி வைக்க
முதலளித்தே உதவியுடன் இன்னுங் கூட்டி
மனமுவந்து யானையொன்றுஞ் சிலையை - மீண்டும்
புதிதாகப் பிரதிட்டை செய்ய ஹோமப்
பணிக்கான செலவுதந்து பிறரால் தீங்கின்
கதிதோன்றா வாறுபாது காப்புச் செய்யக்
காவலரும் வந்துறைந்தார் ஆணை யேற்றே 832

தொடர்புகளைக் கொண்டிருந்தார் மடத்த லைவர்
சங்கராச் சார்யருடன் முப்ப(து) ஓலை
உடனின்றும் உண்டாங்கே உண்மை கூற
உதவிபல தருவதற்கும் உவத்தல் வேண்டிக்
கடிதங்கள் திப்புசுல்தான் முத்தி ரையுங்
கொண்டிருந்த தவையனைத்தும் மதச்சார் பின்மை
மடத்திலவர் கொண்டிருந்த கௌர வத்தை
மொழிவனவாம் பரந்தமனப் பாங்குங் காட்டும் 833

கடிதங்கள் அத்தனையும் வழமை மாறிக்
கொண்டிருந்த தாகுமதன் தொடக்கந் தன்னில்
உடைத்தாகும் மடத்தினுடைத் தலைவர் நாமம்
உரியவவர் சிறப்புரைக்கும் பெயர்கள் தாங்கி
இடைநடுவில் சேதியின்பின் இறுதி யாக
எழுதியவர் பெயரிருக்கும் திப்பு நாமம்
முடித்திருக்கும் **"திப்பு"**வென்றாம் புகழ்ச்செல் லற்றே
மதத்தலைவர் தமக்களிக்கும் மரியா தைக்காம் 834

சிவன் கோயிலும் சுல்தானின் ஜீவகாருண்யமும்

குண்டடி யுண்ட தோர்கால் சுல்தானின் யானை "ஷெர்ஷாஹ்"
உண்டது போரின் போதாம் ஊறுசற் றதிக மாகும்
கண்டதும் சுல்தான் மிக்க கவலுற்றார் வேண்டு மாறு
கொண்டது பரிகா ரங்கள் குணங்காண நாளா கிற்றே 835

காரணம் புரியா துற்றார் கைவாகுப் பண்டி தர்கள்
தீராத நிலைமை கண்டு செயலற்றுப் போனார் அன்னார்
கூறிட வேண்டும் இஃதைக் காரியம் விஞ்சு முன்னர்
பூரண சுகத்தைக் காணப் புதுவழி தேடு தற்கே 836

பிழைத்திருந் தாலும் கொண்ட புண்ணினால் வருந்து மஃதை
அழைத்துமே வந்தார் கண்டே அகம்மிக வருத்த முற்று
முழுச்சுகங் காணற் குண்டோ முறைமையும் என்றே கேட்ப
அழுத்தமா யுரைத்தார் உண்டாம் ஆவன செய்வோ மென்றே 837

'பூர்ணய் யா'வே வார்த்தை புகன்றவர் எதுவா மென்று
காரிய மாக வேண்டுங் காரணத் தாலே கேட்க
ஊர்ச்சிவன் கோயில் நீற்றை உறைவடு மீது தூவின்
பூரண சுகத்தைக் காணப் போதுமென் றுரைய ளித்தார் 838

பூரணை நாளிற் சென்று பூசாரி யிடத்திற் சொன்னால்
நீறினை அவரே தூவி நல்லன செய்வா ரென்ன
காரணன் ஏகனென்னுங் கருத்துளத் திருந்திட் டாலும்
சேரட்டும் மருந்தாய் நீறு செய்கவென் றியம்பிட் டாரே 839

'கோபால்ராவ்' என்றார் திப்பு கடுகியே 'சுல்தான்' என்று
மேவிடு பணிவு மேனி முற்றிலும் படியச் சொல்ல
போவிர்நீர் பாக னோடு புரிவன புரிவீர் என்ன
நாவினில் வார்த்தை முற்றும் நடுவினி லவர கன்றார் 840

புண்ணுக்கு நீறு கண்ட பரிகார மாகக் காய்ந்து
கண்ணுறத் தோன்றா வாறு கோலமுற் றிருத்தல் கண்டு
மண்ணாளும் தலைவன் மிக்க மகிழ்ந்ததற் கீடாய் அன்னார்
எண்ணத்தில் மகிழ்வு விஞ்ச ஏற்றதோர் முடிவு கொண்டார் 841

சிவன்கோயில் நீறு தந்த சுகமென எண்ணு வாரின்
செவியினித் திடுமாம் வண்ணம் திப்புதன் முடிவு ரைத்தார்
எவருமே எண்ணா வாறாய் இட்டவோர் ஆணை இன்றே
சிவன்கோயில் நிறுவ வேண்டும் தருமத்தைச் செய்க வென்றே
842

சலவைக்கல் கொண்டே உங்கள் தெய்வத்த லத்தைக் கட்ட
எலாமுமே கொள்க வென்றே ஏவிடப் 'பூர்ணய் யா'வும்
செலவினைக் கருத்தில் கொள்ளாத் திப்புவின் ஆணை பற்றிக்
கலைச்செறி வோடு கோயில் தலத்தினைக் கட்டச் செய்தார்
843

பளிங்குக்கல் கோயி லோடு பன்னிரு 'ஏக்கர்' பூமி
வளத்தையுந் தந்தார் மன்னர் வழிபாட்டுச் செலவ னைத்தும்
வழங்கவும் பணித்தார் வேண்டும் வகையெலாம் நன்மை கொள்ள
தொழும்புல மஃதின் காப்போர் தமக்குரை தாமுஞ் செய்தார்
844

சிவன்கோயில் கட்டி மக்கள் தவவழி பாடு செய்ய
உவந்ததால் ஊரில் சைவர் உவகையால் மன்ன ருக்கும்
உவந்துநல் வரவேற் பொன்றை ஊர்ப்பொதுத் தலத்தில் செய்தார்
உவந்தாங்கே யுற்ற மன்னர் உபதேசம் சரித மாகும்
845

வேறு

என்னுடை மக்காள்! என்னுடை மக்காள்!
இன்றுநாள் என்றன் இதயம் மகிழ்வால்
பொங்கியே திளைக்கும் பாக்கியம் பெற்றது
உங்களின் மகிழ்வே என்மகிழ் வாகும்
உலகினை ஆளும் ஒருவனாம் இறைவன்
நலமெலாம் நல்கும் நாயக னவனாம்
புகழெலா மிறைக்கே புகழெலா மிறைக்கே
அகமது நெகிழ அவன்புக ழோதுவாம்

கோயிலென் றாகிலும் பள்ளியென் றாகிலும்
தூயவ னிறைவனைத் தொழுந்தல மாகும்
ஒன்றே தெய்வம் ஒன்றே தெய்வம்
என்றே கொள்வோம் ஏற்றமும் பெறுவோம்

இந்துவும் முஸ்லிமும் என்னுயிர் கூறுகள்
இந்திய ராம்நாம் எலாருநா மொன்றே
மதங்கள் இரண்டுதாம் மானிடம் ஒன்றே
இதம்பெற இரண்டும் இணைந்தேக வேண்டும்

ஒன்றொ டொன்றும் ஒன்றுதல் போலும்
ஒன்றுக ஒன்றி ஒற்றுமை கொள்வீர்
கோயிலும் பள்ளி வாயிலும் என்றும்
தூயதாய்ப் பாலனம் பெற்றிட வேண்டும்
மனித உணர்வினை மதித்திடு வீர்கள்
இனமத வேற்றுமை இலாதொழித் திடுவீர்
பொதுவா மனைத்தும் பாகுபா டில்லை
இதுவே ஆட்சியின் அடிப்படை அறிவீர்

மக்கள் ஒன்றுதல் போலவெம் மன்னரும்
தக்கவைத் துறவைத் தொடர்ந்திட வேண்டும்
இந்திய மண்ணின் எல்லையில் பெரும்புலம்
வந்தவர் கைவசம் வந்ததேன் நம்மவர்
ஒற்றுமை யற்ற இழிநிலை யாற்றான்
முற்றையும் ஒருகால் மாற்றான் கொள்வான்
இந்நிலை தொடர்ந்தால் எளிதினில் அந்நிலை
வந்திடு மென்பதை மறுப்பதற் கில்லை

வெள்ளைய ரெம்முள் விரவியே மண்ணைக்
கொள்ள நினைக்கும் கொள்கையு மறிவேன்
என்னுயி ரென்னுள் இருக்கும் வரைக்கும்
அந்நிலை வரநான் அனுமதிக் கில்லேன்
சபதமா யிதனைக் கொண்டுளேன் அன்றேல்
அபத்தம் என்றன் ஆட்சிக் கதுவாம்

"உலகில் நூறாய் ஆண்டுகள் ஆடுபோல்
உலவலில் மேலாம் ஒருநாள் புலிபோல்
வாழ்வது வாகும்" வரலா றுரைக்கும்
கீழ்மையி லிருந்தெமைக் காப்பது கடனாம்

புதியதோர் உலகைப் படைத்தே எம்மோர்
விதிதனை மாற்ற விளைகுவோம் வாரீர்
என்றே மன்னர் இயம்பிட மக்கள்
நன்றே நாங்களும் நும்வழி தொடர்வோம்
என்றே யொன்றி இயம்பினர் வாழ்த்தொலி
எண்திசை பரந்தே இசைத்தது "மன்னர்
வாழ்கவே வாழ்க வாழியே வாழ்க
வாழ்கவே" யென்று விளம்பினர் மகிழ்ந்தே

846

வணக்கத்தல மான்யங்களும் நன்கொடைகளும்

தொண்ணூறு சதவிகிதம் 'ஹிந்து மக்கள்
சேர்ந்திருந்தார் முஸ்லிம்கள் பத்து வீதம்
முன்னைநாள் மைசூரின் மனுத்தொ கையில்
மதபேதம் இலாதிருந்த காலம் அஃதாம்
மன்னரொரு முஸ்லிம்மாய் இருந்த போழ்தும்
முதன்மைதர வில்லையவர் தம்மி னோர்க்கு
என்னசத விகிதமதோ ஏற்ற வாறே
எலாமுமிருந் ததுவதற்குச் சான்றுண் டாமே

847

ஓராண்டு மானியமாய் தேவஸ்த் தான
ஒதுக்கீடு நூறுதவிர் இரண்டி லட்சம்
சேருமிரு நூறுநூறு வராக ணாகும்
தனித்தேதான் பிராமணரின் மடங்க ளுக்கு
தேறியது ஈர்பத்து ஆயி ரங்கள்
தாம்முஸ்லிம் மதத்தலங்கள் சார்பி லாகும்
காரணமோ நல்லிணக்கம் நீதி காத்தல்
காண்டதிவை கணக்கேட்டின் பதிவி லாகும் 848

சிலைவணக்கத் தட்டுக்கள் தந்தி ருந்தார்
தங்கவெள்ளி உலோகம்**"நர சிம்ம சாமி"**த்
தலம்மேலைக் கோட்டையதாம் பன்னீர் ஆனை
சேர்ந்திருந்த ததனோடே இரத்தி னத்தால்
விலையுயர்ந்த தட்டுக்கள் தந்தார் கோயில்
வாழ்**"கந்தேஸ் வரஸ்வாமி பூசை"**க் கென்றே
நலம்பெற்ற தாகுமது போல தட்டு
"நாராயணஸ் வரஸ்வாமி"த் தலமு மாமே.

849

பத்தாயி ரம்வராகன் புண்ய தானம்
புனிதகாஞ்சிக் கோயிலுக்கும் இரண்டு ஊர்கள்
சொத்தாகும் புட்பகிரி மடத்தி னுக்குத்
திப்புசுல்தான் தந்தவைகள் தர்ம மாக
அத்துடனே சிருங்கேரி மடத்துக் காக
அளித்திருந்தார் தந்தைஹைதர் 'சனது'மூன்று
அதுவழியே மூபத்துச் சனது மைந்தர்
அன்பளிப்பாம் இன்னுமவை ஆங்குண் டாமே

850

தான்விரும்பிக் கோயில்களைத் தாப ரிக்கத்
தக்கனவாய்ப் போதுமென்ற அளவில் தந்த
மானியங்கள் பற்றியதாம் அரசு ஆணை
மைசூரின் நூலகத்தில் இன்னு முண்டு
ஞானவழி ஜகத்குருவாம் சங்க ரர்க்கென்(று)
எழுதிவைத்த ஓலைகளும் அவற்றில் சேரும்
போனாலும் மண்துறந்தே இன்னுங் கூடப்
பெயர்சொல்லத் தர்மங்கள் நிலைத்து நிற்கும்

851

போத்துக்கீயக் கோயில்

வணங்குதற்குக் கோயிலொன்று தம்ம வர்க்கு
வேண்டுகின்ற நிலைமைதனை எடுத்து ரைத்தே
இணங்கும்படி வேண்டிநின்றார் போர்த்துக் கேயர்
ஏதுமொரு மறுப்புமின்றித் திப்பு சுல்தான்
இணங்கியதோ டதனைத்தன் பொறுப்பி லேற்றும்
இடமொதுக்கி அமைப்பதற்கும் உதவி செய்தார்
இனமதத்தின் பேதமற்ற கொள்கை கொண்டார்
இணங்கியதில் வியப்பில்லை எடுத்துக் காட்டே
852

சென்னையிலே இருந்து"**பாதர் மர்டொக்**" என்பார்
திப்பரசர் தமைக்காண வேண்டு மென்று
மன்னர்தம் முதலமைச்சர் "பூர்ணைய் யா"வின்
முகதாவில் வேண்டிநிற்க அவரும் ஏற்றுக்
தன்னோடே அழைத்தவரைத் தரிசித் தற்குத்
தக்கவழி செய்திட்டார் சந்திப் பின்கால்
முன்வைத்தார் வந்ததம்மின் நோக்கந் தன்னை
மிகஆய்தோர் முடிவினுக்கு வந்திட் டாரே
853

மக்களுக்குக் கல்விதனைப் போதிக் கின்ற
முயற்சியிலே வேரூன்றி கல்விக் கூடம்
திக்கனைத்தும் தொடங்குகின்ற பணிகொண் டுள்ளேன்
சென்னையிலே தொடங்கியுள்ளேன் தங்கள் - மண்ணில்
அக்கருமம் நிறைவேறின் பலனுண் டென்றே
அறிவுவளர்த் திடும்பணிக்காய் உதவி வேண்ட
மிக்கபெரும் கொடையென்ற போதும் மன்னர்
முகத்திலொரு வினாத்துலங்க தந்தை சொல்வார்
854

'நிச்சயமாய் மதம்பரப்பும் நோக்க மல்ல
நம்புங்கள் எனையென்று' நயந்து கூற
அச்சத்தைக் கொன்றுமன்னர் அனும தித்தார்
அனைத்துமதற் கானவழி செய்ய ஆணை
அச்சணமே பிறந்ததுடன் நிறைவேற் றற்காம்
ஆனவழி முதலமைச்சர் செய்யச் செய்தார்
கச்சிதமாய் நடந்ததது கல்விக் கன்னார்
கைகொடுத்த செய்கையெனக் காலம் பேசும்
855

இந்துக்களும் ஆட்சிப் பொறுப்புக்களும்

முதலமைச்ச ராய்ப்பண்டிற் "பூர ணையா"
மன்னரவை இறுதிவரை பணிபு ரிந்தார்
பதவிகொண்டர் "ஹரிசிங்"கோர் படைக்காம் ஏற்ற
படைத்தலைமை "ஸ்ரீபத்ரா" "றொஷான்கா" னோடே
உதவிப்படைப் பொறுப்பேற்றார் புரட்சிக் காரர்
ஓங்குதலைத் தடுப்பதற்காய் மலபார் நாட்டில்
தீதுசெய்த நாயக்கர் மராட்டி யர்கள்
தொல்லைகளை அடக்குதற்காம் இந்துப் பேரே
856

பங்களூரில் "கான்வாலிஸ்" தலைமை கொண்டு
புகுந்தவெள்ளைப் பறங்கியரை மூன்றாம் மைசூர்
செங்குருதிச் சமரினிலே சதமுன் னூறு
சேர்ந்தபரிப் படைக்குமொரு தலைமை இந்து
பங்குசெய்தார் இதுபோன்றே பலரும் திப்புப்
புகழரசர் ஆட்சியிலே பதவி ஏற்றார்
எங்குமவர் அரசியலில் எவரின் மீதும்
இல்லையேற்றத் தாழ்வுசம உரிமை தானே
857

காஸீகான் என்னும் அரசவிசுவாசி

திப்புசுல்தான் வரலாற்றில் தவிர்க்க வொண்ணாச்
சிறப்புக்காய் உரியவர்கள் சிலபே ருண்டாம்
ஒப்பில்லாப் பெருமகனார் **"காஸீ கானை"**
ஒப்பப்பிற ரெவருமிலர் ஹைத ரோடும்
ஒப்பியநல் லுறவுவன்னார் இறப்பு மட்டும்
ஒன்றியது தொடர்ந்துதிப்பு வரையும் நீண்டே
ஒப்பியதாம் அவர்வாழ்வை ஒன்றிக் கூறல்
உவப்பாகும் அன்றியிந்நூல் நிறைவு கொள்ளா
858

இளவயதில் ஹைதரொடு நட்புப் பூண்டே
இருவிரல்க ளொன்றியபோல் வாழ்ந்தி ருந்தும்
அளவறியா வாறுபல களங்கள் கண்டும்
ஆட்சிக்குத் தோள்கொடுத்தும் உதவி நின்றார்
முழுமைபெறத் திப்புவுக்குப் படைப்ப யிற்சி
முற்றுமுள வீரதீரக் கலைக ளெல்லாம்
பழகவைத்தார் பெரும்படைக்கும் முதல்வ ரானார்
பெருவீரர் காஸீகான் புகழி றைக்கே
859

காஸீகான் வாழ்வினிலே நடக்க வொண்ணாக்
காரியமொன் றானதது கூறின் அன்னார்
நேசத்தை ஆட்சியின்பால் கொண்டி ருந்த
நேர்மைவிசு வாசத்தை நினைத்த லாகும்
மாசில்லாக் கொள்கைகொண்ட திப்பு வுக்கு
மனதாரச் சேவைசெய்த பணிக ளோர்ந்தால்
வேஷமிடும் இக்கால ஆள்பு லத்தின்
வண்டவாளச் சாக்கடையை ஓரல் கூடும்
860

குடும்பவாழ்வில் ஒரேமகனே ஒப்பில் வீரன்
குண்டுமிழும் பீரங்கிப் படைமு தல்வன்
உடனொன்றித் திப்புவுடன் இளமைக் காலம்
ஒரேவயதின் காரணத்தால் இணைந்து -
வாழ்ந்தோன்

பிடியுண்டான் வெள்ளையரின் சூழ்ச்சிக் கன்னான்
பரம்பரைக்கும் ஈனமெனத் துரோகஞ் செய்தான்
உடனறிந்தார் திப்புசுல்தான் நொந்து போனார்
உண்மைமுற்றும் அறிந்தார்தன் உளவர் பாலே
861

பீரங்கிப் படைப்பிரிவின் தலைவன் போரிற்
பெரும்பொறுப்பி லுள்ளவனே துரோகஞ் செய்தால்
சேருகின்ற விளைவுகளைச் சீர்தூக் குங்கால்
சிரசரியச் சிறுநொடியுங் காத்தல் வேண்டா
காரணனோ படைமுதல்வர் காஸீம் கானின்
குமாரனென ஆனதினால் திப்பு சுல்தான்
பாரத்தைத் தந்தையின்பால் விடநி னைந்தார்
பறந்ததுடன் ஓரழைப்பும் தந்தை வந்தார்
862

அழைத்ததென்ன காரணமோ அறிய லாமோ
அடலர்வழிப் பிரச்சினைகள் ஏது முண்டோ
விளைந்ததென்ன கூறுங்கள் சுல்தான் அந்த
விபரத்தை அறியமனம் விளையு தொன்றை
முளையினிலே கிள்ளியெறிந் திட்டால் துன்பம்
முற்றிமர மாகாது என்றார் காஸீம்
வெளிநோக்கிப் பார்த்திருந்த விழிகள் சற்று
வந்தவர்பால் பதிக்கவவர் வியர்த்திட் டாரே
863

வாடியசெந் தாமரையாம் வதனம் கண்டார்
வேதனையின் பிம்பமெனும் விழிகள் கண்டார்
கூடியதென் னாமோ!கொடு வினைதா னென்றே
கவலுறுமா றுற்றதிரு வுருவங் கண்டார்
நாடிவந்த தேதெனுந்தன் நிலைமை றந்தார்
நட்டநெடு மரம்போற்சில நொடிகள் நின்றார்
கோடிதுயர் வரினுமதற் கஞ்சா வீரர்
கொண்டிருந்த தோற்றத்தால் துயருற் றாரே 864

மீண்டுமொரு வினாத்தொடுக்க மாட்டா ராக
மன்னவரே வாய்திறக்கக் காத்தி ருந்தும்
தோன்றாத வார்த்தைகண்டு தானே மீண்டுஞ்
சோகத்தின் காரணந்தா னென்ன வென்ன
வேண்டாதே வாய்திறக்க விபரங் கூறென்
வேளையிலோர் ஓலைதனைக் கையில் தந்தார்
கூடிப்பல இடிகளொன்றி தலைக விழ்ந்த
கொடுமையினை யுணர்ந்தார்கண் ஆய்ந்த -
போழ்தே 865

நம்பேன்நான் இதனையெவர் தாமோ செய்த
நாசகாரச் சூழ்ச்சியன்றி வேறொன் றில்லை
நம்பியதேன் நீங்களுமென் றுள்ளம் வெந்து
நடுங்கவுடல் பதறியொரு வினாத் தொடுக்க
நம்பேனோ இதுகண்டால் என்னும் பாங்கில்
நீட்டமற்றோர் மடல்வாங்கிக் கண்ணால் மேய
நம்புகிறேன் நானுமென நிறுத்தும் தோதில்
நயனங்கள் சுடரநின்றார் காஸீ கானே
866

முதலளித்த ஓலையவர் மகன்"ரசூல்கான்"
மாற்றாரின் பக்கலுளான் எனுமாம் சேதி
அதைமறுத்த போதினிலே தொடர்ந்து தந்த
ஆவணமோ பறங்கியர்கள் அனுப்பி வைத்த
சதிக்குதவும் வெகுமதியின் பட்டி யல்தாம்
சென்னையிலே சொத்துசுகம் பதவி போன்ற
அத்தனையுங் கொண்டதது அதைக்கொ ணர்ந்தோன்
அகப்பட்டுக் கொண்டதனால் கிடைத்த தாகும்
867

பெருநெருப்புக் குண்டத்துள் தன்னைத் தூக்கிப்
புதைத்ததுபோல் உணரவிழி செக்கல் வானத்
துருப்பெற்ற தாமுடலம் விறைத்துத் தோள்கள்
ஊன்பிடிக்கப் பாய்கின்ற வேங்கைக் கொக்கும்

தீராத கொடுஞ்சினத்தால் சீறும் பாம்பின்
சீறலொக்கும் பெருமூச்சு திடங்கொள் கால்கள்
கூறாதே அகன்றுநடை கொள்ளும் வீட்டைக்
கண்டதுமே வெறிகொண்டு புகுந்த தாமே
868

ஒடிந்துதரை வீழ்ந்ததுமுன் வாசல் மூடி
ஓங்குகுர லழைப்பாலே சுவர்க ளாடும்
"கொடியபெரும் பாவிரசூல் கான்நீ எங்கே?
கேடுடைய துரோகியேநீ வெளிவா" என்னும்
இடியிடித்த தாமன்ன ஓசை கேட்டே
இல்லிருந்தோர் ஓடிவந்தார் வாயி ருந்து
கடுஞ்சொற்கள் பீறிப்பாய்ந் திட்ட தெந்தக்
காரணத்தால் என்றறியார் திணறிப் போனார்
869

கூக்குரலைக் கேட்டுவெளி ரசூல்கான் வந்தான்
காளையுடல் பாய்கின்ற சிறுத்தை யொக்கத்
தாக்கிநிலம் புரட்டிவிட்டார் தந்தை வீழ்ந்தான்
தரைகிடந்தே தவிதவித்தான் கார ணத்தைக்
கேட்கவுமா முடியுமவன் குற்ற நெஞ்சே
கூறியது போலுமவன் மனையுந் தாயுங்
காக்கமுயன் றார்கள்முன் பாய்ந்தே வந்தார்
கொடுவாளை கையெடுத்தார் காஸீம் கானே
870

மருமகளோர் கையைமனை யாளோர் கையை
முடிந்தபல மனைத்துமொன்றக் கூட்டிப் பற்றி
இரந்தார்கள் உயிர்ப்பிச்சை உவப்பீ ரென்றே
எள்ளளவும் கருணைமனத் தில்லா தாராய்ப்
புரிந்திடுங்கள் தவறுக்கு மன்னிப் புண்டு
புரிந்தராசத் துரோகத்தைப் பொறுக்க லாகா
தெரிந்துமிவன் செய்துள்ளான் வெள்ளை யர்க்குத்
துணைசெய்ய முனைந்துள்ளான் துரோகி யென்றார்
871

விட்டார்க ளில்லையவர் காலைப் பற்றி
விம்மினரே சினங்காக்க மாட்டாப் போழ்தும்
சட்டத்தின் முன்நிறுத்திச் சிரத்தைச் சீவச்
செய்கின்றேன் எனவன்மங் கூட்டி ஆணை
இட்டார்தம் வீரருக்குக் கைது செய்ய
ஏவலுக்குப் பணிந்தார்கள் சிறைகொ ணர்ந்தார்
குற்றத்திற் கேற்றதுபோல் தண்ட னையும்
கிடைக்குமென அவரறிவார் காஸீம் கானே
872

மன்னர்முன் வந்துநின்றார் கைது செய்த
விபரத்தை எடுத்துரைத்தார் நீதி செய்யப்
பின்னின்ற தேனென்றார் மன்னர் திப்பு
பிதாவனையீர் நீரெனக்கு நின்றன் பிள்ளை
அன்னியனுக் குதவியென்னை அழிக்கச் செய்ய
அகங்கொண்டா னென்பதனை அறிந்த போதோ
என்னசெய்வ தென்றில்லா திருந்தேன் ஈற்றில்
எடுத்தமுடி வாலழைத்தேன் நின்னை என்றார்
873

தண்டனையை யுரியபடி செய்தல் வேண்டும்
சுல்தானே இல்லையெனில் எதிர்கா லத்தில்
தன்பிள்ளை தனைக்கொன்ற பழியை நானுஞ்
சுமக்கின்ற வழிநேரும் தயங்க வேண்டாம்
மன்னருங்கள் மகனிதனைச் செய்திட் டாலும்
மன்னிக்க மாட்டீர்கள் நீதி பொய்க்க
எண்ணாத பேர்நீங்கள் இன்றி ருந்தோ
என்பிள்ளை யவனல்லன் இசைவீ ரென்றார்
874

சட்டப்படி எலார்கும்பொது வான நீதி
சார்ந்ததவன் பால்ராஜத் துரோகத் திற்காம்
கட்டளைக்கென் றடிபணிந்தார் சிறைக்கூ டத்தோர்
கைவிலங்கிட் டளைத்தேகும் காட்சி தன்னை

இட்டவரும் பெற்றவரும் சபையி னோரும்
எள்ளுவிழும் ஓசையெழும் மௌனத் துள்ளே
கொட்டாத இமைகளுடன் கண்ணுற் றார்கள்
கதியதுவென் றுளமோர்ந்த கார ணத்தால்
875

கொன்றிட முயன்றார் கொடியவர்

பற்பல் முறைமுயன் றார்க ளழித்திடக் கேடுடையோர்
முற்றிலுந் தோல்வியே கண்டார் இறைவன் திருவருளால்
அற்பர்கள் திப்புவின் ஆட்சிச் சிறப்பை அறிந்ததனால்
பெற்றதாம் காழ்ப்புளம் பொறுத்திலார் ஒன்றித் தொடர்ந்தனரே
876

முன்னிலை நின்றார் நிசாமே யுடன்படு வெள்ளையரும்
சென்னியில் தாங்கிய சேதியு மாகும் தமக்கிடைஞ்சல்
முன்னிலைப் பேரா மவரே ஒழிந்தால் சிரமமிலை
பொன்கொளும் நாட்டினைப் பற்றிடப் போர்களுந் தீருமென்றே
877

சுலைமான் எனுமோர் சுடுதிறன் கொண்ட கயவனையே
செலப்பணித் தார்கள் தருவதாய்த் தங்கப் பெருந்திருவை
கொலைஞன் இணங்கினன் கைவரு சொர்ணத் தொகைநினைந்தே
வலையினில் வீழ்ந்தான் வருமிடர் நோக்கான் வரித்தனனே
878

புறநகர் கொள்புறம் பார்வை யிடவெனப் போவதனை
அறிந்திருந் தார்கள் அன்னியர் சேதி அறிந்ததனால்
குறிதனில் வெற்றி கொளவொரு வாய்ப்புமே வந்ததென
நிறைவுறச் செய்திட நாடினர் சென்றான் கொலைஞனுமே
879

முட்புதர்ப் பற்றையுள் மெல்லப் பதுங்கிப் பதுங்கியவன்
கட்புலன் குத்திடக் கூர்ந்தே குறிதவ றாதிருக்க
எட்டவி ருந்தே இணைத்தனன் தோளில் இலக்குவைத்தே
சுட்டிடும் ஆயுதம் சுண்ட விரல்வில் சொருகினனே
880

பரியினில் தன்னைப் பிரித்தவர் கால்நடை பற்றிடுங்கால்
அருகினில் முக்கியர் அண்டி வருகையில் ஆளுமையால்
தெரிந்தே தனித்தவன் திப்புவைச் சுட்டனன் மார்பினிலே
இருந்தவோர் கவசம் இடர்வரா தொன்றியே காத்ததுவே 881

குறிதவ றாதவக் குண்டின் பலமுடல் குலுக்கிடினும்
விறல்மிகு நாயகர் வீழ்ந்தன ரில்லையாம் வைரமென
உறுவினை எஃதும் உடன்படா வாகில் உறுதியுடன்
குறுநகை கொண்டிறை பாற்புகழ் கூறி அமைதியுற்றார்

882

குண்டடி பட்டுமே காப்போன் கருணைக் கடலவனால்
ஒன்றுமே தோன்றிடா வாறுடல் தப்பிடக் கூடவுற்றோர்
வென்றார் பரியில் விரைந்தவன் றன்னையும் வெஞ்சிறையில்
ஒன்றிடச் செய்தார் உரையுண்மை யென்றே உறுத்தினரே

883

வாய்திற வாதவன் வீற்றிருந் தானவன் வாயகடு
காய்ந்திடில் உண்மையைக் கொட்டுவ னென்றே கருத்துறையத்
தீயவ னுண்ணத் தரவிலை தாகந் தணிவதற்கும்
வாய்ப்பிலா தாக்கினர் வன்மனங் கொண்டோன் விளம்பிலானே

884

வாளினைக் கைதனில் வாங்கினார் 'காஸிகான்' வந்துரைப்பார்
"மாளவென் றாகில் மறுப்பிலை செத்து மடியுனக்காம்
ஊழ்வினை யஃதெனில் ஒன்றா விடிவுமே உன்முடிவென்
தோள்தனி லாகின் தொடர்தல் தவிரேன்நான்" செப்பெனவே

885

சாவினுக் கஞ்சினான் சத்தியம் செய்தான் சொலமறுத்தோன்
யாவு முரைத்தனன் " இம்தியாஸ் ஹுசைன்" செலப்பணித்தான்
பாவிய வன்ஹைத்ரா பாத்நிசாம் தம்மின் முதலமைச்சன்
சேவக னன்னான் மருகன்" உறவிலென் றோதினனே

886

தொடர்ந்தன னென்னைக் **'கினோவைன்'** எனுமொரு வெள்ளை-
யன்பால்
அடுத்தனர் தந்தான் அவனொரு பைநிறைக் காசவைகள்
கிடைத்தலுக் காகாத் தொகையெனக் காம்பொன் கொலைநிகழ்ந்தால்
கிடைத்திடும் ஐம்பதிவ் வாறெனக் கூறினான்" என்றனனே

887

விவர மிவற்றை விளம்பிடு போழ்தினில் வந்தனனே
செவியுண் டவனாய்த் தளபதி **"ஆஸீம்கான்"** அந்நிலையில்
"எவரிதற் கிங்கிணை செய்தார் எனநீ இயம்பு"வென
அவனுரை சொல்லுமுன் ஆஸீம் அவனுயிர் அகற்றினனே

888

கண்ணிமைப் போழ்துள் கடுகிய தாமிது காஸிமிதை
எண்ணினா ரல்லர் எதிர்பார்த் திடாத இயற்றலினால்
"என்னநீ செய்தாய் எதற்கிதைச் செய்தாய்" எனவினவத்
தன்பணி மன்னர் தமதுயிர் காத்தல் தெரியுமென்றான்

889

கொல்லா திருப்பினுங் கொல்ல முயன்றான் கொலைஞனிவன்
கொல்லா திருப்பது கேடிவன் குற்றம் கொலைக்குநிகர்
பொல்லா னிவனைப் பேசவைத் தென்னே பலனுளதோ
எல்லாம் முடிந்ததே இத்தொடும் என்றான் இடம்பெயர்ந்தான்

890

முன்னொரு போழ்தும் முயன்றவன் றன்னை முடிப்பதற்கு
முன்பாய்ந் ததனை மனத்தி லிருத்திட ஐயமுறத்
தன்னுணர் வுற்றார் தளபதி காஸிம்கான் சிந்தனையில்
உன்னிய தொன்றை இயற்றிட உண்மை எகிறியதே

891

கொலைஞன் வந்த குதிரை தனையதன் கால்செலும்பால்
நிலைகொள வைப்பின் நடந்தது தான்வாழ் தலத்தினுக்கே
செலுமதைக் கொண்டுநாம் சீரங்கம் கொண்ட துணைக்கரத்தை
வலைவிரித் தொன்ற வழியுள தாமென் றுடன்துணிந்தார்

892

எண்ணிய வாறே இயற்றினர் பின்வழி ஏகிடுங்கால்
தன்வழி சென்றே தகைந்த பதிதனைக் கண்டதிர்ந்தார்
கன்னமிட் டான்றன் குடிசையி லாமென் கயமைதனில்
முன்னிலை செய்தவன் முற்றிலும் ஆஸீம்கான் தானெனவே

893

தட்டிடத் தாழ்ப்பாள் திறந்தது ஆஸீம் திகைத்தனன்தேள்
கொட்டிய பாங்கினில் கால்தடு மாறக் கருத்துணர்ந்தே
விட்டகன் றோட விளைந்தனன் பாய்ந்தே தளபதியும்
கெட்டியாய்க் கைகரம் கொண்டு முறுக்கிடக் கீழ்விழுந்தான் 894

கைதுசெய் தாரவன் றன்னை யுடன்சிறைக் கர்ப்பணித்தார்
செய்தவை முற்றுந் தெரிந்திடச் செய்தார் அரசரிடம்
மெய்தனை ஆய்ந்திட மன்னர் நிசாமின் முதலமைச்சர்
கைத்தலங் கொள்ள அழைத்திட வந்தார் காரியரே

895

அமைச்சர்கள் சந்தித்தனர்

அழைப்பனுப்பி னார்கள்நிசாம் மன்றி லுக்கே
அமைச்சர்தம் பேச்சுவார்த்தை நடத்த லுக்காய்
அழைப்பேற்று முதலமைச்சர் வந்தார் ஒன்றி
அளவளாவ பூர்ணையா அரங்கம் சென்றார்
அழைப்பைமதித் தாங்குற்ற அமைச்ச ருக்கும்
அழைப்புவிட்ட அமைச்சர்நல் வரவு கூற
அழைத்ததற்கு நன்றிதனை அவருஞ் சொன்னார்
அமைச்சுமட்டப் பேச்சுக்கள் தொடங்கிற் றாமே

896

நல்லதொரு வருங்காலம் நமக்குள் தோன்ற
நலஞ்சேர்க்கும் சந்திப்பாம் இஃதே என்று
சொல்லில்தேன் தோய்த்துநிசாம் முதல்வர் கூறிச்
சொல்கவென்ன காரணமோ தெரிய வென்றார்
இல்லாதும் இல்லைமிக வேண்டு மான
ஏதுவதும் இருபுறத்தும் சார்ந்த தாகும்
பொல்லாத தொன்றாகும் செவிகொள் ளற்குப்
பொறுக்காத தாகுமது புகல்வே னென்ன

897

என்னவதாம் என்றேதும் அறியாப் பாங்கில்
எழுந்ததொரு வினாநிசாமின் முதல்வர் வாயில்
தன்னையறி யாதவொரு திடுக்கம் கண்ணில்
தோன்றுவதில் பூர்ணையா தெளிவு கொண்டார்
சொன்னால்தான் அறிவீர்கள் போலா மென்று
சொற்களிலே சரங்கோத்துப் பதிலுங் கூற
என்னவிது கூறாமல் அறிவ தெங்காம்
எனவினவ ஏற்றபதில் இயம்பக் கேட்டார் 898

திப்புசுல்தான் தனைக்கொல்லப் பலமு யற்சி
ஏற்றுளது என்றதுமே அறிவோம் எங்கள்
ஒப்புதலாம் வருத்தத்தை ஏற்றுக் கொள்க
உடன்படாத செய்கையவை எனவும் கேட்டுக்
கப்பியதேன் வருத்தமது முயற்சி தோற்ற
காரணமோ எனக்கேட்டார் பூர்ண ஐயா
தப்பதுபோ லெண்ணுவதாம் அறிவு கெட்டோர்
செய்கின்ற செய்கையவை எனவு ரைத்தார்

899

அறிவுகெட்ட பேராமோ வழிகெ டுப்பில்
ஆனவரோ என்ன:இறை அறிவா னென்றார்
அறிவீர்கள் நீங்களுமென் றெண்ணு கின்றேன்
அறிந்தபல தகவல்கள் அதையே சொல்லும்
அறியுங்கள் சுலைமானும் ஆஸீம் கானும்
அதிலிருவர் வெள்ளையரும் கூட்டாம் என்றும்
அறிகின்றோம் 'இம்தியாசும்' சேர்வார் உங்கள்
அன்புமரு மகனவரென் றறிகு வோமே

900

அதிர்ச்சியுற்றார் என்றாலும் மறைக்க வெண்ண
அதைத்தொடர்ந்த வார்த்தைகளோ முகத்தி ரையில்
உதித்தமன மாற்றத்தை ஒப்பு விக்க
உணர்ச்சிவசப் படலானார் நிசாம்மு தல்வர்
சதிக்குடந்தை நீங்களுமாம் என்ற போழ்தே
தெரிந்ததந்த மாற்றங்கள் பூர்ண ஐயா
வதிக்கின்றார் சிறைகளிலே கைதி யானோர்
விவரங்கள் கைவசத்தி லுள்ள தென்றார்

901

முக்கியமாய் மற்றொன்றும் சொல்வேன் உங்கள்
மன்னவரும் இதற்குடந்தை என்ப தற்குத்
தக்கவுயர் சான்றுகளும் உண்டா மென்ன
தீயுண்ட பாடுற்றார் தனைநி றுத்தி

ஒக்காத கூற்றிஃதாம் எவ்வா றுங்கள்
உளமொப்பி யுளதிதுபொய் எங்கள் மன்னர்
முக்காலும் மறுப்பாரிம் முடிவு தன்னை
மறவுங்கள் என்றுரைக்க மீண்டுஞ் சொல்வார்
902

எதுதானெவ் வாறெனினும் நட்பின் பேரால்
இயம்புவதைக் கேளுங்கள் நடக்கு மாகில்
சதியதற்குப் பழிவாங்கா திருக்க மாட்டார்
தீரரெங்கள் தளகர்த்தர் வஞ்சம் தீர்ப்பார்
கொதிக்கின்ற மனவுணர்வைத் தவிர்க்க மாட்டாக்
கொற்றவரின் முதலமைச்சர் எழுந்தே நின்று
பதிலுரைக்கப் பொழுதளித்தார் நிசாம் முதல்வர்
பொறுத்திருந்தே வினாவொன்றைத் தொடுக்க லானார்
903

எப்படித்தான் நம்பினீர்கள் சுல்தா னுக்கும்
எதிரிகளாய்ப் பலபேர்கள் இருக்க லாமே
எப்படித்தான் தீர்மானங் கொள்ள லாகும்
எவரிதனைச் செய்திருக்க லாகு மென்றே
ஒப்பாதீர் எவர்வார்த்தை தனையும் நீங்கள்
உங்களைப்போல் எங்களுக்குஞ் சுல்தான் மீது
எப்போதும் பாசமுள தென்ப துண்மை
எண்ணிடுக என்றதுமே ஏள னத்தில்..
904

"அப்படியா!" என்றாரே ஆச்சர் யத்தால்
அதிர்ச்சியுற்ற பாங்கினிலே அதன்பின் சொல்வார்
'திப்புவினைக் கொல்வதொன்றும் பெரிதே இல்லை
சொல்லுகின்றேன் இலகுவழி' எனமு கத்தில்
அப்பியதன் பார்வைதனை அகற்ற மாட்டா(து)
ஆழ்ந்திருக்க ஹைதராபாத் அமைச்ச ரின்பால்
ஒப்புவித்தார் உள்ளத்தில் உறைக்கு மாறே
ஒருவழியை உவக்காத வார்த்தை கோத்தே 905

'சத்தியத்தைக் கொல்லாதும் சொன்ன வாக்கைத்
துடைத்தகற்ற மாட்டாதும் உங்கள் மன்னர்
நித்தியமாய் நிலைப்பரெனில் ஆச்சர் யத்தால்
நிலைகுலைவார் அக்கணமே இறந்தும் போவார்'
ஒத்துவரின் முயலுங்கள் என்றார் கேட்டே
உள்ளூரச் சினத்தாலும் வெளிக்காட் டாதே
புத்திசாலி நீங்களெனப் புகழ்ந்தார் பின்னர்
பின்வருமா ருரைசெய்தார் பொருந்தாப் பேச்சே
906

நம்பிக்கை யூட்டுதற்காய் நானு ரைப்பேன்
நிசாம்மன்னர் சொன்னபடி மைசூ ருக்கும்
எம்மண்ணாம் ஹைத்ராபாத் தமக்கு முள்ளே
ஏற்பட்ட அமைதிக்காம் உடன்ப டிக்கை
எம்மளவில் உடைவுபடா மாற மாட்டா
எனநம்ப லாம்நீங்கள் என்றார் வார்த்தை
தம்மளவில் நீறுமுன்னே வினாத்தொ டுத்தார்
சினம்பொங்கித் தெறித்ததில் செவிதீய் தற்காம்
907

தரித்திருக்க ஏன்விட்டீர் வெள்ளை யர்தம்
தரகர்களைப் படையினரை அத்தோ டன்றிக்
கருத்தென்ன படைப்பயிற்சி அவர்பாற் கொள்ள
கரையிருக்கும் பகுதிகளைத் தாக்கத் தானே
உரையுங்கள் அமைதியின்பால் நாட்டம் கொண்டால்
உள்நோக்கம் வேறென்ன இவற்றுக் கென்ன
சரியல்ல உங்களெண்ணம் எம்மைக் காக்கச்
செய்கின்ற பாதுகாப்புப் பணிக ளென்றார்
908

படைப்பலத்தைப் பெருக்குவதும் பயிற்சி தந்தே
பலம்பொருந்தச் செய்குவதும் பற்றி சுல்தான்
அடைகின்ற அச்சத்திற் கான ஏதும்
அமையாதாம் எனநிசாமின் முதல்வர் சொல்ல

வெடியுண்டை பட்டஅரி மாவைப் போல
வீறுகொண்டார் பூர்ணையா "திப்பு சுல்தான்
தொடைநடுங்கார் எவருக்கும் தேர்வீர் உங்கள்
சார்பினிலே அஞ்சுகின்றார்" என்று ரைத்தார்
909

உங்கள்மண் கொண்டுள்ள ஆபத் துத்தான்
உறுத்தியது திப்புவுக்கு வெள்ளை யர்கள்
தங்கள்வசம் கொள்வதற்குத் திட்ட மிட்டே
தங்கியுள்ளார் உமதுமண்ணில் பிறபு லத்தில்
அங்ஙனமே செய்துள்ளார் நிசாமு மின்றாம்
ஆடைக்குள் ஒளித்துள்ளார் முகத்தை யோர்நாள்
செங்கதிர்காண் பனிபோல விலகும் போர்வை
தெரிந்துவிடும் சுயரூபம் முடிவுந் தோன்றும்
910

கூறுங்கள் நிசாமிடத்து இரண்டு மாற்றம்
கொண்டுள்ளார் இன்றென்றே ஒன்று வெள்ளைப்
பேராகும் அன்னவர்கள் போக மாட்டார்
பூரணமாய் இந்தியாவைக் கொள்ளு மட்டும்
தேருங்கள் பயன்கொள்வ தவர்பால் உங்கள்
சுயநலத்தின் பேரென்றால் அவர்கள் வெற்றுக்
காரணங்கள் தமக்காக உதவார் கொண்ட
குறுக்குவழி வேறுண்டாம் வருந்து வீர்கள்
911

ஒன்றோடு ஒன்றொட்டிப் பிறந்த வாறாய்
ஓரங்கள் ஒருமித்த பிரதே சங்கள்
உண்டான தாகுமெங்கள் நாடி ரண்டும்
உள்நுழைந்தார் வெள்ளையர்கள் உங்கள் நாட்டுள்
கண்மூடித் திறப்பதற்குள் மைசூ ருள்ளே
காலெடுத்து வைப்பதற்கா நேர மாகும்
சொன்னபடி நடந்துவிட்டால் என்ன வாகும்
தெரிந்துகொள்வீர் உங்கள்நிலை பரிதா பந்தான்
912

பூரணையா எடுத்துரைத்த கார ணங்கள்
புரிந்திருந்தும் வேண்டுமென்றே தாமி யற்றும்
காரியத்தின் காரணத்தை மாற்றிக் கூற
கடுஞ்சினத்தால் முகங்கனத்தார் வரவ ழைத்தார்
உரங்கொண்ட வார்த்தைகளால் ஊன்றிப் பேசி
உறுவினையின் பயங்கரத்தை எடுத்தே யோதி
நிறைவாக வந்தவர்க்கு விருந்தும் தந்து
நன்றிசொல்லி வழியனுப்பி வைத்திட் டாரே
913

திட்டமிட்டுப் பிறரறியா வாறு செய்த
செயல்தோற்றுப் போனாலும் சூழ்ச்சி முற்றும்
வெட்டவெளிச் சங்கதிபோல் வழங்கக் கண்டு
வருத்தமுற்றார் ஹைதராபாத் அமைச்சர் தம்மைக்
கட்டிவைத்துக் குற்றக்கணை தொடுத்தாற் போன்றே
கடந்தந்த பொழுதுமனம் குமுறி னாலும்
ஒட்டவில்லை மனமவர்க்காம் ஓங்கிப் பேச
ஒன்றுபேசி மற்றொன்றில் படுவோ மென்றே
914

அழைப்புவிடுத் தருகமர்த்தி அச்ச மூட்டி
அவமதித்தார் பூரணையா என்னும் கோபம்
வழிநீண்டு போவதுபோல் மனத்துள் நீள
வந்தடைந்த மந்திரிதம் மன்னர் முன்னே
முழுமையுரை செய்திட்டார் வெகுண்டார் கேட்டு
மமதைகொண்ட செயலெம்மை வரவழைத்து
இழிவுசெய்தார் இவர்க்கோர்நல் பாடந் தன்னை
ஏற்றவழி பொருந்துங்கால் செய்வோ மென்றார்
915

வெள்ளையரின் சூழ்ச்சி

மைசூரைச் சுற்றியுள்ள சமஸ்த்தா னங்கள்
மன்னர்கள் சிற்றரசர் அனைத்துப் பேரும்
கைசோர வேண்டும்தம் கரத்துக் குள்ளே
குறுக்கிடவும் வேண்டுமெனத் திட்ட மிட்டுச்
செய்கின்ற சூழ்ச்சிக்குப் பெரும்பா லானோர்
சாய்ந்தார்கள் என்றாலும் சிலபேர் மட்டும்
பொய்யான நட்புதனைப் புரிந்து கொண்டார்
பின்னின்றார் உட்பகைமை கொண்டிட் டாரே
916

பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசை கொண்ட
பேடியர்க்குப் பகிர்ந்தளித்தார் பொற்பா ளங்கள்
மண்ணாசை கொண்டவர்க்கு நிலப்பங் கீடும்
முறையாகக் கிடைக்குமென முன்மொ ழிந்தார்
எண்ணிலடங் காததொகை ஆயு தங்கள்
எம்செலவில் நாமளிப்போம் என்று ரைத்தார்
அன்னவரின் குறிதிப்பு மாட்டே யன்றி
அடுத்தென்ப தொன்றில்லை அந்நி யர்க்கே
917

பெட்டிபெட்டி யாகப்பொற் பாளங் கள்கை
பரிமாற்றங் கொண்டனவாம் மானத் திற்கும்
இட்டவிலை யஃதென்றே எண்ணி லார்தம்
இழிசெயலை எண்ணிமனம் புரிந்தா ரில்லை
திட்டமிட்டே செய்தார்கள் எதிர்கா லத்தில்
திமிங்கிலத்தைப் பிடிக்குமெண்ணம் இரைதா -
னஃதாம்

முட்டையிடும் வாத்துக்குக் கவள மேதான்
மிஞ்சுவது அத்தனையும் வெள்ளை யர்க்கே
918

'சில்கோட்'டின் மன்னனுக்குப் பரிசாய்ப் பொன்னும்
சேர்ந்ததனோ டின்னும்பல் விலைமை திப்புச்
சொல்லவொண்ணாப் பொருட்களையும் கொண்டு சென்றார்
திப்புவுக்கே எதிராகக் கிளர்ச்சி செய்யச்
சொல்லுவதைச் செவிமடுத்தும் ஈற்றில் சொல்வார்
திப்புஅன்ன வீரருக்குத் துரோகஞ் செய்தல்
பொல்லாத செயலாகும் மான முள்ளோன்
புரியுவனோ ஈனச்செயல் போங்க ளென்றார்
919

வெட்கமுற்ற வெள்ளையர்கள் வாய்பு தைத்து
வெளியேறும் போதினிலே மன்னன் தம்பி
ஒட்டியுற வாடினனே உடன்பி றந்தோன்
உயிருக்கே உலைவைக்கத் துணிவுங் கொண்டான்
திட்டமிட்டான் பறங்கியரோ டொன்று கூடித்
தானேமுடி தாங்குதற்கு நினைந்த வாறே
கிட்டியதாம் மூத்தவனைக் கொன்ற தாலே
கிடைத்தபலன் கடைசியிலே பின்னர் சொல்வாம்
920

காட்டிற்குப் புலிவேட்டை யாடச் சென்ற
காவலனைக் கொல்வதற்கு வெள்ளை யர்கள்
நோட்டமிட்டுக் காத்திருந்தார் வெற்றி கண்டார்
நேர்மைக்குப் புறம்பான நிகழ்வி னாலே
வேட்டைக்குப் பதுங்கிநின்று பாயும் காட்டு
விலங்கினுக்குச் சமமானோர் ஒளிந்து நின்றே
காட்டினராம் வீரத்தைக் குண்டு மார்பில்
கொண்டுவீர முடிவடைந்தான் அரசன் ஆங்கே
921

தனைமன்ன னாகமுடி சூட்டிக் கொண்ட
தம்பிவெள்ளைப் பறங்கியரின் வார்த்தை கேட்க
முனைந்தானே பலவழியில் திப்பு வுக்கு
மாறான செயல்களிலே ஈடு கொள்ளச்

சினங்கொண்டார் திப்புசெவி கொண்ட போது
சிங்கமெனச் சினந்தெழுந்தார் செறிந்த கோபம்
பிணக்கறுக்கத் தூண்டியது பலனாய் யுத்தப்
பிரகடனம் செய்தாரோர் பாடங் காட்ட
922

குற்றமிழைத் தோனுக்கும் கூட்டுச் சேர்ந்த
குள்ளமதி யாளர்க்கும் எதிர்க்க எண்ணும்
மற்றவர்க்கும் புகட்டுகின்ற பாட மாக
மாறியதப் படையெடுப்பு புதிய மன்னன்
வெற்றுக்கை யோனாக விலங்கு கொண்டு
வரவழைக்கப் பட்டான்தான் விளைத்த குற்றம்
முற்றினையும் எடுத்துரைக்கப் புலன்கொண் டான்சொல்
மொழிவதற்கும் அற்றவனாய்ச் சிரங்க விழ்ந்தான்
923

மன்னனைநீ கொன்றதுன்றன் முதலாம் குற்றம்
முடிசூட்டிக் கொண்டதுமற் றொன்றாங் குற்றம்
அன்னியனைத் துணைகொண்ட தஃதோர் குற்றம்
அடுத்தநிலப் பரப்பினரைச் சீண்டி உற்ற
மன்னுயிரைப் பறித்ததுவோ மிகப்பேர் குற்றம்
மிகைத்தபொருள் கொள்ளையிட்ட ததுவுங் குற்றம்
என்றனுக்கும் எதிராகக் கிளர்ச்சி தூண்ட
எண்ணியதோ எனால்பொறுக்க மாட்டாக் குற்றம்
924

தலைகவிழ்ந்து நிற்பதுவே இவைய னைத்தும்
செய்தகுற்ற மென்பதனை உறுதி செய்யும்
விலையில்லை யுயிர்களுக்கு வாரா மீண்டும்
வினைக்கேற்பக் கூலியுன்றன் விதியில் சேரும்
கொலைக்குக்கொலை தீர்ப்பாகும் மைசூர் நீதி
கொடுப்பதென்றன் கடமையது போலும் உன்றன்
தலைக்குமதே கொள்ளென்றார் மன்னர் அன்றே
சிரங்களைந்தார் சிரங்களைவோர் தீர்ப்பின் வாறே
925

பாலம்பூர்வரை வந்தார் பறங்கியர்

படைப்பயிற்சி யளிக்கின்றார் பறங்கி யர்கள்
பாலம்பூர்ப் படைகளுக்கும் அத்தோ டன்றி
அடைந்ததவர் படைகூட ஐயி ரண்டாய்
அருகமைந்த கற்றூரம் அறிந்த சேதி
உடன்மன்னர் கவனத்தில் காஸிம் கானும்
ஓதிவைத்தார் கேட்டுமன்னர் அவரை நோக்கிக்
கிடைக்கும்பதில் வாள்மூலம் படையைக் கூட்டக்
கட்டளையைத் தாருங்கள் எனப்ப ணித்தார்
926

கொடுத்துள்ளார் பீரங்கி பதினைந் தோடு
கிழக்கிந்தி யக்குழுவோர் அன்ன வர்க்கு
வெடிமருந்து நாற்பதுதொன் வாள்து வக்கு
வகைவகையாய் ஆயுதங்கள் குதிரை நூறும்
உடன்பட்டார் ஆபத்தில் உதவ வேண்டும்
உதவிகளும் தருவதுவாய் அறிந்தே னென்றார்
படும்பாட்டைப் பார்க்கட்டும் மன்ன ரோடே
பறங்கியரும் பங்கதற்குப் பார்ப்போம் என்றார்
927

அனுப்புங்கள் தூதொன்றைச் சனிநா ளன்றே
அக்கினித்தேர் கிழக்கிலொளி காட்டு முன்னர்
தொனிக்குமெனப் படைமுரசு தயாரா கட்டும்
சொல்லியவர் தோலுரிப்போம் வெள்ளை யர்க்குங்
கனக்குமெனில் வரட்டுமவர் கூட வொன்றிக்
கற்பிப்போம் பாடமென்றார் அடுத்த நாழி
சுணக்கமறப் பறந்ததொரு புரவி மண்ணைத்
தொடாதபடி பாலம்பூர் நோக்கி யாண்டே
928

தீக்கிடங்கில் பதம்பதித்த பாங்கில் மன்னர்
தவிதவித்தார் தூதோலை கண்ட போழ்தே
சீக்கிரமாய்த் தகவலொன்று தந்தார் வெள்ளைத்
தலைவர்"**கேணல் டவுண்ச்**"னுக்கு அவரும் - வந்தார்
வாக்குரைத்தால் செய்யாதே விடாரே திப்பு
வினைதவிர்க்க வழியுண்டோ என்றார் மன்னர்
காக்கவுள்ளோம் நாங்கள்நீர் கவல கற்றும்
கூறியவா றவர்செய்யார் என்றார் கேணல்
929

திடீரென்றே தாக்குதற்குத் தக்க வாறு
திராணியில்லை அவரிடத்துப் படையு மில்லை
முடக்கியும்மை வைப்பதற்கு அச்ச மூட்டும்
முயற்சியிது எனக்கேணல் சொல்ல இல்லை
நடக்கின்ற முயற்சியென்னை அம்பாய்க் கொண்டு
நும்மீது தொடுக்கின்ற யுத்தம் வேண்டின்
கொடுக்காதே நீர்தவிர்ப்பீர் உதவி யென்ற
காரணத்தை நிச்சயிக்கத் தாமே யென்றார்
930

பயங்காட்டித் தலைகுனியச் செய்து நாட்டைப்
பறித்தெடுக்குந் திட்டமிஃதாம் எமையே மாற்றும்
முயற்சியாக இருந்திடவுங் கூடும் நாங்கள்
மாறுசெய்யோம் கூறியவா றுதவி செய்வோம்
வயமாகின் வெற்றியுன்றன் பக்கம் மைசூர்
வளைத்துள்ள கிராமங்க ளத்த னையும்
வயமாகும் உமதாட்சிக் குள்ளாம் என்றார்
வெள்ளைப்படைத் தளகர்த்தர் மன்னர் சாய்ந்தார்
931

வெள்ளையரின் வார்த்தைக்கு மயங்கிப் போரை
வழிநடத்தத் துணிவுற்றார் பாலம் பூரார்
கள்ளமனங் கொண்டவர்கள் பிரித்தாள் கின்ற
கேட்டுவழிக் கொள்கையினர் திப்பு வோடு

உள்நாட்டு மன்னர்களைப் பொருத விட்டு
உபயோகம் பெறத்துடிக்கும் பேடி யர்கள்
எள்ளளவும் எண்ணவில்லை இதுகே டென்றே
இங்கிருந்தோர் இடங்கொடுத்தார் இழிவுற் றாரே
932

தனித்தனியே பிரித்துவைத்துச் சண்டை மூட்டல்
சமாதானம் ஒருவரொடு மறுபு றத்தில்
இணக்கமுற்றுப் பொருளோடே ஆயு தங்கள்
இயன்றவரை தந்துதவி செய்தல் செய்தால்
பிணக்குறுவோர் இருபுறத்தும் அழிவர் தாமே
பலம்பெறுவோம் எனுங்குள்ள நோக்கி னோடே
முனைந்தார்கள் பறங்கியர்கள் வெற்றி கண்டார்
முடிகொண்டோர் மண்ணுண்டார் அடிமை யானார்
933

பாலாம்பூர் மன்னர்தம் மனைவி யோடு
போர்பற்றிப் புகன்றார்நற் புத்தி பேசும்
சீலமிக்க பெண்ணவராம் செவிகொண் டார்பின்
தலைமகனை விளித்தேயோர் நினைவை மீட்டார்
காலமது கரைந்தாலும் மறக்க வொண்ணாக்
காட்சிமனக் கண்முன்னே நிழலா யாடக்
காலமறிந் தேயுரைத்தார் கேட்ட மன்னன்
கருத்திலதைக் கொண்டாலும் கணத்துள் நீத்தான்
934

மறந்ததுமேன் முன்னொருகால் திப்பும் என்றன்
மானத்தைக் காத்ததனை ஹைத ரோடு
புரிந்துதோற்றுப் போனபோரில் பொறியில் சிக்கிப்
போனநிலை மாற்றானென் மீது தீது
புரியமுயன் றானதுகால் கண்டு பெண்மேல்
பரிதாபம் கொண்டவனைக் கொன்ற செய்கை
அறிந்திருந்தும் பகைவரென்றே அடாது செய்ய
அனுமதியாக் கண்ணியத்தை அந்நாள் போதே
935

இறந்திருப்பேன் நானன்றே திப்புச் செல்வன்
இடைமறித்தே எனைக்காக்கா திருந்தி ருந்தால்
குறைத்ததனை நினைத்தீரோ நன்றி கொன்றோ
கடல்கடந்து வந்தவரின் கைகோத் தின்று
பறையறையத் துணிவுகொண்டீர் போரில் தோற்றுப்
பணிந்தவுமை மன்னித்த பான்மை நீத்தீர்
முறைசெய்வீர் திப்பினொடு சமாதா னத்தை
முன்னிறுத்த போரொடுக்க எனப்பு கன்றாள்
936

வெள்ளையரை நம்பிடவே வேண்டாம் கெட்டோர்
வலிந்துதவி செய்வதும்மேல் விருப்பா லன்று
கொள்ளையிட வந்தவர்கள் குறிக்கோ ளெல்லாம்
கொள்ளைப்பொருள் மீதன்றி வேறொன் றில்லை
உள்ளத்தை மாற்றியுமைத் தூண்டி யுள்ளார்
உட்பொருளோ இருபுறமும் அழித லாகும்
கள்ளமிலார் திப்புவொடு கூட்டுச் சேர்ந்து
கடல்தாண்டி வெள்ளையரை யோடச் செய்வீர்
937

மனைவியுரை செய்வாரதை மறுத்துப் பேசி
மாற்றானை நம்பியதால் போருக் காக
முனைந்தாரே பாலம்பூர் மன்னர் ஈற்றில்
மூக்குடைந்தார் வெள்ளையர்கள் மாறு செய்தார்
சொன்னபடி அன்னவர்கள் வரவே யில்லை
திப்புசுல்தான் சொன்னபடி வைக றைக்கு
முன்னதாக வந்திருந்தார் சமர்க்க ளத்தில்
மொய்த்தபெரும் படையோடு காத்தி ருந்தார்
938

தன்னுடைய நாட்டுமன்னர் தம்மி னோடு
சமாதானந் தனைவிரும்பும் திப்பு சுல்தான்
முன்னதாகப் போர்தொடங்க மாட்டா ராக
மறுமுனையின் வரவெண்ணிப் பார்த்தி ருக்க

இன்னமுமேன் வரவில்லை! வருவார்! இல்லை!
இனுஞ்சொற்ப வேளைக்குள் வருவார்! வாரார்!
என்றுதிரி சங்குசொர்க்க நிலைக்குள் நின்றார்
எதிர்பார்த்துக் காத்திருந்தோர் ஏமாந் தாரே
939

காத்திருந்தும் வாராத கார ணத்தால்
கடிதினிலோர் முடிவுகொண்டார் திப்பு சுல்தான்
போர்த்தொழிலில் வல்லவர்தா னென்றிட் டாலும்
பாதைமாற்றிப் படைத்தலைவ னொருவ னுக்குச்
சேர்த்துவிடச் சொன்னாரோர் சேதி மக்கள்
தேர்ந்தறிய செயலுருவம் பெற்ற தஃதாம்
வார்த்தைகளே வரலாற்றை மாற்றிற் றன்று
வீணான போரொன்றுந் தவிர்ந்த தாமே
940

சொல்லுகபோய்ச் செவியுண்ண ஒலிபெ ருக்கிச்
சமாதானம் எங்களது குறிக்கோ ளென்றே
கொல்வதற்கும் வெல்வதற்கும் வரநா மில்லை
குடிமக்க ளோடெமக்குப் பகையு மில்லை
சொல்லிடில்நாம் மன்னருக்கும் எதிரி யில்லை
சேர்ந்துள்ள வெள்ளையரோ பகைவர் என்றே
நல்லதொரு முடிவுக்குள் மக்கள் வந்தால்
நிலைமாறும் போங்களென்றார் நடந்த தஃதே
941

ஒலிபெருக்கி வார்தைகளை ஒவ்வொன் றாக்கி
உணர்ச்சிபெற மக்களுக்கு ஓதக் கேட்டு
வலிந்தொருபோர் செய்துயிக ளழிவு தோன்ற
விரும்பாத படைவீரர் நிலைமை ஓர்ந்தார்
கலைந்தார்கள் கைகொண்ட படைக்க லங்கள்
காலடியில் தனிக்கவிட்டே அனைத்துப் பேரும்
சிலையாகிப் பாலம்பூர் மன்னர் நின்றார்
செய்வதறி யாதபாலை ஒட்டை போன்றே 942

தப்பித்துப் போவதுவே சிறந்த தென்று
தலைவியையும் மக்களையுந் தனிக்க விட்டுத்
தப்பித்துச் சென்றுவிட்டார் மன்னர் நாட்டின்
தலைவனின்றிக் குழப்பங்கள் தொடங்க லாகும்
எப்படியும் மன்னனையும் நாட்டி னையும்
இக்கட்டில் காக்கின்ற பொறுப்பை ஏற்றுத்
திப்புவிடம் ராணிசென்றார் தாயைக் கண்ட
தனயனெனத் தலைசரித்தே அழைத்துச் சென்றார்
943

தன்னருகில் இருக்கையொன்றைத் தந்து தானும்
சேர்ந்தமர்ந்து வந்திருக்குங் கார ணத்தை
என்னவெனச் சொல்லும்படி இதமாய்க் கேட்க
இதயத்தின் சுமையனைத்தும் ஒன்று கூட்டி
என்னருமைச் செல்வாநீ முன்னோர் போழ்தில்
என்மானங் காத்ததனை இன்றும் நெஞ்சுள்
எண்ணாத நாளில்லை இன்றும் என்றன்
இக்கட்டில் வந்துள்ளேன் எனப்பு கன்றார்
944

மன்னரின்று நாட்டிலில்லை மக்கள் தத்தம்
மனம்விரும்பு வாறானார் தடுப்பா ரற்றே
என்னிலையி லேதுமொன்றுஞ் செய்ய வொண்ணா
இக்கட்டில் நானுள்ளேன் உன்ற னுக்கு
மண்வேண்டு மாயிலைரைப் பங்கு நாட்டை
மனமொப்பித் தருகின்றேன் பெறுவாய் எங்கள்
மன்னவரை மன்னித்தே நாடு மீள
வகைசெய்ய வேண்டுமென இரந்திட் ராரே
945

நாடுகொள்ளும் ஆசையெனக் கில்லை மக்கள்
நிம்மதியைக் கெடுக்குமெண்ணம் சிறிது மில்லை
நாடுவிட்டு நாடுவந்தெம் நாட்டுள் புக்கி
நாசங்கள் செய்தெங்கள் நிம்ம திக்குக்

கேடுசெய்யும் வெள்ளையருக் குதவ லொன்றே
கவலைதரும் செய்கையதால் உங்கள் மன்னர்
நாடாதே இருப்பரெனில் அப்பேர் தம்மை
நாமவர்க்கு நண்பர்தாம் என்றிட் டாரே
946

தமதுநிலை தனையெடுத்துத் திப்பு கூறத்
தாயனையாள் நன்றியொடு அவரை நோக்கி
உமைப்போன்றோர் வீரனிந்த உலகில் காணேன்
உவந்தளித்தும் பிறர்மண்மேல் உவப்பு மற்றே
தமையெதிர்த்த பேரினையும் மன்னித் தேகும்
தயாளகுணம் கொண்டுள்ளீர் என்றன் மீது
சுமையொன்றை மீண்டும்நீர் சுமத்தி விட்டீர்
செல்வாநின் மேல்நன்றிக் கடன்பட் டேனே
947

வெள்ளையரின் அட்டகாசமும் திப்புவின் போர்க் கொடியும்

வெள்ளையர் கவர்ணர் தூது விட்டனன் மைசூர் மண்ணில்
உள்ளிடும் நோக்கங் கொண்டே ஊன்றிட நட்பை யென்னும்
கள்ளமாம் கார ணத்தைக் கூறியே அறிந்தார் சுல்தான்
உள்வர அழைத்தார் முன்னே ஏவலர் செலத்தொ டர்ந்தார்
948

வந்தனர் வெள்ளை யர்தம் வயப்படு தூது வர்கள்
சிந்தையில் ஒன்றாச் செய்தி செப்பினர் திப்பை நோக்கி
தந்திடல் நலமெ மக்குத் தங்களின் புலத்தில் நாங்கள்
வந்திருந் திராச சேவை வரித்திட எனப்ப ணிந்தே
949

அண்டையில் இருக்கும் எல்லா அரசரும் எமக்குத் தங்கிக்
கொண்டிடும் நட்பைப் பேணக் கொடுத்துளார் வாய்ப்புப் போலும்
உண்டெனில் இங்கும் நம்முள் உறவுன்றும் என்றார் வந்தோர்
கொண்டதோ அவர்கள் வேறு காரணம் என்றிட் டாரே 950

மங்களூர் ஒப்பந் தத்தின் வழியவர் சாட்டாய்க் கொண்டு
தங்கிட நினைந்தார் பொல்லார் சீரங்கப் பட்டி னத்தில்
சங்கையாய் வரவேற் றாலும் சொல்மொழி வெறுப்பைத் தூண்டப்
பொங்கிடு சினத்தைப் பொத்திப் புகலுவார் தூதர் பாலே
951

ஒப்பந்தந் தன்னை மீறி ஒவ்வொரு செய்கை தாமும்
ஒப்பிலா வாறே நீங்கள் ஒழுகுதல் அறிந்து மோநாம்
ஒப்புவோம் எமது மண்ணில் ஒன்றிட உணர்வீ ரென்றார்
தப்புநாம் வந்த தென்னுஞ் சேதிநெஞ் சுறைக்கும் வாறே
952

நாமெல்லாக் கட்டுப் பாடும் நூலிடை தப்பா தேதான்
சேமமாய்ப் பேணு கின்றோம் தவறுவோர் நீங்கள் முன்னர்
ஆமென்றும் ஒப்புக் கொண்டே அனைத்தையுந் தவிர்த்தே எம்மை
நாமமற் றொழிக்க வாய்ப்பை நாடுவ தறிவோ மென்றார்
953

"கல்கத்தா" "பம்பாய்" "சென்னை" கடல்வழி மார்க்க மாகப்
பல்வகை ஆயு தங்கள் "பிரிட்டன்"இல் இருந்து நீங்கள்
பலமுறை கொணர்ந்த தொன்றும் பொய்யிலை அறிந்த வுண்மை
சொல்லுங்கள் நோக்க மென்ன தாக்குதற் கருத்தோ டன்றோ
954

இல்லையஃ தனைத்தும் நாங்கள் எமைக்காக்கக் கொள்வ தாகும்
அல்லவே றெஃதும் நோக்கம் அறியுகுவீ ரென்றார் தூதர்
நல்லதாம் அனைத்துப் பேரும் நட்பொடும் இருக்க மேலும்
தொல்லைகள் தருவார் யாரோ தடுத்திட எனவி ழித்தார்
955

எம்மீது போர்தொ டுக்கும் எண்ணமே வேறொன் றில்லை
தம்மைத்தாம் காக்கும் நோக்கம் தனக்கென்ப பொய்ய தாகும்
நம்மைநாம் காத்துக் கொள்ளும் நலமெமக் குண்டு நட்புச்
செம்மைக்கும் உதவா வுங்கள் தொடர்பின்று வேண்டா மென்றார்
956

தப்பாகப் புரிந்துள் ளீர்கள் சுல்தானே இதுபோல் மீண்டும்
தப்பாகப் புரியா வாறே தூதுவப் பீட மொன்றை
ஒப்பிட வேண்டும் நாங்கள் ஒருவரை ஒருவர் நன்கு
தப்பின்றிப் புரிந்து வாழச் சொல்லுக முடிவை என்றார் 957

அதற்கான அவசி யத்தில் அல்லநாம் நீங்கள் முன்னர்
விதித்தமுன் ஒப்பந் தத்தை விடாதுகைக் கொள்வ தாயின்
புதியதாம் வேண்டு கோளைப் பற்றிநாம் தேவை யாயின்
மதிகொளல் கூடும் உங்கள் முயற்சியில் பலனில் என்றார்
958

மறுத்தது மட்டு மன்றி மதியுரை வேறு சொல்ல
அறிந்ததும் வெள்ளை யர்கள் அகவெறி கொண்டார் எண்ணக்
குறிதவ றான தென்று குமைந்தனர் வேறு மார்க்கம்
அறிந்திட முயன்றார் கொண்டார் அதுவிழி செயலா மன்றோ
959

தமதெல்லைப் புறத்தி ருந்த சிறுசிறு கிராம மெல்லாம்
அமைதியைக் குலைத்தார் தம்மின் ஆட்களைக் கொண்டு மக்கள்
தமக்குரித் தான வற்றைச் சூறையிட் டார்கள் சேதி
இமைப்பிடைப் பொழுதி னுள்ளே எட்டிட வெகுண்டார் மன்னர்
960

"வெள்ளையர் கவர்ன ருக்கு வரைந்திடும் ஓலை இஃதாம்
எல்லையைக் கடந்தே யுங்கள் ஏவலர் படைகொள் வீரர்
கொள்ளையுங் கொலையும் செய்யுங் கொடுமையும் அறிந்தோம் - எம்பெண்
பிள்ளைகள் தமையும் உம்மோர் பிடித்தெடுத் தகல்தல் கண்டோம்
961

பொறுமைக்கும் எல்லை யுண்டு பலமுறை சொல்லிப் பார்த்தும்
அறிந்தது தொடர்ந்து செய்யும் அட்டூழி யங்கள் தாமே
சிறுத்தையைத் துயிலில் நின்றுந் தட்டியே எழுப்பி டாதீர்
நிறுத்துக செயலை இன்றே நலம்வேண்டில்" எனவ ரைந்தார்
962

ஆணையிட் டொழுகச் செய்யும் அதிகாரம் தொனித்த ஓலை
காணுறின் பேடி யர்க்கும் கனற்றிடும் கோபம் கவர்னர்
தோணிடா தெதுவும் யுத்தம் செய்திடத் திப்பு ஏவும்
பாணமீ தாகும் எம்மேல் பெருஞ்சினம் ஏற்ற வென்றார்
963

தடுத்திட வேண்டு மென்று துணிவுற்ற போதும் போரைத்
தொடுத்திட முன்னர் சொல்லித் தீர்த்திட முனைந்தே தூது
விடுத்திட ஓலை யொன்றை வரைந்தனர் திப்பு சுல்தான்
கடுத்தன வார்த்தை யஃதில் கோபத்தின் கனல்தெ றிக்கும்

964

தளபதி யொருவர் சொல்வார் "திப்புவின் நோக்கு சற்றும்
இளகிய தாக வில்லை எடுத்தாய்தல் வேண்டும்" என்றே
"களவொடு கொலைபெண் கொள்ளல் குற்றங்கள் செய்ய நாமோ
விளித்தனம்" என்றார் கவர்னர் விவாதமொன் றுருவா கிற்றே

965

"திப்புவோ புத்திக் கூர்மை செறிந்தபே ராட்சி யாளர்
ஒப்பிலார் வீரந் தன்னில் ஓர்மையுந் திறனும் மிக்கார்
செப்பிடில் செல்வங் கூடச் செறிந்ததவ் வாட்சி நாங்கள்
தப்பிதம் செய்வோ ராவோம் சீர்தூக்கிப் பாரா துற்றால்"

966

தளபதி சொன்ன சொற்கள் செவிகொள வெறுப்புற் றேதன்
உளத்தினைச் சினக்க வைத்த உற்றவர் தன்னை நோக்கி
வளம்பெறும் ஆட்சி கொண்டால் வீரர்தாம் கோழை யாரும்
இழந்திடில் வீரங் கூட இலாதுபோ மெனப்பு கன்றார்

967

இறுதியில் பொருந்தா ஓலை பறந்தது கைகொள் திப்பு
கறுவினார் இனிமேல் சற்றுங் காலத்தைக் கடத்த லாகா
முறைப்படி பாட மொன்றை மாற்றாருக் குரைக்க வென்றே
உறுத்தினார் பெரும்ப டைக்கே உடன்நடை கொண்ட தஃதே

968

பெரும்படையும் வீர முழக்கமும்

வெற்றிவெற்றி வெற்றியென்று வீறு கொள்ளடா
வெள்ளையரை வெல்வோமென வீரம் பூணடா
ஒற்றுமையால் இந்தியர்நாம் உலகை வெல்லலாம்
உட்பகைமை தவிர்த்திடுவோம் ஒன்று கூடுவோம்
பற்றுவைத்தால் மண்ணின்மீது பறங்கிப் பேய்களை
பறந்தவர்தம் நாடுநோக்கி ஓடச் செய்யலாம்
விற்றுவிட்டார் சிலபேர்நம் சொந்த மண்ணினை
வந்தவர்க்கு மீட்டெடுப்போம் விரைந்து செல்லடா
வெற்றிவெற்றி....

969

மைசூரின் புலியெங்கள் திப்பு மன்னரே
முதன்மைவீரர் வெள்ளையரைத் துரத்தும் போரிலே
கையில்வாளும் கேடயமும் துவக்கு மிருக்கையில்
கயவர்களை வென்றிடுதல் கடின மில்லையே
வையமெங்கள் காலடியில் வீழு மேயடா
வெற்றிவீரர் திப்புவின்கை யோங்கச் செய்யடா
கொய்திடுவோம் சிரங்களைவோம் எதிர்க்கும் பேர்களின்
கவலையில்லை உயிர்பிரிந்தால் மண்ணுக் காமடா
வெற்றிவெற்றி....

970

அச்சமில்லை அச்சமில்லை அச்ச மில்லையே
துச்சமெங்கள் உயிரெமக்குத் துணிவு துணையடா
வச்சிரமாம் இந்தியனின் வீரப் புயங்களே
வரலாற்றில் முதன்மைநாங்கள் வரிக்க வேண்டுமே
எச்சிலிலை யுண்ணக்கப்பல் ஏறி வந்தவர்
இருந்தவிடமும் இலாதொழிப்போம் ஏறு போல்நட
நிச்சயம்நம் பக்கம்வெற்றி நிலைக்கு மேயடா
நெஞ்சுயர்த்திச் சிங்கம்போல நின்று போரிடு
வெற்றிவெற்றி....

971

கையெடுத்த வாளதுதன் கவசம் போகுமுன்
கூறுபோட வேண்டும்நூறு கயவ ரையடா
மெய்யுறைத லாகாதே வீரன் ஆயுதம்
பாயவேண்டும் எதிரிப்படை வீரர் மீதிலே
செய்கைவெற்றி நோக்குடைத்தாய் இருக்க வேண்டுமே
சக்திமிக்க வீரர்களே திரண்டு செல்லுங்கள்
வையகத்தின் வாழ்வுவரும் ஒருமுறை தானே
வீணர்களைத் துரத்திவிடின் வெற்றி நமதடா
வெற்றிவெற்றி....

வேறு 972

பெரும்படை யொன்று கூடிப் போனது திமிர டக்கத்
திருவுடைக் கோன்முன் சென்றார் திப்புமான் பரியின் மீதே
அருகினில் காளி கானும் அவரொடு தளகர்த் தர்கள்
ஒருங்கிணைந் தேகி னார்கள் ஊர்வழி கடல்போந் தாற்போல்
973

வெண்பரி மீது வேங்கை வீற்றிருப் பதுவாம் போன்றே
கண்படு பாங்கில் திப்பு கடிவாளம் கையில் பற்றித்
திண்டிறல் புயமும் மார்பும் தேசுடைப் பொலிவு காட்டக்
கொண்டதாம் ஓர்மை யோடே களத்தினை நோக்கிச் சென்றார்
974

உணர்ச்சியைத் தூண்டு மாறே உற்சாக மிகுதி யாலே
விண்ணினைத் தொடுமால் ஓங்கு வார்த்தைகள் கோத்து வீரப்
பண்ணொடு மின்னல் வேகம் படைநடை கொண்ட தேபோர்
திண்ணமா யெம்பால் வெற்றி தருமெனும் உறுதி யோடே
975

வெற்றியே குறியாய்க் கொண்டு வெள்ளையர் களத்தை நோக்கி
உற்றதம் படையி னோடே ஊதியப் படையுங் கூட்டி
முற்றுமே ஆயு தத்தின் மீதுகொள் பலத்தால் வந்தார்
சற்றுமே அறியார் ஈற்றில் தோல்விதம் முடிவா மென்றே
976

வெஞ்சமர்க் களததைத் தம்மின் வீரிய ஒளியைப் பாய்ச்சி
நஞ்சுடை மனத்தார் வெள்ளை நாசகர் தம்மை யன்று
வஞ்சமில் திப்பு மன்னர் வாகைகொள் நிலைமை காண
செஞ்சுடர் வெய்யோன் வானைத் துலக்கியே சுடல ரானான்
977

வீரர்கள் இருபு றத்தும் வந்தணி சேர்ந்தார் திப்பு
போருக்குத் தொடக்க மாகப் பற்றிய கைவாள் தன்னை
வீரர்கள் தம்மை நோக்கு வாறென வுயர்த்திக் காட்ட
காரணம் புரிந்த வீரர் களம்புகுந் துழற்றி னாரே
978

பீரங்கி யொருபு றத்துப் பீறிடும் குண்டு மாரி
மாறியே மறுபு றத்தும் மிகைத்திடு மதுபோல் வாள்வேல்
கூறிடும் அவய வங்கள் குறிதவ றாதே சன்னம்
பீறிடும் துவக்கின் ஓலஞ் செருக்களத் தெங்கு மாமே
979

போருக்கு வந்த வீரர் பன்முகப் படுவர் வெள்ளைப்
பேருக்கு நாடு கொள்ளும் பேராசை கூலி பெற்றுப்
போரணி சேர்ந்தோர் முற்றும் பணத்தாசை கொண்டி ருந்தார்
தீரர்கள் திப்பு வின்போர்த் தியாகிகள் மண்காப் போர்கள்
980

எண்ணத்திற் கேற்ற வாறே இயல்வுறு மனைத்தும் செய்கை
தன்னல மற்ற தாயின் தாய்மண்ணில் பற்றோ டென்றால்
உண்மையாம் வெற்றி யென்ப துறுதிசெய் தியாகத் தாலே
நண்ணிய தாகும் அன்றும் நலம்பெறும் நோக்கின் பாலே
981

ஒவ்வொரு அணியாய் ஏவல் ஏற்றுமே களத்தை நோக்கிச்
செவ்வையாய்ச் சென்றார் வீரர் திசைக்கேற்ற வாறே எங்கும்
எவ்வெவர் எவ்வணிக்காய் ஏற்பரோ வகைய றிந்தே
ஒவ்விடப் பணித்தார் திப்பு யுத்தத்தின் ஞானம் ஓர்ந்தே
982

பரிப்படை பரிப்ப டைக்குப் பதில்தரும் பன்னூ றாகும்
கரிகளும் பொருதும் ஒன்றைக் குறிவைத்து மற்றொன் றேகும்
இருபெரு மலைக ளொன்றி இடிபடும் பாங்கில் பக்கம்
ஒருவரும் நில்லார் யானை யுடனுள வீரர் மட்டே 983

ஈட்டியும் வாளும் வெய்யோன் ஏற்றிய சுடரில் பட்டே
காட்டிடும் ஒளியோ மின்னற் கீற்றினை நினைவு கூரக்
கேட்டிடும் இடியி னோசை குமுறிடும் பீரங் கிப்பால்
தேட்டமென் கார்கா லத்தின் தொடரிதோ வெனுமா றாங்கே
984

வெள்ளையர் குருதி யோடு வெட்டுண்ட மற்றோர் சென்னீர்
வெள்ளமாய்க் கலந்தே பூமி விரவிடும் சகதி யாகும்
கொள்ளையாம் தேகத் துண்டம் காணிட மனைத்தும் காணின்
உள்ளமோ முள்ளில் வீழ்ந்த உயிர்த்தசைக் கொப்பாய்ப் போமே
985

வெட்டுண்டு வீழ்வார் ஓலம் வீரர்க்கு வீர மூட்டக்
கொட்டிடும் பறையி னோசை வாட்சமர் ஒலிசேர் சத்தம்
முட்டிமோ துண்டு யானை முளங்கிடு முளக்கம் குண்டு
பட்டதும் நிலம்பி ளக்கும் பேரொலி செவிகொள் ளாதே
986

ஒவ்வொரு புறத்தும் வெற்றி ஒன்றிடும் பொழுதொன் றுள்ளே
அவ்விதம் மறுபு றத்தும் அணைந்திடும் யார்தான் போரில்
கவ்வுவார் தோல்வி யார்தான் கைகொள்வார் வாகை என்றே
செவ்வையாய்ச் சொல்ல மாட்டாத் தருணமே நீண்ட தன்றோ
987

பலநாட்கள் தொடர்ந்த தந்தப் போரொரு வாறு முற்றி
நிலைபெற வெற்றி தம்பால் நிலைத்ததை யறிந்தார் திப்பு
கலவரங் கொண்டார் வெள்ளைக் கடைமகர் தோல்வி கண்டே
உலையிடைப் பட்ட பாங்கில் உயிர்ப்பிச்சை வேண்டி னாரே
988

வெற்றியும் வாழ்த்தொலியும்

சீரங்கப் பட்டி னத்தின் தெருவெலாம் சனத்தி ரள்தம்
பேரோங்கு வீரர் தம்மைப் போற்றிட வரவேற் றேற்க்க
ஊரில்லத் தொருவ ரேனும் உளாரிலை வீதி தோறும்
சாரியாய் நின்றார் பூக்கள் சொரிந்தனர் வாழ்த்தொ லித்தார்
989

நீள்நெடு சாலை யோர நிரைநிரை நிலாமுற் றங்கள்
நீள்நெடு விழியார் கூடி நிரம்பினர் மலர்க ளள்ளித்
தோள்ப்பல மறவர் மீது தூவினர் வீரர் நாப்பண்
மாளிகை நோக்கித் திப்பு மதகரி மீதே வூர்ந்தார்
990

வெற்றியின் களிப்பு வீர விழிகளில் பொங்குங் கைவாள்
பற்றிய பாங்கில் முன்னே பரந்தகன் றிருந்த மார்பில்
கற்றையாய் வெண்முத் துக்கள் கோத்ததாம் மாலை மின்னும்
பொற்புறும் காட்சி திப்பு பவனியில் செல்ல லன்றே
991

கோலங்கள் வாசல் தோறும் கொண்டிடும் அலங்கா ரங்கள்
ஆலிலைத் தோர ணங்கள் அமைந்தன முன்றி லெல்லாம்
ஆலாத்தி கொண்டார் பெண்கள் அவரவர் கணவன் மாரை
ஆலாத்தி யெடுத்தார் பெற்றோர் அருகிருந் தாசி செய்தார்
992

பூரண கும்பம் வைத்துப் பொலிந்தன இல்ல மெல்லாம்
காரணர் வீரர் வீடு கால்பதித் திடுங்கால் போற்றுஞ்
சீரதாய் வெற்றி கொண்ட சிறப்பினை மாதர் போற்றச்
சேருமஃ தரச ருக்கும் சிந்தையில் பொதிந்த தாலே
993

பள்ளிகள் தோறும் வல்லோன் புகழ்ஓதக் கோயில் தோறும்
உள்ளுறை மணிக ளோங்கி ஒலித்திடும் விசேட பூசை
கொள்ளுவர் பூச கர்கள் கோனுயிர் நீடு வாழ
உள்ளிடும் பிரார்த்த னைகள் ஒற்றையான் தலங்க ளெல்லாம்
994

வாழ்கவெம் மன்னர் திப்பு வாழ்கவே வாழ்க வெற்றி
சூழ்ந்திட வெள்ளை யோரைச் சிதைத்தவெம் அரசர் வாழ்க
தாழ்பணிந் துயிரி ரக்கச் செய்தபோர் வீரர் வாழ்க
வாழ்பதி மைசூர் ஆன மனுக்குலம் வாழ்க வாழ்க
995

அரண்மனை வாயில் தன்னில் அமைச்சர்கள் முதலா னோர்கள்
பரந்திருந் தனரே கண்கள் பெருமகிழ் வுற்ற பாங்காம்
வருகையை அறிந்தார் வெற்றி வேங்கையைக் கண்டார் ஒன்றி
இருகர முயர்த்தி வாழ்த்தை இயம்பினார் பதிலுங் கொண்டார் 996

நெருங்கிய ஊர்வ லத்தார் நாயகர் தமைத்த விர்த்தே
அருகினி லுறைந்தார் மன்னர் அடிசில முன்னே செல்லக்
கரியுடல் நிலம்ப தித்துக் கால்தனைத் தூக்கும் சுல்தான்
ஒருபதம் பதித்தார் மற்ற தூன்றியே நிலத்தில் நின்றார்
997

முதலவர் கையைப் பற்றி முத்தித்தார் பூர்ணய் யாவும்
மதியுரை முதல்வர் மற்றோர் முறைப்படி வாழ்த்துச் சொல்ல
அதிபதி அன்னை பாட்டி அகங்கொண்ட மனையாள் ஒன்றும்
பதிதனை அடைந்தார் பெண்டிர்ப் புலமது கண்ணுற் றாரே
998

கிழத்தியின் களிப்பு

பறங்கியர்மேல் படைநடத்தி வெற்றி கொண்டு
புறமுதுகிட் டோடவைத்துப் பதிய டைந்த
அறங்காத்த வீரரினை அணைத்தாள் நங்கை
அடைந்தவெற்றி மகிழ்வினிலும் போதை யூட்டும்
நிறைந்தமனங் கொண்டிருந்தார் மன்னர் பேகம்
நாயகரின் வெற்றியினால் நிலைகொள் ளாதே
பொறுமையற்று வரவெண்ணி வீதி நோக்கிப்
பார்த்திருந்தார் பார்த்ததும்நெஞ் சொன்றிப் போனார்
999

'புகழனைத்தும் இறைவனுக்கே' என்றாள் கேட்டுப்
'பெருவெற்றி கொண்டஎனக் கிலையோ' என்றார்
'புகழுக்கென் றுரியவனோ இறைவ னொன்றே
பெருவெற்றி தந்தவனும் அவனா' மென்றாள்
'பகைவரினைப் பொருதியது நானே' என்றார்
'பக்கமிருந் துதவியது தனியோன்' என்றாள்
'மனமிலையோ எனைவாழ்த்த' என்றார் நங்கை
மார்பினிலே புரண்டாள்தன் மதிசோர்ந் தாரே
1000

வெற்றிகொள்ளக் காரணனே இறைவ னென்னும்
வற்றாத நம்பிக்கை நிறைந்தி ருந்தும்
சொற்போரின் மகிழ்வெண்ணித் தூண்டி னார்வாய்த்
துடுக்கறிவார் துணையவளைச் சீண்டிப் பார்த்தார்
கற்றவர்க ளிருபேரும் என்ப தாலே
கனிந்ததெலாம் இன்சொற்கள் களிப்பைக் கூட்டும்
பொற்புடைத்தாம் 'புகழிறைக்கே' என்றே மார்பு
படிந்தவளின் முகமுயர்திப் பேச லானார்
1001

'பூப்போல்வாய் நீயெனக்கு பேகம்' என்றார்
பூரிப்பால் தனைமறந்தாள் சய்தா பேகம்
'காப்பவனின் கொடைநீயாம்' என்றார் மன்னர்
'காவலனின் சேவகிநான்' என்றாள் ராணி
'வாய்ப்பாரோ நின்போல மனைமற் றோர்க்கும்
வற்றாத பேரன்பின் சுனைபோ' லென்றார்
'வாய்ப்புற்றா றெருவ'ரெனப் புகல்வாள் 'யாராம்
வேற்றொருவ' ரெனவினவ 'நீங்க' ளென்றாள்
1002

'பொல்லாத குறும்புனக்கு சய்தா' என்று
புன்னகையும் பொய்ச்சினமுங் குழைத்துச் சொல்ல
'அல்லஅல்ல ஆண்களுக்கே குறும்பு சொந்தம்
அரிவையரை அவதியுறச் செய்வா' ரென்றாள்
'வெல்லத்தில் கோத்தெடுத்த வார்த்தை கூட்டி
வாட்டுவது யாரெம்மைச் சொல்நீ' என்று
சொல்லிடவே 'நீங்கள்தான் சற்று முன்னே
சொன்னதென்ன சொல்லுங்கள் நீங்க' ளென்றாள்
1003

பாராளும் பதிமீண்டும் புகல்வர் வார்தததைப்
போர்தொடுக்கும் மனையாளை அணைத்த வாறே
போர்க்களத்தில் பகையோட்டப் போரி யற்றும்
போர்முறைதான் நானறிவேன் நின்னைப் -
போல:நாப்

போர்செய்ய நானறியேன் தேவி யாரிப்
போர்முறையைக் கற்பித்தார் நினக்காம் என்ன
யார்நீங்கள் தான்வேறு பேருண் டாமோ
என்னுயிரின் உயிரான மன்னன் என்றாள்
1004

கொழுநனொடு குலவிடுங்கால் விளையாட் டாகக்
கூறுமொழி இருவரையும் குதூக லத்துள்
நழுவிவிழச் செய்திடவே நகைத்தார் மாற்றார்
நிழல்படாத வேளையது தனித்த பாங்கில்
சுழன்றாடக் கலகலக்குஞ் சதங்கைக் கொப்பச்
சிரிப்பொலியின் நாதத்தால் சுவர்கள் கூடிப்
பொழிந்ததுவோ எனுமாப்போல் எதிரொ லிக்கும்
பாசத்தால் பிணையுண்டோர் களித்திட் டாரே
1005

வெண்பிஞ்சுச் சோளத்தின் வரிசைப் பற்கள்
வெளிச்சமிட இதழ்விரித்தே புன்ன கைத்துக்
கண்ணிமைகள் படபடக்கக் கூர்வே லொக்கும்
கருமணிகள் கருத்தோடு சுழலும் நோக்கி
எண்ணமென்ன தாமென்று இதயம் ஓர்ந்த
ஏந்தல்பெண் இடைபற்றி நடந்தார் ஆங்கோர்
வண்ணமலர் தெளித்ததேக்கு மஞ்சம் அன்னார்
வரவுக்காய்க் காத்திருக்கும் தனிமை கண்டார்
1006

தாயமுதும் தீரர் திப்புவும்

சமர்க்களந் தன்னில் தோல்வி தழுவினார் திப்பாம் என்றே
அமர்க்களப் பட்ட தோர்நாள் ஆட்சிசெய் புலம னைத்தும்
சரமெனப் புகுந்த சேதி செவிகொண்ட மக்க ளெல்லாம்
உருவினில் குறுகி நெஞ்சால் உருகினார் அதிர்ந்தே போனார்
1007

அன்னையின் காதில் சேதி அறைந்தனர் சேவி தர்கள்
சொன்னவை கேட்டுத் தாயோ சற்றெனுங் கலக்கங் கொள்ளார்
புன்னகை நெளிந்த தன்னை புருவத்தில் பார்த்தோர் வேர்த்தார்
என்னயீ தாமோ! தாயின் இலக்கணம் பொய்த்த தென்றே
1008

தோல்வியைத் தழுவி மன்னர் சீரங்கம் வருவா ரென்றே
கால்வழி நடந்தார் மக்கள் கவல்மிகும் உளஞ்சு மந்தே
வேல்விழி மாதர் மைந்தர் வயோதிபர் சிறாருங் கூடக்
கோல்நிமிர் ஆட்சிக் கோவைக் கண்டிடுங் காமத் தோடே
1009

வெற்றியின் வித்தே தோல்வி வரித்ததென் வதந்தி சீராய்ப்
பற்றிட வைத்தார் நாட்டின் புல்லர்கள் பொறாமை கொண்டோர்
முற்றுமே பொய்ய தாகும் மக்களும் அறிந்தா ரில்லை
பெற்றதாய் நெஞ்சு மட்டும் புறங்கண்ட சேதி யஃதே
1010

இதயத்தால் சோர்ந்து நோக்கும் இடைவழி காத்தி ருந்த
அதிசனக் கும்பல் பேசும் அதிசயம் இதுவா மென்றே
இதுகாறு வரையும் தோல்வி ஏற்றிட மாட்டார் ஏற்க
விதித்ததென் பவமோ என்றார் வேறெதுந் தோன்றா தாரே.
1011

ஒவ்வொரு விழியும் தோற்றே ஊர்ந்திடுஞ் சைனி யத்தைக்
கவ்விடு நோக்கா லுன்னிக் காத்தலின் போழ்து காதில்
செவ்வையாய்க் கேட்ட தேயோர் களியொலி முரச நாதம்
அவ்வொலி வெற்றிக் கென்னும் ஆர்ப்பரிப் பாகும் அன்றே
1012

பூவிதழ் விரிந்தாற் போன்றாம் புன்னகை வதனப் பூக்கள்
யாவுமே பொலிந்த தாங்கே இரவிகாண் கமல மொக்கும்
ஏவிடாப் பதங்கள் பாய எதிர்கொண்டார் மைந்தர் மற்றோர்
கூவினர் வெற்றி கொண்ட களிப்பினைக் காட்டும் பாங்கே.
1013

யானையின் மீது கோத்த அம்பாரி மீத மர்ந்தே
சேனைகள் தொடர மன்னர் தரிசனம் கண்ட மக்கள்
வானையே அதிரச் செய்தார் வாழ்த்தொலிப் பூச்சொ ரிந்தே
காணவென் றிருந்த காட்சி காணாதார் களிப்புற் றாரே
1014

புலிவரிக் கொடிகள் காற்றில் படபடத் தாடும் வீரர்
அலைதொடர் கடலா மன்ன அடுக்கடுக் காக மீண்டார்
நிலம்படு பதங்கள் ஊன்ற நடுங்கின வீதி யெல்லாம்
தொலைவழி கடந்தும் வெற்றிச் செருக்கினால் களைம றந்தார்
1015

தொடர்ந்திடும் படைக ளுக்குச் சோபனஞ் சொல்லிச் சொல்லித்
தொடர்ந்தது மக்கள் கூட்டம் சீரங்கஞ் சென்ற டைந்தார்
கொடும்பகை வென்ற திப்புக் கொண்டபோ ரணிக ளோடே
அடுத்தெவர் தாமு மற்றே அன்னைபால் சென்ற டைந்தார்
1016

பொய்யாக வதந்தி யொன்று பரவவிட் டிருந்த செய்தி
ஐயனும் அறிந்த தாலே அன்னையைத் தேற்ற லெண்ணிச்
செய்முதற் கரும மாகச் சென்றாங்கு தாயைக் கண்டார்
மெய்யோடு சேர்த்த ணைத்தே முத்தித்தார் நுதல்க னிந்தே
1017

செவிகொண்ட சேதி யுங்கள் சோகத்தைக் கிளறி யுள்ளம்
அவிந்திட வைத்தி ருக்கும் அறியுவேன் அடலா ரென்னைக்
கவிழ்ந்திட வைத்து வாகை கொண்டதாய்ப் பொய்யு ரைத்தார்
கவலழிந் திடுக வெற்றி கொண்டது நானே யென்றார்
1018

கடுகள வேனும் நெஞ்சில் கவல்கொள வில்லை நான்நீ
படுகளம் புக்கின் வெற்றி பற்றுவாய் என்ப தாலே
திடமது தெய்வச் சார்பு தொடர்ந்திடும் உன்னை அன்னை
கொடுத்ததாம் அமுது வல்லோன் காப்பொடு அறிவா யென்றார்
1019

முகத்தொடு முன்கை நெற்றி முடிசில கணுக்கால் நீரால்
அகத்துடை "நிய்யத்" தோடே அகன்றிட அழுக்க கற்றி
வகைப்பட "வுழு"ச்செய் தேநான் வேண்டிடு போழ்தி லெல்லாம்
உகந்தமு தூட்டி னேன்நீ உண்டகா லனைத்தும் என்றார்
1020

உடற்தூய்மை யோடு நெஞ்சின் உளத்தூய்மை கொண்டு நம்மைப்
படைத்தவன் நாம மோதிப் பாலமு தூட்டி னேன்நின்
உடற்பலம் தாய்ப்பால் ஈய உளப்பலம் இறைவன் ஈவான்
கிடைத்திடும் வெற்றி யென்னும் கொள்கைபால் உறுதி கொண்டேன்.
1021

சிறுவனின் தீரமும் திப்பு செய்த சங்கையும

துயரமிகு நிகழ்வொன்று நடந்த தன்று
திப்புமன்னர் ஆட்சிசெய்த காலப் போழ்தில்
பயமறியாச் சிறுவன்றன் மன்னன் மீது
பற்றுடைத்த காரணத்தால் நிகழ்ந்த தாகும்
கயவரினால் கிராமத்தில் நடந்த கேட்டைக்
காணமன்னர் வருவதற்காய் வழிச மைக்க
முயன்றதனால் விளைந்ததது விபரங் கேட்பின்
மனமுருகாப் பேரில்லை இன்றுந் தானே
1022

பெருங்கோட்டைச் சுவருடைத்து வழிச மைத்தால்
புகுந்துள்ளே மன்னர்வர ஏது வென்று
பொருந்தினனே தன்னொத்த சிறாரி னோடே
பத்துவய தானவொரு சிறுவன் "சுந்தர்"
கருத்துற்றான் கற்களினை ஒவ்வொன் றாகக்
கழற்றியிடை பெருக்கிடவே பகலைக் கொன்ற
இருளரக்கன் துணைசெய்தான் நண்பர் கூட்டாய்
இறங்கினரே தம்பணிக்காய் எதுவும் நோக்கார்
1023

இருப்புக்கூர் கொண்டுமெல்லக் கல்லக் கல்லின்
இடைபுகவே வருமொலியை செவியுள் வாங்கி
ஒருகாவற் படைவீரன் உற்றுக் கேட்டான்
"யாரது?"வென் றோங்குகுரல் தனைத்தொ டுத்தான்
ஒருத்தருமே இல்லைமன உறுத்த லென்றே
ஒருநொடிக்குள் உணரவவன் கடமை செய்ய
கருமத்தைச் சிறுபொழுது நிறுத்தி மீண்டுங்
கைக்கொண்டார் கல்லொன்று கழன்றே வீழும்
1024

மீண்டுமொரு கல்லையவர் கல்லச் சப்தம்
மிகைத்திடவே காவலன்கண் சுவரை மேயத்
தோண்டுபவர் தமைக்கண்டான் தரித்தி லான்பின்
சப்தமிட்டான் "யாரங்கே" என்ற வாறு

தோன்றாது ஒளியமுயல் கின்ற வேளை
துவக்கிருந்தே குண்டொன்று பாய்ந்து மார்புக்
கூண்டுக்குள் புகுந்ததுயிர் பறிக்கச் சுந்தர்
கல்லோடு புரண்டுதரை மீது வீழ்ந்தான் 1025

கண்ணிமைக்கும் பொழுதுள்ளே காலன் அந்தக்
காவலனின் உருவினிலே வந்துற்றாற் போல்
விண்ணேகிப் போனதுயிர் வீரச் செல்வன்
வரலாற்று நாயகனாய் வரமுங் கொண்டான்
பின்னொருகால் மன்னரந்த மண்ணுக் கேகப்
பிள்ளையவன் தாய்நடந்த சேதி சொன்னாள்
தன்னளவில் அவன்செய்த தியாக மெண்ணித்
துயர்கடலில் மூழ்கினாரே திப்பு சுல்தான் 1026

தாய்மண்ணின் துயர்கண்டு துணிவு கொண்ட
சிறுவனைத்தன் மனமிருத்தி மன்னர் சொல்வார்
வாய்ந்திடுங்கால் இவன்போன்ற வைர நெஞ்சர்
வீதிக்கோர் பேரெனினும் இந்தி யாவில்
தோய்ந்துள்ள அந்நியராம் தொழுநோய் நீக்கித்
துடைத்திடலாம் வரலாற்றை மாற்ற லாகும்
சாய்ந்தாலும் உடலமென்றன் நெஞ்சத் துள்ளே
சரியாச னங்கொண்டான் என்றிட் டாரே 1027

கட்டளையொன் றுடன்பிறந்த தாகும் அந்தக்
கல்லிருந்த இடத்தினிலே வாச லொன்று
கட்டியத னுச்சியிலே கவர்ந்த கல்லைக்
கூட்டிப்பொன் னுறையிட்டுப் பதித்து நாமம்
இட்டிடவும் வேண்டுமதைச்: "சுந்தர் வாசல்"
என்றழைக்க வேண்டுமென்றும் பெற்றோ ருக்கு
நட்டமுத லாகவவர் வாழ்நாள் மட்டும்
நிரந்தரமாய் வேதனமும் தருக வென்றே 1028

திப்புவின் மனிதாபிமானம்

கடல்கடந்து வந்ததாமோர் ஓலை திப்புக்
கரங்களுக்கே அருகிருந்தார் மனைவி "பானு"ம்
உடனதனைப் படிக்கும்படி விரும்பிக் கேட்க
உள்ளத்தை உருக்குமொரு சேதி கேட்டார்
படைநடத்தித் தம்மோடு போரு மிட்டுப்
பிடிபட்டுச் சிறையினிலே அடையுண் டுள்ள
அடலர்களின் தலைவனது மனைவி கண்ணீர்
அருவிக்குள் தோய்ந்துவரைந் திட்ட தஃது 1029

"காருண்ய மனங்கொண்ட சுல்தா னுக்குக்
கண்ணீருள் வாடுமொரு அன்னை கெஞ்சிக்
கோருமொரு விண்ணப்பம் இந்த ஓலை
கருணைகூர்ந்து மனங்கொள்ள வேண்டு - கின்றேன்
ஈரெட்டு மாதமதாய் எண்ணி யெண்ணி
ஏங்குகின்றேன் என்மக்கள் தந்தை யுங்கள்
ஊர்ச்சிறையில் வாடுவதால் உளங்க னிந்தே
உதவவரம் வேண்டுகின்றேன்" என்றும் பின்னே 1030

"யாருமற்ற அனாதைகளாய் நானு மென்றன்
நாயகன்பாற் பெற்றெடுத்த குழந்தை மூன்றும்
வேரறுந்த மரமானோம் வழியொன் றில்லை
விடுக்கின்ற விழிநீர்க்கும் அளவே யில்லை
காரணமென் கணவரெம்மோ டில்லை யஃதே
கருணைகொள்ள வேண்டுகிறேன் சுல்தா னேநான்
தீருமெனில் என்சோகம் வாழ்நா ளெல்லாம்
திப்புசுல்தான் உங்களையென் நெஞ்சிற் - கொள்வேன்" 1031

"விடுதலைபெற் றென்கணவர் வருவா ராயின்
விடேன்மீண்டும் உங்களது மண்ணில் யுத்தந்
தொடுப்பதற்குந் தீங்குதனை எண்ணு தற்கும்
சத்தியமீ தென்வார்த்தை நம்ப வேண்டும்
கடைசியிலோர் வார்த்தைசொல்வேன் சத்தி யத்தைக்
காப்பாற்று வேனென்ப தாகும்" என்றே
விடைகொண்டா ளாகுமவள் "கேணல் டங்கன்"
வரித்தமனை யாள்வெள்ளைப் பறங்கி நாட்டாள்
1032

கடிதத்தைப் படித்துமுடித் திட்ட பின்னர்
கண்கலங்கிப் போயிருந்தார் ராணி பேகம்
எடுப்பரென்ன முடிவாமோ கணவ ரென்றே
இருவிழியும் ஏங்கிடத்தன் பதியைப் பார்த்தார்
கிடைத்தபதில் செவிக்குள்தேன் வார்த்த வாறாம்
காகிதமொன் றெழுதவைத்தார் கற்பித் தோராய்
அடுத்தவர்கொள் துன்பத்தில் தானுந் தோயும்
அன்புளத்தை எண்ணிபேகம் நெகிழ்ந்திட் டாரே
1033

பிடியுண்ட பேர்களிலே பதவி தன்னில்
பலங்கொண்டோன் ஆணையிடும் பொறுப்புக் -
கானோன்
அடியுண்ட நாகம்போல் சிறையில் நாளை
அணுவணுவாய்க் கரைத்தபடி அடைந்தி ருந்தான்
கிடைக்காதோர் விடுதலையென் குற்றத் திற்குக்
கொண்டதிந்தச் சிறையேயென் வாழ்நாள் முற்றும்
கிடந்தழிய வேண்டியதே எனத்தன் னுள்ளம்
கலங்கிடவே காலத்தை யோட்டி னானே
1034

அறியாதான் அவன்மனைவி அரச ருக்கு
அகம்நெகிழ எழுதியதை அடாது செய்தோன்
நெறிபிறழ்ந்த கொடுமைகளைப் பிறர்க்கி ளைத்தோன்
நாடுவிட்டு நாடுவந்தந் நாட்டி னோர்க்கே

அறம்பிழைக்க ஊறுசெய்த உலுத்தன் தம்மின்
ஆணவத்தால் ஒப்பில்லா வேளை வெற்றி
பெறநினைந்து யுத்தத்தைத் தொடக்கி ஈற்றில்
பிடிபட்டான் பரிதாபம் சிறையுள் காய்ந்தான்
1035

"கடிதத்தைக் கண்ணுற்றேன் "கேணல் டங்கன்"
கைப்பிடித்த நின்கணவர் விடுவிப் பேற்று
திடனில்லம் வருவார்நீ சோகங் கொள்ளேல்
சுகமாக இருக்கின்றார் விடுவிப் பேன்நான்
உடனின்றே செய்கின்றேன் அச்சஞ் தீர்க
உனதுமக்கள் பொருட்டாலே உன்பொ ருட்டால்
பிடியுண்டார் எமக்கிழைத்த கேட்டிற் காக
பகைமறந்தேன்" எனக்கூறி யின்னுஞ் சொல்வார்
1036

"நீர்வடித்த கண்ணீர்முத் தொவ்வொன் றிற்கும்
நானொவ்வோர் வெண்முத்தைப் பரிசா யுன்னைச்
சேர்ந்திடச்செய் வேனதனைக் கொள்வாய் நானுன்
துன்பத்திற் களிக்கின்ற சன்மா னந்தான்
ஓர்ந்திடச்செய் மாற்றாரின் மண்மீ தாசை
உற்றிடுதல் பாவமென்றே எதிர்கா லத்தில்
சீரோடு வாழுங்கள் என்றன் ஆசி
சேரட்டும் குழந்தையர்க்கும்" எனமு டித்தார்
1037

சொன்னபடி மறுநாளே "தர்பார்" கூட்டி
சத்தியத்தைக் காத்திட்டார் திப்பு சுல்தான்
அன்னவனோ அதிசயித்தான் அதிர்ந்தே போனான்
ஆகாதே எம்மளவில் இதுபோ லென்றே
மன்னிக்கும் படியாநான் குற்றம் செய்தேன்
மன்றாடி என்மனையாள் கேட்ட தற்காய்
கண்ணியஞ்செய் துள்ளார்பெண் கண்ணீ ருக்கு
கருணையுள்ளம் இதுபோலுண் டாமோ என்றான்
1038

பகைவரென்ற போழ்தினிலும் பணிந்து வேண்டும்
பண்பினுக்கு மதிப்பளித்து மனித நேயம்
மிகைத்ததங்கு திப்புசுல்தான் மாண்பைக் கூறும்
மற்றுமொரு செய்கையிது வாழ்நா ளெல்லாம்
பகையிடையே காலத்தை யோட்டி னாலும்
பகைகொண்ட தவர்பறங்கிப் பேரோ டன்றி
அகங்கொண்டா ரில்லைதம் அயலா ரோடே
அர்ப்பமெனும் பகைகொள்ளார் அவரே திப்பு1
1039

பெருமை சேர்க்கும் பிரயத்தனங்கள்

பொங்கிநிலை கொள்ளாது பெருகி யோடிப்
புறமிரண்டும் அலைதழுவப் புனல்பு ரட்டி
நுங்குநுரை கரையொதுங்க நிலஞ்செ ழிக்க
நீரீந்து குடிபுனலுந் தந்தே பின்னர்
சங்கமிக்குங் கடலினிலே துங்க பத்ராத்
தூயநதி அதன்கரையில் பாச றைகள்
சங்கமமாய் இருந்ததவை திப்பு சுல்தான்
தலைமையிலே வந்தபடை வீரர்க் கென்றாம்
1040

சூல்கொண்ட கருமேகம் வானைத் தன்பால்
சொந்தமெனக் கொண்டதுவோ சுற்றிச் சுற்றிக்
கால்பதித்து நின்றதந்தப் புலத்தே மட்டும்
கடுமழையாய்க் கொட்டியதே சிறுபோழ் துள்ளே
சாலாத நிலையவர்க்குத் தரைமுற் றாகத்
தண்ணீருஞ் சகதிசேறுஞ் செறிந்து காணும்
தோல்விறைக்குங் குளிர்கூடச் சேர்ந்த தொன்றிச்
சிப்பாய்கள் பெருந்துன்பங் கொண்டிட் டாரே
1041

சீறியது மின்னல்வான் கிழிதல் போலும்
சிறிதடுத்து வானிடிந்து வீழ்தல் போலும்
பேரோலியோ டார்ப்பரிக்கும் இடியுஞ் சேரும்
பாசறைகள் தாங்காதே காற்றி லாடும்
மாறுகரை சேர்ந்துபடை நடத்த வெந்த
மார்க்கமுமே தோன்றாத திப்பு சுல்தான்
தாரணிசேர் மார்பர்தந் தளகர்த் தர்தம்
தீர்க்கமென்ன வென்றறியக் கூட்டி னாரே
1042

ஆற்றினைத்தாம் கடந்துசெல்ல வழிக ளேதும்
ஆகிடுமோ என்றவரை வினவச் சொல்வார்
காற்றோடு பெருமழையும் நீர்ப்பெ ருக்குங்
குறைந்துவரா நிலைமைக்குள் ளிருப்ப தாலே
நோற்பதுநாள் சிலதங்கல் தாமே வேறு
நலஞ்சேர்க்கும் பாதையிலை பொறுப்போ மென்றார்
ஏற்புடைத்த ததுவொன்றே தாமென் றாலும்
இணங்கவில்லை திப்புமுழு மனத்தி னோடே
1043

வாய்ப்பிதுபோல் வாய்க்காது பகையொ டுக்க
வேண்டுமின்றே நதிகடக்க என்றார் திப்பு
ஓய்ந்திடுங்கால் மழைவெள்ளம் ஓங்குங் காற்றும்
ஒன்றிவரி னல்லாது வழியில் லென்றார்
பேய்க்காற்றைப் பெருமழையைப் பொருட்ப டுத்தாப்
பெருவீரர் திப்புத்தம் படையோ ருக்குப்
புரியாத புதிராக ஆணை யொன்றைப்
பிறப்பித்தார் படைவீரர் பற்றி னாரே
1044

சேருங்கள் பீரங்கி இரண்டை ஆற்றின்
திசைதிருப்பிக் கரையோரம் என்ப தாக
கூறியதே மன்னரிட்ட ஆணை நீரைக்
குறிவைத்துச் சுடவைத்தார் சுட்டார் என்ன

காரணமோ நீர்நிரம்பிப் பொங்கி யோடும்
காட்டாறு புனலொடுக்க மழையும் ஓய்ந்து
சீரான நிலைக்குவந்து போக மார்க்கம்
தந்ததெனில் மறக்கவொண்ணா நிகழ்வொன் றாகும்
1045

காலநிலை சீராகிக் கங்கை வற்றிக்
கரைதாண்டிச் செல்லவழி கிடைத்த தாலே
காலத்தின் தாமதத்தைத் தவிர்க்க வேகங்
காட்டினரே மறுகரையைச் சென்ற டைந்தார்
காலால்ப டையோடு பரிப்ப டையும்
கரிகளொடு பீரேங்கிப் படையுஞ் சேரும்
காலவெளி சிறிதேயாம் பெரும்ப டைக்குக்
கரைமாற வெனில்மன்னர் கருத்தை ஏற்றார்
1046

நீர்த்தலத்தில் குண்டுவெடி யுண்ட தாலே
நீரருகிப் போனபெரும் அதிச யத்தின்
காரணத்தை பின்னொருகால் புகல்வ ரஃது
காரணரின் ஆன்மீகப் பற்றா லென்றே
சாருமொரு பலனதனால் மறுபு றத்தே
தரித்திருந்த மராட்டியர்கள் கிலிகொண் டோடப்
போருக்குத் திப்புவொடு பிரெஞ்சுக் காரர்
புறத்திருந்தும் வருகின்றார் எனநி னைந்தே
1047

'ஹசனலிகான்' 'மிர்ஸாகான்' 'காஸீ கா'னும்
'காபுலிபு றாகீம்கான்' 'முஹம்மத் கானும்'
'பஸில்கான்'ஆம் ஐந்துபடை முதல்வர் தத்தம்
படைப்பிரிவி னோடுதனித் தனியாய் யொவ்வோர்
திசையினிலே சென்றார்கள் மன்னர் தம்மின்
திட்டத்தை அமுல்செய்தார் மராட்டி யர்கள்
விசைகொண்டார் இடம்விடுத்தே ஓடி னார்கள்
வரித்தனரே தலைப்பிரிவுத் தளத்தைச் சேர்ந்தார்
1048

கூடவந்த பெண்டுபிள்ளை அனைத்தும் விட்ட
கோமைவக் கானதுவாம் மன்னர் பாலே
கூடினராம் அனைத்தவரும் கருணை கொண்டு
காவலொடும் அனுப்பிவைத்தார் குறைக ளைந்தே
நாடியவர் பிள்ளைகட்குப் பரிசுந் தந்தார்
நட்டாற்றில் விடப்பட்டோர் காவல் பெற்றார்
வீடடைந்த பின்னுங்கள் கணவ ருக்கு
வேண்டும்நீர் நல்லுரைகள் சொல்ல லென்றார்.
1049

தொடர்ந்தார்தன் படைகளோடு **"சாவ னூர்"**க்குத்
துங்கபத்ரா நதிக்கரையி னூடாய்த் திப்பும்
இடைவழியில் இணைந்துகொண்டார் **'புர்கா னுத்தீன்'**
ஏற்றபெரும் படைகளொடு படைப்ப லத்தில்
மடங்கிரண்டாய்ப் போனதன்று மகிழ்ந்தார் மன்னர்
மாற்றாரை முடக்கலினிச் சுலப மென்றே
அடிகொண்ட தாம்புதிய தந்தி ரங்கள்
அரங்கேறும் நாளுமொன்றி வந்த தன்றோ
1050

சாவனூர் பட்ட அடி

புதுப்புதிதாய் வியூகங்கள் அமைத்தார் திப்பு
போர்யுக்தி தனில்தந்தை ஹைதர் தம்மின்
மதியூகந் தனைநிகர்த்த கார ணத்தால்
மாற்றாரைத் திணறவைத்தார் களப்போர் தன்னில்
எதிரிகளை இம்முறையும் போக்குக் காட்டி
இம்சிக்க வேண்டும்பின் புலியாய்ப் பாய்ந்தே
கதிகலங்கச் செய்திடுதல் வேண்டும் என்ற
கருத்தோடே பாசறைகள் அமைக்கச் சொன்னார்
1051

பகல்நேரம் சிலவேளை முறைமை மாற்றிப்
பாசறையில் படைதங்கும் இரவில் தாக்கும்
அகலும்படை இரவினிலே சிலநாட் போழ்தில்
அடுத்தெங்கோர் புறத்தினிலே அறியா வாறே

மிகத்தொலைவில் இடம்மாறும் மீண்டுந் தோன்றும்
மாற்றார்கண் மண்தூவி மிரளச் செய்யும்
வகையறியா தெதிரிகள்தாம் தமக்குள் கேட்கும்
வினாவாகிப் போனாரே திப்பு மன்னர்
1052

மின்னலென வெவ்வேறு திக்கி லுற்ற
மராட்டியரை நிஜாம்படையைத் தனித்துத் தாக்கிச்
சின்னபின்ன மாக்கியவர் இடுப்பொ டித்துச்
சினந்தீர்த்தார் வெள்ளையர்க்குத் துணையாய் - நிற்கும்
தன்மான மற்றசெயல் தொடர்வ தாலே
சேர்த்தழிக்கத் துணிவுற்றார் தொடர்ந்துஞ் செய்தார்
பன்முனையில் ஒரேதினத்தில் படைந டத்தும்
பான்மைமைகண்டு அதிர்ந்தனரே பகைப்பு லத்தோர்
1053

அமாவாசை இரவொன்றில் அலறிப் போனார்
அறியாத வேளையிலே நேர்ந்த பாய்ச்சல்
இமைதுடிக்கும் நொடிப்பொழுதுள் ஆன தாலே
எதிரிகளால் எதிர்த்துநிற்க இயல வில்லை
அமைத்திருந்தார் படையைமுப் பிரிவா யொவ்வோர்
அணிக்குமொரு தலைவரினைத் தேர்ந்தார் திப்பு
தமைப்பொறுப்பி லாக்கியொன்றைத் தேர்ந்து போரைத்
தொடக்கியதோர் புதுவியூக மாகிற் றன்றே
1054

தளகர்த்தர் புர்ஹானுத் தீனோர் பக்கம்
சென்றாங்கே மராட்டியரைத் துவம்சம் செய்யத்
தளகர்த்தர் மீர்முயினுத் தீன்தன் பேரில்
சிதைத்தழித்தார் நிஜாம்கொண்ட சேனை தன்னை
களைப்பறியா வீரமகன் திப்பு மூலக்
கருவினையே முளையோடு பிடுங்கு மாப்போல்
பொருதியவர் தலைவர்தம் மோடு கொண்ட
படையினையும் தரைமட்ட மாகச் செய்தார்
1055

மராட்டியரின் கொள்ளையும் திப்புவின் சவாலும்

மற்றொருகால் மராட்டியரின் செய்கை திப்பு
மன்னரினை வெறிகொள்ள வைத்த தாகும்
உற்றபெரும் படையோடு கான கத்தை
ஊடுருவிச் செல்லுகின்ற காலம் பார்த்துப்
பற்றைபுதர் மரஞ்செறிந்த பகுதி யொன்றில்
பதுங்கியிருந் தவர்செய்த பாத கத்தால்
உற்றதந்தச் சினம்பின்னர் போராய் மாறி
உயிரழிவைத் தோற்றுவித்த நிகழ்வா கிற்றே
1056

பரிகளிலே படைமுதல்வர் முன்னே செல்லப்
பரிவீரர் பின்தொட ர பாத சாரிப்
பிரிவினர்கள் வந்தார்கள் ஆயு தங்கள்
பெருவண்டி பலதாங்கி வரும்பின் னாலே
வரிவரியாய் ஏவலரும் உணவுப் பண்ட
வண்டிகளும் வந்தனவே எண்ணில் கொள்ளா
நிரைநிரையாய் அதர்வழியே நீண்ட தூரம்
நகர்ந்ததந்தப் பெருஞ்சேனை நவிலற் போமோ
1057

கொள்ளையிடும் நோக்கோடு பதுங்கிக் கொண்டோர்
கடைசிநிரை வரும்வரையுங் காத்தி ருந்தார்
கொள்ளையாங்கே தானியங்கள் மூடை மூடை
கணக்கிலடங் காதபடி வீரர்க் காக
உள்ளிடையே புகுந்தார்கள் பொருத்தம் பார்த்தே
உணவுப்பொதி ஏற்றிவந்த வாக னங்கள்
கள்ளர்வசம் பிடியுண்ட தாகும் தான்யம்
கொண்டமூடை பத்தாயி ரத்தின் மேலாம்
1058

செவிகொண்டார் நடந்ததனை திப்பு கண்கள்
செவ்வானச் சிவப்பெய்தும் சினக்கொ திப்பால்
கவ்வியது போர்வெறியும் தோள்தி னக்கக்
கொதித்தெழுந்தார் மராட்டியர்க்கு ஓலை யொன்றை
அவருரைக்க எழுத்தர்கை ஆணி கோக்கும்
அனலொக்குஞ் சுடுசொற்கள் வீர வார்த்தை
செவிசுட்டுப் பொசுங்கியுளஞ் சிலிர்க்க வைக்கும்
தப்பிழைத்தோர் ஆண்மைக்குச் சவாலு மாகும்
1059

வீரத்தில் புகழ்மிக்கோர் நீங்க ளென்றால்
வெஞ்சமரில் திறன்கொண்ட தீர ரென்றால்
மார்நிமிர்த்தி எதிரிபலம் வெலத்து டிக்கும்
மறவர்குல வழித்தோன்றல் நும்பே ரென்றால்
வேரறுத்தே எதிரிகளைத் துவம்சம் செய்த
வல்லமையின் வரலாறும் உண்டா மென்றால்
போருக்கு வாருங்கள் அமைதி வேண்டின்
பறித்தபொருள் மீட்டுங்கள் என்ப தோடே....
1060

போரென்றால் பல்லுயிர்கள் பறிக்கப் பட்டுப்
போகுமுடல் ஊனமுறும் குருதி வெள்ளம்
ஆறாகப் பெருகும்பல் அழிவுந் தோன்றும்
அனியாயம் வீண்விரயம் அதுத விர்த்து
மாறாக நாமிருவர் தனித்தே நின்று
மோதிடுவோம் நம்மிடையே வெற்றி தோல்வி
தீர்க்கட்டும் முடிவுதனைத் திருடிச் சென்ற
செல்வத்தை என்செய்வ தென்ப தற்கே
1061

தனித்தெம்மோ டுடற்பலத்தை காட்ட வொண்ணாத்
தயக்கமுமக் குண்டாயின் வீரப் போரில்
நினக்குவந்த பேரினைநீர் அழைத்து வாரீர்
நாமுமது போலழைத்து வருவோம் முன்னர்

நனிமேலாம் வேதத்தின் இறுதித் தூதர்
நபிபெருமான் காலத்து வீரப் போரில்
அணுகுநிலை யதுவாகும் ஆண்மைக் கஃதென்
அறைகூவல் ஆகுமெனில் வருவீ ரன்றேல்.....
1062

இரண்டுமுமக் கொவ்வாதே எனநி னைந்தால்
இருபடையும் மோதட்டும் இட்ட மாயின்
விரும்புகின்ற படைக்கலங்கள் ஆயு தங்கள்
வேண்டுவரை கொணர்வீர்நீர் அதுபோல் நாமும்
விரும்பியதைக் கொணர்வோம்முன் வரைய றுத்தால்
வரையறையை விஞ்சோம்நாம் வேண்டு கின்ற
ஒருபுலத்தைத் தேர்ந்திடுவீர் எமக்கும் அஃதே
உடன்படட்டும் எனப்பொறித்தார் அத்தோ -
டன்னார்.....
1063

தலைவனுடன் தலைவன்தான் மோத வேண்டும்
தளகர்த்தன் தளகர்த்த னோடே வீரன்
பலம்காண வேண்டுமொரு வீர னோடாம்
பரியோடு பரிகரியுங் கரியி னோடும்
இலவேறு நிபந்தனைகள் இவையே அல்லால்
இன்றேநின் பதிலையென்றன் தூதன் மூலம்
சொலியனுப்ப வேண்டுமெனச் சொல்லிற் றந்தச்
சமாதானம் அன்றிப்போர் வேண்டும் தூதே
1064

"துக்கோஜி ராவ்ஹொல்கார்" மராட்டி யர்தம்
தலைவனிடம் தூதுவனவ் வோலை சேர்க்க
மிக்கபுலன் கொண்டதனைக் கண்ணால் மேய்ந்து
மூழ்கினனே சிந்தனையுள் சுல்தான் சீற்றம்
மிக்கதுவாய் இருப்பதனை மொழிந்த தஃது
வேறுமொழி யுடன்சொல்ல வழியில் லாதே
எக்கணமும் புயல்வெடிக்கக் கூடும் என்றே
எண்ணிடச்செய் திட்டதது எரிநா போன்றாம்
1065

ஊன்றிக்கண் வாங்காது சிறிது நேரம்
உற்றதனை நோக்கியவா றுள்ளத் துள்ளே
தோன்றுமென்ன விளைவுசுவால் ஏற்பின் என்றே
சிந்தனையின் வசப்பட்டார் **'துர்க்கோ ஜீராவ்'**
வேண்டாவென் றொதிக்கிடவும் வேண்டா மஃதை
வேண்டுமேனக் கொண்டாலோ விழைவு தீதாம்
தோன்றாத பதிலெண்ணிக் குமைந்தார் தம்மின்
தளகர்த்தர் தமையயழைத்தே ஆலோ சித்தார்
1066

வெற்றியல வரித்தபெரு வீர ரேநாம்
வரலாற்றுச் சான்றுண்டு என்றிட் டாலும்
முற்றுமெளி தல்லதிப்பு போன்ற வீரர்
முன்னெங்கள் வெற்றிவாய்ப்பு எனவே நாங்கள்
நற்றெளிவு பெறவேண்டும் சவாலை யேற்று
நகர்வதுவோ களங்காண அன்றி நட்பைப்
பற்றுவதோ நல்லதொரு முடிவை நீங்கள்
புகலுங்கள் என்றவரைக் கேட்பார் சொல்வார்
1067

மறுத்துரைத்தால் ஈனம்நம் நாடே நம்மை
மிகவிகழும் எள்ளிநகை யாடும் வெற்றி
உறுமெனிலோ காத்தபுகழ் ஓங்கும் ஒன்றே
ஒன்றுமெமை உய்த்துணர்ந்து பதில்சொல் லுங்கள்
திறமைமிகு தளகர்த்தர் நீங்கள் யுத்தத்
தந்திரங்கள் அறிந்தவரே திப்பு செய்கை
அறிவீர்கள் நாமறியாப் போழ்து காட்டும்
அற்புதங்கள் தமைநெஞ்சில் ஆழ்ந்தே யோர்வீர்
1068

தலைவர்தம் வேண்டுதலுக் கேற்ற வாறு
சிந்தித்தோர் முடிவுக்குள் வந்தே சொல்வார்
தலைவரொடு தலைவரென்றும் தளகர்த் தர்கள்
தனித்தனித்தும் வீரர்கள் அதுவா றென்றும்

இலைப்பொதுவாய் அணியணியாய் களத்துட் புக்கிச்
இருதரப்பும் சமரிடுவோம் வேல்வாள் அம்பே
பலப்பரீட்சைக் குகந்தனவாம் கைத்து வக்கு
பீரேங்கி வெடிமருந்து போல்வை யற்றே
1069

தூதுவந்த தூதனிடம் மாற்றுத் தூதா
சொல்கவெனச் சொன்னார்கள் பொதுவாய் நாமும்
மோதலுக்குத் தயாரென்றே தூதை யேந்தி
மின்னலென மறைந்திட்டான் தூது வந்தோன்
சேதிதனைத் திப்புவிடம் சொன்னான் கேட்டுச்
சினங்கொண்ட போதினிலும் தனைய டக்கி
ஏதுசெய் வேண்டுமெனுந் திட்டந் தன்னை
இமைப்பிற்குள் இதயத்துள் முடிவு கொண்டார்
1070

தளகர்த்தர் தமையயழைத்துச் சபையுங் கூட்டித்
தோன்றுமவர் கருத்தினையும் செவியுள் வாங்கி
களமேகும் நாள்குறித்து யாரெ வர்க்குக்
கொண்டபொறுப் பெதுவென்றே எடுத்து ரைத்து
பழிதீர்க்கப் புறப்படுங்கள் என்றார் திப்பு
பெருஞ்சேனை கூட்டினரே ஆணை கொண்டோர்
மொழிமுனைவாய் முடியுமுன்னே செயலில் காட்டும்
மறவர்கள் மைசூர்மண் ஈன்ற தீரர்
1071

வேறுவேறாய் இனத்திற்கினம் பன்னூ றாக
வேண்டலுக்கும் அதிகமதாய் விதியை மாற்றத்
தேறினவாம் ஆயுதங்கள் சொன்னாற் போன்றே
தருமத்தைக் காக்குமந்தப் போருக் காக
மாறிடுவர் வாக்கினிலம் மராட்டி யர்கள்
மிகைத்தாலோ பதிலுரைக்க வேண்டும் வாறு
கூறிவைத்தார் மற்றவையுந் தயாராய்க் கொள்ளக்
கருத்திலுற்ற ஐயம்பின் மெய்யா கிற்றே
1072

செங்குருதிச் சாக்காட்டில் மராட்டியர்கள்

துலங்கு கின்ற செங்க திர்கள் கிழக்கு வானில் மேவியே
இலங்கி வந்த கதிர வன்றன் எழிலை வானில் காட்டினான்
நிலங்கு ளிர்ந்த இருள்மை நீங்கி நிமிர்ந்த துலகு சோபனம்
அலங்க ரிக்கும் போழ்து நெஞ்சம் ஆர்த்தெ முந்த தாமரோ
1973

குறித்த நாளில் மராட்டி யர்கள் கூடி நின்றார் வரையிலார்
மறத்த லைவர் திப்பு தம்மின் மிடுக்கு யர்த்திப் படையொடு
குறித்த மண்ணில் கால்ப தித்தார் குறைவி லாத சேனையே
பறித்தெ டுத்த பொருளை மீட்கும் பணிக்கா மல்ல பாடமே
1974

வெள்ளை வண்ணப் புரவி மீது வீற்றி ருந்தார் திப்புமான்
உள்ளங் கொண்ட கோபங் கண்கள் ஊடு பீறி வழியக்கை
கொள்ளு வாளின் கூர்மு னைபோல் காணும் மீசை துடித்தது
எள்ளல் வாயின் இதழ்கள் காட்டும் இவர்கள் தூசு எனவுமே
1975

பரந்த மார்பில் போர ணீகள் புயப லத்தின் மேதமை
விரிந்த காட்சி காணுங் கண்கள் வியக்கும் பாங்கில் ஓங்குமால்
தெரிந்த தன்ன திப்பு வீரர் தோன்றத் தானை வீரர்கள்
அருகி லுற்றார் ஆங்கு வீரம் ஆட்சி செய்த தாமரோ
1976

குதிரை தாங்கு வீரர் கைகள் கொண்ட கூர்வே லாயுதம்
உதய சூரி யன்பு றத்தி லோங்கு சுடரின் ஒளிபடப்
புதிய காட்சி காட்டி மின்னும் புலம னைத்தும் வெள்ளிபோல்
எதிரில் காணும் வீர ராவி இரைகொள் ஏக்கங் கொண்டுமே
1977

புரண்டு வீழ்ந்த மலைகை ளொக்கும் படையில் வந்த கரிகளாம்
திரண்டு நின்ற காலால் வீரர் தோள்சு மந்தார் அம்புவில்
இரண்டு பக்க மும்ப டைகள் எட்டா விழிகொள் தொலைவரை
திரண்டி ருந்த காட்சி காணத் தோன்றி னானோ கதிரவன்
1978

வெள்ளை மஞ்சள் அணியில் புலியின் வரிகள் செம்மை நிறத்திலே
உள்ள வாறு பதித்தி ருந்தார் உருவில் வேங்கை போல்பிறர்
கொள்வ ரச்சம் என்னும் நோக்கும் கொண்டி ருந்தார் திப்புமான்
வெள்ளை யுள்ளம் வீரம் நேர்மை வரித்த வாழ்வு வாழ்ந்தவர்
1979

மராட்டி வீரர் முனையின் மத்தி முதல்வர் **'துர்க்கோ ஜீ'**படை
திரட்டி வந்த போழ்தும் நெஞ்சு திகில டைந்த வாறுகண்
வரண்ட பார்வை கண்டு வீரர் மனமும் நொய்ந்து போனதாம்
பொருந்தி வந்த போரைக் கொள்ளும் படியோர் நிலைமை ஆனதே
1980

தாடி மீசை யோடு சேர்ந்த தடித்த மேனி படைக்கலம்
கூடி வெள்ளைக் குதிரை மீது காத்தி ருந்தார் தலைவரும்
ஏடு கொண்ட பெருமை யுண்டே எனினும் இன்று நிலைமையோ
கூடி வெற்றி வாரா வென்னும் காதை தேர்ந்தி லாரரோ
1981

மஞ்சள் வண்ணப் பாகை காவி விளங்கு பட்டு வஸ்த்திரம்
நெஞ்சில் தொங்கு வாரில் பூட்டி வைத்த துவக்கின் உண்டைகள்
தஞ்சம் இடையின் கச்சை யென்று சேர்ந்த உறையில் வீரவாள்
அஞ்சு கின்ற தோற்றம் 'துர்க்கோ ஜீயென்' தலைவன் களத்திலே
1982

இருபு றத்தும் ஒன்று போலும் இருந்த தாகும் படைப்பலம்
ஒருவர் விஞ்ச ஒருவ ரில்லை ஓர்ந்து நோக்கில் உண்மையே
பொருது கின்ற போழ்து தங்கள் பக்கம் சார்ந்த பேர்களின்
உருத்தெ ரிந்தே உயிர்த விர்க்க உடைகள் மட்டும் வேறதே
1983

பொருந்தி வைத்த வாறு யுத்தம் பக்க மிரண்டுஞ் சைகையால்
பொருந்திக் கொள்ளத் தொடங்கிற் றந்த போதி லீர்பு றத்திலும்
இருந்து வந்த தாகும் அணிகள் இடியி டிப்பப் பேரொலி
செறிந்து வந்த தன்ன வர்வாய்ச் சப்த மாகும் மிகைத்ததே
1984

அல்லா(ஹ்) அக்பர் அல்லா(ஹ்) அக்பர் அல்லா(ஹ்) அக்பர் என்றுநா
சொல்லிச் சொல்லி வந்த ஓசை செருக்க ளத்தை ஆண்டிடும்
வல்ல மையை வாள்கள் பேசும் வீறு கொண்ட நிலைமையைச்
சொல்லி லோதச் சாலா வெற்றி தம்கை கொள்ளச் சாடினார் 1985

நீசர் சென்னி நீங்கி யுடலம் நிலம்பு ரள்க வென்றுமே
வீசும் வாளின் வேகம் எதிர்கொள் வீரன் கழுத்தைச் சாடிடும்
காசு கொண்ட கயவர் நெஞ்சைக் கூறு போடென் றோதியே
வீச மார்பைத் துண்ட மாக்கி வேறு ஒன்றைத் தேடுமே
1086

உயிரை வாங்கி வாவென் றெண்ணி ஓங்கி எறியும் ஈட்டிகள்
செய்யுங் கருமந் துளைத்து நெஞ்சை தாண்டித் தரையில் பாய்ந்திடும்
மெய்க ளுண்ட புண்ணி ருந்தே மடையொ டித்த செம்புனல்
வெய்யோன் தாக சாந்திக் கென்றோ! வடிந்து காய்ந்து கனத்தது
1087

வில்லும் அம்பும் கொண்ட வீரர் வரிசி லையைக் கோத்தது
செல்லு மிடத்தைச் சென்ற டையச் சுண்டி விட்டார் நாணினை
கொல்லு தொழிலைக் செய்யுங் கொலைக் கருவி யான ஆயுதம்
வல்வி னையை வரித்த பாங்கின் விவரம் கூறல் வேண்டுமே
1088

நூறு நூறின் ஆயி ரங்கள் நொடிக்கு நொடி எதிரியை
வீறு கொண்டு தாக்கி மண்ணில் வீழச் செய்யும் எழுந்திரா
வாறு வுயிர்கள் பறித்தெ டுக்கும் வரையில் லாத பேர்தொகை
நீறு முயிர்கள் உடல்வி டுத்து நோக்கும் வானை நிறைக்குமே
1089

கொட்டி வீழ்ந்த குருதி மண்ணில் குழைந்து குதிரைக் கால்களில்
ஒட்டி ஓட வகையி லாதே உருள வைக்கும் சறுக்கினால்
முட்டி மோதி முடம தான மதக ரீகள் மலையென
அட்ட திக்கும் வீழ்ந்து பிளிறும் அட்ட காசம் களத்திலே
1090

கண்ட கண்ட இடங்க ளெல்லாம் களத்தில் மனிதக் கூறுகள்
துண்டந் துண்ட மாக வீழ்ந்து துடிது டித்த தன்னவை
பெண்டு பிள்ளை கொண்ட பேரின் பகுதி யாகும் அன்னவை
கண்டு வெய்யோன் கவல்மி குந்தோ! குடதி சையை நாடினான்
1091

காலை தொட்டு மாலை ஈறாய்க் கொண்ட யுத்தங் கதிரவன்
வேலை முற்றி வீட டையும் வரையில் நீண்டு சென்றதே
நீல வானும் நொந்த தந்த நீசக் காட்சி கண்டுமே
ஓல மிட்டே அழுதல் போன்றே ஓங்கி மழையும் பொழிந்ததே 1092

பொங்கி யோடும் வெள்ள நீரில் படிந்த குருதி கரைந்திடத்
தங்கி டாது சேர்ந்து கழியும் செறிந்தி ருந்த எச்சமும்
பங்கு டைத்த பாங்கி லந்தப் புலத்தி னைத்தன் புனலினால்
எங்கி ருந்தோ வந்த வானக் கொடையுங் கூடிக் கழுவுமே
1093

திப்பு செய்த யுக்தி வென்ற சீர்மை திப்பு சார்பினில்
ஒப்ப லான வெற்றி கண்டே உள்ளம் வெந்த மராட்டியர்
தப்பி டாது காலை யெங்கள் தரப்பில் வெற்றி திரும்பிட
ஒப்பும் எந்த ஏதும் செய்ய ஒப்பி னார்கள் கீழ்மையே
1094

இருளைக் கொன்றும் ஒளிப ரப்பி எழுந்து நின்றான் கதிரவன்
ஒருநாள் போரில் உண்ட தோல்வி ஓங்கு வெறியைத் தந்ததால்
மராட்டி யர்கள் மூர்க்க மாக மோத எண்ணி வீரரைச்
செருக்க ளத்தை நோக்கி யொன்றிச் செல்ல வென்று பணித்தனர்
1095

பெருங்கு ழாய்கள் கொண்டு குண்டு பொழியும் பெரிய பீரங்கி
நெருப்பு உண்டை வீசுந் துவக்கு நாசஞ் செய்யும் அன்னவை
பொருந்து வாய மைந்தி டாதிப் போரி லென்ற பொருத்தமும்
இருந்த தாகும் முன்ன ரஃதை ஏற்றி லாது மறுத்தனர்
1096

தோல்வி கண்ட கார ணத்தால் தடுத்த வற்றை எடுத்தனர்
சீல மற்ற செய்கை யென்றே தெரிந்துஞ் சூடு தொடுத்தனர்
சீல மில்லா மாந்த ரென்று தெளிந்த தாலே வேண்டிடில்
காலம் ஓர்ந்து கொள்ள திப்பும் கொணர்ந்தி ருந்தா ரவைகளை
1097

வரம்பு மீறி வரித்த செய்கை வரம்பு மீறச் செய்ததால்
பெரும்பு கையும் தீயும் ஓங்கப் பறந்த தாகும் வெடிகளே
ஒருங்கி வந்த பேர்கள் ஒன்றி ஓடுங்கு மாறு திப்புதும்
பெரும்ப டைக்குத் தலைமை தாங்கப் போரும் ஓடுங்கிப் போனதே
1098

வலிந்து சண்டை வகுத்த வர்கள் வாங்கிக் கொண்டார் பாடமே
நிலம்ப டாத வாறு பாதம் நீசர் பிரிந்தே யோடினார்
புலர்ந்த பகல வன்றன் நாளின் பணிமு டித்தே ஏகுமுன்
கலைந்த தாமக் களத்தி லுயிர்கள் காத்த மராட்டிக் கூட்டமே 1099

ஓடி யோரைப் பின்தொ டர்ந்தே ஓடி டக்கை பற்றிட
நாடி வந்த தாகும் குதிரை நான்கு ஆயி ரங்களாய்
பேடிப் பேர்கள் பறித்தெ டுத்த பெருந்தொ கையுண் பொதிகளும்
கூடி வந்த தாம தற்குங் கூட வென்றுங் கூறுவார்
1100

வெற்றி வாகை சூடித் திப்பு வீர பவனி ஏகினார்
முற்றுந் தம்மின் மதியு ரைத்த முடுகு முறையின் திறத்தினால்
வெற்றி கைகள் எட்டி இன்றும் விதந்து பேசும் பாலுற
உற்ற தாகும் தந்தை தந்த உன்ன தப்போர்ப் பயிற்சியே
1101

முன்ன ரென்றும் நடந்தி டாத முதன்மை கொண்ட போரென
சொன்ன தின்று சரித்தி ரத்தில் சொர்ண வரிக ளாயின
அன்னி யவனை அழித்தொ ழிக்க அல்லும் பகலும் முயல்கையில்
பின்ன மிஃது தம்ம வர்பால் பிறந்த கேடு கொடுமையே
1102

மராட்டியரின் சமாதானத் தூது

மராட்டியர் கண்ட தோல்வி மீதுறத் தொடர்ந்தும் திப்பு
திரட்டிய புகழோ கொள்ளை சேருமாம் பல்பல் கோட்டை
பெருநிலப் பரப்பு காவல் புரியரண் என்றாம் வெற்றி
உருவினில் எதிர்கொண் டாலும் ஏற்றாரோ இலைச்செ ருக்கே
1103

எண்ணினர் முன்னர் மைசூர் இடிந்தொடிந் திட்ட தாக
முன்னிலை நின்றார் திப்பு மன்னருக் குள்ளி ருந்தே
சொன்னதைச் செய்து கப்பம் செலுத்துவோர் தம்மைத் தூண்டிப்
பின்னங்கள் செய்ய முற்றும் பிழைபட்ட தாகு மஃதே
1104

இம்முறை கொண்ட தோல்வி என்றுமே இல்லா வாறாம்
மும்மையும் அறிய வல்ல மேன்மையின் திறங்கொண் டாண்ட
செம்மையால் யுத்த நுட்பம் தெரிந்ததால் மராட்டி யர்கள்
சும்மையைத் துவம்சம் செய்து செயம்பெறக் கருவா கிற்றே
1105

வஞ்சகம் முதலாய்க் கொண்டு வரித்தபோர் தந்த பாடம்
நெஞ்சத்தின் இருளை மாற்றி நன்மனங் கொள்ளச் செய்ய
அஞ்சலொன் றனுப்பி னார்கள் அமைதிக்காம் தூது மன்னர்
வெஞ்சினங் கொன்றார் நட்பை வரித்திட ஒப்பி னாரே
1106

வெற்றிமேல் வெற்றி கொண்டும் வந்திலை அகம்பா வம்தன்
சுற்றமுந் தாமும் ஒன்றித் தாய்மண்ணைப் காக்கும் நோகின்
கொற்றமுங் கொண்ட தாலே கருத்தினி லோர்ந்தார் வேண்டல்
முற்றிய தாகும் போழ்து மராட்டியர் நன்மை கொண்டார்
1107

பிடியுண்ட நிலங்க ளெல்லாம் பற்றிடத் தந்தார் முன்னர்
கொடுமதி நாற்பத் தைந்தின் இலட்சமுந் தரமுன் வந்தார்
கெடுமதி செய்யும் வெள்ளைக் கேடரை யொழித்த லுக்குப்
பிடியிது ஒன்று பட்டால் புலர்ந்திடும் வெற்றி யென்றே
1108

பலங்கொண்ட போதும் தோற்றோர் பங்கினில் தாழ்ந்து போதல்
நலந்தரும் என்ற எம்மான் நபிகளின் வாழ்வின் மாட்சி
நிலைபெறத் திப்பு கொண்ட நற்பெரும் தியாகம் இன்றும்
விலைமதிப் பற்ற தாகும் வரிப்பவர் நலங்காண் தற்கே
1109

போரினிற் பகைகொண் டாலும் பண்பினில் உயர்ந்தா ரென்னும்
சீரினைக் காட்டும் செய்கை சமாதானஞ் செழிக்கத் தம்மின்
பேரினில் கொண்ட பற்றைக் காட்டிய பாங்கு திப்பின்
நேர்மைக்கும் சான்று மற்றோர் நிகழ்வதன் சிகரஞ் சொல்வாம்
1110

முன்னணித் தலைவர் **"ஹரிபந்"** மராட்டியர் படைக்கு வேந்தர்
என்னுமால் பலபோர் கண்ட ஏற்றத்தைக் கண்முன் கண்டு
தன்னையும் விஞ்சி நெஞ்சுள் தாங்கினார் எனநி னைந்தே
கண்ணியம் செய்த காதை கேட்பதற் கேற்ற மாகும்
1111

புலியெனப் பாய்வார் மாற்றுப் படையினுள் பாய்ந்த வாகில்
கிலிகொளும் வாறு வாளைக் கரத்தினுள் சுழலச் செய்வார்
ஒலிபெருக் கெடுக்கும் ஆணை உடன்வரு படைக்காம் வீரர்
தலைவருள் தலைவர் **'ஹரிபந்'** சிலாக்கியந் திப்புத் தேர்வார் 1112

பலமுறை கண்ட காட்சி பதிந்திருந் துள்ளம் மீட்க
நலம்பெறச் சமாதா னத்தின் நிலைவரத் திப்பு சுல்தான்
நிலந்தரு வரிகொள் வோராய் நியமித்தார் **"கஞ்சன் கூடு"**
வலிந்தவர் தந்த செய்கை வரலாற்றில் பதிவா கிற்றே

1113

வீரத்தை வீரம் போற்றும் வரலாறு அதுவா கிற்று
சாருமெப் புலமென் றாலும் திறமையை ஏற்குங் கோன்மை
சீருமை மனிதப் பண்பின் சிகரமாம் திப்பு சுல்தான்
பேருறைப் பலவற் றுள்ளே பதிந்தவோர் நிகழ்வு மாகும்

114

குலப்பெருமையும் குறுகிய மனமும்

மராட்டியர்கள் நிஜாமுடனே ஒன்று கூடி
மைசூரின் வடபுலத்துட் புகுந்து கொள்ளச்
சிரமமின்றிக் கரங்கொடுத்தான் **"தார்வார்"** கோட்டை
தனை**"ஹைதர் பக்ஷி"**யெனும் தளகர்த் தன்பின்
அறிந்ததுமே திப்புசுல்தான் படையைக் கூட்டி
"அதோனி"யெனும் நிஜாமுடைய கோட்டை - தன்னை
நெருங்கியதும் கோட்டைக்குத் தலைவன் அஞ்சித்
தூதுவனைப் பேச்சாட அனுப்பி வைத்தான்

1115

நாயகனாம் கோட்டைக்குத் தூது விட்டோன்
"நவாப்முஹம்மத் ஜாங்"நவாபின் மகளின் நாதன்
நேயவுடன் பாட்டிற்கு வந்த தாலே
நயந்ததனை ஏற்றதிப்பு வந்தோன் நோக்கிக்
காய்தலிலை எம்மினுக்கு **"ஜாங்"கி** னோடு
குற்றமெலாம் நவாபிடந்தான் எமக்குத் தீங்கு
தூயமன மற்றவராய் இயற்று கின்றார்
தெளிவுகொள்வீர் எனவுரைத்தே மீண்டுஞ் - சொல்வார்

1116

தருமத்தின் மீதுபற்று தார்மீ கத்தில்
சிறிதேனும் நம்பிக்கை மனித நேயம்
ஒருதுளியும் இல்லாது பிறரோ டொன்றி
உபத்திரவம் செய்வதையே தொழிலாய்க் - கொண்டார்
சரியான பாடமொன்று வேண்டு கின்ற
தாகத்தைத் தணிப்பதற்கே நாமும் வந்தோம்
உருவாகும் சமாதானம் நிஜாம்வி ரும்பின்
உதறிடினோ யுத்தம்தான் தீர்ப்பாம் என்றார்

1117

மன்றாடி யுத்தத்தைத் தவிர்க்கக் கூறி
முயற்சியிலே வெற்றிகண்ட தூதன் தன்னை
ஒன்றியொரு தூதுவனை நிஜாம்பால் ஏக
உவக்கவேண்டும் எனப்பணிந்தான் அவரும் ஒப்ப
சென்றாரோர் தூதுவரும் **"கியாஸ்மு ஹம்மத்"**
தர்மவழி செல்லுமுயர் பண்பார் கூடச்
சென்றதுவோர் ஓலையும்பல் பரிசி லோடு
தூதுவருங் கையளிக்க நிஜாமு மேற்றார்

1118

இதுகால வரைதொடரும் இணக்க மின்மை
ஏற்பட்ட தகராறு வேற்று மைகள்
அதனாலே யுண்டான பழிக ளோடும்
அதற்கான பரிகாரம் அனைத்தும் தாங்கிப்
புதிதான உறவுக்குக் குடும்பத் துள்ளே
பங்குறினோர் திருமணமும் உவப்பா மென்றே
மதிகூரு முறையிலந்த ஓலை தன்னை
மன்னர்திப்பு முடித்திருந்தார் நிஜாம்ப டித்தார்

1119

ஓலைதனைப் படித்துமுடித் திட்ட பின்னர்
ஓலைதாங்கி வந்திருந்த செய்தி யொன்றைச்
சாலுமது பற்றிப்பெண் புலத்தி னோரைச்
சந்தித்துக் கருத்தறித லென்றே தம்மின்

கால்தொடுத்தார் நிஜாம்அந்தப் புரத்தி னுக்குக்
கணப்பொழுதுள் திரும்பிவந்தார் கண்ணில் கோபம்
சூல்கொண்ட தாய்வெறுப்புக் கொப்ப ளிக்கச்
சுடுவார்த்தை வாயிருந்து பறந்த தன்றோ
1120

பாராண்ட பரம்பரைநாம் தலைமு றைகள்
பலப்பலவாய் பேர்பெருமை கொண்ட பேர்கள்
சீர்சிறப்பே உன்னதமாம் எங்க ளுக்கு
திப்புவுக்காய் என்னவுண்டு தந்தை ஹைதர்
ஊரறியா திருந்தவொரு சிப்பாய் எங்கள்
உறவுகொள விரும்பியதேன் கூச்ச மற்றே
தேருமிதைப் போய்ச்சொல்லும் என்றார் பின்னர்
சேரவுள்ள சுமையறியார் செருக்குற் றாரே
1121

வார்த்தைகளில் கோத்திருந்த அகம்பா வத்தை
வந்திருந்த தூதுவரும் உணர்ந்தா ராகக்
கோத்திரத்தின் உயர்வைமட்டும் கருத்தி லுன்னிக்
குலப்பெருமை பேசுவது கீழ்மை கற்றோர்
சாத்திரங்க ளறிந்ததனால் மேன்மை கொள்வார்
செய்நலத்தா லுயர்வுறுவோர் சமூக மேலோர்
நீத்தாலும் உயிருடலை நிலைப்பர் சான்றோர்
நிஜாமிதனை யறியாத நிலைமை கண்டார்
1122

கிடைத்ததொரு சந்தர்ப்பம் சமாதா னத்தின்
கொள்கையிலே வெற்றிபெற யதைவி டுத்தே
படைநடத்தி மராட்டியரோ டிணைந்து மைசூர்ப்
புலமொன்றில் நாசகாரக் கொடுமை செய்தார்
கிடைக்குமொரு சந்தர்ப்பம் அதோனிக் கோட்டை
கொண்டதங்கள் குடும்பத்தை மீட்டெ டுக்க
முடக்கிவிடின் சுல்தானின் புலனை மைசூர்
மட்டத்தில் எனநினைந்தார் மதிகெட் டாரே 1123

நினைந்தபடி நடந்ததது திப்பு சுல்தான்
நடப்பதனை தெரிந்திருந்தார் அறியார் போன்றே
மனுக்குலத்தில் பெண்மைக்கு முதன்மை காட்டும்
மனங்கொண்ட பேரதனால் தப்பிச் செல்லும்
அனைவரிலும் மாதர்தொகை அதிகம் என்று
அறிந்திருந்தார் போவோரை விட்டு வைத்தார்
எனினுமென்ன நிஜாம்தனதாம் அடாவ டிக்கை
இடைவிடாது செயத்திப்புச் சினங்கொண் டாரே
1124

பதினெட்டே நாட்களுக்குள் அதோனிக் கோட்டை
பிடிபட்ட தாகுமதில் மணியும் பொன்னும்
அதியதிக மாயிருக்கக் கைக்கொண் டஃதை
அனுப்பிவைத்தார் சீரங்கம் சீரங் கத்தில்
வதிகின்ற ஏழையர்க்குக் கணிச மான
வாறவற்றில் பங்கீடுஞ் செய்ய வேண்டி
உதித்ததுவே ஆணைதிப்பு வாயி ருந்தே
உடன்நடந்த தாமதுவும் ஊர்போய்ச் சேர்த்தே
1125

புதிய கவர்னர் கான்வாலிஸ்

மாங்களூர் ஒப்பந் தத்தை முடித்தகால் தொட்டுத் தம்மின்
பாங்கினில் படைப லத்தைப் பெரிதாக்கக் 'கொம்ப னீயார்'
சங்கற்பங் கொண்டு ழைத்தார் சாதித்தும் விட்டார் போழ்தும்
தங்கிடார் திப்பே தம்மைச் சூழ்பகை என்ப தாலே
1126

திப்புவின் நடவ டிக்கை தொடர்ச்சியாய் வெள்ளை யர்க்கோ
ஒப்பிலாப் பயத்தை நாளும் உண்டுசெய் திட்ட தோடே
ஒப்பிலார் மராட்டி யர்கள் உடன்நிசாம் ஆனோர் தம்மின்
உட்பகை யோரின் ஆட்சி உறும்பலம் காணல் வேண்டார்
1127

புதியதாய் ஒருக வர்னர் பறங்கியர் தலைமை ஏற்க
விதித்தனர் தலைமைப் பேர்கள் வெள்ளையர் பிரிட்டிஷ் காரர்
மிதித்திடும் போதே சென்னை மண்ணினைக் **'கான்வா லீஸ்'**ஸ்ம்
கொதிப்பொடு சபத மொன்றைக் கூறினார் அவரே கவர்னர் 1128

ஆகஸ்ட்டு யெண்பத் தாறே அவர்பதம் பட்ட நாளாம்
வேகமோ தீயின் பாங்கு வலிந்தெனும் போர்தொ டுத்துச்
சாகடித் திடுவேன் திப்பின் சரித்திரம் முடிப்பே னென்று
வேகினார் நெஞ்சத் துள்ளே வெந்தழல் வார்த்தை கோத்தார்

1129

முன்னவர் போலும் வாழா மந்தராய்ச் சோம்பி நில்லேன்
தன்மானத் தோடு என்றன் தலைமைக்குப் பெருமை சேர்ப்பேன்
என்னையீங் கனுப்பி வைத்த ஏற்றத்தை மறவேன் என்றார்
கன்மனங் கொண்ட கவர்னர் கான்வாலிஸ் சூழு ரைத்தார்

1130

புதியதாய்த் திட்ட மேதும் பூண்டிலார் முன்னர் போலும்
அதிகாரப் பதவி கொண்டோர் அடிதொடர்ந் திருந்த திப்பு
எதிரிகள் தம்மைத் தம்பால் ஈர்த்திடச் செய்த செய்கை
அதேவழி தானும் பற்றி ஆற்றிட முடிவுங் கொண்டார்

1131

பகைவரின் பகைவர் தம்மைப் பகைத்தலைக் கருவாய்க் கொண்டு
வகைசெயின் ஒருகு டைக்கீழ் வளைத்திட அதனால் வெற்றி
வகைப்படும் அவரோ டொன்றின் வீழ்ந்திடும் மைசூர் என்று
பகையினைப் பகையால் வெல்லப் பறங்கியர் முடிவு கொண்டார்

1132

கைக்கூலிப் படைக ளோடும் கைக்கொண்ட பிரதே சத்தைக்
கைக்கொளில் ஒவ்வொன் றாகக் கடைசியாய்த் திப்பின் கோட்டை
கைப்படும் தம்வ சத்தில் கான்வாலிஸ் திட்ட மஃதாம்
பொய்ப்பட வில்லை எண்ணம் பின்னது நோக்கு வாமே

1133

பற்பல வாறாய்த் திட்டம் போட்டிட்ட போதும் முன்னர்
சொற்பலம் மிக்க பேராய்த் தலைமைகொண் டிருந்த **"சேர்ஜோன்"**
மற்றுமோர் யுக்தி தன்னை மொழிந்ததும் "கான்வா லீஸ்"ஸீம்
முற்றுமே மறுத்தார் பின்னர் முடிவினை மாற்ற லானார்

1134

"கரைப்பவர் கரைத்தாற் கல்லும் கரையுமாம்" என்ப தொப்பச்
செருக்கொடு திட்ட மிட்ட "ஜெனர"லும் சற்றுச் சாய்ந்தார்
ஒருத்தரம் திப்பு வோடும் உரைசெய்து பார்த்த லேதாம்
கருத்தினில் "சேர்ஜோனு"க்குத் தோன்றிய உபாய மாகும் 1135

"ஜெனரல்ட்ரேக்" என்னும் மிக்க திறன்கொண்ட தளகர்த் தாவைத்
தனதுநற் றூத ராகச் சென்றிடப் பணித்தார் வாலிஸ்
பொன்னொடு பெண்பே ராட்சி பெறுவதென் றாகில் சாயா
மன்னரொன் றில்லை யென்று மனத்துன்னித் தோல்வி கண்டார்

1136

பெறுமதி மிக்க தான பரிசுக ளோடும் கண்ணைப்
பறித்திடு தேவ தைபோற் பெண்ணொன்றுந் துணையாய்க் கொண்டே
உறுத்திய சேதி கூட்டி உடனகன் றிட்டார் தூதர்
முறைப்படி அவரைத் திப்பு வரவேற்றார் உபச ரித்தார்

1137

"வந்ததென் காரணம்தான் விளம்புக என்றார்" மன்னர்
தந்தனர் கொண்டு வந்த தனைத்தையும் ஏற்றார் திப்பு
"வந்தது நட்பு நாடி வேறிலை" என்ன பின்னென்
வந்திடும் வார்த்தை யென்றே வியப்பொடு செவியுற் றாரே

1138

புதியதாய்ப் பதவி யேற்றுப் பாரதம் வந்தா ரென்று
முதலிலே அறிந்தி ருந்தார் முன்னொரு பொழுது தோற்றே
ஒதுங்கிய பேர்தான் பொல்லா ஒருமை கொண்ட தீயர்
சதியினில் வல்லா ரென்பது) திப்பறிந் திட்ட பாடம்

1139

நட்பென்று சொன்ன போழ்து நேர்ந்ததோர் ஐயம் சூழ்ச்சி
உட்பதிந் துள்ள தென்றே உள்மனம் உறுத்தல் செய்யும்
கட்புலம் உண்ட தந்தக் கோலத்தில் தொடரக் கேட்டார்
திட்டங்க ளெடுத்து ரைக்கத் திப்புமன் சினங்கொண் டாரே

1140

"வங்காளம் சென்னை பம்பாய் வந்தெம தாட்சி யுள்ளே
தங்கிடச் செய்யத் திப்பு துணைசெய்ய வேண்டும் கொள்ளில்
பங்கரை அனைத்தி லும்தான் படைதனில் முதன்மை தேரல்
உங்களின் விருப்புக் காகும்" என்றதும் தீபொங் கிற்றே

1141

"ஒப்பிடில் சீரங் கத்தை ஒப்பந்தம் செய்த லுக்காய்த்
தப்பாது வருவா ரெங்கள் ஜெனரல்"என் றுரைப்பக் கேட்டே
"ஒப்பினேன் நட்பை ஆனால் உங்களின் ஜெனரல் வேண்டும்
தப்பினுக் கொப்பேன்" என்றார் தொடர்ந்துமே வார்த்தை கோத்தார்

1142

"கல்கத்தா சென்னை பம்பாய்த் துறைமுக மெங்கும் உங்கள்
பல்வகை யுத்தப் பாண்டம் பெருந்தொகை யாக: நீங்கள்
சொல்லுங்கள் சேர்ப்ப தென்ன தேவைக்காம் எமது மண்ணைக்
வெல்லவென் றன்றோ வேறு விருப்பமென்" வினவி னாரே
1143

"வல்லவர் நாங்க ளீங்கு வேரூன்றி னாலோ நீங்கள்
நல்லது பெறுவீர் மைசூர் நிலந்தனி நாடொன் றாகும்
தொல்லைக ளில்லை நாட்டில் சரியாதி உங்கள் கையில்
நல்லதே நாடி னோம்நாம் நாட்டமென்" னுரைப்பீ ரென்றார்
1144

"சொன்னதை மீண்டும் நானே சொல்கிறேன் விபரங் கேள்மின்
என்னரும் மக்கள் மீதே எனக்குள பாசம் வந்தோர்
தன்னள வில்லை நட்பைத் தொடர்வது வேறு மண்ணை
கன்னமிட் டோட வந்தோர் கருத்தினுக் கொத்தல் வேறு"
1145

"இடம்வலம் தெற்கு மேற்கு இணைத்துவான் பூமி மட்டும்
கொடுப்பமென் றுரைத்திட் டாலும் கால்பதி நிலத்தை யேனும்
கொடுத்திடேன் அடிமை கொள்ளக் கான்வாலிஸ் அறிகி லாரோ
படித்தமுற் பாடம் ஏனோ பதிந்திலை நெஞ்சில்" என்றார்
1146

"என்றனின் தந்தை ஹைதர் இன்னுயிர் போக்கி இந்த
மண்ணினைக் காக்கப் பட்ட மிகப்பெரு சோத னைகள்
எண்ணலில் அடங்கா மண்ணின் இறைமையைக் காத்து நின்றார்
என்பணி யதுவே தாதை இடைவிட்ட பணிதொ டர்தல்"
1147

"பகைகொண்ட போதும் என்றன் பாரத மன்னர் தம்மை
அகங்கொண்ட பேர்நான் மாற்றார் அளித்திடும் பிச்சைக் காக
வகைசெயேன் அழித்தொ ழிக்க வாய்ப்பிலை யுங்க ளுக்கும்
தகாததைச் செய்யேன்" என்றார் திரும்பினார் வந்த தூதர்
1148

நடந்தவை யனைத்தும் சொல்ல நினைந்தது தவறிப் போன
படித்தலத் திருந்தார் வேங்கைப் புலியெனச் சீற்றங் கொண்டார்
கிடைத்ததோர் வாய்ப்பு திப்பைக் கூறுபோட் டிடலா மென்ற
அடித்தளம் நொருங்க வாலிஸ் அடைந்ததோ ஏமாற் றந்தான் 1149

அணைத்திட முடியாக் கான அக்கினி ஒக்கும் பேராய்த்
துணிவுடன் எதிர்த்துத் தம்மைத் துரத்திட எண்ணு வார்மேல்
அணிதிரண் டிட்ட போழ்தும் ஆனவோர் நிமித்த ஏது
கணித்திட இயலா வாறு 'கான்வாலிஸ்' கருத்தில் ஓர்ந்தார்
1150

நிசாமினைத் தமது கைக்குள் நிலைத்திட வைப்ப தோடே
இசைந்திடில் நாநா சாகிப் இணைத்திட வேண்டும் கூட
இசைவினைக் கொண்டு பிரான்சின் இனத்தவர் தமையுஞ் சேர்த்தால்
இசைந்திடும் வெற்றி தம்பால் என்றவர் திட்ட மிட்டார்
1151

நண்பராய் முதலில் காட்டி நாள்கடந் தேக வாய்ப்பும்
உண்டான போது காலை உருவிடும் நோக்கி னோடே
உண்டான திட்ட மஃதாம் ஒருவரோ டொருவர் தம்மைச்
சிண்டுமு டித்த லும்பின் திட்டமும் அதனுள் சேரும்
1152

பிரித்தாளும் யுக்தி வெள்ளைப் பறங்கியர் கண்ட கொள்கை
விரிந்தவிப் பூப்ப ரப்பில் வென்றாட்சி செய்த நாட்டில்
உரம்விடச் செய்தா ரின்றும் ஊன்றிய வித்து வெவ்வே
றுருவத்தில் சீர ழிக்கும் ஒருபெரு நோயென் றாச்சே
1153

இந்துக்கள் முஸ்லி மோடும் முஸ்லிம்கள் முஸ்லி மோடும்
இந்துக்கள் இந்து வோடும் இருநாடு ஒன்றோ டொன்றும்
பந்தத்தை அறுத்து வாழ்ந்தால் பலன்தமக் கதிக மென்னும்
தந்திரம் வென்ற தன்றும் சிறுமையின் கருவா கிற்றே
1154

முன்னரே திப்பு வோடு முரண்பட்டே இருந்த பேர்கள்
சொன்னதும் எதிர்க்கத் தம்பால் சேருவர் கொள்ப வற்றில்
சொன்னவா றளிப்போ மென்றே கூறியே ஆசை என்னும்
எண்ணெய்யை யூற்றி யூற்றி எரித்திட எண்ணங் கொண்டார்
1155

கிடைப்பதில் மூன்றி லொன்றைக் கொடுப்பதாம் அனைத்தி லும்தான்
படைப்பலம் ஓங்கச் செய்தால் போதும்நாம் "கும்ப னீ"யார்
எடுத்ததை முடிப்போம் வெற்றி எம்வச மாகும் என்றே
கொடுத்திட நினைந்தார் வாக்குக் கொள்கையும் அதுவா கிற்றே 1156

மந்திரச் சபையைக் கூட்டி முன்வைத்தார் தமது திட்டத்
தந்திரந் தனைய வர்கள் சேர்ந்தொன்றி ஏற்க எல்லாம்
எந்திரக் கதியில் மாறி இயங்கின பொருத்த மானோர்
பிந்திடார் காலம் நோக்கிப் பறந்தனர் வெற்றி கண்டார்
1157

பறங்கியர்க்குக் கற்பித்த பாடம்

பெரும்ப டையைக் கூட்டி வெள்ளைப் பறங்கி யர்கள் வருவதாய்
அறிந்த திப்பும் அஞ்சி டாதே ஆன படைகள் கூட்டியே
வரும்பு லத்தை நோக்கித் தனது வாளுக் கிரையு மூட்டவே
பொருந்திச் சென்ற பாங்கு ரைப்பின் புயப லத்தைச் சாற்றுமாம்
1158

துப்ப றிந்து வந்த வர்கள் சொல்லு வாரே பறங்கியர்
தப்பி லாது மும்ம டங்கு சேர்ந்தி ருப்ப ரென்றுமே
ஒப்பி யதனுக் கேற்ற வாறு யுத்த வியூகம் கொண்டதால்
கப்பி வந்த யுத்த மேகம் கரைந்த ழிந்து போனதே
1159

பெருவெ ளிப்போர்க் களத்தி லிரண்டு புறத்து வீர ரெதிரெதிர்
உருவிக் கையி லெடுத்த வாளும் உண்டை தள்ளும் பொறிகளும்
பெருக்கி யெடுத்து வந்தி ருந்தார் பொருதி அழிக்கும் நோக்கினார்
செருக்க ளத்திற் கடலி ரண்டு திக்கி லுற்றல் போலுமே
1160

பரியி லுற்ற வாறு வீர பராக்கி ரத்தி னுருவமாய்
உருவிக் கையி லெடுத்த வாளும் ஒருக ரத்தில் சேணமும்
பொருந்த வந்தார் திப்பு சுல்தான் படைநி லையை நோக்கவே
விருந்தை யுண்ணக் காப்ப வர்போல் வீரர் கண்டார் வேங்கையே
1161

எதிரி வீரர் தமைய ரிந்தே இலாதொ ழிக்கும் பாங்கினில்
உதிப்பெ டுத்த தாமோ வென்ன எண்ணும் வாறு நின்றனர்
குதிநி லத்தில் படாத வாறு குதிரை எகிறிப் பாய்ந்திடக்
குதிரை வீரர் அணிவ குத்தார் கட்ட ளைக்குக் காத்துமே
1162

அணிகள் நூறு பீரங் கிகளும் ஆங்கு களத்தி னோர்புறம்
இணைந்தி ருந்த வீரர் சகிதம் இலக்கு வைத்துக் காத்தன
கணக்கி லாத தொகையா மன்ன குண்டு கள்பின் சேர்ந்தேதம்
பணிக்கு நாங்கள் தயாரென் றோது பாங்கிற் திப்பு நோக்கினார்
1163

கண்டி லாத புதுமை யன்று களத்தில் திப்பு கொணர்ந்தவாம்
விண்டு சென்று வளியுட் புக்கி வேக மறியா வாகினில்
கொண்ட திசையில் குறித்த புலத்தைக் கூறு செய்யுந் "தீக்கலம்"
உண்டி லாத தாகும் முன்னர் உற்ற தன்று முதன்மையே
1164

ஏவி விட்ட மறுக ணத்துள் இரண்டு கற்கள் தாண்டியும்
ஏவி விட்ட பேர்நி னைந்த எல்லை யின்பால் இடியெனத்
தாவி யழிக்குந் திறன்மி குந்த தாகும் என்றே விளம்புவார்
"ஏவு கணைக" ளாம வைகள் எண்ணும் பணியை முடித்திடும்
1165

இகச்ச ரீத மீதி லின்றும் ஏற்ப வர்க ளேற்றிடும்
மிகைத்த புகழின் மேன்மை பெற்ற மனித ஆற்றல் சாதனை
செகம்பு கழ்ச்சி செய்யும் திப்பு தான தற்கு மூலவர்
வகைத்த ததனின் வழிதொ டர்ந்தே விண்க லன்கள் ஆனதே
1166

படையை யோர்கண் பார்த்து நெஞ்சில் பூரிப் புற்ற பின்னவர்
விடைகொ டுத்தார் வீரர் தமக்கு வளியை விஞ்சி னாரவர்
அடுத்த டுத்து வேறு வேறாய் ஆணை பலவாய் அறைந்திடும்
விடுத்த லொன்றே வார்த்தை வாயுள் வெளிப்ப டப்பின் செயற்படும்
1167

ஒரேதி சையில் படைகள் செல்ல ஆணை யிட்டார் வெள்ளையர்
மறுபு றத்தில் கட்ட ளைகள் வேறு வேறு வாகின
விரோதி கள்பால் முன்பு றத்தில் வேக முற்ற தோர்படை
பிரிந்து சுற்றி வளைத்த வைகள் பற்ப லப்போர்ப் படைகளே
1168

குண்டு மாரி யிருபு றத்துங் கொட்டி யாட்சி செய்திட
அண்டி விட்ட தாம்ப டைகள் அரிதொ ழில்கை வாட்படும்
துண்ட துண்ட மாங்க ளத்தில் தலையு டல்கை கால்களே
கொண்ட பசியைத் தீர்த்த தேமண் குருதிப் பாலும் மாந்தியே 1169

சட்டென் றோர்பே ரொலியெண் திசையுந் திடுக்கிட் டசையச் செய்தது
பட்டென் றோர்க ணத்தி லனைத்தும் பலமி ழந்த பாங்குறும்
பட்ட தில்லைச் செவிக ளிந்தப் புதிய தான அனுபவம்
மட்டி லாதே உயிர்ப றிக்கும் மாயக் குண்டம் தீக்கலம்

1170

வீழ்ந்த இடத்தில் வெடித்துச் சிதறி வட்டத் தோர்பேர் எல்லையைத்
தூள்தூ ளாகச் செய்த தோடு சிதறி யண்டைப் புறமெலாம்
பாழ்ப டுத்தி யழித்தொ ழிக்கும் பணியில் முதன்மை கொண்டதே
கீழைத் தேய நுண்பு லன்கொள் கீர்த்தி திப்பு சாதனை

1171

பகல வன்றன் ஒளிகை வாளில் பட்டி லங்கும் பார்வையை
அகலச் செய்யும் வாறி ரண்டும் அண்டி மோத மின்னலை
மிகைத்த தாமோ என்னு மாகு மிகுந்த தெங்குஞ் சமர்க்களம்
பகலைப் பகலில் பதித்த தன்ன பொலிந்த தென்ன புதுமையே

1172

படையி டையிற் புகுந்து எதிரிப் படையின் வீரர் குழாத்தினைத்
துடிது டித்து மாண்டொ ழிக்கத் தேடித் தேடி அரிகுவார்
மடிந்து வீழும் பேர்கள் தாண்டி மிஞ்சி யுள்ள வீரரைத்
தொடர்ந்து சென்று கொன்று வெற்றி திப்ப டைந்தார் களத்திலே

1173

வேங்கை யின்கைப் பட்ட சிறிய விலங்கு மறுகண் மாய்ந்திடும்
பாங்கு மன்னர் திப்பு முன்னில் படுப வர்க ளாகினார்
நீங்கி லாரோ இல்லை பார்வை நின்ற இடத்தில் சரிந்தனர்
ஓங்கி டும்வாள் பதிவ தொன்றும் உடல்வி டுத்த சிரசுடன்

1174

சாவைக் கையில் தாங்கிப் பிறரின் சன்னி திக்குப் பகிர்வதாம்
தேவை யிவர்க்காம் ஏனென் பணியை இவர்ப றித்தா ரென்றுமே
பூவிலுயிர் பறிக்கும் தெய்வப் பணியி யற்றுந் தூதுவர்
நாவு ரைப்ப ராமோ வென்னு நிலைமை காட்டிச் சாடுவார்

1175

சிறுதொ கையே திப்பு வீரர் சிறிய பொழுதுள் அன்னவர்
தறிகெட் டோடு வார்கள் எங்கள் தரப்பி லுற்ற தாக்கினால்
உறுதி வெற்றி எம்ம வர்க்கென் றுறுதி யோடு வந்தவர்
இறுதி வேளை எதிர்க்க வொண்ணா இழிநி லைக்குள் ளாகினார்

1176

நிலைமை முற்றும் பாத கம்சேர் நிலைக்குள் ளாக வெள்ளையர்
நிலைகு லைந்தார் தப்பி யோடும் நிலைமை கொண்டார் தலைவர்கள்
விலகி யுயிரைக் கரம்பி டித்தே "ஓடு ஓடு" என்றனர்
கலக நிலைமை அவர்கட் குள்ளே கூடி டப்பாய்ந் தோடினார்

1177

சிறிய படையென் றாகி னாலும் சிறந்த யுத்த யுக்தியால்
முறிய டித்தார் பெரும்ப டையை மறக்க வொண்ணாப் பாடமே
சிறகொ டிந்த பறவை யானார் தேடி வந்து தோல்வியை
உறுதி கொள்ள ஒருவ ரின்றி ஓடி னாரே புகலிடம்

1178

காஸிகானுடன் ஒரு கலந்துரையாடல்

இரவுநெடு நேரங்கண் துஞ்சா வாறே
இருந்ததுகண் டவரண்டை காஸி கானும்
பொருந்துமென்ன காரணமென் றறிய வேண்டிப்
போய்வினவத் திப்புரைப்பார் ஐய மொன்று
உறுத்துதென்றன் மனத்திலென உடனே கான் "என்
னுரையுங்கள் சுல்தானே" என்றார் சொல்வார்
வருவாரோ இரவினிலே எம்மைத் தாக்க
வெள்ளையர்கள் என்பதுதான் வேறில் லென்றார்

1179

தருமமறி யாதவர்கள் செய்வார் நாமும்
தயாராவோம் எனச்சிங்கம் வேங்கைக் கோத
உருமாறிற் றவரெண்ணம் செய்கை யாக
உறக்கமுயிர் பெறாதுறக்கம் கொண்ட தன்றோ
வருவாயிற் பொறிகொண்ட வாகாம் உள்ளே
வந்ததும்பின் மீளவெண்ணா வழைத்துக் கொல்ல
உருவான தோர்யுக்தி பாச றைகள்
ஒளிதவிர ஒன்றுமற்ற வெறுமை கொள்ளும்

1180

எண்ணியவா றுண்மையென வாகிற் றாங்கும்
எதிரிகளும் இரவினிலே தாக்க வெண்ணிக்
கண்ணுறங்கார் காத்திருந்தார் மூன்றாஞ் சாமம்
கடுகுமட்டும் பொறுத்திருந்தார் பகற்போ துண்ட

புண்ணுளத்தில் பற்றியெரி கொண்ட தாலே
பேரழிவுந் தோன்றியதால் பொறுக்க மாட்டார்
மண்ணுமுண ராதபடி அரவ மற்றே
மிகவண்மித் தரித்தார்கள் நோக்கம் பார்த்தார்
1181

காரிருளில் பதுங்கினரே வீர ரெல்லாம்
கண்டில்லா வாறெவரும் வழியில் கூட
ஓரிருவ ரேனுமிலை உறங்குங் கோலம்
ஒன்றியவர் உள்ளத்தால் பூரித் தார்கள்
கூரியவாள் கரந்தாங்கத் திப்பு வீரர்
கண்டாலும் எதிரிகளைக் கட்ட ளைக்குப்
பார்த்திருந்தார் பாய்வதற்குப் பதுங்கு கின்ற
புலிப்படைபோல் பகைப்படைகள் மீதி லாமே
1182

"தாக்குங்கள்" என்றவொலி வெள்ளை யர்பால்
கேட்டதது கேட்டதுமே குபுகு பென்று
தாக்கியழித் திடுவேகம் தலைகால் முற்றும்
தாங்கிவெறி கொண்டுபுகுந் தருக்கர் கூட்டம்
வாகுவரும் வரைகாத்து நின்ற வீரர்
வந்தவர்கள் தமைநுழைய முற்றும் விட்டு
ஏகாது நின்றார்கள் எகிறிப் போனோர்
எதிர்ப்பின்றித் திகைத்தார்கள் எதுவுந் தோணார்
1183

நஞ்சுண்ட மீன்குளத்துள் அலைதல் போல
நாடிநாடிப் பாசறைக ளொவ்வொன் றாக
வெஞ்சினத்தின் பாற்பட்டு வந்தோர் தேடி
விடாதொன்றும் அலைந்தார்கள் வெறுமை கண்டார்
அஞ்சினரோர் சூழ்ச்சியெம்மைச் சூழ்ந்த தென்றே
ஆளரவங் காணாத கார ணத்தால்
பஞ்சில்தீ பற்றியதோ வெனுமால் சற்றுப்
பொழுதிலொரு பிரளயமாங் குருவா கிற்றே 1184

வந்தவழி யடையுண்ட தோர்நொ டிக்குள்
வளைத்துப்பெரு வெள்ளம்போல் உள்நு ழைந்தோர்
எந்தப்புற மேகிடிலும் பேரெ திர்ப்பின்
இடைப்பட்டார் ஏதுமறி யாது நின்றார்
சந்தர்ப்ப மீதென்றே திப்பு வீரர்
திகைப்படங்க முன்பகைவர் தலைகள் சீவ
முந்தினரே ஒருவரைமுன் னொருவர் காண
வராகனிடை வேங்கைப்படை புகுந்த வாறே
1185

இனித்தாக்குப் பிடிக்கவிய லாதே யென்னும்
இடரோங்க வெள்ளையர்கள் தப்பி யோடும்
மனங்கொண்டார் புறமுதுகு காட்டி யோடும்
மானமிலாச் செயலுக்கு முகங்கொ டுக்கத்
தனக்குவந்த தீங்கினைத்தன் பாலுற் றோரின்
துணிவாலும் தியாகத்தின் பொருட்டி னாலும்
நினைத்தவர்க்கே திருப்பிவிட்டார் திப்பு சுல்தான்
நிரந்தரமாய்ப் புகழ்கொண்டார் வீரத் தாலே
1186

கோபக் கனலிடை கான்வாலிஸ்

போனது மானம் வெட்கம் பறந்ததால் எம்ம வர்க்கே
ஈனமும் பற்றி யெம்மை இழிவுறச் செய்த தெண்ணம்
கானல்நீர் ஆன தென்னே! கடுகள வேனும் யுத்த
ஞானமற் றோர்க ளாலே நினைந்திடக் கூசு தென்றார்
1187

ஒன்றுக்கு மூன்றாய் என்று ஒருபெரும் படையைக் கூட்டிச்
சென்றிருந் தாலும் தோல்வி தோட்சுமை யான தெம்மோர்
பன்றிகள் கூட்டம் போலும் புகுந்துளார் சுற்றி நின்று
கொன்றுளார் என்றே கோபக் கனலிடை கொதித்தார் வாலிஸ்
1188

எதிரியின் பலம றிந்தும் இரவினில் படைந டத்தி
மதியறு செயலா லுற்ற மாபெரும் தோல்வி எங்கள்
விதிதனைக் கூடத் திப்பு வகுத்தது வாறாம் என்றார்
மிதிதண லுற்ற ஓநாய் மிரண்டோலம் விட்ட வாறே
1189

"மடோவ்"வை நம்பி னேன்நான் மிகப்பெருந் தவறாம் இன்று
பிடியுண்ட பகுதி யெல்லாம் பறியுண்டு போன தென்று
பிடிபடும் மீண்டு மென்றே பதறினார் கவர்ணர் வாலிஸ்
அடியுண்ட நாகம் போலாம் அவர்நிலை ஆகிற் றன்றே
1190

"ட்ரேக்"கெனும் தளகர்த் தர்பால் சொல்நெருப் பாக வீசி
யார்க்குமே அஞ்சா வாலிஸ் என்னதான் செய்வ தென்றே
கார்க்குகை யாக வுள்ளங் கனத்திட ஒன்றுந் தோணார்
வேர்த்துடல் பதற நின்றார் வீண்வார்த்தை யுரைக்கும் நாவே
1191

யாரவர் திப்பும் என்ன தைரியம் வேண்டும் என்றன்
போர்க்குணம் அறியா தாராய்ப் பகைவளர்த் திடமு யல்வார்
கார்கவிழ்ந் தாலும் வெய்யோன் கதிர்வரும் இன்று தோற்றால்
வேரொடு சாய்க்கும் வேளை விரைவினில் கனியும் என்றார்
1192

பொறுத்திட வியலாத் தோல்வி பொருள்மனு நட்டம் வெள்ளை
நிறத்தவர் இனத்துக் கென்றும் நீங்கிடாப் பழியிம் மாட்டு
நிறுத்திட வில்லை யாயின் நாம்நிலை பெறுதல் சாலா
திறம்படு திட்ட மொன்றால் திப்புவை அழிப்போ மென்றார்
1193

"பேஷ்வா" நிசாமி ரண்டு பேரையும் வலையுட் சிக்கப்
பேசுதல் வேண்டும் வேண்டும் பொன்னெலாம் தருவொ மென்றே
ஆசையைக் காட்டி நம்பால் அழைத்திடில் பலமுண் டாகும்
காசென்றால் அடங்கும் பேயும் கொடுத்திடு "ட்ரேக்"என் றாரே
1194

"நிசாம்" "வோலிஸ்" சந்திப்பு

நிசாமினைத் தானே சென்று நியாயங்கள் எடுத்துக் கூற
இசைந்துமே சென்றார் ஆங்கு நினைந்ததை விஞ்சு மாறு
வசைந்துமே தந்தார் காக்கும் வரமொன்று கிடைத்தார் போன்றே
பசித்தவன் பாலுஞ் சோறும் பெற்றதாய் மகிழ்ந்தார் "வோலிஸ்"
1195

ஞமலிகால் பற்றி யேனும் தம்வழி இலாபங் கொள்வார்
அமைந்ததோர் சந்தர்ப் பத்தை அகன்றிட விடுவ ராமோ!
தமதுகா லடிக்கு வந்த தருமதே வதையா மென்றே
அமைந்தது "வோலிஸ்" ஆங்கே அவரண்டை சென்ற தன்றே
1196

நாவினில் நறையைச் சிந்தி நயனங்கள் மகிழ்வு காட்டத்
தூவினார் நச்சுப் பூவாம் சொற்களை அவையுள் ளேகி
ஆவியுட் கலந்து தேகத் தணுவிலும் செறிந்த வாறு
போவதைப் பார்வை யாலே புரிந்திடப பேச லானார்
1197

நட்பினை நாடி வந்தோம் நாமென வோலிஸ் சொல்ல
நட்பினை ஏற்றோம் நாமும் நட்பினைப் பொழிவோ மென்றே
மட்டிலா மகிழ்வு காட்டி மண்டியிட் டிடுவார் போன்றார்
விட்டிலாய் நெருப்பில் வீழும் விபரத்தை ஓர்ந்தி டாரே
1198

தம்மையே தாமழிக்குந் திட்டத்தை மாற்றான் தூண்ட
இம்மியும் ஓர்ந்தி டாதே எதிரியை நண்ப னாக்கித்
தம்மவர் மீது போரைத் தொடுப்பவர்க் குதவி செய்ய
என்மனம் கொண்டிட் டாரோ எதிர்வினை நோக்கி லாரே
1199

திப்புவை வெற்றி கொள்ளத் தங்களின் படைப்ப லத்தை
ஒப்புக ஒப்பின் வெற்றி ஒன்றிட மைசூ ரின்நீர்
ஒப்பிடும் பாங்கில் மண்ணில் உமதுபா லிருக்கும் பங்கைத்
தப்பாதே யளிப்போம் கிட்டும் செல்வத்தில் பெரும்பங் கேற்பீர்
1200

இம்மண்ணி லெவரும் உம்மை எதிர்த்திட விடவும் மாட்டோம்
செம்மையாய் ஆட்சி செய்யத் தேவைகள் உணர்ந்து செய்வோம்
எவ்வள வெனிலும் யுத்த ஆயுதம் வெடிம ருந்தும்
உம்மைவந் தடையும் வெற்றி ஒன்றேதான் குறிக்கோ ளென்றார்
1201

பூரித்தார் நிசாமெ மக்குப் பகையினி யில்லை கொள்ளும்
போரின்பின் கிடைக்கும் லாபம் பெரிதெனக் கணக்கி லிட்டார்
யார்குடி யழிந்திட் டாலும் எனக்கென்ன எம்வ லைக்குள்
சேருவ தொன்றே போதும் தலைக்காப்பும் உண்டா மென்றே
1202

அன்றவர் செய்த செய்கை அடலர்கள் பார தத்தை
வென்றாட்சி செய்யக் கால்கள் வேரூன்றத் துணையா யிற்றே
ஒன்றுபட் டிருந்தால் திப்பு உயர்த்திய போர்க்கொ டிக்குள்
சென்றோடச் செய்யுஞ் சக்தி சாத்தியம் என்பா ருண்மை
1203

நம்பிவந் தீர்க ளெம்மை நாமுமைக் கைவி டோம்நாம்
நம்பினோம் உம்மை வாக்கு நிலைபெறும் என்ப 'வோலிஸ்'
"கும்பனி வார்த்தை மாறா கூறிடில்" என்றார் கேட்டே
தம்மதி இழந்த நிசாம்தன் திருப்தியைத் தெரியச் செய்தார்
1204

கனிந்தது கனியு மென்று கருதியே வந்த தொன்று
மனத்திடை திருப்தி மேவ முறுவலித் தாரே "வோலிஸ்"
நினைந்தது வேறு மொன்றாம் நிசாம்கொண்ட நம்பிக் கைபின்
எனவாகுந் தன்னால் என்ற எண்ணமும் வஞ்சப் பேரே
1205

மராட்டியர் சம்மதம்

மராட்டியர் தமக்குந் தூது முறைப்படி சென்ற தன்றே
கருத்தினில் ஆய்ந்தார் நாநா சாஹிபும் ஆரம் பத்தில்
விருப்பிலார் திப்புப் போன்ற வீரரை வெல்வ தற்கு
மருவலர்க் குதவல் முற்றும் முறையல வெனநி னைந்தார்
1206

யாருக்கும் பக்கஞ் சாரா திருப்பதாய்த் திட்டங் கொள்ளப்
போருக்கும் உதவாப் போழ்து பயன்தனை இழப்போ மென்று
காரணஞ் சொன்னார் நாட்டின் கோல்வழி யுபதே சிப்போர்
சாருமே யனைத்தும் வெல்வோர் சொந்தமாய் எனவுஞ் சொல்வார்
1207

திப்புநம் எதிரி யேதான் சரியவர் தன்னை வெல்ல
எப்படி மற்றோ ரோடு மிணைவதாம் அவரும் நாங்கள்
ஒப்பிட வொண்ணார் நாட்டை உறிஞ்சிட வந்த மாற்றார்
தப்பொரு பகையை வெல்லச் சேருதல் பிறிதொன் றோடே
1208

வெள்ளையர் காலூன் றுங்கால் வலுப்பெறும் அவர்தம் ஆட்சி
எள்ளள வேனும் ஐயம் இலையவர் பின்நாட் போழ்தில்
உள்நுழை வார்க ளெங்கள் உடைமைக ளனைத்துங் கொண்டே
இல்லாது செய்வா ரென்றார் இசைவின்றி நாநா சாஹிப்
1209

பறங்கியர் சக்தி பெற்றால் பயனவர்க் காகும் உண்மை
முறைப்படி உதவி னாலோ மராட்டியும் வலுவே கொள்ளும்
மறுத்திடில் போரின் பின்னே பெற்றிடும் வெற்றி யெம்பால்
மறுத்ததால் போர்தொ டுக்க முனைப்பிடச் செய்யு மென்றார்
1210

திப்புவின் கைக ளோங்கிக் கூடுமென் றாகில் வெற்றி
எப்படி யாகும் என்ன இயலுமோ நாங்கள் மூவர்
தப்பியவ் வாற மைந்தால் சூடுண்ட ஊன வேங்கைக்
கொப்புவார் துணியக் காலம் உடன்படா வென்றுஞ் சொல்வார்
1211

வெல்லுவோர் எங்கள் மீது வலிந்துபோர் தொடுப்பர் இன்றே
சொல்லுதல் நலமாம் காலம் சென்றிடில் வாய்ப்புத் தப்பும்
அல்லல்வந் துறுமுன் நாமும் ஆமெனச் செல்வோ மானால்
வெல்லுதல் திண்ணம் பின்னர் விளைவதும் நலமாம் என்பார்
1212

என்றனின் கொள்கைக் கிஃதோ இடங்கொடா தெனினும் மக்கள்
நன்மையைக் கருத்திற் கொண்டு மராட்டியின் எதிர்கா லத்தை
எண்ணிநான் வெள்ளை யர்பால் இணங்காமல் இணங்கு கின்றேன்
என்னைநான் இழப்ப தொக்கும் இதுவென்றார் நாநா சாகிப்
1213

திப்புவின் சீற்றம்

வெள்ளையர்கள் வலையினிலே நிசாமும் கூட
வளைந்துவிட்டார் மராட்டியரும் எனவ றிந்தே
உள்ளங்கொள் வெஞ்சினம்மோ பூகம் பம்போல்
ஊழித்தீ கொதித்தெழுந்த பாங்கும் போலாம்
கள்ளமனங் கொண்டவர்கள் மான மற்றோர்
கடுகளவும் புந்தியிலார் எதிர்கா லத்தில்
எள்ளளவும் எஞ்சாது நமது மண்ணை
ஏப்பமிடத் துணிந்தவரை நம்பி னாரே
1214

உட்பகையை அழிப்பதற்குப் பொதுப்ப கையை
உவந்ததுமேன் ஒன்றிப்பின் உதவும் பேரை
திட்டமிட்டுக் கொன்றுவிடும் ஒட்டுண் ணிக்குத்
தம்மைத்தாம் தந்தகதிக் குள்ளா னார்கள்
வெட்வெட்டத் தளைக்கின்ற விடச்செ டிக்கு
வளரப்புன லூற்றுவதோ வளர்ந்த பின்னர்
கிட்டவுள்ள மரஞ்செடியும் வளர மாட்டாக்
கேடுசெய்யும் அழித்துவிடும் அறியா ரேனோ
1215

நிசாமென்றால் துரோகத்தின் மறுபி றப்பு
நிலைகுலைந்த தேனாமோ மராட்டி யர்கள்
வசப்படுமென் மண்ணதனில் பங்குத் தேட
வாய்ப்புவரும் சூறைப்பொருள் கிட்டு மென்றே
இசைந்துள்ள கேடதனை எண்ணிப் பார்த்தால்
எச்சிலுண்ண ஏங்குகின்ற நிலைபோ லாமே
பசித்தாலும் புலியென்றால் புல்லை யுண்ணா
பிறர்கையை நம்பியிவர் இழிவு பெற்றார்
1216

என்நாட்டார் என்னவரே என்று நானும்
எண்ணுகையில் ஏனிவர்கள் கடல்கள் தாண்டி
மண்பிடிக்க வந்தவரை நாட்டின் எல்லா
வளங்களையுங் கொள்ளைகொள்ளும் பறங்கிப் - பேர்க்கு
முன்னின்றார் உரமளிக்கக் கொடிய போரில்
மாண்டழிவோர் எம்மவரே எதிர்கா லத்தில்
ஒன்றன்பின் ஒன்றாகத் தமக்குள் வாங்கி
ஒன்றுமில்லா தாக்கவல்லார் உணரா ரேனோ
1217

உருவான போர்மேகம் தம்மைச் சுற்றி
உலவுகின்ற வேளையிலே திப்பு சுல்தான்
அரசசபை தனைக்கூட்டி நிலைமை தன்னை
ஆரா) போழ்தினிலே பரத மண்ணின்
அரசர்கள் செய்யுகின்ற கேட்டைச் சொல்வார்
அவையினிலே பூர்ணைய்யா காஸி கானும்
இருந்தார்கள் தளகர்த்தர் பலரி னோடே
எதிர்கொள்ளும் பகைவெல்ல வகைகள் ஓர்ந்தார்
1218

பிறந்தமண்ணில் பற்றில்லார் பாவி யர்கள்
பேராசை கொண்டயிழி பிறப்பி னோர்கள்
வறந்ததென்ன அன்னவரின் சிந்த னைகள்
வந்தவனை ஏன்நம்பி மோசம் போனார்
அறிந்திலையோ இன்றெனக்குப் பின்ன வர்க்கு
அடாதுசெய்வர் என்பதனை அறிந்து மாமோ
முறைகேடு செய்திட்டார் மேலண் ணாந்து
முகம்மீழ உமிழ்கின்றார் மன்னிப் பற்றோர்
1219

எரிநெருப்பில் கனிந்தமழை

சிந்தனையில் ஆழ்ந்திருந்தார் திப்பு சுல்தான்
செய்வதென்ன வாமென்றே தேட லுற்றே
வந்தமர்ந்தார் அருகினிலே பேகம் சாய்பா
வாஞ்சையொடு மன்னர்முகம் நோக்கி நின்றார்
வெந்திருந்த மனத்தினுக்குக் களிம்பு பூசி
வேதனையைக் குறைக்கின்ற மருத்து வன்போல்
புந்திமிக்க மனையாள்நல் வார்த்தை கூறப்
படிந்தசினம் கரைந்துமனந் தெளிவா கிற்றே
1220

நாளைநீங்கள் யுத்தகளம் செல்ல வேண்டும்
நிம்மதியாய்த் தூங்குங்கள் என்ற போழ்து
நீள்விழியில் கோத்திருந்த சோகக் கீற்றை
நாடாளும் பதியுணர்ந்தார் வாடிப் போனார்
தோள்த்துணையே என்னவிது புன்ன கையைத்
தொலைத்ததுமேன் விழிகளிருள் கொண்ட -
தென்னே
பாழ்யுத்தந் தனைநினைந்தா! ஆட்சி செய்வோர்
பொறுப்பிலொன்றாம் ஈதறியாய் ஏனாம் என்றார்
1221

யுத்தமென்ப தரசர்க்குப் பொழுது போக்கு
உணர்வேன்நான் உள்ளத்தில் உங்கள் மீது
நத்தியுள்ள காதலினால் வருத்தம் தோய்ந்தேன்
நானறிவேன் நாடாள்வோர் மனைக ளென்றும்
யுத்தத்தைக் கண்டஞ்சல் கூடா தென்ப
என்செய்வேன் என்னுள்ளொரு மனமுண் டன்றோ
எத்தகைய இடையூறும் என்னால் தோன்றா
இமைமூடித் துயிலுங்கள் என்றார் ராணி
1222

நமக்குள்ளோர் ஒப்பந்தம் உண்டாம் அன்று
நானுன்றன் கைதொட்ட முதல்நா ளன்று
சுமக்கின்ற ஆட்சிமுதல் பின்னே காதல்
சார்ந்துள்ள சொந்தங்கள் அடுத்தாம் மக்கள்
தமக்குமுதல் தானத்தைத் தருவே னென்று
சொல்லியதும் நீயதனை ஏற்ற தும்தான்
நமைநாமே வென்றிடுதல் வேண்டும் நெஞ்ச
நெகிழ்வினுக்கு வாய்ப்பளிக்க வேண்டா மென்றார்
1223

நாட்டுக்கும் மக்களுக்கும் உங்க ளுக்கும்
நடுவினிலே என்அன்பு இடையூ றாகா
கோட்டைவிட்டு முதன்முதலாய் என்னை நீங்கள்
கைப்பிடித்த பின்செல்லும் யுத்த மிஃதாம்
ஆண்டவனே அருள்புரிவான் வாகை சூட
அடலரினைத் துவம்சம்செய் திடேவே என்னில்
பூண்டகவ லழித்திட்டேன் நாளை நீங்கள்
போகுவரை துயிலுங்கள் என்றார் ராணி
1224

கால்பற்றிப் பதிக்குத்தன் பாசங் காட்டிக்
கண்ணயரத் துணைசெய்தார் தன்னீர் துஞ்சா
வேல்விழிகள் வாஞ்சையொடு வதனம் நோக்க
விழித்திருந்தார் வெகுநேரம் தனைம றந்தே
கோல்கொண்டான் கடமைதனைக் கருத்தில் கொண்ட
காரணத்தா லமைதியுற்றார் மன்னன் தேவி
சீலத்தின் பெருமைக்குச் சான்றாய் மன்னர்
திப்புகரம் பற்றியுடன் வாழ்ந்த கோதை
1225

போருக்குத் தயாராகும் பறங்கியர்கள்

போருக்காங் கார ணத்தைப் பலபட எண்ணுங் காலை
ஆரம்ப மறிந்தார் யுத்த அணுகுதல் திப்பு வுக்குஞ்
சேர்ந்தவ ரோடு வுள்ள சமஸ்த்தான மொன்றி னுக்குங்
காரணம் டச்சுக் காரர் கோட்டைகள் தடுப்பு மொன்றாம்
1226

வாய்த்தவக் கார ணத்தை விடாதுதம் பக்கல் கொண்டு
தோய்ந்தனர் நன்மை வெள்ளைத் தோலினர் வலிந்தே பெற்றார்
ஓய்ந்திடார் உதவிக் கென்றே உடன்பட்டார் துரித மானார்
தாய்கன்று துன்பங் கண்டு தவித்தலுக் கொப்பாம் பொய்யே
1227

திருவாங்கூர் சமஸ்த்தா னத்தார் திப்புவின் ஆட்சிக் குள்ளே
தருபவர் கப்பம் அன்னார் தம்வழி தடுப்பாய் ஒன்றை
இருபுறம் வேறு வேறாய் ஏற்றிடும் நோக்கி னோடே
உருவாக்கம் செய்தார் திப்போ உவப்பிலார் சினம்மேற் கொண்டார்
1228

தடித்தவேய்க் கம்பங் கொண்டு தடுப்பினை எல்லை யின்பால்
தொடுத்தனர் **"கொச்சின்"** கூடத் தொடர்ந்தது நீண்டு கண்டே
உடைத்தெறிந் திடப்ப ணித்தார் ஒப்பாத திருவாங் கூரார்
அடுத்திருந் தவரோ டொன்றி அழிவினுக் கடிச மைத்தார்
1229

தடுப்பமைத் திருந்த தோடு தூண்டினர் மலபார் எல்லை
அடுத்துள கிளர்ச்சிப் பேரை அணிதிரண் டெதிர்க்கத் திப்பு
கடுப்படைந் திட்டார் கோபக் கனல்விழி யுமிழ்ந்த தென்மால்
எடுத்ததம் முடிவில் மாற்றார் இருப்பெனப் பதம்ப தித்தார்
1230

கூடவே டச்சுக் காரர் கோட்டைக ளிரண்டைத் தம்கை
கூடவுஞ் செய்தார் திப்பு கருத்துணர்ந் திடாத வாறாம்
நாடினார் திப்பும் அஃதில் நலம்பெற மடங்கி ரண்டாய்க்
கூடிய தொகைக்கும் தம்கை கூடிடா நிலையு ணர்ந்தார்
1231

சென்னையின் ஆட்சி யாளர் திருவாங்கூர் ராஜா வுக்கு
முன்னிலை வகித்தார் அந்நாள் மாற்றாரின் தலையீ டற்றுத்
தன்னலங் காக்க அன்னார் தெரிந்திலை நடந்த தெஃதும்
வன்மனங் கொண்டார் மேலும் வழங்குதம் நலம்ம றுத்தார்
1232

வங்காள ஆட்சி யாளர் வெகுண்டனர் வெள்ளை யர்கள்
தங்களின் வெறுப்பைத் தம்பால் சொல்லினர் என்ப தாலே
பங்கமாம் உறவுக் கென்றே பகர்ந்தனர் ராஜா செய்கை
எங்களின் வெறுப்புக் குள்ளும் இணங்கிற்று எனப்ப கர்ந்தார்
1233

திப்புவின் எல்லைக் குள்ளே சேர்ந்திலாப் பகுதிக் குற்றான்
செப்பிடுங் கோட்டை இரண்டும் சேர்ந்தன டச்சுக் காரர்
செப்பினர் துணிவு தந்தார் திப்புவி னோடும் அந்நாள்
ஒப்பிய உறவு மாய்ந்தே உவப்பிலா திருந்த காலம்
1234

யூதர்கள் வணிகந் தன்னில் ஏற்றமுற் றிருந்தா ராங்கு
பாதகம் திப்பின் கைக்குள் போயிடில் எனத்தெ ளிந்தார்
சாதகம் தமக்கு ராஜா சொந்தமென் றாகி லென்றே
ஓதாது மனங்கி டத்தி ஓதினர் கொள்வீ ரென்றார்
1235

திருவாங்கூர் மன்ன ராலே தொடங்கிற்று யுத்தம் போரில்
திருவாங்கூ ரோடு வெள்ளைத் தோலினர் படையும் சேர்ந்தே
ஒருமித்தார் நிசாமும் முன்னர் உடன்பட்டு மைசூர் ஆட்சி
வரிபெற்ற பாளை யத்தார் தொண்டமான் முதலா னோரே
1236

தனித்தொரு சக்தி யாகத் தோள்தரற் கெவரு மற்றே
முனைத்திடத் துணிந்தார் திப்பு முற்றுகை பலமா கிற்றே
அனைத்தொடும் மராட்டி யர்தம் அணிகளும் ஒன்று சேர
மனத்தினை மாற்றும் மாறு வேண்டிற்று நிலைமை யோர்ந்தே
1237

முப்பது நாட்கள் அன்னார் முற்றுகை தொடர்ந்திட் டாலும்
முப்பது மணற்கூ றேனும் முடிந்திலை கோட்டை யண்ட
தற்பாது காப்புக் கான தேவைகள் அனைத்தும் கொண்ட
செப்பமாங் கிருந்த வாகாம் சீரங்கப் பட்டி னத்தே 1238

சீரங்கப் பட்டி னத்தைச் சுற்றியுட் புகமாட் டாதோர்
வேர்விட்ட மரங்கள் போல வளைத்துக்காத் திருந்தார் யாரும்
ஊருளே வருவா ராயின் உயிர்குடித் திடத்து ணிந்த
பேருளா ருள்ளென் றெண்ணம் பற்றிய திடத்தி னாலே
1239

வெள்ளையர் கறுப்ப ரென்னும் வேற்றுமை தோற்ற லாகத்
தள்ளியே பாச றைகள் தனித்தனி ஒன்றுள் ஒன்றாய் வெள்ளைத்தோல்
நோய்கண் டான்போல் விளங்கினர் கோட்டைக் கப்பால்
உள்ளிட்டோர் வெளியில் வாரா உபாதையுந் தோன்றச் செய்தார்
1240

கூண்டினுள் சிக்குண் டாற்போல் திப்புவின் நிலைமை தோன்ற
வேண்டாமே யுத்தம் இன்று வேண்டுவ சமாதா னந்தான்
நீண்டநாள் தொடர்ந்தால் மக்கள் நிலைமைசீர் கெடுமென் றெண்ணிப்
பூண்டது உள்ளம் பேசிப் பகைவரைப் பொருந்து தற்கே
1241

நடந்தது என்ன?

வெள்ளையர் சேனை யோடு மராட்டியர் படையும் கூட
உள்ளன ரானா ரன்னாள் உடன்படு நிசாமின் வீரர்
கொள்ளையாம் தொகையில் மூன்று திறத்தினர் சேர்ந்த தாலே
வெள்ளமோ! கடல்க ரைக்கு வந்ததாம் நிலைமை தோற்கும்
1242

ஈர்பத்தி னோடி ரண்டின் ஆயிரம் வெள்ளை வீரர்
சேர்நிஜாம் படையோ மூவா றாயிரம் மராட்டி யர்கள்
போர்ப்படை நான்கெட் டாகு பாற்படும் ஆயி ரத்தில்
சீர்நிரை கொண்டார் சுற்றிச் சீரங்கப் பட்டி னத்தே
1243

முற்றுகைப் படைக ளோடே மலையடி வார மொன்றைப்
பற்றினான் "கான்வா லிஸ்"தன் படைகளை யடுத்துச் சற்றே
உற்றிட வைத்தான் மற்றீ ருடன்படை யோர்கள் தம்மை
வெற்றிட மெங்கு மில்லா வாறெனச் சூழ்பு லத்தே
1244

குன்றினில் ஏறி நின்ற கான்வலிஸ் தொலைவை நோக்கக்
கண்டனன் அழகுக் காட்சி கண்கவர் நிலைக்குள் ளானான்
உண்டதோ இல்லை இந்த உன்னதம் எனது நாட்டில்
மண்படு மகிமை இந்த மண்ணுக்கே சொந்தம் என்றான்
1245

பசுமையாம் வெளிகள் புல்லைப் புணர்ந்தன வெனுமா லுற்ற
திசையினைக் கண்ட போழ்து திளைத்ததோ மனமு மஃதில்
விசும்பினை நோக்கா நீர்கொள் வயல்நிலம் வரப்பால் சூழ்ந்தே
அசைப்பினின் படிக ளொக்கும் அழகினைக் கண்க ளுண்ணும்
1246

வெள்ளியை உருக்கி யோட விட்டது போலு மாகத்
தெள்ளிய உருவி லோடும் சீர்மிகு காவி ரித்தாய்
வெள்ளத்தில் மருங்கி ரண்டும் வளம்பெறும் இயற்கை கொஞ்சும்
கள்ளுண்ட போதை காணும் கண்படின் புலவோர் நெஞ்சே
1247

தென்னையின் தோப்பு வாழைத் தோட்டங்கள் பிறம ரங்கள்
கன்னலின் சேனை வேறு கனிமர வர்க்கம் போலாம்
பன்முகப் பட்ட வெல்லாப் பயிர்வகை நிலத்தை ஆளல்
கண்ணுற மகிழ்ந்தான் வாலிஸ் கவர்ந்திடத் துணிவுற் றானே
1248

கூறிரண் டாக ஓடும் காவிரி நதியின் நாப்பண்
கூறிடற் கரிய தாகும் கனவெழிற் சீரங் கம்கை
தேறிடு மாகில் திப்பைத் தம்வசம் கொள்ளல் சாலும்
வேறிலை வழியென் றெண்ணி வன்மனங் கொண்டான் 'வாலிஸ்'
1249

மேகத்தைத் தொட்ட ணைக்க முயன்றிடு போலாம் கோட்டை
ஏகனை வழுத்தும் பள்ளி இறைத்தல "மினாரா" ஆங்கு
வாகொடு மிளிருங் கோயில் வாழ்பதி மாடி தூர
நோக்கியின் ஊடே அண்மித் தெரிந்தன கண்க ளுக்கே
1250

காவற்கேந் திரங்கள் தூரங் கண்பட நோக்குந் தூபி
யாவுமே புலிப்ப தாகை ஏந்தியே நிமிரிந்து நிற்கப்
பூவெளி தோன்றா வாறு பரந்துயர்ந் தெங்கும் மாடம்
மேவிடக் கண்டான் வாலிஸ் மலைத்தனன் மோக முற்றான் 1251

கைப்பட வேண்டு மிந்தக் கண்கவர் நகர மென்றான்
கைப்படா துறினோ வந்த காரியம் பொய்த்த தாகும்
வைப்படு கண்ணை வாங்கா வாறுளம் வரித்தான் வஞ்சம்
'கைப்படச் செய்வேன்' என்றான் கண்வெறி கொண்டே காணும்
1252

பலபட நெஞ்சத் துள்ளே பொங்கின வினாக்கள் இந்தப்
பலத்தினைக் கொண்டோ எம்மைப் பயங்கொள வைக்கின் றார்நம்
பலத்தையும் பலத்தால் வெல்லும் பயங்கரர் திப்பு என்றே
பலத்தினைப் பயத்தால் நீத்துப் பெற்றவன் போலு மானான்
1253

தனித்தனி நிஜாமை மராட்டித் தலத்தினர் தமையொ டுக்கித்
தனிப்பெரு வீர ராகத் திகழ்ந்தவர் நாங்கள் கூடப்
பணிந்திட மங்க ளூரில் படைவென்றார் தீரர் சுல்தான்
எனப்பல எண்ண மோங்க இதயத்துள் சிலிர்த்தான் வாலிஸ்
1254

"பெய்லி"யைப் பேரம் பாக்கம் "ப்ரத்வொயிட்" நாகப் பட்டணம்
கைத்தலம் பிடித்துக் கைகள் கட்டிய ஓர்மை கொண்ட
மெய்யுள வலுமி குந்த வீரராம் திப்பு மக்கள்
அய்யனின் புலமீ தென்றே அகத்தினுள் மீட்க லானான்
1255

எப்படிப் பிடிப்ப திஃதை எதுவழி ஏற்கும் :திப்பை
எப்படிப் பிடிப்ப தென்ன ஏதுதா னுண்டி ரண்டும்
கைப்பட வேண்டின் கொள்ளக் கொள்பவை யாதாம் என்றே
மெய்ப்படா மனத்தி னோனாய் வசிப்பிடம் புக்கி னானே
1256

பற்பல வாறாய் ஆய்ந்தும் புலப்படா வழிகள் ஈற்றில்
நற்பல னளிக்கும் என்னும் நினைவினில் இரவுப் போழ்தில்
சுற்றியே வளைத்துப் போரைத் தொடங்குதல் வேண்டு மென்றான்
சொற்படி தொடக்க வீரர் தளகர்த்தர் பொருந்தி னாரே
1257

ஒன்றென அனைத்துப் பேரும் உடன்படப் படைபி லொன்றைக்
குன்றுகள் மீதும் சேர்ந்த காட்டிடைப் புதர்கள் மீதும்
புன்மையின் உருவாம் வாலிஸ் பறங்கியர் படைமு தல்வன்
ஒன்றிட வைத்தான் திப்பின் ஒற்றரும் அறியா வாறே 1258

முப்பெரும் பிரிவா யஃது வியூகமு மமைத்து நிற்கச்
செப்பினான் ஆணை"**மெடோவ்ஸ்**"தன்வலப் புறத்தும்"**மெக்ஸ்வெல்**"
ஒப்பிடத் தலைமை தந்தான் உடன்கொண்டான் "**ஸ்டூவார்ட்**"டை
கப்பிய இரவு மெல்லக் கனத்ததாம் அவர்க்கா மென்றே
1259

வெள்ளையர் படைக்குப் பின்னே வந்தொன்றி னார்கள் வாலிஸ்
கொள்ளையில் பங்கு கொள்ளக் களம்வந்த இந்தி யர்கள்
எள்ளள வேனும் மானம் இலாதவர் நிஜாம்ம ராட்டிப்
புல்லர்கள் தொகையில் கொள்ளைப் படையினர் ஆணை யேற்றே
1260

தன்னொடு கூட்டுச் சேர்ந்தோர் தளகர்த்தர் தமக்கும் சொல்லான்
என்னதாம் திட்டம் என்றே ஏவினான் போரைத் தூண்ட
பன்னூறே யாகும் ஆங்கு பீரங்கி ஆணை கேட்டுத்
தன்னுடைப் பணியை ஏற்கும் செந்தணல் எங்கு மாமே
1261

தொலைவிலை திப்பின் சேனை தெரிபடு சமீபம் எண்ணா
நிலையினில் வீழ்ந்த குண்டின் நெருப்பினால் படையி னோர்கள்
நிலைதடு மாறிப் போனார் நிமிடமும் தரியா வாறே
பலதொடர்ந் திடவுங் கண்டார் பாசறை பற்றக் கண்டார்
1262

நினைந்திடாப் போழ்து நேர்ந்த நிலைமையால் குழப்பம் தோன்றத்
தனதுடைப் படையில் வில்லு துப்பாக்கி ஏந்தி யோரைத்
தனித்திட வைத்தார் திப்பு சென்றாற்றுக் கரையில் தாங்கப்
பணித்துமே தாமிருந்த புலத்தினை வெறுமை செய்தார்
1263

படைகளைப் பிரித்தே ஏற்ற பாதுகாப் பளித்த தாலே
நடைபெற விருந்த சேதம் நிகழ்தலில் சிறிதே வெற்றிக்
கிடைப்படும் வெள்ளை யர்கள் ஏகினர் முன்னும் முன்னும்
அடுத்திட வுள்ள தொன்றும் அறிகிலார் மேலுஞ் சென்றார்
1264

முன்னேறி வந்த வர்கள் முன்னேற வாகி லாது
முன்னணி மைசூர் வீரர் மடக்கினர் பொருதல் ஓங்கும்
இன்னவர் தமக்காம் வெற்றி என்றிலா நிலைமை ஓயா
பின்னிராப் போழ்தும் தாண்டிப் போனது போரந் நாளே 1265

சேர்ந்தனர் தொடர்ந்தும் சாரி சாரியாய் எதிரி வீரர்
சார்ந்துமே இருந்த தன்னார் தலத்தினில் நவீன மான
போரணிச் சாத னங்கள் படையணி யென்ப தாலே
மூர்க்கமாய் எதிர்த்தும் மைசூர் மறவர்கள் பின்ன டைந்தார்
1266

நேர்ந்தவம் நிலையில் தம்மை நிலைபெறச் செய்ய வேண்டின்
போர்நிலை மாற்ற மொன்றே பலன்தரும் எனவு ணர்ந்து
சீரங்கப் பட்டி னத்தைச் சென்றடைந் திட்டார் திப்பு
போரதன் பாட்டி லோய்ந்து போமெனுங் கருத்தைக் கொண்டே
1267

சந்தர்ப்ப சாத கத்தைத் தனதாக்கிக் கொண்ட **"மேடோவ்ஸ்"**
முந்தினான் "கஞ்சம்" என்னும் மக்கள்வாழ் பகுதி தன்னைச்
சொந்தமென் றாக்கிக் கொள்ளச் செயலிலும் வெற்றி கண்டான்
இந்நிலை திப்பு கோட்டைக் கிடம்பெயர்ந் திடவுஞ் செய்யும்
1268

பலபடப் போரின் திக்குப் பாதக வழியில் செல்ல
இலவழி வேறாம் மக்கள் இன்னுயிர் காக்க வென்னும்
வலைப்படும் இக்கட் டுக்குள் வந்ததால் திப்பு சுல்தான்
நலமொரு சமாதா னத்தை நாடுத லெனவு ணர்ந்தார்
1269

முற்றுகை செய்தால் வாலிஸ் மக்களுக் குணவு தேறா
நிற்கதி தோன்றும் என்னும் நினைவொடு தொடர்ந்தால் யுத்த
வெற்றிதுர்ப் பலமு மாகும் வீணென முடிவுங் கொண்டே
பற்றிடச் சமாதா னத்தின் பாற்படத் தூது விட்டார்
1270

பணிந்தவர் வருவ தாயின் பயன்கொள விரும்பி வாலிஸ்
இணைந்தொரு முடிவு காண ஏற்றதாய் "மெடோவ்ஸை"க் கேட்க
இணங்கினா னில்லை கொல்லும் இறுமாப்புக் கொண்ட தாலே
பிணங்கினான் வாலி ஸோடும் பிடிவாதம் செய்திட் டானே
1271

படைகளின் தலைவன் தன்னைப் பிழைத்திட விரும்பா வாலிஸ்
உடன்பட லானான் கேட்ட உத்தர வளித்தார் கோட்டை
தொடுவாயி லுடைக்க அன்னான் தன்னொடு படையுங் கூட்டிக்
கடுகினான் தடுக்க மாட்டா கான்வாலிஸ் தனைத்த விர்த்தான் 1272

கோட்டையைத் தாக்க வந்த கயவனை **சையத் கப்பார்**
கோட்டையின் முதல்வர் வீரர் குலத்திடை யரசர் எந்தக்
கேட்டையும் எதிர்த்து வெல்லும் கரவலிப் பெருவேள் கண்டார்
வேட்டைக்குப் பொருந்து மொன்றை வேங்கையுங் கண்ட வாறே
1273

சமாதானத் தூதைச் சற்றுஞ் சிந்திக்கா தழிப்ப தொன்றே
தமதுடைப் பணியென் றெண்ணிச் சமர்க்களம் புக்கி யோனைத்
தமதுடைப் பணிய ழித்தல் தாமென வெகுண்ட வேங்கை
இமைப்பொழு தேனும் ஓயார் இரைதேடும் வாளுக் கீந்தார்
1274

கொல்லுங்கள் என்றார் சென்னி களையுங்கள் என்றார் ஆவி
இல்லாதே உடலந் தன்னை உருட்டுங்கள் என்றார் தானும்
சொல்லிய வாறே செய்தார் சைனியம் தொடர்ந்த தஃதை
வில்விடுத் தேகும் அம்பின் வேகமாம் அனைத்தும் ஆங்கே
1275

தீப்பொறி பறக்கும் வாட்கள் சேர்ந்துட னொன்றோ டொன்று
போர்ப்பொறை கொண்டு மோதும் பொருதலால் கைத்து வக்கும்
போர்ப்பணி செய்யும் வேலும் பங்கினை யாற்றும் கப்பார்
நாப்பண்ணில் சுழன்றார் சுற்றி நூறெனப் பிணங்க ளாமே
1276

வெடித்தன குண்டு யாங்கும் வாள்மோது சப்தம் வேல்கள்
குடித்தன உயிரை எங்குங் கூக்குரல் மரண ஓலம்
பிடித்தனர் ஓட்டம் வெள்ளைப் பறங்கியர் ஆவி தன்னைக்
கொடுத்தவர் நீங்க லாகக் கண்படாத் தொலைவுக் காமே
1277

களத்தினை விட்டே யோடிக் காத்துயிர் பின்னும் **மேடோவ்ஸ்**
களத்தினை நாடி வந்தான் கூடவே புதியோர் வந்தார்
இழந்ததை மீட்கும் எண்ணம் இருந்ததோ இன்னுஞ் சேர்க்க
முழுத்திறன் கொண்டும் தோல்வி முகப்படக் களம்வி டுத்தான்
1278

வெற்றியே குறியாய்க் கொண்டு வந்தவன் தோற்றே ஓடிப்
பற்றிய அவமா னத்தால் போக்கிட உயிரை நாடிப்
பற்றினான் கைத்துப் பாக்கி பார்த்தனன் **கேர்ணல் வாலிஸ்**
சற்றுமே தரியா துன்னித் தடுத்திடத் தப்பித் தானே 1279

பலநாட்கள் இதுபோல் மோதல் பற்பல நடக்குங் காலை
நிலைமையில் ஒருபேர் மாற்றம் நிகழ்ந்தது "கூர்க்கா" என்னும்
நிலத்துடைப் படைப்பேர் கூலி நாடியே வந்தோர் வெள்ளைப்
புலத்தினைச் சேர்ந்தார் மொத்தம் பதினாயி ரத்துப் பேராம்
1280

கூலிக்கு மார டிக்குங் கேவலப் பெண்டிர் போல்வார்
கூலிசற் றதிக மென்ற குறிக்கோளில் போர்செய் வோர்கள்
வேலியை உடைத்துப் பாயும் வராகன்கள் போலா மோர்நாள்
காலிசெய் திட்டார் கோட்டைக் காவலைக் கடைமாந் தர்கள்
1281

இரவொடும் இரவா யாங்கே இடைத்தர கர்கள் புக்கிப்
பெருநிதி தருவார் வெள்ளைப் பறங்கியர் என்றே ஆசை
உருவுறச் செய்ய ஈனர் உடன்பட்டார் கேணல் வாலிஸ்
புரிந்தவன் பணத்துக் கெந்தப் பாவமும் செய்வோ ரென்றே
1282

கோட்டையின் பலமும் இஃதால் குன்றிய போது பம்பாய்
தோட்பலம் தந்த தாங்கு தரித்தவெண் படையி னோர்கள்
வேட்டலின் பேரில் வந்தார் வாலிஸின் துணைக்கென் றாக
மேட்டிமைத் தொகையி லான வாய்ப்பவர்க் கான தன்றே
1283

முற்றுகைப் படையி னோடு முறைகெடப் பிறந்த மண்ணை
அற்பதம் நலத்திற் காக அன்னியர் கரம்பற் றற்காய்
முற்றிலும் உதவும் துரோக முடியுடைக் கடையார் சேனை
உற்றதாம் முன்னு மிந்த உடனிணை படைக ளோடே
1284

கரியரி ஒட்டைக் கூட்டம் கணக்கிலா எருது போருக்
குரியதாம் தளபா டங்கள் ஏற்றியே வந்த தான
நிரைகளோ ஒருபு றத்தை நிறைத்தன மனிதர் வேறாம்
கரையெது வென்றி லாது கண்படு தொலைவி லெல்லாம்
1285

போர்வீரர் தங்கு தற்குப் பாசறை ஆயி ராங்கள்
சேர்ந்தொன்றி நிரைநி ரையாய் தோன்றிடு பக்க மெல்லாம்
சீராக அமைத்தி ருந்தார் தத்தமக் கேற்ற வாறாம்
சூரியன் ஒளிக்கீ றேனும் சென்றிடா தெஃகிக் காணும் 1286

யானையின் பிளிற லோலம் அதனொடு பரிக்க னைப்பு
ஊனுக்கென் றோட்டி வந்த உயிர்களின் கத்தல் மேலும்
சேனையின் பேச்சுக் கூச்சல் சேர்ந்தொன்றி அமைதி கொன்றே
வானையும் அதிரச் செய்யும் வாறென இருந்த தாங்கே
1287

படைப்பலம் அதிக மென்ற பலத்தினால் பறங்கி யர்கள்
அடுத்தவர் உணர்வைக் கூட அலட்சியம் செய்வார் சேர்ந்தே
கடைத்தனம் புரிவார் அன்றும் கொண்டனன் முதன்மை மேடோவ்ஸ்
கடைத்தனம் செய்தான் நெஞ்சைக் கூறிடும் பாங்கி லாமே
1288

திப்புவின் தந்தை ஹைதர் திருவுடல் அடக்கம் பெற்ற
"கப்றுஸ்த்தான்" "லால்பாக்" சூழ்ந்த கலையெழில் தோட்டந் தன்னை
ஒப்பிலான் அரக்கன் வெட்டி உண்டிலை யென்று செய்தான்
பெட்பறி யாத மூடன் பிழைபட்டான் இயற்கை யோடே
1289

சீராக வளர்க்கப் பட்ட செடிகளும் வானை நோக்கி
நேரிய தாயு யர்ந்த நெடுமர மனைத்தும் சாய்த்து
பீராங்கி கொண்டே கொண்ட பெருமரம் முற்றும் வீழ்த்தித்
தூரவுஞ் செய்தான் செய்கை திப்புவை அழித்தாற் போன்றாம்
1290

நடந்ததை அறிந்த திப்பு நெருப்பென வானார் செய்த
கொடுமையை எண்ணி நெஞ்சம் கொதித்திட மறுக ணத்தே
வெடித்தன கோட்டை மீது வரித்ததாம் பீரங் கிப்பேய்
துடித்தனர் பகைவர் அஞ்சித் தறிகெட்டு ஓடி னாரே
1291

பஞ்சிடைப் பட்ட தீயின் பாற்படும் வேகம் சற்றும்
அஞ்சிடா நெஞ்சர் திப்பு அரிசினங் கொண்டாற் போலாம்
வெஞ்சினம் பகைவர் மீது வீசிய குண்டு கொண்டே
நெஞ்சினிற் பதியு மாறு நிலைமையும் இருந்த தன்றே
1292

அறிந்தனர் அடலர் திப்பின் ஆவேச அனலின் வேகம்
வறந்திலை எளிதில் கோபம் வெறியென மாறிற் றன்றோ
மறைந்தனன் வெய்யோன் நாளை வருகிறேன் என்பான் போலும்
குறைந்தது வெடியி னோசை கங்குலென் போர்வைக் குள்ளே 1293

வேறு

மெய்வெள்ளை வெளுத்திடுமுன் அதானின் ஓசை
மேவியது காற்றலையில் அமைதிப் போழ்து
துய்யவனை வழுத்துதற்காய் மக்க ளெல்லாம்
சேர்ந்தொன்றி வந்தார்கள் பள்ளி நோக்கி
ஐயன்திப்(பு) அதிகாலைப் போழ்தே கோட்டை
அடிமுதலாய்ப் பார்வையிட்டு வந்தி ருந்தார்
வையத்து நாயகனைத் தொழுத பின்னர்
விடைபெறவென் றெழுந்தார்கள் வந்தி ருந்தோர்

1294

"நில்லுங்கள்! உங்களுடன் சுல்தான் பேச
நாடியுள்ளார் என"**முஅதின்'** வாய்மொ ழிந்தார்
கல்லாகச் சமைந்தனரே அனைத்துப் பேரும்
குரலுயர்த்தித் திப்புசுல்தான் பேச லானார்
"அல்லாஹ்வின் நேசர்களே! அறிவேன் நீங்கள்
அன்புடையீர் மண்மீதே அதனால் தானே
பொல்லார்கள் எமைவிட்டுப் போன போதும்
போகாதே எம்முடனே இருக்கின் றீர்கள்.

1295

நல்லவர்போல் நடித்தவர்கள் சமயம் பார்த்து
நமக்கெதிராய் எதிரிகளைச் சார்ந்து விட்டார்
சொல்லினெல்லாத் துரோகிகளும் அவ்வா றேதான்
சேர்ந்திருந்தே கழுத்தறுப்பார் சோத னைகள்
சொல்லாமல் வருவதினித் தொடரும் போலும்
தொடர்ந்துகொண்ட வெற்றியெலாம் கனவு - போன்றாம்
பொல்லாதார் வெள்ளையர்கள் சமாதா னத்தைப்
புறந்தள்ளி நிபந்தனைகள் விதித்துள் ளார்கள்

1296

நேசக்கரம் நீட்டியநம் கரத்தைத் தட்டி
நம்மிதயக் கொதிப்பினையே தூண்டு மாறே
சேதமுறச் செய்தார்கள் **'லால்பாக்'** கின்கண்
தோட்டங்கள் முற்றையுமே தீங்கி ழைத்தார்
போதாமைக் கெங்களது நாட்டில் பாதி
பாதகர்க்கு வேண்டுமென ஓலை யொன்றும்
நீதமின்றிக் கேட்டுள்ளார் போருக் கான
நிதிமுற்றும் வேண்டுமெனும் ஆணை யோடே

1297

சேதிதனைக் கேட்டதுமே ஆங்குற் றோர்கள்
செந்தழலில் பதம்பதித்தோர் போலு மாகி
யாதுசெய வேண்டும்நாம் "கான்வா லீஸ்"சை
இலாததொழிக்க வேண்டாமோ? எனச்சி னக்க
நீதியது தானவனின் செருக்க டக்க
நடத்துவது யாரென்றார் வினாவில் பாதி
ஓதுமுன்னே பன்னூறு பேர்முன் வந்தார்
ஒப்புதலை ஓங்கியுரை செய்த வாறே

1298

தேர்ந்தெடுத்த வீரர்கள் சமர்க்க ளத்தைச்
சந்தித்துப் பழக்கமுற்ற தீரர் நெஞ்சின்
ஓர்மையுடன் உடல்வலுவும் கொண்ட பேரார்
உண்மைவிசு வாசிகளாம் இறைநே சர்கள்
சேர்ந்தார்கள் ஒருவேங்கைப் படைபோ லன்னார்
சிலநிமிடப் போழ்தேதான் பரிக ளேறி
நேராகப் பறந்தார்கள் எதிரி கள்பால்
நொடிப்போழுதும் தாமதியார் நோக்கொன் றாமே

1299

இடியிடிப்ப தாகுமோலி குழம்புச் சப்தம்
எகிறினவே குதிரைகளும் மனத்தின் வேகம்
பிடியுண்ட கொடுவாள்கள் பகலோன் தீயில்
பட்டொளிரும் இடியிடையே மின்னல் போலாம்

நடையிடையு மில்லாத நெருக்கம் வீரர்
நாப்பேச்சைக் கொன்றவராய் நாடும் நோக்கே
குடிகொண்ட தாமுளத்தில் புலன் குறுக்கக்
கடுகளவும் எண்ணாதார் கடுகி னாரே
1300

பாசறைகள் தாண்டியுள்ளே பலக டந்தார்
பார்த்தவர்கள் நிஜாமுடைய நட்பு வீரர்
நேசப்படை தாமென்றே நினைவில் கொள்ள
நடுவிடையில் கண்டவரைத் துண்டம் செய்தார்
வீசியவாள் கண்டங்கள் நோக்கிச் சீவ
வீழ்ந்தனவாம் உடலங்கள் திப்பு வீரர்
நீசர்படைத் தளகர்த்தன் இருப்பி டத்தை
நோக்கிவழி பாய்ந்தனரே உயிர்க்கஞ் சாரே
1301

பெருங்குழப்ப நிலையொன்று தோன்றிற் றாங்குப்
பறங்கியர்கள் பலபேர்கள் மாண்ட பின்னே
தெரிந்ததுவாம் வந்தவர்கள் யார்தா மென்றே
திப்பரசர் வீரரென சட்டென் றேயோர்
மருவார்தம் படைத்தலைவன் நிலைமை யோர்ந்து
மாய்த்திடவும் ஆணையிட்டான் வெள்ளைக் காரன்
உருமாறிப் போனதுவாம் புலத்தின் ஆட்சி
ஒன்றியது பறங்கியர்கை பலபேர் மாண்டார்
1302

விழிப்படைந்தான் கான்வாலிஸ் திப்பு வீரர்
வீரத்தை வரித்துளத்தே வியப்புங் கொண்டான்
இழப்பினுந்தம் உயிர்தலைவன் உறுதி வெல்ல
இணைந்தியற்றும் தீரத்தைக் கண்ட யர்ந்தான்
துளிர்த்ததவன் நெஞ்சத்தே தெளிவும் இந்தத்
திறல்கொண்ட வீரர்கள் இருக்கு மட்டும்
ஒழிக்கவிய லாதுதிப்பின் புகழை என்றே
இறுமாப்பில் திளைத்தவவன் அடங்கி னானே
1303

பட்டாற்றான் புரியுமென்ப துணர்ந்த தாலே
பிரியமுற்றான் சமாதானம் செய்து கொள்ள
விட்டாலும் மற்றுமொரு கார ணத்தை
வரித்தனனே வஞ்சகத்தின் விளைவா மஃது
திட்டப்படி திப்புவைத்தாம் வெற்றி கொண்டால்
தேறுவதில் தமதுபங்கு மூன்றி லொன்றாம்
கட்டாயப் பங்குண்டு மற்ற வர்க்கும்
கொடாதிருக்கச் சமாதானம் உதவு மென்றே
1304

பங்குகொண்டால் பலமவர்க்கும் அதிக மாகும்
பாதகமாம் எமக்கதுவும் பகைமை தோன்றின்
எங்களையும் வெல்லவவர் முயலு வார்கள்
ஏற்றதல்ல என்னுமொரு கார ணத்தைப்
பொங்குசினங் கொண்டுதிப்பை அழிப்ப தென்னும்
பிடிவாதம் கொண்டிருந்த மெடோவ்ஸீக் கோத
பங்கினுக்குத் தன்கருத்தை அவனும் சொல்வான்
பொறுப்புணர்ந்து வாலீஸீம் புரிய வைத்தான்
1305

காரணத்தைப் புரிந்துகொண்டு மெடோவ்ஸீம் ஏற்கக்
கான்வாலிஸ் திப்புவுக்கோர் ஓலை தன்னைச்
சேர்ப்பித்தான் முன்னவரின் ஓலைக் கின்று
தருகின்ற பதில்போன்றும் அமைவ தாகத்
தூரநோக்குக் கொண்டதிப்பும் அவையைக் கூட்டித்
தளகர்த்தர் மந்திரிமார் முன்னே என்ன
காரணமாய் அழைத்ததென எடுத்துச் சொன்னார்
கைக்கொண்ட ஓலைதனைப் படித்திட் டாரே
1306

சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளச்
சொல்லிவைத்த நிபந்தனைகள் அனைத்துங் கூறி
"உமதுபதில் என்னவென உரைப்பீர்" என்றார்
உடனவையோர் எழுந்துநின்றே ஒரேமூச் சாக

"எமதுபதில் உயிர்த்தியாகம் செய்வ தாகும்"
என்றனரே மந்திரிமார் தளகர்த் தர்கள்
இதுசமயம் அல்லவதற் கென்றே ஏற்கும்
ஏதுக்கள் இயம்பிடவே ஏற்றிட் டாரே
1307

"சுற்றிவரப் பல்லிலட்சம் படைவீ ரர்கள்
சூழ்ந்துள்ளார் நமதுபடை எட்டில் ஒன்றே
மற்றவரின் பலமறிந்தே மோதல் வேண்டும்
முடியாதென் றறிந்திட்டால் தவிர்த்தல் இலாபம்"
கற்றவர்கள் எடுத்துரைத்த கார ணத்தைக்
காதளவி லில்லாது கருத்தால் ஓர்ந்து
முற்றொன்று தோன்றியதே சமாதா னத்தை
முன்னெடுத்துச் செல்லுவதாய் மறுப்பா ரற்றே
1308

ஒப்பந்தமும் பிள்ளைப் பிணையும்

ஒப்பந்தம் ஒன்று தோன்ற உடன்பட்டார் திப்பு தாமும்
தப்பித்தால் போதும் என்ற தன்மையில் பகைகொண் டோரும்
ஒப்பினர் பெரும்ப ரப்பை உவப்பதோ டிழப்பீ டாக
முப்பத்தின் பத்து இலட்சம் முதலும்கொள் வாகி லாமே
1309

கான்வாலிஸ் கவர்ன ரோடு கதைத்தொரு முடிவு காண
வேண்டிடு நிலைக்குச் சுல்தான் வந்ததும் மீர்சா திக்கைப்
பூண்டிடச் செய்தார் தூது பொருந்தியே அவனுஞ் சென்றான்
வேண்டிலன் நாட்டு நன்மை வரித்தனன் சுயந லத்தை
1310

மக்களின் நன்மை நாடி மன்னர்முன் இட்ட சட்டம்
ஒக்காது வெறுப்பை நெஞ்சுள் ஒன்றிட வளர்த்த வன்றான்
மக்களின் வரிக்கு றைப்பை விரும்பினார் நாட்டுப் பற்றை
தக்கவைத் திருக்க வேண்டும் துணையென உணர்ந்த தாலே
1311

காரணப் பொருத்த மற்றுத் திறைசேரிச் செலவு செய்தல்
யாருக்கும் உரிமை யில்லை எனுமொரு சட்டந் தோற்றிச்
சீராக நடைப்ப டுத்தச் சொன்னதால் தமக்கு வந்த
ஊர்ப்பணக் கையா டல்கள் ஒழிந்ததால் வருந்தி னானே
1312

மீர்சாதிக் உடனா யின்னும் மந்திரி சிலருந் தாங்கள்
நேர்மைக்குப் புறம்பாய்ச் சேர்த்த லாபங்கள் ஒழிந்த போதே
சார்ந்தனர் ஒன்றாய் மன்னர் திப்புவுக் கெதிராய் சூழ்ச்சி
ஓர்ந்தனர் தருணந் தன்னை ஒன்றிடக் காத்தி ருந்தார்
1313

தீர்வுக்குத் தூது செல்லுஞ் சந்தர்ப்பம் வந்த போழ்தே
ஏர்ப்புடைத் தாகக் காலம் இணைந்ததாய் எண்ணி சாதிக்
பூரித்தான் பொருந்தும் வாறே பகைவனும் பேரம் பேச
நேரத்தைத் தக்க வைத்தே நெறியிலான் பலன்கொண் டானே
1314

கான்வாலிஸ் தூது வந்த கயவனாம் சாதிக் கைத்தன்
சாண்வலைக் குள்ள தாகச் சுழற்றிட முடிந்த வாறாம்
தேன்குழைத் தெடுத்துக் கோத்த சொற்களில் ஆசை கூட்டி
தான்கொண்ட எண்ணந் தன்னில் செயம்பெற்றார் சூழ்சிக் காரர்
1315

திப்புவை வெற்றி கொள்ளத் துணைசெய்தால் மாற்றீ டாக
திப்புவின் அரசுப் பேற்றைத் தருவதாய் வாக்க ளித்தார்
நப்பாசைக் கிலக்காய் நாடு நம்வசம் வருமென் றெண்ணி
ஒப்பினான் உதவத் துரோகம் உடன்பட லாகிற் றன்றே
1316

திப்புவின் பக்கஞ் சார்ந்து தூதுவந் தோன்பின் மாற்றார்
செப்புதற் கடங்கி அன்னார் தூதுவன் போலு மானான்
உட்பகை நெஞ்சு றைந்த உருவத்தை மாற்றி நல்லோன்
பெட்பினில் வதனங் காட்டிப் போயினன் அரசர் முன்னே
1317

என்னதான் கேட்டார் என்றே இயம்பிடக் கூறச் சொல்வான்
"பொன்னொடு நிலமும் கேட்டுப் பிடிவாதம் செய்கின் றார்கள்
பொன்மூன்று கோடி கூடப் பறித்திட உவக்கும் பூமி
தன்னையீங் குரைத்தல் கேட்பின் சுல்தானே சினப்பீர்" என்றான் 1318

கேட்டிடும் நிலப்ப ரப்பைக் கூறிட வெகுண்டார் மன்னர்
மேட்டிமை வருவாய் சேர்க்கும் மாநிலம் மைசூர் எல்லை
நாட்டின்மெய்ப் பொருளா தாரத்தின் நிலைக்களன் என்றார் கேட்டு
நாட்டுடை நிலையில் இன்று நமக்கென்றோர் வழியில் லென்றான்
1319

முன்றிலில் "கான்வா லிஸ்"தன் முகத்திரை அழித்தே அன்பால்
ஒன்றிய பாங்கு காட்டி ஒன்றெனக் கரங்கள் நீட்டி
அண்டிவந் தணைத்தார் அஃதில் அணுவுமே பொய்மை இல்லை
கண்களால் கனிந்தார் தாய்மைக் கோன்மைவெல் லுளத்தின் பாங்கே
1320

அற்றைநாள் நிலைமை நோக்கி அளிப்பதாய் வாக்க ளித்தார்
முற்றுமே மீர்சா தீக்கின் முன்மொழி வாகும் மாற்றார்
பெற்றிடச் செய்த லுக்குப் புகன்றவ னவனே பொன்னில்
முற்றுமல் லாது பாதி முதல்த்தர மன்ன ரேற்றார்
1321

வருடமொன் றாகு முன்னர் மீதிப்பொன் தருவ தாகப்
பொருந்தினார் அரசர் கேட்டுப் பொருந்தினார் வாலிஸ் சாதிக்
இரும்பனை நெஞ்சன் உண்ட இரைப்பைக்குந் துரோகஞ் செய்தான்
கருத்தினில் பொதித்தான் வேறு கருத்தினை வாலிஸ் ஏற்றார்
1322

தருவதோ உண்மை யானால் தருங்காலங் குறைக்க வேண்டின்
பொருந்துக பணய மாகப் பிள்ளைகள் தம்மை என்றான்
தருவதற் கிணங்கா விட்டால் திரும்பியும் யுத்தம் செய்யப்
பொருத்தலாம் கார ணத்தைப் பிறர்குறை சொல்லார் என்றான்
1323

சாதீக்கின் கருத்தைக் கேட்டுத் திருப்பதிகொண் டதுபோற் சொல்ல
ஓதினார் கான்வா லிஸ்பின் ஒருநாளுள் முழுத்தொ கையும்
மீதியில் லாது வேண்டும் முடியாது போயின் பிள்ளை
சாதகப் பிணையாய் வேண்டும் சொல்கவென் றனுப்பி வைத்தார்
1324

சுல்தானை நேரில் கண்டு துயரத்துட் தோய்ந்தோன் போன்றே
சொல்லுவான் சாதிக் "மன்னா சொல்லிட வொண்ணாச் சேதி
பொல்லாதார் பணத்தை இன்றே பெறச்செய்தல் வேண்டும் அன்றேல்
சொல்லிய பாதி யோடு தருகவீர் பிணையென்" றாமே 1325

யாரினைப் பிணையாய் வேண்டி இரக்கின்றார் என்றார் திப்பு
பேரினைச் சொன்னார் சொல்லப் பலனற்றேன் என்றான் பொய்யாய்க்
"கூறிடும்" என்றார் மன்னர் கூறினான் கேட்டுப் பூமி
கூறிரண் டாகித் தன்னைக் கொண்டது போலு மானார்
1326

சுழன்றதோ தன்னைச் சுற்றிச் சேர்ந்துள பொருள்க ளெல்லாம்
சுழன்றதோ உடலை விட்டுத் தலை:யன்றி இரண்டு மாமோ
கழன்றதோ ஆவி கொண்ட கூட்டினை இதயந் தன்னைப்
பிழிந்ததார் எதுவுந் தோன்றாப் பொய்மையுள் தவித்திட் டாரே
1327

பிணையென உங்க ளன்புப் பிள்ளைக ளிரண்டு பேரை
இணைத்திட நாட்டங் கொண்டார் இதயமில் லாத பொல்லார்
இணங்கிலை நானும் இஃதை ஏற்றிட இயலா தென்றேன்
பிணங்கினார் வந்தேன் சுல்தான் பதில்கொள என்றிட் டானே
1328

திட்டங்கள் அனைத்தும் இட்டுத் தந்தவ னவனே தன்னை
விட்டவை கான்வா லிஸ்தம் கருத்தெனப் பொய்மை சொன்னான்
மட்டிலாச் சோக நோயுள் முழுமையும் புதைந்தார் தந்தை
பட்டிடும் அவர்துன் பத்தைப் பார்த்துள்ளம் மகிழ்ந்தான் சாதிக்
1329

பற்றிய நிலப்ப ரப்பைப் பங்கிட்டார் பணத்தை ஆண்டு
முற்றிட முன்னர் திப்பு முழுமையாய்த் தருதல் வேண்டிப்
பெற்றனர் மகவி ரண்டைப் பாசத்தின் முதன்மை கொண்டே
உற்றவந் நிலைமை வேறோர் உளத்தினைப் பொறுக்கச் செய்யா
1330

பிள்ளைக ளிரண்டைப் பொன்னின் பிணையாக வேண்டிப் பெற்று
கொள்ளையர் வெள்ளைப் பேர்கள் கொண்டுடன் சென்றார் தந்தை
வெள்ளமாய் நெஞ்சுட் சோக வேதனை பீறிட் டோட
கள்ளமில் சிறார்கள் தம்மை கையளித் துடல்சோர்ந் திட்டார்
1331

சதவய தான 'காலிக்' தம்பியாம் 'மொய்சுத் தீன்'உம்
அதியுயர் பாது காப்பில் அன்னியர் வசமே ஏக
பதியதற் காக வேண்டும் பாடெலாம் புரிய ஏவி
நிதிபெறும் முயற்சி தன்னில் நிலைப்படத் தனித்திட் டாரே 1332

தாயினைப் பிரிந்த கன்றின் சோகத்தில் மக்கள்: தம்மின்
சேய்களைப் பிரிந்த துன்பத் தாங்கலில் தந்தை கண்டோர்
வாய்விட்டே அலறச் செய்யும் வேதனை சீராங் கத்தில்
தோய்ந்ததந் நாளாம் ஏட்டில் செறிந்தது கல்லிற் போன்றே

1333

பிரிந்துசெல் முன்னர் தாயைப் பார்த்திடச் சென்றார் தாயைப்
பிரிந்தநாள் தொட்டுத் தாய்க்குப் பதிலெனக் காக்குந் தாயாம்
பெருந்தவப் பலனா மன்ன பெறாதுமே பெற்றாள் தந்தை
கருத்தினைக் கருத்தாய் கொண்ட காவலர் மனையைக் கண்டார்

1334

கண்கணீர் கோத்து வீங்கிக் கவலுரு வாகக் கண்ட
கண்களும் கலங்கிப் போகக் கைகளைப் பற்றி மக்கள்
எண்ணியீ ராறு மாதம் இடைவெளி இதற்கு ஏனாம்
புண்ணுண்ட தாமோ உள்ளம் பொறுத்திட வேண்டு மென்றார்

1335

உயிரனைச் செல்வங் காள்நீர் ஒருகுறை தானு மற்றென்
இருவிழி யாக வாழ்ந்தீர் எப்படிப் பிரிவேன் என்னைக்
குருடென வாக்கிச் செல்லுங் கோலத்தைத் தாங்கு வேனோ
அருவுரு வான அல்லாஹ் அடைக்கலம் நீங்க ளென்றார்

1336

கட்டியே அணைத்து நெற்றிக் குறியினில் முத்த மீந்தே
ஒட்டியே ஈர்பு றத்தும் ஒன்றியே வரவ ழைத்து
இட்டமில் லாது மக்கள் ஏகிடு நிலைமை காணார்
மட்டினில் சென்று நின்றார் மன்னவர் நோக்கி னாரே

1337

தந்தையுஞ் சோகத் தாலே தாயனைத் திருக்கக் கண்டார்
எந்தையே எதுவும் நேரா இறைதுணை உண்டா மன்றோ
தந்தையின் மக்கள் நாங்கள் திப்புவின் உதிரம் அச்சஞ்
சிந்தையிற் கூட வில்லாச் சிங்கங்கள் கவலே னென்றார்

1338

பூரித்துப் போனார் மன்னர் பெருஞ்சுமை நெஞ்சி ருந்து
தூரத்தி லெறிந்தாற் போன்ற சொகுசினை யுணர லானார்
வீரவீரச் செல்வ மென்றே வழங்குவார் ஆனால் இன்றோ
பேரரும் உறுதி கண்டார் பெற்றதன் பேறுற் றாரே 1339

வார்த்தையிற் கோத்த வீரம் விழிகளில் மிளிரும் தம்மின்
கோத்திரப் பெருமை அன்னார் குருதியின் குருதி யாகச்
சேர்ந்திடை யூறிக் கொண்ட செழுமையைக் கண்டார் தந்தை
பூத்ததோர் நெகிழ்வு சோகப் பொழிவிடை மின்னல் போன்றே

1340

மனைவியின் அணைப்பில் நின்ற மக்களை யருக ழைத்துத்
தனதுட லோடு கூட்டிச் சிறுபொழு திருத்தி நீக்க
மனமிலா திருந்தும் வாக்கை மதித்ததால் விடுத்தார் செல்வர்
கணமெனுந் தரியார் வந்த காவல ரேடு சென்றார்

1341

மைசூர் மக்களின் மனக்குமுறல்

வாசலில் நிறைந்தார் பெண்டிர் வளரிளஞ் சிறுவர் பிள்ளை
நேசத்தில் தவிக்குந் தாய்மார் நடைதளர் மூத்தோர் கோபத்
தீச்சுடர் கனற்றுங் கண்கொள் தந்தையர் முதலாம் முற்றும்
பாசத்தில் திளைத்தோர் மன்னர் பிள்ளைகள் மீதி லுற்றார்

1342

உரியவெம் பொருட்க ளெல்லாம் உவந்துநாம் அளிப்போம் நாங்கள்
தருகிறோம் எமது பிள்ளைச் செல்வங்கள் தமையும் எங்கள்
இருவிழி வேண்டு மாயின் இழக்கவும் துணிவோம் என்றார்
தெருவையும் மறைத்தார் செல்லுந் திசைவழி தோன்றா வாறே

1343

"மக்களின் சொந்தம் எங்கள் மன்னவர் அதுபோல் மன்னர்
மக்களும் எமது சொந்தம் மாற்றான்கை தரநாம் ஒப்போம்"
துக்கத்துட் தோய்ந்த மாந்தர் சொல்லுவார் வழியி றைஞ்சப்
பக்கமுற் றோரை நோக்கிப் பதிலற வவரும் நின்றார்

1344

வழிவிட மாட்டோம் எங்கள் வெற்றுடல் மீது வேண்டின்
குழந்தைகள் தம்மை நீங்கள் கொண்டுசென் றிடலாம் என்றே
வழிதனின் குறுக்கே வீழ்ந்து வாதிட்டார் தாய்மார் மற்றோர்
முழுமையும் சேர்ந்தார் பாதை மூடிடப் பரவி னாரே

1345

சத்தியம் பொய்க்கும் மன்னர் சொன்னதை செயாது போனால்
உத்தமக் குடிகள் நீங்கள் ஒப்புவீர் நிலைமை யோர்வீர்
சித்தத்தில் கொள்வீர் இன்று தீதிருந் தெம்மைக் காக்க
ஒத்ததாம் முடிவு இஃதே உடன்படும் அமைதிக் கென்றார்
1346

நிலைமையை எடுத்துக் கூறி நகருக வென்று கெஞ்சப்
பலமிழந் தார்கள் உள்ளம் பொறுப்பினை யுணர்ந்தார் மன்னர்
சொலைமறுத் தவர்தம் வாக்கைச் செயல்பெறத் தடுத்தல் வேண்டா
நிலைமையை ஓர்ந்தார் சற்றே நீங்கினார் வழிகொண் டாரே
1347

வெள்ளியால் வடித்தெ டுத்து வளமாகப் பட்ட ணைகள்
உள்ளிடச் செய்தி ருந்த உயர்**'அம் பாரி'** தன்னில்
பிள்ளைக ளிரண்டும் வேங்கைப் புத்திரர் போல மர்ந்தார்
கொள்ளிடம் கரியாம் அஃது கொலுவெழில் கொண்ட தன்றே
1348

பட்டினால் **'முகபா ட'**த்தில் பதிந்தநல் மணிகள் அள்ளிக்
கொட்டிடும் ஒளிசெங் கைக்கோன் கதிரவன் சுடரோ டொன்றப்
பற்றிய இடங்க ளெல்லாம் பகலிரண் டொன்றி னால்போல்
உற்றது கண்டார் கண்கள் உறுத்திடத் தலைகு னிந்தார்
1349

பசுங்கொடி ஏழு தாங்கிப் பரிகளில் எழுபேர் செல்ல
அசுவங்கள் தொடர்ந்தே ஒட்டை அணிவர வாள்வேல் ஈட்டி
திசையிரு புறமுந் தாங்கி தோள்வலு மறவர் ஏக
திசையெதிர் தகன்றார் திப்புத் திருவிரண் டழியாச் சோகம்
1350

தாங்கொணாத் துன்பத் தாலே சகித்திடார் காட்சி நோக்கும்
பாங்கிலார் கண்ணீர் கன்னங் கனற்றிட விழியூ நோக்கத்
தேங்கின வாமோ வெள்ளம் துன்பத்தின் நிழல தாமோ
ஆங்கிரு புறமும் வீதி அணிதிரட் கூட்டத் தூடே
1351

வெள்ளையர் முகாமை அண்டும் வேளையில் குண்டொ லீகள்
கொள்ளையாம் இருபத் தொன்று கணக்கினில் வரவேற் றற்காய்
தள்ளலில் வெறுப்பா லன்னார் சங்கைசெய் தார்கள் சின்னப்
பிள்ளைக ளென்றிட் டாலும் பிறப்பினால் கோன்கு லத்தோர் 1352

தொழுகைக்கு ஏற்ற வாறு தங்கிடு கூடா ரங்கள்
ஒழுங்குற அமைத்தி ருந்தார் ஒன்றிடும் பள்ளி யண்டே
குழுவினர் நேச நாட்டார் கூடவே வரவேற் றார்கள்
பழுதிலை வெள்ளை யர்தம் பண்பினில் ஏற்றங் கொண்டார்
1353

தளபதி மார்க ளொன்றத் திப்புவின் குமாரர் "வாலிஸ்"
உளவிடத் தழைத்துச் சென்றார் ஒன்றெனக் காவல் வீரர்
வழிதொடர் கரையி ரண்டும் வழாங்கினர் சீர்மை காண்பின்
இளையவர்க் கல்ல திப்பே ஏற்றதாம் போலு மாமே
1354

திப்புவின் அந்த ரங்கத் துணைச்செய லாளர் வந்தே
ஒப்புதல் செய்தார் "இன்றே உடன்படு காலை மட்டும்
திப்புவெம் மன்னர் சொந்தம் திருமக்கள் உங்கள் பேரில்
இப்பொழு திருந்தே யானார் இனிப்பிதா நீங்க" ளென்றார்
1355

குலாம்மலிக் கானு ரைத்த கருத்துடை வார்த்தைக் கோவை
வலியுடைத் தாயி ருக்க "வாலிஸ்"தன் பேரில் சொல்வார்
"நலிவுறா தென்றன் வாக்கு நானவர் பாது காப்பின்
நிலைதவ றாதி ருப்பேன் நிச்சயம் அறிவீர்" என்றே
1356

வாக்கொடு சிறுவர் தம்மின் விருப்பத்தை ஏற்கும் நோக்கில்
சீர்க்கரத் தணியத் தந்தார் சொர்ணக்கைக் கடிகா ரங்கள்
பார்க்கவென் றவரை 'வாலிஸ்' பின்தொடர் நாளி லேக
ஏற்கவென் றிளவ லாரோர் இடைவாளைப் பரிச ளித்தார்
1357

பாரசீ கத்து வேலைப் பாடுடை வாளை வாகை
மார்பினன் மக்கள் தந்தார் மகிழ்ச்சியால் 'கான்வா லிஸ்'சும்
சார்புடைக் கருவி யன்ன துப்பாக்கி தமைத்தம் சார்பாய்ச்
சேர்த்துமே தந்தார் என்னும் சீர்வர லாறு முண்டே
1358

ஓராண்டு முடிவ தற்குள் ஒப்பந்தம் முற்றுப் பெற்றுத்
தீர்ந்தது ஆயி ரத்து எழுநூற்றுத் தொண்ணூற் றீரில்
நீரறக் காய்ந்து போன நிலமென ஆனார் திப்பு
காரணம் பொருளா தாரம் குன்றிய நிலையி னாலே 1359

செய்தவவ் வொப்பந் தத்தைச் செயலுருக் காட்ட முற்றும்
செய்வன அனைத்தும் திப்பு செய்திட்ட போதும் வெள்ளைப்
பொய்யர்கள் வாக்கு மாற்றி வீண்பிடி வாதம் செய்தார்
கையறு நிலைக்குள் ளாக்கிக் கடுஞ்சினங் கொள்ளச் செய்தார்
1360

ஒப்பந்தப் படிதம் நாட்டின் ஒருபெரும் புலத்தை ஈடாய்
ஒப்பியே இருந்த தாலே உள்ளுறை வருமா னத்தைச்
செப்பிடும் எழுத்தில் கொண்ட தனவேட்டுப் பதிவை யெல்லாம்
ஒப்படைத் திடப்ப ணித்தார் ஓரிரு தினத்துள் ளென்றார்
1361

தமதுயிர் மக்கள் தம்மைத் தந்தவர் புறத்தில் ஈடாய்
அமைத்துமவ் வெள்ளைப் பேர்கள் அணுங்கின்கைப் பொறிக்குள் சிக்கிக்
குமைந்திடு பாங்கி லாக்குங் கொள்கையில் நிலைத்தார் கீழோர்
சமைந்ததோ இல்லை நீதி தருக்கரின் செயற்பாட் டாலே
1362

சீரங்கப் பட்டி னத்தின் திறவுவாய் போலி ருக்கும்
காரணங் கண்டு **'டெங்கனிக் கோட்டை'**யை **'குடகு' 'ஊட்டி'**
சேர்ந்திடப் **'பெல்லரி' 'சேலம்'** தம்வசம் வேண்டு மென்றார்
ஓர்ந்திடில் இவை'சீ ரங்கம்' ஒப்பான நிலப்ப ரப்பே
1363

வேண்டுதல் தவிர்ப்பீர் வேறு வேண்டிடும் நிலத்தை நீங்கள்
வேண்டிய வாறு கொள்வீர் விடுகவிப் புலங்க ளென்ன
வேண்டுவ திவையே வேறு வழியிலை எனிலோ யுத்தம்
வேண்டுவ தாகும் என்று வேங்கையைச் சீண்டி னாரே
1364

நம்பிக்கைத் துரோகமும் நாடுகடத்தலும்

ஒப்பந்தப் படிப ணத்தை ஒப்புதல் செய்த போதும்
தப்பிதம் செய்தார் தம்பால் சேர்த்துள சிறுவர் தம்மைத்
திப்புவின் கைய ளிக்கத் தவறினர் இருப்பை விட்டும்
அப்புற மாக்கச் செய்தார் ஆயத்தம் அரங்கே றிற்றே
1365

காவலா யிருந்த மைசூர் காவலர் கைவேல் நீக்கி
ஏவினர் சிறுவர் தம்மை இடம்பெயர்ந் திடவென் றாக
காவலாய் 'கப்டன் வேல்ஸ்' கூடவே "மங்க ளூர்'க்குப்
போவதாய் நிர்ண யத்தைப் பகைவருட் பதிவாக் கிற்றே
1366

திட்டமும் மாறிச் சென்னை சேர்த்தனர் சிறுவர் தம்மை
விட்டிட நினைத்தார் 'வாலிஸ்' விடுதலை விரும்பா துற்றுத்
திட்டமொன் றுரைத்தார் நிசாம்தம் சார்பினில் வைத்தி ருந்தால்
மட்டிலா நன்மை சேரும் மக்களால் எனவா மென்றே
1367

உடன்பட வில்லை 'வாலிஸ்' உடன்படார் மராட்டி யாரும்
இடமிலை யுள்ளத் திந்த இளஞ்சிறு பால ரோடு
தொடரநாம் யுத்தம் என்றார் திப்புவின் பேரில் பின்னர்
தொடுத்தனர் நிபந்த னைகள் சினங்கொளு வாற தாமே
1368

நாட்டினிற் பாதி தம்பாற் சேர்த்திட அதிலும் நாட்டில்
மேட்டிமை லாபம் சேர்க்கும் மேன்நிலம் மணப்பொ ருட்கள்
ஈட்டிடும் பூமி வாய்போல் இருப்பது சீரங் கத்தின்
கோட்டைக்கும் உகந்தாற் போலாம் கேட்டனர் வெள்ளை யர்கள்
1369

கொடுத்திடார் என்ற றிந்தும் கொடுத்திடப் பணித்த தாலே
துடித்ததே உடல மெல்லாம் திப்புசெந் தழலில் நின்றார்
விடுத்ததன் நோக்கம் தம்மின் வாரிசு இரண்டி னோடும்
அடித்திடக் கொள்ளை செல்வம் அனைத்தையும் எனப்பு ரிந்தே
1370

ஒப்பிட வொண்ணா வாறே உவந்ததம் மண்ணைச் சேர
ஒப்பிலாப் போழ்து காலம் உடன்படா நகர்வு செய்ய
ஒப்பந்த நாட்கள் மீறும் உபாதையால் வெகுண்ட 'வாலிஸ்'
கப்பிய சினத்தால் யுத்தக் கட்டளை ஓங்கச் செய்தார்
1371

'வில்லியம் மேடோவ்' வெள்ளை வீரர்க்குத் தலைமை தாங்கிச்
செல்லவோர் புறத்தில் மற்றோர் திசையினில் நிசாமும் மைசூர்
எல்லைமுன் பாளை யத்தார் ஆற்காடு நவாபும் சேர்ந்தார்
கொள்ளையாம் படைகள் தொண்ட மானுடன் சேர்ந்தி ருந்தார் 1372

மூன்றாவது மைசூர்ப் போர்

கோயம்புத் தூரி ருந்து கூறிடும் பாதை மூன்றில்
போயினர் திண்டுக் கல்லோ டீரோடு மைசூர் என்றே
வாய்த்தது கடுமெ திர்ப்பு வெள்ளையர் திண்டுக் கல்லில்
சாய்ந்திடு வாரோ என்னுந் தரத்தினில் தப்பித் தாரே
1373

மைசூரைத் தாக்கும் எண்ணம் வலுத்திடும் அவர்க்கா மென்றே
மைசூரின் பாதை தன்னை மறைத்திடப் பணித்தார் திப்பு
கைசோரா வண்ணந் தானே கைக்கொண்டார் தலைமை 'ப்ளொயிட்'
கையறு நிலைக்குள் ளானார் கடுஞ்சமர் தலைமைக் கர்ணல்
1374

வருகைக்காய்க் காத்தி ருந்தோர் வந்துறப் பதுங்கி நின்ற
சிறுத்தைகள் போலப் பாய்ந்தார் சிதறின அடலார் சேனை
மருவிய பேரைத் திப்பு முண்டத்தைத் தலையி ருந்தே
பிரித்தறுத் தெறிந்தார் காணும் புறமெலாம் பிணக்கா டாமே
1375

ஓங்கிய கொலைவாள் மாற்றார் உடல்தொட முன்னர் கண்முன்
வேங்கையொன் றுடல்சி லிர்த்து விழிகனற் குன்ற மன்ன
பாங்கினில் தோன்றல் கண்டார் பயத்தினால் உடல்வி யர்க்கத்
தாங்கிய ஆயு தங்கை தரைவிழச் சிலர்நின் றாரே
1376

நிராயுத பாணி யாக நிற்பவர் தம்மைக் கொல்லல்
மருவல ராகி லென்ன மாய்த்திடல் பாவ மென்னுந்
தருமத்தை யுணர்ந்த திப்பு தங்கரந் தவிர்த்து வேறோர்
உருவினை நோக்கிப் பாய உறுவது மதுவா கிற்றே
1377

கண்படு தூர மெல்லாம் காண்பது கைகால் முண்டம்
எண்ணிட வியலாக் கொள்ளை இறந்தபேர் இருபு றத்தும்
மண்சுய வண்ணம் முற்றும் மாறியே செம்மை கொள்ளும்
வண்ணமாம் குருதிக் காட்டில் குளித்தபாங் கனைய தாமே
1378

வாளொடு வாளும் கைவேல் வேலொடும் பொருத ஓசை
ஆளுமத் தலத்தில் வில்லும் அம்பும்தம் ஏவல் வீரர்
ஆளுமை காட்டும் தேகம் அரிந்துடற் புகுந்தே ஆவித்
தோழமை கூட்டி மாற்றுத் திக்கினில் வீழ மாமே
1379

தொடரிடி தோற்கு மாறு சீறின பீரேங் கிப்பேய்
மடமட வோசை கூட்டி மிகைத்தன துவக்கின் ஓலம்
உடன்படும் அவற்றி னோடே உயிர்விடும் மனுக்கு ரல்கள்
கடல்படும் அலையின் ஓசைக் கோரமோ கடுகிற் கீடே
1380

போர்மிகக் கொடுமை யென்னும் புரிதலை நிலைநி றுத்தும்
தேர்தலைக் கண்டார் போரில் திளைதவீர் திறத்தி னோரும்
கோரமே எங்கும் வீரர் கொலையுண்ட பிணங்கள் தேக
ஊறுகொண் டுபாதை யுற்றோர் ஒன்றுக்குப் பலவென் றாகும்
1381

புண்ணுண்ட வீரர் செந்நீர் பீறிட உதவி நாடிக்
கண்படு திக்கி லெல்லாம் காலோட அலைந்தார் அன்னார்
துன்பத்தி னெல்லை தாண்டித் துடித்துடல் களைத்தார் வெய்யோன்
விண்விடுத் தகன்றான் கங்குல் வலைவிரித் திருளைப் போர்த்தும்
1382

சமரிடைப் புலிய தாகச் சுழன்றுந்தன் சக்தி மீறி
அமைந்தது வெற்றி வெள்ளை அடலரின் பக்க லென்றே
தமதுடை நிலைமை யோர்ந்தார் திப்புபோர்க் களத்தில் நீங்கிச்
சம்மதங் கொண்டார் ஒன்றுஞ் சமாதான நிபந்த னைக்கே
1383

எழுபது கோட்டை யோடே எண்ணூறு பெரும்பீ ரங்கி
இழப்பினில் சேரும் வீரர் இறந்தவர் காணா துற்றோர்
பழுதுடல் கொண்டோ ரென்று பத்தைந்தின் ஆயி ரம்பேர்
களத்திழப் பிதுபோ லென்றுங் கண்டிலார் கவல்மிக் காரே
1384

அதிகாரம் பொருளா தாரம் அனைத்திலும் பின்ன டைந்து
மதிப்பையும் இழந்த கோலம் முன்னஞ்சி நின்ற பேரும்
மதித்திடா தச்சம் நீங்கு மாறென வானார் திப்பு
விதித்ததும் அதுவா மென்றே விறலுளத் தோர்மை ஏற்றார் 1385

பற்பல முனையில் யுத்தப் பங்குறு நிலையால் வந்த
துர்ப்பலன் அதுவா மன்றித் தனித்தனி யாமென் றாகில்
பொற்புறும் வெற்றி யன்னார் புயங்களி லென்பார் பின்னாள்
அற்புதர் தம்மி னாட்சி ஆளுமை விளக்கும் பேர்கள்

1386

கைப்படு பிரதே சங்கள் கூட்டெனச் சேர்ந்தோ ருள்ளே
மெய்ப்படச் சமமாய்ப் பங்கு மேற்கொள வேண்டு மென்னும்
வைப்புடன் படிக்கை நோக்கார் வெள்ளையர் நீதி கொன்றே
பொய்ப்பட வைத்தார் தம்மின் பேர்நலங் கொண்டிட் டாரே

1387

முக்கிய கோட்டை பல்லும் பெருநிலப் பரப்பும் தம்பால்
தக்கவைத் தார்கள் மிக்கத் தோதென மலபார் ஓரத்
திக்கினில் வியாபா ரத்தில் வாசனைத் திரவி யங்கள்
மிக்கதாய் இலாபஞ் செய்யும் மேட்டிமை அறிந்த தாலே

1388

தோல்வியைக் கண்ட போழ்தும் துவண்டிட வில்லை திப்பு
தோல்வியே வெற்றிப் பாதை துலக்கிட ஓர்மை கொண்டு
சால்புறு வழிக ளோர்ந்து செயலுறு பணிமேற் கொண்டார்
காலமோ சிறிது மீட்டுக் கொண்டதோ பலம டங்காம்

1389

அமைச்சர்கள் அவையைக் கூட்டி அரசாங்க வரிகள் தம்மைச்
சுமையின்றி மக்க ளுக்குச் சிறிதென அதிக ரித்தார்
தமைச்சார்ந்து மீத முற்ற தம்புல மனைத்தும் கூறாய்
அமைத்ததன் ஏற்றத் திற்காய் ஆவன செயப்ப ணித்தார்

1390

உடன்பட்ட வாறே பொன்னை உரியநாள் தந்து தம்மின்
கடன்தீர்த்துப் பிடித ளர்த்திக் கொண்டதும் நிலைத்தி ராது
படைநடத் திடத்து ணிந்தார் பகைவரை ஒடுக்க வென்றே
உடனதற் கான தெல்லாம் உருவாக்கம் பெறலா கிற்றே

1391

இழந்தவை அனைத்தும் மீட்டி இருந்ததற் கதிக மாயும்
வளங்கொள வழிசெய் தஃதில் வெற்றியுங் கொண்டார் திப்பு
களம்படு சேனை மிக்குங் கால்புலன் அர்ப்ப ணித்தார்
முழுமைகொண் டனைத்துந் தேற முதன்மையிற் பங்குற் றாரே 1392

இற்றைநாள் பணயம் வைத்த இளவல்க ளிரண்டுந் தந்தை
பெற்றிடப் பிரிவின் தாபம் போக்கிட இழந்த தெல்லாம்
முற்றுமே கொண்டாற் போன்று மனநிறை வுற்ற செய்கை
வற்றிய கடல்மீண் டுற்ற வாறெனப் புகலல் சாலும்

1393

போரினில் வாகை கொண்டும் பெருந்திரு வீழ்ச்சி கண்ட
பாரிய மாற்றம் வெள்ளைப் பறங்கியர் தம்மைச் சூழும்
நீரறக் காய்ந்த பாலை நிலமென வானார் செல்வம்
சேருதற் கான தெல்லாம் செய்தனர் வேற்று நாட்டார்

1394

படைபலம் பொருளா தாரப் பலமொடு தம்மை மீட்ட
திடனொடு பிரெஞ்சுக் காரர் துணையையும் வேட்டல் வேண்டி
உடன்பாடு செய்தார் யுத்த ஒத்துழைப் பென்னும் பாங்கில்
கடன்படு நிலையி லாத கொள்கையாம் திப்பு மன்னர்

1395

பொறியிய லாளர் யுத்தப் பயிற்சியில் வல்லோ ரென்ன
திறன்மிகு பிரெஞ்சுக் காரர் சீரங்கப் பட்டி னத்தில்
பெறுநரு மானார் ஊதி பத்தினைத் திறமைக் கேற்ப
மறுபுலம் வெள்ளை யர்கள் முற்றுமே அறிந்திட் டாரே

1396

கிருஷ்ணாராவின் துரோகமும் கைகடந்த கோட்டையும்

ஆயிரத்தோ டெழுநூற்றுத் தொண்ணூற் றொன்றின்
ஆனதிங்கள் பிப்ரவரி 'கான்வா லிஸ்'பொய்
மாயமென்று காட்டினனே "ஆம்பூர்" நோக்கி
மிதிதொடர்வான் போல்காட்டிச் "சித்தூ"ருக்கு
வாய்தான **"முக்ளிகண வா"**யி னூடே
வேகமுடன் மைசூரின் பீட பூமி
போயடையப் படையோடே வெற்றி கண்டான்
போகுவழி **"கோலாரை"**ப் பற்றிக் கொண்டான்

1397

பெங்களூரில் மார்ச்சுதிங்கள் ஐந்தாம் நாளில்
பாசறையை அமைத்தனனே கோட்டை முன்னே
தங்கலினை அறிந்தாரே திப்பு சுல்தான்
தொடர்ந்துள்ள ஆபத்தை யுணர லானார்
பங்கமுறச் செய்தவர்தம் பொருட்கள் தம்மைப்
பறித்தெடுக்கும் படியாணை பகன்றார் வீரர்
தங்கடமை தொடர்ந்தாலும் ஈற்றில் தோல்வி
தாங்கிப்பின் வாங்கினரே சேர்ந்தாற் போன்றே
1398

வெறிகொண்டான் கான்வாலிஸ் திப்பு சுல்தான்
வரித்தசெய்கை தனக்காமோர் பதிலை நாடி
உறுத்தினனே **"கர்ணல்ப்ளைட்"** தன்னை நோக்கி
ஒடுக்கவென்றே வந்தவரை அவனும் தம்மின்
பரிப்படையை ஏவிவிட்டுத் தொடர்ந்தான் திப்பின்
பீரங்கிப் படைநின்ற புலத்தைக் கூர்ந்தே
குறித்தபடி நிறைவேறா நாட்டத் தோடே
குண்டடியும் பட்டதனால் குரலி ழந்தான்
1399

எதிர்பாரா நிகழ்வதுவாம் மைசூர் வீரர்
எதிரிகளின் பலமறிந்தார் இமைப்புள் தம்மின்
எதிர்ப்புதனைப் பீரங்கி துவக்குக் கொண்டே
இலகுவினில் புரியவைத்தார் இதுபோழ் தாங்கே
குதிரைசுண்டிக் குண்டொன்றைக் குரல்வ ளைக்குக்
குறிவைத்துச் செலுத்தினனே திப்பின் வீரன்
விதிமுடியாப் போதும்தன் வார்த்தை பொய்க்கும்
விதிகொண்டான் "கர்ணல்ப்ளைட்" திரும்பி னானே
1400

புறமுதுகிட் டோடுகின்ற நிலைமை தோன்றும்
படியான தாமன்று பறங்கி யர்க்கு
முறியடிக்கப் பட்டதொடு நான்கு நூறு
மாற்றாரும் பிடியுண்டார் கைதி யானார்

மறுமுறையும் தொடர்ந்தார்கள் விட்டா ரில்லை
"மூர்ஹவுஸ்"ம் "மெட்டோ"வும் கேர்ணல் ஜென்ரல்
அருகிருந்த பெங்களூர் பேட்டை தன்னை
அடலர்கள் தாக்கினரே வெற்றி கொண்டார்
1401

பாதுகாப்புப் பலமாகக் கொண்டி ருந்தும்
புயல்போன்ற தாக்குதலால் பகலில் பாதி
போதுமென்றே யானதன்று குண்டு மாரிப்
பொழிவுக்குத் தாங்கொணாதே பேட்டை சாயும்
மோதுதலில் சளைத்தார்கள் இல்லை திப்பின்
மறவர்கள் ஆயினுமென் வெள்ளை யர்கள்
மோதலிலே கொண்டயுக்தி வெற்றிக் கான
மற்றுமொரு காரணமாய்ப் போன தன்றே
1402

இருபடைக்கும் உயிரிழப்பு இணைந்த வாறாம்
இணைத்தலைமை கொண்டவரில் **"கேணல் - மூர்ஹவுஸ்"**
செருக்களத்தில் சிங்கமென வெற்றி நோக்கிச்
சமர்புரிந்தான் பெருவீரன் வாகை கொண்டும்
தரித்திருக்க வில்லையவன் ஆவி குண்டு
துளைத்துடலை யதனோடு தெறித்த தாலே
பொறுத்திருந்த கான்வாலிஸ் கோட்டை தன்னைப்
புடைசூழத் திட்மிட்டான் பலன்கொண் டானே
1403

பதினாறாம் நூற்றாண்டில் **"கெம்ப கௌடா"**
பெயர்கொண்ட **'செந்தலைவர்'** மைசூர் மன்னன்
புதிதாக மண்கொண்டு படைத்த கோட்டை
பதினெட்டாம் நூற்றாண்டில் புதுப்பித் தார்கள்
அதிபலமாய் ஆனதது திப்பு சுல்தான்
அமைத்திட்டார் பெரிதாகக் கல்லி னாலே
அதிகரித்த படைப்பலமக் காலப் போழ்தில்
அடுத்தவர்கள் அண்டிடாத பாங்கி னோடே
1404

நீண்டவட்ட வடிவத்தில் மேற்ற ளத்தில்
நீண்டுயர்ந்த தொலைநோக்குக் கோபு ரங்கள்
பூண்டதந்தக் கோட்டையதில் கொடிக்கம் பங்கள்
பீரங்கித் தளங்களுடன் அமைத்தி ருந்தார்
தாண்டவிய லாதபெரும் அகழி தோண்டித்
தோன்றாத வாறுபெரும் முட்பு தர்கள்
சாண்புலமும் வெறுமையற்றே படரச் செய்தார்
சரித்திரத்தில் பதிவொன்றே இன்றஃ தில்லை
1405

பேட்டைதனைப் பிடித்துவிட்ட துணிவால் வாலிஸ்
படைகளுக்கோர் ஆணையிட்டான் துரித மாகக்
கோட்டையினைக் கைப்பற்றப் படையி னோரும்
காதுபட முன்னதனைக் கடனாய்க் கொண்டார்
மேட்டுநிலப் பகுதிகளில் நிறுத்தி வைத்தார்
முற்றுகைப்பீ ரங்கிகளைச் சிதற டிக்கும்
பெட்புடைத்தாம் அன்னவைகள் குண்டை வாரிப்
பொழிவதிலே பொழிந்தனவாம் கோட்டை மீதே
1406

பதிநான்கு நாட்களவர் பெரும்போர்ப் பாண்டம்
பீரங்கி இரவுபகல் நோக்கா வாறே
அதிபலத்தைக் காட்டினவே கல்லின் கோட்டை
அடியின்மேல் அடியுண்டே அகல்வாய் தோற்றும்
இதுவேளை உடையுண்ட "டெல்லி வாயில்"
ஏற்புடைத்தா யானதுவாம் நுழைவ தற்கும்
உதயத்தின் ஒளிகண்ட வாறாம் **"வோலிஸ்"**
உவகையினால் படையினரை வாழ்த்தி னானே
1407

திட்டமிட்டான் நுழைவதற்குப் பொருந்தும் நேரம்
தோதான வழியென்ப தாய்ந்தான் வேண்டும்
கட்டளைகள் தமையிட்டான் குறித்த திக்கில்
குவித்துவைத்தான் படைகளினை திப்பு சுல்தான்

கட்டளையு மிட்டிருந்தார் கொத்த ளத்தில்
காவலுறும் வீரருக்கு நிலைமை ஓர்ந்தே
அட்டதிக்கும் பகைவெல்ல உறுதி கொண்டே
ஆனதெலாம் செய்கவென வாகு மஃதே
1408

கோட்டைக்குத் தென்புறத்தில் கல்லி ரண்டு
கொள்தொலைவில் **"ஜிங்கானி"** அருகில் திப்பு
நோட்டமிட்ட வாறிருந்தார் நடக்கும் போரின்
நிலைமைதனை அறிந்தவராய்ச் சிறுதொ லைவில்
மேட்டிமையாய்ப் படையொன்று "கமருத் தீன்கான்"
முதன்மையிலே **"பசவன்குடி"** எனுமி டத்தில்
வேண்டும்போ தழைக்கவெனக் காத்தி ருக்கும்
வகையினிலே திப்புசுல்தான் திட்டம் போன்றே
1409

வந்திடுங்கால் ஆபத்து கோட்டை தன்னை
வருவினையில் காப்பதற்கும் ஏற்ற வாறு
முந்தவெனக் **"கமருத்தீன் கா"**னி னோடு
"மேஜர்லாலி" தளகர்த்தர் **"சையத் சாகிப்"**
சேர்ந்திருந்தார் **'கிருஷ்ணாராவ்'** கூட வானான்
துரோகத்தின் காவலவன் அறிந்தா ரில்லை
சந்தர்ப்பம் காத்தவனாம் திப்பு சுல்தான்
தூயஅன்பில் திளைத்தவனாம் இதுநாள் மட்டும்
1410

திப்புசுல்தான் திட்டங்கள் அனைத்தும் அன்று
தெரிந்தவருள் கிருஷ்ணாராவ் ஒருவ னாவான்
ஒப்பனையில் லாதவொரு நடிகன் போன்றே
உடனிருந்தான் நல்லவன்போல் பாசாங் குற்றே
செப்பிடவோர் ஏதில்லை துரோகஞ் செய்யத்
சேர்ந்திருந்தான் மந்திரச்சுற் றாரி னோடே
தப்பிழைத்தான் முற்றிலுமே படையோர் தம்மைத்
தவறான வழிசெல்லத் தூண்டி னானே
1411

அறிந்திருந்த திட்டமெலாம் ஆங்கி லேயர்
அறிந்திடச்செய் தானவனே கோட்டை வீரர்
முறையான காவலையும் முடங்கச் செய்தான்
மனமுவந்த வாறுணவுந் தயாரித் துண்ண
உறுத்தினனே புலன்மாற்ற அனும தித்தே
உத்தரவும் தரச்செய்தான் தளகர்த் தர்க்கே
மறுத்திலையாம் அன்னவரும் பதவி தன்னில்
மந்திரியா யவனிருந்த கார ணத்தால்
1412

சந்தர்ப்பம் பார்த்திருந்த கான்வா லீஸீம்
சார்பான நிலையுணரத் தாக்கு தற்கு
முந்தினனே கோட்டைமீது படைந டத்த
மதிதுலங்கும் போழ்தஃது தொடக்கங் கொள்ளும்
எந்திரம்போல் செயற்பட்டார் வெள்ளை வீரர்
ஏணிகளைக் கோட்டைமதில் மேலே சாத்தி
வந்திடுமோர் ஆணைக்குக் காத்தி ருந்தார்
வரச்சுவரில் தாவியவர் கோட்டை சேர்ந்தார்
1413

இரவான போதினிலும் சந்தி ரன்றன்
இளவொளியைச் சிந்தியதால் வெள்ளை வீரர்
சரமாரி யாகஇடி பாட்டி னூடே
சென்றுகோட்டை வீரர்தமைத் தாக்கி னார்கள்
வருவார்கள் என்றறியா வேளை ஏறி
வந்ததனால் உருவான சமரின்போது
பெருவாரி யானவர்கள் உயிரை நீத்தார்
படைப்பலமுங் குன்றியதே கோட்டை மீதே
1414

கோட்டைத்தள கர்த்தர்களும் 'நாயக் காரும்'
குறைந்தளவே இருந்தாலும் சீற்றத் தோடு
வேட்டைக்கு வந்தவரை வேட்டை யாட
வெறிகொண்டார் வெள்ளையர்கள் வளைத்துச் - சேர்ந்தார்

கூட்டமாக ஒன்றித்துத் தொடர்ந்து தாக்கக்
கையளவே யானவர்கள் என்தான் செய்வார்
மாட்டுண்டார் போலானார் பொறியில் வீர
மரணமொன்றே துணைநின்ற தாம வர்க்கே
1415

காத்திருந்தார் மைசூர்வாய்த் தலத்தில் ஆணை
கொண்டுதாக்க வேண்டுமெனக் கமருத் தீன்கான்
போர்த்தலைமை திப்புவின்கை இருந்த தாலே
படைநடத்தும் படியிருந்தும் காத்தி ருந்தார்
சார்ந்தன்று வெற்றிகிருஷ்ணா ராவ்செய் சூழ்ச்சி
திப்புவுக்கு மாறாக இருந்த தாலே
போர்முனையில் பலியுண்டோர் கோட்டை வீரர்
பத்தின்நூ றாகுமெனப் புகலு வாரே
1416

வெள்ளையரின் வெற்றியின்பின் சீரங் கத்தை
வந்தடைந்தான் கிருஷ்ணாராவ் வந்தும் ஆங்கே
உள்ளவரில் தன்போன்ற குணமுள் ளோரை
உள்ளடக்கித் துரோகத்தில் முதன்மை யானான்
உள்ளபடி நடந்தெல்லாம் அறிந்தார் திப்பும்
உடனடியாய் நடவடிக்கை எடுக்க வேண்டிக்
கள்ளமனங் கொண்டவனைக் கண்கா ணிக்கக்
குதிரைப்படை யொன்றினையும் அனுப்பி னாரே
1417

படைத்தலைமை ஏற்றிருந்தார் சையத் சாகிப்
புலன்விசாரித் தறிகுபணி யவர்மீ தாகும்
உடனழைத்தார் மன்னரன்னை முன்ன தாக
ஓர்ந்தறியும் நோக்கோடு "தர்பா" ருக்கே
"படைத்தலைவன் அழைப்பையேற்கும் படிநா னில்லை
போயுரைப்பீர் நானிங்கோர் திவானாம்" என்றே
கடிந்துரைத்தான் வந்தவரை சையத் சாகிப்
கைதுசெய்து வருகவென ஆணை யிட்டார் 1418

பொறுப்புவாய்ந்த கடமையிலே அமர்த்தப் பட்ட
பொறுப்பதனால் கைதுசெய்யும் உரிமை கொண்டார்
முறைப்படியாய் நீதிக்குக் கட்டுண் ணாது
முரண்டுசெய்தான் கிருஷ்ணாராவ் கைக லப்பில்
இறங்கிடவுந் துணிந்தனனே எதிர்த்தார் வீரர்
எதிர்பாரா நிலையிலவன் கொலையுண் டானே
இறைகொடுத்த தண்டனையாம் ஊன்தந் தோர்க்கே
இரண்டகித்தால் ஏற்குநிலை இதுவா றென்றே

1419

துரோகியவன் செய்கைக்குக் கிடைத்து விட்ட
தண்டனைபோல் துரோகத்தில் பங்கு கொண்டோர்
சிறையுண்டார் கிருஷ்ணாராவ் மனைவி முன்னர்
திப்புவுக்குச் சாதகமாய் கணவ னென்றும்
கருதாது எதிர்தத்வளாம் ராஜ மாதா
கருணைகொண்டு அவள்வேண்ட பெண்பு ரத்தில்
குறையின்றி வாழ்வதற்கும் வழிகள் செய்தார்
கயவன்மனை யென்றாலும் நல்லா ளென்றே

1420

உன்னதமாம் கிருஷ்ணாராவ் பெற்றி ருந்த
உயர்பதவி திப்புசுல்தான் ஆட்சி தன்னில்
தன்னலமே கொண்டதனால் அன்னி யர்க்குத்
தாய்மண்ணை அபகரிக்கத் துணையுஞ் செய்தான்
எண்ணிடுங்கால் 'மீர்சாதிக்' 'ஆயாஸ்' இன்னும்
இவன்போன்றோர் செய்திட்ட துரோகம் தானே
மண்ணிழக்க மரணமெய்த ஏது வாகும்
வரலாற்றில் கறைபடிய வகையு மாகும்

1421

நான்காவது ஆங்கில மைசூர்ப் போர்

மண்ணினுடைப் பெரும்பகுதி மூன்றாம் போரில்
மாற்றார்கைப் பட்டிருந்தும் திப்பு வின்பால்
மண்ணளவும் அன்னோருக் கச்சம் மாற
முடியாது போனதனால் மீண்டும் யுத்தம்
திண்மையுற லாகிற்றே ஆங்கி லேயர்
திரட்டினரே பெரும்படையை உடன்பட் டார்கள்
அன்னியனின் கால்பற்றி வாழ்ந்த கோழை
அரசர்களும் அழிவுக்காம் அடிகோ லிற்றே

1422

கூட்டியவப் பெரும்படையைக் கருத்தில் ஓர்ந்தால்
கையளவே நிலமதனை எளிதாய் வெல்ல
நாட்டமுற்ற பேர்களுக்கோ ஆகும் ஆனால்
நெஞ்சினிலே திப்புவின்மேல் கொண்ட அச்சம்
மேட்டிமையாய் இருந்ததனால் கடுகின் காரம்
மங்காது எனப்பயந்தார் துதிக்கை யுள்ளே
கோட்டைவிட்டால் எறும்பொன்றைக் குன்றாம் யானை
கொள்ளுகின்ற பாடதனை கருத்தில் ஏற்றார்

1423

எண்ணியவா றில்லாது தாம்மேற் கொண்ட
எதிர்பார்ப்பில் அத்தனையும் இடியுண் டாற்போல்
மண்ணாகிப் போவதனை யுணர்ந்தார் திப்பு
மனந்தளர்ந்தார் வழியறியா நிலைக்குள் ளானார்
மன்னவனாம் "நெப்போல்யன்" படைக ளோடு
மைசூருக் குதவுவதாய் வாக்கி ருந்தும்
தன்னளவில் உதவநின்ற பேர வர்க்குத்
தழுவியதே தோல்விவந்து எகிப்து நாட்டில்

1424

சொந்தமண்ணில் வாழ்ந்தவர்கள் கூடத் தம்மைச்
சேராது வெள்ளையரின் கைக்குள் ளானார்
வந்தவனை ஆதரித்தான் நிஜாம் குடகு
மராட்டியனும் திப்புவின்மேல் பொறாமை யுற்றே

சொந்தமுற நினைந்தார்கள் இழந்த மண்ணைத்
துணைசெய்தே வெள்ளையர்க்காம் உடையார் கூட்டம்
கொள்ளையவர் கொண்டபகை மைசூ ரின்முன்
கோன்மையவர் கையிருந்த கார ணத்தால்

1425

மூவெட்டின் ஆயிரமாம் வெள்ளை யர்கள்
முதல்வனெனப் படையோட்ட **"ஜெனரல் ஹேரிஸ்"**
காவோலை கையளிக்குங் களத்தைக் காணக்
கடிதுவந்தான் வெள்ளையர்கள் இந்தி யாவில்
ஏவியவெப் படையினிலும் இல்லா வாறே
எண்ணடங்கா ஆயுதங்கள் இசைவாய்ப் போரில்
தேவையெனைக் கொண்டுதள பாட மெல்லாம்
தொகைதொகையாய்க் கொண்டிருந்தார் பறங்கி யர்கள்

1426

கடலனைய சேனையது கிழக்கி ருந்து
கல்லேழு வேகத்தில் ஊர்ந்து காணும்
இடைவெளியூ ரனைத்தையுமே கொள்ளை யிட்டும்
எதிர்நோக்கிச் சீரங்கம் வருகை நோக்கப்
படையோடு மிருகங்கள் மாடு யானை
பளுசுமக்கும் கோவேறு கழுதை யன்ன
தொடராக வந்தனவாம் தொகையி லஃதைச்
சொல்வதெனில் ஓரறுப தாயி ரத்தாம்

1427

வடக்கிருந்து ஹைத்ராபாத் நிசாமின் சேனை
வந்ததில் ஈரெட்டின் ஆயி ரம்பேர்
படைத்தலைமை ஏற்றதுமோர் வெள்ளைக் காரன்
பம்பாயின் படையாறா யிரமாம் எண்ணில்
நடத்தினரோர் படைவேறாய்த் தெற்கி ருந்தும்
நாடாளும் ஆசைகொண்ட பரதே சிப்பேர்
கொடுத்தானோர் வாய்ப்பிலையே மராட்டி யர்க்கு
கவர்ணர்**"வொல்ஸ் லீ"**யவர்கள் போரில் சேரார்

1428

தன்தலைமை தனில்திப்பு தெற்கி ருந்து
தமைநோக்கி வருவோரைக் களத்தில் கண்டார்
பன்மடங்காம் அழிவெதிரிப் படையி னோர்க்கு
புறங்காட்டித் திப்புகோட்டைப் பதிக்கு மீண்டார்
இன்னுமொரு படைப்பிரிவு "ஜெனரல் ஹேரிஸ்"
எதிர்கொண்ட தவர்களினைத் தொடர்ந்து தாக்கிப்
பின்னமுறச் செய்ததுவாம் பிறிதோர் போழ்து
படையிடையில் மாற்றமொன்று நிகழ லாகும்

1429

முன்னணியில் படைநடத்தும் தளகர்த் தர்கள்
மந்தகதி யடைவதுபோல் செயலில் காட்ட
என்னவதன் காரணமென் றறிய நோக்க
எதிரிகளைக் களைப்படையச் செய்து வெல்லும்
உன்னதமாம் உத்தியது நீண்ட தூரம்
உடல்களைக்க நடக்கவைத்தால் தாக்கு தற்குப்
பின்னமிரா தென்றபதில் கிடைத்த தஃது
போர்யுக்தி திப்புவுடைத் ததுவாம் என்றார்

1430

முன்னொருகால் சீரங்கப் பட்டி னத்தில்
மன்னர்கொண்ட செயற்பாடு வெற்றிக் கென்றே
உன்னதமாம் அன்றதுவும் என்ற போழ்தும்
உண்மையின்றோ அஃதல்ல **"கவர்ணர் - வெலஸ்லி"**
கன்னமிட வந்தகொள்ளைக் காரன் செய்த
குள்ளநரித் தந்திரத்தால் விளைந்த தாகும்
தன்னையண்டி வாழுஞ்சில கைக்கூ லிப்பேர்
தயவுடனே செய்தபெரும் சூழ்ச்சி யாகும்

1431

பணத்தின்மேல் பேராசை யுத்தம் செய்யப்
பயங்கொண்ட பேடியர்கள் பதவி யாசை
நிணத்திற்கண் கொண்டலையும் இழிகு ணத்தோர்
நாட்டின்மேல் பற்றற்ற நயவஞ் சர்கள்

கணத்தினிலே மாறுபடும் கயவ ரென்று
கண்டவரை கண்டறிந்து ஆசை யூட்டி
இணைத்தெடுத்தார் தம்மோடு வெள்ளை யர்க்கும்
இசைவாகத் திப்புவிற்குத் துரோகஞ் செய்ய
1432

வெள்ளையரின் வெற்றிக்குத் துணைகள் செய்தால்
விடிவுபெறும் மைசூரின் உயர்வும் ஓங்கும்
கொள்ளையெனப் பணவளங்கள் உம்மை நாடும்
கோருகின்ற அத்தனையும் கைக்குள் ளொன்றும்
எள்ளளவும் குறைகொள்ளா வாழ்வு சேரும்
இணங்குங்கள் எனப்பொய்யாம் ஆசை காட்டிக்
கொள்ளைகொண்டார் ஈனர்மனம் அவரும் ஓரார்
கைப்பாவை யானார்கள் மதிகெட் டோரே
1433

பலகாலம் நம்பிக்கைக் குரியோ னாகப்
பதவியிலே நிதியாளும் அமைச்ச னாக
நிலைபெற்றே இருந்தவனாம் "மீர்சாதிக்"கென்
நீசகனும் அதிலொருவன் நன்றி கொன்றோன்
இலைமறைகாய் போலிருந்தே இடுக்கண் செய்தான்
இதிகாசந் தனில்மாறா இழிவுங் கொண்டான்
நிலைகுலைய வில்லைதிப்பு தனித்திட் டாலும்
நிமலனையே நம்பியவர் துணிவு கொண்டார்
1434

வெள்ளையரின் படைப்புலத்துள் திப்பு சுல்தான்
வேங்கையெனப் புகுந்துசிரங் களைந்து வெற்றி
கொள்ளற்காய்ப் புதுயுக்தி பலவுஞ் செய்தார்
கூன்விழுந்த நிலைகொண்டார் பறங்கிக் காரர்
எள்ளளவும் எண்ணவில்லை "ஹேரிஸ்" இந்த
இடியேற்றுத் தாக்குதலை இழப்புங் கொள்ளை
வெள்ளமெனப் பரந்துவந்த பெரும்ப டைக்கு
விதித்தவிதி காயாகிப் போன தன்றாம் 1435

உள்ளபடி சிறுபடைதான் என்றிட் டாலும்
ஊடுருவிப் பெருஞ்சேதம் தமக்க ளித்த
வல்லமைக்குச் சான்றுரைப்பான் போல "ஹேரிஸ்"
வழிமொழிந்தான் திப்புவின்றன் திறமை போற்றி
கள்ளமற்றுப் பொய்மறுத்து யுத்தத் தின்பின்
கூறினனே புகந்துரைகள் திப்பின் ஆற்றல்
சொல்லவிய லாததென விதந்து ரைத்தான்
சமர்க்களத்தின் முடிவுரைத்த காலப் போழ்தே
1436

பகைவரினைப் பந்தாடி நின்ற போழ்தும்
படைபெரிதோ டன்னவர்கள் இருந்த தாலே
வகையிலாது தொடர்ந்திருக்கக் கோட்டை நோக்கி
வரவேண்டும் நிலைமைதனை திப்பு கொண்டார்
அகன்றதுமப் பெருவீரர் வெள்ளை யர்கள்
அண்டினரக் கோட்டையினைச் சுற்றித் தங்கும்
வகையாகப் பாசறைகள் அமைத்துக் கொண்டார்
வரமாகிப் போனதவர்க் கேற்ற வாறே
1437

சுற்றியவர் கோட்டையினைச் சூழ்ந்த செய்கை
தம்பக்கம் வெற்றிகொண்ட வகையாய்ப் போக
முற்றுகையின் பலங்கொண்டு தொடர்ந்தே குண்டு
மாரிபொழிந் தார்களந்தக் கோட்டை மீதே
உற்றதிரு திங்களுள்ளே தனிக்கப் பட்டே
உடனிருந்தோர் சூழ்ச்சிகளும் ஒன்று சேரக்
கற்குன்றம் போலிருந்த திப்பும் சற்றுக்
கலங்குநிலைக் குள்ளானார் காலக் கேடே
1438

நீண்டுசென்ற முற்றுகையால் சுற்றி நின்ற
நாடோடி வெள்ளையருள் அவரோ டொன்றிப்
பூண்டவுற வால்திப்பு மேலு தித்த
பொறாமையினால் படைநடத்தி வந்த பேருள்

தோன்றியதாம் சிற்சிலதாய் மனப்பு கைச்சல்
தேவைப்பா டானவெல்லாம் தீர்ந்து கொண்டே
போனதுவும் காரணமாய்ப் புகுந்த தோடு
பட்டினியும் புதியதுவாய்ப் பறங்கி யர்க்கே
1439

உண்ணவுண வற்றநிலை பங்கில் பாதி
ஒருவருக்கு என்றதொடு உயிரி ணங்கள்
உண்ணவுண வற்றுயிரைப் போக்கும் பாடும்
உண்டான நிலைகண்டான் "கேணல் ஹேரிஸ்"
இன்னுமிது தொடந்தாலோ பசிச்சா வுக்கே
எல்லோரும் உட்படலாம் எனவே அஞ்சித்
தன்னளவில் முடிவோன்றைத் தோற்று விக்கும்
தேவைக்குள் தள்ளுண்டான் விதிகெட் டோனே
1440

வீறுகொண்டோர் தாக்குதலை நடத்திக் கோட்டை
வீழவெனப் பொருந்துமொரு புலத்தைத் தேர்ந்தார்
ஆறோடும் மேற்குவசத் தமைந்த தஃதாம்
ஆறுநூறு ஆளுயரம் நெடுந்தூ ரத்தில்
நீறாகிப் போகவெனும் வேகங் கொண்டு
நெடுந்தூரம் தாக்குகின்ற கணைக ளாலே
ஊறின்மேல் ஊறுசெய்தார் ஓடிந்து வீழ
ஒன்றும்பயன னற்றநிலை யுலுத்த ருக்கே
1441

அடிமேலே அடியடித்தால் அம்மி கூட
அடிநகரும் என்பதனை மனத்தா லுன்னித்
தொடர்ந்தனவே தாக்குதல்கள் சிரமத் தின்பின்
சிறியதொரு பகுதியில்வாய் திறக்கக் கண்டார்
விடிந்தமறு தினமேயவ் விடிபா டுடே
வலுத்ததவர் வெறிகொண்ட தாக்கு தல்கள்
அடிசாயும் வரைகோட்டை தாக்கும் நோக்கம்
அழிப்பதுபோல் நடந்ததொரு மாற்றம் ஆங்கே
1442

கடிதமொன்று வந்ததது திப்பு சார்பில்
"ஹேரிஸ்"தம் கரங்களுக்குப் பேச்சு வார்த்தை
நடத்தத்தான் விரும்புவதாய்ப் பதிவு கொண்டே
நிபந்தனைகள் வகுத்தவனும் தூது விட்டான்
உடன்படிக்கை செய்வதெனில் உள்ள டங்கும்
உத்தரவை கவர்ணர்முன் "ஹேரிஸ்" சுக்கு
விடுத்திருந்தா ரதன்படியே தூது வன்போய்
விபரித்தான் வெள்ளையர்பால் பணிதல் போன்றாம்
1443

நிபந்தனைகள் ஆறவைகள் சொந்த நாட்டின்
நிலத்தினிலே பாதியவர் பக்கல் வேண்டும்
நிபந்தனையில் லாதுகைது செய்த பேரை
நம்புலத்து விடவேண்டும் கால மெல்லாம்
நபரிருவர் நம்மவருள் ளுமது நாட்டில்
நிரந்தரராய் எம்சார்பில் நிலைக்க வேண்டும்
சுபநிலைமை மறுத்தொதுக்க வேண்டும் **"பிரெஞ்சார்"**த்
தோழமைக்கு முற்றாகத் தடையுண் டென்றார்
1444

இரண்டுகோடி இழப்பீடாய் வெள்ளை யர்கள்
ஏற்றிடச்செய் திடவேண்டும் கைதி யாகத்
தரவேண்டும் தம்மக்கள் நான்கு பேரைத்
திப்புவுடன் தளகர்த்தர் நால்வ ரோடே
விரும்புவதா யின்ஒப்பி ஓரீர் நாளுள்
விதித்தமுதல் கையளித்தால் ஒப்பந் தத்தைக்
கருத்தினிலே கொள்வதென "ஹேரிஸ்" தூது
கொணர்ந்தவர்கள் கூறினரே கோன்முன் தீதே
1445

செவியுண்ட செந்தணலாம் நிபந்த னைகள்
திப்புசினந் தணித்தமைதி காத்தல் வேண்டி
நவமான சேதியொன்றைத் தூதுர் மூலம்
நிறைவேற்ற "ஹேரிஸ்"அது மறுத்துப் பொன்னும்

தவப்புதல்வர் நால்வரையும் தந்தால் பேசச்
சந்தர்ப்பம் உண்டென்றான் இனிமேல் ஒன்றும்
உவப்பில்லை யுத்தமொன்றே பதிலா மென்றே
உணர்ந்துபதில் தவிர்த்தார்போர் உறுதி கொள்ளும்
1446

காஸிகானின் கடைசிநாள்

முதிர்ந்தாலும் நெஞ்சுரமும் வைரம் பாய்ந்த
மேனியொடும் வீரதீரத் திறனுங் கொண்டு
கதியென்றே அரசபணி தமக்குத் தம்மைத்
கொடுத்திருந்த காஸிகான் தன்னைக் கொல்லச்
சதிசெய்தான் மீர்சாதிக் ஹைத ருக்கும்
தொடர்ந்துதிப்பு சுல்தானின் அரசி னுக்கும்
மதியூக மந்திரிபோல் படைகட் கெல்லாம்
முதல்வருமாய் இருந்தவனாம் நிழல்போ லானார்
1447

சந்தேகங் கொண்டிருந்தார் அவன்மேல் திப்பு
சேர்ந்தொன்றிக் காஸிகான் அவன்மீ துற்ற
சந்தேகம் தெளியவென கண்கா ணித்தார்
தெரிந்துகொண்டான் மீர்சாதிக் திட்ட மிட்டான்
தனித்தவனைச் சந்தித்தார் சமயம் பார்த்துத்
தன்னோடு சதிக்குடந்தை யான பேரைச்
சொன்னபடி செய்வித்தான் அவருஞ் செய்தார்
தேராத போழ்திலந்தத் துயர்ந டக்கும்
1448

நல்லவன்போல் நடித்தான்தான் நாட்டுக் காக
நலஞ்செய்யும் மந்திரிபோல் குழைந்தான் செய்யும்
எல்லாமே மன்னருக்காய்ச் செய்வான் போன்றே
ஏமாற்ற முயற்சித்தான் தோல்வி கண்டான்
பொல்லாதான் வார்த்தைகளில் பொதிந்தி ருந்த
பாசாங்கைத் தளகர்த்தர் அறிந்திட் டாலும்
சொல்லாதே எதுவும்றன் வழியை மாற்றத்
தெரிந்துகொண்டான் சந்தேகம் வலுத்த தென்றே
1449

சென்றவரை நிறுத்தியது பின்னால் நின்று
தெரிவித்த சேதியுடன் திரும்பி நோக்க
மன்னவர்க்கு விசுவாச மான வீர
மறவனெனும் **இலக்ஷ்மண்ராவ்** துரோகி யாகி
அன்னியர்பால் உறவுகொண்டான் என்னக் கேட்டு
அதிசயித்த தோடதனை மறுத்த போழ்து
உண்மைதனை நிரூபிப்பே னென்றே யுள்ளே
ஏகியவன் சிறுபொழுது கண்ணில் காணான்
1450

சொன்னதவன் பொய்யென்று தெளிந்த போதும்
சொன்னவனைத் தெளிவுபெறச் சிறிய போழ்து
அன்னவனின் வரவுக்காய்க் காத்தி ருக்க
அடியரவம் கேட்டுப்பின் தலைதி ரும்பும்
பின்னாலோர் பாதகன்றன் வாளி னோடு
பாய்ந்தனனே பார்த்தமறு கணத்தில் தப்பி
உன்னியவன் தனைத்தூக்கி வானு யர்த்தி
ஊன்றித்தரை மீதடித்தார் காஸி கானே
1451

தரைமீது மோதுண்டோன் சிலநொ டிக்குள்
துடிப்படங்கிப் போயினனே மீண்டு மாங்கே
இருபுறத்தும் இருந்திருவர் பாய்ந்தார் கைவாள்
ஏந்தியவர் நொடிப்பொழுதுள் நிதானங் கொண்டு
ஓரடிபின் வாங்கியவ ரிருபே ரும்முன்
ஒருசேர வாய்ப்பளித்தார் மறுக ணத்துள்
இருவருமே தரைபுரண்டார் நடந்த தென்னே
இறையன்றிப் பிறரறியா யுத்தச் சீர்மை
1452

தவறிவிட்ட திருமுறையும் இனிமேல் விட்டால்
தன்தலைக்கே ஆபத்தாய்ப் போகு மென்றே
பவத்திற்குக் காரணனாய் ஒளிந்தே நின்று
பார்த்திருந்த மீர்சாதிக் குறுவாள் தன்னை

அவர்முதுகைக் குறிவைத்து ஓங்கி வீச
அடுத்தநொடி புதைந்ததது அம்பின் வேகம்
தவிர்க்கவொண்ணா நிகழ்வவர்தம் புலனுக் கெட்டாத்
தலத்திருந்தே வந்ததுகண் நோக்காப் போழ்தே
1453

தாக்கியவாள் தனைப்பிடுங்க முயன்ற போது
தடுமாறும் நிலைகண்டு வாய்ப்பை ஏற்று
தாக்கியதோர் நீழ்நெடுவாள் மார்பி னூடே
செய்ததுவோர் காவற்படை வீர னாவான்
நோக்கத்தில் வெற்றிகண்டான் மீர்சா திக்கான்
நிலம்புர்டார் காஸிக்கான் நெஞ்சு யர்த்திப்
போர்க்களங்கள் பலகண்டு வாகை கொண்ட
பெருவீரர் சூழ்ச்சிக்குப் பலியா னாரே
1454

போரினிலே புண்ணுண்டு இறந்தா ரென்று
பொய்யுரைத்தான் மன்னரிடம் அவரும் நம்பி
சேரட்டுஞ் சுவனமென இருகை யேந்தித்
தூயவனைப் பிராத்தித்தார் குடும்பத் திற்கும்
காரணனே துணையாக வேண்டு மென்றுங்
கண்கலங்க வாயுரைக்கும் இதுநாள் மட்டும்
இருகரம்போல் களங்களிலே இருந்த வீரர்
இழப்பெண்ணிச் சோர்ந்திட்டார் இறுதி நாளே
1455

காதல் மனைவியுடன் கடைசிச் சந்திப்பு

சீரங்கப் பட்டிணத்தை வெள்ளை யர்கள்
துரோகிகளின் துணையோடு சூழ்ந்தா ரென்று
சேர்ந்ததொரு நம்பிக்கைச் செய்தி திப்பு
துணிவிருந்தும் மனமுடைந்தார் சூழ்நி லையின்

காரணம்தான் உடனிருந்தே முதுகில் குத்திக்
கண்டத்தில் கத்திவைத்தோர் போகத் தம்மின்
ஒருடலின் பாகமெனும் காஸி கானும்
உயிர்துறந்தார் என்பதுமாய் ஆன தாலே
1456

போருக்குப் போகுமுன்னே இறுதி யாகப்
பார்த்துவிடை கொள்ளவெனத் திப்பு சுல்தான்
சேர்ந்தார்தன் மாளிகைக்கு மனையாள் தன்னைச்
சந்தித்தார் சோகத்தின் முழுமை யாக
காரழிந்த வெண்மதிபோல் வதனங் கொண்டாள்
கருமேகஞ் சூழ்ந்தமதி போலு மாக
நேர்கொள்ளக் கண்டதுமே துடித்துப் போனார்
நெஞ்சோடு சேர்த்தணைக்க மௌன மானார்
1457

நிமிடங்கள் சிலவேதான் ஆன தஃதுள்
நிலையுணர்ந்தார் தனைவிடுத்து மனைதோள் தாங்கி
அமைதியொடு முகம்நோக்க விழிகள் நான்கும்
அன்னியத்தை இழந்தனவே வார்த்தை கொன்றார்
தமைத்தாமே நொடிப்பொழுதுள் மாற்றப் பெண்ணாள்
திப்பரசர் தமைவிழித்தே "வெள்ளை யர்கள்
எமையண்டி விட்டனரோ?" எனச்சொல் சிந்த
"எம்மவரே வழிகாட்ட அருகில்" என்றார்
1458

சோகத்தின் முழுமையொடு விழிகள் சிந்துந்
தலைவியினை நேக்கியவத் தலைவர் சொல்வார்
"ஆகாதே இதுமணநாள் 'நாட்டின் பின்தான்
அன்புக்கு இடம்'என்று என்ற னுக்கு
வாக்களித்தாய் சத்தியத்தை மறக்க லாமோ
வருமிடரைச் சந்தித்து நாட்டைக் கண்போல்
காக்கின்ற கடன்செய்யக் களத்தைக் காண
கலங்காது விடையளிப்பாய் துணிவாய்" என்றே
1459

"மீண்டுமுனைச் சந்திக்கும் வாய்ப்பெ னக்கு
மீமுமென நானறியேன்"என்றார் திப்பு
"ஏனிந்த வார்ததையெலாம்" என்றே வாயின்
இதழ்களினை மலரக்கரத்தால் மூடி "முன்னர்
நான்செய்த சத்தியத்தை மறவேன் நீங்கள்
நாட்டுக்கே முதன்மைதந்து நாட்டைக் காக்க
வேண்டும்நான் இடைநில்லேன் வாக்கு மாற்றேன்
விடைகொள்க வல்லவனின் துணையோ" -
டென்றாள்
1460

"உன்னைநீ பாதுகாத்துக் கொள்வாய் மக்கள்
உன்பொறுப்பே இறையடுத்து" என்றார் திப்பு
"ஒன்றுக்கும் கவல்வேண்டாம் எல்லாம் வல்லோன்
உடனிருப்பான்" எனமனையாள் உரம ளித்தாள்
"இன்னுமிங்கு தரித்திருத்தல் ஆகா" தென்றே
இருகரத்தால் நெஞ்சணைத்து உச்சி மோந்து
மன்னர்விடை கொண்டார்முன் என்று மில்லா
வாகுமுகம் பொலிவிழந்து போயிற் றன்றே
1461

இறுதி யுத்தம் எகிறிற்று

விதித்திருந்த நிபந்தனைகள் கேட்பா ரற்ற
விதமுணர்ந்த வெள்ளையர்கள் தமக்குள் ளாகப்
பொதுவிறுதித் தீர்மானங் கொண்டார் கூடிப்
படைநடத்த அவர்களோடு சதித்து ரோகி
மதியழிந்து மாற்றாரின் கைக்குள் ளானோன்
மீர்சாதிக் பாரதத்தின் சாபக் கேடு
வதிபுலத்தை அழிப்பதற்கு வழியுஞ் சென்னான்
வருமிறுதி நாள்நரகப் பதிகொள் வோனே
1462

நோக்கமிட்டார் கோட்டையினைத் தளகர்த் தர்கள்
நேர்ந்திருந்த சிதைவுகளை விழியுள் தாங்கித்
தாக்குதலைப் பகற்பொழுதே உச்சி வேளை
தொடங்குவதாய் முடிவுகொண்டார் எவரென் றாலும்
நோக்காத போழ்தஃதோ உணவு வேளை
நோவளிக்கும் தீச்சுடரைப் பெய்யும் வெய்யோன்
வேக்காட்டைப் பொருட்டாகக் கொள்ள லாகா
மிகப்பொருத்தம் எனவெண்ணித் திருப்தி கொண்டார்
1463

மேமாதம் நான்காம்நாள் காலைப் போழ்து
மேகமூட்டம் வெளிறியது வைக றையைத்
தாமாக வுணர்த்துகின்ற சான்றி னோடே
தகதகத்துக் கிழக்கிலொளிக் கிரணம் வீசும்
தூமேவு நெஞ்சத்தின் அரக்கன் செந்நீர்த்
தாகத்தின் வெறியோடு கைய னைத்தும்
காவோலை கொண்டுவெளிக் கிளம்பு வான்போல்
கதிரவனும் நெருப்பெரித்துக் கங்குல் மாய்த்தான்
1464

பதிலெதுவுங் கூறாத நிலையில் திப்பு
பகைவர்களின் தாக்குதலை எதிர்பார்த் தாலும்
புதிதாகத் தொடங்குகின்ற தாக்கு தல்கள்
பகற்பொழுதில் நிகழாது எனநி னைந்தார்
முதலிருகால் **"கொன்வாலிஸ்"** யுத்தம் செய்ய
முனைந்ததுவோ மாலையில்றான் அவ்வா றேதான்
இதுமுறையும் நிகழ்ந்திடுமென் றெதிர்பார்த் தார்பின்
எண்ணியது வேறுவித மாகிற் றாமே
1465

நிறைந்தபெரும் படைவெள்ளை யோர்தம் சார்பில்
இந்தியரோ பலதிறத்தார் அதனில் சற்றுக்
குறைவதாகும் ஒன்றித்தார் காலை தத்தம்
காப்பரண்க ளுள்ளிருந்தே பகலை நோக்கிக்

குறியானார் அனைவருக்குங் குடிக்கக் கள்ளுங்
காரமிகு மதுவகையுங் கொடுத்தார் நேரம்
அறியாது கழிந்ததுவே வீரர் நெஞ்சுள்
ஆனவுணர் வாயிரமாம் அறிவார் யாரோ!
1466

சுட்டெரிக்குஞ் செஞ்சுடரின் வீச்சி னாலே
திக்கெட்டும் பற்றிக்கனல் கொட்டு மாப்போல்
உட்டிணத்தின் கோரக்கை ஓங்கி நிற்க
உணவுகொண்டார் திப்புமன்னர் படைப்பு லத்தார்
திட்டமவர் அறியாரே எதிரிக் கூட்டர்
தமைத்தாக்கக் குறித்ததந்தப் பொழுதா மென்றே
விட்டகன்ற நிலையைவர்க்கோ ஆயு தங்கள்
வரித்திடவும் போதாத நேர மஃதே
1467

கோட்டைமதில் வெளிப்புறத்தே நேரம் நோக்கிக்
காத்திருந்த பறங்கியரின் வீர ரொன்றி
வேட்டைக்குப் பதுங்குகின்ற ஞமலி யொக்க
வாள்வேல்கைத் துப்பாக்கி சகித ராக
நீட்டுகுழல் பீரங்கி முற்பு றத்தை
நோக்கிடுவா றிருக்கவொவ்வோர் நிமிடம் எண்ணி
மாட்டாதோ ஆணையொலி செவியுட் சேர
மோதலுக்காம் எனவெண்ணிப் புலன்கூர் செய்தார்
1468

"வாருங்கள் என்வீரத் தளகர்த் தர்காள்
வந்தென்னைத் தொடருங்கள் நீங்கள் வெள்ளைப்
போர்மறவர் எனநிறுவ" என்றே கூவிப்
பதுங்குகுழி தனிலிருந்து கோட்டை நோக்கி
ஒருருவம் ஓடியது வாள்கை யேந்தி
உடன்பட்டார் காத்திருந்தோர் வெறிகொண் - டோராய்த்
தார்கொள்ளத் தவித்தமன **'பெய்த்'**தின் ஓசை
தாமதுவாய் இருந்ததது தேர்ந்திட் டாரே
1469

வான்வெடித்துப் பிளந்ததெனும் ஓசை யோடு
வெடியுண்டை தாக்கினவே கோட்டை மீது
பூண்டதென்ன நிலைமையென உள்ளி ருந்தோர்
புரிந்ததுமே புயம்புடைக்கப் போருக் கானார்
தீண்டவரும் நச்சரவைத் தடுத்த லொக்குந்
தன்மையைத்தான் கொண்டிருந்தார் திப்பும் என்ன
தோன்றியதோ யாரறிவார் துணிந்தார் சாவின்
துணைவரினும் எதிர்ப்பதெனத் திடங்கொண் டாரே
1470

நவீனயுத்த ஆயுதங்கள் நாற்பு றத்தும்
நாடலுறும் தொடர்ந்துவெடி ஓசை பீறும்
செவிசெத்துப் பிழைத்தெழுந்து மீண்டுஞ் சாகும்
செந்தழலும் வெண்புகையும் களத்தை மூடும்
குவிந்துவந்த படையெதிர்ப்பால் சிதறி யோடும்
கண்டகண்ட இடமனைத்தும் பிணங்கள் சாயும்
புவிகுருதிப் புனலாலே செம்மை யாகும்
புகலவொண்ணாப் பேரழிவே போரின் பேறாம்
1471

ஓரணியாய்த் தொடர்ந்தூரும் பீரேங் கிக்குள்
உள்நுழையும் குண்டுகளோ ஒவ்வொன் றாக
வீறுகொண்டு கோட்டைமதிற் சுவர்கள் மீது
விண்ணதிரும் ஒலியெழுப்பி மோதுண் டின்னும்
நீறாகா திருந்தவிடந் தன்னை தூர்த்து
நேசப்படை யுள்நுழைய இடம ளிக்க
வேறுவேறாய்ப் பலதிக்கும் நுழைந்தார் சென்றோர்
வேறுவேறாய் உடலரியப் பிணமாய்ச் சாய்ந்தார்
1472

செஞ்சட்டைக் காரர்வெண் பறங்கிப் பேர்கள்
சேர்ந்துவந்த மற்றவர்தம் நாட்டு டையில்
அஞ்சாத திப்புமன்னன் போர்வீ ரர்கள்
அணிந்திருந்தார் புலிபொறித்த உடைகள் வேறாம்

பஞ்சிலிட்ட பொறியதனைப் பொசுக்கல் போல
பாய்ந்துவந்த பெரும்படையைப் புலிபொ றித்தோர்
தஞ்சமுறச் செய்தார்மண் துவட்டி வாளின்
தீராத பசிக்குணவு தந்திட் டாரே
1473

பெருநெருப்புத் துண்டங்கள் வருவோர் மீது
பாய்ந்துவந்து சுட்டெரிக்கும் கோட்டை கொண்ட
புறமிருந்து வருவதவை திப்பு வீரர்
பாய்ச்சுகின்ற சிற்றேவு கணைக ளாகும்
குறிதவறா தவையுயிரைக் காவு கொள்ளக்
கடுந்தூரம் பயணிக்க ஏற்ற வாறு
திறமுடைத்தாய்த் திட்டமிட்டு திப்பு செய்தார்
சரித்திரத்தில் முதன்மையது கூறு தற்கே
1474

வெள்ளையரின் படைவீரர் பழக்க மற்ற
வெய்யோனின் சுடர்தாங்க மாட்டா ராக
கொள்ளியிடைப் பட்டபுழுத் தவித்த லொக்கக்
கருகினரே அணிந்திருந்த உடைகள் வேர்வை
வெள்ளத்தால் நனைந்துவுடல் உபாதை சேர்க்கும்
வகைசெய்யத் திணறிடினும் உட்பு குந்த
கள்நெருப்பால் தெம்புற்றார் தொடர்ந்தும் சென்றார்
களைப்புண்ணா வாறதுவுங் காத்த தன்றோ
1475

கோட்டைதனை அண்மித்தார் தாக்கு தற்குக்
குறியான புறம்பெரிதாய் வாய்பி ளந்து
வேட்டையரை வரவேற்று நின்ற தொப்ப
வழிகாட்டும் வெள்ளையர்கள் உள்நு ழைந்தார்
ஆட்டுமந்தை தொழுவத்தின் வாயி னூடே
அடிபிடிசெய் தோடுகின்ற நிலைமை போலாம்
காட்டெருமைக் கூட்டமது கள்ளுண் போதை
கொண்டதனால் செருக்கேறித் துள்ளிற் றன்றோ
1476

வந்தவரை எதிர்கொண்டார் மைசூர் வீரர்
வேங்கைகளாய்ப் பிய்த்தெறிந்தார் அப்போழ் தாங்கே
சிந்தியதோர் ஆணைவெள்ளைப் பறங்கி யர்பால்
திசையிரண்டில் வலமிடமாய்ப் பிரிந்து கோட்டைச்
சொந்தமென வானமதில் மீது தாவச்
செய்தார்கள் கட்டளைக்குப் பணிந்த பேர்கள்
உந்தினனே யொருவெள்ளை வீரன் கையில்
உடன்கொண்ட கொடியோடு நட்டி னானே
1477

பகலுணவை யுண்ணக்கரம் பற்றும் போது
பெற்றாரோர் செய்தியினைத் திப்பு சுல்தான்
மிகநெருக்க மானவரும் நம்பிக் கைக்கு
மாறுசெய்யாப் மெய்யருமாந் தளகர்த் தர்தம்
அருமைநண்பர் **'செய்யத்கப் பார்'**குண் டொன்றால்
அழிவுக்குள் ளாகிவிட்ட சேதி யஃதாம்
பெருமதிர்வு கொண்டதுளம் சோகத் தாலே
பாதியுடற் பலமழிந்த பாங்கி லானார்
1478

மாற்றாரின் படைபுகுந்த கோட்டைப் பக்கல்
மின்னலொடு கூடியிடி தொடர்ந்தே ஆர்க்குஞ்
சீற்றத்தின் பேரொலிபோல் திசைக ளெட்டுஞ்
சென்றடையும் காற்றதற்குத் துணைக்கை சேர்க்கும்
சாற்றுதற்கு மாட்டாதே யுத்த வேகம்
செங்குருதிப் பொழிவாலே பூமி தோய்ந்து
மாற்றமுறும் சுயமற்றுச் சகதி யாகி
மண்செவ்வான் போர்வைகொண்ட போலு மாகும்
1479

குதிரையொன்றின் மீதமர்ந்து காற்றில் தாவி
கெடுவாளைக் கையேந்தித் திப்பு சுல்த்தான்
எதிர்ப்பவரை எதிர்த்துப்போர் ஏற்ற லோடும்
இடைபுகுந்தும் எதிரிகளை வாளுக் கீந்து

புதுப்புதிதாய்த் திசைமாற்றிச் சுழன்று சுற்றிப்
படைகளுக்கும் ஆணையிட்டுப் புலிய தாகக்
கதிகலக்கி எதிரிகளைச் சூறை யாடும்
காரியத்தைத் தமதாக்கிக் கொண்டி ருந்தார் 1480

வெள்ளையர்கள் கைத்துவக்கின் வரிசை காட்ட
வாள்வீச்சின் வலிமையினைத் திப்பு வீரர்
எள்ளளவுங் குறையாதே எதிர்த்துத் தாக்கி
இருந்தவிடந் தனில்துடித்து மாளச் செய்தார்
வெள்ளமெனப் புகுந்தார்கள் வந்தோர் மீண்டும்
வருவோர்கள் வருமுன்னே வந்த பேர்கள்
உள்ளவுயிர் பறியுண்டு நிலத்திற் சோர
உடல்களினால் பிணக்காடொன் றுருவா கிற்றே 1481

வெற்றிக்காம் அடையாளம் அவர்தம் நாட்டில்
வழங்குகொடி தனையேற்றல் அதனைச் செய்தோன்
பெற்றமகிழ் வரைநிமிடப் போழ்தே மற்றப்
பாதியிலே வெட்டுண்டு தரைபு ரண்டான்
பற்றியதோர் செய்திதிப்புப் படைப்பேர்க் குள்ளே
படைஞருக்குச் சம்பளப்பொன் கொடுப்ப தாக
பற்றவைத்தான் 'மீர்சாதிக்'பழிப்பேர் கொண்டோன்
பாவிவீரர் புனைழிக்கப் பொய்யுஞ் சொன்னான் 1482

திட்டமிட்டுச் செய்ததந்தச் செயலாம் போரின்
திசைதிருப்பத் தருணத்தில் செய்வ தென்றே
கெட்டகுணத் தார்நன்றி கொன்று நாயின்
கேடான கோடரிக்கை குலத்திற் கீனன்
ஒட்டியவ னோடுடின்னும் பலரி ருந்தார்
உதவினரே அவன்பணிக்குப் பரப்பிச் செய்தி
எட்டவைக்கத் திக்கனைத்தும் எச்சில் உண்டோர்
ஈடுசெய்ய இயலாத இடரா கிற்றே 1483

சேதமிரு புறத்தினிலும் சொல்ல டங்காத்
தொகையதிகம் படைபலத்தால் தாக்க வந்தோர்
மீதமிருந் தோர்தொகையோ மைசூர் வீரர்
மிகக்குறைவே முதலில்முனை யாண்ட போதும்
ஏதுமிகக் குறைந்ததவர் வெற்றி யின்பால்
என்றுணரப் பின்னடையும் நிலைமை தோன்றப்
பாதியிற்றன் பொருதுதலைத் தவிர்த்த கத்தே
புகமுனைந்தார் வீரர்தம் பலத்தைக் கூட்ட 1484

ஒரேசுழலில் சுழன்றேதன் பரியைத் தட்டி
ஓடவிட்டார் கோட்டையின்வாய்ப் புறத்தை நோக்கி
அருகடைந்து வாயில்காப் போனை நோக்கி
ஆணையிட்டார் தாழகற்ற செவியுட் கொண்டும்
ஒருவினையுஞ் செய்யாது கல்லாய் நிற்க
உதவியற்ற இக்கட்டுள் திப்பா ளாகிப்
புரியாத சூனியத்துள் திகைத்து நின்றார்
பாவியவன் செய்கையினால் பெருங்கே டொன்றும் 1485

கைக்கூலி பெற்றவரின் கைக்கூ லிக்குக்
கைப்பட்ட கடையனந்தக் காவ லாளன்
தக்கநிலை கண்டுபெற்ற கைப்பிச் சைக்குத்
தக்கபடி செயற்பட்டான் இழிகு லத்தோன்
செக்கொடிந்து நெய்சிதறிப் போன தொக்கத்
தேட்டமுற்ற அத்தனையும் மண்ணாய்ப் போன
நிர்க்கதிக்குள் ளானாரே திப்பு சுற்றி
நெருங்குகின்ற பகையுணர்ந்தார் நிலைமா றிற்றே 1486

வேரறுந்த நிலைமைசூர் வீர ருக்கு
வந்திடினும் மன்னரரு கிருந்த தாலே
கோரவெறி கொண்டார்கள் மண்ணைக் காக்கக்
கொற்றவனின் உயிர்காக்கக் கடமை யோர்ந்தே

நேராத நிலையைவர்க்கு முன்ன ரென்றும்
நம்பியவர் கேடுசெய்த கார ணத்தால்
போர்த்திறமும் நெஞ்சுரமுங் கொண்டி ருந்தும்
பகைவர்தம் சூழ்ச்சிக்குப் பலியுண் டார்கள்
1487

பொறியிலகப் பட்டதந்தப் புலியி னோடு
பொருதுவீரர் பலருமதி லொன்றி னார்கள்
எறிசரத்தின் கொள்ளையொடும் எரிகுண் டிற்கும்
ஈடுகொடுத் திடுமோர்பேர் இடும்பைக் குள்ளே
வறுமையுற்ற தன்னவரின் வேகம் தம்பால்
வீரர்தொகை குன்றியதுங் கார ணம்மாம்
சிறுதொகைதான் எஞ்சிநின்றார் சொற்பப் போழ்தே
தாங்கிதாம் அந்நியர்க்கு தரைசாய்த் தற்கே
1488

இறுதிநிலை இதுவேதான் இனியொன் றிற்கும்
இடமில்லை எனுமெண்ணுஞ் சொற்பத் துக்குள்
குறிதவறா தொருவன்றன் கைத்துப் பாக்கிக்
குதிரையினைப் பின்னிழுத்தான் பற்றிற் றஃது
பறந்துவந்த குண்டுதிப்பின் உடலைத் தாக்கப்
படையிடையே யவர்சரியப் பரியின் மீது
குறிவைத்துச் சரமாரி யாகச் சுட்டான்
குதிரைதன் கால்மடித்து நிலத்தே வீழும்
1489

அடையுண்ட மைசூரின் வீரர் மீது
ஆங்குநிறைந் திட்டபெரும் வெள்ளைக் கூட்டம்
தொடராகத் துவக்குண்டை சொரியச் செய்யச்
சாவுண்டு களம்பிணத்தால் நிரம்ப லாகும்
வெடிகொண்டு சரிந்தாலும் வீரர் திப்பு
வீழாது மீண்டுந்தன் உடல்நி மிர்த்திப்
பிடியுண்ட வாளுடனே எழுந்து நின்றார்
புண்ணுண்ட உடல்தளர்ந்தே சோர்வு கொள்ளும்
1490

தூரத்தே மன்னர்நிலை கண்டோர் வீரன்
தன்னுயிரை நோக்கானாய் அருகில் வந்து
மாரணைத்துப் பல்லக்கில் ஏறு மாறு
மன்றாடி னான்மன்னர் உயிரைக் காக்க
வீரத்தின் மொத்தவுரு தப்பி யோட
வேண்டாராய் மறுத்தாரவ் வேளை நோக்கி
மார்பகத்தைத் துளைத்ததொரு குண்டு மன்னர்
மருமத்தைப் பிளக்கவவர் மேலுஞ் சோர்ந்தார்
1491

குருதியுடல் கொப்பளித்தே உடைந னைக்கக்
குண்டுதுளைத் திருந்தவடு கொடுநோ செய்யச்
செருக்களத்தில் தனித்திட்டார் உடல்காப் போரும்
தம்முயிரை மன்னனுக்காய் இழந்த காலை
அருகொருவன் வந்தவர்தன் அரையைச் சுற்றி
அணிந்திருந்த கற்பதித்த வாளைப் பற்றி
உருவுவதைக் கண்ணுற்றார் திப்பு கைவாள்
ஒருநொடிக்குள் சுழற்றவவன் வெட்டுண் டானே
1492

வடுவுண்ட போதினிலும் கையி ருந்த
வெள்ளையனின் துப்பாக்கி கைப்ப லத்தால்
நொடிப்பொழுதுள் இயங்கியதே திப்பு சுல்தான்
நெற்றியினைக் குறிவைத்தே தாக்கிற் றன்றோ
கடல்கடந்து வந்தவனைக் கால்ப திக்கக்
கொடாதிருக்க இறுதிவரை பாடுற் றோரைக்
கடல்கடந்து வந்தவனே கொன்றான் அந்தக்
கயமைக்குக் கைகொடுத்தோர் குடிகள் தாமே
1493

ஞானத்தின் பிம்பமென விரிந்த கன்ற
நெற்றியினைத் துளைத்திட்ட துவக்கி னுண்டை
மானமுள்ள மாவீரர் தம்மைச் சாய்த்த
மகிழ்சிகொண்ட தாமதுவாய் உள்ளே புக்கி

வானடையச் செய்ததுயிர் வரலாற் றின்கண்
வாழுமொரு தியாகியினைக் கொன்ற தாலே
ஈனமுற்ற தாகியது வெள்ளை யர்க்கு
வலிந்துதவி செய்திட்ட வீணர் போன்றே
1494

பற்பலவாய்ச் சமர்க்களங்கள் கண்ட தோள்கள்
பன்நூறு சிரங்களினைக் களைந்த கைகள்
அற்பர்தம் சூழ்ச்சியினால் தனிமைப் பட்டே
அடலர்தம் குண்டுக்கன் றிரையு மாகி
வெற்றுடலாய் உயிரற்றே வீழ்ந்த காட்சி
வெறுத்தாரும் வருந்துகின்ற வாற தாகும்
சிறுத்தையினை நரிகளென்றிக் கொன்ற தொக்குந்
தன்மைத்தாம் சொற்களிலே வடிக்க வொண்ணா
1495

துரோகிக்குக் கிடைத்த தண்டனை

முடிந்தவரை தோல்விக்குக் காலாய் நின்று
வீரர்களைத் திசைதிருப்பிப் பறங்கி யர்க்குத்
தொடர்ந்துதவி செய்தீற்றில் திப்பு வாழ்வு
தூர்ந்திடச்செய் தான்**சாதிக்** மன்ன னாக்கக்
கொடுத்திருந்த வெள்ளையரின் வாக்கை நம்பிக்
கேடுற்றான் இறுதியிலே கொலைவாய்ப் பட்டான்
படைத்தவனின் தீர்ப்பென்றும் பழுது போகா
பாவிகளை இருமையிலுந் தண்டிப் பானே
1496

சுல்தானின் அந்திமநாள் மட்டும் தன்னைச்
சேவைக்காய் அர்ப்பணித்த தேசப் பற்றன்
வல்லபெரும் வீரனுயர் மறவன் மன்னர்
வெற்றிக்குத் தோள்கொடுத்தோன் **"ராம - கிருஷ்ணன்"**

கொல்லுதொழி லியற்றுகையில் இறுதிப் போரில்
கூடிவந்த வெள்ளையரால் தாக்குண் டானே
இல்லையினி வாழ்வென்னும் இறுதிப் போழ்தில்
இலாதொழித்தான் கொடியவனை என்றும் - வாழ்வான்
1497

போரினிலே வெள்ளையர்கள் வெற்றி கொண்ட
போதினிலும் சுல்தானைத் தேடிக் கொல்லுங்
காரியத்தில் கண்ணானார் மீர்சா திக்கைக்
கூட்டியெங்குந் தேடலுற்றார் ஓரி டத்தில்
பாரியமெய்ப் புண்ணுண்டு **"ராம கிருஷ்ணன்"**
பரிதவிக்கும் நிலைகண்டுங் காணா துற்றார்
"மீர்சாதீக் ஐயா!"வென் றோலங் கேட்க
முற்றுமவர் திரும்பினரே அருகிற் சென்றார்
1498

அறிந்துகொண்டான் மீர்சாதிக் யாரா மென்று
அருகோடிச் சென்றான்மெய் அறியும் நோக்காய்
ஒருக்காலும் பிரியாதான் மன்ன ரோடே
ஒன்றியெங்குஞ் செல்பவனாம் என்ப தாலே
உரைப்பாய்நீ சுல்தானெங் குற்றா ரென்றே
உயிரடங்கு முன்னறியும் வேகங் கொண்டே
பொறுப்போடு காப்பவன்போல் உடலைத் தூக்கிப்
பேசுவதைச் செவிமடுக்க முயன்றிட் டானே
1499

"உங்களைத்தான் தேடிநின்றார் இறுதி வேளை
உடனவரைப் பாருங்கள்" என்ற வாறே
அங்கையிடை மறைத்தெடுத்த குத்து வாளை
அடிவயிற்றில் பதித்திழுத்தான் ராம கிருஷ்ணன்
"எங்குஅவர் சென்றாரோ அங்கே நீயும்
அடைந்திடத்தான் வேண்டும்நீ இன்றே செல்வாய்
சங்கைமிகு மனிதருக்குத் துரோகம் செய்தாய்
சன்மானம் பெற்றுக்கொள்" எனவாய் சொல்லும்
1500

புண்ணுண்ட அடிவயிற்றைக் கையால் பொத்திப்
புலன்திருப்பி வெள்ளையர்பால் உதவி வேண்டி
மண்புரண்டு கதறியுடல் துடித்தான் சென்னீர்
மண்நனைத்துத் தன்பவத்தைத் தீர்த்துக் கொள்ளும்
திண்ணமிவன் சாவதெனும் திடத்தா லுற்றோர்
சிறிதேனுங் கவலையற்றே மீர்சா திக்கைக்
கண்ணெடுத்தும் பாராராய் விட்ட கன்றார்
கழன்றதொரு பீடையெனும் கருத்தி னோடே
1501

ஆட்சிபெறும் ஆசைகொண்டு சொந்த மண்ணின்
அழிவுக்குக் காரணனாய் ஆகி ஈற்றில்
தாழ்ச்சியுற்றான் மீர்சாதிக் சரித்தி ரத்தில்
தீராத பழிகொண்டான் வாழ்வைக் கொன்றான்
வீழ்ச்சிகொண்ட போதினிலும் வீரர் சுல்தான்
வரலாற்றில் பதிவுண்டார் தியாகி யாக
மீழ்ச்சிக்கு வழியில்லை துரோகி யர்க்கு
மறுவுலக வாழ்வினிலும் பாட மாகும்
1502

சீரங்கப் பட்டினத்தின் தெருக்கள்

சீரங்கப் பட்டினத்தின் தெருக்க ளெல்லாம்
செத்தழிந்த பிணக்குவியல் சொல்லில் மாளா
ஆரெவரென் றில்லாதே அனைத்தும் மாய்ந்த
ஆவியற்ற வுடலங்கள் ஒன்றோ டொன்றாம்
மார்பினிலுந் தலையினிலுங் குண்டு தாங்கி
மன்னவரின் உடல்கூட மரித்தோ ருள்ளே
ஓர்படைச்சிப் பாயொக்க வீழ்ந்தி ருந்தார்
ஒருவருமப் போழ்ததனை நோக்கி லாரே
1503

வெற்றிகொண்ட வெறியர்கள் வீரா வேச
வெறிகொண்டு வெற்றியினால் வாய்கு ரைக்க
சுற்றியெங்கும் ஓடியோடிக் குதுக லித்தார்
செவிசெவிடா யாகிற்றே கூச்ச லாலே
அற்பர்கள் துணைசெய்தார் தமது மண்ணை
அன்னியனின் பிடியுளகப் பட்டு வீழ
வெற்றியின்பால் பங்கிருந்தும் பேடி யோர்கள்
வரித்தென்ன! வெள்ளையரே பனன்கொண் டார்கள்
1504

பிணங்களொடு பிணமாக பிணத்தின் கீழே
பின்னியடி வீழ்ந்திருந்தார் திப்பு காணார்
கணப்பொழுதுள் வந்ததொரு கட்ட ளையுங்
கொன்றொழிக்கு மாறெதிர்ப்போர் தம்மை யென்ன
வினைதொடர்ந்த தாம்தப்பி யோடி னோரும்
வாளுக்குந் துவக்குக்கும் பலியா னார்கள்
குணமற்ற குடிவெறியர் மாதர் பாலும்
குற்றமிழைத் திட்டபெரும் கொடுமை தீதே
1505

வெள்ளையரின் படைப்பிரிவுத் தலைவன் தம்மோர்
வழிதொடர வெள்ளைநிறப் பதாகை யோடே
உள்நுழைந்தான் மாளிகைக்குள் வரவொட் டாது
உடன்தடுத்தார் மூவரிளஞ் சிறுத்தை போன்றோர்
பிள்ளைகளாம் திப்புமன்னன் பேர்பொய்க் காதார்
பிறப்பிருந்தே பயமென்ப தறியா ரன்னோர்
வெள்ளையனோ அதிசயித்தான் வீரங் கண்டு
வினவினனே யாருள்ளே யுள்ளா ரென்றே
1506

தாழகற்ற மாட்டோம்நாம் தந்தை யாணை
தவிர்த்தென்றார் **"அலன்"**வெள்ளைத் தலைவன் மிக்க
தோழமையாய் உங்களுக்குச் சிறிதென் றாலுந்
துன்புவரா வாக்களித்தேன் என்னை நம்பித்

தாழகற்றப் பணியுங்கள் எனவும் வேண்டத்
தமதுநிலை யுணர்ந்தவராய் வாக்கை நம்பி
ஊழியரை ஆணையிட்டார் அவருஞ் செய்தார்
உள்நுழைந்தார் பறங்கியர்கள் ஒன்றுங் காணார்
1507

திப்புவைத்தம் குறியாகக் கொண்டு வந்தோர்
தேடியெங்குங் காணாத நிலைமை கண்டு
செப்பினனே யொருவனொரு தகவல் போரில்
தான்வாயிற் புலமவரைக் கண்டே னென்றே
செப்பியசொல் செவிமடுத்தார் சொன்ன திக்கில்
தேடிடவுஞ் செய்தார்கள் நீண்ட போழ்து
மெய்ப்பட்ட தாமவனின் வார்த்தை கண்டார்
மெய்ப்பாது காவலனாம் **"காஜாக் கா"**னை
1508

குற்றுயிருங் குறையுயிரு மாக வீழ்ந்து
கிடந்தவனை கண்டவர்கள் அருகிற் சென்று
கொற்றவரின் நிலையென்ன என்றார் கேட்டுக்
கதறினனே வாய்விட்டு "சுல்தான்" என்றே
அற்பர்களோ விடவில்லை ஆவி போமுன்
அறிந்திடவே தவித்தார்கள் இறுதி வேளை
நற்பயணம் ஏற்கட்டும் என்றே எண்ணி
நீட்டினனே கரத்தைமன்னர் கிடந்த திக்கே
1509

படைத்தலைவன் **'ஹேரிஸ்'**முன் ஓடிச் சென்று
பக்கத்தே மண்டியிட்டு முடிவுங் கொண்டான்
அடுத்தகணம் **"இந்தியாவைப் பிடித்து விட்டோம்"**
என்றனனே மகிழ்ச்சிபொங்கக் கொக்க ரித்தான்
விடிதல்கண்ட பேருவகை இனிமேல் எந்த
வழித்தடையும் இல்லைக்கல் அகன்ற தென்னும்
திடங்கொண்டான் தன்வாழ்வின் தன்மண் ணிற்குச்
செய்தபெரும் தொண்டென்றே எண்ணி னானே
1510

கண்டெடுத்த உடலத்தை அரண்ம னைக்குக்
கொண்டுவந்தார் குடும்பத்தார் அடையா ளத்தைக்
கண்டுசொல வேண்டுமெனுங் கார ணத்தால்
குருதியினால் குளித்திருந்த தவர்தம் மேனி
கண்டார்கள் நான்குதுளை வாயில் மெய்யில்
குண்டுதுளைத் திருந்தவடு மார்பு நெற்றி
விண்டிருந்த தாமவையோ பார தத்தின்
வீரவர லாறாங்கல் லைழுத்துப் போலாம்
1511

கொலைகளவு கொள்ளையென மறுநாட் காலை
கொடுமாட்சி நடந்ததெங்கும் மக்க ளச்சம்
சொலவொண்ணா வாறாகும் கட்டி டங்கள்
தூள்துகளாய் உடைந்தனவே மக்க ளில்லம்
பலவாறும் உடையுண்டும் தீயில் வெந்தும்
பகைவரின்கை யோங்கியதால் பலவுங் காணும்
நிலங்கிடந்த பிணங்களுமாங் கிருந்த கோர
நிகழ்வுக்குத் துணைசெய்தல் போலு மாமே
1512

திப்புவின் இறுதிநாள்

ஆயிரத்தோ டெழுநூற்றுத் தொண்ணூற் றொன்ப
தாண்டுதிங்கள் "மே"நான்காம் நாளில் திப்பு
காயவடுக் கொண்டுடலைத் துறந்தார் விண்ணோன்
காலடிக்குத் தனையீந்தார் சொர்க்க வாழ்வின்
தூயசுகங் காணுதற்காம் தனது வாழ்வைத்
தனியவனின் சேவைக்காய்த் தந்த தீரர்
ஓயாது களங்கண்ட வீரர் நாட்டின்
இறைமைகாக்கத் தோள்கொடுத்த தென்நாட் டேந்தல்
1513

தேசியநல் லுணர்வெழுச்சித் தலைவர் வெள்ளைத்
தேசத்தோர் தனையகற்றத் துணிந்த மன்னர்
நேசக்கரம் நீட்டியவர் தம்மி னோரை
நட்புரிமை யோடணைக்கத்: துரோகஞ் செய்தும்
மாசில்லாக் கொள்கைகொண்ட மறவர் வாழ்வை
மக்களுக்காய்த் தந்தபெருந் தியாகச் செம்மல்
நாசகரால் கொலையுண்டார் நன்றி கொன்றோர்
நம்பிக்கைத் துரோகிகளால் வாழ்வி ழந்தார் 1514

மையித்தைப் "பீஸபீல"ர்க் கேற்ற வாறாம்
முறையான கிரிகைகளைச் செய்தெ டுத்து
வைத்திருந்தார் மண்ணறைக்குப் பரிசாய் ஈய
வரலாற்று நாயகரை மைசூர் மக்கள்
தையலரும் ஆடவரும் தெருக்கள் தோறும்
தம்முயிரைத் தந்தார்போல் திரண்டி ருந்தார்
செய்வதினி யாதென்றுந் தேரார் வெள்ளைத்
தலைவனதை நிர்ணயிக்கும் சாபக் கேடே 1515

"சந்தூக்"கி னுள்வெள்ளைத் துணியி ரண்டாற்
சுற்றிவைத்த உடலமது பிறர்க்குப் போலாம்
எந்தவித மாற்றமுமே இலாதி ருந்தும்
இடைப்பட்ட சரீரத்தின் சொந்தக் காரர்
இந்தியரின் தன்மானங் காத்து நின்ற
இணையில்லாப் பெருந்தலைவர் திப்பு வேந்தர்
வந்தாளத் துணிந்தவரை எதிர்த்த வேங்கை
வரலாற்றில் சுதந்திரத்தின் முதன்மை வீரர் 1516

உயிர்பிரிந்த போதுமவர் வதனம் முன்போல்
உயிருடைத்த பாங்கினிலே வீரஞ் சொட்டத்
துயில்வதுபோல் தானிருந்த தாகும் குண்டு
துளைத்தநுதல் வடுவீரத் தழும்பி னோடே

உயர்ந்திருந்த மார்பகமோ என்றும் போலாம்
எனக்குநிக ரெவருமிலை எனச்சொல் வாம்போல்
புயங்களுமவ் வாறுரைத்த பொலிவைக் காட்டும்
பெருங்குன்றம் சாய்ந்ததுபோ லிருந்த தாமே 1517

வெள்ளைப்படைத் தலைவர்தம் வீரர் சூழ
வந்திருந்தார் திப்பரசர் உடலத் திற்கு
உள்ளமரி யாதையுடன் அடக்கம் செய்ய
உடன்பாட்டை கேட்பவராய் மகனு ரைப்பார்
"உள்ளதென்ன கௌரவமாம் நீங்கள் செய்தல்
உயிர்பறித்த பேர்களென நீரி ருக்க
உள்ளதினி யொன்றுமிலை அடக்க மொன்றே
ஊரதனைச் செயுமுமக்கு நன்றி" யென்றே 1518

"பகைகொண்டீர் யுயிர்தன்னைப் பறிப்ப தற்காய்ப்
பகலிரவாய்ப் பாடுபட்டீர் பறித்துக் கொண்டீர்
இகவாழ்வைப் பிரித்தபின்னர் சடலத் திற்கென்
இறுதிமரி யாதையினி வேண்டும்" என்ன
"பகைதிப்பு மீதினில்தான் உடலோ டல்ல
பெருவீர ரவரென்ப தறிந்த வுண்மை
செகம்போற்றும் பெருமகனாம் என்ப தாலே
சங்கைசெய்தல் எங்கள்கடன்" எனவு ரைத்தார் 1519

பெரியவர்கள் எடுத்துரைத்தார் நிலைமை நோக்கி
பொறுமைக்கு வாழ்வளிக்க மகனும் ஏற்க
உரியபடி யத்தனையும் நடந்த தாங்கே
உன்னதப்போர் வீரருக்கா யான தாகும்
சிரந்தாழ்த்திச் சிறுபொழுது நின்றார் கையைத்
தலைவரையும் உயர்த்தியுடல் நிமிர்த்தி மீண்டும்
கரந்தாழ்த்தி விறைத்துநின்றார் அவர்கள் சார்பில்
காட்டுகின்ற முறைபேணிக் கௌர வித்தார் 1520

வெண்பட்டுத் துணிகொண்டே அலங்க ரித்த
வெள்ளிப்பல் லாக்கொன்று "சந்தூக்" கைத்தான்
கொண்டுசெல வுள்ளேனென் பெருமை மீறிக்
காத்துநிற்ப போல்மாளி கைமுன் நிற்கும்
கண்ணுண்பா ரில்லையதைக் கருத்து முற்றுங்
காவலனின் பாலுற்ற கார ணத்தால்
விண்மணியும் மெல்லமெல்லச் சரிய லானான்
வேதனையின் வாய்ப்பட்டான் போல வாமே
1521

பள்ளிகளில் திருமறையின் ஓசை யோங்கும்
பேரோலியில் மணியொலிக்கும் கோயில் தோறும்
வெள்ளைநிறப் பதாகைகளால் வீதி சோக
வயப்படுமால் காட்சிதரும் விதியை வெல்ல
உள்ளதொன்று மில்லையெனுஞ் சத்தி யத்தை
உணர்த்துவபோ லத்தனையும் நடந்த தாங்கே
கொள்ளிடமோ இலையென்னு வாறாய் யூரே
கூடியெஃகி நின்றதொரு புதுமை யாமே
1522

பல்லக்கில் சந்தூக்கை வைக்கு முன்னர்
பார்ப்பவர்கள் பார்பதற்கு ஏது வாக
எல்லோரும் இருநிரையில் வகுந்து நின்றார்
இடங்கிடையாப் பேர்களதில் அதிக மாகும்
நில்லாதீர் போங்களென்ற ஒலியை வாங்கி
நின்றவர்கள் நின்றார்கள் நினைவற் றோராய்
செல்லமன மற்றநிலை அனைபே ருக்கும்
தலைவனைநாம் காண்பதினி இல்லை யென்றே
1523

அள்ளியள்ளி வழங்கிய:கை அகட்டின் மேலே
அசையாதே யொளிந்திருக்கும் வெண்து கிற்குள்
உள்ளதெல்லாம் வெள்ளையர்கள் கொள்ளை யிட்டார்
ஒன்றுமில்லைத் தருவதற்கா மென்னும் பாங்கில்

தெள்ளியபே ரறிவினுயர் தீட்சண் யத்தைத்
துலங்கவைத்த விழியிரண்டும் இமைகள் மூட
உள்ளுறைந்து போனதுவேன் நன்றி கெட்ட
உலகத்தை நோக்கவெள்கிப் போன தாலோ
1524

எவர்க்குமில்லா வாறுவெள்ளைப் பறங்கி யர்கள்
இறந்தசுல்தான் உடலுக்கு வழமைக் கொப்பக்
கவுரவத்தை அளித்தார்கள் தொடர்ந்தும் பின்னர்
காரியங்கள் அத்தனையும் நிறைவே றிற்றே
சிவிகையிலே வைத்தவுடல் தனித்தி ருக்கத்
தூக்கிநால்வர் முன்செல்ல இரண்டாம் மைந்தன்
பவனிக்கு முதலாகப் பின்னால் மற்றோர்
பின்தொடர்ந்தார் அரசமரி யாதை சேரும்
1525

தொடர்ந்தார்கள் மந்திரிமார் அவர்கள் பின்னே
தரத்திலுயர் பிரதானி மார்கள் சென்றார்
அடுத்துவெள்ளைச் சிப்பாய்கள் அணிவ குத்தார்
அனைவருமே சிவப்புவெள்ளைப் படைக்கோ - லத்தில்
மடைதிறந்த வெள்ளமெனப் பாயுங் கண்ணீர்
மழையிடையே பார்வைபொய்த் திரும ருங்கும்
குடிமாந்தர் குரலெழுப்பிக் கதறி னார்கள்
கோற்றவனே யென்றுன்னைக் காண்போ மென்றே
1526

தம்மினுயிர் தாங்கியவர் செல்லு கின்ற
சந்தூக்கில் செல்லுவதாய் ஆர்ப்ப ரித்தார்
சும்மையங்கு ஆண்பெண்கள் மதச்சார் பற்றே
திரண்டிருந்த மக்கள்தொகை கடலா மன்ன
வம்மியவர் சிறுதொகையாம் வெந்து நெஞ்சால்
வாடியவர் பன்மடங்கே மைசூர் வேந்தன்
இம்மையிலே தேடியவச் செல்வம் மக்கள்
இதயத்தைப் பிழிந்தெடுத்த பாசச் சாறே
1527

மண்புரண்டார் மார்பிலறைந் தார்கள் தம்மின்
முடிமயிர்கள் பிய்த்தெறிந்தார் உடைகி ழித்தே
புண்ணுண்டார் உடலத்திற் கேவிக் கேவிப்
பேரொலித்துச் செவிப்புலனைக் கருகச் செய்தார்
கண்ணுண்டார் கோலத்தைத் தாமுங் கூடக்
கதறியழு நிலைகொள்ளச் செய்தார் யார்தான்
எண்ணினரோ இலையஃது வாறோர் போழ்தும்
ஏற்குநிலை வருமென்றாம் மைசூர் மாந்தர்
1528

மாலைவெயில் குளிர்ந்ததென்ன விந்தை வெய்யோன்
மழைத்துளியுட் கதிர்புக்கித் தூறச் செய்தான்
தூலவுடல் தாங்கியபொற் சிவிகை மீது
தூறாதே அவைதூறும் நனைக ளொப்பக்
கோலமென்ன செப்புதற்குக் கருணை விஞ்சிக்
கோன்முதல்வன் காலத்தைச் சீத மாக்கிப்
பாலித்தான் பேரருளைப் பாரா ளப்பேர்ப்
பதிக்குற்றன் பங்காற்றுஞ் சீர்மை போன்றே
1529

தாதையுடல் தாயினுடல் தாங்கும் மஞ்சம்
தனயனுடல் சேர்த்தொன்றித் தாங்கச் செய்ய
வீதிவழி சுமந்துவந்தார் வெள்ளை வீரர்
வரித்தகுழற் துப்பாக்கி வானு யர்த்தி
வீதியிரு மருங்கினிலுஞ் சிலைக ளொப்ப
விறைத்துநின்றார் கவுரவப்பண் காட்டுஞ் சீராய்
ஓதினரே மறைவசனம் **"கும்பாஸ்"** உள்ளே
உடலத்தை 'இமாம்'பெற்றார் அடக்கம் செய்ய
1530

மாறிமாறிக் கைதாங்கிக் கொணர்ந்த **'சந்தூக்'**
முன்னிருக்க வைத்ததன்பின் குடும்ப ஆண்கள்
மாறாத சோகத்தை நெஞ்சுள் தாங்கி
முதலணியில் தமையிருத்திக் கொண்டார் மற்ற

ஊராளு மன்றிலிலே உயர்ந்தி ருந்தோர்
ஒன்றியவர் பின்னாலே தொடர்ந்தார் பின்னே
போர்வீரர் படைத்தலைவர் போன்றோர் நின்றார்
பார்க்கக்கண் போதாதே பின்னால் சேர்ந்தோர்
1531

சாரிசாரி யாகமக்கள் தொழுகைக் காகச்
சேர்ந்துநின்றார் வரிவரியாய் ஒழுங்கு மாறாச்
சீரினிலே **"இமாம்"**முன்னே சென்று நின்று
"தக்பீரை"ச் சொல்லிக்கை யுயர்த்த வானைக்
கூறிடுவ தாகவொலி திக்க னைத்தும்
தக்பீரின் பெருக்கெடுப்பால் திணறிப் போகும்
கார்கொள்ளும் விண்முகடும் கவல்மி குந்தே
கண்டமனுச் சோகத்தைக் காட்டும் வாறே
1532

தொழுகைநிறை வேறியதும் கைக ளேந்தித்
தலையுயர்த்தி விண்நோக்கிக் கண்கள் சிந்த
அழுதழுதே **'இமாம்'**இரப்பார் எல்லாம் வல்லோய்
அழைத்தனைநீ யுன்வசமாய் எமது மன்னர்
களங்கமில்லாப் பெருமகனைக் காத்த ருள்வாய்
காரிருளில் தனித்துவிட்ட குழந்தை யானோம்
உளமொன்றி இறைஞ்சுகின்றோம் வகுத்து வைத்த
உயர்சுவனப் பதிக்கவரை உவந்தேற் பாயே .
1533

மக்களுக்காய் வாழ்ந்திருந்தார் மக்கட் காக
முற்றுந்தனை அர்ப்பணித்தார் முதலோன் உன்றன்
பக்கமவர் சாய்ந்தாட்சி தனைப்பு ரிந்தார்
பாரபட்சம் காட்டாதே பணிகள் செய்தார்
முக்கால மும்மறிந்த முதலோன் நீயே
முடிவிலென்ன நாமறியோம் நீயே தேர்வாய்
தக்கநலந் தந்தருள்நீ திப்பு சுல்தான்
தூயசுவன் சென்றடைய நீயே காப்பு 1534

பிராத்தனையும் முடிந்ததாங்கே அனைத்துப் பேரும்
பொருந்துவதாய் "ஆமீன்"என் றுரத்துக் கூற
சரித்திரத்தை ஆண்டபெருந் தலைவன் தேகம்
சமாதிக்குள் அடங்கியதே அடக்கம் செய்தார்
இருந்தாலும் யானைபொன் ஆயி ரந்தான்
இறந்தாலும் ஆயிரந்தான் என்பான் போல
இருக்கும்போ திலக்கணமாய் வாழ்ந்தார் பின்னும்
இலட்சியத்தை மதிப்பவர்க்கு எடுத்துக் காட்டே

1534

மரியாதைக் காகவெனக் கோட்டை மேலே
மேல்முழக்கம் செய்ததுவாம் பெரும்பீ ரங்கி
சரியாக நாற்பத்தி ஒன்ப தாகும்
திப்புவின்வாழ் நாட்கால வருடங் கூற
திருவளித்தார் ஏழையர்க்குத் தரும மாகத்
திப்புமன்னர் பேராலே யாவும் முற்ற
பெருமழையும் புயற்காற்றும் தொடங்கிற் றெங்கும்
புரண்டோடும் வெள்ளமுமங் குடன்கூடிற் றிற்றே

1536

வேங்கையொன்றின் அகாலத்துப் பிரிவை எண்ணி
வான்மேகக் கூட்டங்கள் வீறாய் மோதித்
தாங்கொண்ட கோபத்தைத் தணிக்க :மின்னல்
துலங்கினவே அவைமுந்திச் சினத்தை பீய்ச்சும்
ஓங்குபுயல் சுழல்காற்றும் நேர்ந்த கேட்டை
ஒப்பாதே தானுந்தன் வெறுப்பைக் காட்டும்
பாங்கினிலி வீசியதாம் அற்றைப் போழ்தில்
பார்த்தவர்க ளுரைத்ததுவாய்ப் பதிவி லுண்டே

1537

போருக்குப் பின்

வீடு வீடென வலிந்து புகுந்துமே
வெற்றி கொண்டவர் தம்வசம்
தேடு பொருட்களைச் சேர்த்தெ டுத்தனர்
தீமை பரவிய சூறையால்
கேடு டுடைத்தநெஞ் சான கீழ்மகர்
கூடிக் கூடியே கைப்படு
வீடு கொள்பொருள் விற்றுங் கைப்பணம்
வாரிக் குவித்தனர் வீணரே

1538

அச்ச மிகுதியால் அழுது புலம்பியே
அன்னை கால்தனை அணைத்திடுங்
கொச்சை பேசிடுங் குழந்தை கண்வழி
கொட்டும் நீரையும் நோக்கிலார்
இச்சை கொண்டவெண் ஈன ரோடவர்
இணைந்த சுதேசிக் "**குக் கல்**"களும்
எச்சி லுண்டனர் இளமை கண்டதால்
எண்ணி டில்பெருஞ் சோகமே

1539

காய வெம்பசிக் கீழ்மை போக்கிடு
கயவ ரோர்புறம் மறுபுறம்
ஓய மாட்டிலார் உடைமை கூட்டிடும்
ஓர்மை கொண்டவர் ஊர்த்தெரு
வாயல் கொண்டிடு கடைக ளுடைத்தவர்
விரும்பு மாறுள வனைத்தையும்
வாயு வேகமொன் றாக வேபிறர்
வரிக்க முன்முண்டி யள்ளினர்

1540

பொன்னும் மணிகளும் பட்டு டைகளும்
பைகள் பைகளாய்ச் சேர்த்தவர்
தன்னிற் றாங்கிய தோட்சு மைகளால்
தரைத வழ்ந்தனர் நடைகெட

முன்னர் கொண்டதை மறைத்து மறுமுறை
முயன்று முயன்றுமே பல்முறை
கன்ன மிட்டனர் கள்வர் பல்கடல்
கடந்து வந்தவெண் பேய்களே 1541

மாத ரணிகலன் மாலை கைவளை
மேக லைசெவிக் குண்டலம்
பாதக் கொலுசுகள் தண்டை சிலம்பொடு
பிறைநு தல்நகை மெட்டிகள்
மோதி ரஞ்சிகை மாட்டி யட்டிகை
மிகைமி கையெனு மாறுதாங்
கோதி யள்ளினர் கவர்ந்த வையவை
கோதை யர்புறம் கடைமகர் 1542

சூறை யிற்பெருஞ் சூறை திப்புவின்
சொந்த மாளிகைப் பொருட்களே
சூறை யிட்டவர் சொல்லில் வெள்குவர்
சொந்த மண்படு மாந்தரே
கூற லாகுமோ கொள்ளை கொண்டவர்
கவர்ண ரோடவர் கைக்கிளைக்
கரும மாற்றிய பேர்க ளும்பொதுக்
கள்வ ராயினர் ஈனமே 1543

வைர நகைகளும் வைர மணிகளும்
வரையி லாதவை டூரியம்
துய்ய மாணிக்க மரக தங்கள்செஞ்
சுடர்தெ றித்திடு கற்களும்
துய்ய ஆழிமுத் தோடு கட்டிகள்
தங்க மாகும்பல் லாயிரம்
செய்த கொள்ளையிற் சேருமா மாமவை
சொல்லி லடங்கிடாத் தேறலே 1544

கோடி கோடியாய்க் கொள்ளும் விலையவை
குவியல் குவியலாம் அளவினில்
தேடி வைத்தவத் திரவி யம்மவர்
சொந்த மண்ணுயர் பணிசெய
நாடி யாமது நாச கர்வசம்
நிலைத்த கேடென்ன கேடதோ
நாடு போனபின் நிலைத்து மென்பயன்
நெறிப்ப டுத்திடா ரில்லையேல் 1545

தொடர்ந்து நான்குநாள் தொடர்ந்த தாகுமே
சூறை ஈதுதா மென்னுமால்
அடங்கி டாரென அறிந்த கவர்னரும்
அடங்கி அடக்கிட ஆணையைத்
தொடுத்தும் அன்னவர் தொடர்ந்தா ராசையின்
சுவைப டிந்ததால் கடமையின்
அடிப்ப டுத்திட ஆன தண்டனை
அடக்க வைத்தபின் அடங்கினார் 1546

சிலரைத் தூக்கினில் தொங்க விட்டனர்
செயலி லன்னவர் பேருளார்
கலவ ரத்தினைக் களைய அன்றுநாள்
கைப்ப டுத்தலஃ தொன்றுதான்
பலித்த தாயினும் பவத்தி லிருவரும்
பங்கு தாரரே கைவசம்
பலமி ருந்ததால் பதவி கொண்டவர்
பிறரை மாய்த்துயிர் காத்தனர் 1547

வேறு

காவிரியைக் கடந்து" **ஜெனரல் ஹேரிஸ்"** செல்லக்
காரணனாய் **"ஆஞ்சிசாமய் யா"**வி ருந்தான்
காவியவன் பாவத்தை **"மாள வல்லி"**
கைநழுவக் **"கமருத்தீன்" "திருமல் ராவே"**
தேவையுற்றான் வெள்ளையர்க்கு சுல்தான் பேட்டை
தம்வசமாய்க் கொள்வதற்கு **"மீர்சா திக்கீன்"**
ஆவனசெய் தான்பகைவர் சீரங் கத்துள்
அணிவகுக்க அவரோடு இன்னுங் கூறின்
1548

கைநழுவி பெங்களூர்சென் றிடவும் செய்தான்
"கிஷ்ணாராவ்" துரோகத்தால் அனைத்தில் மேலாய்
துய்யவனாய் நம்பித்தன் தோழ னென்றே
சேர்த்திருந்த **"பூர்ணையா"** மாற்றான் உள்ளே
கைகோத்து வரச்செய்தான் வீரர் தம்மை
கைப்பலமற் றிடவுமவன் செய்தான் இந்தப்
பொய்யான உலகத்தில் நம்ப யாரும்
பாக்கியதை யற்றதனை நிரூபித் தாரே
1549

உடனிருந்து கொல்லுகின்ற வியாதி யொக்க
உடனிருந்தே துரோகத்தால் திப்பு வீரன்
தொடர்ந்ததோல்வி எண்ணிடுங்கால் இந்தி யர்கள்
தலைகுனிதல் போதாதே அதற்கும் மேலாய்
உண்டெனினுங் கொண்டிடலாம் உரித்த தாகும்
உலகவர லாற்றினிலே இதுபோல் வேறும்
உண்டாமென் றானாலும் சிகரம் போன்று
உள்ளதிதே மறுப்பார்க்கோர் உளமே இல்லை
1550

போருக்குப் பின்மைமைசூரின் ஆட்சி மாற்றம்

வெள்ளையர் சூழ்ச்சி யோடு வஞ்சகர் துரோகம் ஒன்ற
தள்ளவொண் ணாத தோல்வி சீரங்கம் கொண்ட போழ்து
வெள்ளையர் ருள்ளும் சேர்ந்து வினைக்குத்தோள் தந்தோ ருள்ளும்
உள்ளத்தால் ஒன்ற மாட்டா ஓர்நிலை உருவா கிற்றே
1551

ஒருவரை ஒருவர் ஐய உணர்வுடன் நோக்கித் தம்பால்
வருநிலம் கொள்ளைப் பண்டம் கொள்வதில் கண்ணா யுற்றார்
தருவதாய் ஒப்புக் கொண்ட திருவொடு நிலத்தில் பங்கு
தருவதில் சிரத்தை வெள்ளைத் தோலருக் கற்ற தாலே
1552

தமதெல்லைப் புறத்தை யொன்றிச் சார்ந்தநல் நிலத்தைக் கொள்ளல்
சமமாகப் பொருள்பி ரித்துத் தம்பங்கு எற்றல் என்ற
அமைப்பினில் சற்றும் மாறா எண்ணத்தில் நிசாமி ருக்க
எமகாத வெள்ளைப் பேர்கள் எண்ணமோ வேறொன் றாமே
1553

முன்னைய ஆட்சி யாளர் முயன்றனர் பறங்கி யர்க்கு
என்னதான் செலவென் றாய்ந்தே ஈடுசெய் தாட்சி கொள்ள
சொன்னதம் வாக்கு மாறிச் சேர்ந்தவ ரோடு பேச
அன்னியன் வெலஸ்லி ஒப்பி அறியாது செயற்பட் டானே
1554

"ஜோசையா வெப்பே" என்பார் திட்டமொன் றுரைத்தார் அந்த
யோசனை பத்தில் ஒன்றைப் புறந்தள்ளி மற்றோர் ஏற்கும்
யோசனை என்றார் அஃதை ஏற்றிட வெலஸ்லி இல்லை
நாசத்தின் பாலே நோக்கு நிலைபெற்றே இருந்த தாலே
1555

மற்றுமோர் திட்டந் தன்னை முன்வைத்தார் பூர்ண ஐயா
உற்றதவ் ஆட்சி திப்பு யுயிர்வழி மகர்க்காம் என்றே
பெற்றிடச் செய்க மூத்த புதல்வர்க்காம் நாட்டில் ஆட்சி
முற்றிலும் நிருவா கத்தை முஸ்லிம்கள் கொண்டா ரென்றார்
1556

ஆட்சி யில் மாற்ற மென்றன் றேற்பட்டே இந்து மன்னர்
ஆட்சியைப் பெறுவ ராயின் அரசியல் சீர்மை தோன்றா
நாட்படும் நிருவா கத்தில் நன்னிலை தோன்ற உள்ளோர்
பாற்படு பதவி மாற்றிப் புதியபேர் கொள்ளி லென்றார் 1557

நிருவாகத் துறையி லன்றி நாட்டுடைப் பாது காப்பும்
பெரும்பாலும் திப்பு மன்னர் தேர்ந்தளித் திருந்த பேர்கை
இருந்ததால் தொடர்தல் ஒன்றே ஏற்றதாம் மைசூ ருக்கும் பொருந்துமாம்
முழுநாட் டிற்கும் புதுமாற்றம் பொருந்தா தென்றார்
1558

நாட்டுடைப் பெருநி லத்தை நிசாமொடு பிரித்துக் கொண்டு
சாட்டினர் பங்க ளூரைச் சார்தசிற் றூரைத் திப்பு
மாட்சிமைக் குரிய பாங்கர் மக்களுக் கவர்சார்ந் தோர்க்கும்
கேட்பிலார் அற்ற போழ்தும் கருத்தினைப் பொருத்தாப் பாங்கே
1559

கவர்னரின் முடிவாய் மற்றோர் கருத்துருக் கொண்ட தஃது
திவானாகப் பூர ணய்யா தமைக்கொண்டு முன்னைப் பேர்க்கே
உவந்துவவ் ஆட்சி தன்னை உரித்தாக்க மைசூர் நாட்டின்
புவிப்புல நாப்பண் தம்மைப் பரம்பரை இந்து மன்னன்
1560

மீதியாம் நிலங்கள் தம்மை நிசாமுக்கும் மற்றோ ருக்கும்
போதிய தாகத் தம்பால் பொருத்தியே பகிர்ந் தளிக்க
நிதிக்குப் புறம்பாம் செய்கை நயத்திலர் திப்பைச் சார்ந்தோர்
ஓதினார் மறுப்பைக் கவர்ணர் உறுதியில் மாற்றம் தோற்கும்
1561

உடனடி கவர்னர் திட்டம் உருப்பெற வேண்டு மென்றே
திடங்கொண்டான் வெலஸ்லி அஃதைத் திப்புவின் மக்கள் ஏற்று
உடன்படார் அறிவான் நாட்டை இழந்ததும் தமது தந்தை
கொடூரமாய் கொலையுண் டன்னார் கௌரவம் சிதைற்த தாலே
1562

அடிப்படை அவர்க்குத் தந்தை "அன்னியர் ஒடுக்கல்" என்னும்
பிடிவாதந் தானே ஆட்சி பற்றிடில் நமைய ழிக்க
முடிந்தவா றனைத்தும் செய்வார் மாற்றாக விசுவா சத்தைக்
கடைப்பிடித் தொழுகார் என்னும் காரணம் வெலஸ்லி தேர்வான்
1563

நாட்டிற்குத் துரோகி யான நிசாமும்தன் எதிர்ப்பை முற்றும்
காட்டினார் திப்பு மன்னர் கோன்வழி யாட்சி மக்கள்
பாட்டினில் பொருந்த அன்னார் கடுகள வேனும் தம்பால்
கேட்டிடும் உரிமை கொள்ளார் காரணம் தோற்றோர் என்றார்
1564

வெள்ளையர் படைந டத்தி வென்றதாம் மைசூர் முற்றும்
உள்ளதாம் உரிமை யார்க்கென் றுவப்பதவ் வாட்சி என்று
கொள்ளுமோர் முடிவு அன்னார் கைவசம் தானே என்றார்
உள்ளத்தில் கபடங் கொண்ட ஊனராம் நிசாமென் நீசர்
1565

திப்புவின் தந்தை ஹைதர் கைப்பட முன்னர் ஆட்சி
ஒப்பியே இருந்த பேரின் உறவினர் தம்பால் நாட்டை
ஒப்பளித் திடவென் றோசார் நிலைமையும் தோன்றிற் றன்று
செப்பிடில் அன்னார் தாழ்ந்து திறைதந்து மதிப்ப ரென்றே
1566

முடிவொன்று கொண்டான் வெலஸ்லி வரிப்பதவ் ஆட்சி தன்னை
அடிபற்றி வாழ்வ தற்கும் ஆகுபேர் ஆன தாலே
முடியிழந் திருந்த முன்னை மன்னரின் பரம்ப ரைக்கே
தொடர்ந்ததற் கான சட்டத் தீர்வையும் வகுத்திட் டானே
1567

வெள்ளையர் தமக்கும் மைசூர் வரித்திட்ட ராஜா வுக்கும்
உள்ளதாம் உறவு பற்றி யொன்றொடு மற்றும் ஒன்றாய்
கொள்ளையிட் டெடுத்த மண்ணைக் கூறுபோட் டிடுத லோடு
கொள்ளையாம் செல்வம் தம்மின் கொடுபனப் பகிர்வுக் கென்றாம்
1568

தமக்கென ஒதுக்கிக் கொண்டார் செல்வத்தில் ஏழு இலட்சம்
அமைந்திடப் பகோடா: மண்ணில் ஆனதாம் "கோயம் புத்தூர்"
தமதொடு "மலபார்" சேரும் "தர்மபு ரம்"மும் தெற்கில்
அமைவுறும் கரையோ ரங்கள் ஆகுமாம் கிழக்கைப் போன்றே
1569

துறைமுகம் கோட்டை யெல்லாம் சொந்தமுற் றார்கள் அன்னார்
குறைந்தள வாகும் செல்வம் கொண்டது நிசாமும் மண்ணும்
குறைந்தள வாகும் கூடக் கொடுத்திடில் தமையே விஞ்சும்
பொறைவரும் அவர்க்கா மென்றே பகிர்வினில் சீர்மை கொன்றார்
1570

வாக்களித் திருந்த வாறு வகைத்திடா நிலமும் பொன்னும்
கோக்கவைத் திட்ட சீற்றம் குமுறிட நிசாமும் அன்னார்
போக்கினைக் கடிந்து ரைக்கப் பிறிதொரு முடிவுஞ் சொன்னார்
நாக்கினில் நஞ்சு கொண்டோர் நிசாமினை ஏய்ப்ப தற்கே
1571

யுத்தத்தில் பங்கு கொள்ளா மராட்டியர் தமக்கென் றாகத்
தந்திட வுவந்தார் சொற்பத் தொகையொடு நிலமும் அஃதைச்
சொந்தமுற் றில்லாப் போழ்தில் சேர்த்ததில் மூன்றில் இரண்டை
தந்திட லாகும் என்றோர் தீர்வினை முன்வைத் தாரே

1572

பதின்மூன்று இலட்சம் பகோடா பெறவேண்டும் நாங்க ளென்றே
விதித்ததாம் சட்டம் அன்று வெள்ளையர் மைசூர் மீதே
மதிப்பீடே இல்லா செல்வம் மைசூரின் கஜானா முற்றும்
பொதுப்பொரு ளான தன்னாள் பறங்கியர் படைக ளுக்கே

1573

வெள்ளையர் எண்ணம் போன்றே வருத்தனர் அனைத்தும் திப்பு
பிள்ளைகள் வேலூ ருக்கு போகிடப் பணிக்கப் பட்டார்
உள்ளதாம் மானி யங்கள் உரியவா றென்றார் தந்தும்
கொள்ளையர் பின்னாள் அஃதைக் குறைத்தனர் போதா வாறே

1574

வேறு

ஆயிரத்தோ டெழுநூற்றின் எழுபத் தேளில்
ஆனதிங்கள் ஜூன்வருநாள் முப்ப தன்று
வாய்த்ததுமுன் ஆண்டவரின் பரம்ப ரையில்
வந்துதியா வளர்ப்புமகன் றம்மி னுக்காம்
பூணுமுடி வெள்ளையரே புனையச் செய்தார்
பூரணையா பொறுப்பேற்றார் திவானு மாக
கோணல்தான் முற்றிலுமே பொம்மை மன்னர்
கையேற்ற ஆட்சிபின்னாள் ஆய்வு கூறும்

1575

வேலூர் கலவரமும் திப்பு சுல்தான் குடும்பமும்

மாவீரர் ஹைதர்அலி அவர்தம் பிள்ளை
மாற்றாரை நாட்டைவிட்டே யோட்டச் செய்த(து)
யாவுமறிந் துள்ளபின்னர் அவர்தம் எச்சம்
ஏதுசெய்தார் பின்னாளில் என்ப தாய்தல்
பூவுலக வரலாற்றைக் கற்போ ருக்குப்
பேருதவி யாகுமதால் அஃதை ஈங்கு
தேவையுணர்ந் தேசெப்ப லானேன் திப்பு
சரிதத்திதல் பங்கதற்கும் உண்ட தாகும்

1576

"தாய்நாட்டின் மீதுநேசம் கொள்வ(து) ஈமான்
தனில்பாதி" எனும்நபிகள் போதம் ஏற்ப
தாய்நாட்டின் மீதுஹைதர் திப்பு போன்றே
திப்பரசர் சந்ததியும் பற்றுக் கொண்டார்
சேய்களுடற் செங்குருதி தாதை பாட்டன்
தாய்நாட்டுப் பற்றுடைத்தாய்த் திகழ்ந்த வாறே
வாய்த்ததெனில் வெள்ளையரை விரட்டும் எண்ணம்
வாராதோ வந்ததெனில் புதுமை யுண்டோ!

1577

சீரங்கம் வீழ்ச்சியுற்ற பின்னர் மன்னர்
திப்புசுல்தான் ஆண்மக்கள் பன்னீர் பேரும்
சேரப்பெண் மக்களெண்ம ரோடு சொந்தம்
சுற்றமென முன்னூறு பேரும் வேலூர்
சேரவைத்தார் வெள்ளையர்கள் கோட்டை யுள்ளே
சிறைவைத்தார் ஐம்பெரிய அரண்ம னைக்குள்
சார்ந்தொருபேர் படைகூடக் காவ லுக்கு
சுற்றிவளைத் திருந்ததுவாம் அற்றை நாளே

1578

"பால்கொண்டா" "கண்டி" "திப்பு" "கும்சூர்" என்னும்
பேர்கொண்ட நான்கோடு "பற்சா பேகம்"
வேலூரின் கோட்டையுள்ளே அமைந்த ஐந்து
வசதிமிகு மாளிகைகள் அவர்க்கென் றாகும்

கால்பதித்த காலத்தே பொறுப்பாய்க் கொண்டு
"கேணல்டெ வேடன்"எனும் வெள்ளை யர்தான்
வேலூரில் இருந்தாராங் குற்ற போர்க்கு
வகைசெய்யும் பொறுப்புமவர் பேரி லாகும்
1579

லெப்டினன்"**ம ரீயோட்ஸ்**"தம் பொறுப்பி லுற்ற
மாளிகைக்குள் அவரன்றி மாற்றார் யாரும்
ஒப்தல்பெற் றன்றியுள்ளே செல்ல லாகா
உள்ளுறையும் குமாரர்களின் விருப்பி லாகும்
எப்பொழுதும் சென்றுவரும் பணியாட் கட்கு
ஏதுவாகத் தந்திருந்தார் மன்னர் மைந்தர்
ஒப்பமிட்ட அட்டையொன்றைப் பதிவி னோடே
ஒழுங்குமுறை பேணுதற்காம் உரிய வாறே
1580

ஆண்மக்கள் அறுவரொடு பெண்கள் நால்வர்
அரசரது காலத்தே திரும ணத்தைப்
பூண்டிருந்தார் அவரோடு பன்னூ றாகப்
பாதுகாப்புப் பணியாளர் ஒன்றி னார்கள்
வேண்டுவன செய்வதற்கும் ஏவ லாளர்
வேறாய்ப்பன் நூறாகும் அனைத்துப் பேரும்
மீண்டுவந்து சேர்ந்தவரே முன்னாள் மன்னர்
மாளிகையில் சேவைசெய்தோர் நன்றி கொண்டோர்
1581

மாளிகையின் வாசல்முற்றும் காவ லாளர்
மாறிமாறிக் காவல்செய்தார் சிப்பாய் மார்கள்
ஆளணியின் பெயர்களையும் அச்சொட் டாக
ஆங்கிலேயர் பதிந்திருந்தார் அனைத்துப் பேரும்
மாளிகையில் வாழ்ந்திருப்போர் மன்னர்க் கானோர்
மற்றவரைச் சார்ந்திருப்போர் கண்கா ணிப்பின்
ஆளுமையின் உச்சத்தில் அனைத்தும் கொண்டார்
அச்சமவர் நெஞ்சத்தில் உறைந்த தாலே 1582

சுல்தானின் தம்பியொடு மக்க ளைத்தம்
சிறைக்கைதிப் பாங்கினிலே வைத்திட் டாலும்
எல்லையொன்றுள் போகவர அனும தித்தார்
ஏற்றவவர் தரத்துக்குத் தக்க வாறே
பல்வகையில் உதவுகின்ற பணியா ளர்கள்
புறநகரில் வாழ்ந்தாலும் அன்ன வர்க்குச்
சொல்லிமுறை வைத்தாற்போல் பொழுது மாற்றித்
தினந்தோறும் சென்றுவர அனும தித்தார்
1583

சுல்தானின் மூத்தமகன் **"ஃபத்தே ஹைதர்"**
திட்மிட்டார் புரட்சியொன்றை நடத்து தற்கு
பல்வகையில் உதவினரே உறவி னர்கள்
பக்கபலம் தந்தார்கள் மற்றை யோர்கள்
எல்லாமாய் மூபத்து ஆயி ரம்பேர்
இந்தியச்சிப் பாய்களொடு வெள்ளை வீரர்
இல்லையெனில் பதின்மூன்று ஆயி ரம்பேர்
இருந்தார்கள் கோட்டையுள்ளே பாதிப் பங்கே
1584

தொடக்கத்தில் வெள்ளையரின் நடவ டிக்கை
தேர்ந்தறியத் தேர்ந்தெடுத்தார் திறமை மிக்கார்
கொடுத்தபணி உடன்முடிக்கும் **"முஹம்மத் மாலிக்"**
கைக்கடங்குஞ் சிலபேரைத் துணையாய்த் தந்தே
விடுத்ததில்லை உள்நாட்டு ஆட்சி யாளர்
வரிக்கின்ற செயல்களையும் அறிய வேண்டி
முடிக்குரிய இளவரசர் **"ஃபத்தே ஹைதர்"**
மிகுகவன மாகவது பொசியா வாறே
1585

ஒற்றர்கள் பலகூறாய்ச் செல்ல மாலிக்
ஒருபுறமாய் சென்னையொடு பாண்டிச் சேரி
முற்றும்தன் வசமாக்கிச் சேதி கொள்ள
முனைந்தகன்றார் கச்சிதமாய் நடந்த தஃதே

கொற்றவர்தம் மகனுக்கு தினமும் சேதி
கொண்டுவந்தார் கடன்சுமந்தோர் திட்டந் தீட்ட
உற்றதுணை யானதவை தம்பி மாரும்
உறுதுணையாய் இருந்தார்கள் அண்ண னுக்கே 1586

தாதைதனைக் கொன்றாட்சி தனைப்ப றித்துத்
தமதாக்கிக் கொண்டதொடு குடும்பந் தன்னை
ஆதுலராய் ஆக்கிவிட்ட பறங்கிப் பேரை
அழித்தொழிக்குங் கடமையிலே மன்னர் மைந்தர்
பேதமற ஒருமித்தார் **"அப்துல் ஹாலிக்"**
பிரஞ்சுநாட்டின் துணைகேட்டு ஓலை விட்டார்
ஓதுவரே **"மொயுஸ்ஸித்தீன்"** புரட்சிக் கான
ஓவ்வொன்றும் தேர்ந்தறிந்து செய்தா ரென்ன 1587

சிப்பாய்கள் தமக்குவேண்டுந் துணைபு ரிந்து
தம்பக்கம் சேர்ப்பதிலே வெற்றி கண்டார்
அப்போழ்து பலங்கொண்ட மராட்டி யர்க்கு
"அலாவுத்தீன்" எனுந்தனது முறைசார்ந் தோரைக்
கைப்படவோர் கடிதத்தை கரங்கொ டுக்கக்
கேட்பதுவாய் வரைந்தளித்தே அனுப்பி வைத்தார்
மெய்ப்படுமா றத்தனையும் திட்ட மிட்டே
முயன்றார்கள் ஆட்சிதனை மீட்கும் நோக்கே 1588

தொகையளவில் அதிகமென்ற கார ணத்தால்
திண்ணமவர் பக்கத்தில் வெற்றி யென்றே
வகைசெய்தார் திப்புமக்கள் புரட்சி தோற்ற
வருடமாயி ரம்மோடே யெண்ணூற் றாறில்
தகும்பத்தாம் நாள்ஆகஸ்ட் திங்க ளன்று
தொடங்கிற்று மன்னர்மகள் பாத்தி மாவும்
அகமொன்றி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட
அமைச்சர்மகள் தாமுமென்றி யியற்றி னாரே 1589

"வெளிச்சென்றால் பல்லாக்கில் பெண்க ளுக்கு
வெள்ளையர்கள் பாதுகாப்பாய் செல்ல லாகா"
அழுத்தமாயோர் ஒப்பந்தம் உண்டு முன்னர்
அன்னியர்கள் கைதுசெய்த போதி லாகும்
முழுதுமதைப் பயன்கொண்டார் ஆயு தங்கள்
மறைத்துள்ளே பல்லாக்கில் கொண்டு செல்ல
வகைசெய்தார் பாத்திமாவும் மன்னர் செல்வி
வேற்றார்கண் காணாத விவேகத் தோடே 1590

அற்புதமாயத் திட்டமிட்டும் அரும்பா டுற்றும்
ஆனதந்தப் பரட்சிகாலை மணியி ரண்டு
முற்றியதும் சிப்பாய்கள் ஐந்து நூறு
முதலணியில் வகுத்துநின்றார் தாக்கு தற்கே
சுற்றிவளைத்(து) ஆங்கிலேயர் தாங்கி நின்ற
சுகபோக மாளிகைகள் துவம்ச மாக
மற்றொருபால் ஆயுதங்கள் கொண்ட சாலை
முற்றாகக் கொள்ளைகொள்ளப் பட்ட தன்றே 1591

"சுபேதர்ஷேக்" "ஜமேதர்ஷேக்" இருபே ரும்போர்ச்
சாதனங்கள் பரிமாறக் கோட்டைக் குள்ளே
தபசுசெய்த அமைதிவிரண் டோடும் எல்லாத்
திக்கினிலும் வெடியோசை செவிபி ழக்கும்
சுபமாகத் துயில்கொண்ட வெள்ளை யர்கள்
திக்கறியாத் திசைநோக்கிச் சிதறி யோடி
அபயமற்றார் குண்டுக்கிரை யாகி னார்கள்
அவர்முன்னர் செய்தபழி அனுப வித்தார் 1592

மாளிகைகள் ஒவ்வொன்றும் வளைக்கப் பட்டு
மூர்க்கமாகத் தக்குண்ணச் செய்வ தோரார்
ஆளோடு ஆள்மோதி அங்கு மிங்கும்
அலைந்தார்கள் ஆவிகரம் பற்றிக் கொண்டார்

கேள்விகணக் கேதுமில்லை வெள்ளைத் தோலைக்
கண்டதுமே கொண்டிருந்த வஞ்சம் தீர்க்கத்
தாழொடித்துப் பறந்தனவே குண்டு மாரி
தடுப்பதற்கோ யாருமில்லை சாவே எஞ்சும்
1594

கோட்டைக்குத் தலைவனெனும் "கேணல் பேங்கோர்ட்"
குண்டுபட்டுத் தரைசாய்ந்தான் சிப்பாய்க் கூட்டம்
போட்டுடைத்தார் மண்டைதனை புறத்து வக்கால்
பகைகொண்டார் முன்னரவர் தலைக்குப் பாகை
வேண்டுமெனக் கட்டளையும் பிறப்பித் தோனாம்
வேண்டாத ஆணையது வெறுப்புற் றார்கள்
பூண்டிருந்த கோபத்தைக் காட்டக் காலால்
பாதபூசை தந்தார்கள் பரிதா பம்மே!
1595

உயிரஞ்சி மாளிகைக்குள் ஒளிந்த பேரை
ஊடுருவிச் சென்றுள்ளே வெளிக்கொ ணர்ந்து
உயிர்பறித்தார் சிப்பாய்கள் ஒருவர் தாமும்
உயிர்பிளைத்தா ரில்லையந்த இரவுப் போழ்தே
தயவற்றுத் தாய்மண்ணில் தம்மோர் தம்மைச்
சித்ரவதை செய்தவர்கள் சாக டித்தோர்
தயவற்றுத் தாக்குதற்குந் தகுதி கொண்டார்
செய்தபழி தலைகொண்டார் தருக்கர் கூட்டம்
1596

காலில்விழச் செய்தவனே காலில் வீழ்ந்தான்
கையெடுத்துக் கும்பிட்டான் கொலைத விர்க்க
ஏலாது போனதுதாம் பட்ட துன்பம்
இதயத்தில் பதிந்திருந்து பழியைத் தீர்க்குங்
காலத்தைக் காத்திருந்த கார ணத்தால்
கைவிட்டால் மீண்டுமிவர் கைக ளோங்கிப்
போகுமெனில் நமைநாமே கொன்றொ ழிக்கப்
பங்களித்தல் போலாகும் எனவு ணர்ந்தார் 1597

தாகசாந்தி கொண்டதுமண் குருதி யாலே
தனையாள வந்தவரைத் தனிலு தித்தோர்
சாகவழி செய்ததனால் மகிழ்வு கொள்ளும்
சுதந்திரம்தன் பாங்குபெறும் தனது மக்கள்
சோகத்தின் காரணரைத் தன்னி ருந்தே
துடைத்தெறியும் வாகொன்று துலங்கக் காணும்
போகத்தில் திளைத்ததுபோல் வான்வெ ளிக்கும்
பரிதியொளி வெற்றிப்பூ சொரிந்தாற் போன்றாம்
1598

வெற்றியின்பின் இளவரசர் அரண்ம னைக்குள்
வெற்றிக்குக் காரணரை ஒன்று கூட்டி
சொற்பெருக்கி நன்றிகாட்ட இனிப்புந் தந்தார்
சேர்ந்துவிருந் துண்டுமகிழ்ந் தனைவ ருக்கும்
உற்றபடி பதவிகளும் படியு யர்வும்
உண்டாமென் றுறுதிசெய்தார் மகிழச் செய்தார்
வெற்றுடைமை யானதுவாம் வெள்ளை யர்கள்
வரித்திருந்த ஆயுதத்தின் குதங்க ளன்றே
1599

முற்றிலுமே கோட்டைவசம் ஆன பின்னர்
மூத்தமகன் **"பத்தேஹை தர்"**தம் வீரர்
ஒற்றுமையும் துணிவுடனும் இருந்து கோட்டை
ஒழுங்குகாத்து நடந்துகொள்ள வேண்டு மென்றார்
மற்றொருபால் எதிர்மாறாய் நிகழ்வு ஒன்று
முகிழ்ந்ததது பொருளாசை கொண்ட பேரால்
பொற்காசுப் பாதுகாப்பு அறையு டைத்துப்
பெருங்கொள்ளை நடந்ததது பெருஞ்சீர் கேடே
1600

கொள்ளைகொண்ட நாணயங்க ளோடே சிப்பாய்க்
கூட்டம்தன் வழியோடப் பார்த்தி ருந்தாங்(கு)
உள்ளவரும் தொடர்ந்தார்கள் மன்னர் மக்கள்
உவந்தநிலை குலைந்ததனால் அதிர்ச்சி யுற்றார்

உள்ளபலம் குன்றியதால் தடுக்க வொண்ணா
உறுநிலையில் புரட்சிமுற்றும் வலுவி ழக்க
அள்ளிக்கை கொண்டதுவாய் கிட்டாப் பாங்கில்
ஆனதன்று முதற்சிப்பாய்க் குழப்பம் கேடே
1601

'பேராசை பெருநட்டம்' போலு மாகிப்
போனாலும் மிகப்பெரிய அளவி லன்று
காரணமாய்ப் போனதுவாம் ஆங்கி லேயர்
கலங்கிடவும் பயப்பீதி கொள்ளு தற்கும்
காரணத்தை அறியாது திணறி னார்கள்
கொன்றொழித்த செயலதுவென் றிற்றை நாளும்
சீராக இருந்தசிப்பாய்த் தொழில்செய் தோர்கள்
சீற்றமுற்ற தேனென்றே தெரியா துற்றார்
1602

"வேலூர்சிப் பாய்க்கலகம்" இங்கி லாந்து
வேந்துக்குத் தலையிடியாய்ப் போன தன்று
காலூன்றி நின்றாலும் தென்ன கத்தில்
குழப்பநிலை முகாம்களிலே கொதிக்க லாச்சு
ஏலாத நிலையடக்கச் சிரமங் கொண்டார்
இயல்புநிலை தோன்றப்பெரு நாளா கிற்று
காலொடிந்த வாறாகும் வெள்ளை யர்பால்
கல்லெழுத்தாம் சரித்திரத்தில் மறக்காப் பாடம்
1603

ஆயிரத்தோ டெண்ணூற்று ஐம்பத் தேழில்
ஆனதுவோ மற்றொன்று சுதந்தி ரப்போர்
தாயதற்கு முன்சொன்ன கலவ ரம்தான்
சிப்பாய்கள் செய்ததுவே இரண்டு மாகும்
நாயகராம் திப்புசுல்தான் நாட்டுக் காக
நடத்தியபோர் தொடர்ந்தவர் மக்க ளாலே
தூயமனங் கொண்டவர்கள் மறக்க மாட்டார்
சரித்திரத்தைப் பொய்ப்பிக்கார் நன்றி கொல்லார்
1604

பிரார்த்தனை

திப்புசுல்தான் காவியத்தை நிறைவு செய்தேன்
தீந்தமிழுக் கென்றனது காணிக் கையாய்
ஒப்பில்லா வீரனையிவ் வுலகத் தோர்கள்
உள்ளத்தில் பதித்திருக்க வேண்டு மென்றே
செப்பிடுங்கால் மனிதவாழ்வில் ஒவ்வோர் பேரும்
தன்மானங் கொண்டவராய் நாட்டுப் பற்றின்
ஒப்புடைமை மிக்கவராய் வாழ்தல் வேண்டும்
ஒருமையைத் தருவதவர் வாழ்வ தாமே.
1605

பலதிங்கள் முயன்றிந்தக் காவி யத்தைப்
படைத்துள்ளேன் பண்ணவனின் அருட்பேற் றாலே
அலைகடலைத் தாண்டியுமென் தமிழ்பேர் கொள்ளும்
ஆவலுற்றேன் ஆய்வுசெய்வோர் ஆய்தல் வேண்டும்
நிலமுள்ள வரைநிலைக்க வேண்டு மாயின்
நற்றமிழின் சுவையுணர்ந்தோர் கற்ப தோடே
பலரறியச் செய்திடவும் வேண்டும் காலம்
போற்றுமிதைப் புகழனைத்தும் பேரி றைக்கே
1606

என்முயற்சிக் கீடாக இறைவன் பாலே
இரக்கின்றேன் தேகநலம் நீண்ட ஆயுள்
என்றனுக்கும் எனைச்சார்ந்த அனைத்துப் பேர்க்கும்
எல்லாமே வல்லவனின் தாள்ப ணிந்தே
பொன்மனத்துப் பெரியோர்கள் பற்றோ டெம்பால்
பிரியமுடன் பிராத்திப்பர் படித்த பின்னே
முன்னவனின் அருள்முற்றும் பெறட்டு மென்றே
மாநபியின் "சபாஅத்"தும் கிடைக்க "ஆமீன்"
1607

நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

காவியங்கள் :

1.	மஹ்ஜபீன் காவியம்	1992
2.	புனிதபூமியிலே காவியம்	1998
3.	தாய்க்கென வாழ்ந்த தனையன்	2001
4.	பிரளயம் கண்ட பிதா	2001
5.	பண்டார வன்னியன் காவியம்	2005
6.	திருநபி காவியம்	2006

சிறுகதைத் தொகுப்புகள் :

1.	பெற்றமனம்	2002
2.	வேரறுந்த நாட்கள்	2008

புதினம் :

1.	கருகாத பசுமை	2000

கவிதைத் தொகுப்புகள் :

1.	முத்து நகை	1989
2.	பாலையில் வசந்தம்	1989
3.	பனிமலையின் பூபாளம்	1995
4.	திருமறையும் நபிவழியும்	2007

சிறுவர் இலக்கியம் :

1.	கடலில் மிதக்கும் மாடிவீடு	2002
2.	எங்கள் உலகம்	2002
3.	அகப்பட்ட கள்வன்	2003
4.	சிறுமியும் மந்திரக் கோலும்	2008
5.	ராகுலுக்கு ஒரு புதுவண்டி	2008

மொழி மாற்றம் :

1.	அன்பின் கருணையின் பேரூற்று	2010

போர் முடிவில் ஸ்ரீரங்கப்பட்டணத்தில் தீரர் திப்பு சுல்தானின் ஜனாஸா கிடந்த இடத்திற்கு அருகில் நூலாசிரியர்



ஸ்ரீரங்கப்பட்டணத்தில் தீரர் திப்பு சுல்தானின் சமாதி



தீரர் திப்பு சுல்தானின் உடை வாளின் முன்னால்...



ஆய்வுச் சுற்றுலாவின்போது மைசூரில் நண்பர்களான கவிஞர் அல்-அஸூமத், டாக்டர் தாஸிம் அகமது, கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீன் ஆகியோருடன் நூலாசிரியர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

ஜின்னாஹ் ஷரிபுத்தீன், புலவர் பரம்பரைப் புதல்வர்.
அமர்ந்த இடத்தில் ஆயிரம் பாடல்களை எழுதும் ஆற்றல் கொண்டவர்.
இவரது பேனா முனையிலிருந்து பேராற்று வெள்ளமாயப் பெருக்கெடுத்து
ஓடும் தமிழ்நதியின் கிளையாறுகளில் ஒன்றுதான், இந்தக் காவியம்.

மன்னர்களுக்காகவே மக்கள் வாழ்ந்த காலை,
மக்களுக்காகவே வாழ்ந்த மகோன்னத மன்னர் திப்பு சுல்தான்.
அவர் தன் மக்களை நெஞ்சார நேசித்த காரணத்தால், தனது மண்ணைக்
கொள்ளை கொள்ள வந்த மாற்றானுக்கு எதிராக, நெஞ்சு நிமிர்த்தி
எழுந்து நின்றார். அதனால் காலத்தின் தீராத பக்கங்களில்
தொலையாத் தொன்மமாக அவரால் நீடித்து நிலைக்க முடிந்தது.
அழித்தும் திரித்தும் எழுதப்படும் வரலாற்றில், அழியாத
வீரத்தின் மந்திரக் குறியீடாக மாற முடிந்தது.

இந்நூலில் உத்தமப் பண்புகளும் ஓர்மையும் கொண்ட
அந்த அதிசய சுல்தானை, ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அழகுத் தமிழ்
ராஜபாட்டையூடாக நம்மிடம் அழைத்து வருகிறார்.

இந்த நூல், நேர்மையும் நெஞ்சுரமும் கொண்ட
ஆட்சியாளர்களுக்கு ஆண்டாண்டு காலத்துக்கும்
ஓர் ஆள்காட்டி விரல். தமிழோதும் பல்கலைக் கழகங்களில்
பாடநூலாகக் கொள்ளத் தகுந்த படையல்.

- கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீன்
(செயலாளர், இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம்)